**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY THIRUNELVELI-627012**

**DDE, DEPARTMENT OF HISTORY**

# HISTORY OF EUROPE (476 – 1453 A.D)- Tamil

**Study Material Prepared by**

**Dr. D. Latha Kumari, MA, M.Phil, B.Ed, Ph.D**

**Assistant Professor (T), Department of History**

**MS University, Tirunelveli- 12.**

ஐரோப்பிய வரலாறு (476 – 1453)

பாடத்திட்டம்

**UNIT – I**

Rise and fall of Roman Empire – Causes for the downfall – Legacy of Rome – establishment of Venice – occupation of western Europe by Barbarians.

**UNIT – II**

Eastern Roman emperor Justinian – Cultural Contribution – Rise and spread of Christianity – Papacy – Monastries – The Frankish Kingdom – Charlemagne – Break up of Carolingian Kingdom – Carolingian enaissance.

**UNIT – III**

The Spread of Islam – The legacy of Islam to Europe – The Holy Roman Empire – Henry the Fowler otto, the great – Feudalism – Manorial system – The Capetian Kings of France – Social and economic condition.

**UNIT – IV**

The struggle between the Empire and Papacy – The Crusades – The rise of Universities – Growth of Towns – Guild System. The Hundred year's war – Church during later middle ago.

**UNIT – V**

Enlightenment and Renasissance Plague – France and Germany during later. Medieval Period – Trade and Commerce – Guild system. Rise and growth of Representative institutions – Rise of Swiss Republic – The Ottoman Empire – Society at the end of middle ages.

## 1. ரோமானியப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்

## (RISE AND FALL OF ROMAN EMPIRE)

### ரோமானியப் பேரரசின் எழுச்சி

இத்தாலியத் தீபகற்பத்தின் மத்தியிலிருக்கும் ரோம், கி.மு. 753 ஆம் ஆண்டு வாக்கில் ரோமுலஸ், ரீமஸ் (Romulus, Remus) என்ற சகோதரர்களால் நிறுவப்பட்டது என்று இத்தாலியப் பழங்கதைகள் கூறுகின்றன. இந்நகரில் கி.மு. 510 வரை முடியாட்சியே நிலவி வந்தது. அவ்வாண்டில் ரோமானியக் குடியரசு நிறுவப்பட்டது. ஓராண்டு பதவிக் காலத்துடன் ‘கான்சல்கள்’ (Consuls) என்று அழைக்கப்பட்ட அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் செனட்டின் உதவியுடன் ரோமை ஆட்சி செய்தனர். காலப்போக்கில் குடியரசில் இருந்த பாட்ரிஷியன்கள் (Patricians) என்று அழைக்கப்பட்ட தாழ்குல மக்களுக்குமிடையே வர்க்கப் போராட்டம் நடைபெற்றது. இதன் விளைவாக இவ்விரு பிரிவினரிடையே நிலவி வந்த ஏற்றத் தாழ்வுகள் மறைந்து கி.மு. 367 ஆம் ஆண்டு முதல் குடியரசில் வாழ்ந்த எல்லாக் குடிமக்களும் ஒரே விதமாக உரிமைகளும் கடமைகளும் பெற்று வாழ ஆரம்பித்தனர். ரோமின் ஆதிக்கம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டுகளுக்குள்ளாக இத்தாலியத் தீபகற்பம் முழுவதும் பரவியது. தன் ஆதிக்கத்தை சந்தர்ப்பச் சூழ்நிலைகளினால் கடல் கடந்த நாடுகளிலும் ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டதின் விளைவாக, ரோம், கி.மு. 264-ஆம் ஆண்டிலிருந்து கி.மு. 146ஆம் ஆண்டு வரை, கார்த்தேஜுடன் (Carthage) மூன்று பெரிய போர்களில் ஈடுபட்டது. அவை பியுனிக் போர்கள் (Punic Wars) என்றழைக்கப்படுகின்றன. பின்னர் மத்திய தரைக்கடல் நாடுகள் முழுவதிலும் ரோம் தன் ஆதிக்கத்தை நிலை நாட்டியது.ரோம் குடியரசாக இருந்த போது அதன் வலிமையை வளர்ந்தவர்களுள் மேரியஸ் (Marius), சல்லா (Sulla) பாம்பே (Pompey), கிராசஸ் (Crassus) போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்களாவார். இவர்களின் ஆட்சிக் காலங்களில் பல உள்நாட்டுக் கலகங்களும், அயலவர் தாக்குதல்களும், சமூகப் போர்களும் ஏற்பட்டன. அவை திறமையுடன் அடக்கப்பட்டுக் குடியரசு வலுப்படுத்தப்பட்டது. இவர்களுக்குப் பின் குடியரசை ஆட்சி செய்த ஜூலியஸ் சீசர் (Julias Ceasear) குடியரசின் அமைப்பை மாற்றியமைத்தார்.

### ஜூலியஸ் சீசர்

ரோமானியக் குடியரசு பேரரசாக மாறுவதற்கு காரணமாயிருந்தவர் ஜூலியஸ் சீசரே ஆவார். குடியரசில் இருந்த எல்லா மக்களுக்கும் குடியுரிமை வகிக்கவும், செனெட்டின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்தவும், அவர் திட்டமிட்டார். அவர் தன்னை அரசர் என்றோ சர்வாதிகாரி என்றோ அழைப்பதை விரும்பவில்லை. அவருடைய மிகக் குறுகிய ஆட்சிக் காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். அவர் பெற்ற வலிமையையும் பெருமையையும் கண்டு பொறாமை கொண்ட அவருடைய நண்பர்களே சதி செய்து கி.மு 44-ஆம் ஆண்டில் அவரைக் கொலை செய்து விட்டனர். சாகாவரம் பெற்ற ஷேக்ஸ்பியர்

இவ்வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் ‘ஜீலியஸ் சீசர்’ என்ற நாடகத்தில் கற்பனை நயத்தோடு படிப்போர் உள்ளத்தைக கவரும்படி தெளிவாக விளக்குகின்றார்.

**இரண்டாவது மூவராட்சி (Second Triumvirte)**

ஜுலியஸ் சீசர் இறந்தவுடன் அவருடைய வளர்ப்புப் பிள்ளை அக்டேவியஸ் சீசர், மார்க் அந்தோணி, லெபிடஸ் ஆகிய மூவரும் இணைந்த ஆட்சியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள். குடியரசு மூன்றாகப் பிரிக்கப்பட்டு மேற்குப் பகுதியை அக்டேவியஸ் சீசரும், கிழக்குப் பகுதியை மார்க் அந்தோனியும், ஆப்பிரிக்காவை லெபிடசும் ஆட்சி செய்ய வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது. அக்டேவியஸ் ரோமில் இருந்ததால் தன்னுடைய பதவியை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகள் இருந்தன. மார்க் அந்தோனிக்கு அத்தகைய வாய்ப்புகள் குறைவு. மேலும், எகிப்தில் ஆட்சி செய்து வந்த கிளியோபாட்ராவின் அழகில் மயங்கி, தன் ஆட்சிக் கடமைகளை உதறித் தள்ளிவிட்டு, அவளுடையேன இனிமையாக நாட்களைக் கழித்து வந்தார்.

இந்த நேரத்தை பயன்படுத்திக் கொண்டு அக்டேவியஸ் அந்தோனியை வீழ்த்தி விட்டுப் பேரரசராக விரும்பினார். அதன் விளைவாக இவருடைய படைகளும் போருக்குப் புறப்பட்டன. பால்கன் தீபகற்பத்தின் மேற்கிலுள்ள ஆக்டியம் (Actium) என்ற இடத்தில் கி.மு. 31-ஆம் ஆண்டில் இப்படைகள் கடும் போரில் ஈடுபட்டன. அந்தோனியின் படைகள் கடுமையாக தாக்கப்பட்டு விரட்டியடிக்கப்பட்டன. அந்தோனி தப்பியோடினார். அவர் பின்னர் அலெக்சாண்டிரியாவில் இறந்து விட்டார். லெபிடஸ் முன்னரே அக்டேவியசின் ஆதரவாளராக ஆகிவிட்டிருந்தார். இப்பொழுது மூன்று கண்டங்களில் பரவி இருந்த பரந்த பேரரசுக்கு எதிர்ப்பவர் எவரும் இன்றி அக்டேவியஸ் ஆட்சியாளரானார்.

**அக்டேவியசின் ஆட்சி**

ஜுலியஸ் சீசரைப் போலப் பரந்த உள்ளத்தையும், கூரிய நுண்ணறிவையும், வீரர்களே வியக்கும் வீரத்தையும், துணிவையும் அக்டேவியஸ் சீசர் ஒருங்கே பெற்றிருந்தார். அவர் தன் பேரரசை அரசராகவோ சர்வாதிகாரியாகவோ ஆட்சி செய்யவில்லை. சாதாரண ரோமானியக் குடிமக்களுள் ‘முதற் குடிமகன்’’ (Princeps) என்று தன்னை அழைக்கப்படுவதையே அக்டேவியஸ் விரும்பினார். அதிகாரங்கள் ஒரே மனிதரிடம் குவிந்திருப்பதை அவர் விரும்பவில்லை. செனெட்டுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்தார்.

ஆனால், மக்களோ அவருக்கே எல்லா அதிகாரங்களையும் தந்தனர். கி.மு. 27 முதல் கி.பி. 14 வரை அவருடைய ஆட்சி அனேகமாக அமைதியான ஆட்சியாகவே இருந்தது. வேறு எவருடைய ஆட்சிக் காலத்திலும் ரோமானிய அரசு அத்தகைய அமைதியான ஆட்சியைக் கண்டதில்லை. எனவே, மக்கள் அவரை ‘பேரரசர்’ என்றும் ‘அகஸ்டஸ்’ என்றும் சிறப்பித்து

அழைத்தனர். பேரரசர் அகஸ்டஸ் அக்டேவியஸ் சீசர்' என்றே அவர் அழைக்கப்பட்டார். பின்னர் அகஸ்டஸ் என்று மட்டுமே வரலாற்று ஆசிரியர்களாலும் அழைக்கப்பட்டனர்.

இவருடைய ஆட்சிக் காலத்தில் தான் ஜெருசலத்தில் உத்தமர் இயேசு கிறிஸ்து பிறந்தாரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ரோமில் பல கம்பீரமான கட்டடங்கள் கட்டப்பட்டன. கலைஞர்களும், கவிஞர்களும் அவரால் ஆதரிக்கப்பட்டனர். ரோமானியப் பெருங்கவிஞர்கள் வெர்ஜில் (Virgil) ஹொரேஸ் (Horace), ஒவிட் (Ovid), லிவி (Livy) போன்றவர் அகஸ்டஸ் காலத்தில் வாழ்ந்தவர்களேயாவார். அகஸ்டசின் ஆட்சிக்காலம் ரோமானிய வரலாற்றில் பொற்காலம் ஆகும்.

**டைபீரியஸ் (கி.பி. 14 – 37)**

அகஸ்டஸ் அவருடைய முதிர்ந்த எழுபத்தேழாம் ஆண்டில் இறந்து விட்ட பொழுது, அவருடைய மருமகன் டைபீரியஸ் (Tiberius) பேரரசரானார். அகஸ்டஸ் நிறுவிய அரசியல் அமைப்பின் படி செனெட், மற்றும் பொதுமக்கள் சபைகளினாலேயே முதற் குடிமகன் (Princips) என்று அழைக்கப்பட்ட ரோமானியப் பேரரசர் தேர்ந்தெடுக்கப்பட்டார். டைபீரியஸ் முதலில் பல போர்களில் ஈடுபட்டாலும் அவருடைய கடைசி பதினோர் ஆண்டுக் காலத்தைத் தலைநகரில் இல்லாமல் டிர்ரீனியன் கடலிலுள்ள காப்ரீயே என்ற தீவிலேயே கழித்து விட்டார். இவருடைய ஆட்சிக் காலத்தில் தான் ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்த பாலஸ்தீனத்தில் இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்.

**நீரோ (கி.பி. 54 – 68)**

அகஸ்டசுக்குப் பின் பல ஆண்டுகள் ரோமானியப் பேரரசு பண்புள்ள பேரரசரைப் பார்க்கவில்லை. அகஸ்டசுக்குப் பின் வந்த டைபீரியஸ் தன் இறுதிக் காலத்தில் பொறுப்பேற்ற முறையில் நடந்துக் கொண்டார். அவரை அடுத்துவந்த காலிகுலா (Caligula) என்பவர் பைத்தியக்காரராக இருந்தார். அவரை அவருடைய வேலைக்காரர்களே கொலை செய்து விட்டனர். அவருக்குப் பின் கிளாடியஸ் (Claudius) என்பவர் பேரரசரானார். அவர் தன் மனைவியாலேயே கொலை செய்யப்பட்டார். அவளுடைய மகன்தான் நீரோ அவர் தாயை விட மிகவும் கொடுமைக்காரராக இருந்தார். தன்னுடைய சொந்த தாயையும் மனைவியையும் கொலை செய்து விட்டார். ரோமில் பல கட்டடங்களைக் கட்டுவதற்காக மக்கள் மீது பல்வேறு விதமான கடும் வரிகளை விதித்தார். தன்னை ஒரு சிறந்த விளையாட்டு வீரர், கலைஞர், இசைமேதை என தற்பெருமையுடன் கூறிக் கொண்டார். கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தித் துன்புறுத்தினார். இவருடைய ஆட்சிக்காலத்தில் தான் கி.பி. 64 ஆம் ஆண்டில் ரோமில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுப் பாதிக்கும் மேற்பட்ட நகரம் அழிந்து விட்டது. ரோம் நகரம் எரிந்து கொண்டிருக்கும் போது நீரோ வினை வாசித்துக் கொண்டிருந்தாராம். தெற்கு இத்தாலியில் பெரியதொரு நில அதிர்ச்சி ஏற்பட்டுப் பெருத்த பொருள்சேதமும் ஆள் சேதமும் ஏற்பட்டன.

மூட நம்பிக்கைகள் கொண்ட இத்தாலியர்கள், நீரோவின் கொடுமைகளைச் சகித்துக் கொள்ளாமல் பொறுமையின் திருவுருவமாகிய நிலமகளே குமுறினாள் என்று நம்பினார்கள்.

இத்தகைய கொடுமைக்காரனின் ஆட்சிக் காலத்தில் பேரரசின் பல இடங்களில் ராணுவக் கலகங்கள் ஏற்பட்டன. கால்பா (Galba) என்பவர் தலைமையில் தலை நகரிலேயே ஓர் ராணுவக் கலகம் ஏற்பட்டு ஆட்சிக் கைப்பற்றப்பட்டது. கி.பி. 68 ஆம் ஆண்டில் நீரோ ரோமிலிருந்து தப்பி ஓடி தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் ரோமிலேயே பல கலகங்கள் ஏற்பட்டன. இறுதியில் சிரியாவில் படைத்தளபதியாயிருந்த வெஸ்பாசியன் (Vespassian) ஆட்சியைக் கைப்பற்றினார்.

**வெஸ்பாசியன் (கி.பி. 69 – 79)**

இவர் ராணுவ பலத்தால் தன்னை பேரரசராக ஆக்கிக் கொண்டாலும், பின்னர் எல்லா மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டினார்.

இவர் காலத்திற்கு முன்பிருந்தே கிழக்கே யூதர்கள் (Jews) ரோமானியக் குடிகளுக்குப் பெருந்தொல்லைகளைக் கொடுத்து வந்தனர். இவர் கிழக்கே தளபதியாக இருந்த பொதே யூதர்களின் கலகங்களை அடக்க முறன்றார். ஆனால், ரோமில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அவரை உடனடியாகத் தலைநகருக்குத் திரும்ப டைட்டசை (Titus) அனுப்பி யூதர்களின் கலகங்களை அடக்கினார். ஜெருசலம் கைப்பற்றப்பட்டு அதன் பெரும்பகுதி நாசமாக்கப்பட்டது. யூதர்களுக்கென ஒரு தனியாக நாடு உருவாவதற்கு வாய்ப்பில்லை என்ற அளவுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. யூதர்கள் உலகெங்கும் சிதறி ஓடினர்.

**அன்டோனைன்களின் ஆட்சிக்காலம் (கி.பி. 96 – 180)**

வெஸ்பாசியனுக்குப் பின், டைட்டஸ், டொமிஷியன் ஆகியோர் ஆட்சி செய்தனர். அதன் பின் கி.பி. 96 ஆம் ஆண்டிற்கும் கிபி. 180 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நெர்வா (Nerva), டிராஜன் (Trajan), ஹாட்ரியன் (Hadrian) அன்டோனைன்ஸ் (Antoninus), பையெஸ் (Pius) மார்கஸ் (Marcus), அரிலியஸ் (Aurelius) ஆகிய ஐவர் ஆட்சி செய்த காலத்தை வரலாற்று ஆசிரியர்கள் ‘அன்டோனைன்களின் காலம்’ (Age of Antoniees) என்று கூறுகின்றனர். இக்காலத்தில் ரோமானியப் பேரரசு அதற்கு முன்னரும் பின்னரும் காணாத அமைதியான இன்ப வாழ்க்கையே நடத்தியது. இந்த ஐவரில் டிராஜன், ஹாட்ரியன், மார்கஸ், அரிலீயஸ் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

**டிராஜன் (கி.பி. 98-117)**

ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாகிய ஸ்பெயினில் பிறந்த இவர் செனட்டின் பெருமதிப்பை பெற்றுப் பேரரசரானார். ரோமை ஆட்சி செய்த பேரரசர்களுள் இவர் மிகச்

சிறந்தவராவார். ஏழை எளியவர்கள் மீது அன்பும் பாசமும் கொண்டார். ரோமில் சலவைக் கற்களாலேயே பல அழகுமிகு கட்டடங்களைக் கட்டுவித்தார். டான்யூப் நதியைக் கடந்து, அங்குக் குழப்பம் விளைவித்த பார்பேரியன்களை அடக்கி, டேசியா (Dacia) என்ற பகுதியை (ஏறத்தாழ இன்றைய ரூமேனியா) பேரரசுடன் இணைத்தார்.

அதுபோலவே கிழக்கே பார்த்தியன்கள் என்று சொல்லப்பட்ட பாரசீகர்கள் ரோமானியக் குடிமக்களை அடிக்கடித் தாக்கி கொள்ளையடித்து வந்தனர். கி.மு. 115ஆம் ஆண்டில் ஒரு பெரும்படையை அனுப்பிப் பார்த்தியன்களின் படைகளைத் தோற்கடித்து யூப்ரடிஸ் டைக்ரிஸ் நதிகளுக்கிடையே இருந்த மெசபடோமியா என்ற பகுதியையும், கருங்கடல் காஸ்பியன் கடல்களுக்கிடையே தெற்கே இருந்த அர்மேனியா (Armenia) என்ற பகுதியையும் ரோமானியப் பேரரசுடன் சேர்த்துக் கொண்டார். அவர் இறக்கும் போது கி.பி. 117 ஆம் ஆண்டில், ரோமானியப் பேரரசு மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்டிருந்தது.

**ஹாட்ரியன் (கி.பி. 117 – 118)**

இவர் டிராஜனின் வளர்ப்புப் பிள்ளையாவார். இவரும் பரந்த நோக்கும், ஆட்சித்துறையில் உண்மையான அக்கறையும் உடையவர். இவருடைய இருபத்தோர் ஆண்டு ஆட்சிக் காலத்தில் ஒரே ஒருமுறைக் கூட போர் நடைபெறவில்லை. இவர் தன் பேரரசு முழுவதும் சுற்றிப்பார்த்து ஆட்சி முறையைச் சீர்படுத்தினார். ஆட்சித்துறை அலுவலர்கள் (Civil Servants) அவர் ஆட்சிக் காலத்தில் நியமிக்கப்பட்டார்கள். பேரரசில் இருந்த எல்லாக் குடிமக்களும் எவ்வித ஏற்றத்தாழ்வுமின்றி உரிமைகளும் கடமைகளும் தரப்பட்டார்கள். அடிமைகளின் குறைகள் பரிவுடன் கவனிக்கப்பட்டன.

இவருடைய தந்தை டிராஜன் வென்ற அர்மேனியா, மெசபடோமியா ஆகிய பகுதிகளில் உரிமைப் போராட்டங்கள் ஏற்படவே அவற்றை அம்மக்களிடமே திருப்பித் தந்து விட்டார். ஆனால், டேசியாவைக் (Dacia) கைவிடவில்லை. அங்கு தங்கச் சுரங்கங்கள் கண்டுபிடித்தமையே அதற்குக் காரணமாகும். பிரிட்டன் (Britain) பார்பேரியன்களின் படையெடுப்பதைத் தடுக்க பெரியதொரு சுவரைக் கட்டுவித்தார். அது சீனாவிலுள்ள பெருஞ்சுவருடன் ஒப்புநோக்கும் அளவுக்கு அமைந்தது. பெரிய நகரங்களில் நகராட்சி முறை ஏற்படுத்தப்பட்டது.

**மார்கஸ் அரீலியஸ் (கி.மு. 161-180)**

இவர் கடுமையான உழைப்பாளரும் நன்கு கற்றறிந்தவருமாவார். ‘வழிபாடுகள்’ (Meditation) என்ற நூலின் ஆசிரியருமாவார். அந்நூலில் ஸ்டாயிரசம் (Stoicism) என்ற தத்துவத்தின் கொள்கைகளை அவருடைய கண்ணோட்டத்துடன் விளக்குகின்றார். அவருடைய ஆட்சிக் காலத்தில் பேரரசின் பல இடங்களில் வெள்ளமும், நில அதிர்ச்சியும், கொள்ளை

நோயும் ஏற்பட்டுப் பெரும் இழப்பு நேர்ந்தது. இது தவிர பார்பேரியன்கள் படையெடுப்புகளினால் பேரரசின் திறமையுடன் முறியடித்தார். அவர் அத்தகைய போரில் ஈடுபட்டிருந்தபோது தான் கி.பி. 180-ல் கொள்ளை நோயினால் தாக்கப்பட்டு இறந்துவிட்டார்.

இவருடைய ஆட்சிக் காலத்துடன் ரோமானியப் பேரரசு அமைதியையும், நல் வாழ்வையும் இழந்தது. ரோமானியப் பேரரசு கி.பி. 19-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 476 ஆம் ஆண்டு வரை அழிவுப் பாதையில் விரைந்தோடத் துவங்கியது. இந்த இடைக் காலத்தில் ரோமை ஆட்சி செய்த அறுபதுக்கும் மேற்பட்ட பேரரசர்களுடன் ஒரு சிலரே திறமை உள்ளவர்களாக விளங்கினா். அவர்களுள் டையக்லீஷியன் (Diocletian), கான்ஸ்டன்டைன் (Constantine) ஆகியவர்களே முக்கியமானவர்கள்

**டெசியஸ் : 249 – 251**

டெசியஸ் (Decius) ரோமானியப் பேரரசராக இருந்த காலத்தில் கோத்துகள் பேரரசின் மீது படையெடுத்தனர். கி.பி. 251 ஆம் ஆண்டில் பேரரசின் ஒரு பகுதியாகிய பால்கன் தீபகற்பத்தின் வடகிழக்குப் பகுதியின் மீது தாக்குதல் நடத்தப் பெரும் படையுடன் வந்தனர். பேரரசர் டெசியஸ் தானே படைத் தலைமையை ஏற்றுக் கோத்துக்களை முறியடிக்கக் களம் நோக்கிச் சென்றார். இரு படைகளுக்கும் கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் ரோமானியப் படைகள் தோற்கடிக்கப்பட்டன. பேரரசர் டெசியஸ் கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இத்தோல்வி பேரரசுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய அவமானமாகும்.

**டையக்லீஷியன் (கி.பி. 284 – 305)**

இவர் ஒரு சாதாரண அடிமையின் மகனாவார். இவருடைய தந்தை ஏட்ரியாடிக் கடலின் (Adriatic Sea) கிழக்குக் கடற்கரைப் பகுதியாகிய டால்மேஷியாவைச் (Dalmatia) சேர்ந்தவர் ராணுவத் தளபதியாக இருந்த டையக்லீஷியனை ராணுவம் பேரரசாக்கியது. கி.பி. 284 ஆம் ஆண்டில் இவர் பேரரசரான போது அரசு பல பிரச்சனைகளுக்குத் தீர் காண வேண்டியதாக இருந்தது. நிதிநிலை மோசமாக இருந்தது. ஆட்சித்துறை சீர்கெட்டிருந்தது. எனவே, அவற்றைத் திருத்தியமைக்க அவர் முற்பட்டார்.

பேரரசு இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. ஏட்ரியாடிக் கடலுக்கு மேற்கேயுள்ள பகுதிக்கு ஒரு பேரரசரும், கிழக்கேயுள்ள பகுதிக்கு ஒரு பேரரசரும் நியமிக்கப்பட்டனர். அவர்கள் ‘அகஸ்டஸ்’ என்று அழைக்கப்பட்டனர். ஆனால், உண்மையில் எல்லா அதிகாரங்களும் ரோமில் இருக்கும் டையக்லீஷியனிடமே இருந்தன. இவ்விரு பேரரசர்களுக்கும் உதவி ‘சீசர்கள்’ என்ற துணைப் பேரரசர்கள் நியமிக்கப்பட்டனர். பேரரசு முழுவதும் பன்னிரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. அவை மீண்டும் நூறு சிறு நிலப் பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு, அவைகளுக்கேற்ற ஆட்சித்துறை அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். வேறு பல

துறைகளிலும் மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டங்களை உருவாக்கினார். எனவே, இவர் 'இரண்டாம் அகஸ்டஸ்' என்று அழைக்கப்படுகிறார்.

முதலில் டையக்லீஷியன் கிறிஸ்தவர்கள் மீது சகிப்புத் தன்மையைக் காட்டினார். ஆனால், அவருடைய ஆட்சியின் இறுதிக் காலத்தில் அவர்களைத் துன்புறுத்தினார். அவர்களுடைய தேவாலயங்களும் புனித நூலும் அழிக்கப்பட்டன. கிறிஸ்தவ மத குருமார்கள் சிறையிலடைக்கப்பட்டனர். எனினும், அம்மதக் கருத்துக்களைப் பெரும்பாலானவர் பின்பற்றினர். தோல்வியை ஒப்புக்கொண்டு டையக்லீஷியன் தாமாகவே பதவியை விட்டு விலகினார்.

**கான்ஸ்டன்டைன் (கி.பி. 311 – 337)**

பேரரசர் கான்ஸ்டன்டைனின் (Constantine) ஆட்சிக் காலத்தில் இரண்டு முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாவதாக, கி.பி. 313 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மிலான் ஆணையின் படி (Edict of Milan) கிறிஸ்தவ மதம் அரசரால் அனுமதிக்கப்பட்டது. பேரரசில் எல்லாப் பகுதிகளிலும் கிறிஸ்தவர்கள் தங்கள் விருப்பப்படி மத வழிபாடு செய்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டார்கள். இனி, கிறிஸ்தவர்கள் எக்காரணம் கொண்டும் கொடுமைப்படுத்தப்பட மாட்டார்களெனவும், அவர்களின் உயிருக்கும் உடமைக்கும் அரசு பாதுகாப்பு அளிக்குமெனவும் பேரரசர் உறுதியளித்தார். இக்கண்ணியமான செயல் பேரரசின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் ஓரளவு உதவியது.

இரண்டாவதாக, கி.பி. 330-ஆம் ஆண்டில் பேரரசின் தலைநகரத்தை ரோமிலிருந்து கான்ஸ்டான்டி நோபிளுக்கு மாற்றி விட்டார். இச்சயெல் பின்னர் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தது. ஆயினும், அதுவே கிழக்கு ரோமானியைப் பேரரசு உருவாகிப் பெயரளவிலாவது கி.பி. 1453 ஆம் ஆண்டு வரை நீடித்திருக்க உதவியது. இவருடைய ஆட்சிக் காலத்தில் வேறு எந்தக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியும் நடைபெறவில்லை.

கான்ஸ்டன்டைனுக்குப்பின் வந்த பேரரசர்கள் ரோமானியப் பேரரசு வீழ்ச்சிடையத் தான் உதவினார்களே தவிர அது வலிமைப் பெற அவர்களால் எதையும் செய்ய முடியவில்லை.

**கிரேசியன், வாலன்ஸ்** :

பேரரசர் கான்ஸ்டன்டைன் பேரரசின் தலைநகரத்தை ரோமிலிருந்து கான்ஸ்டான்டி நோபிளுக்கு கி.பி. 330 ஆம் ஆண்டு மாற்றினார். கி.பி. 376 ஆம் ஆண்டு ரோமில் ஒரு பேரரசரும் கான்ஸ்டான்டி நோபிளில் ஒரு பேரரசரும் இருந்தனர். கிரேஷியன் (Gratian) மேற்கிலும், வாலென்ஸ் (Valens) கிழக்கிலும் பேரரசர்களாக இருந்தனர். கோத்துக்கள் கூட்டம் கூட்டமாக டான்யூப் நதியைக் கடந்து தெற்கு நோக்கி வந்தனர். காலாட் படையும், குதிரைப் படையும் அவர்களுக்கிருந்தன. இவர்கள் பேரரசின் பல பகுதிகளைத் தாக்கி சூறையாடினர்.

இவர்களை அடக்கி விரட்டியடிக்க ரோமிலிருந்தும், கான்ஸ்டான்டி நோபிளிலிருந்தும் பேரரசின் படைகள் திரண்டன. மேற்கேயிருந்து படைகள் வருவதற்குள்ளாக கான்ஸ்டான்டி நோபிளுக்கு மேற்கே ஏட்ரியா நோபிள் (Adrianople) என்ற இடத்தில் கி.பி. 378 ஆம் ஆண்டில் கோத்துக்களின் படைகளுக்கும் பேரரசின் (கிழக்குப்) படைகளுக்கும் பயங்கரமான போர் நடைபெற்றது. கோத்துக்களின் குதிரைப் படைகள் மின்னல் வேகத்தில் பாய்ந்து பேரரசின் படைகளைத் தாக்கி சிதறடித்தன.

பேரரசின் படைகள் பெருந் தோல்வியைக் கண்டன. பேரரசர் வாலென்ஸ் கைப்பற்றப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இப்போர் பல விதங்களில் வரலாற்றுச் சிறப்புடையது. இப்போருக்குப் பின்னர் ரோமானியப் பேரரசு மறுவாழ்வு பெற்று மலரும் என்ற நம்பிக்கையே இல்லாமல் போய்விட்டது. குதிரைப் படையின் சிறப்பு ஐரோப்பா முழுவதும் பரவியது. பிற்காலத்தில் இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் நடைபெற்ற நூறாண்டுப் போரிலும் இங்கிலாந்து குதிரைப் படையைப் பயன்படுத்தியதால் தான் கிரெசி போரிலும், புவாய்டியர்ஸ் போரிலும் (Battles of Crecy and Poitiers) பெரும் வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**தியோடோசியஸ் : 375 – 395 AD**

இப்போருக்குப் பின் பேரரசின் கிழக்குப் பகுதி முழுவதும் கோத்துக்களால் கைப்பற்றப்படும் என்ற நிலை ஏற்பட்ட போதிலும், நல்ல வேளையாக ரோமானியப் பேரரசு அந்த நிலைக்கு உள்ளாகவில்லை. வாலென்சை அடுத்துப் பேரரசரான தியோடோசியஸ் (Theodosius) கோத்துக்களுடன் உடன்பாடு செய்துக் கொண்டார். அதன்படி டான்யூப் நதிக்கு தெற்கே ஆயிரக்கணக்கான கோத்துக்கள் வந்து குடியேற அனுமதிக்கப்பட்டார்கள் ரோமானியக் குடிகளாகவே அவர்கள் கருதப்பட்டார்கள். ஏறக்குறைய ஐம்பதாயிரம் கோத்துக்கள் பேரரசின் படையில் சேர்ந்து பணிபுரியத் தொடங்கினர். இது பயங்கரப் போக்கு என்பதைப் பேரரசர் உணராமலிருந்து விட்டார். பின்னர் பேரரசு வீழ்ச்சியடைவதற்கு இப்பார் பேரியப் படையும் மிக முக்கியமான காரணமென்பதனை வரலாற்று நிகழ்ச்சிகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

**அர்காடியஸ், ஹனோரியஸ்**

கி.பி. 395-ல் தியோடோசியஸ் இறந்த பிறகு அவரது இரு புதல்வர்களில் ஒருவரான அர்க்காடியஸ் கான்ஸ்டாண்டி நோபிளைத் தலைநராகக் கொண்ட கிழக்கு ரோமப் பேரரசிற்கும், மற்றொருவரான ஹொனோரியஸ் ரோமைத் தலைநகராகக் கொண்ட மேற்கு ரோமானியப் பேரரசிற்கும் ஆட்சியாளர்கள் ஆனார்கள். இவர்கள் ரோமின் அழிவை வேகப்படுத்தினார்.

இவர்களது காலத்தில் விசிக்கோத்துக்களின் தலைவர் அலரிக் ரோமின் மீது படையெடுத்தார். ரோம் சூறையாடப்பட்டது. பின்னர் வாண்டல்களின் தலைவன் ஜென்சரிக் ரோமின் மீது தாக்குதல் நடத்தினார். இதே காலகட்டத்தில் ஹீனர்களின் தலைவன் அட்டிலாவும் பேரரசின் கிழக்குப் பகுதியில் படையெடுத்து பல இடங்களைத் தாக்கினான். இந்த தாக்குதல்களால் பேரரசு பலமிழந்து உயிர் ஊசலாட ஆரம்பித்தது.

**ரோமுலஸ் அகஸ்டசும், ரோமானியப் பேரரசின் வீழ்ச்சியும் :**

கி.பி. 476-ல் ரோமுலஸ் அகஸ்டஸ் என்பவர் ரோமப் பேரரசர் ஆனார். அப்போது ராணுவத் தளபதியாக இருந்த ஒடோவாகர் (Odovakar) என்பவர் சரியான சமயம் பார்த்து புரட்சி செய்து கி.பி. 476-ல் பேரரசரை வீழ்த்தி விட்டார். எனவே தான் இந்த ஆண்டில் ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்ததாகத் கருதப்படுகிறது. பெருமை மிகு ஜூலியஸ் சீசர், அகஸ்டஸ் போன்றோரைத் தொடர்ந்த ஆட்சி செய்த பேரரசர்களின் ஆட்சி கி.பி. 476-ல் முடிவடைந்தது.

கடல் கடந்த நாடுகளில் எல்லாம் ரோமானிய நாகரிகத்தையும், பண்பாட்டையும், கலைச் செல்வங்களையும் பரப்பிய ரோம் நாகரிகமற்ற பார்பேரியக் கூட்டத்தினரால் வீழ்த்தப்பட்டது என்பது வருந்தத்தக்க வரலாற்று நிகழ்ச்சியாகும்

## ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் (CAUSES FOR THE DOWNFALL OF ROMAN EMPIRE)

'இருண்ட காலம்' என அழைக்கப்படும் இடைக்காலம் கி.பி. 476-ம் ஆண்டில் தொடங்குகிறது. அவ்வாண்டில் தான் மூன்று கண்டங்களில் நானூறு ஆண்டுகளாக மாட்சியுடன் ஆட்சி செலுத்திய ரோமானியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. ரோமுலஸ், அகஸ்டுலஸ் என்ற கடைசிப் பேரரசர் வீழ்த்தப்பட்டு ஒடோவாகர் என்ற ஜெர்மானிய வீரர் ஆட்சிப் பொறுப்பேற்றார். ஒரு சகாப்தம் முடிவடைந்து மற்றொன்று ஆரம்பமாகியது. ஆல் போல் தழைத்துக் கிளைத்த அப்பேரரசின் நிழலில் ஐரோப்பியப் பண்பாடு செழித்தோங்கி நின்றது. சீருடன் ஓங்கிய அப்பேரரசு வேருடன் வீழ்ந்ததன் காரணங்கள், பல வரலாற்று உண்மைகளை விளக்குகின்றன.

**ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் :**

**அரசியல் காரணங்கள் :**

1. **நிலையற்ற ஆட்சிமுறை** : கி.மு. 510 முதல் மன்னராட்சி முறையைக் கொண்டிருந்த ரோமப் பேரரசில் கி.மு. 509-க்குப் பின் குடியரசு நிறுவப்பட்டது. வலிமை பொருந்திய செனட் மன்றம் ஆட்சித்துறை அங்கமெனச் செயல்பட்ட போது அங்கு முழு ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது. செனட்டில் சீரான பிரதிநிதித்துவ முறை மேற்கொள்ளப்படவில்லை. உயர் குடியாளர்களின் மேலாண்மை வலிமையுற்றிருந்தது.

இதனால் உள்நாட்டுப் போர்களுக்கு வாய்ப்புகள் பெருகின. சல்லா மற்றும் ஜீலியஸ் சிசர் போன்றோரின் அரசியல் சீர்திருத்தங்கள் பயனற்றவையாயிருந்தன. மூவராட்சி முறையும் சீராக இயங்கவில்லை. பேரரசில் சீரான வலிமை மிக்க ஆட்சிமுறை நிலையானதாகச் செயல்படாததால் முறையற்ற ஆட்சியியல் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தது.

2. **வரையறுக்கப்படாத வாரிசுரிமை** : ஆட்சித்துறையில் வரையறுக்கபட்ட வாரிசுக் கோட்பாடுகள் பின்பற்றபடவில்லை. எனவே உள்நாட்டுப் போர்கள் ஆட்சியுரிமைச் சிக்கல்கள் ஆகியன அடிக்கடி ஏற்பட்டு பேரரசு வலிமை குன்றலாயிற்று. மேலும் கி.பி. 330-ல் கான்ஸ்டன்டைன் தலைநகரை ரோமிலிருந்து கான்ஸ்டாண்டி நோபிளுக்கு மாற்றிய போதும் மகாதியோடோசியசுக்குப் பின் அர்காடியஸ், ஹொனோரியஸ் ஆகியோருக்கிடையில் ரோமப் பேரரசு பகிர்ந்து கொள்ளப்பட்ட போதும் அப்பேரரசு வலிமையிழந்தது.

3. **ஆட்சியாளர்களின் தன்மை** : டெபீரியஸ், கிராக்கஸ், கேயஸ் மாரியஸ், சல்லா, அக்டாவியஸ் சீசர் போன்ற ஒரு சிலரைத் தவிர பெரும்பாலான மன்னர்கள் வலிமையற்றவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் இருந்தனர். அவர்களது வலிமையின்மை அரசியல் கொலைகளுக்குக் காரணமாகி நாட்டை அழிவுப் பாதையில் கொண்டு சென்றன. நீரோ போன்ற மன்னர்கள் கேளிக்கைகளிலும், சிற்றின்ப வேட்கையிலும் ஈடுபட்டு மக்கள் நலனைப் புறக்கணித்தார்கள். மன்னர்கள் மீதான பொறாமைகளும், பதவிப் போட்டிகளும் அரசர்களைப் பெரும் இன்னல்களுக்குள்ளாக்கின.

4. **இராணுவ ஆதிக்கம்** : பெரும் ஆட்சியாளர்கள் நமது ஆட்சியுரிமையைக் காத்துக் கொள்ள படை பலத்தையே நம்பியிருந்தனர். வலிமையுடைய மன்னர்கள் படைபலத்தின் ஆதரவிலேயே செயல்பட்டனர். ஒரு அரசரின் மரணம் அல்லது முடிதுறப்பிற்குப் பின் படைத் தளபதிகளே புதிய ஆட்சியாளர்களை உருவாக்குவதில் முக்கியப் பங்கேற்றனர். இம்முறையானது பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

5. **ஆட்சிப் பிரிவுகள்** : கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் மைய ஆட்சி வலிமை இழக்கத் தொடங்கியது. அதற்கு முன்னும் ஆட்சித் துறையைச் சீராக இயங்கச் செய்தலின் பொருட்டு ஆட்சிப் பிரிவுகளைச் சீராகப் பகுக்கவில்லை. மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்குத் தேவையான நல ஆட்சிப் பிரிவுகளின்மையும் ஒரு பெருங்குறை யாயிருந்தது. கட்டுப்படியில்லாத, ஊழல் மலிந்த ஆட்சித்துறை அதிகாரிகளும் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தன.

6. **பேரரசின் எல்லைப் பெருக்கம்** : பேரரசின் எல்லைகள் படிப்படியாக விரிவடைந்த போது வலிமை மிக்க ஆட்சியாளர்களால் அவற்றைப் பாதுகாக்க முடிந்தது. திறமையற்ற ஆட்சியாளர்கள் உருவான போது அவர்களால் பரந்த விரிந்த

பேரரசைக் கட்டிக் காக்க இயலவில்லை. இராணுவத் தளபதிகள் வலிமைப் பெற்றுத் திகழ்ந்தனர்.

**பொருளாதாரக் காரணங்கள் :**

1. நம்முடைய சொந்த உற்பத்தியில் கவனம் செலுத்தாமல், தம்மை ரோமானியர் பல போர்களில் ஈடுபடுத்திக் கொண்ட போது பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது.

2. போர்களின் மூலம் கிடைத்த வருவாய் மூலம் தனது வளத்தைப் பெருக்கிக் கொண்ட ரோமானியர், உள்நாட்டுப் போர்கள், வெளிநாட்டுப் படையெடுப்புகள், அயலார் ஊடுருவல்கள் ஆகியவற்றால் தமது விவசாய வளத்துடன் பொருளாதார மேம்பாட்டையும் இழந்தார்கள்.

3. நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை ஆப்பிரிக்கா, சிசிலி போன்ற இடங்களிலிருந்து இறக்குமதி செய்தனர். அதனால் அவர்கள் உற்பத்தி துறையில் கவனம் செலுத்தவில்லை.

4. இடையறாத போர்களால் பஞ்சம், தொற்றுநோய் ஆகியவை அதிகரித்து பொருளாதாரத்தை சிதைவுறச் செய்தன.

5. பேரரசின் எல்லை பெருகிய போது அதனால் ஏற்பட்ட மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழிகள் மேற்கொள்ளப்படவில்லை.

6. உள்நாட்டு வாணிபம், வெளிநாட்டு வாணிபம் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படாமல் போனதால் பொருளாதாரம் பாதிப்பிற்குள்ளாயிற்று.

**படையமைப்பு :**

1. ஆரம்பகால ரோமானியப் படையில் காணப்பட்ட வலிமையும், தனித்தன்மையும் நாளடைவில் சிதறுண்டு போயின.

2. தொடர்ந்த போர்களினால் ரோமானிய வீரர்கள் மரணமடைந்த போது காட்டுமிராண்டிகளையே படைவீரர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை உருவாயிற்று. அவர்கள் ரோமானிய படை அமைப்பினை சீர்குலைத்தனர். கோத்துகள், வாண்டல்கள், பிராங்குகள், ஆர்லியன்கள் போன்ற பல்வேறு பிரிவினர் படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட போது குழப்பமும், சீரற்ற தன்மையுமே பெருகின. பயிற்சியின்மை வலிமையின்மைக்கு வழி வகுத்தது. படையெடுப்பு வெறும் கூலிப்பட்டாளமாகவே காணப்பட்டது. எனவே நாட்டுப்பற்று, உறுதியான நோக்கம் ஆகியவை காணப்படவில்லை.

3. ஒழுக்கமின்மை, ஒழுங்கின்மை, கட்டுப்பாடின்மை ஆகிய சிக்கல்களும் ரோமானியப் படைகளைப் பாதித்தன. அதன் விளைவுகளாக ரோமானியப் பேரரசு வலிமையிழந்து ஆட்டங்காணலாயிற்று.

**அயலவர் படையெடுப்புகள் :**

1. பிராங்குகள், ஆஸ்டிரகோத்துகள், விஸிகோத்துகள், வாண்டல்கள், ஹுணர்கள் ஆகியோரின் படையெடுப்புகள் ரோமானியப் பேரரசின் அழிவிற்கு வித்தாக அமைந்தன. கோத்துகளின் தலைவர் முதலாம் அலரிக் கி.பி. 408-ல் ரோமைச் சூறையாடினார். வாண்டல்கள் தலைவர் ஜென்செரிக் கி.பி. 455-ல் ரோம் நகரைக் கொள்ளையடித்தார். ஹுணத் தலைவர் அட்டில்லா கி.பி. 5-ம் நூற்றாண்டில் ரோமின் சுற்றுப்புறங்களை வென்று தமது ஆதிக்கத்தை அப்பகுதிகளில் நிலைநாட்டினார். கி.பி. 475- ல் ரோமப் பேரரசரான ரோமுலஸ் என்பவரை ஓடவாகர் என்ற சிரியன் இனத் தலைவர் கி.பி. 476-ல் கைது செய்து ரோமின் வீழ்ச்சியை முழுமைப்படுத்தினார்.

2. அயலவர் படையெடுப்புகளால் ரோமானியரின் அரசியல், பொருளாதாரம், படையமைப்பு போன்ற பல அம்சங்களும் கடும் விளைவுகளைச் சந்தித்தன. ஏற்கெனவே உள்ளுக்குள்ளேயே அரிக்கப்பட்டுக் கூடுபோல் காணப்பட்ட ரோமப் பேரரசின் வெளித் தோற்றத்தை வெளிநாட்டுப் படையெடுப்புகள் வெகு எளிதில் அழித்து விட்டன.

3. வலிமையற்ற ரோமானியப் பேரரசர்களும் காட்டுமிராண்டி போன்ற பிரிவினரை எதிர்த்து நிறகும் ஆற்றலற்றவர்களாயிருந்தனர். அத்துடன் எடியல் போன்ற பலம் பொருந்திய படைத் தலைவர்கள் கொலை செய்யப்பட்டதால் பேரரசின் படைவலிமை இழக்கலாயிற்று.

**சமூகக் காரணங்கள் :**

1. போர்களுக்குப் பின் பிடிபட்ட கைதிகளை ரோமானியர் அடிமைகளாக நடத்தினர். அடிமைகள் குறைந்த விலையில் கிடைத்தமையால் வாழ்வின் பெரும் பகுதிகளில் அவர்களது தேவை அதிகரித்தது. எனவே அடிமைகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டனர். அடிமைகளின் கடும் பணிகளால் செல்வந்தர்கள் சுகபோகமும், சோம்பலும் நிறைந்த வாழ்வில் ஈடுபடலாயினர். அடிமைகள் பின்னர் காட்டுமிராண்டிப் பிரிவினரின் படையெடுப்புகளின் போது தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டு சமுதாயத்தின் சீர்குலைவிற்கு வழிகோலினர். ஸ்பார்டகஸ் தலைமையில் அடிமைகள் கிளர்ச்சி செய்த போது பேரரசு உலுக்கப்பட்டது. அரசும் அடிமைகளின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை.

2. உள்நாட்டுப் போர்களாலும், அயலவர் படையெடுப்புகளாலும் ரோமானியர்களுக்கு இடையில் பல இனத்தவர்களும் சேர்ந்தனர். இதனால் ரோமானியர் சிறுபான்மையினராயினர். இதனால் ரோமானியர் செல்வாக்கு இழந்தனர்.

**சமயக் காரணங்கள் :**

1. ரோமானியர் ஸ்டாயிஸம், பித்தகோரனிஸம் போன்ற தத்துவங்களை மேற்கொண்ட போது அவர்கள் மனப்பான்மை பரந்து விரிவடையலாயிற்று. தமது சொந்தக் கோட்பாடுகளினின்றும் விடுபட்டு மாறியபோது ரோமில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள் ரோமின் அழிவிற்கு வழிகோலின.

2. ஆரம்பத்தில் ரோமானியர் சமய பொறையுடைமைக் கோட்பாட்டை பின்பற்றினர். பின்பு மார்க்கஸ் அரீலியஸ் போன்றோர் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்திய போது மக்கள் வெறுப்புற்றனர். மன்னரைவிட இறைவனுக்கு முக்கியத்துவம் கொடுக்க விரும்பினதால் ரோமின் ஆட்சியின் மீது வெறுப்புக் கொண்டனர். அதனால் ஆட்சிமுறை மதிப்பிழந்து அழிய வழியேற்பட்டது.

3. கான்ஸ்டன்டைன் காலத்தில் கிறிஸ்தவ சமயத்திற்குக் கொடுக்கப்பட்ட ஆதரவு ரோமானியரிடையே பெரும் மாற்றத்தை உருவாக்கியது. கிறிஸ்தவ சமயம் நாட்டின் மதமாக ஆக்கப்பட்டது. நாட்டிற்குள் ஒரு சிறிய ஆனால் பலம் பொருந்திய அமைப்பாக சமயம் செயல்படலாயிற்று. அதனால் தேசீய உணர்வு பாதிப்பிற்கு உள்ளாயிற்று. கொள்கை மற்றும் செயற்பாடுகளில் சமயமானது நாட்டின் கோட்பாடுகளுக்கு மாறுபட்ட ஒன்றாகவே விளங்கியது. அதனால் ரோமானியப் பேரரசில் காணப்பட்ட ஒற்றுமை உணர்வு வலிமையிழந்தது. திருச்சபைக்கும் பேரரசுக்குமிடையில் போட்டிளும், பொறாமையும் பெருகி வளர்ந்தன. அவை பேரரசின் அழிவிற்கு வித்திட்டன.

**பொதுக் கருத்துக்கள் :**

1. அடிமைத்தளை, தேசப்பற்றின்மை, குடியானவ்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டமை போன்ற காரணங்களால் கலைத்துறை பாதிக்கப்பட்டது. அது பேரரசின் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

2. சுயநலமிக்க செல்வந்தர்கள் மற்றும் பசியால் வாடி எழுத்தறிவின்றி இருந்த ஏழைகள் ஆகியோருக்கிடையில் காணப்பட்ட பிளவுகள் பேரரசின் வலிமையைப் பாதித்தன.

3. நாணயத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களினால் ஆன விளைவுகள், வாணிபச் சீர்குலைவு, பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியனவும் பேரரசினை அழிவுப் பாதையில் கொண்டு செலுத்தின.

மேற்கண்டவாற பல துறைகளிலும் குழப்பத்தின் களஞ்சியமெனத் திகழ்ந்த ரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. அரசு ஒன்றின் அழிவிற்குத் தேவையான கூறுகளனைத்தும் ரோமில் காணப்பட்டதால், கி.மு. 753-ல் ரோமுலஸ் என்பவனால் உருவாக்கப்பட்ட ரோம் நகரம்

படிப்படியாக வளர்ச்சியுற்று கி.பி. 476-ல் ரோமுலஸ் அகஸ்டஸ் என்பவரின் ஆட்சியுடன் முடிவுற்றது.

**ரோம் உல நாகரிகத்திற்கு அளித்த நன்கொடை**

**(LEGACY OF ROME)**

ரோமானியப் பேரரசின் அரசியல் வரலாற்றை நாம் படிக்கும் போது போர்களைப் பற்றியும் படையெடுப்புகளைப் பற்றியுமே அறிந்து கொள்கிறோம். ரோமின் கலாச்சார வரலாற்றை நாம் அறிய முயலும் போது அரசியல், சட்டம், இலக்கியம், அறிவியல் மற்றும் பல்வேறு கலைகளின் வளர்ச்சிக்கு ரோம் ஆற்றிய பணி ஈடு இணையற்றதென்பதை நாம் உணருகின்றோம். மூன்று கண்டங்களில் பரவியிருந்த ரோமானியப் பேரரசு இன்று ஆறு கண்டங்களில் வாழும் மனித சமுதாயத்திற்கு அரிய அரசியல் கருத்துக்களையும் நுண்ணிய கலை நுணுக்கங்களையும் கொடையாக கொடுத்துள்ளது. அவை பெரும்பாலும் அப்பேரரசுக்கு முன்னர் தழைத்தோங்கியிருந்த கிரீஸ், எகிப்து, கிரீட், சுமேரியா, மெசபடோமியா நாகரிகங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களே என்றாலும், அவற்றை உருவாக்கி, முறைப்படுத்தி, மனித சமுதாயத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய பெருமை ரோமையே சாரும்.

**அரசு :**

வரலாற்றின் அடிப்படையில் ரோம் குடியரசாகவும், பேரரசாகவும் இருந்தது. அவ்வாறு இருக்கும் பொழுது அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திராமல் இருக்கும் படி அதன் அரசியல் அமைப்பு வகுக்கப்பட்டிருந்தது. சட்டமியற்றும் துறை, நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியவை தனித்தனியே பிரிந்திருந்தது. ‘அதிகாரப் பிரிவினை’யில் அரசு செயல்படுவதை முதன் முதலில் எடுத்துக்காட்டி நடைமுறையில் பின்பற்றியது ரோமானிய குடியரசே ஆகும். ஒரு துறையின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்த மற்றொரு துறை ஒரு ‘தடை’ போல் செயல்பட்டு, இம்மூன்று துறைகளும் அதிகாரச் சமநிலையை ஏற்படுத்தின. இத்தகைய தடைகளும் சமநிலைகளும் வல்லாட்சி ஏற்படுவதைத் தடுத்தன.

மேலும், எந்த ஒரு ஆட்சியாளரும் பல ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்யும் நிலை ஏற்பட்டால் அத்தகைய ஆட்சி கொடுங்கோலாட்சியாக மாறும் என்பதை உணர்ந்து கான்சல்களின் பதவிக் காலம் ஓர் ஆண்டாகவே நிர்ணயிக்கப்பட்து. மேலும் நெருக்கடி நேரங்களில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சர்வாதிகாரி நியமிக்கப்பட்டார். இது இந்நாளில் நெருக்கடிக் காலங்களில் அடிப்படை உரிமைகளை நீக்கி ஆட்சியாளர்கள் எல்லா அதிகாரங்களையும் மேற்கொள்வது போன்று காணப்பட்டது. ரோமில் ‘அதிகாரப் பிரிவினை’ முறையும் அரசியல் அமைப்பும் எவ்வாறு செயல்பட்டதென்பதை பாலிபீயஸ் (Polyblus), சிசரோ (Cicero) போன்ற எழுத்தாளர்கள் விளக்குகின்றார்.

**குடியரசுக் கோட்பாடுகள் :**

ரோமானியர்கள் தனிநபர் எதேச்சதிகாரத்தை வெறுத்தனர். ரோமக் குடியரசு அமைப்பு மிகவும் புகழ்பெற்றது. குடியரசாகையால் அரசருக்குப் பதிலாக இரு கன்சல்கள் (Consuls)

படைப் பொறுப்பு முழுவதையும் ஏற்று குடியரசின் தலைமை அதிகாரிகளாகப் பணியாற்றினர். இருவரும் ஒருவருக்கொருவர் தடையாக இருந்ததால் தம் விருப்பம் போல் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. மேலும் அவர்களது ஆட்சிக் காலமும் ஒரு ஆண்டு மட்டும் தான். குடியரசு அமைப்பின் செனட் (Senate) என்ற ஆட்சிப் பேரவைதான் முதலிடம் பெற்றிருந்தது. நாட்டுக் காரியங்களில் பயிற்சியும் பழக்கமும் உடையவர்களே மேலோர் அவையில் ஆயுள் உறுப்பினர்களாக இருந்தனர். அதிகாரிகளுக்கு அவ்வப்பொழுது அறிவுரை தருவதற்காக ஏற்பட்ட இப்பேரவை ஒரு சிறந்த ஆட்சி நிறுவனம் ஆனது. படை நிர்வாகம் அயல்நாட்டுறவு, அரசாங்கச் செலவு, மாகாண ஆட்சி முதலியன பேரவையில் கண்காணிப்பின் கீழ்வந்தன.

குடியரசு அமைப்பில் பணிபுரிந்த இரண்டு குடிமக்கள் அவைகள் குறிப்பிடத்தக்கன. கமஷியா செஞ்சூரியோட்டா (Comitta Centuria) என்ற அவை கான்சல்களைத் தேர்ந்தெடுத்தது. நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றியது. மேலும் கன்சல்களின் முடிவுகளை திரும்ப ஆராய்ந்து முடிவு காணும் நீதிமன்றமாக விளங்கியது. கமிஷியா டிரிபியூட்டா (Comitia Tirbuta) என்ற பிளெபியன் அவை பிளெபிய மக்களின் உரிமைக் காவலரான டிரிபியூன் (Tribune) என்ற அதிகாரியைத் தேர்ந்தெடுத்தது. எல்லா மக்களுக்கும் சட்டம் இயற்றும் உரிமை பெற்றிருந்தது. நீதிமன்றமாகவும் பணியாற்றியது.

இவ்வாறு ரோமானியப் பேரரசில் குடியரசுக் கோட்பாடுகள் வேரூன்றின. அரசு மக்கள் மீது இறைமை அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது என்ற கோட்பாடு முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆயினும் அரசு எவ்வித தவறும் இழைத்தல் கூடாது என்ற கோட்பாட்டினை ரோமானியர் வலியுறுத்தினர். இக்கோட்பாடு தற்போதும் பின்பற்றப்படுகிறது.

ரோமானயக் குடிமக்களுக்குச் சில தகுதிகளின் அடிப்படையில் குடியுரிமை வழங்கப்பட்டது. பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆளுநர்களால் ஆட்சி செய்யப்பட்டது. நகரங்கள் சில வரம்புடைய அதிகாரங்களைப் பெற்றுத் தலசுய ஆட்சி செய்தன.

ரோமில் காணப்பட்ட இத்தகைய ஆட்சித்துறைக் கருத்துக்கள் அனைத்தும் இன்று பல நாடுகளில் பின்பற்றப்படுகின்றன.

**ரோமானியச் சட்டங்கள் :**

ரோமில் முறைப்படுத்தப்பட்ட சட்டஙகள் உருவாக்கப்படுவதற்கு முன்னர், பல்வேறு இனத்தவரின் பழக்கவழக்கங்களும், அரசு வெளியிட்ட ஆணைகளும், மற்றும் மத குருமார்களின் ஆலோசனைகள் மட்டுமே நீதி வழங்குவதற்குப் பயன்பட்டன. காலப்போக்கில் ‘பன்னிரண்டு சட்டங்கள்’ (Twelve Tables) என்ற சட்டத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. ரோமானியக் குடியரசில் நிறுவப்பட்ட பள்ளிகளில் சட்டங்களும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டன. சட்டங்களை விளக்கிக் கூறவும், வழக்குகளை வாதிடவும் வழக்கறிஞர்கள்

உருவாக்கப்பட்டார்கள். பிற்காலத்தில் ரோமானியச் சட்டங்கள் நிறைவு பெருவதற்கு 'பன்னிரண்டு சட்டங்கள்' வழிகோலின. 'செனட்' (Senate) சபையும் பல சட்டங்களை இயற்றியது. வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்க நீதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் நடுநிலையிலிருந்து நீதி வழங்கினார்கள்.

ரோமானியர்களின் 'இயற்கைச் சட்டங்கள்' (Natural Laws) என்பவை பெரும்பாலும் எழுதப்படாதவையாகும். அவை பழக்கவழக்கம், மரபு, ஒழுக்கம் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக மகன் தந்தைக்குக் கட்டுப்பட்டிருத்தல், கணவன் மனைவி ஒருவருக்கொருவர் உண்மையானவர்களாக இருத்தல் போன்றவையாகும். இவை தவிர அரசால் இயற்றப்பட்ட பொதுச் சட்டங்கள் (Civil Laws) பல இருந்தன. அவை ரோமானியக் குடிமக்களின் சொத்துரிமைகள், மற்றும் பொதுவிதிகளைப் பற்றியவையாகும். நீதி மன்றங்களில் இன்று போல் அன்றும் வாதி (Plaintiff), பிரதிவாதிகளின் (Defendant) வழக்கறிஞர்கள் இருந்தார்கள்.

ரோமானியப் பேரரசு பரப்பினால் விரிவடைந்து, பல நிலப்பகுதிகளும், பல நாட்டவரும் இனத்தவரும் பேரரசின் ஆட்சிக்குட்பட்ட போது , எல்லாக் குடிமக்களுக்கும், பொருந்துகின்ற வகையில் பல சட்டங்களும் இயற்றப்பட்டன. இன்று உலக நாடுகள் பின்பற்றுகின்ற 'பன்னாட்டுச் சட்டங்கள்' (International Laws) ரோமானியச் சட்டங்களை அடிப்படையாக கொண்டவையே என்ற கருத்தை ஹாலந்து நாட்டைச் சேர்ந்த ஹூகோ குரோஷயஸ் (Hugo Grotius) என்ற அறிஞர் தெரிவிக்கின்றார். பேரரசின் பல பகுதிகளுக்குப் பொருந்துகின்ற சட்டங்களை நிருவகித்து நீதி வழங்கப் பிரீடர்கள் (Praetors) என்று சொல்லப்பட்ட நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். ரோமானியச் சட்டங்கள் அனைத்தும் பின்னர் பேரரசர் ஜஸ்டினியனினால் ஒழுங்குப்படுத்தப் பட்டு வெளியிடப்பட்டன. சட்டத்துறையில் பல புதிய கருத்துக்களை இன்றுள்ள மனித சமுதயாத்திற்கு ரோம் கொடுத்திருக்கிறது.

**ரோமின் அமைதியும் ஒருமைப்பாடும் :**

ரோம் குடியரசாகவும், பேரரசாகவும் இருந்த காலத்தில் ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களைக் கொண்ட மிகப்பெரிய நிலப்பரப்பை பெற்றிருக்கிறது. அதில் ரோமானியர்கள், இத்தாலியர்கள், கிரேக்கர்கள், எகிப்தியர்கள், டுனிசியர்கள், ஸ்பானியர்கள், சிரியாவைச் சேர்ந்தவர்கள் மற்றும் வேறு பல நாட்டவரும், இனத்தவரும் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் பலர் இலக்கிய மேதைகளாகவும், தத்துவ ஞானிகளாகவும், அறிவியல் அறிஞர்களாகவும், கலைஞர்களாகவும் இருந்தனர். அவர்கள் இனவெறி, மொழிவெறியற்றவர்கள், பரந்த மனப்பான்மையுடன் ரோமானியக் குடிமக்களாக வாழ்ந்தனர்.

உணவு விடுதிகளிலும், விளையாட்டரங்கங்களிலும், தொழுகை இடங்களிலும் அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றித் தங்கள் கடமையைச் செய்தனர். ஒருவரோடு ஒருவர் பழகினர். எவர் எங்கு வாழ்ந்தாலும் ரோம் நகரத்தையே தங்கள் தலையாய நகரமாக

கருதினர். ரோமானியக் குடிமக்களின் அமைதியான ஒருங்கிணைந்த இந்த வாழ்க்கைக்கே "ரோமின் அமைதியும் ஒருமைப்பாடும்" (Roman Peace and Unity) என்று பெயர். மூன்று கண்டங்களில் பரவியிருந்த பேரரசில் ரோம் நிலை நாட்டிய அமைதி ரோமானிய அமைதி என வழங்கப்படுகிறது. இன்றைய உலகில் போர்களைத் தடுத்து அமைதியை நிலைநாட்ட முற்படும் நமக்கெல்லாம் ரோமானிய அமைதி வழிகாட்டிய விளங்குகிறது.

**இலக்கியம் :**

இலக்கியத்திற்கு ரோமானியர்கள் சிறப்பிடம் தந்தனர். கிரேக்க மொழி பேரரசில் செல்வாக்குப் பெற்றிருந்தாலும் லத்தீன் மொழியே பேரரசு முழுவதும் மக்களால் பயிலும் மொழியாக மாறியது. பெரிய நகரங்களில் பள்ளிகள் திறக்கப்பட்டன. ரோமானியக் குடிமக்கள் கல்வி கற்கும் வாய்ப்பினை பெற்றார்கள். ரோமானியப் பேரரசில் அலெக்சாண்டிரியா, ஏதென்ஸ், கார்த்தேஜ், லியோன்ஸ் போன்ற கல்வி நிறுவனங்கள் செயற்பட்டன. மொழி, இலக்கணம், கணக்கு, வரலாறு, தருக்கவியல் போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன. பேரரசில் இருந்த பல்வேறு பிராந்திய மொழிகளும், வளர்ச்சியுற்றன என்றாலும், கவிஞர்களும், நாடக ஆசிரியர்களும், அரசியல் மேதைகளும் லத்தீன் மொழிகளிலேயே எழுதி இலக்கியத் தொண்டு செய்தனர்.

**லத்தீன் இலக்கிய மேதைகள் :**

கி.மு. 272 ஆம் ஆண்டு வாக்கில் லிவின்ஸ் அண்ட்ரோகனிஸ் (Livinus Andronicus) என்பவர் கிரேக்கப் பெருங்கவிஞர் ஹோமர் எழுதிய 'ஒடிசி' (Odyssey) என்ற இதிகாசத்தை லத்தீனில் மொழிபெயர்த்துக் கிரேக்கர்களின் பெருமையை ரோமானியர்கள் அறிந்து கொள்ள அரும்பணி செய்தார். பின்னர் அவர் இன்னியல் துன்பியல் நாடகங்களை எழுதி வெளியிட்டார். இவரை அடுத்து நேயஸ் நேவியஸ் (யேநரள யேநரள) என்பவர் பல இன்பியல் நாடகங்களை எழுதினார். கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் கியூண்டியஸ் என்னியஸ் (Qunitius Enneius) மேக்கியஸ் பிளாடஸ் (Maccius Plautus) போன்றவர்கள் பல நாடகங்களை லத்தீன் மொழியில் எழுதினர்.

கி.மு. முதல் நூற்றாண்டில் லுக்ரெடியஸ் (Lucretius) என்ற கவிஞர் இயற்கை காட்சிகளை வருணனை செய்வதிலும், அரிய தத்துவங்களை விளக்குவதிலும் வல்லவராக விளங்கினார். இவர் காலத்திலேயே வாழ்ந்த கியுண்டஸ் வலெரியஸ் கேடுல்லஸ் (Quintus Valerius Catullus) என்ற கவிஞர் காதல் கவிதைகள் எழுதுவதில் புகழ் பெற்றவராவார். இவர்கள் அனைவரும் பிற்காலத்தில் பல மொழிகளைச் சார்ந்த கவிஞர்களுக்கு குறிப்பாக ஆங்கிலக் கவிஞர்களுக்கு, வழிகாட்டிகளாக அமைந்தனர். இவர்களைப் போலவே மார்க்கஸ் டெரிண்டியஸ் வேர்ரா (Marcus Terentius Varro) என்ற கவிஞரும், கேயஸ் சாலுஸ்டஸ்

கிரிஸ்பஸ் (Calus Salustus Crispus) என்ற வரலாற்று ஆசிரியரும் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர்.

**வெர்ஜில் (Virgil)**

மேலே குறிப்பிட்ட லத்தீன் இலக்கிய மேதைகளை விட வெர்ஜில் மிகவும் புகழ் வாந்தவராவார். கி.மு. நூற்றாண்டில் வாழ்ந்த இவர் லத்தீன் இலக்கியத்தின் முடிசூடா மன்னராக விளங்குகிறார். காதல் கவிதைகள் எழுதுவதிலும் வீரச் செயல்கள் நிறைந்த இதிகாசம் எழுதுவதிலும் திறமைமிகுந்தவர். இவர் எழுதிய ஈனியட் (Aenied) என்ற இதிகாசம் அதன் காவியத் தலைவன் ஈனியஸின் (Aneus) வீரச் செயல்கள் பற்றியும் அதற்கிடையில் அவன் நடத்தும் காதல் வாழ்க்கையைப் பற்றியும் விளங்குகின்றது இது பிற்காலத்தில் பல இதிகாசங்கள் எழுதுவதற்கு இலக்கணமாக அமைந்தது.

இந்த இதிகாசத்தில் மனித வாழ்க்கையில் கடவுளர்கள் ஆற்றும் தெய்வீகப் பணி எவ்வளவு முக்கியமானது என்பதையும் விளக்குகின்றார். ஆங்கிலக் கவிஞர் மில்டன் (Milton) 'இழந்த சொர்க்கம்' (Paradaise Lost) என்ற நூலை எழுதும் போது ஈனியட்டில் உள்ள பல கருத்துக்களை அதில் இணைத்துள்ளார். வெர்ஜில் எழுதிய 'ஜோர்ஜிக்ஸ்' (Georgics) என்ற மற்றொரு இலக்கியத்தில் வேளாண்மையின் உயர்வைப் பற்றியும், நாட்டுப்புற வாழ்க்கையின் இனிய சூழ்நிலைப் பற்றியும் விவரிக்கின்றார்.

**ஹொரேஷ் (Horace)**

இவரும் நாட்டுப்புற வாழ்க்கையின் மேன்மையைப் பற்றியும் அங்கு வாழும் எளிய மக்களின் இனிய வாழ்க்கையைப் பற்றியும் தன்னுடைய கவிதைகளில் விளக்குகின்றார். ஐம்புலன்களால் பெறக் கூடிய இன்பங்களைப் பெற்று, இவ்வுலக வாழ்க்கையை அனுபவிப்பதே மனித வாழ்க்கையின் நோக்கம் என்கிற எபிகியுரியன் தத்துவத்தைத் (Epicureian Philosophy) தன் கவிதைகளில் சுவையாகத் தருகின்றார். அத்துடன் நகரத்தில் வாழும் மக்களிடமுள்ள கொடிய பழக்கவழக்கங்களையும் குறைபாடுகளையும் எள்ளி நகையாடுகின்றார். இவருடைய கவிதைகள் பிற்கால ஆங்கிலக் கவிஞர்கள் ஷெல்லி, கீட்ஸ் (Shelley and Keats) போன்றவர்களுக்கு அடிப்படைகளாக அமைந்தன. இவருடைய இலக்கியப் பணியைப் பாராட்டிப் பேரரசர் அகஸ்டஸ் ஒரு பெரும்பண்ணையை அவருக்கு அன்பளிப்பாக அளித்தார்.

**டைட்டஸ் லிவி (Titus Livy)**

உரைநடை எழுத்தாளர்களுள் லிவி தலைசிறந்தவராக விளங்குகின்றார். சிறந்த வரலாற்று ஆசிரியராக இவர் ரோமின் வரலாற்றைத் தெளிவாக விவரிக்கின்றார். குறிப்பாக, இரண்டாவது பியுனிக் போரைப் பற்றி விவரிக்கும் போது இவருடைய லத்தீன் உரைநடைப் பாணி படிப்போர் உள்ளத்தைக் கவருகின்றது. மற்ற வரலாற்று எழுத்தாளர்களுக்கு

வழிகாட்டியாக விளங்கினார் எனக்கூறினால் மிகையாகாது. மேலே குறிப்பிடப்பட்ட வெர்ஜில், ஹொரேஸ், லிவி ஆகிய மூன்று தலைசிறந்த இலக்கிய மேதைகள் ரோமானியப் பேரரசர் அகஸ்டசின் காலத்தில் வாழ்ந்தவர்கள் ஆவர்.

இவர்களைத் தவிர டிபுலஸ் (Tibuls), புரோபெர்டியஸ், (Propertius) ஓவிட் (Ovid) முதலான கவிஞர்களும் அகஸ்டசின் காலத்திலேயே வாழ்ந்தவர்களாவர். இவர்களுள் ஓவிட் எழுதிய நூல்கள் இளைஞர்களையும் இளைம் மங்கையரையும் பெரிதும் ஈர்த்தன.

லத்தீன் இலக்கியத்திற்கு முழுநேர இலக்கிய அறிஞர்களைத் தவிர ரோமின் ஆட்சியாளர்கள் சிசரோவும் (Cicero) ஜூலியஸ் சீசரும் (Juluias Caesar) கூட தங்கள் பங்கினைச் செய்திருக்கிறார்கள். கி.மு முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சிசரோவின் எழுத்துப் பணியினால் லத்தீன், பேசும் மொழியாகவும், எழுதும் மொழியாகவும் முழு முதிர்ச்சியைப் பெற்றது. சீசர், ‘கமெண்டரீஸ்’ என்ற நூலில் தன் அரசியல் அனுபவங்களை விளக்குகின்றார்.

கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த செனிகா (Seneca) என்ற நாடக ஆசிரியர் ஒன்பது துன்பியல் நாடகங்களை எழுதினார். அவை பேரரசர் நீரோவையும் (Nero) மற்றும் பொதுமக்களையும் பெரிதும் கவர்ந்தன. இவை கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் மார்லோ மற்றும் ஷேக்ஸ்பியர் போன்ற நாடக ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன.

**ரோமானியத் தத்துவம் : Roman Philosophy**

ரோமானியத் தத்துவம் சிசரோ, உலுக்கிரிட்டியஸ், மார்க்கஸ், அரிலியஸ், செனக்கா முதலியவர்களின் கருத்துக்களால் உருவாயிற்று.

சிசரோ (Cicero கி.மு. 106 – 43) தத்துவத்தையும், சொல்லணிக்கலையையும் (Rhetoric) இணைத்து ஆராய்ந்தார். ஒருவன் தான் பெற்ற, அறிவினை மனித இனத்தின் நன்மைகளுக்காக பயன்படுத்துவதே அவன் செய்யும் உயர்ந்த சாதனையாகும். சிறந்த மனிதர்கள் தம் நாட்டினை நல்வழியில் நடத்தி செல்லாவிடில் நாட்டின் சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்படும என்று சிசரோ கூறினார். சிசரோவின் தத்துவ நூல்கள் உரையாடல் வடிவில் உள்ளன. அதனால் அவை மக்களை பெரிதும் கவர்ந்தன.

நன்னெறிக் கோட்பாடுகளில் (Ethics) சிசரோவின் பிடிவாதக் கொள்கை இன்ப துன்ப சம நோக்கங்காளர்களை (ளுவழழைஉள) பெரிதும் கவர்ந்தது. சிசரோ தத்துவ சார்வாதிகார ஆட்சியை (Philosophical – Autocracy) விரும்பினார். தனிமனிதன் ஒழுக்கம், வரையறை, கருத்து (Notion) அறிவுணர்வு (Comprehension), முடிவின்மை (Infinity) போன்றவற்றிற்கு சிசரோ தந்த விளக்கங்கள் மக்களுக்கு பெரிதம் பயன்பட்டன. சிசரோ மக்கள் எப்படி சிந்திக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார் என்று வால்டர் கூறுகிறார்.

உலுக்டிரியஸ் (கி.மு. 94 – 95) என்பவர் இன்பக் கோட்பாட்டின் (Epicureanism) இயற்கை விதிகளை விரிவாக விளக்கினார். உலகிலுள்ள நல்வினையும், தீவினையும் அவற்றின் பலன்களாகிய இன்ப துன்பங்களில் அடங்கியிருக்கின்றன என்பது உலுக்ரியஸின் கொள்கை. இயற்கை விதிகளை மனிதன் புரிந்து கொண்டால் அறியாமையும் பயமும் மனதிலிருந்து அகலும் என்றார்.

மார்க்கஸ் அரிலியாஸ் : (கி.மு. 180 -121) என்பவர் இன்ப துன்ப சமநோக்கு தத்துவ அறிஞர். இவரது இன்ப துன்ப சமநோக்கு (Stoic) கோட்பாடு பருப்பொருள் தன்மை வாய்ந்ததாக அமைந்த போதும், சமய உணர்வுகள் ஒழுக்கமம், இரக்கமும் உள்ள ஒரு சக்தியின் பால் கவனத்தை வலுவடையச் செய்வனவாக உள்ளன. இவரைப் போலவே செனக்கா என்பவரும் இன்ப துன்ப சமநோக்கு கோட்பாட்டில் புதிய போக்கை ஏற்படுத்தினார்.

பொதுவாக மனிதன் தன் அறிவை உலக நன்மைகளுக்காக பயன்படுத்த வேண்டும். என்பதையே ரோமானியத் தத்துவம் வலியுறுத்துகிறது. மன்னரும் மக்களும் நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதை விட பரந்த மனப்பான்மையுடன் வாழ்தல் சிறந்தது கருதினர். வழிமுறைகளை விட குறிக்கோளை அடைவதற்கே ரோமானியத் தத்துவம் முதலிடம் அளிக்கிறது.

**அறிவியல் (Science)**

அறிவியல் துறையில் ரோமானியர்கள் கிரேக்கர்களைப் போல பல உண்மைகளை அறிந்திருக்கவில்லை. எனினும் விண்மீன்களைப் பற்றியும் பல கேள்விகளைப் பற்றியும் ரோமானியர்கள் அறிந்திருந்தனர். நிலவியல் எல்லாரும் விரும்பிப் படிக்கும் பாடமாக இருந்தது. பிளினி (Pilini) என்ற அறிவியல் அறிஞர் ‘இயற்கை வரலாறு’ என்ற நூலின் பல அரிய அறிவியல் கருத்துக்களைக் கூறுகின்றார். செவ்வாய், குரு, சனி, போன்ற கோள்களின் இயக்கங்களைப் பற்றி விளக்கியிருக்கின்றார். பூமி உருண்டை வடிவமுடையதென்ற கருத்தை அன்றே அவர் தெரிவிக்கிருந்தார். மக்களுக்கு வரும் பலவிதமான நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளையும் செடி வகைகளையும் பிளினி குறிப்பிட்டிருக்கின்றார். இக்கருத்துக்களும் உண்மைகளும் பிற்கால அறிவியில் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்பட்டன.

ஏஸ்கிளிபேடிஸ் (Asciepiades) என்ற மருத்துவ நிபுணர் மனிதனின் இதயம் இரத்தத்தை உடல் முழுவதும் பரவச் செய்து, காற்றையும் உறிஞ்சுகிறது என்ற கருத்தை வெளியிட்டார். கி.பி. முதல் நூற்றாண்டில் பல மருத்துவப் பள்ளிகளும் நிறுவப்பட்டன. மருத்துவத் துறையின் ஒவ்வொரு பிரிவிலும், இன்றிருப்பதைப் போலவே, நிபுணர்கள் இருந்தனர். நோயாளிக்கு மயக்க மருந்து கொடுத்து அறுவைச் சிகிச்சை செய்யும் முறையை அவர்கள் அறிந்திருந்தனர். கந்தகம் (Sulphur) பல தோல் சம்மந்தப்பட்ட நோய்களை

குணப்படுத்த பயன்படுத்தப்பட்டது. மருந்துகள் செய்வதற்கென்று பல மருந்தகங்கள் இருந்தன. மருத்துவத் துறையில் வேறு பல நுணுக்கங்களையும் ரோமானியர்கள் அறிந்திருந்தனர்.

பண்டைய ரோமாபுரியின் குறிப்பிடத்தக்க அறிவியல் அறிஞர் டியோஸ்கோரிடஸ் (னுழைள ஊழசனைநள) என்பவராவார். இவர் கிரீஸ், ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு சென்று அங்கிருந்து மருத்துவக்குணம் கொண்ட பல மூலிகைகளை சேகரித்து வந்து ஆய்வு செய்தார். அதன் அடிப்படையில் மருத்துவப் பொருட்கள் (Materia of Medica) என்ற நூலை எழுதினார். இதில் 600 வகையான மூலிகை செடிகள் பற்றியும் அவைகளின் மருத்துவ குணங்கள் பற்றியும் விரிவாக விளக்கி உள்ளார்.

பொறியியல் துறையிலும் ரோமானியர்கள் ஈடு இணையற்றவர்களாக விளங்கினார். நெம்புக்கோல் தத்துவத்தை அவர்கள் அறிந்திருந்தனர். கப்பல்கள் கட்டுதல், துறைமுகங்களைக் கட்டுதல், ஆறுகளின் குறுக்கே பாலங்களை கட்டுதல், நகரங்களில் நிலத்தினடியில் தண்ணீர்க் குழாய்களை எடுத்துச் சென்று மக்களுக்கு விநியோகித்தல் போன்ற பல பொறியியல் நுணுக்கங்களை அவர்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தினர்.

போக்குவரத்தக்காகப் பல அகன்ற நீண்ட சாலைகளை ரோமானியப் பொறியியல் அறிஞர்கள் அமைத்தனர். ரோமானியர்கள் அமைத்த சாலைகள் இன்றும் இங்கிலாந்தில் உள்ளன. பேரரசின் பல பகுதிகள் ரோமுடன் சாலைகளால் இணைக்கப்பட்டன. எனவே தான் எல்லாச் சாலைகளும் ரோமுக்குச் செல்கின்றன என்ற பழமொழியும் தோன்றியது.

**கலைகள் :**

ரோமானியர்கள் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, மற்றும் இசை, நாடகம் போன்ற அருங்கலைகளில் வல்லவர்களாக விளங்கினார்கள் ரோமானியக் கலைகள் கிரேக்க கலைகளில் சாயலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டு விரிவுப்படுத்தப்பட்டவையாயினம் அவரை சாகா வரம் பெற்று இன்றளவும் உலகக் கலைஞர்களுக்கு இலக்கணமாக அமைந்துள்ளன.

ரோமின் அமைப்பே கம்பீரமானது ஏழு குன்றுகளின் தலைமை இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் ரோம் எழில் மிகுந்த தோற்றத்தைத் தருகின்றது. இந்கரில் விண்ணை முட்டும் கட்டிடங்களும், கண்ணைக் கவரும் அரண்மனைகளும் அமைக்கப்பட்டுள்ளன. பேரரசர் நீரோ வாழ்ந்த ‘தங்க வீடு’ (Golden House) ரோமின் கட்டிடக்கலை ஆற்றலையும், செல்வ வளத்தையும் பறை சாற்றுகின்றது. ரோமானியக் கோயில்கள் பேரரசின் பல இடங்களில் கட்டப்பட்டன. ஜீனோ, சாடர்ன், அப்பல்லோ (Juno, Saturn, Appollo) போன்ற கடவுளர்களுக்குக் கட்டப்பட்ட கோயில்கள் சலவைக் கற்களால் கட்டப்பட்டுள்ளன.

ரோமானியர்கள் நீச்சல் குளங்களைம், விளையாட்டு அரங்குகளையும் வளைவான அரங்குகளையும் (Baths, Stadia, Amphitheatres) கட்டுவதிலும் வல்லவர்கள். இருபதாயிரம் மக்கள் அமரக்கூடிய அரங்குகள் பல கட்டப்பட்டன. 1760 அடி நீளமும், 157 அடி உயரமும் உடைய கலோசியம் (Colosseum) என்ற பிரமாண்டமான கட்டிடம் ரோமானியர்களின் கட்டிடக் கலையின் மேன்மைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

கட்டிடக் கலை மட்டுமின்றிச் சிற்பக் கலையிலும் அவர்கள் வல்லுநர்களாக விளங்கினார்கள். ரோம் நகரத்தில் உள்ள கட்டிடங்களிலும், கோயில்களிலும், சலவைக் கற்களாலான சிற்பங்கள் காணப்படுகின்றன. அதே போல சாகாவரம் பெற்ற சுவரோவியங்கள் இன்றும் பல கட்டிடங்களில் காணப்படுகின்றன. இசைக் கலையை ரோமானிய ஆட்சியாளர்கள் ஆதரித்தார்கள். இன்று உலக நாடுகளில் உருவாக்கப்படுகின்ற கட்டிடங்களிலும், சிற்பங்களிலம் மற்ற கலைத்துறைகளிலும் ரோமானிய நுணுக்கங்களையும், சாயலையும் காண்கின்றோம்.

**மற்ற துறைகள்** :

மேலே குறிப்பிடப்பட்ட துறைகளில் மட்டுமின்றி வேறு பல துறைகளுக்கும் ரோம் கொடுத்திருக்கும் கொடை கணக்கிலடங்காதவை ஆகும். குறிப்பாக விளையாட்டுத் துறையில் பலவற்றை நாம் இன்றும் பின்பற்றுகிறோம். ரோமானிய ஆட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் மிகச் சிறந்த பொழுது போக்குகளாக இருந்தவை விளையாட்டரங்குகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளேயாகும். இன்று மனித சமுதாயம் வாழும் இடமெல்லாம் பின்பற்றப்படும் கிறிஸ்தவ மதம் ரோமானியப் பேரரசில் தான் தோன்றியதென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ரோமானியர் முதலில் ஐந்து ஆண்டிற்கு ஒரு முறையும் பின்னர் பத்து ஆண்டிற்கு ஒரு முறையும் அதன் பின்னர் பதினைந்து ஆண்டிற்கு ஒரு முறையும் மக்கள் தொகைக் கணக்கினை எடுத்தனர். இதன் மூலம் படையில் எத்தனை வீரர் ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படலாம் என்று கணித்துக் கொண்டனர். மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பொது மக்களது உடமைகள், வருமானம் பற்றிய விபரங்களும் குறிக்கப்பட்டதால் அரசற்கு வரிப்பணம் எவ்வளவு கிடைக்கிறது என்றும் அறிந்து கொள்ளப்பட்டது. ரோமானிரையப் பின்பற்றிய தற்கால மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடைபெறுகிறது.

இவ்வாறு எல்லாத் துறைகளிலும் ஈடு இணையற்ற முன்னேற்றம் பெற்றிருந்த ரோமானியர்கள் மனித சமுதாயத்திற்கு விட்டுச் சென்றுள்ள கலைக் கருவூலங்கள் விலை மதிக்க முடியாதனவாகும்.

### 4. வெனிஸ் நிறுவப்படுதல்

### (ESTABLISHMENT OF VENCE)

ஏட்ரியாடிக் கடலின் (Adriatic Sea) வடமேற்கே அதன் கடற்கழியல் அமைந்திருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட மணற்பாங்கான தீவுக் கூட்டங்களின் மேலே நிறுவப்பட்டிருக்கும்

வெனிஸ் நகரம் ஏட்ரியாடிக்கின் எழில் மிகு அரசியாக விளங்குகின்றது இத்தாலியத் தீபகற்பத்தின் வடகிழக்கேயுள்ள விண்ணை முட்டும் ஆல்ப்ஸ் பனி மலைகளும் கண்ணைக் கவரும் எட்ரியாடிக் கடல் பரப்புக்கும் இடையே பரந்து விரிந்திருக்கும் இந்நகரத்தின் அமைப்பைப் போன்று உலகத்தின் வேறு எந்த நகரமும் பெறவில்லை.

கி.பி. 452-ஆம் ஆண்டில் ஹூணர்களின் கொடுந்தலைவன் அட்டிலா இத்தாலியின் மீது படையெடுப்பதற்கு முன்னர், சாதாரண எளிய மீனவர்களே இத்தீவுக் கூட்டங்களில் வாழ்ந்து வந்தனர். மற்றும் வேறு பல நேரங்களில் இத்தாலியின் மீது பார்பேரியன்கள் படையெடுத்த போதெல்லாம் இத்தாலியர்களும், லம்பார்டியர்களும் தங்கள் பாதுகாப்பிற்காக இத்தீவுகளில் சென்று குடியேறினர். அவர்களுள் பலர் ஆபத்து நீங்கியவுடன் தங்கள் பழைய இடங்களுக்கே திரும்பி விட்டனர். எனினும் லம்பார்டியர்களுள் பெரும் பாலார் இத்தீவுகளிலேயே தங்கிவிட்டனர். இவர்கள் இங்கே நிலையாகத் தங்கி மரத்தாலான அழகிய மிதக்கும் வீடுகளை அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் மீன்பிடித்தல், உப்புத் தயாரித்தல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு அமைதியான வாழ்க்கை நடத்தினர்.

காலப் போக்கில் இத்தாலியத் தீபகற்பத்திலிருந்து மக்கள் இங்கு குடியேற ஆரம்பித்தார்கள். குறிப்பாக கி.பி. 568-ஆம் ஆண்டில் லம்பார்டியர்கள் இத்தாலியின் முக்கிய நகரங்கள் மீது படையெடுத்த போது இன்னும் அதிகமான மக்கள் இத்தீவுகளில் வந்து குடியேறினர். அவர்கள் ஒவ்வொரு தீவிலும் அழகிய சிறிய நகரங்களை அமைத்துக் கொண்டனர். இத்தீவுகளில் ரியால்டோ (Rialto) என்பதே மிக முக்கியமான தீவாகும். இங்கும் மற்ற தீவுகளிலும் வாழ்ந்த மக்கள் ரோமானியப் பேரரசின் அமைப்பை ஓரளவு அறிந்தவர்களாவார். அரசியல் அமைப்புகளும், கருத்துகளும் அவர்களுக்குப் புதியவை அல்ல.

எனவே கி.பி. 697 ஆம் ஆண்டு தங்களை ஆட்சி செய்வதற்காக ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். அவர் ‘டோஜ்’ (Doge) என்றழைக்கப்பட்டார். ஆட்சித் துறை, மதம் மற்றும் இராணுவம் முதலியவற்றைப் பற்றிய எல்லா அதிகாரங்களும் அவருக்குத் தரப்பட்டன. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுள் பேலே லுகா அனபெஸ்டா (Poalo Luca Anafest) என்பவரே முதல் டோஜ் ஆவார். அவருடைய பதவி ஏற்பு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. தங்கத்தாலான கிரீடத்தை அவர் அணிந்து கொண்டு, தந்தத்தினாலான செங்கோலை கையிலேந்தி ஆட்சி செய்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் வெனிஸ் ஒரு குடியசராக மாறி கொண்டு வந்தது. வெனிசின் கட்டிடம் மற்றும் பல்வேறு விதமான அமைப்புகள் வளர்ச்சியுற்றன. இவர் வடமேற்கேயுள்ள லம்பார்டிய அரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்த தீபகற்பத்தின் ஒரு பகுதியை வெனிசோடு இணைத்துக் கொண்டார்.

இவரை அடுத்து வெனிசை ஆட்சி செய்தவர்களில் மூன்றாவது ‘டோஜ்’ ஆர்சோ (Orso) என்பவர் குறிப்பிடத்தகுந்தவர் ஆவார். இவர் கி.பி. 720 ஆம் ஆண்டு முதல் 737 ஆம் ஆண்டு வரை நல்லாட்சி நடத்தினார். கி.பி. 735 ஆம் ஆண்டில் கிழக்கு ரோமானியப் பேரரசின்

ஆட்சிக்குட்பட்டிருந்த ராவென்னா (Ravenna) நகரத்தை லம்பார்டிய மன்னர் தாக்கினார். அப்பொழுது ராவென்னாவின் ஆளுநருக்கு (நுஒயசஉா)இ ஆர்சோ, படை மற்றும் பொருளுதவியைக் கொடுத்தார். இவ்வுதவியைப் பெரிதாகக் கருதிய கிழக்கு ரோமானியப் பேரரசர் மூன்றாம் லியோ (Leo III : 717 -741) ஆர்சோவுக்கு 'ஏகாதிபத்தியக் கான்சல்' (ஐஅிநசயைட ஊழளெரட) பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்தார்.

வெனிஸ் குடியரசு மாறியது. 'டோஜ்' மக்களின் காப்பாளராகவே ஆட்சி செய்தார். அவர் கொடுங்கோலனாக மாறியதால், உடனே அவர் ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டு, வேறொரு 'டோஜ்' தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு கொடுங்கோலர்களாக இருந்த சிலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு குருடர்களாக ஆக்கப்பட்டார்கள்.

வெனிஸ் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பிராங்குப் பேரரசுடனும், கிழக்கு ரோமானியப் பேரரசுடனும் பல போர்களில் ஈடுபட வேண்டியிருந்தது. அப்போர்களிலே வெற்றிப் பெற்று வெனிஸ் சுதந்திரக் குடியரசாகவே இயங்கி வந்தது. எந்தக் காலத்திலும் எந்த அயலவரின் ஆட்சிக்கும் வெனிஸ் உட்பட்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இடைக்காலத்தின் இறுதிக்குள் வெனிஸ் அரசியல் துறையில் மட்டுமின்றி சமூக, பொருளாதாரத் துறையில், குறிப்பாக வணிகத் துறையிலும், கலைத் துறைகளிலும் வியத்தகு முன்னேற்றத்தைப் பெற்றிருந்தது. மற்ற நகர அரசர்களுக்கே அமைதியான வழி காட்டியாக வெனிஸ் அமைந்தது.

**5. மேற்கு ஐரோப்பா அந்நியர் வசமாதல்**

**(Occupation of Western Europe by barbarians)**

ரோமப் பேரரசின் ஆட்சியாளர்கள் திறமையற்றவர்களாக உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி உட்பூசல்களால் அலைக்கழிக்கப்பட்ட போது அவர்களது பெருமை மங்கி மறையலாயிற்று. ரோமுலஸ் அகஸ்டஸ் என்ற மன்னரை ஜெர்மானியக் காட்டுமிராண்டி இனப்பிரிவுத் தலைவரான ஓடோவாக (Odoakar) என்பவர் தோற்கடித்த போது அப்பேரரசு முழுமையாக அழிவுற்றது.

கி.பி. 3-ம் நூற்றாண்டு வரை ஜெர்மானியக் காட்டுமிராண்டிப் பிரிவினர் டான்யூப்ட நதிக்கு வடக்கிலும், ரைன் நதிக்கு வடகிழக்கிலும் வாழ்ந்தனர். அதன் பின்னர் அவர்கள் படிப்படியாக ரோமானியப் பேரரசுப் பகுதிகளுக்குள் ஊடுருவித் தம்மை வலிமைப்படுத்திக் கொள்ளலானார்கள். அவ்வாறு ரோமப் பேரரசுக்குள் ஊடுருவியவர்களுள் மேலைக் கோத்துகள் என்ற விஸிகோத்துகள் (Visgoths), கீழை கோத்துக்கள் எனப்பட்ட ஆஸ்ட்ரகோத்துகள் (Ostragoths), வாண்டல்கள் (Vandlas) பிராங்குகள் (Frank) ஆங்கிலோ சாக்ஸானியர்கள் (Anglo – Saxons), ஹுணர்கள் (Juns) என்ற பல பிரிவினர்கள் இருந்தனர். ரோமப் பேரரசின்

அரசியல் வாழ்வு அஸ்தமித்ததும் மேற்கூறப்பட்ட காட்டுமிராண்டிப் பிரிவினர் தம்மை சுதந்திர மன்னர்களாக அறிவித்துக் கொண்டார்கள்.

ஆயினும் அவர்களிடத்தில் காணப்பட்ட ஒருமைப்பாடின்மையோடு ஒற்றுமையின்மையும், நிலையான அரசினை அவர்கள் தோற்றுவிக்க முடியாது தடை செய்தன. இருந்த போதிலும் ரோமானியப் பேரரசில் காணப்பட்ட சிறப்பியல்புகள், பண்பாடு ஆகியவற்றில் பேரழிவை உண்டாக்கினார். நாளடைவில் அவர்களே ரோமானிய் பண்பாட்டினைப் பின்பற்றக் கூடிய அளவிற்கு ரோமப் பேரரசுடன் தம்மை ஒன்றிணைத்துக் கொண்டார்கள். இனி அவர்கள் எவ்வாறு படிப்படியாகப் பேரரசுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்பதைக் காண்போம்.

**ஐ. மேலைக் கோத்துகள் : (Visigoths) :**

ஜெர்மானியப் பிரிவினரான கோத்துகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவி தமது இருப்பிடமான ரஷ்யாவின் தென் பகுதியில் கருங்கடல் பகுதியின் கிரிமியாத் தீபகற்பகத்திலிருந்து தென் பகுதியை நோக்கி முன்னேறலானார்கள். அவ்வாறு சென்றவர்களில் நீஸ்டர் (Dniester) நதிக்கு மேற்கிலிருந்தவர்கள் மேலை கோத்துகள் அல்லது விஸிகோத்துகள் எனப்பட்டனர். அந்நதியின் கிழக்குப் பகுதியில் குடி பெயர்ந்தோர் கீழைக்கோத்துகள் அல்லது ஆஸ்டிரகோத்துகள் எனப்பட்டனர்.

டான்யூப் நதி முகத்துவாரத்தில் டேஸியா (Dacia) என்ற பகுதியில் வாழந்த விஸிகோத்துகள் ஹுணர்கள் படையெடுப்பின் காரணமாக கி.பி. 251க்கு பின பேரரசுக்கள் அடியெடுத்து வைத்தார்கள். அவர்களை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட பேரரசர் டேஸியஸ் தோல்வியுற்றுக் கொல்லப்பட்டார். தொடர்ந்து கோத்துகள் தமது நட்பு இனத்தினரான டைபாலி, வாண்டல்கள், ஹிலி ஆகிய பிரிவினருடன் இணைந்து பேரரசைத் தாக்கி வந்தனர். கி.பி. 269-ல் அவர்களை நைஸஸ் என்னும் போர்க்களத்தில் பேரரசர் கிளாடியஸ் (கி.பி. 269- 270) வெற்றிக் கண்டார். அவரைத் தொடர்ந்து அவ்ரேலியன் (கி.பி. 270-275) என்பவரும் கோத்துகளை வெற்றிக் கண்டார்.

இருந்தாலும் மேலைக் கோத்துகள் டான்யூப் பகுதிக்கு தமக்காகி ஒரு தனி அரசினை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்கள் டான்யூப் நதியைக் கடக்க முயன்ற போது கி.பி. 332-ல் மகாகான்ஸ்டன்டைனால் (கி.பி. 306-337) தோற்கடிக்கப்பட்டனர். ஆனால் கீழை ரோமப் பேரரசரான வாலென்ஸ் காலத்தில் (கி.பி. 364-378) அவர்கள் டான்யூபைக் கடந்து மோஷியாவில் குடியேறினார்கள். கி.பி. 378 ஆகஸ்டு 9-ம் நாள் பிரிடிஜன் என்னும் காட்டுமிராண்டித் தலைவர் ரோமானியர்களை, ஏட்ரியா நோபிளில் வென்று பேரரசர் வாலென்ஸையும் கொன்றனர்.

வாலென்சுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற முதலாம் தியோடோஸியஸ் (Theodecius I) கி.பி. 379–395 மேலை கோத்துகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்தி வைத்த போதிலும்

அவர்களைப் பேரரசினின்றும் வெளியேற்ற இயலவில்லை. தமது அரசுப் பணிகளிலும் அவர்களை அமர்த்திக் கொண்டார். கிரேஸ், ஆசியா மைனர் ஆகிய பகுதிகளில் கோத்துகளை வாழ அனுமதித்தார். இந்த அனுமதியானது பேரரசு தியோடோஸியஸ், மேலை கோத்துகளுடன் கி.பி. 382-ல் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விளைவாக வழங்கப்பட்டது. ரோமானிய குடிமக்களால் ஏற்கப்பட்ட கோத்துகள் பேரரசுப் படையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அதனால் ரோமானியப் பண்பாடு சிதைவுறுவதற்கான வித்து ஊன்றப்பட்டது.

**முதலாம் அலரிக் :**

பால்டி குடும்பத்தைச் சேர்ந்த முதலாம் அலரிக் என்ற வலிமை மிக்க தலைவர் கோத்துகளின் பேரரசை விரிவுபடுத்த விரும்பினார். ஆரம்பத்தில் கீழை ரோமப் பேரரசின் மீது தமது கவனத்தைச் செலுத்திய அலரிக் பின்னர் கிரிஸ் மீது வலிமைமிக்க தளபதியான ஸ்டிலிகோ என்பவரின் கீழ் அனுப்பினார். இருப்பினும் அலரிக், ஸ்டிலிகோவை தாக்கி ஏதென்ஸ், இலுஸிஸ், ஸ்பார்ட்டா அகிய பகுதிகளைக் கைப்பற்றினார். பின்னர் ஸடிலிகோவுடன் சமாதானம் செய்து கொண்டு இல்லீரியாவைக் கட்டுப்படுத்தினார். திரேஸ், வெனீஷியா, துலான் போன்ற இடங்களும் அலரிக்கின் கீழ் வந்தன. அவ்வமயம், ஸ்டிலிகோ, வாண்டல்கள் எனப்பட்ட மற்றொரு காட்டு மிராண்டிப் பிரிவினரின் துணையுடன் அலரிக்கை பொலன்ஷியா என்னுமிடத்தில் கி.பி. 402 ஏப்ரல் 6-ம் நாள் சந்தித்துத் தோற்கடித்தார். இவ்வெற்றியின் விளைவாக ஸ்டிலிகோவின் மதிப்பு உயர்ந்தது.

ஆனால் பேரரசர் ஹொனோரியஸ் ஸ்டிலிகோலின் மீது பொறாமை கொண்டு அவரைக் கொன்றார். ஸ்டிலிகோவின் மரணம் அலரிக்குச் சாதகமாயிற்று. கி.பி. 408-ல் அலரிக் ரோமின் மீது படையெடுத்தார். பேரரசர் ஹொனொரியஸ் ராவென்னா என்னுமிடத்தில் பதுங்கிக் கொண்டதுடன் எவ்வித எதிர்ப்பினையும் காட்டவில்லை. இத்தாலி கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. கி.பி. 410 ஆகஸ்ட் 24-ல் ரோமின் தலைவாயிலான ‘சாலரியன் வாயில்’ (Salarian Gate ) உடைக்கப்பட்டது. மேலை கோத்துகளால் ரோம்நகர் மூன்று நாட்கள் சூறையாடப்பட்டது. கிறிஸ்தவத் தேவாலயங்கள் இடிக்கப்படவில்லை. மேலும் உயிர்சேதமும் அதிகமில்லை. ஆகஸ்ட் 27-ல் அப்படைகள் ரோம் நகரை விட்டு வெளியேறின.

பின்னர் அலரிக் தனது கவனத்தை ஆப்பிரிக்காவை நோக்கித் திருப்பினார். சிசிலி வழியாகச் சென்ற படை புயலால் அழிவுற்றது. உடல்நலக்குறைவு காரணமாக கி.மு. 410-ல் அலரிக் மரணமடைந்தார். அவரது மரணம் இத்தாலியில், மேலை கோத்துகள் குடியேற்றம் ஏற்படாமல் தடுத்தது.

அடால்ப் (**Ataulf**) : (கி.பி. 410 – 412)

அலரிக்கின் மரணத்திற்குப்பின் அவருடைய மைத்துனர் அடால்ப் விஸிகோத்துகளின் தலைவரானார். தெற்கு கால்பிரதேசத்தையும் வடக்கு ஸ்பெயின் பகுதிகளையும் இணைத்து

அவர் புதிய குடியமைப்பைத் தோற்றுவித்தார். டூலூஸ் அதன் தலைநகராயிற்று. இப்புதிய ஆட்சியமைப்பு ரோமப் பேரரசிற்கு உட்பட்டே செயல்பட்டது. ரோமப் பேரரசர் ஹொனோரியசின் ஒன்றுவிட்ட சகோதரியான காலா பிலாஸிடியா என்பவளை மணந்து கொண்ட அடால்ப் கி.பி. 415-ல் கொலை செய்யப்பட்டார். இவரது அரசில் கான்ஸ்டன்சியஸ் என்பவரின் எதிர்ப்பை சமாளிக்க வேண்டியவராகவே இருந்தார்.

வாலியா (**Wallia**) : கி.பி. (415 – 418)

அடால்பின் மரணத்திற்குப் பின் ஏற்பட்ட அரசுரிமைப் போராட்டத்தில் சிகரிஜ் என்பவர் வென்றார். ஆனால் அரசுப் பொறுப்பேற்ற ஒரு வாரத்தில் அவர் கொல்லப்பட்டார். எனவே வாலியா என்பவர் விஸிகோத்துகளின் தலைவரானார். ஸ்பெயினில் நாடோடிப் பிரிவினரான வாண்டல்கள் ஆலன்கள் போன்றோர் வலிமை பெறுவதைக் கண்ணுற்ற பேரரசர் ஹொனோரியஸ் அவர்களை விரட்டி ஸ்பெயினைக் கட்டுப்படுத்தும் பொறுப்பினை வாலியாவிடம் ஒப்படைத்தார். அதனை வாலியா வெற்றிக்கரமாகச் செய்து முடித்தார். அதன் விளைவாக ஸ்பானியப் பகுதிகளில் விஸிகோத்துகள் தங்க அனுமதிக்கப்பட்டனர். ஆனால் கி.பி. 418-ல் வாலியா மரணமடைந்ததால் ஸ்பெயினில் விஸிகோத்துகளின் ஆட்சியானது வாலியா காலத்தில் ஏற்படவில்லை.

முதலாம் தியோடரிக் (**Theodoric I**) (கி.பி. 419 – 451)

வாலியாவுக்குப் பின் அலரிக்கின் மருமகனான முதலாம் தியோடரிக் விஸிகோத்துகளின் தலைவரானார். அவர் ரோமப் பேரரசுக்கு ஆதரவாக வாண்டல்களை எதிர்த்தலின் பொருட்டு விஸிகோத்துகளின் படையொன்றினை கி.பி. 421-ல் ரோமை நோக்கி அனுப்பினார். அப்படை வாண்டல்களை வென்று வாகை சூடியது. எனவே தியோடரிக் மத்திய தரைக்கடல் வழியாக முன்னேறி கி.பி. 426-ல் கௌல் பகுதியைக் கட்டுப்படுத்திய பின்னர் கி.பி 439-ல் ரோமானியப் படைகளைத் தோற்கடித்தார்.

ஆனால் அப்போது ஹூணர்களால் தமக்கேற்பட்ட அபாயத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளுதலின் பொருட்டு ரோமானியர் தியோடரிக்குடன் சமாதானம் செய்துக் கொண்டார்கள். ஹூணத்தலைவரான அட்டில்லா கி.பி. 451-ல் காட்டலுனியன் சமவெளியில் டிராய் நகருக்கு ஐந்து மைல் தொலைவில் அமைந்திருந்த கலோன்ஸ் (Chalons) போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். ஆனால் அப்போரில் முதலாம் தியோடரிக் கொல்லப்பட்டார்.

தொரிஸ்மூத் (**Thorismud**) (கி.பி. 451 – 453)

முதலாம் தியோடரிக்கின் மரணத்திற்குப் பின் அவரது மைந்தர் தோரிஸ்மூத் விஸிகோத்துகள் தலைவரானார். அவரது ஆட்சி வெகுகாலம் நீடிக்கவிலலை. ஆட்சித்

தலைமை காரணமாக ஏற்பட்ட போட்டியினால் தோரிஸ்மூத் கி.பி. 453-ல் கொலை செய்யப்பட்டார்.

**இரண்டாம் தியோடரிக் : (Theodorinc II) (கி.பி. 453-466)**

இவர் முதலாம் தியோடரிக்கின் மகனும், தோரிஸ்மூத்தின சகோதரனுமாவர். படைவலிமை மூலமாகத் தமது ஆட்சிப் பகுதியினை விரிவாக்கம் செய்ய முற்பட்டார். ரோமப் பேரரசர் மஜோரினுடன் நல்லுறவு கொண்டிருக்கவில்லை. எனவே கௌல் பகுதியில் தமது ஆதிக்கத்தை மீண்டும் நிலை நாட்டினார். ஆனால் ரோமானியப் பேரரசுப் படையானது கி.பி. 462-ல் ஆர்லியன்ஸ் நகருக்கு அருகில் இவரைத் தோற்கடித்தது. இவரை இவரது சகோதரர் யூரிக் (Euric) என்பவர் கி.பி. 466-ல் கொலை செய்தார்.

**யூரிக் (Euric) : (கி.பி. 466-484)**

யூரிக்கின் ஆட்சிக் காலத்தில் தான் விஸிகோத்துகளின் ஆட்சியானது கௌல், ஸ்பெயின் ஆகிய பகுதிகளில் முதன்முறையாக நிலைப்படுத்தப்பட்டது. எனவே ஸ்பெயினில் விஸிகோத்துகளின் ஆட்சியைத் தொடங்கிய முதல் மன்னர் இவரேயாவார். வடக்கு, வடமேற்கு மற்றும் மத்திய ஸ்பெயின் ஆகிய சிறு பகுதிகளைத் தவிர விஸிகோத்துகளின் ஆட்சியை ஸ்பெயின் ஆகிய சிறு பகுதிகளைத் தவிர விஸிகோத்துகளின் ஆட்சியை ஸ்பெயின் முழுவதிலும் இவர் நிறுவினார். அவரது ஆட்சி ஜிப்ரால்டர் ஜலசந்தி வரை பரவியது. கி.பி. 470-ல் ரோமானியப் படைகளை வெற்றி கண்டு பேரரசர் நிப்போஸ் என்பவருடன் சமாதானம் செய்து கொண்டார். எனவே இவருடைய ஆட்சியானது பிரனீஸ் மலைத் தொடரையும் தமது எல்லைகளாக் கொண்டிருந்தது.

யூரிக்கின் பேராற்றல் காரணமாக பலரும் அவருடன் நட்புறவு கொள்ள விரும்பினார். ரோமானியச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு சட்டத் தொகுப்பு ஒன்று இவரால் வெளியிடப்பட்டது. இவர் காலத்தில் தான் கி.பி. 476-ல் ரோமப் பேரரசுக்கு ஒடவாகர் முடிவு கட்டினார். எனவே கி.பி. 477-ல் ஓடவாகரை இவர் போரில் சந்தித்தார். அதன் மூலம் இத்தாலியைத் தன்வசப்படுத்தவும் எண்ணினார். ஆனால் போரில் தோல்வியுற்றதால் அம்முயற்சியைக் கைவிட்டார். இத்தாலிய விவகாரங்களில் இனி தலையிடுவதில்லை என்றும் உறுதியளித்தார். ஆல்ப்ஸ் மலைக்கும் ரைன் நதிக்கும் இடைப்பட்ட பகுதியோடு தம் நிலையைத் தக்கவைத்துக் கொண்ட அவர் கி.பி. 484- டிசம்பரில் காலமானார்.

**இரண்டாம் அலரிக் : (கி.பி. 484 – 507)**

யூரிக்குப் பின் அவரது திறமையற்ற மகன் இரண்டாம் அலரிக் விஸிகோத்தகளின் மன்னராக கி.பி. 484 டிசம்பர் 28-ல் பொறுப்பேற்றார். பிராங்க் பிரிவின் மன்னரான குளோவிஸ் அவரது கடும் எதிரியாயிருந்தார். கி.பி. 496-ல் ரோமானியப் பகுதிகள் பலவற்றை அலரிக் பிராங்குகளிடம் இழந்தார். தொடர்ந்து கி.பி. 502 வரை அவர் பிராங்குகளுடன் போராடினார்.

அவ்வாண்டில் மகாதியோடரிக்கின் தலையீட்டால் அவர்களுக்கிடையில் சமாதானம் ஏற்பட்டது. ஆனால் அவ்வுறவு நீடித்திருக்கவில்லை.

கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களைச் சரிவர நடத்தவில்லை எனற காரணத்தால் குளோவில் விஸிகோத்து மன்னரான இரண்டாம் அலரிக் மீது போர் தொடுத்தார். கி.பி. 507-ல் ஓய்வு என்னுமிடத்தில் நடந்த போரில் குளோவில் இரண்டாம் அலரிக்கைத் தோற்கடித்துத் தம் கைகளாலேயே கொன்றார். தலைநகரான டூலூஸ் சூறையாடப்பட்டது. அதன் காரணமாக விஸிகோத்துகளின் ஆட்சி எல்லை சுருங்கிற்று. பிரனீஸ் மலைத் தொடரின் தென்பகுதி மட்டும் விஸிகோத்துகளின் கட்டுபாட்டிலிருந்து வரலாயிற்று.

**அமலரிக் (Amalaric) : (கி.பி. 507 – 531)**

இரண்டாம் அலரிக்குப் பின் அவருடைய மகன் அமலரிக் தமது ஐந்தாவது வயதிலேயே ஆட்சியாளராக்கப்பட்டார். அதனால் கி.பி. 526 வரை அவருடைய பாட்டனார் மகாதியோடரிக் பகர ஆளுநராகச் செயல்பட்டார். தமது கத்தோலிக்க மனைவியும் குளோவிஸின் மகளுமான சரோடில்டாவைத் துன்புறுத்தியதன் காரணமாக அலமரிக் தனது மைத்துனரான சிலீடிபெர்ட்டுடன் போரிட வேண்டியவரானார். அதன் விளைவாக ஸெப்டிமானியா என்ற பகுதியை இழந்தார்.

**ஸ்பெயினில் விஸிகோத்துகள் :**

அமலரிக்கின் மரணத்திற்குப் பின் கி.மு. 531 முதல் 548 வரை ஆட்சியாளராயிருந்த முதலாம் தியூடிஸ் (Theudis I) காலத்தில் ஸ்பெயின் பகுதிகளில் மட்டுமே விஸிகோத்துகள் ஆதிக்கம் காணப்பட்டது. அதன் தலைநகராக பார்ஸிலோனா ஆக்கப்பட்டது. அவருக்குப் பின் வந்த அஜிலா (Agila) (கி.பி. 549 – 54) காலத்தில் அவர்களது ஆட்சிப்பகுதி மேலும் சுருங்கிற்று. பார்ஸிலோனாவிலிருந்து தலைநகர் மெரிடாவுக்கு மாற்றப்பட்டது. வலுவிழந்து தமது பரப்பளவில் குன்றிய விஸிகோத்துகள் ஆட்சி மேலும் குறுகிய பொது அதனாஜில்டு (Athanagild) (கி.மு. 554 – 567) காலத்தில் டொலோடா நகருக்கு தலைநகர் மாற்றப்பட்டது.

அதன் பின்னர் கி.பி. 711-ல் ரோடரிக் என்ற கடைசி விஸிகோத்து மன்னரை தாரிக் என்ற அராபியத் தளபதி தோற்கடித்த காலம் வரை விஸிகோத்துகளின காலம் நீடித்திருந்தது. அந்த இடைக்காலத்தில் ரெக்காரெட் (Recared) (கி.பி. 586 -601) மன்னர் காலத்தில் விஸிகோத்துகள் கத்தோலிக்க மதத்தை முழுமையாகப் பின்பற்றலானார்கள். அத்துடன் ரிசெஸ்விந்த் என்ற மன்னர் காலத்தில் ரோமானியரையும் விஸிகோத்துகளையும் இணைக்ககூடிய வகையில் சட்டத் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட்டது.

எனவே விஸிகோத்துகள் தமது தனித்தன்மையை இழந்தார்கள். அராபியர் படையெடுப்பும் விஸிகோத்துகளின் வீழ்ச்சிக்கு வித்தாக அமைந்தது. வரையறை

செய்யப்படாத வாரிசுரிமைக் கொள்கையும் அதனால் ஏற்பட்ட வாரிசுரிமைச் சிக்கல்களும் அவர்களை வீழ்ச்சியடையச் செய்தன. இறுதியாக 711-ல் தாரிக் என்ற அராபியர் விஸிகோத்து மன்னராகிய ரோடரிக்கை வென்றமையால் அவர்களது தலைநகரான டொலெடோவில் டெமாஸ்கஸ் காலிப்பின் மேலாண்மை உறுதிப்படுத்தப்பட்டது.

## II. கீழைக் கோத்துகள் : (Ostrogoths)

தெற்கு ஸ்காண்டிநேவியாவைத் தமது ஆரம்பகால இருப்பிடமாகக் கொண்டிருந்த ஆஸ்டிரகோத்துகள் எனப்பட்ட கீழைக் கோத்துகள் கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் பால்டிக் கடலைக் கடந்து அதன் தென் பகுதியில் ஊடுருவலானார்கள். ஆரம்பத்தில் கிழக்கே டான் நதியிலிருந்து மேற்கே நீஸ்டர் நதி வரையிலும் வடக்கே பிரிப்பெட் கழிமுகப் பகுதியிலிருந்து தெற்கே கருங்கடல் பகுதி வரை ஆண்டு வந்த இவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வலிமை மிக்கதோர் அரசினைத் தமக்கெனப் பெற்றிருந்தார்கள்.

கருங்கடலுக்குக் கிழக்கேயிருந்த கீழைக் கோத்துகளின் ஆட்சிச் சிறப்பினை உயர்த்தியவர் எர்மனாரிக் என்பவராவார். அவரும் அவருடைய வழித் தோன்றலான விதிமிர் என்பவரும் ஹுணர்களின் தாக்குதல்களுக்கு இலக்கானார்கள். அதனரிக் என்பவரம் அதே நிலைக்கு ஆளானார். ஆனால் கி.பி. 378 ஆகஸ்டு 9-ம் நாள் நடைபெற்ற ஏட்ரியாநோபிள் போரில் விஸிகோத்துகள் கீழை ரோமப் பேரரசர் வாலென்ஸைக் கொன்றனர். அதனால் விஸிகோத்துகளுடன் இணைந்து செயல்படும் வாய்ப்பு ஆஸ்டிரகோத்துகளுக்கு கிட்டியது. அத்துடன் கிபி. 382-ல் ரோமானியப் பேரரசர் கிரேஷியன் ஆஸ்டிரகோத்துக்களுடன் உடன்பாடு ஒன்றினைச் செய்து கொண்டு அவர்களை பன்னோனியா பகுதியில் தங்க அனுமதித்தார். அதன் விளைவாக இத்தாலியப் பகுதிகளுக்குள் ஊடுருவும் வாய்ப்பு ஆஸ்டிரகோத்துகளுக்கு கிடைத்தது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஹுணர்களின் ஆதிக்கம் சிதைவுற்ற போது ஆஸ்டிரகோத்துகள் வலிமையடையலாயினர்.

### மகா தியோடரிக் : (கி.பி. 493 – 526)

கி.பி. 455-ல் தியோடோமிர் என்பவருக்கும் இரீரிலவா என்பவளுக்கும் மகனாகப் பிறந்த தியோடரிக்கிற்கு பைசாண்டியப் பேரரசர் முதலாம் லியோ ஆதரவளித்தார். கி.பி. 461-ல் கான்ஸ்டான்டிநோபிளுக்குப் புகலிடம் தேடிச் சென்ற அவர் குறுகிய காலத்திற்குள்ளாகவே ஆட்சித்துறை, போர்த்துறை ஆகியவற்றில் வல்லுநரானார். இவர் கல்வியறிவைப் பெற்றுக் கொள்ளவில்லை. ரோமானியப் பண்பாடு, கலைகள் ஆகியவற்றில் கவரப்பட்டு விளங்கினார்.

கி.பி 471-ல் தியோடோமிர் காலமானதும் தியோடரிக் பன்னோனியாவின் மன்னரானார். மேலும் இவரது சிறப்பில்புகள் காரணமாக பேரரசர் ஜெனோ (Emperor Zeno) (கி.பி. 474 – 491) விடமிரந்து படைவீரர்களின மேலாளர் (Master of Soldiers), பாட்ரீஷியன் (Patrician) கான்ஸல் (Consl) ஆகிய பட்டங்களைப் பெற்றார். கி.பி. 484-ல் மூஷியா பகுதியின்

கான்ஸலானார். பின்னர் கி.பி. 473-ல் அகஸ்டஸ்ரோமுலஸை வென்று ரோமின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட ஓடவாகரை வெல்லும் பொருட்டு இத்தாலிக்குச் சென்றார். கி.பி. 489 ஆகஸ்டு 28-ல் வெரோனாவிற்கு அருகிலும், கி.பி. 490-ல் அதௌ ஆற்றின் கரையிலும் ஓடவாகரை வெற்றிக் கண்டார்.

இருப்பினும் ஓடவாகரின் பிடிவாதம் காரணமாகவும், தொடர்ந்து அவர் தியோடரிக்கிற்கு பல இன்னல்களை விளைவித்தாலும் அவ்விருவரும் கி.பி. 493 மார்ச் 5-ல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி இத்தாலியன் ஆட்சியுரிமையை இருவரும் பகிர்ந்து கொண்டார்கள். அனால் அவ்வுடன்படிக்கை கையெழுத்தான பத்து தினங்களுக்குள்ளாக மார்ச் 15-ம் நாள் விருந்து ஒன்றில் வஞ்சகமாக ஒடவாகரைக் கொன்று தம்மை இத்தாலியின் முற்றுரிமை பெற்ற ஆட்சியாளராக ஆக்கிக் கொண்டார். கி.பி. 526-ல் அவர் மரணமடையும் வரை ஆட்சியாளராகத் திகழ்ந்தார்.

தமது வீரத் தீரச் செயல்கள் மூலம் வலிமைமிக்க அரசராகத் திகழ்ந்த தியோடரிக் திருமண உறவுகள் வாயிலாகத் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொண்டார். தாமே பிராங்குகள் மன்னரின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். தமது மகளை விஸிகோத்து மன்னரான இரண்டாம் அலரிக் என்பவருக்கு மணமுடித்து வைத்தார். தம்முடைய தங்கை ஒருத்தியை வாண்டல்களின் அரசருக்கு மணம் செய்வித்தார். நட்பு மூலம் நலன்பல பெற்றார்.

கி.பி. 497-ல் கிழக்கு ரோமானியப் பேரரசராக ஏற்றுக் கொள்ளப்பட்ட தியோடரிக் ஒளிச் சான்ற, பயமுள்ள வல்லாட்சியாளரெனத் திகழ்ந்தார். ராவென்னா தொடர்ந்து அவருடைய தலை நகராயிருந்தது. இவருடைய ஆட்சிக் காலத்தை ரோமானியப் பண்பாட்டின் மறுமலர்ச்சிக் காலமெனக் கூறலாம். பைசாண்டியப் பேரரசரின் மேலாண்மையை ஏற்றுச் செயல்பட்ட தியோடரிக் ரோமானியச் சட்டங்களின் அடிப்படையில் சட்டத் தொகுப்புகளையும், நீதிமுறைகளையும் நடைமுறைப்படுத்தினார். ஆணைகள் ரோமானியச் சட்டங்களினடிப்படையில் பிறப்பிக்கப்பட்டன. அதனால் இத்தாலியில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட்டன. அந்நிய படையெடுப்புகள் பலவற்றால் தொடர்ந்த இழப்புகள் பலவற்றுக்கு உள்ளான இத்தாலிக்கு இவரது ஆட்சி ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அதனால் அவரை மகாதியோடரிக் என்றழைப்பதிழ் வியப்பொன்றுமில்லை.

ரோமானிய ஆட்சிமுறை அமைப்புகளை அவர் பேணிக் காத்துப் பின்பற்றினார். வலிமைமிக்க செனட் உறுப்பினர்களுடன் அவர் கொண்டிருந்த நல்லுறவு காரணமாக நாட்டில் நல்லாட்சி நடைபெற்றது. தமது இனப்பிரிவினர்கள் காவல் மற்றும் படைத் துறைகளில் அமர்த்தித் தன்னுடைய நிலையை வலிமையுடயதாக்கிக் கொண்டார். ஆட்சித்துறையைச் சீராக்கிய தியோடரிக் நாட்டின் பொருளாதாரத்தினையும் வலுப்படுத்தி மேம்பாடடையச் செய்தார். வர்த்தகம் பேணப்பட்டது. நாடு முழுவதும் சாலைகளால் இணைக்கப்பட்டன.

கால்வாய்கள் பல வெட்டப்பட்டும், பழுது பார்க்கப்பட்டும் பாசன வசதி அதிகரிக்கப்பட்டது . உற்பத்தியளவு உயர்ந்தது.

ரோமானியப் பண்பாட்டின் காவலரெனத் திகழ்ந்த தியோடரிக் ரோமானிய நினைவுச் சின்னங்களை அழிவின்றும் காப்பாற்றுவதில் ஆர்வம் காட்டினார். பழங்கட்டிடங்கள் பழுது பார்க்கப்பட்டன. ரோமானியப் பாணியில் கட்டிடங்கள் பல உருவாக்கப்பட்டன. இலக்கியத் துறையில் அவர் அளவு கடந்த ஈடுபாடு காட்டினார். ரோமானியத் தத்துவ இல்கிய கர்த்தாவான போய்த்தியஸ் (Boethius) மற்றொரு தத்துவஞானி காஸியோடோரஸ் (Cassiodarus) ஆகியோரை அவர் ஆதரித்தார். முன்னவர் புதிய மெய்யுணர்வுத் தத்துவ நூல்களைப் படைத்ததுடன் பலமொழி பெயர்ப்பு நூல்களையும் வெளியிட்ட போது பின்னர் பண்டைய இலக்கியங்கள் பலவற்றைப் படியெடுத்து அவை அழியாது காக்க உறுதுணையாக விளங்கினார்.

ஆரியஸ் கோட்பாட்டுப் பிரிவு கிறிஸ்தவராக விளங்கிய தியோடரிக் சமயப் பொறையுடைமைக் கோட்பாட்டினையே அரசர் என்ற முறையில் பின்பற்றினார். வைதீக கத்தோலிக்கத் திருச்சபைக்கு அவர் ஆதரவு நல்கினார். யூதர்களும், அவருடைய ஆதரவைப் பெற்றார்கள். ‘தனது சொந்த எண்ணங்களுக்கு மாறாக யாரையும் வற்புறுத்திச் செயல்படச் செய்ய முடியாத காரணத்தால் யார் மீதும் வலுக்கட்ட்ாயமாக ஒரு சமயக் கோட்பாட்டைப் புகுத்த முடியாது’ என்பதே அவரது சமயக் கொள்கையின் அடிப்படை ஆகும்.

கி.பி. 526 ஆகஸ்டு 30-ல் மரணமடைந்த மகாநதியோடரிக்கின் இறுதிக்காலம் இன்னல்கள் நிரம்பியதாயிருந்தது. கான்ஸ்டான்டிநோபிள், வட ஆப்பிரிக்க வாண்டல்கள் ஆகியோருடன் போரிட வேண்டியவராயிருந்தார். கி.பி. 518 முதல் கி.பி 527 வரை பேரரசராயிருந்த முதலாம் ஜஸ்டின் சமய அடிப்படையில் தியோடரிக்குடன் பகைமை பாராட்டினார். அரியன் பிரிவு கிறிஸ்தவர்கள் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். கத்தோலிக்கர்களுக்கு பேரரசர் அளித்த ஆதரவு, மதமாற்றத்திற்கு அவர் மேற்கொண்ட பணிகள் ஆகியவற்றால் பேரரசருக்கும் தியோடரிக்கிற்கும் இடையிலான பிளவு விரிவடைந்தது. கி.பி. 525-ல் தமது தூதுவராக போப் முதலாம் ஜானை பேரரசரிடம் அனுப்பினார். ஆனால் அம்முயற்சியினால் பலன் ஏதும் கிடைக்கவில்லை. ஆஸ்டிரகோத்துகள் ஆட்சி ஆட்டங்காண ஆரம்பித்து ஏறத்தாழ முப்பதாண்டு களுக்குள்ளாகவே தன் கல்லறையைச் சென்றடைந்தது.

தியோடரிக்கின் ஆட்சிக்குப் பின் கீழைக் கோத்துகளின் பலம் குன்றியது. கி.பி. 526 முதல் 534 வரை தியோடரிக்கின் மகள் அமல்சுந்தர வயிற்றுப் பேரரான அதலரிக் (Athalaric) தமது தாயைப் பகர ஆளுநராகக் கொண்டு ஆட்சி பரிந்தார். கி.பி. 534-ல் அதலரிக் மரணமடைந்ததும் தியோடோகத் (Theodohad) கி.பி. 534 முதல் கி.பி. 536 வரை அரசாட்சி செய்தார். அவரது ஆட்சியின் போது தான் பேரரசர் ஜஸ்டீனியன் கி.பி. 535-ல்

பெலிஸாரியஸ் என்ற தளபதியை அனுப்பி சிசிலி, நேப்பிள்சு ஆகிய இத்தாலியப் பகுதிகளைக் கைப்பற்றச் செய்தார்.

வலிமையற்ற தியோடோகத்தை அவரது இனப் பிரிவினரே பதவி நீக்கம் செய்தார்கள். அதனால் விதிஜிஸ் (Witigis) என்பவர் கி.பி. 536 முதல் 540 வரை ஆட்சியாளாராயிருந்தார். அவருடைய ஆட்சிக் காலத்தில் பெலிசாரியஸ் 536-ல் ரோமில் நுழைந்து கி.பி. 540-ல் ராவென்னாவைக் கைப்பற்றினார். அதன் பின்னரும் கீழைக் கோத்துகளை முழுமையாக வெல்லமுடியவில்லை. தோடில்லா என்பவரின் கீழ் ஆஸ்டிரகோத்துகள் ஓரளவுக்கு பெலிசாரியசைத் தடுத்து அழிவைத் தள்ளிப்போட்டனர். ஆனால் நார்சஸ் என்ற தளபதியை அவர்களால் வெற்றி கொள்ள இயலாத காரணத்தால் கி.பி. 553-ல் இத்தாலி முழுமையாகப் பேரரசர் வசமாயிற்று.

### III. வாண்டல்கள் (Vandals) :

ஜெர்மனியின் கிழக்குப் பகுதியைப் பூர்வீகமாகக் கொண்டு விளங்கிய வாண்டல்கள் கோத்துகளின் எதிர்ப்பு காரணமாக சைலீஷியாவை நோக்கி இடம் பெயர்ந்தனர். கி.பி 406 ஆம் ஆண்டின் இறுதியில் அவர்கள் கௌலை அடைந்தார்கள். மூன்றாண்டுகள் அங்கு தங்கிய பின் மீண்டும் நகர்ந்து பிரனீஸ் மலையைக் கடந்து ஸ்பெயினுக்குள் நுழைந்தார்கள். அவர்களுடைய குணவியல்புகளில் காணப்பட்ட குறைபாடுகளால் கடம் எதிர்ப்புகளுக்கு உள்ளாயினர். விஸிகோத்து மன்னரான வாலியா அவர்களை அண்டலூஸியா பகுதிக்கு விரட்டியடித்தார். வாலியாவுக்குப் பின் அரசரான முதலாம் தியோடரிக் வாண்டல்களை ஸ்பானியப் பகுதிகளிலிருந்து விரட்டினார். எனவே வாண்டல்கள் தமது செல்வாக்கை நிலை நாட்ட வேறு பகுதிகளை நாட வேண்டியவராயினர்.

#### கெய்சரிக் : (Gaiseric) (கி.பி. 428-477)

கி.பி. 428-ல் வாண்டல்களின் மன்னரான கெய்சரிக் எனப்பட்ட ஜென்செரிக் (Gaiseric) காலத்தில் வாண்டல்கள் புத்துயிர் பெற்று வலிமையடையலானார்கள். அவர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் கி.பி. 429-ல் ரோமுக்கும், கோத்துக்களுக்கும் அஞ்சி ஜிப்ரால்டரைக் கடந்து வட ஆப்பிரிக்காவில் பெரும்படையோடு மக்களுடன் வட ஆப்பிரிக்காவில் இடம் பெயர்ந்தார். ரோமப் பேரரசருடன் மீதான வெறுப்பு காரணமாக வட ஆப்பிரிக்க மாநிலத்தில் ரோமானிய ஆளுநராக விளங்கிய போனிபேஸ் (Boniface) வாண்டல்களைத் துணைக்கழைத்த வாண்டல்களின் வளர்ச்சிக்கு வித்தாக அமைந்தது.

படிப்படியாகப் பல நகரங்களை கட்டுப்படுத்திய வாண்டல்கள் கி.பி. 430-ல் கார்த்தேஜை நெருங்கிய போது ரோமப் பேரரசர் மூன்றாம் வாலன்டைன் வாண்டல்களை ஆப்பிரிக்க மாநிலங்களில் குடியேற அனுமதி வழங்கினார். கி.பி. 431-ல் கிழக்கு மற்றும் மேற்கு ரோமானியப் பேரரசுகளின் கூட்டுப் படையை கெய்சரிக் தோல்வியுறச் செய்தார்.

அதனால் கி.பி. 435-ல் ரோமானியருடன் ஏற்பட்ட சமாதானம் காரணமாக கெய்சரிக் வட ஆப்பிரிக்காவில் சுதந்திர மன்னராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். கி.பி. 439-ல் கார்த்தேஜ் அவர் கையில் வீழ்ந்தது. அவருடைய வலிமை மற்றும் கடற்படை காரணமாக கி.பி. 442-ல் ரோம் அவரது வட ஆப்பிரிக்க ஆட்சிப் பகுதிகளை அலங்கரிக்க வேண்டியதாயிற்று.

அதனைத் தொடர்ந்து மத்தியதரைக்கடலில் உள்ள சிசிலி, கார்சிகா, சார்டீனியா போன்ற தீவுகளை கெய்சரிக் கட்டுப்படுத்தினார். அதனால் அக்கடல் பகுதியில் வாண்டல்களின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டது. பின்பு அவர் ரோமைத் தாக்கினார். தரை வழியாகவும், கடல் வழியாகவும் ரோம் தாக்கப்பட்டது. னோல் போப்பாண்டவர் முதலாம் லியோவின் வேண்டுதலால் அந்நகர் அழிக்கப்பட வில்லை. ஆயினும் கி.பி. 455- ஜூனில் 15 தினங்கள் ரோம் நகரம் வாண்டல்லால் சூறையாடப்பட்டது. அந்நகரின் சொத்துக்களோடு கலைப் பொருட்கள் வாண்டல்கள் வசமாயின. செல்வத்துடன் அயிரக்கணக்கானொர் அடிமைகளாக வாண்டல்கள் கைக்கு மாற்றப்பட்டனர். கிறிஸ்தவர்களின் புனிதப் பொருட்கள் பல கார்த்தேஜிக்குக் கொண்டு வரப்பட்டன. கி.பி. 477-ல் கெய்சரிக் மரணமடைந்த போது வாண்டல்களின் புகழ் உச்சக்கட்டத்தை அடைந்தது.

கெய்சரிக்குப் பின் அவருடைய மூத்த மகனாகிய ஹுனரிக் (Huneric) (கி.பி. 477-484) ஆட்சியாளரானார். அரியன் கிறிஸ்தவப் பிரிவினரான அவர் சமய வெறியராகத் திகழ்ந்தார். கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் பெரும் இன்னல்களுக்குள்ளாக்கப் பட்டனர். அவருக்கு பின் அவருடைய உறவினரான குந்தமுந்த் (Gunthamund கி.பி. 484-496) ஆட்சியாளரானார். அவர் சமயத்துறையில் தளர்வான கொள்கையைப் பின்பற்றினார். ஆயினும் சமயச் சிக்கல்கள் தொட்ந்தன. கி.பி.491-ல் சமய வெறிகொண்ட திராசமுந்த் (Thrasamund) என்பவர் அரசரானார். குந்தமுந்தின் சகோதரரான இவர் கி.பி.523 வரை ஆட்சி புரிந்தார். சமயச்சிக்கல்களுக்கு உட்ப்படுத்தப்பட்டிருந்த வாண்டல்களின் ஆட்சி எல்லை இவர் காலத்தில் மேலும் குறுகியது.

திராசமுந்துக்குப்பின் குந்தமுந்தின் மகனான ஹில்டெரிக் (கி.பி. 523-530) ஆட்சியாளரானார். சற்று வலிமை கொண்டவரான இவருடைய காலத்தில் வாண்டல்கள் மீண்டும் வலிமை பெற முற்பட்டனர். ஆனால் கி.பி.530-ல் கெளிமர் (Gelimer) (கி.பி. 530-534) என்பவரால் பதவி நீக்கம் செய்யப்பட்டார். வாண்டல்களின் கடைசி மன்னரான கெளிமர், பேரரசர் ஜஸ்டீனியனின் படைத்தளபதியான பெலிசாரியஸ் என்பவரால் கி.பி. 533-ல் அத்தேசிமம் என்ற போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டார். அதனால் வாண்டல்களின் வடஆப்பிரிக்க ஆட்சிப்பகுதிகள் ஜஸ்டீனியனின் வசமாயின. வாண்டல்களின் ஆட்சி முடிவுற்றது.

## IV. பிராங்குகள் (Franks) :

பிரான்சு நாட்டின் தோற்றத்திற்குக் காரணகர்த்தாக்களாக விளங்கிய பிராங்குகள் பிரான்சின் சீன் (Seine) நதி தீரத்தில் வாழ்ந்த பிரான்சி என்ற ஆதி மன்னரின் வழித் தோன்றல்களாவர். ஜெர்மானிய இனப்பிரிவினரான அவர்கள் சிகரம் பிரியா என்ற இடத்திலிருந்து ரைன் நதி தீரத்துக்குக் குடிபெயர்ந்தோர் என்ற குறிப்பு காணப்படுகின்றது. அவர்கள் பன்னோனியா என்ற ஆஸ்திரியா இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற குறிப்பும் உள்ளது. அவர்கள் தமக்குள் பிளவுபட்டு விளங்கினார்கள். அவர்களுள் சாலியன் பிராங்குகள் (Salian Franks) ரிபாரியன் பிராங்குகள் (Ripuarian Franks) மற்றும் சாத்திர பிராங்குகள் (Chathi Franks) ஆகியோர் வலிமை பெற்றுக் காணப்பட்டனர்.

முதலில் சாலியன் பிராங்குகள் கௌல் பகுதியில் ஊடுருவினார்கள். கி.பி. 306-ல் பேரரசர் கான்ஸ்டன்டையினால் தோற்கடிக்கப்பட்டனர் ஆனால் அவர்களுடைய வலிமை மற்றும் ஆற்றல் காரணமாக பேரரசுப் படையில் பெரும் பொறுப்பகளை அவர்கள் பெற்றார்கள். சிறிதுகால அமைதிக்குப் பின் பிராங்குகள் ரோமானியத் தளபதியான ஆர்பிஷியோ என்பவரைத் தோற்கடித்தனர். அதன் விளைவாக ரைன் தீரத்தில் சுமார் 50 இடங்களைக் கைப்பற்றித் தம்மை வலுப்படுத்திக் கொண்டார்கள். அவ்வாறு கைப்பற்றப்பட்ட கோலோன் (Cologne) என்ற நகர் அவர்களது தலைநகராயிற்று.

பின்னர் மேலும் பல பகுதிகளில் தமது ஊடுருவல்களை நடத்தினர். டோக்ஸாண்டிரிய எனப்பட்ட தென் மியூஸ் பகுதியில் ஊடுருவிய பிராங்குகளை பேரரசர் ஜுலியன் கி.பி. 361-க்கும் கி.பி.-363 க்கும் இடைப்பட்ட காலத்தில் வெற்றி கண்டார். ஆனால் பிராங்குகள் பேரரசினைத் தாக்குவதை நிறுத்தவில்லை. தியோடோசியஸ், ரோமின் அரியணை கணக்குப் போட்டியிட்ட போது பிராங்குகள் அவருக்குத் துணை நின்றன. கி.பி. 4.3-ல் அவர்கள் ஜெர்மனியிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்த வாண்டல்களால் தோற்கடிக்கப்பட்டார்கள்.

கி.பி. 428-ல் கியாடியன் என்பவர் பிராங்குகளை ரோமானியரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தனர். தொடர்ந்து வளர்ச்சியடைந்த அவர்களை ஏஷியஸ் என்ற ரோமானியத் தளபதி கி.பி. 431-ல் ஹெலீனா என்னுமிடத்தில் தோற்கடித்தார். கிளாடியனுக்குப் பின் மெரோவிக், சில்டெரிக் ஆகியோர் பிராங்குகளின் தலைவர்களாயிருந்தனர். மெரோவிக்கின் வழித்தோன்றல்கள் மெரோவிஞ்சியன்கள் எனப்பட்டனார். சில்டெரிக்கி கி.பி. 456 முதல் 481 வரை ஆட்சி புரிந்தார். அவரது ஆட்சியின் போது கி.பி. 457-ல் மேலை கோத்துகள் பிராங்குகளின் ஆட்சிப் பகுதிகளில் ஊடுருவ முற்பட்டபோது, அம்முயற்சி முறியடிக்கப்பட்டது. கி.பி. 463-64-ல் லொயர் பகுதிகளிலிருந்த கோத்துக்களை பிராங்குகள் விரட்டினார்கள்.

குளோவிஸ் : **(Clovis)** :

கி.பி. 481-ல் சில்டெரிக்கின் மரணத்திற்குப்பின் அவருடைய மகன் குளோவிஸ் (Clovis) என்பவர் தனது 15-வது வயதில் பிராங்குகளின் மன்னரானார். அவரது

அருஞ்செயல்களின் விளைவாக மெரோவிஞ்சியர்களின் புகழ் ஓங்கி வளரலாயிற்று. கி.பி. 486-ல் கியாகிரியஸ் என்ற ரோமானிய மன்னரை ஸாய்ஸன்ஸ் (Soissons) என்னுமிடத்தில் தோற்கடித்தார். அவர் காலத்தில் பிராங்குகள் கொலோன், டூர்னே, காம்பிரே, டிரியர், புரூசெல்ஸ், மொகெல் பள்ளத்தாக்கு ஆகிய பகுதிகளில் விரிந்து காணப்பட்டன. அல்ஸாஸ் பகுதியும் கட்டுப்படுத்தப்பட்டது.

கி.பி. பர்கண்டியின் கத்தோலிக்க இளவரசியாகிய க்ளோடில்டா (Clotilda) என்பவளை மணந்து கொண்டதுடன் கி.பி. 496-ல் தாமே கத்தோலிக்கரானார். அதனால் கீழ் ரோமப் பேரரசருடன் நட்புறவு ஏற்பட்டது. கி.பி. 507-ல் மேலைக் கோத்துகளின் மன்னரான இரண்டாம் அலரிக்கை குளொவிஸ் ஒய்லி என்னும் போர்க்களத்தில் தோற்கடித்துக் கொன்றதால் மேலைக் கோத்துகளின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. விஸிகோத்துகளின் தலைநகரான டூலூஸ் தீக்கிரையாக்கப்பட்டது. அவரது ஆட்சிக்காலத்தில் பிராங்குகளின் ஆட்சிப்பகுதி அக்யூடெனே பகுதியோடு பிரனீஸ் மலைப்பகுதி வரை பரவிக் கிடந்தது. கி.பி. 511-ல் குளோவிஸ் காலமானார்.

குளோவிஸின் மரணத்திற்குப்பின் பிராங்குகளின் ஆட்சிப்பகுதியை அவருடைய நான்கு மகன்களும் தமக்குள் பங்கீட்டுக் கொண்டனர். மூத்தமகன் தியோடரிக் (கி.பி. 511-534) ரீம்ஸைத் தலைநகராகக் கொண்டிருந்தார். இரண்டாம் மகன் க்ளோடோமிர் (கி.பி. 511-524) ஆர்லியன்ஸைத் தலைநகராகக் கொண்டிருந்தார். பாரீஸைத் தலைநகராகக் கொண்டு அவரது மூன்றாவது மகன் சில்டிபெர்ட் (கி.பி. 511-558) ஆட்சிபுரிந்தார். நான்காவது மகன் முதலாம் கிளோடர் (கி.பி. 511-558) என்பவருக்கு கோய்சன்ஸ் தலைநகராயிருந்தது. கி.பி. 558 முதல் கி.பி. 561 வரை குளோடர் பிராங்குகளின் முழுமையான ஆட்சியாளராயிருந்தார். அவருக்குப் பின் மீண்டும் குளோடரின் நான்கு மக்களும் ஆட்சியுரிமையைத் தமக்குள் பிரித்துக் கொண்டதால் பிராங்குகள் வலிமை குன்றினர்.

**ஏ. ஆங்கிலோ சாக்ஸன்கள் : (Anglo-Saxons)**

நீண்ட தலையையும், நெடிய உருவத்தையும் கொண்ட ஆங்கிலோ சாக்ஸனியர் ரைன் நதிக்கும் டெனிஸ் தீபகற்பத்திற்கும் இடையில் வாழ்ந்தனர். எல்பிநதியின் தென்பகுதியிலிருந்து அவர்கள் பிரிட்டனைத் தாக்கினார்கள். கி.பி. 4 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கடுமையான படையெடுப்புகளை நிகழ்த்திய சாக்ஸனியர் தெற்கு மற்றும் தென்கிழக்கு இங்கிலாந்துப் பகுதிகளைக் கட்டுப்படுத்தினார்கள். எல்லி என்ற தலைவர் சசக்ஸ் பகுதியைக் கைப்பற்றினார். கி.பி.571-ல் மேலை சாக்ஸனிய இளவரசர் காத்வால்ப் என்பவர் பெற்ற வெற்றியால் பக்கிங்ஹாம், க்ளோசஸ்டர் ஆகிய பகுதிகள் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தன. ஜெர்மானியப் பிரிவினரான ஆங்கிலோ சாகஸனிய இனத்தவர்களால் இங்கிலாந்தில் ஏழ ஆட்சிப்பிரிவுகள் தோன்றின.

**காட்டுமிராண்டிப் பிரிவினர் படையெடுப்புகளின் விளைவுகள் :**

1. முரட்டுக்குணம், வலிமை ஆகிய குணங்களை ஒருங்கே அமையப் பெற்றவர்களான காட்டமிராண்டிப் பிரிவினரால் ஆட்சியமைப்புகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டமையால் அரசியல் மாறுபாடுகள் ஏற்பட்டன. ஒன்றித்த வலிமைமிக்க பேரரசு என்ற கோட்பாடு மறைந்து சிறுசிறு ஆட்சிப் பகுதிகளை ஒவ்வொரு பிரிவினரும் உருவாக்கினார்கள். அதனால் சிதறுண்ட அரசுப் பகுதிகள் தோன்றி குறுகிய காலத்தில் அழிவுற்றன. அவ்வரசுகளின் எல்லைகளும் குறுகியவைகளாகவே விளங்கின். அவர்களுக்கிடையில் உட்பகையோடு போட்டி, பூசல்கள் பெருகிக் காணப்பட்டன.

2. கொடுமை, கொடூரம் ஆகியவை நிரம்பப் பெற்றவர்களான காட்டுமிராண்டிப் பிரிவினர் பண்பாட்டு மாற்றத்திற்கு வழிவகுத்தனர். கால்நடை வளர்ப்பு, பயிர்த்தொழில், வேட்டையாடல், போரிடல் போன்ற தொழில்களில் ஈடுபட்டிருந்த அவர்கள் வாழ்க்கை நகர நாகரிகத்திற்கு அப்பாற்பட்டிருந்தது. அதனால் தேசியத்தன்மை, ஒருமைப்பாடு ஆகிய கொள்ளைகளைக் கொண்டிருக்கவில்லை. அதன் விளைவாக நகர அமைப்புகளுடன் அரசியல் அமைப்பு முறைகளும் சிதைவுக்குட்படுத்தப்பட்டன. அவர்களது சமுதாய அமைப்பு முறை ஐரோப்பிய பொருளாதார அமைப்பினை மாற்றத்திற்குள்ளாக்கியதில் வியப்பில்லை. அவர்களது எளிமை மற்றும் தேவைக் குறைவுடைய வாழ்வு ஆகியவை ஆடம்பரம், தேவை மிகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஐரோப்பியப் பகுதிகளின் வாழ்க்கையை மாற்றத்திற்கு உட்படுத்தின.

3. நாடோடிகளாக நாடுகள் பலவற்றைச் சுற்றித்திரிந்த காட்டுமிராண்டி இனத்தவர்கள் பலரும் பதிய ஆட்சிப் பகுதிகளை உருவாக்கிய போது அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த மக்களோடு ஒன்றிக்கலந்தனர். அது ஒரு கலப்புப் பண்பாட்டுத் தோற்றத்திற்கு வழி கோலியது. பழமையின் அடிப்படையில் செயல்பட்ட அப்பிரிவினர் புதமையான பண்பாட்டுச் சிறப்புடைய பகுதிகளில் வளர்ச்சியுற்ற நேரத்தில் பழமையும் புதுமையும் இணைந்த ஒரு கலப்பினம் தோன்றும் வாய்ப்பு ஏற்பட்டது.

4. அவர்களது இடைவிடாத போர்கள், படையெடுப்புகள் ஆகியவை பேரரசுகளின் கலைகள், பொருளாதார மேம்பாடு ஆகியவற்றைத் தகர்த்தன. ராவென்னா என்ற இடம் காட்டுமிராண்டிப் பிரிவினரின் தலைநகராக்கப்பட்டபோது பொலிவும் சிறப்பும் கொண்ட ரோம் நகரில் சமயத் தலைவர்களால் போப்பாண்டவர்களின் ஆட்சிக்கு வித்திடப்பட்டது.

5. காட்டுமிராண்டிப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட பகதிகள் கொள்ளையிடப்பட்டுச் சூறையாடப்படட்ன. எனவே அங்கு குழப்பமும் கொந்தளிப்பும் குடி கொண்டன. அமைதியின்மையால் மக்கள் அல்லலுற்றனர். வாழ்க்கை வளமிழந்து வசதியற்ற சூழலில் மக்கள் வதங்கி வேதனைப்படலாயினர். வறுமை, பஞ்சம், பசிப்பிணி ஆகியவை

கோரத்தாண்டவமாடின. காட்டுமிராண்டிப் பிரிவுகளின் தலைவர்கள்.மக்கள் நலனில் நாட்டமற்றிருந்தனா். அதனால் மக்கள் வாழ்வு துன்பச் சுமையுடையதாயிற்று.

6. கொடுமை சுமை ஆகியவற்றின் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய அப்பிரிவினரால் கல்வி, கேள்வி,கலையுணா்வு தத்துவ மேம்பாடு ஆகியவற்றில் ஈடுபாடுசெலுத்த இயலவில்லை. எனவே இடைக்கால வரலாறு ஒரு இருண்ட காலத்தில் அடியெடுத்து வைக்க காட்டுமிராண்டிப் பிரிவினா் துணைநின்றனா் எனக்கொள்வது பொறுத்தமுடையதாகும்

**கிழக்கு ரோமானியப் பேரரசர் ஜஸ்டினியன்**

## (EASTERN ROMAN EMPEROR JUSTINIAN)

கிழக்கு ரோமானியப் பேரரசு, பைசாண்டியஸ் பேரரசு என்றும், பிற்கால ரோமானியப் பேரரசு என்றும் அழைக்கப்படுகின்றது. ரோமானியப் பேரரசை ஆட்சி செய்து கொண்டிருந்த பேரரசர் கான்ஸ்டன்டைன் கி.பி. 330 ஆம் ஆண்டில் பைசாண்டியம் என்ற நகரம் இருந்த இடத்தில். தன் பெயராலே கான்ஸ்டான்டி நோபிள் (Constantinople) என்ற மிகப் பெரிய நகரத்தை நிறுவி, தன் தலைநகரை ரோமிலிருந்து அந்நகருக்கு மாற்றினார். அவரும் அரவருக்குப் பின் வந்த அரசர்களும் அந்நகரையே தலைநகராமகக் கொண்டு கிழக்கு ரோமானியப் பேரரசை ஆட்சி செய்தார்கள்.

எனினும் கிழக்கு ரோமானியப் பேரரசின் வரலாறு கி.பி. 395 ஆம் ஆண்டிலிருந்து தான் தொடங்குவதாகக் கருதப்படுகின்றது. ஏனெனில் அந்த ஆண்டில் தான் பேரரசர் தியோடிசியஸ் தன்னுடைய பேரரசை இருபிரிவுகளாகப் பிரித்து தன் இரு புதல்வர்களாகிய அர்காடியசுக்கும் ஹொனோரியசுக்கும் (Archadius and Honorius) பங்கிட்டுக் கொடுத்தார். அந்த ஆண்டிலிருந்து இப்பேரரசு பல்வேறு காலங்களில் உயர்ந்தும், தாழ்த்தும் கி.பி. 1543ஆம் ஆண்டு வரை நிலவியிருந்தது.

இக்காலத்தில் பன்னிரண்டு வம்சங்களைச் சேர்ந்த அரசர்கள் கான்ஸ்டான்டி நோபிளைத் தலைநகராகக் கொண்டு கிழக்கு ரோமானியப் பேரரசை ஆட்சி செய்திருக்கிறார்கள். அவர்களுள் முதல் அரசர் என்ற முறையிலும், கிறிஸ்தவ மதத்தைத் தன் பேரரசு முழுவதும் பரப்ப எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டவர் என்ற முறையிலும் கான்ஸ்டன்டைன் முக்கியமானவர். மேலும் கி.பி. 325 ஆம் ஆண்டில் ‘முதல் அனைத்து வகை கிறிஸ்தவ மதச் சபையை’ (First Ecumenical Council) ஆசியா மைனரில் இருந்த நைசியே என்ற இடத்தில் கூட்டி, இயேசு கிறிஸ்து ஆண்டவனின் திருவுருவம் என்றும், எனவே கிறிஸ்தவ மதத்தை அனைவரும் பின்பற்ற வேண்டுமென்றும் அறிவித்தார்.

இவருக்குப் பின்னர் ஆட்சி செய்த அரசர்களுள் ஜஸ்டினியன் (Justinian) என்பவரே மிகவும் முக்கியமான அரசராவார். அவருடைய ஆட்சிக் காலத்தில் தான் கிழக்கு ரோமானியப்

பேரரசின் எல்லைகள் பரந்து விரிவடைந்தன. எனவே அவரைப் பற்றிய விவரங்களைக் விரிவாக காணலாம்.

**பேரரசர் முதலாம் ஜஸ்டீனியன் : கி.பி 527 – 565 - இளமைக்காலம்:**

கீழை ரோமப் பேரரசினை உன்னத நிலைக்கு உயர்த்திய பெருமை படைத்த ஜஸ்டீனின் கி.பி. 483-ல் டௌரீசியம் (Taurisium) என்னுமிடத்தில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். கி.பி. 491 முதல் 518 வரை கீழை ரோமப் பேரரசராயிருந்த முதலாம் அனஸ்தாஸியசின் மரணத்திற்குப் பின் முதலாம் ஜஸ்டின் என்பவர் கீழ் ரோமப் பேரரசாராக்கப்பட்டார். அவ்வமயம் அவருக்கு அரசியலில் ஜஸ்டீனியன் துணையாக நின்றார். அரசியலில் பல முக்கிய பதவிகளையும் அவர் வகித்தார். கி.பி. 527-ல் ஆகஸ்டு 1-ல் முற்றுரிமை படைத்த ஆட்சியாளராக ஆக்கப்பட்டார்.

**குணவியல்புகள் :**

சுறுசுறுப்புமிக்க அரசியல்வாதியாகவும், களைப்பில்லாத ஆட்சியாளராகவும் திகழ்ந்த அவர் நடுத்தர உயரமும், மனோதிடத்துடன் பேராற்றலும் நிரம்பப் பெற்றவராக விளங்கினார். ஆட்களைத் தீர்க்கமாக எடைபோடும் ஆற்றல் அவரிடம் மிகுந்திருந்தது. நண்பர்களின் ஆலோசனைப்படி செயல்படும் பண்பினரான அவருக்கு அவருடைய துணைவியார் தியோடாரா அரசியலிலும் உறுதுணையாக இருந்தார். கொடுமை, கடுமை ஆகியவற்றோடு இரக்கமும், மற்றும் தாராளத்தன்மை ஆகிய பண்புகளையும் கொண்ட கலப்புக் குணவியல்புகளைக் கொண்டிருந்தார்.

ஆடம்பரப் பிரியரான அவர் அநேக சீர்திருத்தத் திட்டங்களை மேற்கொள்ள விழைந்தார். ரோமப் பேரரசின் எல்லைகளை விரிவடையச் செய்தல், அதன் சிறப்புகளை மேலோங்கச் செய்தல், ரோமானியச் சட்ட முறை, ஆட்சித் துறை ஆகியவற்றை வலிமையடையச் செய்தல் ரோமானியத் திருச்சபையை ஒருங்கிணைத்துச் செயல்படச் செய்தல் போன்ற நோக்கங்களை அவர் கொண்டிருந்தார். இத்தகைய கோட்பாடுகளை செயலாற்ற முனைந்த அவர் கடமையே கண்ணெனக் கருதினார். அதனால் ''பேரரசர் தூங்கமாட்டார்'' எனப் புகழப்பட்டதில் வியப்பொன்றுமில்லை. இருப்பினும் அவரால் மேற்கொள்ளப்பட்ட இடையறாத போர்கள் அவருக்குப் பல இன்னல்களை விளைவித்தன என்பதை நாம் ஏற்க வேண்டியவர்களாகவே உள்ளோம்.

**போர்களும் வெற்றிகளும் :**

1. **ஆப்பிரிக்காவில் வாண்டல்களுடன் போர் :**

பழங்கால ரோமானியப் பேரரசின் உணவுத் தேவைகளை நிறைவு செய்யக் காரணமாயிருந்த இன்றைய டுனீஸியா, லிபியா, அல்ஜீரியா போன்ற பகுதிகளை

வாண்டல்களிடமிருந்து மீட்க எண்ணினார். எனவே பெலிசாரியஸ் என்ற தளபதியை வாண்டல்களை அடக்க அனுப்பினார். அவர் வாண்டல்களின் மன்னரான கிளிமெர் (புடைஅநச) என்பவரை அத்தேசிமம் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் தோற்கடித்தார். அவர்களுடைய தலைநகரான கார்த்தேஜ் வீழ்ந்தது. தம்மால் வெல்லப்பட்ட அப்பகுதிகளுடன் சார்டீனியா, கார்ஸிக், பலரிக்ஸ், செப்டம் ஆகிய பகுதிகளை இணைத்து வட ஆப்பிரிக்க மாநிலத்தை உருவாக்கினார். ஆயினும் பெர்பர்கள் என்ற இனத்தவர்களின் இடர்ப்பாடுகள் கடுமையாக இருந்தன. கி.பி. 548-ல் தான் ஆப்பிரிக்கப் பகுதியில் அமைதியை நிலை நாட்ட முடிந்தது.

**2. ஸ்பெயின் :**

விஸிகோத்து பிரிவைச் சேர்ந்த ஆரியன் கிறிஸ்தவ மன்னரான அஜிலா கி.பி. 549 – 554) என்பவர் அன்டலூஸியா பகுதியில் வாழ்ந்த செல்வந்தர்களைக் கட்டுப்படுத்த முனைந்தார். கத்தோலிக்கர்களைப் பெருந் தொல்லைகளுக்கு ஆளாக்கினார். அதன்ஜில்டு என்ற செல்வந்தர் ஜஸ்டீனியனின் துணையை நாடினார். அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு கி.பி. 554-ல் அதன்ஜில்டுக்கு உதவி செய்து அஜிலாவைத் தோற்கடிக்கச் செய்தார். அதன்ஜில்டு மன்னரானார். அதன் பயனாக ஸ்பெயினின் தென் கிழக்குப் பகுதி ஜஸ்டீனியனுக்குக் கிட்டியது.

**3. ஆஸ்டிரகோத்துகளுடன் போர் :**

கி.பி. 523-ல் மகாதியோடரிக்கின் மரணத்திற்குப் பின் இத்தாலியில் ஆஸ்டிரகோத்துகளின் ஆட்சி அழிவுப் பாதையில் அடியெடுத்து வைக்கலாயிற்று. கி.பி 526-க்கும் கி.பி. 534-க்கும் இடைப்பட்ட காலத்தில் மகாதியோடரிக்கின் போர் அதலரிக்கின் ஆட்சியின் போது பகர ஆளுநராகத் திகழ்ந்த அமலசுந்தா கி.பி. 534-ல் அதலரிக்கின் மரணத்திற்குப் பின் நேரடி ஆட்சியாளரானார். அவ்வமயம் இத்தாலியில் செயல்பட்ட ஆஸ்டிரகோத்துகளின் ஆட்சியை ஜஸ்டீனியனிடம் வழங்கி பைசாண்டியப் பேரரசின் சார்பாளராக ஆட்சி செய்ய ஏற்பாடுகள் செய்யலானார்.

கி.பி. 535-ல் தியோடகத் என்பவரின் முயற்சியால் அமலசுந்தா கொலை செய்யப்பட்டார். அதே ஆண்டில் ஜஸ்டீனியன் முண்டாஸ், பெலிசாரியஸ் ஆகிய தளபதிகளை ஆஸ்டிரகோத்துகளுக்கு எதிராக அனுப்பினார். அவர்கள் டால்மேஷியா, சிசிலி, நேப்பிள்ஸ் ஆகிய பகுதிகளை கி.பி. 535, 536 ஆகிய ஆண்டுகளில் வெற்றி கொண்டார். ஆனால் இத்தாலிக்குள் முழுமையாக முன்னேறமுடியவில்லை. தொடர்ந்து இத்தாலியில் விதிஜிஸ் என்பவரின் ஆட்சியின் போது (கி.பி. 536 – 540) கி.பி. 540-ல் பெலிசாரியஸ் ராவென்னாவைக் கைப்பற்றினார். ஆனால் தோடில்லா என்ற தலைவரின் கடும் எதிர்ப்புகள் காரணமாக பேரரசுப் படைகளால் நிலையான வெற்றியைப் பெற இயலவில்லை. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஏற்ப்பட்டன.

எனவே பெலிஸாரியணை ஜஸ்டீனியன் திரும்ப அழைத்துக் கொண்டு அவருக்குப் பதிலாக நார்செஸ் என்பவரை அனுப்பினார். வலிமையும், திறமையும் கொண்ட அத்தளபதி தோடில்லாவைத் தோற்கடித்துக் கொன்றதுடன் ஆஸ்டிரகோத்துகளையும் முழுமையாகக் கட்டுப்படுத்தினார். ராவென்னாவில் நார்செஸ், பைசாண்டியப் பேரரசின் ஆளுநராகப்பட்டார். இத்தாலி பைசாண்டியப் பேரரசின் கீழ் வந்தது. மத்திய தரைக் கடல் மீண்டும் ரோமானியாரால் கட்டுப்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும் ஆக்கத்தைக் காட்டிலும் அழிவினையே பேரரசுக்குக் கொடுத்ததெனலாம். ஏனெனில் இத்தாலியப் போர்கள் பேரரசின் பொருளாதாரச் சிதைவுகளுக்கு வழி கோலியது. போர்களின் பின் விளைவுகளால் இத்தாலி பெரும் பாதிப்புக்குள்ளாயிற்று. கி.பி. 587-ல் லம்பார்டியரின் படையெடுப்பு இத்தாலியரின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவித்தது. அதன் பின்னர் 19-ஆம் நூற்றாண்டு வரை இத்தாலியில் அரசியல் ஒருமைப்பாடோ அல்லது வலிமைமிக்க நிலையோ காணப்படவில்லை.

### 4. பாரசீகப் போர் :

பழம்பெருமை கொண்ட ரோமப் பேரரசினை மீண்டும் உருவாக்க முயற்சி எடுத்த ஜஸ்டீனியன் பேரரசின் மேற்குப் பகுதியில் தமது பொருள்வளம், ஆக்கமூலம் ஆகியவற்றைச் செலவிட்டார். கிழக்குப் பகுதியில் அவர் அக்கரை காட்டாமையால் பாரசீக சஸானியரின் ஆதிக்கம் வலுப் பெறலாயிற்று. ஒரே சமயத்தில் ஹீணர்கள், ஸ்லாவ் இனத்தோரி ஆகியோரின் எதிர்ப்புகளையும் அவர் சமாளிக்க வேண்டியவரானார். பைசாண்டியப் பேரரசின் மேலாண்மையை ஏற்க மறுத்த முதலாம் ஸோஸ்ரோயிஸ் (Chosroes I) என்ற பாரசீக மன்னர் கி.பி. 540-ல் மத்திய தரைக்கடல் பகுதியில் ஊடுருவி பேரரசின் இரண்டாம் தலைநகரான ஆன்டியோக்கைத் தாக்கிச் சின்னாபின்னப்படுத்தினார்.

அவரைக் கட்டுப்படுத்த அனுப்பப்பட்ட பெலிசாரியஸ் என்ற தளபதியால் நிலையான முடிவுகளை மேற்கொள்ள இயலவில்லை. ஆனால் அவ்வமயம் பாரசீகப் பகுதிகளில் பரவிய கொடும் பிளேக் நோய் காரணமாக பாரசீகப் பேரரசர், பைசாண்டியப் பேரரசருடன் உடன்பாடு செய்து கொள்ள வேண்டியவரானார். கி.பி. 545-ல் உடன்பாடு ஏற்பட்டது. ஆனால் லாசிகா என்ற பகுதியைப் பேரரசருக்குத் திருப்பித் தர பாரசீகர்கள் மறுத்ததால் மீண்டும் போர் ஏற்பட்டது. ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலத்திற்கு அமைதியின்மைக்குப் பின் கி.பி. 561-ல் மீண்டும் அமைதி நிலைநாட்டப்பட்டது. அதன் படி லாசிகாவை பைசாண்டியப் பேரரசு வைத்துக் கொள்வதுடன் பாரசீகத்துக்கு ஆண்டுக்கு 30,0000 பொற்காசுகளை நிறையாகத் தரவேண்டுமெனவும் ஏற்பாடாயிற்று.

இடையறாத போர்கள் மூலம் ஜஸ்டீனியன் மேற்கு ஐரோப்பா முழுவதையும் வென்று பைசாண்டியப் பேரரசினை பால்கன், இத்தாலியத் தீபகற்பங்கள், தெற்கு ஸ்பெயின், வடக்கு ஆப்பிரிக்கா, சிரியா, பாலஸ்தீனம் ஆகிய பகுதிகளில் விரிவடையச் செய்தார். அவ்வெற்றிகள் வெகுகாலம் நீடித்திருக்கவில்லை. பேரரசின் பொருள்வளம் சிதைந்தது. கடும்

போர்களால் கைப்பற்றப்பட்ட பகுதிகளைனத்தும் ஒரு நூற்றாண்டுக்குள்ளாகவே பேரரசினை விட்டு நழுவிச் சென்றன. இவ்வாறு பைசாண்டியப் பேரரசினைப் போர் மூலமாகப் புகழடையச் செய்த ஜஸ்டீனியனின் கி.பி. 565-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் நாள் காலமானார்.

**ஜஸ்டீனியன் பண்பாட்டு பங்களிப்பு :**

1. **சமயக் கோட்பாடு :**

வைதீக கிறிஸ்துவரான ஜஸ்டீனியன் சமயத் துறையில் முற்றுரிமை கொண்ட மேலாண்மை பெற்றுத் திகழ்ந்தார். கிறிஸ்துவ சமயத்தைப் பரப்புவதைத் தனது குறிக்கோளாகக் கொண்டு விளங்கிய பேரரசர் பிஷப்புகளை நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார். அத்துடன் 'சினாட்' என்னும் (Synod) என்னும் குழுவின் பரிந்துரைகளின் பேரில் போப்பாண்டவர், பேட்ரியார்க்குகள் போன்ற சமயத் தலைவர்களை நியமிக்கும் உரிமையைப் பெற்றார். மடாலயங்கள், மற்ற குருமார்கள், சமயச் சொத்துக்கள் ஆகியவை சீராகச் செயல்பட வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன. சமயப் பிரச்சாரக் குருமார்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் சமயக் கருத்துக்களுக்கு வலுவூட்டப்பட்டன. புனிதமான கிறிஸ்தவக் கோட்பாட்டில் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்து கத்தோலிக்க, மற்றும் அப்போஸ்தலத் திருச்சபைகளை வளரச் செய்ய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டன.

சமயப் பொறையுடைமைக் கோட்பாடு பின்பற்றப்படவில்லை. கத்தோலிக்கரல்லாத பிற சமயப் பிரிவினருக்கு அரசியலில் பதவிகள் கொடுப்பது தடுக்கப்பட்டது. அவர்களுடைய சலுகைகள், தொழுகைக் கூடங்கள் ஆகியவை தடைசெய்யப்பட்டன. தெய்வீகத் தன்மை, மனித இயல்புகள் ஆகியவை இணைந்த இயற்கையின் மீது பற்றுடைய மோனோபிஸ்டுகள் (Monophysists) ஆகியோர் எகிப்து, சிரியா, பாலஸ்தீனம், மெஸபட்டோமியா போன்ற பகுதிகளில் செல்வாக்குடன் விளங்கினர். அவர்கள் தமது கொள்கைகளைப் பரப்ப அனுமதிக்கப்பட்டன். பேராசிரியர் தியோடோரா மேனானோபிஸ்டு பிரிவினர் ஆவார். பழங்கடவுளர் வழிபாடு (Paganism) ஜஸ்டீனியனால் முழுமையாக ஒடுக்கப்பட்டது. அவ்வழிபாட்டைப் பின்பற்றிய ஏதன்ஸ் பல்கழைக்கழகம் கி.பி. 529-ல் ஒழிக்கப்பட்டது.

சால்விஸிடன் குழுவினால் வெளியிடப்பட்ட பகுதிகளில் மூன்று செல்லாதவையென கி.பி. 543-ல் அறிவித்தார். கி.பி. 551-ல் சமய ஆணைகளைப் புதுப்பித்து வெளியிட்டார். கி.பி. 553-ஆம் ஆண்டு மே மாதம் 5-ம் நாள் புனித ஸோபியா ஆலயத்தில் 5-ஆம் சமயக் குழுவை அவர் கூட்டினார். கி.பி. 555-ல் பிலாஜியஸ் என்பவரையும், கி.பி. 560-ல் ஜான் என்பவரையும் போப்பாண்டவர் பேரரசின் கீழ் பணியாற்ற வேண்டியவர்களாயினர். இதனால் பேரரசர் சமயத் துறையிலும் மேலாண்மை பெற்றுத் திகழ்ந்தார். யூதர்களும் இவரால் கடுமையாக ஒடுக்கப்பட்டார்கள். சமயத் துறையில் பலவிதமான மாற்றங்களை ஜஸ்டீனியன்

செயல்படுத்திய போதிலும் ரோமானியத் திருச்சபையில் ஒருமைப்பாட்டுணர்வை அவரால் உருவாக்க இயலவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளவே வேண்டும்.

2. **ஆட்சிமுறை :**

**a. கைப்பற்றப்பட்ட பகுதிகளில் ஆட்சிமுறை :**

அரச ஆதிக்கக் கோட்பாட்டில் ஆழ்ந்த பற்றுடைய ஜஸ்டினியன் பேரரசின் பல பகுதிகளிலும் சிறப்பான ஆட்சி முறையை நிறுவினார்.

1. இத்தாலியிலும் ஆப்பிரிக்காவிலும் திடமான ரோமானிய ஆட்சியை நிறுவும் பொருட்டு கி.பி. 534-ல் 'ஆளுநர் ஆணை' (Prefect Order) யை வெளியிட்டார். அதனால் ஆப்பிரிக்காவில் ஒரு ஆளுநரும் அவருக்கு உதவ ஏழு கான்சல்கள் என்ற அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். ஜெர்மனஸ் என்பவர் உயர் இராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

2. கி.பி. 554-ல் பேரரசின் தனிக்கட்டளை (Pragmatic Sanction) மூலம் இத்தாலிய நிர்வாகம் சீர்திருத்தப்பட்டது. இத்தாலி, ரோம் ஆகியவை 13 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவை தலைமை ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் விடப்பட்டன. வைஸ்ராய்கள் எனப்பட்ட இரு அரசப் பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டார்கள்.

3. கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பழைய வரி கோட்பாடுகளே பின்பற்றப்பட்டன. பழைய சொத்துரிமைச் சட்டங்களே கைக் கொள்ளப்பட்டன.

4. நாட்டைக் காப்பது முதற்கடமை என்ற அடிப்படையில் ராணுவ அதிகாரம் தனியாகப் பிரிக்கப்பட்டது. மாநிலங்கள் ராணுவ மாவட்டங்களாக பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ராணுவத் தளபதிகள் நியமிக்கப்பட்டனர். எல்லைப்புற பாதுகாப்பிற்கெனக் கோட்டைகள் கட்டப்பட்டு அங்கு நிரந்தரக் காவல் வீரர்கள் அமர்த்தப் பட்டார்கள்.

5. நகரங்கள், துறைமுகங்களின் வளர்ச்சியுடன் வேளாண்மைப் பெருக்கத்திற்கும் வழிவகுக்கப்பட்டது.

**b. பைசாண்டியப் பேரரசுப் பகுதிகளில் ஆட்சிமுறை :**

1. ஆட்சித் துறையைச் சீராக்குதலின் பொருட்டு பதவிகளை விற்றல். அதன் மூலம் பொருளீட்டல் போன்ற முறைக்கேடுகள் களையப்பட்டன. அதற்கென ஊழியர்களின் ஊதியம் அதிகரிக்கப்பட்டது. நாட்டின் வருவாய் பெருக்கப்பட்டது.

2. கி.பி. 534-ல் இரு அவசரச் சட்டங்கள் மூலம் ஊழலை ஒழிக்க வகை செய்யப்பட்டது. ஒற்றர்முறை புகுத்தப்பட்டது. கடும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு ஊழியர்களின் நேர்மை காக்கப்பட்டது.

3. காவல்துறை பல சீர் திருத்தங்களுடன் தன்னிச்சையாகச் செயல்பட வழிவகுக்கப்பட்டது.

4. வரிமுறையில் காணப்பட்ட குறைகளைக் களைய மக்கள் பேரரசறைச் சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தினார்.

5. ஆட்சி முறையினை எளிதாக்கிச் சீராகச் செயல்படச் செய்ய மாநிலங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது. மாநிலங்களில் சிவில் மற்றும் ராணுவத் துறைகள் வைகாரி (Vicari) என்ற அலுவலரின் கைகளில் விடப்பட்டன.

6. சமூக நலன் கருதி சூதாட்டம் தடுக்கப்பட்டது. பாஸ் போரஸ் நகரில் வசதியற்ற பெண்களுக்கென நலமன்றம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது.

7. வாணிபத் துறையில் தரகர் முறை ஒழிக்கப்பட்டு, உர்ந்தர ரகப் பட்டுகள், விலையுர்ந்த கற்கள் ஆகியவை கீழ்த்திசை நாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டன. கி.பி. 531-ல் தூரக் கிழக்கு நாடுகளிலிருந்து செங்கடலுக்கு நேரடியாக வாணிபம் செய்ய மேற்கொண்ட ஒப்பந்த முயற்சி தோல்வியுற்றது. வாணிபப் பெருக்கம் பைசாண்டியப் பேரரசின் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை நின்றது. ஜான்கப்படோஷியா, டிரிபோனின் போன்றோர் ஜஸ்டீனியனுக்குப் பேருதவிப் புரிந்தார்கள்.

### 3. பொதுப் பணிகள் :

ஜஸ்டீனியனின் காலத்தை பைசாண்டியக் கலை மற்றும் கட்டிடக் கலைகளின் பொன்யுகம் என்று குறிப்பிடலாம்.

1. இடையறாத போர்களால் எழில் குன்றிய நகரங்கள் கலையுணர்வு கூடிப் புதுப் போர்களால் எழில் குன்றிய நகரங்கள் கலையுணர்வை கூடிப் புதுப் பொலிவுடன் திகழ முயற்சிகளை மேற்கொண்டார். நகரங்களில் பொதுக் குளியல் அறைகள் ஏற்படுத்தப்பட்டன. குடிநீர் வசதி பெருக்கப்பட்டது.

2. கி.பி. 532-ல் தீ விபத்திற்குள்ளான கான்ஸ்டான்டி நோபிளும், கி.பி. 554-ல் பூமியதிர்ச்சியினால் தாக்கப்பட்ட சிரியாவும் புதுப்பிக்கப்பட்டுப் பொலிவு பெறச் செய்யப்பட்டன.

### 4. கலை வளர்ச்சி

1. அவரால் கட்டப்பட்ட சாந்தசோபியா ஆலயம், புனித சோபியா ஆலயம், புனித அப்போஸ்தலர் ஆலயம் முதலியன பைசாண்டியக் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

**செயின்ட் சோபியா ஆலயம் : Cathedral of St. Sophia**

பைசாண்டியக் கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வது பேரரசர் ஜஸ்டின் கட்டிய செயின்ட் சோபியா (Hagia Sophia) என்ற பெருங்கோவில் ஆகும். ஹேகியா சோபியா அல்லது தூய்மையான ஞானம் என்ற தெய்வத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட அந்தக் கோவில் உண்மையில் மனிதர்களால் கட்டப்பட்டதா அல்லது தேவதைகளால் கட்டப்பட்டதா என்று ஐயப்படும் அளவுக்கு பிரமாண்டமானதாகக் காட்சியளிக்கிறது. இக்கோவிலின் தரைமட்டம் சிலுவை வடிவத்தில் அமைந்துள்ளது. கோவிலின் நீளம் 250 அடி, அகலம் 225 அடி ஆகும். இதன் அழகு மிக்க பிரமாண்டமான குவிமாடம் காண்போர்வியக்கத்தக்க முறையில் அமைந்துள்ளது. இந்த குவிமாடம் வானத்திலிருந்து ஒரு தங்கச் சங்கிலி மூலமாகத் தொங்கவிடப்பட்டுள்ளது போன்றதோர் உணர்வை இதனைப் பார்ப்பவர்களுக:கு ஏற்படுத்துகிறது. இதுவே பைசாண்டியக் கலையின் மிகச் சிறந்த பண்பாகும்.

செயிண்ட் சோபியா திருக்கோவிலின் உட்பக்கம் ஒரு அரும் பொருட்காட்சி போலவே தோற்றமளிக்கிறது. வெள்ளை, சிகப்பு, மஞ்சள், ஊதா போன்ற பல்வேறு நிறங்களையுடைய கற்கள் அதன் சுவர்களிலும் தூண்களிலும் பதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக எங்கு பார்த்தாலும் அழகிய பூக்கள் பூத்திருப்பது போன்ற உணர்வு நமக்கு ஏற்படுகிறது. ஆங்காங்கே வளைவுகளும், உலோகத்தில் வார்க்கப்பட்ட சிலைகளும், சித்திர வேலைப்பாடுகளும் கட்டிடத்தின் உச்சியை அழகுபடுத்துகின்றன. மாடத்தின் நடுவிலிருந்து நாற்பது கொத்து விளக்குகள் (Chandellers) அழகாகத் தொங்குகின்றன.

கோவிலின் சொற்பொலிவு மேடையானது (Pulpit) வெள்ளியாலும், தங்கத்தினாலும மிக அழகாக செய்யப்பட்டுள்ளது. அவற்றில் விலை உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. பூசைக்குரிய பாத்திரங்கள் பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பட்டுள்ளன. பேரரசரும், அரசியும் அமர்ந்து கிறிஸ்துவிடமிருந்தும், மரியன்னையிடமிருந்தும் ஆசீர்வாதங்களைப் பெறுவது போன்று அமைக்கப்பட்டுள்ள வெள்ளி சிம்மாசனம் இங்கே காணப்படும் பொருட்களில் எல்லாம் மிகச் சிறப்பானது ஆகும். இதனைக் கண்ட பலர் ஆதாம் பிறந்த காலத்திலிருந்து இதுவரை யாருமே இத்தகைய பெருங்கோவிலைப் பார்த்திருக்க மாட்டார்கள் இனியும் பார்க்க மாட்டார்கள் என்று கூறினார்.

2. கி.பி. 538-ல் சலவைக் கல்லினால் கட்டப்பட்ட புதிய அரண்மனையில் கன்சிஸ்டோரியம் என்ற அரியாசன அறை அவரது அரிய கலைப்படைப்பாகும்.

வழவழப்பான பளிங்குக் கற்கள் பயன்படுத்தப்பட்டு ஆலயங்களோடு அரண்மனைகள் அழகூட்டப்பட்டன.

3. ராவென்னா நகர் தலைநகராக்கப்பட்டு பல வழிகளில் அழகுபடுத்தப்பட்டது.

4. ஆன்டியோக் நகரின் கோட்டைகளை புதுப்பித்து ஆலயங்களால் அழகூட்டினார்.

**5. நீதித்துறை :**

சட்டத் தொகுப்பாளர், நீதித் துறையின் காவலர் என்ற அடிப்படைகளின் ஜஸ்டீனியனின் புகழ் இன்றளவும் வரலாற்றில் நிலைத்து நிற்கின்றதெனில அது மிகையன்று. பலவகையான சட்டங்களை உள்ளடக்கிய ஒரு குழப்பமான அமைப்பாக விளங்கிய நீதித்துறையைச் சீராக்கப் பல வழிகளை அவர் மேற்கொண்டார். அவற்றின் விளைவுகளே நீதிமன்றங்களின் அமைப்புகளிலும் சட்ட முறைகளிலும் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களாகும்.

1. கடுமையான வேலைப்பளு காரணமாக தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடந்த வழக்குகளைத் தீர்த்தலின் பொருட்டு பலமுறையிட்ட நீதிமன்றங்களின் தலைமை நீதிமன்றம் மற்றும் மாநில நீதிமன்றங்களுக்கிடையில் உருவாக்கப்பட்டன.

2. வழக்குகளை உடனுக்குடன் தீர்த்தலின் பொருட்டு மக்களின் பிரீட்டர் என்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் களவு, கலப்படம் போன்ற வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளித்தார்கள்.

3. நகரங்களில் மாஜிஸ்டர், கியூஸிடர் போன்ற நீதிபதிகள் செயல்பட்டார்கள்.

**6. ஜஸ்டீனியனின் சட்டத்தொகுப்பு :**

பைசாண்டியப் பேரரசின் சட்டங்களை புதிய நிலைக்கு தகுந்தவாறு திருத்தி அமைத்தவர் பேரரசர் ஜஸ்டீனியன் ஆவார். ஏனெனில் பழைய ரோமானியப் பேரரசின் சட்டங்கள் புதிய பேரரசின் நிலைமைக்கு ஒத்துவரவில்லை. பைசாண்டியத்தில் நிலவிய சிவில் சட்டங்களும், கிரிமினல் சட்டங்களும் முரண்பாடு உடையவனாகக் காணப்பட்டன. எனவே சட்டங்களைத் தொகுப்பதற்கு அமைச்சர் திபோனியன் (Tribonian) என்பவரது தலைமையில் பேரரசர் ஜஸ்டீனியன் ஒரு சட்ட வல்லுநர் குழுவை நியமித்தார்.

இந்த சட்ட வல்லுநர்கள் ஹெட்ரியன் (Hadrian) காலத்திலிருந்து ஜஸ்டியனின் காலம் வரை வெளியிட்ட சட்டங்களைத் திருத்தி ஒரு சட்டத் தொகுப்பாக (Code) வெளியிட்டனர். இதுவே ஜஸ்டினியன் சட்டத் தொகுப்பு ஆகும். பிறகு ஜஸ்டினியன் வெளியிட்ட சட்டங்களும் அவரது வாரிசுகள் வெளியிட்ட சட்டங்களும் அடங்கிய புதுக்கட்டளைத் தொகுப்புடன் (8 Vol ) சேர்க்கப்பட்டன. கி.பி. 532-ல் இந்த சட்ட வல்லுநர் குழு ஏற்கெனவே சட்ட வல்லுநர்கள்

வெளியிட்ட நூல்களின் கருத்தினை எழுதிச் சட்டத் தொகுப்பாக வெளியிட்டது. இது நான்கு சட்டத் தொகுப்புகளையும் இணைத்து இந்த சட்ட வல்லுநர் குழு குற்ற இயல் சாராத சட்டத்தினை (Carpus Juris Civils) வெளியிட்டது. ஜஸ்டினியன் காலத்தில் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஜஸ்டீனியனின் சட்டத் தொகுப்பு கத்தோலிக்க திருச்சபையின் தலைமையை ஏற்றுக் கொண்டது. சமயத்தைச் சேர்ந்த பணியாட்கள் அனைவரும் இச்சட்டத்திற்கு கட்டுப்பட்டவர் ஆவர். துறவிகள் நாட்டின் சிவில் சட்டத்திற்கு அடங்கி நடத்தல் வேண்டும். சமய அலுவலர்கள் சூதாடுதல், தியேட்டர்களுக்கு சென்று பொழுது போக்குதல் ஆகியவற்றில் ஈடுபடாமல் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். பிரிவினைவாதிகளுக்கு பதவிகள் வழங்குதல் கூடாது.

ஜஸ்டினியனின் சட்டம் வகுப்புப் பிரிவினையை தடைசெய்தது. ஆயினும் இச்சட்டம் மக்களை தரவரிசையில் பிரித்தது. சமுதாயத்தில் உயர் பிரிவினர் என்றும் சாதாரண மக்கள் என்றும் இரு பிரிவினரை இச்சட்டம் ஏற்றுக் கொண்டது. சுதந்திரமா குடிமக்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டன. ஜஸ்டினியனின் சட்டப்படி அடிமைப் பெண்ணைக் கற்பழித்தால் மரண தண்டனை வழங்கப்பட்டது. விவாகரத்து தடை செய்யப்பட்டது. பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொள்ளும் ஆண்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

சொத்துக்கள் பற்றிய சட்டங்களும் ஜஸ்டினியனின் சட்டத் தொகுப்பில் இடம் பெற்றன. உயில் எழுதி வைக்காமல் ஒருவர் இறந்து விட்டால் அவரது சொத்துக்கள் வாரிசுக்கு செல்லும். வாரிசுகள் இல்லையென்றால் சொத்துக்களை நன்கொடையாக அளித்து விடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆலயங்கள் பெற்றிருந்த சொத்துக்களை அவைகள் விற்பதற்கு இச்சட்டம் தடை விதித்தது. இதன் விளைவாக கிறிஸ்தவக் கோவில்கள் பெற்றிருந்த நிலங்களின் அளவு அதிகரித்துக் கொண்டே சென்றது.

மேலும் ஜஸ்டினியனின் சட்டத்தின் படி உயர் நீதிபதியின் அனுமதியின்றி யாரையும் சிறையிடுதல் கூடாது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள் நீதிபதிகளின் முன்னிலையிலேயே விசாரணை செய்ய வேண்டும். குடிபோதையில் இருப்பவர்களைத் தண்டிப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. உடல் உறுப்புகளை ஊனப்படுத்தி தண்டிப்பதற்கான அதிகாரம் நீதிமன்றங்களுக்கு அளிக்கப்பட்டது. வரிவசூல் செய்பவர்கள் அதிகப்படியான வரி வசூலித்தால் அவர்கள் கை வெட்டப்படம். கீழ் நீதிமன்றங்களிலிருந்து மேல் வழக்குகள் உயர் நீதிமன்றங்களிலும், பின்னர் பேரரசர் முன்னிலையிலும் முறையீடு செய்வதற்கு இச்சட்டம் அனுமதி வழங்கியது.

இவ்வாறு ஜஸ்டினியன் சட்டங்கள் மைய ஆட்சிக்கு வலிமையைக் கொடுத்தது. இதன் மூலம் மன்னர் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள முடிந்தது. நீதிபதிகள் பேரரசின் பொது விவாகாரங்களையும், தனியார் விவகாரங்களைம் கட்டுப்படுத்தினா்.

இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் கிரேக்க ரோமானியப் பண்பாடு பல வழிகளிலும் பெரிதும் காக்கப்பட்டு மேற்கத்திய நாகரீக வளர்ச்சிக்கு அடித்தகளமாக அமையக் காரணமாயிருந்தார். அவருடைய கட்டிட அமைப்பு முறைகளால் பைசாண்டிய அமைப்பு நிலைத்து நிற்க வகை செய்யப்பட்டது. 'சட்டக் கொடையாளர்' என்று சிறப்பித்துக் கூறக் கூடிய அளவிற்கு அவரால் ரோம் 'சீசரின் நகரம்' என்றெல்லாம் பலவாகப் போற்றப்பட்ட கான்ஸ்டான்டி நோபிள் அறிவு ஒளி நிகழக்கூடிய நகராகவும், பண்பாட்டின் நிலைக் களனாகவும், வாணிபத் தொடர்பு மையமாகவும் சிறப்புடன் விளங்கியது. அவருடைய போர் வெற்றிகளால் தமது தாயகத்தின் பெருமையை நிலை பெறச் செய்த ஜஸ்டினியனின் காலம் இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் ஒளிமிக்க இடத்தைப் பெற்றிருந்ததில் வியப்பேதுமில்லை.

**பைசாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைதல்**

பேரரசர் ஜஸ்டினியன் ஆட்சிக் காலத்தில் பேரரசு மூன்று கண்டங்களில் பரவியிருந்தது. பால்கன் தீபகற்பம், இத்தாலியத் தீபகற்பம், ஸ்பெயினில் தென்பகுதி, எகிப்து மற்றும் வடபகுதி, சிரியா, பாலஸ்தீனம், மற்றுமு் ஆசியா மைனர் முழுவதும் அவர் பேரரசில் அடங்கியருந்தன. ஆனால் அவருடைய ஆட்சியின் இறுதிக் காலத்திலேயே பேரரசரின் கிழக்குப் பகுதியிலிருந்தும், வடக்குப் பகுதியிலிருந்தும் தொல்லைகள் வரத் தொடங்கின.

மேலும் ஜஸ்டினியன் ஆட்சிக் காலத்தில் லத்தீன் மொழியே ஆட்சி மொழியாகவும், இணைப்பு மொழியாகவும் இருந்தது. அவருக்குப் பின் கிரேக்க மொழி மேன்மை அடைந்தது. எனவே இத்தாலியோடும், ரோம் திருச்சபையோடும் கொண்டிருந்த தொடர்பு அறுபட்டது.

பேரரசின் வடக்குப் பகுதியில் ஸ்லாவ்கள் என்ற பயங்கரமான இனத்தினர் இருந்தனர். இவர்கள் கருங்கடலுக்கு மேற்குப் பகுதியிலிருந்து பின்னர் பல்வேறு இடங்களில் குடியேறினார்கள். இவர்கள் ஜஸ்டினியனின் ஆட்சிகால இறுதியில் பேரரசுக்குள் ஊடுருவி அதனை அழிக்க முற்பட்டார்கள்.

இது தவிர கி.பி. 620 ஆம் ஆண்டில், பேரரசர் ஹெராக்ளியஸ் (Emperor Heraclius) காலத்தில் கருங்கடலின் வடமேற்குப பகுதியிலிருந்த 'ஆவர்கள்' (Vaars) என்பவர்களால் துரத்தப்பட்ட யுகோஸ்லாவ்கள் (Yugoslavs) நாட்டுக்குள் பெருமளவு வந்து பைசான்டைன் பேரரசு வீழ்ச்சியடைக் காரணமாயினர். அதற்கடுத்துப் பலமுறை ஆவர்கள் பேரரசின் மீது படையெடுத்தனர். அதனால் பெருத்த இழப்ப ஏற்பட்டது.

எல்லாவற்றுக்கும் மேலாக பாரசீகர்களோடு பைசாண்டியப் பேரரசு தொடரந்து போரிட வேண்டியதாக இருந்தது. பேரரசர் ஹெராக்ளியஸின் (Emperor Heraclius) ஆட்சிக் காலத்தில் கி.பி. 614 ஆம் ஆண்டு பாரசீக அரசன் ஷோஸ்ரோஸ் (King Chosroes) என்பவர் அர்மேனியா, சிரியா பகுதிகள் வழியாக பாலஸ்தீனத்திற்குள் புகுந்து தாக்குதல்களை நடத்தினார். பின்னர்

ஜெருசலத்தைக் (Jerusalem) கைப்பற்றிக் கொண்டு எந்தச் சிலுவையில் இயேசு கிறிஸ்துவை அறைந்தார்களோ, அதே புனித சிலுவையின் ஒரு பகுதியைக் கவர்ந்து சென்றார்.

பைசாண்டியப் பேரரசர் ஹெராக்ளியஸினால் அதனைத் தடுக்க முடியவில்லை. அவருடைய படைகளுக்குப் பாரசீகப் படைகளை எதிர்த்துப் போரிடப் போதிய தீரமம் உறுதியும் இல்லை. இருப்பினும் அடுத்த சில ஆண்டுகளுக்குள் ஹெராக்ளியஸ் தன் நிலையை வலுப்படுத்திக் கொண்டு கி.பி 627 ஆம் ஆண்டில் நினேவே (Nineveh) என்ற இடத்தில் பாரசீகர்களைத் தோற்கடித்துப் புனிதச் சிலுவையை மீட்டார். அதனால் அவர் கிறிஸ்தவ மதத்தையும், பேரரசையும் காத்தவர் எனப் புகழப்படுகின்றார்.

ஜஸ்டீனியனுக்குப் பின் வந்த ஆட்சியாளர்கள் வலிமையற்றவர்கள். 1453-ல் கான்ஸ்டான்டி நோபிளை துருக்கியர்கள் கைப்பற்றியதுடன் பைசாண்டியப் பேரரசு மறைந்தது.

## ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயம் பரவுதல்

## (SPREAD OF CHRISTIANITY IN EUROPE)

உலகிலுள்ள முக்கிய சமயங்களில் கிறிஸ்தவ சமயமும் ஒன்று. இன்று நூறுகோடிக்கும் மேலான மக்களால் பின்பற்றப்பட்டு வரும் சமயமாகும். மிகப் பெரியதும் உலகிலேயே மிக அதிகமாகப் பரவயுள்ளதுமான சமயம் கிறிஸ்தவ சமயமே என்று கூறலாம். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பாலஸ்தீனத்திலுள்ள கலிலியோவில் நாசரேத் என்ற சிற்றூரில் வாழ்ந்த இயேசு போதித்த சமயமாகும். இயேசுவின் போதனைகள் கி.மு. 1491-ல் மேசே இஸ்ரேல் மக்களுக்கு அளித்த பிரமாணங்களின் முழுமையான விளக்கமேயாகும். மேசேயின் கட்டளைப்படி ஒரே தேவன் உண்டு. அவரே எல்லோருக்கும் பிதா. இந்த பரமபிதாவின் பிள்ளைகளே மக்கள். பரமபிதாவை அடைவதற்கு அன்பே ஆதாரம் என்று இயேசு கூறினார். மக்கள் ஒவ்வொருவருக்கும் பரமபிதாவை நேசிப்பதாலும் , தம்மைப் போல பிறரையும் நேசிப்பதாலும் பரலோகத்தை அடைய முடியும் என்றார்.

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை உலக வரலாற்றைப் பெரிதும் பாதித்துள்ளது. பல கடவுள்களை வணங்கி வந்த மத்திய தரைக்கடல் நாடுகளிலும், பின்னர் உலகம் முழுவதிலும் கிறிஸ்துவ சமயம் பரவியது. அவரே பிறப்பை வைத்து தான் கி.மு. என்றும் கி.பி. என்றும் (கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்கு பின் ) என்றும் வரலாற்றின் காலம் கணிக்கப்படுகிறது. கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றும் மக்களின் எண்ணங்களும் செயல்களும் மாறி அவர்கள் புதிய வாழ்க்கை முறையைப் பின்பற்றுகின்றனர். அது மக்களின் செயல்களுக்கு விளக்கம் கூறி தீமைகளிலிருந்து விலகி வாழ்வதற்கு வழி செய்கிறது. இதனால் உலக பண்பாட்டின் மாற்றமும் நாகரிக வளர்ச்சியும் ஏற்பட்டு வருகிறது. கிறிஸ்தவ சமயமானது கிறிஸ்தவ சமுதாயம், கலை, இலக்கியம், அறநெறி, சமயதத்துவம் ஆகியவற்றைத் தோற்றுவித்தது. கிறிஸ்தவர்களின் புனித நூல் விவிலியம் (Bible) ஆகும்.

**இயேசு கிறிஸ்து (Jesus Christ)**

கிறிஸ்தவர்களின் புனித நூலான பைபிளின் புதிய ஏற்பாட்டிலிருந்து (New Testament) இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு நமக்கு தெரிய வருகிறது. தீர்க்கதரிசிகளான பரிசுத்த மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகியோர் அருளிச் செய்த நற்செய்திகளே இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு ஆகும்.

**இயேசு கிறிஸ்துவின் பிறப்பு :**

பாலஸ்தீனம் யூதர்களின் சொந்த நாடாகும். யூதர்களின் மிகப்பெரிய அரசனான தாவீது கி.மு. 1055 முதல் 1015 வரை ஆட்சி செய்தார். யூத தீர்க்க தரிசனத்தின் படி இயேசு கிறிஸ்து தாவீது (DAVID) வம்சத்தில் பிறந்தவர் ஆவார். அரசருக்குரிய செல்வம் யாவும் நாளடைவில் மறைந்த போதிலும் தாவீதின் சீரிய பண்பு அவரது குடும்பத்தில் நிலைநின்றது. இயேசுவின் தாய் மேரியை யோசேப்பிற்கு திருமணம் புரிய ஏற்பாடு செய்தார்கள். மேரி கன்னியாக இருக்கும் போதே இறைவனின் அருளால் கருத்தரித்தார்.

இயேசு ஜெருசலேம் நகருக்கு 10 கி.மீ. தெற்கே உள்ள பெத்லேகம் என்ற சிற்றூரில் புறநகர் பகுதிகளில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். இயேசு அவதரித்த போது கிழக்கேயிலிந்து ஒரு நட்சத்திரம் தோன்றியது. அது வழிகாட்ட கிழக்கத்திய ஞானிகள் சிலர் இயேசுவை பார்க்க வந்தார்கள். பெத்லகேமில் இக்குழந்தையை கண்டு, பொன்னும் மணியும் அர்ப்பணித்து மகிழ்ந்தார்கள். அப்போது பரலோகத்து தேவதூதன் ஒருவன் புதிதாக பிறந்த இக்குழந்தையை 'உலக ரட்சகர்' என்று அறிவித்தார்.

**இயேசு ஞானஸ்நானம் பெறுதல் :**

நாசரேத் என்ற ஊரில் இயேசு வளர்ந்து வந்தார். அறிவும், ஞானமும் உடையவராக வளர்ந்து வந்தார். முப்பது வயது வரை இயேசு தன்னை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை. அப்போது பாலஸ்தீனத்தில் யோவான் என்ற தீர்க்கத் தரிசி இருந்தார். அவர் அப்போது யூதர்கள் மத்தியிலும், பாலஸ்தீனத்தை ஆண்டு வந்த ரோமானியர்கள் மத்தியிலும் காணப்பட்ட பாவங்களையும், ஒழுங்கற்ற வாழ்க்கையையும் கண்டித்தார். அவர் ஞானஸ்நாம் (Baptism) கொடுப்பவராகவும் இருந்தார். இயேசு அவரிடம் ஞானஸ்நானம் பெறச் சென்றார். அப்போது அவரே மேசியா அல்லது உலக ரட்சகர் என்று யோவான் அறிந்து கொண்டார். அவர் ஞானஸ்நானம் பெற்ற போது வானத்திலிருந்து ஓர் ஒலி கேட்டது. 'மகனே உன்னைப் பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன்' என்று ஒலித்தது.

சுமார் 4000 ஆண்டுகளாக யூதர்கள் மேசியா என்ற ரட்சகர் வருவார் என்றும் முன்னுரைத்தோர் கூற்றுப்படி தங்களை அடிமைத்தன ஆட்சியிலிருந்து விடுவித்து இஸ்ரேல் தேசத்தை நிலைநாட்டுவார் என்றும் அவரது வருகைக்காக காத்து நின்றனர். எனவே இயேசு

நாதர் யூதர்களை ரோமானிய ஆட்சியிலிருந்து விடுவிப்பார் என்று தவறாக நினைத்தார். ஆனால் இயேசு நாதருக்கு அரசியலோடு எந்த தொடர்பு இல்லை. யோவான் இயேசுநாதரை உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக் குட்டி என்று சுட்டிக் காட்டினார். இதனால் அநேக மக்கள் இயேசு நாதரை பின்பற்ற ஆரம்பித்தனர்.

**இயேசுவின் நற்செய்தி ஊழியம் :**

இயேசுநாதர் பொது ஊழியம் ஆரம்பிப்பதற்கு முன்பாக சில காலம் சாத்தான் அவருக்கு ஆசைக்காட்டி (Temtation) சோதித்தான். சுயதிருப்தி, சுய நம்பிக்கை, சுயமகிமையைப் பின்பற்றும்படி தூண்டப்பட்டார். ஆனால் இச்சோதனைகளில் எல்லாம் மயங்காமல் வெற்றிக் கண்டார். தன்னைத்தானே தியாகம் செய்வதையும் மற்றவர்களுக்கு ஊழியம், செய்வதையும் மித பாவத்துக்கே தன்னை கிருபாதார பலியாக அர்ப்பணம் செய்வதையும், குறிக்கோளாகக் கொண்டு மக்களின் பாவங்களைப் போக்குவதற்காக தன்னையே ஒப்பற்ற முறையில் தியாகம் செய்ய முன்வைந்தார். அவர் தனது ஊழியத்தை ஆரம்பித்து தேவனது ராஜ்யம் சமீபத்திருக்கிறது. உங்கள் பாவங்களுக்காக மனம் திருந்தி என்னை விசுவாசியுங்கள். ஏனெனில் நான் உங்கள் பாவங்களை எடுத்துக் கொண்டு உங்களை விடுதலையாக்குவேன் என்றார்.

யூதேயா மற்றும் கலிலியோ பகுதிகளில் உபதேசங்களை செய்து வந்தார். இயேசு, இவரைப் பின்பற்றி இவரிடம் 12 சீடர்கள் சேர்ந்தனர். சமயச் சடங்குகளைச் செய்வதை விட நீதியான வாழ்க்கையே முக்கியமென்று வற்புறுத்தினார். இப்போதனை அக்காலத்து வைதீகம் நிறைந்த மதத்தலைவர்களின் உள்ளங்களை புண்படுத்தியது. தேவன் யூதமக்களுக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் தகப்பன் என்று கூறினார். நல்லொழுக்கமாக வாழ தேவனிடமிருந்து நம்பிக்கை கொண்டு வந்திருக்கேன் என்று கூறி தங்கள் தீய வழிகளிலிருந்து திரும்புமாறு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

அப்போது நோயாளியைக் குணப்படத்தினார். முடவனை நடக்க வைத்தார். குருடனுக்கு பார்வையளித்தார். குஷ்டரோகியை சுத்தமாக்கினார். இறந்தவர்களை உயிரோடு எழுப்பினார். இயேசுவின் போதனைகளை கேட்ட, அவர் செய்த அற்புதங்களைக் கண்ட மக்கள் அவரை பின்பற்றினர். இவர் மிக எளிய முறையில் பல உவமைக் கதைகளைக் கூறி உபதேசம் செய்தது மக்களை வெகுவாகக் கவர்ந்தது. இவரது கெட்ட குமாரன் கதை மிகவும் புகழ் பெற்றது. மேலும் இயேசு பின்பற்றிய தாழ்மை, எளிமை, அன்பு, தர்மம், நேர்மை ஆகிய பண்புகள் மக்களை கவர்ந்தது.

**இயேசு ஜெருசேலம் நகருக்கு வருகை புரிதல் :**

கலிலியோ, யூதேயா ஆகிய நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்திய இயேசு ஜெருசேலம் நகர் வந்தார். யூதர்களின் மன்னரான தாவீதின் வழி வந்த ஒரு மன்னருக்கு

வரவேற்பளிப்பதை போல ஜெருசேலம் மக்கள் வரவேற்பளித்தனர். அவரை ஒரு கோவேறு கழுதையின் மீது ஏற்றி, வழ நெடுக தங்கள் ஆடைகளை விரித்துப் போட்டு மரக் கிளைகளை கையில் பிடித்து ஓசன்னா என்று ஒலி எழுப்பி வாழ்த்தினர். இயேசு ஜெருசேலம் நகரின் புகழ் பெற்ற யூத தேவலாயத்திற்குச் சென்றார். ஆனால் அது தேவாலயமாக இல்லை. வணிகத் தலம் போல விற்பவர்களும் வாங்குபவர்களுமே நிறைந்திருந்தனர். அனைவரையும் இயேசு விரட்டியடித்தார். இது யூதமத அறிஞர்களுக்கு ஆத்திர மூட்டியது.

ஒரு சாதாரண தச்சன் மகனுக்கு இவ்வளவு பிரமாண்ட வரவேற்பா என்று பொறாமைப்பட்டனர். அவரை மேசியா அல்லது உலக ரட்சகர் என்று மக்கள் கருதியது அவர்களுக்கு கோபமூட்டியது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் தம்மை தேவகுமாரன் (Son of God) என்று கூறியது ஆத்திரமளித்தது. எனவே இயேசுவை சூழ்ச்சியால் பிடித்து கொலை செய்ய திட்டம் தீட்டினர்.

**இயேசு சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்படுதல் :**

இயேசுவை எப்போதும் மக்கள் திரள் சூழ்ந்திருந்ததால் அவரைப் பிடித்தால் கலகம் ஏற்படும் என்று கருதி ரகசியமாகப் பிடிக்க எண்ணினர். இதற்கு இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸ் காரியோத்து என்பவர் உதவி செய்ய முன்வந்தார். அவருக்கு முப்பது வெள்ளிக்காசுகள் லஞ்சமாக கொடுக்கப்பட்டது. இயேசு தாம் பாடுபடும் வேளை நெருங்கி விட்டதை உணர்ந்தார். தான் இறப்பதற்கு முந்தினநாள் அதாவது வியாழன் இரவு தனது 12 சீடர்களுடன் உணவு அருந்தினார். இது அவரது கடைசி இரவு உணவு! அன்று தான் அவர் நற்கருணை (Holy Communion) என்ற திருவருள் சாதனத்தைப் படைத்தார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

இரவு உணவுக்குப் பிறகு இயேசு ஒலிவமலையிலுள்ள கெத்சமனே (Gethsemane) தோட்டத்திற்கு சென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார். அவரிடம் யூதாஸ் ஆயுதம் தாங்கிய வீரர்களுடன் வந்தான். இயேசுவை முத்தம் கொடுத்து காட்டிக் கொடுத்தான். இயேசுவைப் பிடித்தவர்கள் முதலில் அவரை யூத மதத்தலைவரான கயபாவிடம் கூட்டிச் சென்றார். தேவகுமாரன் என்று இயேசு தன்னைக் கூறியதை பெரியக் குற்றம் என்று அவர் கூறினார். எனவே இயேசு சாக வேண்டியவர் என்று கூறினார்கள் கயவர்கள்.

அக்காலத்தில் பாலஸ்தீனநாடு ரோமானியப் பேரரசின் ஒரு மாநிலமாக இருந்தது. அதன் தலைநகரமான ஜெருசலேமில் ஒரு ரோமானிய ஆளுநர் இருந்தார். அவர் பெயர் பொந்தியு பிலாத்து (Pontius Pilate) என்பதாகும். மறுநாள் வெள்ளிக்கிழமை யூதசமய மூப்பர்களும் அவர்களது ஆதரவாளர்களும் இயேசுவை பிலாத்துவிடம் அழைத்துச் சென்றனர். இவன் தன்னை மேசியாவாகிய அரசர் என்று கூறுகிறான். நம் மக்கள் சீரழிவிற்கு காரணமாக இருக்கிறான் என்று குற்றம் சுமத்தி மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று கோரினர்.

இயேசுவை நன்கு விசாரித்த பிலாத்து அவர் மரண தண்டனைக்குரிய குற்றம் புரியவில்லை என்று உணர்ந்து இயேசுவை விடுவிக்க முயன்றார். எங்கே பிலாத்து இயேசுவை விடுதலை செய்து விடுவாரோ என்று அஞ்சிய கூட்டத்தினர் இயேசு தம்மை யூதர்களின் அரசர் என்று கூறிக் கொள்கிறார். ஆனால் எங்கள் அரசர் சீசர். அந்த அரசருக்கு வரி செலுத்தக் கூடாது என்று கூறுகிறார் என்று அரசியல் ரீதியான குற்றச்சாட்டுகளைக் கூறினர். சீசரின் அதிகாரியான பிலாத்து இயேசுவுக்கு மரண தண்டனை அளிக்காவிட்டால் தம்மைப் பற்றி சீசரிடம் புகார் செய்து விடுவார்கள் என்று அஞ்சி இயேசுவுக்கு மரண தண்டனை அளித்தார்.

கொலைவெறி பிடித்த அந்த கூட்டத்தினர் கொல்கதா என்ற கொலைக் களத்திற்கு இயேசுவின் முதுகில் சிலுவையை சுமத்தி இழுத்துச் சென்றனர். அங்கே சிலுவையில் இயேசுவை ஆணிகளால் அறைத்து நட்டி வைத்தனர். மூன்று மணிநேர உபாதைகளுக்குப் பின் இயேசு கிறிஸ்து மரணமடைந்தார்.

**இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுதல்**

அரிமத்தயா என்ற ஊரைச் சேர்ந்த ஜோசப் என்பவர் பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலை அடக்கம் செய்ய அனுமதி பெற்றார். அவர் அருகிலுள்ள பாறையில் வெட்டப்பட்ட புதிய கல்லறையொன்றில் இயேசுவை அடக்கம் செய்தார். இவையெல்லாம் நடைபெற்றது வெள்ளிக்கிழமை மாலை. மறுநாள் சனிக்கிழமை யூதர்களுக்கு ஓய்வுநாள். அதற்கு மறுநாள் ஞாயிறு அதிகாலையில் மேரி மகதவேன் என்ற பெண்ணும் மரியா என்ற பெண்ணும் யூதமுறைப்படி இறந்த உடலுக்கு பரிமளத்தைலப் பூசுவதற்குக் கல்லறைக்கு வந்தனர். அப்போது கல்லறை திறந்திருப்பது கண்டு திகைத்து நின்றனர்.

அப்போது தேவதூதர் ஒரவர் அவர்கள் முன்பு தோன்றி இயேசு தாம் கூறிய படியே உயிர்தெழுந்து விட்டார் என்று கூறினார். எனவே அவர்கள் மகிழ்ச்சிப் பொங்க இச்செய்தியை சீடர்களுக்கு சொல்வதற்கு விரைந்த போது இயேசு கிறிஸ்து அவர்கள் முன்பு தோன்றினார். பின்னர் கலிலியோ மலையருகில் கூடியிருந்த தனது சீடர்கள் முன்பும் தோன்றினார். ஏசுதாம் முன்னர் அறிவித்த படி சிலுவையில் அறையப்பட்டு மரணமடைந்து கல்லறையில் புதைக்கப்பட்ட பின் மூன்றாம் நாள் தாமே உயிர்த்தெழுந்ததன் மூலம் சர்வ வல்லமை உள்ள இறைவன் என்பதை நிருபித்து விட்டார் என்று கிறிஸ்தவர்கள் நம்புகிறார்கள். இயேசு பிறந்த நாளை கிறிஸ்மஸ் நாளாகவும் அவர் உயிர்த்தெழுந்த நாளை ஈஸ்டர் பெருவிழாவாகவும் கிறிஸ்த்தவர்கள் மகிழ்ச்சி பொங்க கொண்டாடி வருகின்றனர்.

**இயேசு கிறிஸ்துவின் போதனைகள் :**

இயேசு கிறிஸ்துவின் போதனைகளைப் பற்றி பிற்காலத்தில் பரிசுத்த மத்தேயு, மார்க்கு, லூக்கா யோவான் ஆகியோர் எழுதிய சுவிசேஷங்களிலிருந்து நாம் ஓரளவு தெரிந்து கொள்ள முடிகிறது. இவை பைபிளின் புதிய ஏற்பாட்டில் அடங்கி உள்ளது. மக்கள்

செய்கின்ற பாவங்களுக்காகவே இயேசு தொல்லைகளை அனுபவித்து, பாடுபட்டு இறுதியில் மரித்தார். அவரது தியாகபலி அவரிடம் விரும்பிச் செல்லும் எவரையும் பரிசுத்த தேவனுடன் தொடர்பு கொள்ளச் செய்யும். அவரது பலியைத் தவிர மனித பாவத்திற்கு வேறெந்த பலியும் தேவையில்லை. இயேசு கிறிஸ்துவின் போதனைகள் எல்லோருக்கும் பொதுவானவையாகும்.

ய) ''இறைவனை நேசிப்பது மட்டும் போதாது மக்களையும் நேசிக்க வேண்டும். அதுவும் மாற்றானை நேசிக்க வேண்டும்''.

டி) ''மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்திருக்கிறது'' (மத்தேயு 4:27)

உ) ''சாந்தகுணம் உள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள் (மத்தேயு 5 : 5)

ன) ''இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்.'' (மத்தேயு 5:9).

ந) ''ஐசுவரியவான் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாக இருக்கும்'' (லூக்கா 18: 25)

க) ''நான் உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன். என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்''. (யோவான் 8 : 12)

ப. ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாக இருக்கின்றேன். என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்''. (யோவான் 14 : 6)

ா. ''எவனாகிலும் முதல்வனாக இருக்க விரும்பினால் அவன் எல்லோருக்கும் கடையானவனும், எல்லோருக்கும் ஊழியக்காரனாகவும் இருக்கக்கடவன்.'' (மார்க்கு 10 : 35)

ை) ''அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது. அன்புக்கு பொறாமை இல்லை. அன்பு தன்னைப் புகழாது. இறுமாப்பாக இராது. அயோக்கியமானதைச் செய்யாது. தற்பொழிவை நாடாது. சினமடையாது. தீங்கு விளையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல் சத்தியத்தில் சந்தோஷப்படும்'' (ஐ கொரிந்தியர் 13:4)

த). “தன்னைத்தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்தப்படுபவன் உயர்த்தப்படுவான்” (லூக்கா 14 : 11)

ம) “வாய்க்குள் போகிறது மனிதனைத் தீட்டுப்படுத்ததாது. வாயிலிருந்து புறப்படுகிறவவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும். அவைகளே மனிதனைத் தீட்டுப்படுத்தும் (மத்தேயு 15 : 11)

இறைவனிடமும் பக்கத்து வீட்டுக்காரனிடமும் அன்பு செலுத்த வேண்டும். இறைவன் மீது இதயபூர்வமாக, மிகவும் உறுதியான அன்பு செலுத்த வேண்டும். பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று எண்ணுகிறாயோ அதை நீ பிறருக்குச் செய்ய வேண்டும். உன்னுடைய பகைவனையும் நீ நேசிக்க வேண்டும். உனக்கு தீமை செய்தவர்களுக்காகவும் நீ ஆண்டவனிடம் வேண்டிக் கொள்ள வேண்டும்.

இயேசுநாதர் கூறியது தீமைக்கு பதிலாக தீமை செய்யக்கூடாது. தீமையை நன்மையால் தான் வெல்லலாம் என்பதாகும்.

தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கு துன்பத்திலிருந்தும், துன்புறுத்துவதில் இருந்தும் பாதுகாப்பு அளிப்பதாக அவர் வாக்களிக்கவில்லை. ஆனால் தொல்லை சூழ்ந்த நிலையிலும் கூட மனோசமாதானத்தை அளிப்பதாக வாக்களித்தார். மதச் சடங்குகளிலிருந்து மக்களின் மனத்தை அகற்றி, அதன் பின் மூலமாய் செயல்படுகின்ற தேவன் மீதுள்ள விசுவாசத்தைக கற்றுக் கொடுத்தார். மனித வாழ்வின் உயர்வு அநேகம் பொருளை சம்பாதிப்பதைப் பொறுத்தது அன்று தேவனையும் தன்னைச் சுற்றியுள்ளோரையும் நேசிப்பதைப் பொறுத்தே அது அமையும்.

இயேசு இறைவனின் அரச (Kingdom of God) வற்புறுத்தினார். ஒவ்வொரு மனிதனும் அதை அடையப்பாடுபட வேண்டும். உணவு உடையை விட அது முக்கியம். நல்ல செயல்களால் மட்டுமே அதை அடைய முடியும். அந்த பேரரசு மனிதனின் ஆற்றலினால் அடை முடியாதது இறைவனின் அருளினால் தான் அதை அடைய முடியும் என்றார். இயேசு கூறியது இந்த உலகத்திற்கு ஒரு முடிவு உண்டு. மனிதரது ஒழுக்கமும் சன்மார்க்கமும் நாளுக்கு நாள் சீரழிந்து ஒரு பயங்கர நிலை ஏற்படும் அப்போது தான் தேன்றி வந்து இந்த உலகில் ஒரு பரிபூரண அரசை நிலை நாட்டுவேன் என்னை உண்மையாகப் பின்பற்றுகிறவர்களுக்கு அதில் ஒரு பங்கு உண்டு என்றார் இயேசு.

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் உயிர்த்தெழுப்பிக்கப்பட்டு தனது வாழ்க்கைக்கு இறைவனிடம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இயேசுவின் மரணத்தின் மூலமாக அவரது ரட்சிப்பைப் பெற்றவர்கள் தேவனோடு சதாகாலமும் வாழ்வார்கள். தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி இறைவனது மன்னிப்பை பெறாதவர்கள் நரகத்தில் தள்ளப்படுவர். கிறிஸ்தவ

சமயத்தின் நம்பக்கை மற்றும் சமயக்கோட்பாடுகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவின் இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைத்தான் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

**கிறிஸ்தவ சமயத்தின் வளர்ச்சி :**

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின் விண்ணுலகை அடைந்தார். அத்ன பின் அவரது சீடர்கள் அவரது போதனைகளை, கிறிஸ்தவ சமயக் கொள்கைகளை உலகில் பல்வேறு பாகங்களுக்கும் கொண்டு சென்றார். ரோமானியப் பேரரசில் பொதுவான மொழி வழக்கில் இருந்ததாலும் போக்குவரத்து வசதி மிகுந்திருந்ததாலும் கிறிஸ்தவ சமயம் எளிதாகப் பரவியது. போதகர்கள் யூதர்களன் கோவில்களுக்குச் சென்று இயேசுவை மெசியா அல்லது உலக ரட்சகர் என்று கூறினர். அவர்கள் உயிரையும் பணயம் வைத்து தங்கள் குருவாகிய இயேசுவின் போதனைகளைப் பரப்பி இறுதியில் அவர் பணிக்காகவே உயிர் நீத்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

**புனித பவுல் (St. Paul)**

கிறிஸ்தவ சமயத்தை உலகம் தழுவிய ஒரு பெரும் மதமாக மாற்றிய பெருமை பவுல், பீட்டர் என்ற இயேசுவின் இரண்டு சீடர்களையுமே சாரும். இதில் பவுல் என்பவர் யூதக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களை வேட்டையாடி கொல்லுவதையே வேலையாகக் கொண்டிருந்தார். அப்படி கிறிஸ்தவர்களைக் கொல்லுவதற்காக தமாஸ்கஸ் செல்லும் போது வழியில் ஒரு பெரிய வெளிச்சம் ஏற்பட்டு அதில் இயேசுவின் காட்சியைக் கண்டார். கிறிஸ்த்தவர்களைத் துன்புறுத்துதலை கைவிட்டு கிறிஸ்தவ சமயத்திற்காக தம்மை உரிமைப்படுத்திக் கொள்ளுமாறு இயேசு கூறியதாக உணர்ந்தார்.

இதன் பின் தனது இறுதிக் காலம் வரை இயேசுவின் கொள்கைகளை பரப்பி வந்தார். சுமார் 12 ஆண்டுகள் ஆசியா மைனர், சிரியா, கிரீசு மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிகளில் உள்ள நாடுகளில் கிறிஸ்தவ சமயத்ததைப் பரப்பிய பின் ஜெருசலேம், ரோம் நகர் கொண்டு செல்லப்பட்டு ரோமானியப் பேரரசர் நீரோ (Nero) மன்னரால் ராஜதுரோகம் தெய்வ நிந்தனை ஆகிய இரண்டு குற்றச்சாட்டகள் சுமத்தப்பட்டு தலை துண்டிக்கப்பட்டார். இவ்வாறு பவுல் தனது 68-ஆம் வயதில் இறந்தார். கிறிஸ்தவ சமயத்தை உலகப் பொது சமயம் என்ற நிலைக்கு உயர்த்தி வரும் இயேசுவை தெய்வீக மனிதராக்கிய வரும் பவுலே ஆவார்.

**புனித பீட்டர் (St. Peter)**

இயேசுவின் சீடர்களில் ஒருவரான பீட்டர் ரோமில் கத்தோலிக்கத் திருச்சபை நிறுவினார். இதுவே பின்னர் கிறிஸ்தவ சமயத்தின் தலைமையிடமாக மாறியது. ரோமானியப் பேரரசரை வணங்க மறுத்ததால் இருவரும் கொல்லப்பட்டார். ரோமானியப் பேரரசின் இப்படுகொலைக்கு எண்ணற்ற கிறிஸ்த சமயத்தினர் பலியானார்கள். இரக்க குணமும்

அமைதியும் கொண்ட மார்க்கஸ் அரிலியஸ் (Marcus Aurelious) என்பவம் கூட கிறிஸ்தவர்களைக் கொலை செய்வது அவசியம் என்று கருதினார். கிறிஸ்தவர்களின் ரத்தம் சிந்த சிந்த கிறிஸ்தவ சபை மிகவும் வலுவடைந்தது. இந்த தியாகிகளின் ரத்தமே கிறிஸ்தவ சமயத்தின் விதையாக மாறியது எனக் கூறலாம்.

**ரோமானியப் பேரரசில் கிறிஸ்தவ மதம் பரவுதல்**

கி.பி. முதல் நூற்றாண்டிலேயே ரோமானியப் பேரரசின் பல பகுதிகளுக்குச் சென்று பவுல் முனிவரும் பீட்டர் முனிவரும் (St. Paul and St. Peter) கிறித்தவமதத்தை மக்களிடையே பரப்பினார்கள். அவர்கள் பல ஆபத்துக்களுக்கிடையே தான் இப்பணியை மேற்கொள்ள வேண்டியதாயிருந்தது. ஏனெனில் அப்பொழுது பேரரசரே கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார். அவரையே மக்கள் வணங்க வேண்டியிருந்தது. ஆனால் கிறிஸ்தவர்கள் அவ்வாறு செய்யாமல் கிறித்துவையே வணங்கினார். இது சட்ட விரோதச் செயலாகக் கருதப்பட்டது.

ரோமானியப் பேரரசர்கள் கிறிஸ்தவர்களின் இப்போக்கைப் பொறுத்துக் கொள்ளவில்லை. எனவே கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். தைரியமாக கிறிஸ்தவர்கள் பொது இடங்களில் தங்கள் கடவுளை வணங்க முடியவில்லை. ரகசியமான இடங்களிலும், மறைவான இடங்களிலுமே அவர்கள் வழிபாடு செய்தனர். ரோமானிய அரசர்கள் கிறிஸ்தவர்கள் இவ்வாறு ரகசியமான இடங்களில் கூடிப் பேரரசருக்கு எதிராகச் சூழ்ச்சிகள் செய்கின்றனர் எனக் குற்றம் சாட்டி இன்னும் அதிகமாகக் கொடுமைப்படுத்தினா். எனினும் பேரரசின் பல இடங்களில் கிறிஸ்தவ மதம் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

பவுல் முனிவர் சிரியா, ஆசியா மைனர், சைப்ரஸ் தீவு, ரோட்ஸ் தீவு, கிரீட் தீவு, மாசிடோனியா, கிரீஸ், சிசிலித்தீவு மற்றும் இத்தாலி போன்ற பகுதிகளுக்குச் சென்று கிறிஸ்தவமதக் கருத்துக்களை பரப்பினார். அப்பகுதிகளில் கிறிஸ்தவமத நிறுவனங்களையும் அமைத்தார். இறுதியில் இவர் பேரரசுக்கு எதிராக மதப் பிரச்சாரம் செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சாகடிக்கப்பட்டார்.

இவரைப் போலவே பிட்டர் முனிவரும் பல இடங்களில் மதப் பிரச்சாரம் செய்தார். இவர் பேரரசின் தலைநகரமாகிய ரோமிலேயே கிறித்தவ திருச்சபையை நிறுவி அதற்குத் தானே தலைமை மதகுருவாக இருந்து பணிபுரிந்தார். அவரும் நீரோவினால் கொலை செய்யப்பட்டார்.

முதல் நூற்றாண்டின் இறுதியில் ரோமில் பிட்டர் நிறுவிய திருச்சபையில் தலைவராயிருந்து கிளிமெனட் முனிவர் மதத் தொண்டு செய்தார். ரோமானியப் பேரரசர்களின் எதிர்ப்புகளிலிருந்தும் துன்புறுத்தல்களிலிருந்தும், அப்பேரரசின் பல பகுதிகளில் கிறித்தவர்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வந்தது. கிறித்தவர்களைத் துன்புறுத்திய

பேரரசர்களும் நீரோ, டிராஜன், ஹாட்ரியன், மார்க்ஸ், டையக்லீஷியன் போன்றவர்கள் குறிப்பிட தகுந்தவராவர். இத்தகைய துன்புறுத்தல்களுக்கிடையேயும் பாகனிஸம் (Paganism) என்று சொல்லப்பட்ட பேரரசர் வழிபாட்டுத் தத்துவத்துக்கும், ‘மித்ரெய்ஸம்’ (Mithraism) என்ற சொல்லப்பட்ட சூரியக் கடவுள் வழிபாட்டுத் தத்துவத்துக்கும், ஸ்டாயிசம் (Stoicism) என்றழைக்கப்பட்ட பொதுவான நல்லொழுக்கத்தின் அடிப்படையிலேயே மனித இயக்கம் நடைபெறுகிறது என்ற தத்துவத்துக்கும், மற்றும் யூத மதத்துக்கும் இடையேயும் கிறிஸ்தவமதம் வளர்ச்சி பெற்றுக் கொண்டு வந்தது.

காலம் செல்லச் செல்ல ரோமானியப் பேரரசர்கள் கிறிஸ்தவர்களை படுகொலை செய்வதில் சலிப்படைந்தனர். டயக்லீஷியன் (Diocletian) என்பவர் தான் கிறிஸ்தவர்களை வெறுத்த கடைசி ரோமானியப் பேரரசர் ஆவார். அவர் கிறிஸ்தவர்களை வேட்டையாடினாலும், மேலும் மேலும் மக்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றினர். டயக்லீஷியனுக்குப் பின் வந்த பேரரச் கான்ஸ்டன்டைன் ஒரு முறை போரக்களம் ஒன்றில் சிலுவைக் காட்சியினைக் கண்டார். அதன்பிறகு பல போர்க்களங்களில் வெற்றி கண்டார். எனவே அவர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினார். கி.பி. 313-ல் மிலான் ஆணையை (Edict of Milan) வெளியிட்டு கிறிஸ்தவர்களுக்கு சமய உரிமையை வழங்கினார். கிறிஸ்தவர்கள் இனி புறமதக் கடவுள்களுக்கு வேள்வி செய்ய வேண்டாம் என்றும், பேரரசரைத் தொழ வேண்டாம் என்றும் கூறி சமய சுதந்திரம் அளித்தார். அவருக்குப்பின் கிறிஸ்தவ சமயம் ரோமானியப் பேரரசில் வேகமாக வளர்ச்சியடைந்தது.

பின்னர் நான்காம் நூற்றாண்டில் கோத்துகள் (Goths) இடையேயும் கிறிஸ்தவ மதம் பரவியது. உல்பிலாஸ் (Ulfilas) என்ற கிறிஸ்தவ மதப் பெரியார் அவர்களிடையே அம்மதத்தைப் பரப்பினார்.

**ஆங்கிலோ சாக்சன்களிடையே கிறிஸ்தவ மதம் பரவுதல்**

கி.பி. ஐந்து, ஆறாம் நூற்றாண்டுகளில் வட ஜெர்மன் பகுதி மற்றும் ஸ்காண்டிநேவிய தீபகற்பப் பகுதியில் வாழ்ந்து வந்த டியுடோனிக் (Teutonic) இனத்தினர், பிரிட்டனில் குடியேறினர். இவர்கள் ஆங்கிலோ – சாக்சன்கள் (Anglo – Saxons) என்றழைக்கப்பட்டனர். இவர்கள் குடியேறிய பகுதிகளே பின்னர், இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லாந்து என்ற பலவாறு அழைக்கப்படலாயின.

பிரிட்டன் ரோமானியப் பேரரசின் ஒரு பகுதி என்ற முறையில், பேரரசர் கான்ஸ்டன்டைன் கிறிஸ்தவ மதத்தைப் பேரரசால் ஆதரிக்கப்பட்ட மதமாக ஆக்கிய போதே, அம்மதம் அந்நாட்டில் வேகமாகப் பரவியிருக்க வேண்டும். இருப்பினும் அந்நாடு கிறிஸ்தவத் திருச்சபையினால் அனுப்பப்பட்ட மதக்குருக்களால் தான் மதமாற்றம் செய்யப்பட்டது. பல

மதகுருமார்கள் அத்தீவுக்குச் சென்று அப்பணியில் ஈடுபட்டாலும், கி.பி. 6, 7 ஆம் நூற்றாண்டுகளில் தான் அப்பணி தீவிரப்படுத்தப்பட்டது.

பிரிட்டனின் கிழக்குப் பகுதியிலுள்ள கென்ட் (Kent) நிலப் பகுதியின் அரசன், பிரான்சைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவ இளவரசியை மணந்திருந்தார். இந்த நல்ல வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, ரோம் திருச்சபையின் போப் கிரேகரி (Pope Gregory கி.பி. 590 – 604) அகஸ்டைன் (St. Augustine) என்ற முனிவரையும், அவருடன் நாற்பது மதக் குருக்களையும் கி.பி 597-ஆம் ஆண்டில் கென்ட்டுக்கு அனுப்பினார். அவர்கள் அரசனுக்குக் கிறிஸ்தவமதக் கோட்பாடுகளை தொடர்ந்து விளக்கி வந்தனர். விரைவிலேயே அரசரும் அவருடைய குடிமக்களும் கிறிஸ்த மதத்திற்கு மாற்றப்பட்டனர். அரசர் கிறிஸ்தவத் திருச்சபையை அமைப்பதற்காகக் காண்டர்பரி என்ற நகரத்தில் ஒரு கட்டிடத்தைக் கொடுத்தார். அகஸ்டைன் அங்கே இயேசு ‘கிறித்துவின் திருச்சபையை’ (Christ Church) நிறுவினார். இது காலப்போக்கில் நன்கு வளர்ச்சியுற்றது. புகழ்வாய்ந்த காண்டர்பரி தேவாலயம (Cathedral of Canterbury) இங்கே தான் உள்ளது. இன்று அதன் தலைமை மதகுருவே, இங்கிலாந்து திருச்சபையின் தலைமை மதகுருவாக விளங்குகிறார்.

கென்ட் அரசரின் மகளை இங்கிலாந்தின் வடபகுதியிலுள்ள நார்த்தம் பிரியாவின் (Northumbria) அரசர் திருமணம் செய்து கொண்டார். இளவரசியுடன் பாலினஸ் என்ற மதகுரு அனுப்பப்பட்டார். அவருடைய போதனையால் அரசரும் அவருடைய ஆயிரக்கணக்கான குடிமக்களும் கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டார்கள். பின்னர் இங்கிலாந்தின் மத்தியில் இருந்த மெர்சியா (Mercia) என்ற பகுதியிலும், இம்மதம் பரப்பப்பட்டது. ஏழாம நூற்றாண்டின் இடைப்பகுதிக்குள்ளாக இங்கிலாந்து முழுவதும் கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்டு விட்டது.

**கிறிஸ்தவ சமயம் விரைவில் பரவக் காரணங்கள் :**

இடைக்காலத்தின் முற்பகுதியில் கிறிஸ்தவ சமயம் ஏனைய சமயங்களை எல்லாம் வென்று வெற்றி நடைபோட ஆரம்பித்தது. அதற்கான காரணங்கள் வருமாறு.

**a.** பலாத்காரமும் காட்டு மிராண்டித்தனமும் நிறைந்த ரோமானியப் பேரரசில் அன்பைப் பற்றியும், சமாதானத்தைப் பற்றியும் பேசிய கிறிஸ்தவ மதத்தை மக்கள் பின்பற்ற ஆரம்பித்தனர்.

b. அக்காலத்தில் நிலவிய சமயப் பிரிவுகள் எல்லாவற்றையும் விட தெளிவான கருத்துக்கள் கிறிஸ்தவ சமயத்தில் தான் காணப்பட்டன. பாவத்தைக் கண்டித்ததுடன் பாவம் செய்தவர்களுக்கும் விமோசனம் உண்டு என்று கருத்தைப் பரப்பியதால் மக்களிடம் செல்வாக்குப் பெற்றது.

c. தங்களையெல்லாம் துன்பப்படுகுழியிலிருந்து மீட்டு இரட்சிப்பைத் தர மெசையா வருவார் என்ற கருத்தை பெண்கள், ஏழைகள் முக்கியமாக ஒடுக்கப்பட்டவர்கள் மிகவும் விரும்பி ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர். சமுதாயத்தில் நசுக்கப்பட்டுக் கிடந்த அத்தனை பேருக்கும் ஒரு நம்பிக்கை ஊட்டி நல்ல மதமாக இந்த கிறிஸ்தவ மதம் திகழ்ந்தது.

d. மேலும் பாரசீகர்கள், எகிப்தியர்கள், கிரேக்கர்கள் ஆகிய மக்களிடையே தொன்று தொட்டுக் காணப்பட்டு வந்த பல்வேறு பழக்க வழக்கங்களையும், சடங்குகளையும் கிறிஸ்தவ சமயம் ஏற்றுக் கொண்டு விட்டதால் எந்த நாட்டவரும் ஏற்றுக் கொள்ளும் ஒரு புதுமையான மதமாக கிறிஸ்தவம் விளங்கலானது.

e. எல்லாவற்றிற்கும் மேலாக உயரிய ஒழுக்கம், தன்னலமின்மை எதிரிகளையும் நேசித்தல் போன்ற நற்பண்புகளை வற்புறுத்தியதின் விளைவாக கிறிஸ்தவ மதத்தை மக்கள் விரும்பி ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தனர்.

**திருச்சபையின் தோற்றம் : (Orgin of the Chruch)**

இயேசு கிறிஸ்துவின் மறைவுக்குப் பிறகு அவரது சீடர்களே கிறிஸ்துவின் கொள்கைகளைப் பரப்பினர். அவர்களது போதனைகளைப் பின்பற்றி கிறிஸ்தவர்களாக மாறிய அனைவரும் முதலில் சிறு சிறு தொழுகைக் கூட்டங்களை (Congregations) தங்களுக்குள் அமைத்துக் கொண்டனர். அவ்வப்போது யாரேனும் ஒரு கிறிஸ்தவர் இல்லத்தில் கூடி பிரார்த்தனை செய்தனர். பின்னர் இவர்களில் இறைவனின் இரட்சிப்பைப் பெற்றவர்களும், பரிசுத்த ஆவியோடு நேரடி தொடர்பு கொண்டவர்களாக கருதப்பட்டவர்களும் மூத்தோர் என்று பொருள்படும் பிரிஸ்பிடர்கள் (Presbyters) என்று அழைக்கப்பட்டனர். இவர்களே பிரார்த்தனைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினர்.

பின்னர் திருக் கூட்டங்களைக் கண்காணிக்கவும், கிறிஸ்தவ சமயச் சடங்குகளில் ஒற்றுமையை உண்டாக்கவும், கிறிஸ்தவர்களிடையே கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் ஏற்படுத்தவும் பிஷப் (Bishop) என்ற அதிகாரி நியமிக்கப்பட்டார். காலப்போக்கில் இந்த பிஷப் இறைவனால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியாக கருதப்பட்டார். புனிதச் சடங்குகளைச் செய்வதற்கும், கிறிஸ்தவ சமயக்கொள்கைகளுக்கு சரியான விளக்கம் தருவதற்கும் பிஷப்புகள் மட்டுமே தகுதியானவர்களாகக் கருதப்பட்டனர். ஒவ்வொரு நகருக்கும் இத்தகைய பிஷப் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கிறிஸ்தவ குருமார்கள் (Priest) அனைவரும் பிஷப்புக்கு கட்டுப்பட்டு நடந்தனர். ஒரு பெரிய மாநிலத்தில் இருந்த பிஷப்புகள் அனைவரும் ஒன்று சேர்ந்து ‘சினோட்’ (Synod) என்ற சபையை தமக்குள் ஏற்படுத்திக் கொண்டனர். இவர்கள் அடிக்கடி ஒன்றாகக் கூடி கிறிஸ்தவ

சபைகளின் நிர்வாகம் பற்றிய சிக்கல்களை அலசி ஆராய்ந்தனர். இவ்வாறு பிஷப்புகள் கிறிஸ்தவ சபையின் தொடக்கத்தில் மிக முக்கியமான அதிகாரிகளாக விளங்கினர். உலகியல் தலைவர்கள் பலர் பிஷப்புகளுக்கு பல அரசியல் பொருளாதார சலுகைகளை வழங்கினர். பிரார்த்தனைக் கூட்டங்களின் எண்ணிக்கை வளர ஆரம்பித்தது. அதன் விளைவாக பிஷப்புகளின் உரிமைகளும், அதிகாரங்களும் அதிகரித்தன.

நாளடைவில் ரோம் நகர பிஷப் ஏனைய பிஷப்புகள் அனைவரையும் விட உயர்ந்தவராக மதிக்கப்பட்டார். இதற்கு முக்கியக் காரணம் ரோம் நகரின் அரசியல் தலைமையே ஆகும். ரோமானியப் பேரரசு கான்ஸ்டான்டி நோபிகளுக்கு மாற்றப்பட்ட போது ரோம் நகர பிஷப்பின் செல்வாக்கு அதிகரித்தது. ரோம் நகரின் அமைதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்த வேண்டிய பொறுப்ப பிஷப் தலையிலேயே விழுந்தது அரசியலைப் போன்றே சமயத்திலும் நிர்வாக அமைப்பு ஏற்பட்டது. டயோசீஸ் (Diocese) அதன் ஆளுநராக ஆர்ச்பிஷப், அவருக்குக் கீழ் பிஷப்புகள், சாதாரண குருமார்கள் என்ற அதிகார வர்க்கம் தோன்றியது. மாநில தலைநகர பிஷப்புகள் ரோம் நகர பிஷப்பைத் தங்கள் தலைவராக ஏற்றனர். அவர் யாவருக்கும் தந்தை என்று பொருளில் ‘போப்’ (ீழிந) என்று அழைக்கப்பட்டார்.

ரோம் நகர பிஷப் ஐரோப்பாவின் தலைமை குருவாக ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு அரசியல் காரணங்கள் தவிர வேறு சில சமயம் சார்ந்த காரணங்களும் உண்டு. இயேசுவின் தலைமை சீடான புனித பீட்டர் ஏற்படுத்திய முதல் திருச்சபை ரோம் நகரில் தான் இருந்தது. எனவே கிறிஸ்தவர்கள் அதை தாய்த்திருச்சபை (Mother Church) யாகக் கருதினா். மேலும் புனித பீட்டரும், புனித பவுல் என்ற சீடரும் கிறிஸ்தவ சமயத்துக்காக தங்கள் உயிர்களைப் பலி கொடுத்த இடமும் ரோம் நகரமே ஆகும். மேலும் பைபிளில் ‘இயேசு தமது திருச்சபை என்ற கட்டிடத்தை பீட்டர் என்ற பாறையின் மீது கட்டுவதாகவும், பரலோகத்தின் சாவியினை அவரிடம் ஒப்படைப்பதாகவும், யார் யாரை அவர் ஏற்றுக் கொள்கிறாரோ அவர்களெல்லாம் பரலோகத்தில் இடம் பெறுவார்கள் என்னும்’’ (மத்தேயு 16:18) கூறப்பட்டுள்ளது.

முதலாம் லியோ (Leo, I) என்ற போப்பாண்டவர் மேலே கூறப்பட்ட கொள்கையை வலியுறுத்தி யாவரையும் ஒப்புக் கொள்ளுமாறு செய்தார். இவ்வாறு இறைவனின் பிரதிநிதியாக இயேசுவும், இயேசுவின் பிரதிநிதியாக பீட்டரும், பீட்டரின் வழித் தோன்றல்களாக போப்பாண்டவர்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். பீட்டர் தமது தெய்வீகப் பொறுப்புகளையும் பரலோகத்தின் சாவியினையும் போப்பாண்டவருக்கு ஒரு பத்திரத்தின் மூலும் ஒப்படைத்துச் சென்றார் என்று அனைவரும் நம்பினர். இவ்வாறு தான் போப்பாண்டவர் உலகெங்கும் உள்ள கிறிஸ்தவ சபையின் தனித் தலைவர் ஆனார். அவரது அதிகாரத்தையும் தலைமையையும் உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் ஏற்றுக் கொண்டனர். திருச்சபை என்ற அமைப்பு இவ்வாறு தான் தோன்றியது.

**திருச்சபை சடங்குகள் :**

இடைக்காலத்தில் திருச்சபை ஒன்றே மனிதனையும் இறைவனையும் இணைத்து வைக்கும் பாலமாக விளங்கியது. உலகியல் துன்பங்களைச் சமாளிக்கவும், அதன் பின் பரலோகம் சென்று மரணமில்லாப் பெருவாழ்வு வாழவும் மக்களுக்கு உதவிசெய்யும் இறைவனின் பிரதிநிதியாக திருச்சபை கருதப்பட்டது. இதற்காக திருச்சபை பல்வேறு சடங்குகளை ஏற்படுத்தியது. அந்த சடங்குகளின் தொகுப்பு ஏழுவகைப் புனிதச் சடங்குகள் (Seven Sacrements) என்று அழைக்கப்பட்டன. அவை, ஞானஸ்ஞானம் திடப்படுத்துதல், இறுதி விருந்து சடங்கு, பிராயசித்தம் அல்லது பாவசங்கீர்த்தனம், இறுதி எண்ணெய் பூச்சு, அபிஷேடகம், திருமண வினை (Babtism, Confirmation, Eucharist, Penance, Extreme Unction, Ordination, Matrimony) ஆகியவையாகும்.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது ஆதாம் ஏவாள் ஆகிய ஆதி மனிதர்களால் செய்யப்பட்ட பாவத்தைச் சுமந்து கொண்டே பிறக்கிறான். ஞானஸ்ஞானம் அல்லது புனித முழுக்கு மூலம் அத்தகைய பாவங்கள் கழுவப்பட்டு விடும் என்று கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இந்த சடங்கு குழந்தை பிறந்தவுடன் நடத்தப்படுகிறது. அத்தகைய பாவ நீக்கத்தைை உறுதி செய்யும் வகையில் நடத்தப்படும் சடங்கு தான் திடப்படுத்துதல். இது குழந்தை பன்னிரெண்டு வயதை அடைந்த பின் நடைபெறும். இயேசுவானவர் இறுதியாகச் சாப்பிட்ட விருந்தில் அருந்திய ரொட்டியையும் திராட்சை ரசத்தையும் அருந்துவதும், அப்படி அருந்தும் போது இயேசுவின் இரத்தமும், சதையுமாக அவை மாறிவிடுகின்றன என்று நம்புவது இறுதி விருந்து சடங்காகும். ஆன்மீக விழிப்புணர்வு பெறவும், மன உறுதியைப் பெறவும் இச்சடங்கு அவசியமாகிறது.

அடுத்து, எப்படியோ செய்து விட்ட பாவத்துக்குப் பரிகாரம் தேடுவதற்கு செய்யப்படும் சடங்கே பாவ சங்கீர்த்தனம் ஆகும். இதன் மூலம் எத்தகைய பாவம் செய்தாலும் இறைவனின் மன்னிப்பைப் பெறலாம் என்று நம்பப்படுகிறது. மரணப் படுக்கையில் கிடக்கும் ஒருவனது இதயத்தில் கிடக்கும் உலகியல் அழுக்கை புனித தைலத்தால் கழுவுவதே இறுதி எண்ணெய் பூச்சு ஆகும். குருமாராகப் பதவி ஏற்கும் போது செய்யப்படும் சடங்கு அபிஷேடகம் ஆகும். ஒரு ஆணும், பெண்ணும் திருமணம் செய்து கொள்வதைப் புனிதப்படுத்திக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையைச் சட்ட பூர்வமாக வழங்கும் சடங்கே திருமணச் சடங்காகும்.

மேற்கண்ட திருச்சபை கோட்பாடுகளின் அடிப்படையாகத் திகழ்ந்தவை பைபிளும், இயேசுவின் போதனைகளும், அவர்களது சீடர்களின் போதனைகளுமேயாகும். இந்த திருச்சபைக் கோட்பாடுகளுக்கு மக்கள் கட்டுப்பட்டு நடக்கலாயினர்.

**மடலாய முறை (MONASTIREIS)**

துறவு வாழ்வின் அடிப்படையிலிருந்து தோன்றியதே மடலாய வாழ்வு முறையாகும். அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்ட இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த முயற்சியில் அநேகர் தங்கள் வாழ்க்கையை அறப்பணிக்கும், ஆன்மீகப் பணிக்கும் அர்ப்பணித்து துறவிகளாயினர். சிலர் கொலை செய்யப்பட்டு ரத்த சாட்சிகளாக மரித்தனர். இவர்களது தியாகத்தினால் தான் கிறிஸ்தவ சமயம் வளர்ச்சியடைந்தது.

"ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்" (மத்தேயு 16 :24) இந்த தேவ வசனத்தின் அடிப்படையில் தான் மடாலயது முறை தோன்றியது.

**மடாலய முறையின் தோற்றம் :**

உலகியல் இன்பங்களைத் துறந்தால் அன்றி முக்தியடைய முடியாது என்பது கீழை நாட்டு சமயங்களின் முக்கியத் தத்துவமாகும். கிறிஸ்தவ சமயத்தை முதன் முதலில் போதித்த புனிதபால், புனித அகஸ்டின் போன்றோர் ஏறக்குறைய இதே கருத்தினை எடுத்துக் கூறினர். ஆனால் இயேசு கிறிஸ்து உடலை வருத்த வேண்டும் என்று எப்போதும் கூறியதில்லை. ஆனாலும் கீழ்க்கண்ட பல காரணங்களால் மடாலய முறை தோன்றின.

1. மடாலய துறவு வாழ்க்கையின் குறிக்கோள் எளிதில் முக்தி அடைய வேண்டம் என்பதேயாகும். ஆன்மாவானது உடம்பு என்ற சிறையில் அடைக்கப்பட்டு கிடப்பதாகவும், கடவுளை அடைவதற்கு தடையகா இருப்பவை உடலைப் பொறுத்த ஆசைகளே என்றும் உண்மையான கிறிஸ்தவர்கள் பலர் நம்பினர். இந்த நம்பிக்கையின் விளைவாக பலர் உடலை வருத்துவதை ஓர் ஆன்மீகக் கடமையாக எண்ணினர். இதனால் பலர் மடாலயங்களில் சேர்ந்து துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர்.

2. கிறிஸ்தவ திருச்சபையில் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வந்த ஆடம்பரங்களையும் கேளிக்கைகளையும் சுட்டிக் காட்டவும், அவற்றின் மீது தங்களுக்கிருந்த வெறுப்பை வெளிப்படுத்துவதற்காகவும் ஒரு சிலர் மடாலய வாழ்வு முறையை மேற்கொண்டனர்.

3. கொள்கைக்காக தியாகம் செய்து புகழடைய விரும்பியவர்கள் பலர் அக்காலத்தில் இருந்தனர். ரோமானியப் பேரரசர்கள் கிறிஸ்தவர்களை அடக்கி ஒடுக்கிய போது, கிறிஸ்தவ சமயத்துக்காக தங்கள் உயிரையே கொடுக்க பலர் முன் வந்தனர். இவர்கள் கிறிஸ்தவ சமயத்துக்காக தங்களைத் தாங்களே வருத்திக் கொள்வதில் திருப்தியடைந்தனர்.

4. கிறிஸ்தவர்கள் கீழை நாட்டு சமயங்களான கினாஸ்டிசிசம், மெனிசிசம் (Manicheism) போன்ற சமயங்களுடன் தொடர்பு கொண்டதும். ஓரளவு இந்த துறவு மனப்பான்மை வளர்ச்சிக்குக் காரணமாகும். ஏனெனில், உலகை வெறுத்தல், உடலைத் துன்புறுத்துதல் போன்றவறறை அந்த சமயங்கள் அளவுக்கு மீறி வற்புறுத்தின.

5. ஆனால் இடைக்காலத்தில் துறவு வாழ்க்கையை மேற்கொள்வதற்கு வேறு பல காரணங்களும் இருந்தன. கட்டாய ராணுவ சேவையிலிருந்து விலக்கு, கடன் தொல்லையிலிருந்து விடுதலை, பெருந்தண்டனைகளிலிருந்து தப்பித்தல், உண்ண உணவு உடுக்க உடையும் பெற்றுக் கொள்ளுதல் போன்ற குறுகிய நோக்கங்களுடன் மடாலய வாழ்வு முறையை நாடினர்.

மேற்கண்ட பல காரணங்களால் பலர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டனர். கி.பி. நான்காம் நூற்றாண்டில் பேச்சோமியஸ் என்ற துறவி எகிப்தில் ஒரு மடாலயத்தை நிறுவினார். துறவிகள் தனித் திருப்பத்தை விட ஒன்று கூடி வாழ்ந்தால் ஆன்மீக வளர்ச்சிக்கு நல்லது என்ற எண்ணத்திலேயே அந்த மடாலயத்தைத் தோற்றுவித்தார். நாளடைவில் இம்முறை பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது .

**மடாலயங்களின் வளர்ச்சி**

மடாலய முறை என்பது கீழை நாடுகளில் மட்டுமே நடைமுறையில் இருந்து வந்தது. இது கி.பி. 3 ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு சிறிது சிறிதாகக் கிறிஸ்தவ உலகத்திலும் மேற்கொள்ளப்பட்டது. கிறிஸ்தவ மதம் பல பகுதிகளிலும் பரவப் பரவ அதன் கோட்பாடுகளை விளக்குவதற்கும், கிறிஸ்தவத் துறவிகள் தங்கள் கடமைகளைச் செவ்வனே செய்யவும், தங்கள் ஆன்மாக்களைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவும் பல பெரியோர்களால் மடாலயங்கள் நிறுவப்பட்டன. இப்பிறவியின் பாவங்களுக்கு மன்னிப்பு பெறத் தவம் செய்யவும், மறுபிறவியில் நல்வாழ்க்கையைப் பெற இப்பிறவியில் மக்கள் சமுதாயத்திற்குத் தொண்டு செய்யவும், இம்மடாலயங்கள் பயன்பட்டன. மறுபிறவியில் நம்பிக்கை கொண்ட கிறிஸ்தவர்கள் பலர் முதலில் மிகக் கடுமையான துறவற வாழ்க்கையை மேற்கொண்டனர்.

அவ்வாறு, மிகக் கடுமையான துறவற முறையில் ஈடுபட்டுத் தங்கள் ஆன்மாக்களைத் தூய்மைபடுத்த முயன்ற பெரியோர்களுள் தீபிசைச் சேர்ந்த பால் முனிவர; (St. Paul of Thebes 251 – 356.A.D) மற்றும் அந்தோணி முனிவரும் (St. Anthony – 251 – 356 A.D) குறிப்பிடத் தகுந்தவர்களாவர். அவர்கள் தங்கள் உடமைகளையும் , உறவினர்களையும் துறந்து தனிமையை நாடிச் சென்று தவம் இருந்தனர். பாவங்களில் இருந்து விடுதலை பெறவும் ஆன்மீக வாழ்வு பெறவும் உணர்ச்சிகளை அடக்கி, உடலை வறுத்தித் தவமிருப்பது தான் ஒரே வழி என அவர்கள் கருதினார்கள். அதுவே கிறிஸ்தவ நெறி என்றும் அவர்கள் நம்பினார்கள். ஆனால் காலப்போக்கில் அக்கருத்து மாறுபட்டது.

**புனித பச்சோமியஸ் :**

கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் எகிப்தில் வாழ்ந்த பச்சோமியஸ் (St. Pachomius) முனிவர் ‘மனிதன் ஒரு சமூகப் பிராணி. அவன் சமூகத்தில் வாழ வேண்டும்; தனிமையில் வாழக்கூடாது’ என்ற கருத்தை வெளியிட்டார். அதற்கேற்ப நைல்நதியில் ஒரு தீவில் நூற்றுக்கணக்கான துறவிகள் ஒன்றாக வாழந்து தங்கள் கடமைகளில் ஈடுபட வழி வகுத்தார்.

**புனித பாசில் :**

இவரை அடுத்துப் பாசில் என்ற முனிவர் (St. Basil. 329 – 379 AD) குறிப்பிடத் தகுந்தவராவார். இவர் கப்படோசியாவில் பெரிய செல்வந்தர் குடும்பமொன்றில் பிறந்தார். இவருடைய முன்னோர்கள் அனைவரும் தூய்மையென தியாக வாழ்க்கை நடத்திய கிறித்தவர்களாவார்கள். ஏதன்ஸ் மற்றும் கான்ஸ்டான்டி நோபிளில் கல்வி கற்ற பாசில் பல கிறிஸ்தவ நாடுகளுக்குச் சென்று அங்கெல்லாம் கிறிஸ்தவர்கள் மேற்கொண்டிருந்த வாழ்க்கை முறையையும் மற்ற நிலைமைகளையும் அறிந்தார்.

மடாலய முறையின் வளர்ச்சியில் மேலே குறிப்பிடப்பட்ட பால் முனிவர் மற்றும் அந்தோனி முனிவர் போன்றோரின் கருத்துக்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். பச்சோமியஸ் முனிவரின் கருத்துக்களோடு உடன்பட்டுத் துறவிகள் தனிமையில் தவம் செய்து உடலை வறுத்தக் கூடாது என்றார். மேலும், துறவிகள் சமுதாயத்தோடு இணைந்து கூட்டம் கூட்டமாக வாழவேண்டும்; சமுதாயத்தின் உயர்வுக்கு அவர்கள் உழைக்க வேண்டும்; உடல் உழைப்பினால் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்ய வேண்டும்; அவர்கள் தங்களுக்கென எந்த உடமையையும் சேர்த்து வைக்க கூடாது. அவர்கள் உடுக்கும் ஆடை மட்டுமே அவர்களுக்கு உரிமையானதாகும்; ஏழ்மை, எளிமை, தன்னடக்கம் - இவை துறவிகளிடம் காணப்பட வேண்டிய சின்னங்களாகும்; எந்த ஒரு பணியினையும் புன் முறுவலுடன் செய்ய வேண்டும் போன்ற கருத்துக்களை வெளியிட்டார். இக்கருத்துக்களுக்கு ஏற்ப நகரங்களுக்கு அருகே துறவிகளின் குடியிருப்புகளை அமைத்துப் பாசில் முனிவர் மக்கள் தொண்டையும், மதத் தொண்டையும் செய்தார். இவருடைய கருத்துக்களும் கிறிஸ்தவத் தொண்டும் கிழக்கு ரோமானியப் பேரரசில் வெகுவாகப் பரவின. கி.பி. 451 – ஆம் ஆண்டில் நடைபெற்ற ‘சால்சிடன் பெருஞ்சபையும்’ (Council of Chalcedon) பாசில் முனிவரின் கொள்கைகளை ஆதரித்தது. கிறிஸ்தவ மடாலயங்கள் தோன்றி வளருவதற்கு பாசில் முனிவரின் பணி மிக முக்கியமான அடிப்படையாக அமைந்தது.

**பெனிடிக்ட் முனிவர் (ளுவ. டீநநெனளைஉவ : 480 – 543 யு.னு)**

கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை கிழக்கு ரோமானியப் பேரரசில் சில இடங்களிலும், மேற்கே கால் (புயரட) பகுதியில் மட்டுமே மடாலய முறை பரவியிருந்தது. இம்முறை மேற்கேயுள்ள கிறிஸ்தவ நாடுகளில் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர்களுள் காசியன்

முனிவர் (St. Cassian). மார்ட்டின் முனிவர் (St. Martin). சீசர் முனிவர் (St. Caeser) பெனிடிக்ட் முனிவர் (St. Benedict) போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஆவர்.

இவர்களுள் பெனிடிக்ட் முனிவரே மிகவும் முக்கியமானவர். இவர் கி.பி. 480 ஆம் ஆண்டில் இத்தாலியிலுள்ள உம்பிரியா (Umbria) என்ற நகரில் பணக்காரக் குடும்பமொன்றில் பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் அவரைக் கல்வி கற்க ரோமுக்கு அனுப்பினார்கள். ரோமில் மக்கள நெறிதவறிய ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு பெனிடிக்ட் வேதனைப்பட்டார். மிக விரைவிலேயே தனிமை வாழ்க்கையை நாடி சபைன் மலைப் பகுதிக்கு (Sabine Hills) ஓடி விட்டார். அங்கு தூய்மையான துறவி ஒருவரின் நட்பைப் பெற்றார்; அழகான அமைதியான குகை ஒன்றில் வாழ்ந்து வந்தார்.

அவ்வாறு வாழ்ந்து வரும் போது அவரிடம் பல மாறுதல்கள் காணப்பட்டன. கனவுகளிலும், தனிமையிலும் தேவனின் தூதர்கள் அவருடன் பேசுவதை உணர்ந்தார். அவருடைய கடவுள் தன்மை மற்றவர்களுக்கும் தெளிவாத் தெரியத் தொடங்கியது. அவரைச் சுற்றி சீடர்களின் கூட்டமும் பெருகிறது.

**பெனிடிக்டைன் மடாலயம் :**

தான் இருந்த இடத்தை மாற்ற வேண்டிய அவசியத்தை பெனிடிக்ட் அறிந்தார். அவருடைய சீடர்கள் ரோமுக்கும், நேபிள்சுக்கும் இடையே உள்ள மாண்டி காசினோ (Montecassino) என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். இங்கு தான் பெனிடிக்டைன் அமைப்பின் (Benedictine Order) கருத்துக்களைச் செயல்படுத்தும் மடாலயம் நிறுவப்பட்டது. குறுகிய காலத்தில் துறவிகள் பெரும் எண்ணிக்கையில் சேர்ந்தனர். அத்துறவிகளின் கடமைகள் எவை என்பதையும், அவர்கள் பின்பற்ற வேண்டிய முறைகளைப் பற்றியும் விளக்க பெனிடிக்டைன் கி.பி. 529 ஆம் ஆண்டில் ஒரு விதிமுறையை வெளியிட்டார். அதுவே பெனிடிக்டைன் ‘விதி’ (Rule) என்று புகழ் பெற்றது.

அவ் ‘விதி’ யின் படி ‘துறவிகள் அம்மடத்தில் சேரும் போது வாழ்நாள் முழுவதும் அதே மடத்தில் பணிபுரிவதாக உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும்; ஏழ்மை, ஒழுக்கம், கீழ்ப்படிதல் ஆகியவை அம்மடத்தில் சேருபவர்களின் முக்கியத் தகுதிகளாகும். உழைப்பும் மக்கள் தொண்டும் அவர்களின் கடமைகளாகும். மடாலயத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் கூடுமானவரை அவர்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டும். ஏழைகளுக்கும் வழிப் பயணிகளுக்கும் வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். மடத்தில் வாழும் துறவிகளுக்கு உரிமையுடையதென இவ்வுலகத்தில் எதுவுமே இல்லை. மடத்தின் தலைவருக்கும், மற்ற கட்டு திட்டங்களுக்கும் கீழ்படிந்து நடக்க வேண்டும் என்று துறவிகள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

மேலும் மடத்திலுள்ளோர் உடலுழைப்பு செய்ய வேண்டிய நேரம், தூங்கும் நேரம், இறைவனை வழிபட வேண்டிய நேரம், முதலானவையும் முறைப்படுத்தப்பட்டன. ஒரு மடாலயம் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு இம்மடாலயம் ஒர் இலக்கணமாக அமைந்தது. இதன் அடிப்படையிலேயே ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் மடாலயங்கள் நிறுவப்பட்டன. பிற்காலத்தில் கிறிஸ்தவ உலகத்தில் பல முக்கியப் பதவிகளை வகித்தவர்கள் பெனிடிக்டைன் மடாலயங்களைச் சேர்ந்தவர்களே எனபது குறிப்பிடத்தக்கது.

குளுனிய மடாலயம் :

பெனிடிக்டைன் அமைப்புக்குப் பின் புதிய மடாலயங்கள் ஏற்படுத்தப் பலர் முயன்றனர் என்றாலும் அவை வரலாற்றுச் சிறப்பு பெறவில்லை. குளினிய மடாலயம் கி.பி.910 ஆம் ஆண்டில் பிரான்சின் மேற்குப் பகுதியிலுள்ள அக்விடெயன் (Aquitaine) என்னும் கோமகனாட்சிப் பகுதியின் கோமகன் வில்லியம் (William) என்பவரின் ஆதரவால் குளினி (St. Cluny) என்ற இடத்தில் நிறுவப்பட்டது. முதலில் அம்மடாலயம் பெர்னோ முனிவரின் (ளுவ. டீநஅழ) தலைமையில் இயங்கியது அவருடைய தன்னலமற்ற சேவையினால் இம்மடாலயம் புகழ்பெற்றது. பெரும் எண்ணிக்கையில் துறவிகள் இம்மடாலயத்தில் சேர்ந்தனர்.

பெனிடிக்ட் முனிவர் தன் மடாலயத்திற்கு வெளியிட்ட ‘விதி’யின் படியே இம்மடாலயமம் செயல்பட்டதென்றாலும், அக்கருத்துக்களோடு வேறு பல நெறிமுறைகளும் மடாலயத் துறவிகளுக்கு வகுத்துத் தரப்பட்டன. ஐரோப்பாவில் பல இடங்களில் நிறுவப்பட்ட குளினிய மடாலயங்கள் ஒன்றோடொன்று தொடர்பு வைத்துக் கொண்டன. கொள்கையளவில் இவ்வனைத்து மடாலயங்களின் துறவிகளே குளினியில் இருந்த தலைமை மடாலயத் தலைவரைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால் நடைமுறையில் ஒவ்வொரு தலைவரும் தான் இருக்கும் காலத்திலேயே தன்னுடைய வாரிசு யார் என்பதை நியமித்து அவருக்குச் சிறந்த முறையில் பயிற்சியளித்து அவரைப் பின்னர் முறைப்படித் தலைவராக நியமிப்பார். இத்தகைய முறை நிர்வாகம் சிறப்பான முறையில் அமைய வழி வகுத்தது.

மேலும் இம்மடாலயங்கள் அரசர்களின் அதிகாரங்களுக்கு உட்படாமல் தனித்தியங்கின. அவைகளில் இருந்த துறவிகளுக்குக் குளினியில் இருந்த மடாலயத் தலைவரும், ரோமில் இருந்த போப்பும் மட்டுமே உயர் அதிகாரிகள் ஆவர். மடாலயங்களில் பணிபுரிவோர் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்ற விதி (Cellbacy) தவறாமல் பின்பற்றப்பட்டது. அதனால் துறவிகள் இவ்வுலக உறவுகளிலிருந்து விடுபட்டுச் சுயநலமின்றிப் பணி புரிவார்கள் என்று கருதப்பட்டது. பெனிடிக்டைன் அமைப்புக்குப் பின் குளினிய மடாலயம் கிறிஸ்தவ உலகத்தில் பல்வேறு விதமான மாற்றங்களை ஏற்படுத்தியது.

கார்தூசியன் மடாலய அமைப்பு : **Carthusion order**

குளுனிய இயக்கத் துறவிகள் நாளடைவில் உலகியல் இன்பங்களில் திளைக்கலாயினர். அவர்கள் பேசுவது ஒன்றும் செய்வது ஒன்றுமாக மாறியது. எனவே அவர்களைத் திருத்துவதங்காக கி.பி. 1084-ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டில் கார்த்தூசிய துறவிகளின் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பித்தவர் புனித புருனோ (St. Bruno) என்பவராவார்.

கார்த்தூசிய மடாலய முறையைச் சேர்ந்தவர்கள் தவத்தின் வடிவமாகத் திகழ்ந்தனர். வாரத்தில் மூன்று நாட்கள் உபவாசமிருந்தனர். முரட்டு ரோமத்தினாலான உடைகளை அணிந்து கொண்டனர். ஓயாத ஜெபத்திலும், தியானத்திலும் ஈடுபட்டனர். கத்தோலிக்க சமயத்தைப் பரப்பும் நோக்கத்திலேயே இவர்கள் உழைத்தனர். ஆனால் போப் பாண்டவரால் அங்கீகரிக்கப்பட்ட தனி அமைப்பை ஏற்படுத்தினர். இந்த அமைப்பு கி.பி. 12-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மறைந்தது.

### பெர்னார்ட் முனிவரும் சிஸ்டெர்சியன் முறையும் (St. Bernard and Cistercian Order)

ஸ்டீபன் ஹார்டிங் (Stephen Harding) என்பவரே சிஸ்டெர்சியஸ் முறையைத் தொடங்கி வைத்தார். எனினும் இவ்வமைப்பின் கொள்கைகள் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர் பெர்னார்ட் முனிவரே (கி.பி. 1090-1158) ஆவார். கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் பெனிடிக்டைன் கருத்துக்களும் குளினியக் கொள்கைகளும் சிறிது சிறதாக மறைந்து கொண்டு வந்தன. அவற்றை மீண்டும் புதுப்பித்து நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு பெர்னார்ட் முனிவர் அரும்பாடுபட்டார். கிறிஸ்தவ மதத்தை அழிக்க முற்பட்ட முகமதியர்களின் தாக்குதல்களை முறியடித்து அம்மதத்தை காக்க வேண்டியதன் அவசியத்தைக் கிறித்தவர்களிடையே விளக்கினார்.

கிறிஸ்தவர்கள் துறவிகளாக மட்டும் இருந்தால் போதாது இவர்கள் சிறந்த போர் வீரர்களாகவும் இருக்க வேண்டுமென பிரச்சாரம் செய்தார். பெர்னார்ட் முனிவரின் முயற்சியினாலும், தூண்டுதலினாலும் தான் இரண்டாம் சிலுவைப் போர் மேற்கொள்ளப்பட்டது. புறச் சமயவாதிகளை எதிர்த்துக் கிறித்தவ மதப் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அவர் வாழந்த காலத்தில் அவரைவிட மதப்பற்றும் கொள்கைப் பிடிப்பும் உடையவர் எவரும் இல்லை. அவருடைய கருத்துக்களும், சுயநலமற்ற தொண்டும் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. ரோமில் இருந்த போப்புக்கும், பிரான்சு நாட்டு அரசருக்கும் பலமுறை மதத்துறை ஆலோசனைகளை வழங்கினார்.

பெர்னார்ட்ட முனிவரின் புகழ் கிறித்தவ உலகம் முழுவதும் பரவியது. எனவே தான் அவர் வாழ்ந்த காலத்தை 'பெர்னார்ட் முனிவரின் காலம்' (The Age of St. Bernand) என்று வரலாற்று ஆசிரியர்கள் சிறப்பித்துக் கூறுகின்றனர். அவர் எழுதிய பல இறைவழிபாட்டுப் பாடல்கள் என்றும் கிறிஸ்தவர்களால் மனம் உருகிப் பாடப்படுகின்றன. பெர்னார்ட் முனிவரால்

சிஸ்டெர்சியஸ் முறை புகழ் அடைந்தது மட்டுமல்லாமல், மடாலய முறையில் ஒரு புதிய மறுமலர்ச்சியும் தோற்றுவிக்கப்பட்டது.

**பிரைர்கள் : Friars**

மடாலயங்களைத் தவிர பிரைர்கள் என்று சொல்லப்பட்ட தனிப் பட்ட கிறிஸ்தவ மதத்தின் வளர்ச்சிக்கும், கிறிஸ்தவர்களிடையே அம்மதத்தைப் பற்றிய புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் அருந்தொண்டு ஆற்றியுள்ளனர். மடாலயத் துறவிகளும் இந்த ப்ரைர்களுக்கும் வேறுபாடுகள் உண்டு. மடலாயத் துறவிகள் பெரும்பாலும் மக்கள் சமுதாயத்தின் தொல்லைகளிலிருந்து விடுபட்டு, அமைதியான மடாலயங்களில் இறை வழிபாடு செய்து, தங்கள் ஆன்மாக்களைத் தூய்மை செய்து கொள்ள முயன்றனர்.

ஆனால் ப்ரைர்கள் தங்களுக்கிருந்த உடமைகளை முற்றும் துறந்து ஏழ்மைஎன்னும் பெண்ணை மணந்து – அன்றாட உணவுக்குப் பிச்சை எடுத்து ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து கிறிஸ்தவ மதக் கருத்துக்களை மக்களிடையே பரப்பிப் பிற மதக் கருத்துக்களை முறியடித்துப் பிரச்சாரம் செய்தனர். இவர்கள் திருச்சபைக்கும் பக்கபலமாக இருந்தனர். கி.பி. 12 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் மடாலயங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் இந்த ஃப்ரைர்களே சமுதாயத்தில் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தனர். இவ்வாறு பெரும் தொண்டு புரிந்த பெரியார்களுள் ஃப்ரான்சில் முனிவரும் டாமினிக் முனிவரும் குறிப்பிடத் தகுந்தவர்களாவார்.

**a. பிரான்சிஸ் முனிவர் (கி.பி. 1181 – 1226)**

இவர் இத்தாலியிலுள்ள அசிசி என்ற நகரத்தில் பிறந்தார். அசிசியின் பிரான்சிஸ் முனிவர் (Francis of Assisi) என்றே புகழ் பெற்றவர். பெருஞ் செல்வந்தர் குடும்பமொன்றில் பிறந்தாரென்றாலும் இளமையிலேயே ஏழ்மைக் கோலம் பூண்டுக் கிறிஸ்தவ மதத் தொண்டு செய்யப் புறப்பட்டு விட்டார். இயேசுவைப் போலவும், அவருடைய சீடர்களைப் போலவும் இவ்வுலகத்துத் துன்பங்களையும் இடர்பாடுகளையும் அடைந்து, ஏழை எளியவர்களுடன் வாழ்ந்து மதத் தொண்டு செய்ய வேண்டுமென்பது அவருடைய கொள்கையாகும்.

அவ்வாறு அவர் நகரங்களில் கிறிஸ்தவ மதக் கொள்கைகளை விளக்கிக் கொண்டும், பிற மதக் கொள்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்து கொண்டும் சென்ற பொழுது அவருடைய அமைப்பில் பலர் சேர்ந்தனர். அவர்கள் பிரான்சிஸ்கள் பிரைர்கள் என்றழைக்கப்பட்டனர். இவ்வமைப்பைப் போப் மூன்றாம் இன்னொசண்டும் (Pope Innocent III : 1198 – 1216A.D) அங்கீகரித்தார். இவ்வியக்கத்தைச் சேர்ந்த பல பெரியார்கள் கடல் கடந்த நாடுகளுக்கும் சென்று மக்கள் தொண்டு செய்தனர். கல்வித் துறையில் புரட்சிக் கருத்துக்களை வெளியிட்ட ரோஜெர் பேக்கன் (Roger Becon) இவ்வமைப்பைச் சேர்ந்தவரே

என்பது குறிப்பிடத்தக்கது. கிறிஸ்தவ மதத்திற்கு பிரான்சிஸ் முனிவர் செய்த தொண்டு ஈடு இணையற்றதாகும்.

**b.** **டாமினிக் முனிவர் (கி.பி. 1170 – 1221)**

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த இவர் சிறந்த கற்றறிந்த மேதையாகவும், மதத்துறை அறிஞராகவும், பேச்சாளராகவும் விளங்கினார். ∴பிரான்சில் பிற மதக்கருத்துக்கள் வலுவடைந்து வருவதைக் கண்டு அஞ்சினார். எனவே நுண்ணறிவும் மதப்பற்றும் உடைய இளைஞர்களுக்கு விவிலிய நூல், மதம் மற்றும் சட்டத்துறைகளில் சிறந்த பயிற்சி அளித்துப் புறமதவாதிகளின் கருத்துக்களை எதிர்த்துப் பிரச்சாரம் செய்ய அவர்களை அனுப்பினார். பிரான்சிஸ்கள் அமைப்பும், டாமினிகன் அமைப்பும் ஒரே காலத்தில் செயல்பட்டன.

டாமினிகன் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மக்களிடையே புதிய விழிப்புணர்ச்சியையும், சிந்தனை ஆற்றலையும் ஏற்படுத்தினார்கள். போப் மூன்றாம் ஹொனொரியசும் (Pope Honorius III : 1216 -1227 A.D) கி.பி 1217 ஆம் ஆண்டில் இவ்வமைப்பை அங்கீகரித்து ஆதரித்தார். டாமினிக் மற்றும் அவருடைய சீடர்களின் சுவை மிக்க கிறிஸ்தவமத விளக்க உரைகளைக் கேட்பதில் மக்கள் அதிக ஆர்வம் காட்டினர். கிறிஸ்தவ மதத்தில் நம்பிக்கை இழந்த பலரும் தங்கள் தவறுகளை உணர்ந்து அம்மதத்தின் மேன்மையை உணர்ந்தனர்.

இவ்வாறு மடாலயங்களும் ப்ரைர்களின் அமைப்புகளும் கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதிலும், மக்கள் தொண்டு செய்வதிலும் மற்றும் கல்வியைப் பரப்புவதிலும் பெருந்தொண்டு புரிந்தன. இவை ரோம் திருச்சபைக்கும் பல வழிகளில் பக்கபலமாக இருந்தன.

**மடாலயங்களின் சேவைகள் :**

1. மடாலயங்களின் நடவடிக்கைகளின் விளைவாக பல நல்ல பயன்கள் ஏற்பட்டன. திருச்சபையில் ஊழலும், உலகியல் ஆசைகளும் மலிந்து கிடந்த போது துறவிகள் தங்கள் தூய வாழ்க்கை மூலமாக மக்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்கினர்.

2. மடாலய துறவிகள் மக்கள் முன்பு உயர்ந்த குறிக்கோள்களை வைத்தனர். கிறிஸ்தவ சமயத்தை சீர்திருத்தி அமைத்தனர். சமயப்பட்டங்களையும், பதவிகளையும் விற்கும் சிமணி முறையை ஒழிக்க ஓயாது பாடுபட்டனர். மேலும் போப்பாண்டவரைத் திருச்சபையைச் சேர்ந்த குருமார்களே தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற முறை ஏற்பட்டது.

3. போப்பாண்டவரைத் தேர்ந்தெடுக்க கார்டினல்களின் குழு (Col. lege of Cardinals) ஒன்று 1059-ல் அமைக்கப்பட்டது.

4. 1059-ல் சமயக் குருமார்கள் இந்த கார்டினல்கள் குருதான் இன்று வரை போப்பாண்டவரை தேர்வு செய்து வருகிறது. இந்த தேர்தல் வாடிகன் நகரில் உள்ள சிஸ்டைன் தேவாலயத்தில் நடைபெறும். 2013 மார்ச் 14-ம் தேதி 115 கார்டினல்கள் அடங்கிய குழுவினால் 266 வது போப்பாண்டவராக அர்ஜண்டினாவைச் சார்ந்த ஜார்ஜ்மரியோ பெர்க்காலியோ என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் போப் முதலாம் பிரான்சிஸ் என்று அழைக்கப்படுவார். 1300 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது தான் ஐரோப்பிய நாடுகளைச் சேராத ஒருவர் போப் ஆக தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும். சமய குருமார்கள் திருமணம் செய்து கொள்வது சட்ட விரோத மாக்கப்பட்டுள்ளது. 1075-ல் சிமனி என்ற பதவிற்கும் முறை ஒழிக்கப்பட்டது.

5. கிறிஸ்தவ சமயம் உலகம் முழுவதும் பரப்பப்பட்டது. இங்கிலாந்து , ஜெர்மனி, மத்திய ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் கிறிஸ்தவச் சமயத்தைப் பரப்பியவர்கள் இவர்களேயாவார்.

6. மடாலயங்கள் உழைப்பின் உயர்வை மக்களுக்கு எடுத்துக் காட்டின சதுப்பு நிலங்களை சாகுபடி செய்தனர். காடுகளை அழித்து வேளாண்மை செய்தனர். பிராணிகளை வளர்ப்பதிலும், வேளாண்மை செய்வதிலும் புதிய முறையினைக் கையாண்டனர். பயிற்சுழற்சி முறையை முதன் முதலில் கடைபிடித்தவர்கள் மடாலயத் துறவிகளேயாவார்.

7. மடாலயங்கள் பல தொழில் வளர்ச்சிக்கும் காரணமானது. அவர்கள் கண்ணாடித் தொழில், பட்டுத் தொழில், திராட்சை ரசம் தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்களையும் வளர்த்தனர். மரத்தாலும் உலோகத்தாலும் பல்வேறு பொருட்களை உண்டாக்கினர். இங்கிலாந்து போன்ற இடங்களில் அவர்கள் ஆடு மாடுகளை வளர்த்து கம்பளி உற்பத்தியைப் பெருக்கினர்.

8. மடாலயங்கள் மூலம் பல சமூகப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிகள், நூலகங்கள் நிறுவப்பட்டன. பல உணவகங்களை நிறுவி வழிப் பயணிகளுக்கு உதவினர். ஆங்காங்கே மருத்துவமனைகள் நிறுவப்பட்டு நோயாளிகளுக்கு உதவினர்.

இவ்வாறு மடாலய முறையினால் இடைக்காலத்தில் பல நன்மைகள் ஏற்பட்டன. இடைக்கால நாகரிக வளர்ச்சியில் மடாலயங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

## பிராங்குகளின் பேரரசு

## (FRANKISH EMPIRE)

கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் பிராங்குகள் கால் (Gal) நாட்டின் தமக்கெனத் தனி அரசு ஒன்றினை நிறுவினார். சாலியன் பிராங்குகள், ரூபாரியன் பிராங்குகள் என்றும் இரு பிரிவினராக இருந்த அவர்களுக்குள்ளும் பல உட்பிரிவுகள் காணப்பட்டன. அவர்களின் மெரோவிஞ்சியன்

வம்சத்தினர் கி.பி. 483 முதல் 751 வரை ஜெர்மனியை ஆண்டனர். கி.பி 751 முதல் 911 வரை ஜெர்மனியிலும் அதன் பின்பு 987 வரை பிரான்சிலும் கரோலிஞ்சியன் பிரிவினர் ஆட்சி செய்தார்கள்.

**மெரோ விஞ்சியன்கள் : (Merovingions)**

**குளோவிஸ் : (Glovis)**

மொரோவிக் என்னும் பிராங்குகளின் மன்னரின் நினைவாக அவரது பேரரான குளோவிஸ் (கி.பி. 481-511) என்பவரால் மெரோவிஞ்சியன் வம்சம் தோற்றுவிக்கப்பட்டது. முதலாம் சில்டெரிக் என்பவரின் மகனான குளோவிஸ் தமது 15வது வயதில் மன்னரானார். கி.பி. 486-ல் அவர் வடக்குகால் பகுதியின் ரோமானிய மன்னரான ஸியாக்ரியஸ் (Syagrius) என்பவரை சாய்சன்ஸ் போர்க்களத்தில் தோற்கடித்தார். வெகுகுறுகிய காலத்திற்குள்ளாகவே பிரிட்டனி முத் பர்கண்டிக்கு இடைப்பட்ட பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.

கி.பி. 493-ல் அவர் பர்கண்டிய இளவரசி குளோடில்டா (Clotilda) என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். அவருடைய தூண்டுதல் காரணமாக கி.பி. 496-ல் அவர் கத்தோலிக்க சமயத்தைத் தழுவினார். அதன் விளைவாக அவருடைய கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளிலும் கத்தோலிக்க சமயம் வெகுவேகமாகப் பரவியது. அது அவருக்கு ‘கல்நாட்டின் கான்ஸ்டன்டைன்’ என்ற பெருமையைத் தேடித் தந்தது. அத்துடன் போப்பாண்டவரின் செல்வாக்கு வளர்ச்சியடையவும் அது துணை நின்றது.

அதன் பின்னர் தமது ஆட்சிப் பகுதிகளை விரிவாக்கம் செய்ய முற்பட்ார். அல்லாஸ் மற்றும் மெயின் பள்ளத்தாக்குப் பகுதிகள் அவர் வசமாயின. கி.பி. 507-ல் விஸிகோத்துகளின் மன்னரான இரண்டாம் அலரிக்கைத் தோற்கடித்தார். அதன் விளைவாக அவருடைய ஆட்சிப் பகுதியின் எல்லையானது அக்யூடெய்ன் பகுதியிலிருந்து பிரின்ஸ் மலைத் தொடர்வரை விரிவடைந்தது. கி.பி. 511-ல் அவர் மரணமடைந்தார்.

**முதலாம் கிலோட்டர் : (Chlotar I)**

க்ளோவில் கி.பி. 511-ல் மரணமடைந்ததும் அவருடைய ஆட்சிப் பகுதியை அவருடைய நான்கு மக்களும் தமக்குள் பிரித்துக் கொண்டனர். அவர்களுள் முதலாம் தியோடரிக் (கி.பி. 511 – 574) ரீம்ஸ் பகுதியையும், குளோடாமிர் (கி.பி. 511-524) ஆர்லியன்ஸ் பகுதியையும், ஸில்டிபெர்ட் (கி.பி. 511-558) பாரீஸ் பகுதியையும் முதலாம் கிலோட்டர் (கி.பி. 511 – 561) சாய்சன்ஸ் பகுதியையும் ஆட்சிப் புரிந்தனர். அவர்களுக்குள் ஒற்றுமையில்லை. போட்டியுணர்வு மிகுந்து காணப்பட்டது. எனவே நிலையான சீரான ஆட்சி காணப்படவில்லை.

**சில்பெரிக்:**

முதலாம் கிலோட்டரின் மரணத்திற்குப் பின் மீண்டும் மெரோவிஞ்சியன்களின் ஆட்சிப் பகுதி அவருடைய நான்கு மக்களுக்கிடையில் பிரித்துக் கொள்ளப்பட்டது. ஆனால் அவர்களில் மூவர் மரணமடைந்த பின்னர் சிலபெரிக் மட்டும் கி.பி. 561 முதல் கி.பி. 584 வரை ஆட்சியாளராயிருந்தார். நிலையான செயல்கள் ஏதுமில்லாத இவருடைய ஆட்சி கி.பி. 584-ல் முடிவுற்றது.

இரண்டாம் கிலோட்டர் : சில்பெரிக்கின் ஆட்சி கி.பி. 584-ல் முடிவுற்ற பின் இரண்டாம் கிலோட்டர் என்பவர் மெரோவிஞ்சிய ஆட்சியாளரானார். அவர் காலத்திலும் மெரோவிஞ்சிய அரசு எவ்விதமான மாறுதல்களையும் அடையவில்லை. அதற்கு மாறாக அவருடைய மரணத்திற்குப் பின் பிராங்குகளின் அரசு ஆஸ்ட்டிரேஷியா, நியூட்ரியா, பர்கண்டி என்ற மூன்று பிரிவாகப் பிரிந்தது. ஆஸ்டிரேஷியம் பகுதியில் மட்டும் கரோலிஞ்சியப் பிரிவினர் செல்வாக்குடன் விளங்கினர்.

மெரோவிஞ்சியரின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட பிரிவினைகள், பங்கீடுகள் ஆகியவற்றால் அவர்களது அரசு சீரழியலாயிற்று. மேலும் அரச குடும்ப காரியங்களைக் கண்காணித்து வந்த மேயர் என்ற அதிகாரிகள் ஆட்சியாளர்களின் வலிமையின்மையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். குறிப்பாக இரண்டாம் பெப்பின் என்ற மேயரொருவர் கி.பி 687-ல் நியூட்ரியாவில் ஆட்சி செய்த பிரிவினரைத் தோற்கடித்தார். கி.பி. 714-ல் அவர் மரணமடைந்தும் அவருடைய மகன் சார்லஸ் மார்ட்டல் என்பவர் மேயரானார்.

**கரோலிஞ்சியன்கள் : (The Carolingians)**

சார்லஸ் மார்ட்டல் : இரண்டாம் பெப்பினின் மகனான 'தைரிய மிக்க சார்லஸ்' (Charles, the Bold) எனப்பட்ட சார்லஸ் மார்ட்டல் ஆஸ்ட்டிரேஷியாவின் மேயரானார். நியூட்ரியன் பிரிவினரை அவர் ஆப்ளிஸ், வின்சி, சாய்சன்ஸ் ஆகிய போர்க்களங்களில் தோற்கடித்தார். அரசு நீதிமன்றத்தித் தாமே தலைமை தாங்கி அதனைத் தமது கட்டுப்பாட்டில் கீழ்க் கொண்டுவந்தார். போர்கள், சமாதானம் ஆகியவை அவராலேயே தீர்மானிக்கப்பட்டன. பிரபுக்களைக் கொண்டு ஆட்சித் துறையை நடத்திச் சென்ற அவர் சமயத்துறையிலும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தார். மார்ட்டல் என்ற பதத்திற்கு சுத்தியல் என்று பொருள். அவருடைய கடுமையான செயல்களால் அவருக்கு அப்பெயர் வழங்கப்பட்டது. பொருத்தமே ஆகும். அவருடைய பெயருக்கேற்ப தமது ஆட்சியனைப் பெரிதும் சிறப்புறச் செய்தார்.

கி.பி. 720-ல் பிரினீஸ் மலையைத் தாண்டி, செப்டிமோனியாவைத் தகர்த்தார். கி.பி. 732-ல் பாய்டியர்ஸ் என்னும் போர்க்களததில் அப்துல் ரஹ்மான் என்ற ஆளுநரின் தலைமையில் கீழான அரேபியப் படையை சார்லஸ் தோற்கடித்தார். இச்செயலின் விளைவாக கிறித்த சமயமும் அவர்களுடைய பண்டைய கலாச்சாரமும் அழிவுறாமல் காக்கப்பட்டன. டூர்ஸ் போர் என்றும் அழைக்கப்பட்ட இப்போருக்குப் பின் கி.பி. 737, 739 ஆகிய

ஆண்டுகளிலும் முகமதியர்களைத் தோற்கடித்து கத்தோலிக்க சமயத்தினைப் பாதுகாத்தார். பவேரியா, சாக்ஸனி ஆகிய பகுதிகளயைும் வெற்றிக் கொண்டார்.

எல்லைகளை விரிவாக்கம் செய்த மார்ட்டல் அவர் ஆட்சிப் பகுதியில் நிலவிய குப்பைகளைக் களைத்து அமைததியை நிலைநாட்ட முயன்றதன் விளைவாக இவருடைய வழித் தோன்றல்கள் தம்மை கரோலிஞ்சியன்கள் என்ற அழைத்துக் கொண்டார்கள். இவர் கி.பி. 741-ல் காலமானர். அவருக்குப் பின் கார்லமென் (Carloman) மற்றும் மூன்றாம் பெப்பின் எனப்பட்ட குட்டையான பெப்பின் (Pepin the Short) என்பவரும் தமது தந்தையின் ஆட்சிப் பகுதியை ஆஸ்டிஷேியா மற்றும் கிழக்குப் பகுதியெனவும், நெஸ்ட்ரியா, பர்கண்டி மற்றும் மேற்குப் பகுதியெனவும் தமக்குள் பிரித்துக் கொண்டார்கள். ஆனால் கி.பி. 747-ல் கார்லமென் சமயத் துறவியாக மாறிவிட்டார். அதனால் அவரது ஆட்சிப் பகுதிகளும் மூன்றாம் பெப்பினைச் சென்றடைந்தது.

**மூன்றாம் பெப்பின் :**

(கி.பி. 741 – 768) கி.பி. 741-ல் தன் தந்தை சார்லஸ் மார்ட்டலின் மரணத்திற்குப் பின் தனது சகோதரருடன் ஆட்சியைப் பகிர்ந்து கொண்டார். ஆனால் கி.பி. 747-ல் அவர் துறவியாகி விட்டமையால் ஆட்சிப் பகுதி முழுமைக்கும் இவரே மேயரானார். போப்பாண்டவர் சாசரியுடன் இவர் நட்புக் கொண்டிருந்தார். கி.பி. 751 நவம்பரில் சாய்சன்ஸ் என்னுமிடத்தில் ஒரு சபையைக் கூட்டினார். அச்சபை அவரை ஏகமனதாக அரசராகத் தேர்ந்தெடுத்து, அதன் விளைவாக மூன்றாம் சில்டெரிக் என்ற கடைசி மெரோவியஞ்சியன் வம்ச ஆட்சியாளர் புனித வெர்டின் மடாலயத்துக்கு அனுப்பப்பட்டார். கி.பி. 755-ல் அவர் மரணமடைந்ததும் மெரோவிஞ்சிய ஆட்சி முடிவுற்றது.

சமயத் துறைக்கு மூன்றாம் பெப்பின் செய்த சேவைகள் பாராட்டுதலுக்குரியது. கிறிஸ்தவத் தேவாலயத்தில் காணப்பட்ட குறைபாடுகளைக் களைய நாட்டின் பல பாகங்களிலும் பல கூட்டங்களைக் கூட்டி ஒரு முடிவுக்கு வந்தார். திருச்சபைக்கென ஏராளமான தானங்களையும் வழங்கினார். ரோமானியரிடமிருந்து சுங்கத் தீர்வை வசூலித்த அவர் போப்பாண்டவர் ஸ்டீபனுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தார். போப்பாண்டவரின் ஆட்சிக்கு பலவழிகளில் தீங்கிழைத்துக் கொண்டிருந்த லம்பார்டியர்கள் மீது தனிக்கவனம் செலுத்தினார். ராவென்னாவை ஆக்கிரமித்துக் கொண்டு ரோமின் மீது உரிமை கொண்டாடிய லம்பார்டி மன்னர் அய்ஸ்டால்ப் என்பவரைத் தோற்கடித்து ராவென்னாவையும், ரோமைச் சுற்றியுள்ள பகுதிகளையும் கைப்பற்றி அவற்றை கி.பி. 756-ல் போப்பாண்டவரிடம் ஒப்படைத்தார். அவை ‘பெப்பின் நன்கொடை’ (Donation of Pepin) என்றழைக்கப்படுகிறது.

இதன் விளைவாக போப்பின் ஆட்சிப் பகுதியானது மத்திய இத்தாலியில் நிலை பெற்றது. பெப்பினின் வளர்ச்சியைக் கண்டு பொறாமையுற்ற சாரசன்கள் என்ற முஸ்லீம்களைக்

கட்டுப்படுத்தி கி.பி. 759-ல் தெற்கு கால்பகுதி, செப்டிமேனியா ஆகியவற்றைக் கைப்பற்றினார். இதன் விளைவாக ஏற்பட்ட பூசலில் அக்யூடெய்ன் பகுதியைத் தம்முடன் இணைத்துக் கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றார். பவேரியாவில் இவருக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சியினை ஒடுக்கித் தமது ஆதரவாளர் ஒருவரை அப்பகுதியின் கோமகனாக நியமித்தார். இவ்வாறு பெப்பின் பெற்ற வெற்றிகள் பிராங்குகள் பேரரசை வலிமையுடையதாக் செய்தன. அதனால் கி.பி. 768-ல் அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற அவருடைய மகன் சார்லஸ், சார்லமென் என்றும் மகாசார்லஸ் என்றும் புகழப்படுமளவிற்கு ஒரு பேரரசின் ஆட்சியாளரானார்.

**சார்லமென்**

**(Charlemagne)** (கி.பி. 768 – 814)

சார்லமென் மகாசார்லஸ் எனப் பின்னர் அழைக்கப்பட்ட சார்லமென் மூன்றாம் பெப்பினுக்கும் பெர்ட்ராடா என்பவளுக்கும் மகனாகப் பிறந்தார். புனித ரோமப் பேரரசரின் முதல் பேரரசர் என்ற தகுதியைப் பெற்று சுமார் 43 ஆண்டுகள் ஆட்சிப் புரிந்த இவர் கி.பி. 722 ஏப்ரல் 2-ஆம் நாள் பிறந்தார்.

**ஆட்சிப் பொறுப்பேற்றல்** :

மூன்றாம் பெப்பினின் ஆட்சிப் பகுதியானது அவருடைய இருமைந்தர்களான சார்லஸாலும், கார்லமென்னாலும் பிரித்துக் கொள்ளப்பட்டன. தெற்கு ஆஸ்டிரேஸியா, தெற்கு நெஸ்டூரியா, பர்கண்டி, ஸெப்டிமோனியா, அக்யூடெய்னி ஆகியவற்றின் பெரும் பகுதிகள் ஆகியவற்றை சார்லஸின் இளவலான கார்லமென் பெற்ற போது வடக்கு ஆஸ்டிரேஸியா, வடக்கு நெஸ்டூரியா, பிஸ்கேயன் கடற்கரைப் பகுதி, காஸ்கோனி ஆகிய பகுதிகளை சார்லஸ் தமது உடமைப் பகுதிகளாகப் பெற்றார். கி.பி. 771 டிசம்பர் 4-ல் கார்லமென் காலமானதும் சார்லஸ் தாமே பிராங்கியப் பேரரசின் முழுமைப் பெற்ற ஆட்சியாளரானார்.

**நோக்கங்கள்** :

அரச பதவியின் தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் ஆழ்ந்த பற்றுடையவராக விளங்கிய அவர் ஒரே அரசு; ஒரே சமயம் என்ற குறிக்கோளின் அடிப்படையில் கீழ்க்கண்ட நோக்கங்களை உடையவராக விளங்கினார்.

1. பிராங்குகளின் பேரரசின் எல்லைகளை விரிவாக்கி அனைத்து ஜெர்மானியப் பிரிவினையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருதல்.

2. போப்பாண்டவர்களுடன் சுமூக உறவு கொண்டு கிறிஸ்தவ சமயத்தை வலுப் பெறச் செய்தல். அத்துடன் பிற சமயத்தவர்களையும் கிறிஸ்தவ சமயத்திற்கு மாற்றுதல்.

3. ஐரோப்பாவில் தன்னுடைய தனித்தலைமையின் கீழ் வலிமை மிக்க பேரரசு ஒன்றினை உருவாக்கி அதனைப் பழைய ரோமானியப் பேரரசுக் இணையானதாகச் செயல்படச் செயதல்.

4. தமது கட்டுப்பாட்டிலிருந்த ஆட்சிப் பகுதிகளில் மையம் நோக்கிய ஆட்சியைத் தோற்றுவித்து நல்லாட்சியை நிறுவுதல்.

மேற்கூறப்பட்ட தன்னுஜடய நோக்கங்களை முழுமையாக நிறைவேற்றுவதலின் பொருட்டு வீரம் செறிந்த ஆற்றல் மிகுந்த சுமார் 26 போர்களில் ஈடுபட்டார்.

**போர்களும் வெற்றிகளும் :**

**லம்பார்டியருடன் போர் :**

ஆரம்பத்தில் லம்பார்டியருடன் நல்லுறவு கொள்ள விழைந்தார். தனது தாயாரின் கருத்துக்கேற்ப லம்பார்டிய மன்னர் டெஸிடேரியாவின் மகள் டெஸிடெரியாவின் மகள் டெஸிடெரெட்டாவை கி.பி. 770-ல் மணநது கொண்டார். ஆனால் டெஸிடேரியஸ், போப்பிற்கு சார்லஸின் தந்தை வழங்கிய பெப்பினின் நன்கொடைப் பகுதிகளை அபகரித்துக் கொண்ட போது நிலைமை மாறலாயிற்று. அத்துடன் டெஸிடோரியஸ் போப்பாண்டவர் முதலாம் ஹட்ரியனுக்கு எதிரியெனச் செயல்படலானார். மற்றும் லம்பார்டி மன்னர், சார்லஸின் மறைந்த சகோதரரின் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் புகலிடம் தந்தார். இதனால் வெறுப்புணர்வு பெருகி வளரலாயிற்று,

இந்நிலையில் போப் முதலாம் ஹட்ரியன் லம்பார்டி மன்னருக்கெதிராகச் சார்லஸின் உதவியை நாடிய போது சார்லஸ் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார். சார்லஸ் பெரும்படை ஒன்றுடன் பாஸியா, வெரோனா ஆகிய இடங்களைத் தாக்கினார். கி.பி. 773-ல் பாலியாவும், கி.பி. 774-ல் வெரோனாவும் கைப்பற்றப்பட்டன. டெஸிடேரியஸ், அவரது மனைவி ஆகியோர் கைது செய்யப்பட்டு லீஜ் நகருக்கு அனுப்பப்பட்டார்கள். சார்லஸ் வென்ற பகுதிகளிலெல்லாம் கிறிஸ்தவ சமயம் பரப்பப்பட்டு வலிமை பெறச் செய்யப்பட்டது.

**மகாசார்லஸின் பேரரசின் எல்லைகள் :**

சார்லமெனின் பேரரசு வடக்கே எய்டர், சிலி நதிகளிலிருந்து தெற்கே பிரனீஸ பகுதி வரையிலும், வட கிழக்கில் ஸ்பெயின் வரையிலும், மேற்கே அட்லாண்டிக் கடல் மற்றும் வட கடல் பகுதிகளிலிருந்து கிழக்கே ஏட்ரியாடிக்கரை வரையிலும் பரவியிருந்தது. குறிப்பாக ஐரோப்பாவின் எல்லா நாடுகளிலும் சிற்சில பகுதிகளாலாவது அவரது ஆட்சிப் பகுதிகள் இருந்தன.

**தூய ரோமப் பேரரசர் சார்லமென் :**

போப்பாண்டவர் முதலாம் ஹட்ரியன் கி.பி. 795-ம் ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தில் மரணமடைந்த போத மூன்றாம் லியோ என்பவர் போப்பாண்டவரானார். அன்பு, சாத்தவீகம் ஆகிய குணங்களற்ற அவர் நெறியற்ற செயல்கள் மூலம் மக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டார். வெறுத்துத் தாக்கிய மக்கள் அவரை கி.பி. 799 ஏப்ரல் 25-ல் இரஸ்மஸ் மடாலயத்துக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து தப்பியோடிய அவர் சார்லமெனிடம் புகலிடம் தேடினார். பேரரசர் சார்லமென் உடனடியாக ரோமுக்குச் சென்று போப்பாண்டவர் மீதான குற்றச்சாட்டுகள் மீது பகீரங்க விசாரணை நடத்தினார். கி.பி. 800-ல் ரோமானியர் சமாதானப்படுத்தப்பட்டனர்.

போப் மூன்றாம் லியோ வேதாகமப் புத்தகத்தைத் தம் கைகளிலேந்தித் தாம் குற்றமற்றவர் என ஆணையிட்டமையால் அமைதி ஏற்பட்டது. அதே ஆண்டு கிறிஸ்துமஸ் தினத்தன்று புனித பீட்டர் ஆலயத்திற்கு வருகை தந்த சார்லசுக்கு போப்பாண்டவர் மூன்றாம் லியோ புனித ரோமப் பேரரசராக முடிசூட்டினார். கூடியிருந்த மக்கள் கூட்டம் மகிழ்ச்சி வெள்ளத்தில் அகஸ்டஸ் சார்லஸ் வாழ்க என வானை எட்டுமளவிற்கு ஆர்ப்பரித்து வாழ்த்தினர். ரோம் நாட்டின் அதிபதியாயில்லாத மகா சார்லஸ் பிராங்குகளின் மன்னர் என்ற நிலையிலிருந்து மேம்பட்டவராக புனித ரோமப் பேரரசரானார்.

**பேரரசரானதன் முக்கியத்துவம் :**

கி.பி. 476-ல் வீழ்ச்சி அடைந்த ரோமானியப் பேரரசு 324 ஆண்டுகள் கழித்து அதாவது கி.பி 800-ல் புனித ரோமப் பேரரசு என்ற பெயரில் உதயமாயிற்று. அத்துடன் சீசர்களின் ஆட்சியின் போது காணப்பட்ட சிறப்பியல்புகளை மீண்டும் உருவாக்கக் கூடிய நிலைக்கு சார்லமென் உயர்த்தப்பட்டார் . புனித அல்லது தூய என்ற சொல் ரோமானியர் மீது ஐரோப்பியர் கொண்டிருந்த மரியாதையையும், போப்பாண்டவருடன் கொண்டிருந்த நல்லுறவையும் சுட்டிக்காட்ட வல்லதாக அமைந்திருந்தது. பேரரசானதால் போப்பாண்டவரைக் காக்க வேண்டிய பொறுப்பு பேரரசருக்கு ஏற்பட்டது.

ஜெர்மானியர் ஒருவருக்கு போப்பாண்டவர் முடிசூட்டியது இதுவே முதல் தடவையாகும். இதன் மூலம் பொதுவான பேரரசர் பதவியை ஜெர்மானியர் பலமுறை பெறக்கூடிய வாய்ப்புகள் பெருகின. போப்பாண்டவருக்கும் பேரரசருக்குமிடையில் சமய அடிப்படையிலும் மேலாண்மைப் போட்டி ஏற்படுவதற்கான வித்து ஊன்றப்பட்டது. போப் ஏழாம் கிரஹரி, மூன்றாம் இன்னோசன்ட் மற்றும் பேரரசர் நான்காம் ஹென்றி ஆகியோர் காலங்களில் அவை வெளிப்பட்ட போது போப்பாண்டவர்களின் மேலாண்மை நிலை நாட்டப்பட்டது. கிறித்தவத் திருச்சபைப் பாதுகாப்பு ரோமானியப் பெருமையை நிலை நாட்டுதல், ஐரோப்பாவில் ஒற்றுமையுணர்வை மேலோங்கச் செய்தல், இஸ்லாமியர்களின் எதிர்ப்புகளையும் சமாளித்தல் போன்ற பொதுத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வழங்கப்பட்டது,

இருப்பினும் கான்ஸ்டான்டி நோபிளைத் தலைநகரமாக கொண்டியங்கிய பைசாண்டியப் பேரரசே பழைய ரோமானியப் பேரரசின் வாரிசு என்று கருதப்பட்டதால் அந்த ஆட்சியின் பேரரசியான ஐரின் என்பவளுக்கும், சார்லமெனுக்கும் இடையில் அரசியலடிப்படைச் சிக்கல்கள் தோன்றிய இப்பட்டம் பெற்றதால் சார்லமெனின் பேரரசு விரிவடையவில்லை . அவருடைய அரசிற்குப் புது வருவாய் எதுவும் கிட்டவில்லை. சுருங்கக் கூறினால் போட்டியுணர்வு, பூசல்கள் ஆகியவற்றுக்கு வழிவகுக்கப்பட்டது.

**சார்லஸின் ஆட்சிமுறை :**

கரோவிஞ:சிய பிராங்குகளின் காலம், குறிப்பாக சார்லமெனின் ஆட்சிக்காலம் பிராங்குகளின் மறுமலர்ச்சிக் காலமென அழைக்கப்படுகின்றது. சார்லமெனின் ஆட்சிக்காலத்தில் ஆட்சித் துறையின் பல அம்சங்களிலும் மேற்கொள்ளப்பட்ட செயல்களும், மாற்றங்களும் அவருடைய ஆட்சிக் காலத்தை ஒரு மறுமலர்ச்சிக் காலமென அழைக்கத் தூண்டிய நில் வியப்பொன்றும் இல்லை. தொலைநோக்குத் தன்மை கொண்ட சார்லமென் சிறந்த வீரராகத் திகழ்ந்ததைப் போல் சிறப்பியல்புகள் பல கொண்ட நிர்வாகியாகவும் விளங்கினாரென்பதை அவருடைய சீர்திருத்தங்கள், ஆட்சி முறை ஆகியவற்றின் மூலம் நன்குணரலாம்.

**அரசர் :**

ஆட்சித்துறைச் சீர்திருத்தங்களில் ஆழ்ந்த பற்றுடையவான அரசர் ஆகென் (Aachen) என்னுமிடத்தைத் தமது தலைமையிடமாகக் கொண்டிருந்தார். ஒருங்கிணைக்கப்பட்ட பெரும் பகுதி அவருடைய ஆட்சியின் கீழிருந்தது. நிர்வாக அதிகாரங்களனைத்தும் அவருடைய கையில் குவிக்கப்பட்டிருந்தன. ஆட்சி இயல் முழுவதையும் கட்டுப்படுத்திய அரசர் வல்லாட்சியாளரெனச் செயல்பட்டார்.

ஷெனேஷல் (Seneschal), பட்லர் (Butler), மார்ஷல் (Marshal) சேம்பர்லின் (Chamberlain) போன்ற தலைமை அதிகாரிகள், தளபதிகள், தூதுவர்கள், நீதி அதிகாரிகள் என்ற பல நிலைகளில் செயலாற்றினார்கள். அரசனுக்கு ஆட்சித் துறையில் துணை புரிந்தார்கள். அரசன் செல்லுமிடங்களுக்கெல்லாம் அவருடைய அரசவையும் உடன் சென்று செயலாற்றியது. தனது நண்பர்கள், சமயத் தலைவர்கள் ஆகியோரடங்கிய சபையொன்றைத் தமது ஆலோசனை மன்றமாக அரசர் பெற்றிருந்தார். ஆனால் அதன் முடிவுகள் அவரைத் கட்டுப்படுத்தவில்லை. மேல் முறையீடுகளைக் கேட்டு, நீதி வழங்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்த அரசரை மக்கள் அணுகுவது எளிதாகவே இருந்தது.

**நீதித்துறை :**

நீதி மேலாளராக விளங்கிய அரசர் நீதிக் காவலராயிருந்தார். நீதித்துறையில் அரசருக்குப் பல அதிகாரிகள் துணைபுரிந்தார்கள். கவுண்ட் (Count) மாவட்டத் தலைமை நீதிபதிகளாயிருந்தார்கள். ப்ரீமென் (Freemen) எனப்பட்ட மூத்தோர்கள் பல சமயங்களில் நீதி வழங்குமாறு அழைக்கப்பட்டார்கள். அரசரே நீதிபதிகளே நியமித்தார். ஒவ்வொரு வழக்கிற்குமான நீதிபதிகள் அரசருக்கு முன்பாகவே தேர்ந்தெடுக்கப்பட்டனர். சமய அடிப்படையிலான நீதிபதி ஒருவரைக் கொண்டிருந்த சான்சரி என்ற மற்றொரு நீதிமன்றமும் வழக்கிலிருந்தது.

**வருவாய் :**

வெல்லப்பட்ட நாடுகள் வழங்கிய கப்பத்தொகை அரசர் பெற்ற நன்கொடைகள், தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் பெறப்பட்ட அபராதப் பணம் மற்றும் சுங்கவரி ஆகியன அரசுக்கு வருவாய்களாக அமைந்தன. நிலவரியே நிரந்தரமான பெருமளவினதான வருவாயாக விளங்கியது. மூலப் பொருட்கள், காடுகள், நதிகள் ஆகியவற்றின் மூலமும் நாட்டின் வருவாய் பெறப்பட்டது. அரசனது நிலங்கள் அதிக வருவாய் தரக்கூடியனவாக அமைந்திருந்தன. அவ்வாறு கிடைக்கப் பெற்ற வருவாய் நாட்டின் பல செலவுகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

**பண்ணைகள் :**

தேவைக்கு அதிகமான பொருட்கள் பெரும் பண்ணைகளில் சேமித்து வைக்கப்பட்டன. விவசாயப் பண்ணைகள் வில்லா (Villa) என்றும், மேனார் (Manor) என்றும் அழைக்கப்பட்டன. பண்ணைச் சட்டங்கள் பல சார்லமெனால் வெளியிடப்பட்டன. சீரான கணக்குகள், தீர்க்கமான வரிக் கோட்பாடுகள் ஆகியவற்றால் வேளாண்மைச் சிக்கல்கள் அகற்றப்பட்டன. ஸ்டுவர்ட்டுகள் என்போரின் பொறுப்பில் விடப்பட்டிருந்த வில்லா அல்லது மேனார் என்பன பிற்காலத்திய மனோரயில்முறை (Manorial System) வளர்ச்சிக்கு அடித்தளமாயிருந்தன.

**ராணுவம் :**

தன்னுடைய எல்லை விரிவாக்கம் என்ற கோட்பாட்டினைச் செவ்வனே செயல்படுத்த வலிமைமிக்க ராணுவ அமைப்பினை சார்லமென் கொண்டிருந்தார். ராணுவ சேவை தேசியக் கடமையாகக் கருதப்பட்டது. நாடு முழுவதும் பரவிக்கிடந்த குதிரை தமது பணிகளுக்க ஈடாக நிலங்களைப் பெற்றிருந்தார்கள். படைவீரர்கள் அரசனுக்கக் கட்டுப்பட்டவர்களாய் பிரபுக்களிடமோ, கவுண்ட்களிடமோ பணியாற்றினா் அனுமதியின்றி ராணுவ சேவையினின்றும் நின்று கொண்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ராணுவக் கட்டுப்பாடு, ஒழுங்கு, பயிற்சி ஆகியவற்றுக்கெனத் தனிச் சட்டங்கள் வெளியிடப்பட்டன.

**சட்டங்கள் :**

இயற்றப்பட்ட சட்டங்களுடன் வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியனவும் சட்டங்களாக் கருதப்பட்டன. ரோமானியச் சட்ட முறையே சார்லமெனின் சட்டங்களுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. அரசனின் ஆலோசனைக் குழுவாக விளங்கிய பொதுச் சபையானது அரசு ஆணைகளையும், நாட்டின் சட்டங்களையும் தொகுக்கும் வாய்ப்பினை பெற்றிருந்தது. சட்டங்கள் எவ்விதப் பாகுபாடுகளுமின்றி அனைவருக்கும் பொதுவானவையாகக் கருதப்பட்டன.

வரையறுக்கப்பட்ட சட்டங்களுடன் வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியனவும் சட்டங்களாகக் கருதப்பட்டன. ரோமானியச் சட்ட முறையே சார்லமெனின் சட்டங்களுக்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. அரசனின் ஆலோசனைக் குழுவாக விளங்கிய பொதுச் சபையானது அரச ஆணைகளையும், நாட்டின் சட்டங்களையும் தொகுக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தது. சட்டங்கள் எவ்விதப் பாகுபாடுகளுமின்றி அனைவருக்கும் பொதுவானவையாக கருதப்பட்டன.

வரையறுக்கப்பட்ட சட்டங்கள் கேபிசுலரீஸ் (Capitulaires) எனப்பட்டன. கி.பி 802-ல் கோமன்கள், கவுண்ட்கள், பிரபுக்கள் ஆகியோரடங்கிய சபை கூட்டப்பட்டு சட்டங்களை வரையறுக்க வகை செய்யப்பட்டது. அதனால் எழுதப்பட்ட சடங்குகள் உருவாக்கப்பட்டனவெனலாம். அவர் காலத்தில் மக்கள் உரிமைச் சட்டம், அரசர் ஆணைச் சட்டம், அரசு அலுவலர்கள் பற்றிய சட்டமென மூன்று பகுப்புகள் சட்டத்திலிருந்தன.

**பொதுப்பணிகள் :**

வாணிபம் வளர்க்கப்பட்டது. பாலங்கள், சாலைகள் செப்பனிடப்பட்டன. புதிதாகவும் அமைக்கப்பட்டன. ஆறுகளை இணைக்கும் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டில் சம சீரான அளவைகளும் எடைகளும் கொண்டு வரப்பட்டன. நாணயமுறை சீராக்கப்பட்டது. குறிப்பிட்ட தானியங்களின் ஏற்றுமதி தடுக்கப்பட்டு மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. விலைவாசி உயர்வு தடுக்கப்பட்டது. மக்களின் நலனை நோக்கமாகக் கொண்டு பொதுப்பணிகள் ஆற்றப்பட்டது.

**தல ஆட்சி முறை :**

ஒருமுகப்படுத்தப்பட்டிருந்த மைய ஆட்சியினை நோக்கியனவாகத் தல அரசுகள் இயங்கிவந்தன. நாடு முழுவதும் பல கவுண்டி (County) களாகப் பிரிக்கப்பட்டு கவுண்ட்கள் என்னும் அதிகாரிகளின் பொறுப்பில் விடப்பட்டிருந்தன. திறமையுடையவர்களைக் கவுண்டிகளின் தலைவர்களாக ஆயுள் முழுவதும் செயல்படுமாறு மன்னரே நேரடியாக நியமித்தார். ஆட்சித் துறையுடன் ராணுவ மன்றங்களிலும் அவர்கள் பணியாற்றினர். கண்காணிப்பாளர்கள், நகர அலுவலர்கள், பண்ணை பிரபுக்கள் ஆகியோர் கவுண்ட்களுக்குத் துணை புரிந்தார்கள்.

நமக்குத் துணையாக விஸ்கவுண்ட் என்ற துணைவர்களை கவுண்ட்கள் நியமித்துக் கொண்டார்கள். ஆறு முதல் பத்து வரையுள்ள கவுண்டிகளடங்கிய மாவட்ட அமைப்பும் வழக்கிலிருந்தது. மார்ச்சுகள் எனப்பட்ட எல்லையோர மாவட்டங்கள் டியூக்குகள் அல்லது மார்க்ரேவ் (Margrave) என்ற அதிகாரிகளின் கட்டுப்பாட்டிலிருந்தன. கவுண்டிகளுக்குக் கீழ்ப்பட்டனவாய் ஹன்ட்ரட் (Hundred) என்ற அமைப்புகள் காணப்பட்டன. அவை பிஷப்புகளின் கட்டுப்பாட்டிலிருந்த டயோசிஸ் அமைப்பினை ஒத்தவையாயிருந்தன. விகார்கள் (ஏஉைையசள) என்ற கீழ்நிலை அதிகாரிகள் கவுண்ட்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகச் செயல்பட்டனர்.

கவுண்ட்களின் எதேச்சாதிகாரப் போக்கினை கட்டுப்படுத்தவும், பேரரசரின் தூதுவராகச் செயல்படவும் மிஸிடோமினிச்சி (Missi Dominici) என்ற அதிகாரிகளிருந்தார்கள். அதிக அதிகாரங்களைப் பெற்றிருந்த அவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் சுற்றி வந்து அரசுப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்கள். மிஸிடோமினிச்சி என்ற அதிகாரிகள் கவுண்ட்கள் மற்றும் பிடிப்புகளினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பெரும்பாலும் இரண்டு அதிகாரங்களை உடைய அவர்கள் இணைந்தே செயல்பட்டார்கள். தாங்கள் செல்லும் பகுதிகளில் வாழும் மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைவதற்கான வழிகளை மேற்கொள்ளுவதும் அவர்களது கடமைகளாகும். எனவே மத்திய அரசுக்கும், தல அரசுகளுக்கும் இணைப்புத் தொடர்பாக அவர்கள் செயல்பட்டார்கள். அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அளவில்லா அதிகாரங்கள் வாயிலாக சார்லமென் எவ்வாறு ஆட்சித் துறையில் ஒரு மேம்பட்ட தன்மையைப் பின்பற்றினாரென்பது நன்றாக விளங்கும்.

**கல்வி :**

தீரமிகு போர் வீரராக, ஆற்றல் மிகுந்த ஆட்சியாளராக விளங்கி சார்லமென் அதிகமாகக் கல்வி அறிவு பெற்றிருக்கவில்லை. ஆயினும் தமது ஆட்சிப் பகுதியில் அனைவரும் கல்வி கற்று மேம்பட்டவர்களாக திகழ வேண்டுமென்பதில் அதிக அக்கரை காட்டினார். கல்விமான்கள் இவரால் பெரிதும் போற்றப்பட்டனர். அல்குயின், பால், பீட்டர், தியோடல்பஸ் போன்ற வெளிநாட்டறிஞர்கள் அவரது அவையை அலங்கரித்தனர். இன்கார்டு என்பவர் சார்லமெனுடைய வரலாற்றை எழுதினார். புகழ்மிக்க கலீபாவாகத் திகழ்ந்த ஹருண் அல்ரஷீத் இவரது சமகாலத்தவர். அவரும் சார்லமெனும் நண்பர்களாகத் திகழ்ந்தனர்.

அரண்மனைப் பள்ளிகள் பல உருவாக்கப்பட்டன. மடாலயங்கள் கல்வி நிலையங்களாகச் செயல்படலாயின. அறிவுப் பெருக்கத்திற்கென நூல் நிலையங்கள் பல தோற்றுவிக்கப்பட்டன. அக்ஸான் அரண்மனைப் பள்ளியில் அரசரும் பங்கேற்றார். டூர்ஸ், புல்டா ஆகிய இடங்களிலிருந்த உயர்கல்வி நிலையங்கள் புகழ்மிக்கவனாக விளங்கின. அவை

மடாலயங்களுடன் இணைக்கப்பட்டிருந்தன. கல்வித் துறையில் பேரரசர் காட்டிய ஈடுபாடு காரணமாக உயர்கல்வி, ஆராய்ச்சி, இலக்கியம், தத்துவம் ஆகியன வளர்ச்சியுற்றமையால் சார்லமெனின் காலத்தை கரோலிஞ்சிய மறுமலர்ச்சிக்குக் காலம் என்றழைப்பதில் தவறொன்றுமில்லை.

கல்விச் சட்டம் ஒன்றின் மூலம் கி.பி. 787-லிருந்து மதகுருமார், பிரபுக்கள் ஆகியோர் கல்வி கற்க ஏற்பாடு செய்தார். இலக்கணம், இசை, கணிதம் போன்றவை பிற கல்வியுடன் இணைத்து புகட்டப்பட்டன. மெரோவிஞ்சிய கால எழுத்து முறையை சார்லமென் மாற்றியமைத்து ‘மீனஸ் கியூல்’ என்ற சிறிய எழுத்து முறை ஒன்றினை உருவாக்கினார். ஜேரோமா என்பவர் எழுதிய வல்கேட் என்ற நூலை பழைய மெருகு குலையாமல் மீண்டும் வெளியிட வகை செய்தார்.

லூபாஸ் போன்ற மடாலயத் தலைவர்கள் தமது மடாலயங்களில் நூல் நிலையங்களை உருவாக்கினார்கள். புல்டா மடாலயத் தலைவரான ரபானு மௌரஸ் என்பவர் ஒரு கலைக் களஞ்சியத்தை உருவாக்கினார். பால் என்பவரால் லம்பார்டிய வரலாறு என்னும் நூல் எழுதப்பட்டது. ஜான் என்பவர் தலைசிறந்த தத்துவஞானியாக திகழ்ந்தார். பல தத்துவ போதனைகள் சார்லமென் லத்தீன் மொழிக்கு மாற்றப்பட்டன. இவை கரோலிஞ்சிய மறுமலர்ச்சிக் காலமென சார்லமெனின் காலத்தை அழைப்பது சரியே என்பதற்கு சான்றுகளாக உள்ளன.

**கலைகள் :**

பழங்காலத்திலய கிரேக்க – ரோமானியக் கலைகளையும், அவரது சமகாலத்திய பைசாண்டியக்கலை அமைப்பினையும் போற்றிக் காக்க முற்பட்ட சார்லமென் ஏராளமான மாளிகைகளையும், தேவாலயங்களையும் கட்டித் தமது பெருமையை மேலும் வளர்த்துக் கொண்டார். ராவென்னாவிலிருக்கும் அரண்மனையை முன்மாதிரியாகக் கொண்டு தலைநகரில் ஒரு மாளிகையை நிறுவினார். சலகைக்கற்கள், பளிங்குக்கல் ஆகியவற்றைப் பயன்படுத்தித் தனது மாளிகைகளை அலங்கரித்தார்.

**மதிப்பீடு :**

கி.பி. 722 ஏப்ரல் 2-ஆம் நாள் பிறந்த சார்லமென் கி.பி 814 ஜனவரி 28-ஆம் நாள் நோய்வாய்ப்பட்டு எய்லா ஷேப்பல் அரண்மனையில் மரணமடைந்தார். அவரது உடல், பசிலிகா என்னுமிடத்தில் அடக்கம் செய்யப்பட்டது. உயர்க்கல்வியைப் பெற்றிறாத சார்லஸ் கிரேக்க, லத்தீன் மொழிகளை அறிந்திருந்தார். குட்டையான உருவமும், தடித்த கழுத்தும், வெள்ளை முடியும் அன்பான பார்வையும் கொண்ட சார்லமென் தூய்மையான வாழ்க்கை நெறிகளைப் பின்பற்றினார். ஆற்றல் மிகுந்த போர் வீரரான அவர் வெற்றியாளராகவும் திகழ்ந்தார்.

நல்லாட்சியாளரான சார்லமென உண்மையான கிறித்துவராக விளங்கினார். தமது நாட்டைத் தெய்வீக நாடாக ஆக்கிக் கடவுளின் பிரதிநிதியெனத் தம்மைக் கொண்டிருந்த அவர் கிறிஸ்துவ சமயத்தின் வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினார். இயேசுவின் இரத்தத்தால் அமைக்கப்பட்ட நீண்ட அமைதி கொண்ட அரசினை சார்லஸ் ஆட்சி செய்தார் என்ற அல்குயினி கூற்று அவருடைய பெருமையை எடுத்துக் கூறுவதாக உள்ளது. அவருடைய ஆட்சிக் காலத்தில் தான் தற்காலத்திய ஜெர்மனி, இத்தாலி மற்றும் பிரான்சு போன்ற நாடுகளுக்கு அடிக்கல்கள் நாட்டப்பட்டன என்றால் மிகையாகாது. பிராங்குகளின் பேரரசு அவர் காலத்தில் புகழின் உச்சகட்டத்தைச் சென்றடைந்தது. கரோலிஞ்சிய மறுமலர்ச்சிக் காலம் எனப் போற்றப்பட்டமையும் அவர் காலச் சிறப்பியல்புகளை எடுத்தியம்புகின்றன.

**கரோலிஞ்சியப் பேரரசின் வீழ்ச்சி :**

சார்லமென் மரணத்திற்குப் பின் கரோலிஞ்சியப் பேரரசு அழிவுப் பாதையில் அடியெடுத்து வைத்தது. அவரது ஒரே மகன் முதலாம் லூயி கி.பி. 814 முதல் 839 வரை ஆட்சிப் புரிந்தார். திறமையின்மை, வலிமையின்மை ஆகியன அவரைத் திறம்படச் செயல்படாமல் தடுத்தன. அவருக்குப் பின் அவருடைய மைந்தர்களான லோதேர், லூயி, பெப்பின், சார்லஸ் போன்றோர் பேரரசினைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்டனர். அதுவும் மூன்றாண்டுகள் அவர்களுக்கிடையில் நடைபெற்ற வாரீசுரமைப் போருக்குப் பின் கி.பி. 843-ல் ஏற்பட்ட வெர்டுன் உடன்படிக்கைக்குப் பின்னரே நடைபெற்றது.

கி.பி. 838-லேயே பெப்பின் மரணமடைந்துவிட்டமையால் லோதேர் வட இத்தாலி, சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், ஹாலந்து ஆகிய பகுதிகளையும் லூயி கிழக்கு பிராங்கு ஆட்சி பகுதிகளையும், சார்லஸ் மேற்கு பிராங்கு நாடான பிரான்சையும் பெற்றார்கள். அத்ன பின்பும் பல பிளவுகள் ஏற்பட்டன. கி.பி. 855-ல் லோதேர் மரணமடைந்ததும் அவருடைய ஆட்சிப் பகுதியையும் இரண்டாம் லூயி, சார்லஸ், இரண்டாம் லோதேர் ஆகிய மூன்று மக்களும் தமக்குள் பங்கிட்டுக் கொண்டார்கள்.

கி.பி. 869-ல் இரண்டாம் லோதேர் காலமானதும் மற்றொரு பிரிவினை ஏற்பட்டு கி.பி. 870-ல் ஏற்பட்ட மெர்சன் உடன்படிக்கையின் படி ஒப்புக் கொள்ளப்பட்ட. பின்னர் கி.பி. 876-ல் லுட்விக் மரணமடைந்த பின் அவரது மக்கள் மூவரும் தமக்குள் மீண்டும் ஒரு பிரிவினையைச் செய்து கொண்டனர். கி.பி 882-ல் பிராங்கியப் பேரரசின் கிழக்குப் பகுதியில் பருத்த சார்லஸ் (Charles, the fat) என்பவர் கையிலும், மேற்குப்பகுதி பகுழி வளுக்கை சார்லஸ் (Charlie – the bald ) என்பவர் கையிலும் இருந்தன.

அவர்களுக்கிடையிலான போட்டிகள் மற்றும் திறமையின்மை காரணமாக கி.பி. 888-ல் கவுண்ட் ஓடோ என்பவரை மக்கள் அரசராகத் தேர்ந்தெடுத்தார்கள். கி.பி. 898-ல் அவர் மரணமடைந்ததும் எளிய சார்லஸ் (Charles, the Simple) என்பவர் ஆட்சிப் பொறுப்பேற்றார்.

பின்னர் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலத்திற்கு பிரெஞ்சு பிரபுக்களுக்கும் கரோலிஞ்சிய ஆட்சியாளர்களுக்குமிடையே ஆட்சியுரிமைப் போராட்டம் நிகழ்ந்தது. இறுதியாக கி.பி. 987-ல் பாரீஸ் நகர கவுணட் ஹியூஜ்காபெட் மன்னரான போது கரோலிஞ்சிய ஆட்சி முடிவிற்கு வந்தது.

**கரோலிஞ்சியப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் :**

1. மகாசார்லசுக்குப் பின் திறமை, தகுதி வலிமை ஆகியவை கொண்ட சிறப்பியல்புகளுடைய ஆட்சியாளர்கள் தோன்றவில்லை. பருத்த , எளிய, வழுக்கை போன்ற அடைமொழிகளைக் கொண்ட அரசர்களின் பெயர்கள் மூலம் ஆட்சியாளர்களின் தன்மைமைய நாம் நன்குணர்ந்து கொள்ளலாம்.

2. பிராங்குகளின் வழக்கப்படி அரசரின் பிள்ளைகள் அனைவரும் ஆட்சியுரிமை பெறத் தகுதியுடையவர்களே ஆவார். ஆனால் ஏற்கெனவே நாம் கண்டது போல் பேரரசு பலமுறைகள் பிரித்துக் கொள்ளப்பட்டுச் சிதறுண்டு வலிமையற்று போயிற்று.

3. பிளவுப்பட்ட ஆட்சிப் பகுதிகளை மேற்கொண்ட சகோதரர்களுக்கிடையில் ஒற்றுமையுணர்வு காணப்படவில்லை. அவர்களுக்கிடையிலான போட்டிகளும், போர்களும் பேரரசை வலுவிழக்கச் செய்தன. அத்துடன் பேரரசுப் பகுதிகளிலும் அமைதியின்மையோடு உட்பூசல்களும் மேலோங்கிக் காணப்பட்ட போது பேரரசினை வலிமைபடுத்துவதற்கான எவ்விதமான முயற்சிகளும் மகாசார்லசுக்குப்பின் மேற்கொள்ளப்படவில்லை.

4. திறமையற்ற ஆட்சியாளர்கள் காலத்தில் வடக்கிலிருந்து வைக்கிங் என்ற நார்மானியரின் தொடர் படையெடுப்புகள், கிழக்கிலிருந்து மாகியர் என்ற ஹங்கேரியப் பிரிவினர் படையெடுப்புகள், கிழக்கிலிருந்து சாரசன்கள் என்ற முகமதியர் படையெடுப்புகள் ஆகியன ஏற்கனவே புண்பட்டுப் போயிருந்த பிராங்கியப் பேரரசில் புரையோடச் செய்து அழிவிற்கு வழி வகுத்தன.

5. திறமைமிக்க ஆட்சியாளரான சார்லமெனுக்குப் பின் பேரரசின் வலிமைமிக்க அமைப்பான நடுவணரசு பலங்குன்றியது. பிரபுக்கள் கோமன்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆகிய பிரிவினர் தமது மேலாண்மையை நிலைநாட்டும் பொருட்டுத் தமக்குள் சண்டையிட்டு அரசியல் நெருக்கடிகளை உருவாக்கினார்கள்.

6. நிலமானிய முறைப்படி எழுந்த பிரபுக்கள வலிமைமிக்கவர்களாயிருந்தனர். செல்வச்செழிப்பு, வலிமைமிக்க படையமைப்பு ஏராளமான போர்க்கருவிகள் ஆகியவற்றைப் பெற்றிருந்த அவர்கள் தாமே அரசுக்குத் தீராத தலைவலியாக விளங்கியதுடன் மன்னருக்குத் தேவையான காலங்களில் எவ்விதமான உதவியையும்

தராமல் அவர்களுடைய அழிவுக்குக் காரணமானார்கள். அதே நேரத்தில் நெருக்கடிக் காலங்களில் அவர்களையே முற்றிலும் நம்பியிருந்த ஆட்சியாளர்கள் ஏமாற்றத்திற்குள்ளாக்கப்பட்டு அழிவிற்கு ஆளானார்கள்.

7. பிரான்சிசல் ஹியூஜ்காபெட் என்பவர் தனது வலிமை மூலம் ஆட்சியாளரான போது ஜெர்மனியில் பிரபுக்கள் தாமே கன்ராடு என்பவரை அரசராகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களுடைய வருகை கரோலிஞ்சிய ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

8. ஜெர்மானியர், பிரெஞ்சுக்காரர், இத்தாலியர் ஆகிய தனிப்பட்ட நாடுகளின் மக்கள் திறமையற்ற, வலிமைக்குன்றிய கரோலிஞ்சியரைத் தமது ஆட்சியாளர்களாக ஏற்க விரும்பவில்லை.

9. சமய அடிப்படையில் போப்பாண்டவர்கள் தம்மை வலுப்படுத்திக் கொண்டு மக்களிடையே சமயச் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர். எனவே மக்கள் சமயக் கடமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அரசியிலில் நாட்டங் கொள்ள விரும்பவில்லை.

மேற்கூறப்பட்ட பல காரணங்களால் ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகள் காலத்திற்குச் செயல்பட்ட பிராங்குகளின் ஆட்சியானது பல ஏற்றத் தாழ்வுகள், ஆட்சியாளர்களின் பெரும் புகழுடன் அமைதியின்மை, தனித் தன்மையோடு ஒருமைப்பாடின்மை போன்ற பல நிலைமைகளைக் கண்ட பின் முழுவதுமாக அழிவுற்றது.

**கரோலிஞ்சிய மறுமலர்ச்சி**

வலிமையோடு செழுமைமிக்க பேரரசு ஒன்று தோற்றுவிக்கப்பட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் போது கல்வி கேள்விகளுடன் கலையுணர்வு வளர்ச்சியுறுவது இயல்பே. கரோலிஞ்சியப் பேரரசு மகாசார்லஸ் எனப்பட்ட சார்லமென் காலத்தில் புகழேணியின் உச்சியினை அடைந்த போது மேற்கூறப்பட்ட தன்மைகள் பிராங்குகளின் பேராட்சிப் பகுதியிலும் காணப்பட்டன. அத்தகைய மாற்றங்களை மறுமலரச்சி எனக் கூறலாம். அம்மறுமலர்ச்சியானது கரோலிஞ்சிய ஆட்சிக் காலத்தில் குறிப்பாக சார்லமென் காலந்தொட்டு கல்வித் துறையில் ஏற்பட்ட ஒரு விழிப்புணர்வு என்னும்படியாயிருந்தது. அக்கல்வி வளர்ச்சியானது இடைக்காலத்தில் மேற்கு ஐரோப்பாவில் மறுமலர்ச்சிக்கான தூண்டுதலாக அமைந்திருந்தது.

**கல்வி :**

கி.பி. 476-ல் நிகழ்ந்த வரலாற்று முக்கிய நிகழ்ச்சியான ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் மேற்கு ஐரோப்பாவில் அறிவு ஒளி மங்கியே காணப்பட்டது. சிற்சில மடாலயங்கள் மட்டுமே அறிவினை ஊட்டும் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்தன. பெரும்பான்மையான

மக்களிடையே எழுத்தறிவின்மை, அறியாமை, மூடநம்பிக்கை மீது ஆழ்ந்த பற்றுதல் ஆகியன பரவிக்கிடந்தன. வாழ்க்கை வறண்டதொன்றாய் அறிவுத் தெளிவின்றி பாலையெனக் காட்சியளித்தது. அத்தகைய அவல நிலையிலிருந்து தமது மக்களை மீட்டு அறிவொளி பரப்பி அவர்களது வாழ்க்கையுடன் ஐரோப்பாவில் தமது கட்டுப்பாடிலிருந்த பகுதிகள் அனைத்திலும் ஒரு புத்துணர்வையும், மறுமலர்ச்சியையும் ஊட்டிய பெருமை சார்லமெனச் சாரும்.

கல்வியறிவின்றி காரிருளில் உழன்று கொண்டிருந்த மக்களின் அறிவுத் துறையில் விழிப்புணர்வினை தோற்றுவித்த இம்மாற்றத்தினை பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சியுடன் ஒப்பிட முடியாது. ஏனெனில் இவ்விரு மறுமலர்ச்சிக் கோட்பாடுகளும் கொள்கையிலும் செயல்களிலும் பெருத்த மாறுபாடுடையவை. தனியொரு பேரரசின் தனித்த ஆற்றலால் கரோலிஞ்சியப் பேரரசில் உருவான மறுமலர்ச்சியானது கல்வித் துறையில் உருவாக்கப்பட்டது.

கல்வி வளர்ச்சியைப் பெருக்க சமயத் துறையை அவர் அடிப்படையாகக் கொண்டார். சமய வளர்ச்சிக்குக் கல்வியறிவு துணையாக நிற்க வேண்டுமெனக் கருதிய அவர் சமயப் பணியாளர்களின் கடமை கல்வியறிவைப் பெருக்கிக் கொள்ளுதல் என்பதை வற்புறுத்தினார். மடாலயங்கள் கல்விக் கூடங்களாகச் செயல்பட வகை செய்தார். அதனால் சமயத்திற்கு முக்கியத்துவம் அளித்த மக்கள் தமது அறிவாற்றலைப் பெருக்கிக் கொள்ள முற்பட்டார்கள். நாடு முழுவதிலுமுள்ள மடாலயங்கள், தேவாலயங்கள் ஆகியவை கல்வி புகட்டும் அறிவுக் கூடங்களாக மாறின.

தமது அதிகாரிகளிடையே காணப்பட்ட ஏற்றத் தாழ்வுகள் நீங்கி சமஅளவில் கல்வி பெற வசதிகள் பெருக்கப்பட்டன. செல்வந்தர்களது குழந்தைகளின் கல்வியில் அதிக ஈடுபாடு காட்டப்பட்டது. வீண்பகட்டு ஆரவாரம் மக்களைக் கெடுத்து பிற்காலத்தில் நல்ல குடிமக்களை உருவாக்குவதில்லை என்பதை அவர்களுக்கு உணர்த்தி பொறுப்புணர்வுடன் கல்வி பயிலத்தக்கவர்களாகப் பிரபுக்கள் பிள்ளைகளை மாற்றினார். ஆகென் அரண்மனையில் பள்ளியொன்றைத் தொடங்கி அதனைக் கல்வி ஆலயங்களின் முன் மாதிரியாகத் திகழுமாறு செய்தார்.

தமது அரசவை கூட்டங்களிலும் கல்வி வளர்ச்சிக்கான கூறுகள் பற்றி விவாதித்துத் திட்டமிட்டு முடிவெடுத்தார். அரண்மனைப் பள்ளியில் வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட கற்றறிந்த அறிஞர்கள் பயன்படுத்தப்பட்டு கல்வியில் முன்னேற்றம் ஏற்பட வழிவகுத்தார். பீட்டர், பால் போன்ற இத்தாலியர்கள், தியோடல்ப், அகோபார்டு போன்ற ஸ்பானியர்கள், அல்குயின் என்ற இங்கிலாந்து நாட்டவர் ஆகியோர் அவருடைய கல்விப்பணி சிறக்க உறுதுணையாக இருந்தனர்.

மடாலயங்களில் காணப்பட்ட நூல் நிலையங்களுடன் புதிய நூலகங்களும் ஏற்படுத்தப்பட்டு கல்வித்துறையில் மாற்றத்தினை ஏற்படுத்த வகை செய்யப்பட்டது. இலக்கணம், தத்துவம், கணிதம், இசை, வானவியல் போன்றவை உயர் கல்வித் துறைகளாகக் கருதப்பட்டன. லத்தீன் பெமாழி போற்றப்பட்டு ஏற்றமுற வழிகள் மேற்கொள்ளப்பட்டன. பல துறைகளிலும் வல்லவராகவும், அரண்மனைப் பள்ளியின் தலைவராகவும் திகழ்ந்த அல்குயின் என்பவர் சார்லமெனுக்கு உற்ற துணைவராக திகழ்ந்து அவருடைய கல்விப் பணி சிறக்க அரும்பாடுபட்டார்.

டூர்ஸ், ரீம்ஸ், கார்வே ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்ட கல்விக் கூடங்கள் உன்னதமானவை. தாய்மொழிக் கல்விக்கு அதிக அளவு தரப்பட்டது. ஜெர்மானிய மொழி வளர்ச்சி பெறக்கூடிய வகையில் அம்மொழியில் பல நூல்கள் எழுதப்பட்டன. பழைய நூல்கள் அழிந்துபடாமல் காப்பதற்கான வசதிகள் பெருக்கப்பட்டன. பல நூல்கள் மறு பிரதிகள் எடுக்கப்பட்டுக் காக்கப்பட்டன.

அரண்மனைப் பள்ளியில் பணியாற்றி ஜான் எரிஜெனா (Jihn Erigena) என்ற அயர்லாந்து நாட்டவர் தமது கிரேக்க அறிவுதனைப் பல நூல்கள் எழுதவும், லத்தீன் மொழிக்கு மொழி பெயர்க்கவும் பயன்படுத்தினார். சுருங்கக் கூறினால் ஜெர்மன், கிரேக்க, லத்தீன் மொழிகள் பெரிதும் வளர்ச்சியுறலாயின. அத்துடன் பேச்சு வழக்கில் பிரெஞ்சு மொழி உருவாக்கப்பட்டு எழுத்துக்கள் சீர்திருத்தப்பட்டன.

கல்வித் துறையில் சார்லமென் காட்டிய பேரார்வம் அவருடைய சம காலத்தவறான புகழ்மிக்க கலீபா ஹருன் அல் ரஷீத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்தது. வரலாறு, வானியல், இலக்கணம், மொழி வளர்ச்சி, கணிதம் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்ட போதிலும் சமய அடிப்படைக் கல்வியே மிகுந்த ஆதரவைப் பெற்றது. மடாலயங்களின் பங்கு அதிகமாகக் காணப்பட்டதால் அந்நிலை ஏற்பட்டிருக்கலாமென்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. ஜெராம் என்பவரால் கிறித்தவ வேதாகமம் புதிதாகப் பதிப்பிக்கப்பட்டதை இதற்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம்.

மேலும் பிராங்கோனியாவிலிருந்த புல்டா, சாக்ஸனியிலிருந்த கார்வீ மற்றும் ரெய்ஸினாவ், லீஜ், லியான்ஸ் ஆகிய இடங்களில் இருந்த மடாலயங்கள் அறிவாலயங்களையும், பண்பாட்டுக் கேந்திரங்களாகவும் திகழ்ந்தன. அவை அறிவாற்றலைப் பெருக்கியதோடு மக்களிடம் காணப்பட்ட மூட நம்பிக்கைகளைக் களைந்து பழமைக் கோட்பாடுகளிலிருந்து விடுபடவும் வழிகோலின. சார்லமெனுக்குப் பின்னும் இத்தகைய அருஞ்செய்கைகள் தொடர்ந்து நடைபெற்றதால் ரீம்ஸ், ஆர்லியன்ஸ், மெட்ஸ் போன்ற இடங்களும் ஐரோப்பியக் கல்வியாளர்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய கல்விக் கேந்திரங்களாக மிளிர்ந்தன.

**இசைக்கலை :**

கரோலிஞ்சிய மறுமலர்ச்சிக் காலத்தில் கல்வித்துறையுடன் கலைத் துறையும் ஏற்றம் பெற்றது. சமயத்துறையில் எழுந்த ஈடுபாடு. ஆர்வம் காரணமாக இசைக்கலை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தேவாலயங்கள் அனைத்திலும் ஒரே சீரான இசை பாடப்பட வேண்டுமென்பதற்காக ரோமானியத் திருச்சபையில் தேவலாயப்பாட்களைப் பாடும் முறை பின்பற்றப்பட வகை செய்தார். கிழக்கிந்திய இசையுடன் கிரேக்க ரோமானிய இசைக் கலையும் இணைந்த ஒரு அமைப்பு என்னும் படி இசைக்லை வளர்ச்சியுற்றது. ஹக்பால்டு என்னும் துறவியினால் உருவாக்கப்பட்ட இசை அமைப்பு முறை பின்பற்றப்பட்டது. மெட்ஸ், சாய்சன்ஸ் ஆகிய இடங்களில் இசைப் பள்ளிகள் தோற்றுவிக்கப்பட்டு இசைக்கலை பரவ வழிகள் வகுக்கப்பட்டன.

**கட்டிடக்கலை :**

கிரேக்க ரோமானியப் பாணியைப் பின்பற்றி கட்டிடக்கலை வளர்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது. பைசாண்டிய அமைப்பு முறையும் கட்டிட கலையின் அடிப்படையாக கருதப்பட்டது. தலைநகரான ஆகென்னில் கட்டப்பட்ட அவருடைய மாளிகையும், ஆலயமும் அவரது கட்டிடக்கலை உணர்வை பிரதிபலிக்கின்றன. நீம்விஜியின், இன்ஜெல்ஹீம் ஆகிய இடங்களில் உள்ள மாளிகைகள் சார்லமென்னின் கட்டிடக் கலைக்கு இன்றும் சான்றாக உள்ளன. தேவாலயங்களை அழகுப்படுத்த வேண்டிய அவசியம் கரோலிஞ்சியன்களுக்கு இருந்தது. பைசாண்டியத் தேவாலயங்களைப் பின்பற்றி கரோலிஞ்சியர் தமது தேவாலயங்களை அமைத்தனர். பளிங்கு வேலைப்பாடுகள், கடைந்தெடுக்கப்பட்ட தந்தத்திலான வேலைகள், ரோமனிய வில்லாக்களின் அமைப்பு ஆகியவை கரோலிஞ்சியர் கட்டிடங்களுக்கு ஆதரவாக இருந்தன.

தேவாலயங்களின் சுவர்களில் ஏசுவின் வாழ்க்கை வரலாறு நிகழ்ச்சிகள் போதனைகளடங்கிய நீதிக்கதை நிகழ்ச்சிகள் ஆகியவை சித்திரங்களாகத் தீட்டப்பட்ட சலவைக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் இக்கலை பரவியது. வேலைப்பாடு அமைந்த கண்ணாடிப் பொருட்கள், துல்லியமான வேலைப்பாடுகளுடன் கூடிய சிறு கடவுள் உருவங்கள் ஆகியன கரோலிஞ்சியரின் கலைப் பண்புகளாத் திழ்ந்த போது சிற்பக்கலைக்கு அவர்கள் முக்கியத்துவம் அளிக்கவில்லை. செல்வச் செழிப்பின்மை, தேவையான வேலைப்பாடுடைய கலைஞர்கள் இல்லாமை ஆகியன கரோலிஞ்சியர்களின் கலை வளர்ச்சிக்கு இடையூறாகத் திகழ்ந்தன என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

## இஸ்லாமிய சமயம் பரவுதல்

## (The Spread of Islam)

இஸ்லாமிய சமயம் உலகில் உள்ள பெரிய சமயங்களில் ஒன்றாகும். இச்சமயம் இன்றைய உலக மக்களில் மூன்றில் ஒரு பகுதியினால் பின்பற்றப்படுகிறது. சுமார் நூறுகோடி

இஸ்லாமியரகள் உலகம் எங்கும் பரவி வாழ்கின்றனர். இஸ்லாம் என்பது ஆதி மனிதர் ஆதாம் வழி இறைவன் உலகிற்கு வழங்கிய அறநெறியே ஆகும் என்று முஸ்லீம் மக்கள் கருதுகின்றனர். இஸ்லாம் என்ற சொல்லுக்கு சாந்தம், அமைதி, அடைக்கலம் புகுதல், சான்றாண்மை என்ற பொருள்களும் உண்டு. இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் இஸ்லாமியர் என்று சொல்லப்படுகின்றனர். இஸ்லாம் சமயத்தைப் போதித்தவர் முகமது நபி ஆவார். ஒருவகுப்பார்க்கு மட்டும் பொருத்தமான ஒழுக்கத்தைக் காணாது உலக சமயத்துக்கான ஒழுக்க முறைகளை இஸ்லாமிய சமயத்தில் காணலாம். மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வு இல்லையென்று இஸ்லாம் வற்புறுத்தியது. ஆண்டவன் திருவடி முன் அரசனுக்கும் அடிமைக்கும் சமத்துவம் கண்டது இஸ்லாம்.

பொதுவாக ஒரு சமயத்திற்கு அச்சமயத்தைத் தோற்றுவித்தவர்களின் பெயரைச் சூட்டுவது மரபு புத்தரால் தோற்றுவிக்கப்பட்டது புத்த சமயம். இயேசு கிறிஸ்துவால் தோற்றுவிக்கப்பட்டது கிறிஸ்தவ மதம். ஆனால் முகமது நபியால் போதிக்கப்பட்ட சமயம் அவரது பெயரால் வழங்கப்படாமல் இஸ்லாம் என்று சொல்லப்படுகிறது குறிப்பிடத்தக்கது ஆகும்.

**முகமது நபி (கி.பி. 571 – 632) :**

இறைவன் உலகிற்கு வழங்கிய அறநெறியானது நோவா, ஆபிரகாம், மோசே, இயேசு போன்ற ஆயிரக்கணக்கான இறை தூதர்களா் அவரவர் காலங்களுக்கு ஏற்ற வகையில் போதிக்கப்பட்டு வந்தது. இறைதூதர் வரிசையில் இறுதியாக தோன்றிய முகமது நபி அறநெறியை எல்லாக் காலங்களுக்கும் ஏற்ற நிலையுடைய நெறியாக நிலை நாட்டினார்.

முகம்மது (ஸல்) அரபு நாட்டில் மக்கா நகரில் குறைஷியர் குலத்தில், ஹாஷிம் என்ற கிளையில் தோன்றினார். இவர் கி.பி. 571-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி திங்கட்கிழமை அதிகாலையில் பிறந்தார். இவரது தந்தையார் அப்துல்லா, தாயார் ஆமீனா (Abdullah, Aminah) என்பவர் ஆவர். முகமது பிறப்பதற்கு முன்னரே அவரது தந்தை காலமாகிவிட்டார். தாயார் ஆமினாநபி பிறந்த ஆறு ஆண்டுகளில் காலமானார். எனவே இவர் தனது பாட்டனார் அப்துல் முத்தலிப் என்பவரால் வளர்க்கப்பட்டார். இவரும் இறந்து விடவே பின்னர் பெரியப்பா அபூகாலிப் என்பவர் பராமரிப்பில் வளரலானார்.

**இளமைக்காலம் :**

முகம்மது முறைப்படி கல்வி பயிலவில்லை என்றாலும் சிறுவயது முதலே சீரிய பல நல்லொழுக்கங்களும், நற்குணங்களும் அமையப் பெற்றவராக வளர்ந்து வந்தார். தனது பெரியப்பாவின் ஆடுகளை மேய்த்து வந்தார். பின்ர் சிறிது சிறிதாக அவரது வாணிபத்திலும் உதவி புரியலானார். தனது 12வது வயதில் பெரியப்பாவுடன் சிரியா செல்லும் வாய்ப்பைப் பெற்று வாணிபத் தொழிலை அறிந்து கொண்டார். முகம்மது பொய்யே சொன்னதில்லை.

எல்லோருக்கும் நம்பிக்கைக்குரியவராகத் திகழ்ந்தார். அதனால் இவர் அஸ்ஸாதிக் (உண்மையாளர்). அல் அமீன் (நம்பிக்கையாளர்) என்று சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டார். பிறர் நலனுக்காகவே பாடுபட்டார். அப்போது குறைஷி குலத்தாரிடம் காணப்பட்ட கலகங்களை எண்ணி வருந்தினார். அவர்களிடம் அமைதியை ஏற்படுத்த ஹிஸ்புல்.ஃபுஸீல், என்ற சங்கத்தை நிறுவினார். இதன் மூலம் கலகங்களைத் தவிர்த்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும் செய்து வந்தார்.

**திருமணம் :**

முகம்மதுவின் வாணிகத் திறமையும், உண்மைப் பொறுப்பையும், களங்கமற்ற தன்மையும் கண்ட கதிஜா என்ற பெரிய பணக்கார சீமாட்டடி தனது வெளிநாட்டு வாணிபத்தை நிர்வாகம் செய்ய முகம்மதுவை நியமித்தார். இவர் கணவரை இழந்தவர், வயது 40. ஆனால் முகம்மதுவுக்கு அப்போது வயது 23 தான். தனது வாணிபத்தைத் திறம்படவும் நேர்மையாகவும் நடத்திய முகம்மதுவையே மணந்து கொள்ள விரும்பினார் கதிஜா. இருவரும் திருமணம் செய்து கொண்டனர். பலதார மணம புரிவதைப் பெருமையாகக் கொண்டவர்கள் அன்றைய அரபு மக்கள். ஆனால் முகம்மது கதிஜா தம்பதியினர் இருபத்தைந்து வருடங்கள் இல்லறத்தை இனிதே நடத்தினர். இந்த இல்லறத்தின் பயனாக ஆறு பிள்கைள் பிறந்தனர். அதில் பாத்திமா என்பவரை தவிர ஐந்து பேரும் முகம்மது இறப்பதற்கு முன்னரே இறந்து விட்டனர்.

**முகம்மது நபி ஆதல் :**

இந்த திருமணத்தால் வாழ்க்கை வசதியும் சிந்திக்க ஓய்வும் பெற்றார் முகம்மது. தனது துணைவியாரின் செல்வத்தை அறநெறியிலும் சமூக சேவையிலும் செலவிட ஆரம்பித்தார். தம்மைச் சூழ்ந்துள்ள மக்கள் பகுத்தறிவிழந்து தீமைகள் புரிவதைக் கண்டு மனம் வெதும்பினார். நாம் யார்? இத்தகைய சிந்தனைகளிலேயே தோய்ந்தார் முகம்மது. இவ்வாறு 15 ஆண்டுகள் சிந்திக்க முகம்மது தனது 40-ம் வயதில் ரமலாம் மாதத்தில் மெக்காவை அடுத்துள்ள ஹீரா என்ற குகையில் தன்னந்தனியாக உணவை மறந்து, உறக்கத்தை துறந்து ஆண்டவனைப் பற்றிய தியானத்தில் ஆழ்ந்தார்.

அந்த மாதத்தில் 27-வது இரவில் தேவ தூதர் கேப்ரியேல் (புயடிசநைட) இவர் முன் தோன்றி இறைவசனங்களை ஓதி காட்டினார். முகம்மதுவைக் கட்டிப் பிடித்து 'மகாகண்ணியம் வாய்ந்த இப்பிரபஞ்ச கர்த்தாவின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக' என்று ஆணையிட்டார். ஓரெழுத்தும் படித்திராத முகம்மதுவுக்கு இறைவனின் கருணை உண்டென்று பொருள்படும்படியாக ஐந்து வாக்கியங்களை உச்சரித்துவிட்டு கேப்ரியேல் மறைந்துவிட்டது. இறைவனின் அருளைப் பெற்ற முகம்மது நபியானார்.

முகம்மது நபி ஹீரா குகையில் தனக்கு ஏற்பட்ட புதுமையான அனுபவத்தை தனது துணைவியாரிடம் கூறினார். அதைக் கேட்டவுடனேயே அவரது மனைவி கதிஜா அவரை இறைதூதராக ஏற்று அவர் நெறியைப் பின்பற்றும் முதல் முஸ்லீமாக மாறினார். அவரைத் தொடர்ந்து வளர்ப்பு மகன் அலி (Ali) அடிமையான செய்யது, நண்பர் அபுபக்கர் போன்றோர் இஸ்லாமை ஏற்றுக் கொண்டனர். ஆனால் நபிகள் தனது கொள்கையை வெளிப்படையாக போதிக்க முன்வரவில்லை.

**இஸ்லாமிய கொள்கைகளை நபிகள் நாயகம் பரப்புதல் :**

நபிபட்டம் பெற்ற நான்காம் ஆண்டில் முகம்மது தனது கொள்கையை யாவருக்கும் அறிவிக்கும்படி இறைவனின் ஆணைவரவே இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார். சில குடும்பங்கள் புதிய சமயத்தைப் பின்பற்றின. நபியின் புதுக் கொள்கைகளையும், புது நெறியையும், புது வணக்க முறைகளையும் பொறுக்கமாட்டாத குறைஷியர் கொதித்தனர். இஸ்லாம் சமயத்தை ஏற்றோர் கடுந்தொல்லைக்குட்பட்டனர். ஆயினும் தங்கள் சமயத்தை அவர்க் கையிடவில்லை.

முகம்மது நபிக்கு இப்பொழுது அடிக்கடி இறைவனிடமிருந்து கட்டளைகளும் திருவாக்கியங்களும் வந்து கொண்டேயிருந்தன. நபி தனது போதனையை விட்டுவிட வேண்டும் என்றும் அதற்காக பொன்னும், பொருளும் அரச பதவியும் தருவதாக ஆசை காட்டப்பட்டது. ஆனால் நபிகள் நாயகமோ ஒரு கையில் சூரியனும் மறுகையில் சந்திரனும் தந்தாலும் தமது கொள்கைகளை விட மாட்டேன் என்று மறுத்துவிட்டார். இதற்கிடையில் நபிகள் சிற்றப்பா ஹம்சா என்பவரும், குறைஷியர்களின் தலைவர்களில் ஒருவரான உமர் என்பவரும் இஸ்லாமியத்தை ஏற்றனர். இஸ்லாமிய இயக்கம் வலுப்படத் தொடங்கியது. இதனால் ஆத்திரம் அடைந்தனர் குறைஷியர், நபிகள் நாயகம் பக்கத்து ஊரான தாயபவுக்கு சென்று தம் கொள்கைகளை விளக்க முற்பட்டார். ஆனால் நபிகளோ கல்லால் அடித்த மக்களை நல்வழிப்படுத்த இறைவனை இறைஞ்சியவாறு குருதிவடியும் கால்களுடன் மக்காவுக்கு திரும்பினார்.

மக்கா திரும்பிய நபிகளுக்கு ஆறுதல் கூற அன்பு மனைவி உயிருடன் இல்லாததை உணர்ந்த அபுபக்கர் தனது இளைய மகன் ஆயிஷா என்பவரை நபிக்கு மணமுடித்து கொடுத்தார். ஆயிஷா இஸ்லாமை ஏற்றுக் கொண்டவராதலால் நபிகள நாயகம் அவரை மணந்து கொண்டார். இக்காலத்தில் ஓரிரவில் இறைவனுடைய அற்புதங்களை காண்பதற்காக மக்காவிலிருந்து ஜெருசலேம் நகரில் இருக்கும் மஸ்தில் அக்ஸாவிற்கு தேவதூதன் கேப்ரியலோடு சென்றார். அங்கிருந்து விண்ணகம் ஏறி இறை சந்நிதானம் அடைந்து இறைவனைக் கண்டு திரும்பினார். இந்த அற்புத நிகழ்ச்சி மி∴ராஜ் எனப்படுகிறது. அதன் பயனாகவே முஸ்லீம்களுக்கு ஐந்து நேரத் தொழுகை விதியாக்கப்பட்டது.

**ஹிஜிரா : Hijira**

நபிகள் நாயகம் மக்காவுக்கு ஆண்டுதோறும் வரும் பயணிகளுக்கு இஸ்லாமியத்தை எடுத்துக் கூறினார். அதன் பயனாக யாத்ரீப் என்று நகரில் பல பேர் அகபா என்ற இடத்தில் நபிகளை சந்தித்து உறுதி மொழிகள் எடுத்து இஸ்லாமியத்தை ஏற்றுக் கொண்டனர். இதற்கு இஸ்லாமிய வரலாற்றில் இஸ்லாமியத்தை ஏற்றுக் கொண்டனர். இதற்கு இஸ்லாமிய வரலாற்றில் அகபா உடன்பாடுகள் என்று பெயர். அகபா உடன்பாடுகள் செய்தோர் நபிகள் நாயகத்தை தங்கள் ஊரில் வந்து குடியேறும் படி கேட்டுக் கொண்டனர்.

வடக்கே 300 மைல் தொலைவிலுள்ள யாத்ரிப் நகருக்கு நபிகள் செல்லவிருக்கும் செய்தியைக் கேள்விப்பட்ட எதிரிகள் அபுஹைல் என்பவரின் தலைமையில் நபிகளை கொல்ல திட்டமிட்டனர். அதை அறிந்த நபிகள் நாயகம் அபுபக்கருடன் பகைவர் பார்வையில் படாமல் வெளியேறி சற்று தொலைவிலுள்ள தொளர் என்ற குகையில் மூன்று நாட்கள் தங்கியிருந்தனர். நான்காம் நாள் யாத்ரீப் நகர் நோக்கி பயணமானார் நபி. இதற்கு இஸ்லாமிய வரலாற்றல் ஹிஜ்ரத் (துறந்து செல்லுதல்) எனப்படுகிறது. இதிலிருந்து தான் அதாவது கி.பி 622, செப்டம்பர் முதல் முஸ்லீம்களின் ஹிஜிரி ஆண்டு தொடங்குகிறது.

முகம்மது நபி யாத்ரீப் போய்ச் சேர்ந்ததும் அங்கு மக்களால் அன்புடன் வரவேற்கப்பட்டார். நபிகளின் வருகையால் யாத்ரீப் என்ற பெயருடைய அந்த நகர் மதினத்துன்னபி (நபிகள் நகரம்) என்ற பெயரைப் பெற்றது. பின்னர் அதுவே மதினா என்று அழைக்கப்படலானது. மதினா நகரில் நபிகள் அங்கிருந்த பல பிரிவு மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தினார். முஸ்லீம்களை சகோதரர்களாகப் பிணைந்தார். ஒரு இஸ்லாமிய சமுதாயத்தை உருவாக்கினார்.

**இஸ்லாமிய சமயத்தின் வெற்றிகள்** :

இஸ்லாமிய சமுதாயத்தின் வளர்ச்சியைப் பொறுத்து கொள்ள முடியாத பக்கத்து குறைஷியர் அதனைச் சீரழிப்பதற்குத் திட்டம் தீட்டினார். அதற்கு உதவி செய்ய அபுகய்யான் என்பவர் சிரியாவிலிருந்து பெரும்பொருள் திரட்டி வந்தார். அதனை வழிமறிப்பதற்கு நபிகள் ஆயத்தம் செய்தார். இதனால் குறைஷியர் அபுஹஜல் தலைமையில் மதினா மீது பாய்ந்தனர். ஆனால் முகம்மது 313 முஸ்லீம்களுடன் குறைஷியர்களின் படையை பதர் என்ற இடத்தில் போரிட்டு இணையற்ற வெற்றியைப் பெற்றார். புறமுதுகிட்டு ஓடிய குறைஷியர் மறுவருடம் மீண்டும் தாக்கினர். அவர்களை எதிர்த்து உஹது மலையடியில் 700 வீரர்களின் துணையுடன் நபி போராடினார். ஹிஜிரி 5-ம் ஆண்டில் குறைஷியர் 10,000 வீரர்களுடன் மதினா மீது படையெடுத்தனர். முகம்மது நபியோ 3,000 முஸ்லீம் வீரர்களுடன் ஓர் அகழிவெட்டி பகைவரைத் தடுத்து நிறுத்தினார்.

தனது தாயகத்தைத் துறந்து வந்த நாயகம் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு 1400 தோழர்களுடன் மக்கா நகர் புறப்பட்டார். ஆனால் அவர்கள் ஹுதைபிய்யா என்ற இடத்தில் குறைஷியர்களால் தடுத்து நிறுத்தப்பட்டனர். நபிகள் பெருமானுடன் முஸ்லீம்கள் மதினாவுக்கே

திரும்பி விட்டனர். ஆனால் இவ்வுடன்படிக்கையின் பயனாக இஸ்லாம் பல பகுதிகளுக்கும் பரவ ஆரம்பித்தது.

ஹுதைபிய்யா உடன்படிக்கைக்கு மாறாக குறைஷியர் கா∴பாலிலுள்ள சில முஸ்லீம்களைக் கொன்றனர். இதற்குச் சமாதானம் கேட்ட மதினா வாழ் முஸ்லீம்களை குறைஷியர் போருக்கு அழைத்தனர். அதனால் ஹிஜிரி எட்டாம் ஆண்டு ரமலான் மாதம் முகம்மது 10,000 முஸ்லீம் வீரர்களுடன் மக்கா புறப்பட்டு சென்றார். ஆனால் குறைஷியர் பயந்து தலைமறவாயினர். ஒரு துளி ரத்தமும் சிந்தாமல், ஒரு உயிரையும் கொல்லாமல் தம்மை விரட்டியடித்த ஊரான மக்காவைக் கைப்பற்றினார் நபி. மேலும் அங்கிருந்த எல்லாப் பகைவரையும் தனது கருணை மழையால் மன்னித்தார். அன்று முதல் இஸ்லாம் ஜோதி அரபுநாடு முழுவதும் பரவத் தொடங்கியது.

**நபிகள் நாயகத்தின் பேரமைதி :**

மக்காவகை் கைப்பற்றிய பின்னரும் முகம்மது நபி மதினாவிலேயே எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். பின்பு ஹிஜிரி 10-ஆம் ஆண்டில் 1,24,000 முஸ்லீம்களுடன் அங்கிருந்து புறப்பட்டு மக்காவுக்கு சென்று இறுதி ஹஜ்ஜினை நிறைவேற்றினார். அப்போது அவர் ஆற்றிய பேருரை இஸ்லாம் சமயத்தின் இணையற்ற பெருமைகளை உலகிற்கு இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

பிறகு மதினா திரும்பிய அண்ணல் முகம்மது நபி நோயுற்றார். இறுதி காலத்தில் எல்லா மக்களிடமும் விடை பெற்றார். தாம் எவருக்கும் ஏதும் கடனை திருப்பிக் கொடுக்க வேண்டியதிருக்கிறதா என்று கேட்டு, இல்லையென்று தெரிந்து, பின்னர் தன் இளைய மனைவியாகிய ஆயிஷாவின் மடியில் சாய்ந்தார். இறைவனை மிக நெருங்கிய மேலான நண்பன் என்று உச்சரித்துக் கொண்டே ஹிஜிரி 11-ஆம் ஆண்டு ரபியுல் அவ்வல் மாதம் 12-ம் தேதி (கி.பி 632 ஜுன் 8-ம் தேதி ) மாலையில் பேரமைதி பெற்றார் முகம்மது நபி.

**திருக்குர் ஆன் :**

இஸ்லாமிய போதனைகள் திருக்குர் ஆனில் விரிந்துரைக்கப்பட்டுள்ளன. திருக்குர்ஆன் என்பது நபிகள் நாயகம் வானவர் தலைவர் கேப்ரியேல் (Gabriel) மூலம் இறைவனிடமிருந்து கி.பி. 610 முதல் 632 வரை உள்ள இருபத்திரெண்டு ஆண்டுகாலப் பகுதியில் இறையருள் வெளிப்பாடாக (வஹி) அறிந்து சொன்ன அறப் போதகமாகும். நபிகள் நாயகத்திற்கு இறையருள் வெளிப்பாடு அவர்கள் நபிபட்டம் பெற்ற நாளிலிருந்து இறுதி ஹஜ்ஜி நாள்வரை இருபத்தி மூன்று ஆண்டுகளாக வந்து கொண்டிருந்தது. அவர் கண்ட கடவுட் காட்சிகளையும் மெய் மறந்த நிலையில் அவர் கூறிய வாசகங்களையும், செய்யுடுகளையும் அவரது நண்பர்கள் அவ்வப்போது கிடைத்த ஓலையிலும், கல்லிலும், தோலிலும், எலும்புகளிலும் எழுதி உலகிற்கு உதவியுள்ளார்கள். தக்காரால் முகமதிய மறை நூலாகும்.

குர்ஆன் மூன்றாம் கலீபா உத்மான் என்பவரால் தொகுக்கப்பட்டு முழுமையான எழுத்து வடிவம் பெற்றது. இதில் 114 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரம் சூரா எனப்படும். ஒவ்வொரு சூராவலும் பல வசனங்கள் உள்ளன. வசனங்கள் ஆயத் எனப்படும் திருக்குரானில், 6,666 ஆயத்கள் காணப்படுகின்றன. திருக்குரான் கூறும் அறப்போகத்தினை மூன்று வகையாகப் பிரிக்கலாம். நம்பிக்கை (ஈமான்), வணக்க முறை (இபாதத்து) சன்மார்க்கம் (இஸ்கான்) என்பவையே அவை .

**இஸ்லாமிய மதம் ஆசியா, ஆப்பிரிக்காக் கண்டங்களில் பரவுதல் :**

முகம்மது நபி. கி.பி. 632 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். அவருடைய மறைவுக்குப் பின்னர் இஸ்லாம் மதத்தைப் பரப்பும் பொறுப்பை அவருடைய நண்பர் அபுபேகர் மேற்கொண்டார். அவர் மெக்காவில் அரசர்போல் வாழ்ந்தார். பெரும் படையை வைத்திருந்தார். கலிபா என்ற பட்டப் பெயரையும் அவர் ஏற்றார். அவர் அரசியல் தலைவராகவும் மதத் தலைவராகவும் விளங்கினார். பல நாடுகளை வென்று, அங்கெல்லாம் இஸ்லாம் மதத்தைப் பரப்ப எண்ணங்கொண்டார்.

அம்முயற்சியின முதல்படியாகச் சிரியாவின் ஒரு பகுதியை வென்று அங்கு அம்மமத்தைப் பரப்பினார். ஆனால் அதற்குள் கி.பி. 634ஆம் ஆண்டில் அவர் இறந்து விட்டார். அவரை அடுத்து ஓமர் (Omar) என்பவர் கலிபா ஆனார்.

இஸ்லாம் மதத்தை உலகம் முழுவதும் பரப்ப ஓமர் எண்ணினார். கி.பி. 637 ஆம் ஆண்டில் ஜெரூசேலத்தில் ஒரு பள்ளி வாசலைக் கட்டுவித்தார். பின்னர் பாரசீகத்தின் மீது படையெடுத்து அப்பகுதி முழுவதையும் வென்றார். கிழக்கு ரோமானியப் பேரரசின் படைகளைப் பல இடங்களில் தோற்கடித்துச் சிரியா முழுவதையும் கைப்பற்றினார். கி.பி. 639 ஆம் ஆண்டில் எகிப்தின் மீது படையெடுத்து அதனை வென்று தன் நாட்டோடு இணைத்துக் கொண்டார்.

ஆப்பிரிக்காவின் வடபகுதிகளையும் கைப்பற்றித் தான் வென்ற எல்லாப் பகுதிகளிலும் இஸ்லாம் மதத்தைப் பரப்ப பல்வேறு முயற்சிகளையும் எடுத்துக் கொண்டார். இம்மதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு கடும் தண்டனைகளைக் கொடுத்தார். ஆனால் ஜெருசலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு மட்டும் அவர்களுடைய கடவுளை வணங்குவதற்கு உரிமை வழங்கப்பட்டது. வளர்ந்து வரும் முகமதியர்களின் செல்வாக்கையும், வலிமையையும் கண்டு ஐரோப்பிய அரசுகள் அஞ்சின. அந்த அச்சத்திற்கு ஏற்றவாறு ஐரோப்பிய நிலப் பகுதிகளிலும் முகமதியர்களின் தாக்குதல் நடைபெற்றது.

ஓமர் கி.பி. 643-ஆம் ஆண்டில் இறந்தார். அவரை அடுத்து ஆத்மன் என்பவர் கலிபா ஆனார். ஆனால் அவர் அவ்வளவு திறமை வாய்ந்தவர் அல்ல. அவருடைய ஆட்சிக் காலத்தில் (கி.பி. 643-656) முக்கியமான நிகழ்ச்சிகள் எவையும் நடைபெறவில்லை.

அவருக்குப்பின் முகமதுவின் வளர்ப்பு மகன் அலி கலிபா ஆனார். அவர் ஆறு ஆண்டுகள் கலிபாவாக இருந்தார். இவருக்குப்பின் பதவிப் போட்டியும் பூசல்களும் ஏற்பட்டது.

அலிக்குப் பின்னர் ஆத்மனின் வழிவந்தவர்கள் கலிபாக்களாக கி.பி. 750 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தார்கள். அவர்கள் உமாய்யத் (Umayyads) குடும்பத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். இக்கலிபாக்களின் ஆட்சிக் காலத்தில் தான் வடமேற்கு ஆப்பிரிக்காவின் பெரும்பகுதியில் இஸ்லாம் மதம் பரவியது.

ஐரோப்பாக் கண்டத்தின் மீது முகமதியர்களின் தாக்குதல்களும் அதன் விளைவுகளும்:

கி.பி. 711 ஆம் ஆண்டில் முகமதியப் படைகள் ஐபீரியத் தீபகற்கத்தை (ஸ்பெயின்) வெல்லத் திட்டமிட்டன. எனவே ஜிப்ரால்டர் நீர்ச்சந்தியைக் (Straits of Gibralter) கடந்து ஸ்பெயினுக்குப் படைகள் சென்றன. அப்பகுதியில் அப்பொழுது விசிகோத்துகளின் ஆட்சி நடைபெற்ற வந்தது. அவர்கள் அங்கிருந்த யூதர்களைத் துன்புறுத்தி வந்தார்கள். எனவே, யூதர்கள் முகமதியப் படைகளுக்கு உதவி செய்தார்கள். விசிகோத்துக்களின் ஆட்சி வீழ்த்தப்பட்டு ஸ்பெயின் முழுவதும் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஸ்பெயினுக்குத் தென் கிழக்கே மத்திய தரைக்கடலிலுள்ள பாலியரிக் தீவுகளும் (Balearic Islands) கைப்பற்றப்பட்டன.

இவ்வெற்றிகளால் ஊக்கம் கொண்ட முகமதியப் படைகள் சில ஆண்டுகள் கழித்து பிராங்கு அரசர் சார்லஸ் மார்டெலின் ஆட்சிக்குப்பட்டிருந்த கால் பகுதியை (Gaul-i.e. Modern France) வெல்லத் திட்டமிட்டன.

கி.பி. 732-ஆம் ஆண்டில் முகமதியப் படைகள் பிரனீஸ் மலைப்பகுதிகளிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டன. சார்லஸ் மார்டெல் திறமை வாய்ந்த அரசர். அவருடைய பெரும் படைகளுக்கும் முகமதியப் படைகளுக்கும் கடுமையான போர் நடைபெற்றது. இறுதியில் சார்லஸ் மார்டெலின் படைகள், முகமதியப் படைகளை லொயர் (Loire) நதியின் தெற்குக் கரையில் உள்ள டியூர்ஸ் (Tours) என்ற இடத்தில் தோற்கடித்துச் சிதறியோடச் செய்தன. இப்போர் ஐரோப்பிய வரலாற்றில் மிக முக்கியமான ஒன்றாகும். இப்போரில் முகமதியர்கள் வெற்றி பெற்றிருந்தால் ஐரோப்பாவின் வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கும்.

இதற்கிடையில் முகமதியக் கொள்ளைக்காரர்கள் கிழக்கு ரோமானியப் பேரரசின் தலைநகரமான கான்ஸ்டான்டி நோபிளைக் கைப்பற்றிக் கொள்ளையடிக்க முயன்றனர். ஆனால் அவர்களை அரசர் மூன்றாம் லியோ கடுமையாகத் தாக்கி பறந்தோடச் செய்தார். மேலும் பல முகமதியப் படைகளை ஆசியாமைனரின் தென் கிழக்குப் பகுதியிலுள்ள டாரஸ் மலைப்பகுதிகளில் லியோ தோற்கடித்து, அத்தோல்வியை முகம்மதிய உலகம் உணரும்படிச்

செய்தார். அடுத்த மூன்று நூற்றாண்டுகளுக்கு ஆசியா மைனர் கிழக்கு ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. அதனை முகமதியர்களால் கைப்பற்ற முடியவில்லை.

மேற்கு ரோமானியப் பேரரசு வளரவும், கிழக்கு ரோமானியப் பேரரசு அழியாமல் இருக்கவும் முறையே சார்லஸ் மார்டெலும், மூன்றாம் லியோவும் எவ்வாறு வரலாற்றுச் சிறப்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் அறிகின்றோம்.

இருப்பினும், முகமதியர்களின் தாக்குதல் ஐரோப்பிய நாடுகளின் மீது அடிக்கடி நிகழ்ந்த வண்ணமிருந்தது. ஒருமுறை கார்தேஜுக்கு தெற்கில் கெய்ரவான் (Kairawan) என்ற நகரத்தில் வலிமையாக இருந்த முகமதியப் படைகள் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில சிசிலி, சார்டினியா மற்றும் கார்சிகா போன்ற தீவுகளைக் கைப்பற்றிக் கொண்டன. மேலும் இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளின் தென் பகுதிகளை அடிக்கடி தாக்கி வந்தன. கி.பி. 846 ஆம் ஆண்டில் ரோம் நகரத்தின் மீது பெரும் படையெடுப்பை நிகழ்த்தி அந்நகரைக் கொள்ளையடித்து நாசப்படுத்தினார்கள். இவ்வாறு முகமதியர்கள் ஐரோப்பிய நாடுகளுக்குத் தீராத தொல்லைகளைத் தந்து வந்தனர்.

இதனால் பொருளாதாரத் துறையில் பல இழப்புகள் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டன. குறிப்பாக, மத்தியத் தரைக்கடலிலுள்ள பெரும்பான்மையான தீவுகளை முகமதியர்கள் கைப்பற்றிக் கொண்டதால் ஐரோப்பிய வணிகர்கள் சுதந்திரமாகவும், அச்சமின்றியும் வாணிகம் செய்ய முடியவில்லை. அவர்களுடைய கப்பல்கள் முகமதியர்களால் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டன. எனவே ஐரோப்பாக் கண்டத்திற்கும் ஆசியாக் கண்டத்திற்கும் இடையே நடைபெற்று வந்த வாணிகம் பெருமளவு தடைப்பட்டது.

மதத் துறையில் முகமதியர்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்ட பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்கள் இஸ்லாம் மதத்தை ஏற்றுக் கொள்ளும்படித் துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால் ஐரோப்பியர் இம்மதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே தான் இன்றும் ஐரோப்பாவில் ஒரு நாடு கூட இஸ்லாமிய நாடாக இல்லை. ஐரோப்பிய அரசர்களும் முகதியர்களின் கருணையற்ற தாக்குதல்களுக்குப் பழி வாங்கத் தக்க வாய்ப்புகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதன் விளைவாகவே பிற்காலத்தில் சிலுவைப் போர்கள் நடத்தப்பட்டன. அப்போர்களின் போதும் ஐரோப்பியர் பெரும் படையையும் பொருளையும் இழந்தனர்.

ஆனால் கல்வி, மற்றும் கலைத் துறைகளில் முகமதியர்களிடமிருந்து ஐரோப்பியர்கள் பல நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டார்கள். ஸ்பெயினில் முகமதியர்களின் ஆட்சி ஏற்பட்டதும் அப்பகுதியின் பல்துறை வளர்ச்சிக்கும், கலைகளின் மேம்பாட்டுக்கும் அவர்கள் உழைத்தார்கள். கலையழகு மிக்க பல பள்ளிவாசல்களைக் கட்டினார்கள். அவற்றுள் கார்டோவா (Cordova) என்ற நகரத்தில் கட்டப்பட்ட பள்ளிவாசல் பிரமாண்டமான ஆசிய ஐரோப்பியக் கலை வனப்பு மிக்கக் கட்டிடம் ஆகும். அது இன்றும் கத்தோலிக்கக் கிறிஸ்த்தவர்களின் தேவாலயமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இத்தகைய

கலையம்சங்கள் மிக்க பல அரண்மனைகளும் கட்டப்பட்டன. அவற்றுள் கிரனடா (Granada) நகரத்தில் கட்டப்பட்ட அல்ஹும்ப்ரா (Alhambra) என்ற அரண்மனை சிற்பக்கலையின மேன்மையை உலகுக்கு விளக்கும் ஈடு இணையற்ற கருவூலமாக விளங்குகிறது. மேலும், கண்ணைக் கவரும், மணம் வீசும் மலர்கள் மிகுந்த பரந்த பூந்தோட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டன.

இவை தவிர முகமதியர்கள் ஸ்பெயினில் கார்டோவாப் பல்கலைக் கழகத்தினை (University of Cardov) நிறுவினார்கள். இப்பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்தவ மாணவர்கள் கல்வி கற்றார்கள். அவர்கள் ஆசிய, ஐரோப்பிய நாகரிகத்தையும் பண்பாட்டையும் இணைக்கும் பாலங்களாகவும், மதப்பூசல்களைத் தவிர்க்கும் சமாதானப் புறாக்களாகவும் பயன்பட்டார்கள். பல ஆண்டுகளுக்கு பின்னர் தோற்றுவிக்கப்பட்ட பாரிஸ், ஆக்ஸ்போர்ட் போன்ற பல்கலை கழகங்கள், கார்டோவாப் பல்கலைக் கழகத்தின் பாணியிலேயே அமைக்கப்பட்டன என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

கார்டோவாப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற, புகழ் வாய்ந்த கிறிஸ்தவ மாணவர்களுள் ஜெர்பெர்ட் (Gerbert) என்பவர் குறிப்பிடத்தகுந்தவர். இவரே பிற்காலத்தில் போப் இரண்டாம் சில்வெஸ்டர் (Pope SilvasterII) என்ற பெயரால் உலகுக்கு அறிமுகமானவர். இவர் கணக்கியலைப் பற்றிய பல நுணுக்கங்கள் ஐரோப்பாவில் பரப்பியவர். இப்பல்கலைக் கழகத்தோடு ஒரு பெரும் நூல் நிலையமும் அமைக்கப்பட்டது.

அரேபிய எண்களை ஐரோப்பியருக்கு அறிமுகப்படுத்தியவர்களும் முகம்மதியர்களே ஆவர். மற்றும் எழுத்தியல், கோணயியல், வாணயியல் போன்ற கணக்கியல் பிரிவுகளை ஐரோப்பாவில் பரவச் செய்தவர்கள் அராபியர்களே என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். இடைக்காலத்தில் திருச்சபை மக்களிடத்திலே பலவிதமான மூடநம்பிக்கைகளை வளர்த்திருந்தது. முக்கியமாக நோய்களினால் பிடிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவச் சிகிச்சை கொடுக்கப்படவில்லை. அது அவர்களின் செய்வினை என்றும், எனவே சிகிச்சை தரக்கூடாது என்றும் திருச்சபை தடுத்தது. அத்தகைய சூழ்நிலையில் அராபிய மருத்துவர்கள் நோய்க்கேற்ற மருந்தினை நோயாளிகளுக்குக் கொடுத்தார்கள். நோயாளிகளும் குணம் அடைந்தார்கள். அவிசென்னா (Avicenna) என்பவர் கி.பி. 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழந்த மிகவும் புகழ்மிக்க அராபிய மருத்துவர் ஆவார். ஐரோப்பிய உலகம் முகம்மதியர்களிடமிருந்து இத்தகைய அருங்கலைகளைக் கற்றுக் கொண்டது.

இவ்வாறு இஸ்லாம் மதம் அரேபியாவில் நிறுவப்பட்டதாலும், அம்மதத்தை வேறு நாடுகளில் பரப்புவதற்கான முயற்சிகளில் கலிப்பாக்கள் ஈடுபட்டதாலும் ஐரோப்பாவின் பொருளாதார சமூக, அரசியல், மற்றும் வேறு பல துறைகளில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

## இஸ்லாமியரின் கொடை (Legacy of Islam)

உலகிலுள்ள ஒப்பந்த சமயங்களுள் ஒன்றான இஸ்லாம், ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் வளர்ச்சியுற்ற போது அச்சமயத்தவரின் பண்பாடு பல மாறுதல்களை ஏற்படுத்தியது. தன்னையும் மாற்றங்களுக்கு உட்படுத்திக் கொண்டது. எடுத்துக்காட்டாக இந்தியா, சீனா போன்ற நாடுகளுடன் தாம் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு காரணமாக பண்பாட்டுச் சிறப்பு மிகக் அப்பகுதிகளில் காணப்பட்ட இந்திய எண்மானமுறை, காகிதம், வெடிமருந்து, திசைகாட்டும் கருவி ஆகியவற்றை உருவாக்கும் சீன முறை ஆகியவற்றைத் தாம் உணர்ந்து கொண்டனர். நைல்நதிப் பகுதி, யூப்ரடீஸ் நதிப்பகுதி, பைசாண்டியப்பகுதி ஆகியவற்றை அரேபியர் கட்டுப்படுத்திய போது அப்பகுதிகளில் காணப்பட்ட சிறப்பியல்புகளைத் தம்முடைய தாக்கிக் கொள்ளத்தவறவில்லை. அவ்வாறு எடுத்துக் கொண்ட சிறப்புப் பண்புகளை ஐரோப்பிய நாடுகளுடன் தாம் கொண்டிருந்த வாணிபத் தொடர்பு காரணமாக அப்பகுதிகளில் பரவுமாறு செய்தனர்.

**கல்வித்துறை :**

சீனாவில் இருப்பினும் அறிவைத் தேட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்த அவர்கள் கல்விக்கு முதலிடம் வழங்கினார்கள். ஆரம்ப கால்த்தில் உயர் கல்விக்கு முக்கியத்துவமளிக்காமல் மதபோதனை, வழிபாடு, இராணுவப் பயிற்சி ஆகியவற்றுக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கிய அவர்ள் படிப்படியாகக் கல்வித்துறையில் ஏற்றம் பெற்று அவற்றைப் பிறருக்கும் வழங்கிர். கி.பி. 630ல் கலீபா மாமூன் என்பவர் பாக்தாத்தில் கணிதம், தத்துவம் ஆகியவற்றை ஆராய ஒரு ஆராய்ச்சி சாலையை நிறுவினார். பாத்திமர்களின் ஆதரவினால் கெய்ரோவில் இத்தகையதோர் அமைப்பு உருவாக்கப்பட்டது. கி.பி. 992-ல் கெய்ரோவில் உருவான அஸார் கலாசாலை, கி.பி. 1067-ல் தோன்றிய மிசாமியா கல்லூரி, முஸ்தான் சிரியாக்கல்விக் கேந்திரங்களாகத் திகழ்ந்தன. பாரீஸ், ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகங்களுக்கு கார்டோவா பல்கலைக் கழகம் ஒரு முன்மாதிரியாக விளங்கியது. போப்பாண்டவர் இரண்டாம் ஸில்வெஸ்டர் இம்முகமதியப் பல்கலைக் கழகத்தில் பயின்றவரே ஆவார்.

**மருத்துவத் துறை :**

கார்டோவா பல்கலைக்கழக அறிஞர்கள் ரசாயனம், மருத்துவம், அறுவை சிகிச்சை போன்றவற்றில் முன்னணியில் திகழ்ந்து வழிகாட்டினார்கள். மயக்க மருந்து கொடுத்து அறுவை கிசிச்சை செய்யும் முறையை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். அவிசென்னா என்ற புகழ்பெற்ற மருத்துவரை உலகிற்கு வழங்கிய பெருமையுடையது இஸ்லாமிய உலகே. மருத்துவச் சட்டங்கள் என்ற அவருடைய நூல் அத்துறையில் ஒரு புகழ்மிக்க படைப்பாகும். அதுபோல் அபுல்காஸிம் ஸஹர்வாரி என்பவரின் ரணசிகிச்சை பற்றிய நூல்களும் மருத்துவ உலகில் சிறப்பு வாய்ந்தவைகளாகும்.

**இலக்கியத்துறை :**

இலக்கியத்துறையிலும் அரேபியர் பெரும் ஈடுபாடு காட்டி அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தார். நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டு அங்கு பல நூல்களும் கையெழுத்துப் பிரதிகளும் சேகரித்து வைக்கப்பட்டன. கிரேக்க இலக்கியம், தத்துவம் ஆகியவற்றில் பேரார்வம் காட்டிய அவர்கள் அரிஸ்டாட்டில் ஹிப்போகிரேட்டஸ், ஆர்க்கிமெடிஸ், டாலமி ஆகியோரின் கிரேக்க நூல்களை மொழி பெயர்த்தார்கள். அரேபியரின் 1001 இரவுகள் என்ற அற்புதக் கதைப் படைப்பு இன்றளவும் பெரிதும் விரும்பிப் படிக்கப்படுகின்றது. கி.பி. 994 முதல் 1064 வரை வாழ்ந்த அலி இபின் ஹாஸம் வரலாறு, இறையியல், கவிதை ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டு விளங்கிய எழுத்தராயிருந்தார். அரேபியர்களின் உரைநடைகள், உவமைக்கதைகள் ஆகியவை 13-ஆம் நூற்றாண்டு ஐரோப்பியரைக் கவர்ந்திருந்தன. இபின் அபித் ரபீக், இபின்-அல்-காலிப், ஸாய்தூன் போன்ற புகழ்மிக்க கவிஞர்கள் தமது பங்கினை முகமதிய இலக்கு வளர்ச்சிக்கு ஈடுபடுத்தினர்.

**கணிதத்துறை :**

கணிதத்துறை வளர்ச்சியில் அரேபியரின் பங்கு போற்றப்பாலது. இந்திய எண்மான முறையை அரேபிய இலக்கிய முறையாக்கி ஐரோப்பியர்களுக்கு அவர்களே உணர்த்தினார்கள். அல்ஜீப்ரா என்ற குறியீட்டுக் கணக்கியல் முறையை ஐரோப்பாவில் புகுத்தியர்வகள் அரேபியரே வழியிடைக்கோணம், முக்கோணம் ஆகியவற்றைப் பிரபலப்படுத்தியவர்களும் அரேபியர்தான்.

**வானவியல்துறை :**

இடைக்காலத்தில் வானவியல் வளர்ச்சிக்கு அரேபியர் வழிகாட்டினார்கள். கார்டோவாவைச் சேர்ந்த அல்மாஜிரிதி, டோலிடோவைச் சேர்ந்த அல்ஜார்காலி ஆகிய வானியல் அறிஞர்கள் கோள்களின் இயக்கங்களைத் தெளிவாக விவரித்தனர். முகமதியர்களின் வானவியல் கோட்பாடுகள் பல லத்தீன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. பல விண்மீன்கள் இன்று அரேபியரின் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன.

**பௌதீகத்துறை :**

பௌதீகத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த அவர்கள் ஒளி, ஒளிச்சிதறல், பிரதிபலிப்பு, ஆடிகள் ஆகியன பற்றிப் பல பரிசோதனைகளை மேற்கொண்டு பல உண்மைகளை வெளியிட்டார்கள். அதேபோல் அல்இத்ரிஸி, யாகூத் ஆகிய இரு நிலவியல் வல்லுநர்கள் நிலவியல் துறையில் பல உண்மைகளை வெளியிட்டனர்.

**கட்டிடக்கலை :**

கட்டிடக் கலைக்கு சாரஸனியர்கள் பேருதவியாக நின்றனர். குதிரை லாடம் போன்றவடிவுடைய வளைவுகள், கூர்மையான நுனியினை உடைய வளைவுகள் ஆகிய அமைப்புகளை அவர்கள் புகுத்தினார்கள். தந்தம், இரும்பு, சலவைக்கல் ஆகியவற்றைப் பயன்படுத்தி அவர்கள் தமது கட்டிடங்களை அலங்கரித்தார்கள். 40 ஆண்டுகள் அயராது பணியாற்றி 10,000 கட்டிடக் கலைஞர்கள் உருவாக்கிய கார்டோவா நகரம் அவர்களுடைய கட்டிட கலைப்பணிக்கு ஓர் உன்னத எடுத்துக்காட்டாகும். கார்டோவா, சிவில்லி போன்ற இடங்களில் உள்ள கட்டிடங்களைப் போல் ஏராளமான மசூதிகள் அரேபியர்களின் கட்டுப்பாடுகளில் இருந்த இடங்களில் கட்டப்பட்டன. வளைவு மாடங்கள், அலங்கார வளைவுகள் ஆகியவற்றை அமைக்கும் முறையை ஐரோப்பியர் இஸ்லாமியரிடமிருந்தே கற்றனர். ஜஸ்டீனியன் கட்டிய கான்ஸ்டான்னடி நோபிள் சாந்தாஸேபியா ஆலயத்தை அதன் அழகு காரணமாகத் தமது மசூதியாக அரேபியர் மாற்றினார். உலகின் உன்னதக் கலைப்படைப்புகளின் ஒன்றாக திகழும் அல் அம்ரா அரண்மனை அவர்களின் சிறப்பினை எடுத்தியம்புகின்றது. கார்டோவா நகர், கெய்ரோ, மன்சூரியா, மெஹ்டியா ஆகிய நகர்கள் அவர்களுடைய கலை உணர்வினைப் பறை சாற்றுகின்றன.

**கலைத்துறை :**

சித்திர வேலைப்பாடுகளுடன் கூடிய பாத்திரங்கள், நகைகள், அன்றாட உபயோகப் பொருட்கள் ஆகியவை கலையுணர்வுடன் படைக்கப்பட்டு அவர்களது கை வேலைப்பாட்டினை எடுத்தியம்புகின்றன. சிங்கம், இரட்டைக்கழுகு, தேவதைகள், வினோத உருவம் கொண்ட மிரும், மனித மிருக உருவங்கள் போன்றவை பொறிக்கப்பட்ட சாமான்கள், பேரீச்சை இலை, மரத்துண்டுகள் ஆகியவற்றின் மூலம் உருவாக்கப்பட்ட பொருட்கள் கலையுணர்வுடையவை. குரான் வைத்துப் படிக்கும் மேஜைகள் வேலைப்பாடுடன் கூடியனவாக அமைக்கப்பட்டன. நகைப் பெட்டிகள், மேஜைகள், நாற்காலி, கட்டில்கள், புகைப்பிடிக்கும் கருவி, மெழுகுவர்த்தி தாங்கிகள் ஆகியன மரம், செம்பு, தந்தம், கண்ணாடி போன்ற பொருட்களால் கலையழகு மிளிர உருவாக்கப்பட்டன.

அரசியல் மற்றும் சமயக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு சித்திரங்கள் வரையப்பட்டன. கண்ணாடிக் குவளைகள் , பாத்திரங்கள், சுவர்கள், கூரைகள் ஆகியவற்றில் சித்திரங்கள் தீட்டப்பட்டு அழகூட்டப்பட்டன. அழகிய நடனங்கள், மிருகங்கள், கலீபாக்களின் அரியாசனம் ஆகியன சித்திரங்களாகத் தீட்டப்பட்டன். அரண்மனைகள், ஆடம்பர மாளிகைகள் ஆகியவை சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்டன.

**வாணிபத்துறை :**

அரேபியர்களால் குதிரை வாணிபம் பேணி காக்கப்பட்டு அரேபியக் குதிரைகள் பிரபலமாக்கப்பட்டன. முஸ்லீம்களின் ஆட்சிப் பகுதிகள் பல இயற்கைத் துறைமுக வசதிகளைக் கொண்டு திகழ்ந்தன. அதனால் அவர்கள் கடல் வாணிபத்தில் சிறந்து

விளங்கியதுடன் மேற்கு மற்றும் கீழ்த்திசை நாடுகளை இணைக்கும் பாலமெனத் திகழ்ந்தனர். அதனால் பண்பாட்டுப் பரிமாற்றம் எளிதான காரியமாயிற்று. அத்துடன் அவர்களது சமய வளர்ச்சிக்கும் அரசியல் முன்னேற்றத்திற்கும் வாய்ப்பேற்பட்டது.

**ஆட்சித்துறை :**

நபிநாயகத்திற்குப் பின் முகமதியர்களால் உருவாக்கப்பட்ட கலிபாக்களின் ஆட்சிக் காலத்தில் ஆட்சித் துறையில் பல அம்சங்கள் படிப்படியாக புதிதாக உருவாக்கப்பட்டன. பின்னர் வந்த சுல்தான்களும் கலீபாக்களின் பெயர்களைத் தமது நாணயங்களில் பொறிக்கும் முறையை ஏற்படுத்தி அரசியலில் இறைமைத் தன்மையை ஏற்படுத்தினர். சமயமும் ஆட்சித் துறையும் பின்னிப் பிணைந்த ஒரு தனித்த ஆட்சி முறையை இஸ்லாமியர் உலகிற்கு நல்கினர். சமயக் கடமைகளை வலியுறுத்தி சட்டத்தின் ஆட்சியை நிலைபெறச் செய்யக்கூடிய வகையில் சமயம் சார்ந்த ஆட்சியமைப்பு அவர்களால் உருவாக்கப்பட்டது.

கி.பி. 711-ல் ஸ்பெயினைக் கைப்பற்றிய முஸ்லீம்கள் மூலம் நமது நாகரிகத்தை அப்பகுதிகளில் பரப்பினர். கி.பி. 712-ல் சிந்துவைக் கைப்பற்றிய அரேபியர்களால் காகிதம் தயாரிக்கும் முறை போதிக்கப்பட்டது. கிழக்கு நாடுகளின் தாவரங்கள் மேற்கு நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டன. சாயத்தொழில், அத்தர் தயாரிக்கும் முறை ஆகியன அவர்களால் வெளிநாடுகளில் பரப்பப்பட்டன. கரும்பினின்றும் ஜீனி தயாரிக்கும் முறை அவர்களால் பிரபலப்படுத்தப்பட்டது. அங்கிகள் தயாரிக்கும் முறையில் அவர்களுடைய முறை பிறரால் பின்பற்றப்பட்டது. ஒட்டுமுறையைப் பின்பற்றி விவசாயத்தில் அவர்களால் பலவித சுவைமிக்க பழங்களும், காய்கறிகளும் பயிராக்கப்பட்டன. இரும்பினை எ∴காக மாற்றும் முறையை ஐரோப்பியர் அரேபியரிடமிருந்தே கற்றனர்.

மேற்கண்டவாறு கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் ஒரு பாலமெனத் திகழ்ந்த இஸ்லாமியப் பண்பாடு தனது தனித்தன்மைகளால் ஐரோப்பாவில் பலகாலம் தழைத் தோங்கி பல நிலைகளிலும் தமது முத்திரையைப் பதித்துள்ளதெனில் அது மிகையான கூற்றல்ல.

## புனித ரோமானியப் பேரரசு

## (HOLY ROMAN EMPIRE)

பேரரசர் சார்லமெனினால் ரோமானியப் பேரரசு புத்துயிர் பெற்றது. அவர் மறைந்த பின் அதன் பெருமைகள் மங்கத் தொடங்கின. பேரரசும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டது. எனினும் பெயரளவுக்காவது அப்பேரரசு இருந்து வந்தது. கி.பி. 918-ஆம் ஆண்டு அதை ஆட்சி செய்து வந்த முதலாம் கான்ராட் (Conrad I) இறந்து விட்டார். அப்பொழுது ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் தகுதியும், திறமையும் உடையவர் எவரும் இல்லை. அரியணை ஏறுவது யார் என்ற பிரச்சனை எழுந்தது.

இத்தகைய சூழ்நிலையில் நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில் ஜெர்மனி பல நிலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கோமகனாட்சிகுட்பட்ட நிலப்பகுதிகளாக இருந்தன. அவை வலிமை வாய்ந்த கோமகன்களால் ஆளப்பட்டு வந்தன. குறிப்பாக சாக்சனி (Saxony), பிராங்க்கானியா (Franconia), லொரெய்ன் (Lorraine), சுவாபியா (Swabai) பவேரியா (Bavaria) போன்ற கோமகன் ஆட்சிப் பகுதிகள் மிகவும் வலிமை வாய்ந்தவையாக இருந்தன. இவை பேரரசிலிருந்து விடுபட்டுச் சுதந்தர நாடுகளாகவே இயங்க முற்பட்டிருக்கும். ஆனால், பார்பேரியன் மற்றும் முகமதியர்களின் படையெடுப்புகளுக்கு அஞ்சிப் பேரரசோடு இணைந்திருந்தன. இறந்த அரசருக்கு வாரிசு இல்லாத ஓர் இக்கட்டான நிலை ஏற்பட்ட போது, புதிய அரசரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை கோமகன்கள் ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்தது. அவர்கள் சாக்சனியின் கோமகன் முதலாம் ஹென்றிமை (Henry I) அரசராகத் தேர்ந்தெடுத்தனர். அவரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுப் பேரரசின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் உழைக்கலானார்.

**முதலாம் ஹென்றி**

முதலாம் ஹென்றி நற்குணங்களும், நுண்ணிய அறிவும் உடையவர். பல்வேறு விதமான பொழுது போக்குகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வார். கோழிச்சண்டையைப் பார்த்து மகிழ்வதில் அவருக்கு ஈடுபாடு அதிகம். எனவே தான் அவர் ‘Henry the Fowler’ என்று அழைக்கப்பட்டார். சாக்சனியில் கோமகனாக அவர் இருந்த போது அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டவர். அரச பதவியை அவர் நாடிச் செல்லவில்லை. அது அவரைத் தேடி வந்தது. வந்த பொறுப்பை ஏற்று அதன் பெருமையை நிலை நாட்டினார்.

முதலில் பேரரசின் கிழக்குப் பகுதியில் இருந்த கோமகன்களுக்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுத்து மாக்யார் (Magyar) என்று சொல்லப்பட்ட ஹங்கேரிய இனத்தவர் மற்றும் ஸ்லாவ்கள் ஆகியோரின் தாக்குதல்களை முறியடித்தார். பல வலிமையான கோட்டைகளையும் கட்டினார். படைபலத்தைப் பெருக்கினார். காலப்போக்கில் கோமகன்களின் அதிகாரங்களையும் குறைத்தார். ஜெர்மானியர்கள் பேரரசின் கிழக்கில் பல பகுதிகளில் குடியேறி வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார்.

**மகா ஆட்டோவின்**

**சாதனைகளும் சிறப்புகளும் :**

முதலாம் ஹென்றி இறந்தவுடன் அவருடைய மகன் முதலாம் ஆட்டோ (Otto I or Otto the Great) பேரரசானார். அவருடைய முடிசூட்டு விழா மிக ஆடம்பரமான முறையில் நடத்தப்பட்டது. ஆகென்னில் நடைபெற்ற அவ்விழாவுக்கு பிராங்கோனியா, சுவாபியா, பவேரியா,

லொரெய்ன் ஆகியவற்றின் கோமகன்கள் வந்திருந்து பேரரசருக்குப் பணிவிடை செய்தனர். இது நிலமானியத் திட்டம் எந்த அளவுக்கு வேரூன்றி இருந்ததென்பதையே விளக்குகின்றது.

**உள்நாட்டில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுதல் :**

வலிமை மிகுந்த ஒரு ஜெர்மானியப் பேரரசை நிறுவவேண்டுமென்பதே ஆட்டோவின் கொள்கையாகும். அதனால் அவர் தன் தந்தையைப் போலவே பேரரசின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். பிரபுக்களின் அதிகாரங்களை மேலும் குறைந்தார். பேரரசின் கிழக்குப் பகுதியில் மேலும் பல கோட்டைகளைக் கட்டினார். வடக்கே டேனியர்களை (Danes) வென்று அப்பகுதியையும் பேரரசோடு இணைத்தார். அதேபோல் ஹங்கேரியப் பகுதியில் குடியேறிந்த மாக்யர்களை கிபி. 955-ஆம் ஆண்டில் தோற்கடித்து மீண்டும் அவர்களின் படையெடுப்புகள் நிகழா வண்ணம் பார்த்துக் கொண்டார்.

**ஆட்சித்துறை சீர்திருத்தம் :**

ஆட்சித் துறையில் பல மாறுதல்களைச் செய்தார். உண்மையில் பேரரசர் சார்லமெனைப் போல் வலிமையும் புகழும் பெற்ற அரசராக வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் செய்ததைப் போன்ற பல சீர்திருத்தங்களை இவரும் செய்ய முயன்றார். பேரரசின் மேற்குப் பகுதியில் பாலடைன் கவுண்ட்கள் (Counts Palatine) என்பவர்களை நியமித்து அயலவரின் தாக்குதல்களைத் தடுத்தார். கிழக்கிலும், தெற்கிலும் எல்லை அரசுகளை ஸ்லாவ்கள், மாக்யர்கள் மற்றும் இத்தாலியர்களின் கலகங்களையும் குழப்பங்களையும் அடக்கினார். அதே நேரத்தில் கோமகன்களின் அதிகாரங்களைக் குறைத்தார்.

**திருச்சபையுடன் சுமூக உறவு :**

தன்னுடைய அரசாங்கத்தில் மதத்துறைத் தொடர்புடைய கற்றறிந்த அறிஞர்களை ஈடுபடுத்தினார். அவர்களே அக்காலத்தில் மதிக்கப்பட்டு போற்றப்படுபவர்களாக இருந்தார்கள். அவர்கள் பிரபுக்களைப் போல் அல்லாது அரசருக்கு உண்மையுள்ளவர்களாகவும், நன்றியறிதல் உள்ளவர்களாகவும் விளங்கினார்கள். திருச்சபைக்கும் அரசருக்குமிடையே மிக நெருங்கிய நல்லுறவுகள் வளரலாயின. அரசரும் திருச்சபையும் நட்புறவுடன் இருந்ததால் தான் பிரபுக்களின் அதிகாரங்களை அடக்கமுடியுமென ஆட்டோ கருதினார். எனவே திருச்சபையின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் பெருமளவு நன்கொடையைக் கொடுத்தார்.

உண்மையில் திருச்சபை அரசாங்கத்தின் ஒரு துறையாகவே இருந்து செயல்பட்டதெனக் கூறலாம். குருமார்கள் திருச்சபையிலும் அரண்மனையிலும் அவ்வுறவுகளை வளர்த்தார்கள். ஆயினும் சார்லமென் காலத்தில் இருந்ததைப் போலக் குருமார்களும் ரோமில் இருந்த போப்பும் எல்லாச் சுதந்திரங்களையும் பெற்றவர்களாக இல்லை. அவர்கள் சில

கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே நடந்து கொண்டார்கள். மடாலயங்களில் இருந்த குருமார்களுக்கும் கூட நிலங்களும் வேறு பல சலுகைகளும் கொடுக்கப்பட்டன.

**இத்தாலிய சுய வெற்றி கொள்ளுதல் :**

இத்தாலியின் வட பகுதி ஒரு அரசரால் ஆட்சி செய்யப்பட்டது. இடைப்பகுதி போப்பின் ஆட்சிகுட்பட்ட பகுதிகளாக (Papal States) இருந்தன. தெற்குப் பகுதிகள் சாராசென்கள் (Saracens) என்று சொல்லப்பட்ட இனத்தவர்களாலும் வேறு பலராலும் ஆட்சி செய்யப்பட்டு வந்தன. கி.பி. 951-ஆம் ஆண்டில் வட இத்தாலியில் குழப்பங்களும், கலகங்களும் ஏற்பட்டன. அப்பகுதியின் மறைந்த மன்னரின் விதவை ராணி அடிலெய்ட் (Adelaide) என்பவர் ஆட்டோவை உதவிக்கு அழைத்தார். ஆட்டோ உடனே சென்று கலகங்களை அடக்கி வட இத்தாலியில் அமைதியை நிலை நாட்டினார். பின்னர் அந்த விதவை ராணியைத் திருமணம் செய்து கொண்டு தன்னை இத்தாலியின் அரசராகவும் அறிவித்து முடிசூட்டிக் கொண்டார்.

**ஜெர்மானியப் பிரபுக்களை அடக்குதல் :**

அதற்குள் மீண்டும் ஜெர்மனியில் சில பிரபுக்களால் குழப்பங்கள் விளைவிக்கப்பட்டன. குறிப்பாக, சுவாபியா, லொரெய்ன், மெய்ன்ஸ் (Mainz) ஆகியவற்றின் கோமகன்கள் ஆட்டோவின் ஆட்சியைக் குறை கூறிக் கலகங்கள் விளைவித்தார்கள். ஆட்டோ இத்தாலியிலிருந்து விரைந்து வந்து அக்கலகங்களை முறியடித்தார். லொரெய்னை இரண்டாகப் பிரிந்து இரண்டு கோமகன்களிடம் ஆட்சியை ஒப்படைத்து அதன் வலிமையை ஒடுக்கினார்.

**ஹங்கேரி மீதான வெற்றி :**

இந்த உள்நாட்டுக் கலகங்களைப் பயன்படுத்திக் கொண்டு கி.பி. 955 ஆம் ஆண்டில் ஹங்கேரியர்கள் பேரரசின் மீது படையெடுத்தார்கள். அவர்கள் டான்யூப் நதிப் பகுதியில் பெரும் சேதம் விளைவித்தார்கள். ஆட்டோ பெரும்படையுடன் சென்று ஹங்கேரியர்களை எதிர்த்துப் போரிட்டார். லெச்பெல்ட் (Lechfeld) என்ற இடத்தில் நடைபெற்ற கடும் போரில் ஹங்கேரியர்கள் எந்த காலத்திலும் ஹங்கேரியர்களால் ஆபத்து இல்லை என்று சொல்லும் அளவுக்கு அவர்களுடைய வலிமை ஒடுக்கப்பட்டது.

**சாக்சனியை இரண்டாகப் பிரித்தல் :**

கி.பி. 956 ஆம் ஆண்டில் ஆட்டோ ஒரு பெரிய தவறு செய்து விட்டார் என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும். அவருடைய சொந்த கோமகனாட்சிப் பகுதியாகிய சாக்சனியை ஈஸ்ட் பேலியா (லீசெர், எல்ப் நதிகளுக்கிடைப்பட்ட பகுதி), வெஸ்ட் பேலியா என இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, ஈஸ்ட் பேலியாவை ஹெர்மன்பில்லுங்க் (Hermann Billung) என்பவருக்குக் கொடுத்துக் கோமகனுக்குரிய அதிகாரங்களுடன் ஆட்சி செய்ய அனுமதித்தார்.

இதுகாலப் போக்கில் 'பில்லுங்கர் கோமகன்கள்' (Billunger Dukes) என்பவர்கள் உருவாவதற்கு வழி வகுத்தது. இவர்கள் பின்னர் ஜெர்மனியில் இணைப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் பெருந்தடையாக இருந்தார்கள் என்பதைப் பிற்கால வரலாற்று நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

**மகனை இணை அரசராக முடிசூட்டுதல் :**

ஆட்டோவின் ஆட்சிக் காலத்தில் வேறொரு முக்கியமான நிகழ்ச்சி நடைபெற்றது. கி.பி. 961-ஆம் ஆண்டில் ஆட்டோவின் ஏழு வயது மகன் இரண்டாம் ஆட்டோ, இணை அரசனாக முடிசூட்டப்பட்டார். தந்தைக்குப் பின் அவரே வாரிசு என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டை ஆட்டோ மகிழ்ச்சியுடன் செய்து முடித்தார். ஏனெனில் மீண்டும் இத்தாலிக்குச் செல்வதாகத் தகுந்த நேரத்தை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவர் இத்தாலிக்குச் சென்று விட்டால் ஜெர்மனியில் ஓர் இணை அரசர் இருப்பதே நல்லது என அவர் கருதினார்.

**மகா ஆட்டோ புனித ரோமானியப் பேரரசராக முடிசூட்டப்படுதல்**

ஆட்டோ எதிர்பார்த்த வண்ணமே கிபி. 962 ஆம் ஆண்டில் ரோம் திருச்சபையில் உட்பூசல்கள் மலிந்தன. உள்ளேயும் வெளியேயும் சண்டைகள் நடந்து வந்தன. அப்பொழுது திருச்சபையின் தலைமைப் போப்பாக இருந்த பன்னிரெண்டாம் ஜான் ஆட்டோவின் உதவியை நாடினார். ஆட்டோ உடனே வந்து கலகங்ளை அடக்கிப் போப்புக்கு உதவி செய்தார். இவ்வுதவியைப் போப் மிக முக்கியமானதாகக் கருதினார். எனவே அதே ஆண்டில் போப் பன்னிரெண்டாம் ஜான் ஆட்டோவுக்கு முடிசூட்டி அவை ஜெர்மனி நாட்டின் புனித ரோமானியப் பேரரசர் என அறிவித்தார்.

கி.பி. 800 ஆம் ஆண்டு சார்லமெனின் காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சி மீண்டும் கி.பி. 962-ஆம் ஆண்டில் நடைபெற்றது. எனினும் இவ்விரு நிகழ்ச்கிகளுக்கும் வேறுபாடு உண்டு. ஆட்டோவுக்கு முடி சூட்டும் போது எந்தவிதமான ஆடம்பரமும் மகிழ்ச்சிம் மக்களிடம் காணப்படவில்லை. அவர்களிடம ஒரு வகையான அச்சமும் வெறுப்புமே காணப்பட்டன. இத்தாலி தனித்தியங்குவதையே அவர்கள் விரும்பினார்கள். ஆனால் இவர் இத்தாலி ஜெர்மனியின் அதிகாரத்திற்கு உட்பட்டே நடக்க வேண்டும். இத்தகைய அடிமை வாழ்க்கையை அவர்கள் விரும்பவில்லை. இருப்பினும் இவ்வாண்டிலிருந்து புனித ரோமானியப் பேரரசு கி.பி. 1806 ஆம் ஆண்டு மாவீரன் நெப்போலியனினால் வீழ்த்தப்படும் வரை பல்வேறு காலங்களில் உயர்ந்தும் , தாழ்ந்தும் இருந்து வந்தது.

**போப் மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்டல் :**

போப் அரசருக்கு முடி சூட்டினாரென்றாலும் அரசரின் அதிகாரங்களுக்கு அடங்கியே போப் நடந்து கொண்டார். திருச்சபையில் நடைபெற்ற எல்லா விவகாரங்களும் அரசரின்

அனுமதியுடன் நடைபெற்றன. மதகுருமார்கள் தேர்ந்தெடுக்கப்படுவதிலமு் அரசனின் ஆலோசனைக்கேற்பவே எல்லாத் தேர்தல்களும் நடைபெற்றன. அரசனைத் சேர்ந்த ஆட்களே அவருடைய பிரதிநிதிகளின் மேற்பார்வையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இருப்பினும் ஓராண்டுக்குள் பேரரசர் ஆட்டோவுக்கும் போப் பன்னிரெண்டாம் ஜானுக்குமிடையே கருத்து வேறுபாடுகளும், பூசல்களும் ஏற்பட்டன. அரசனின் ஆணைகளை ஏற்க போப் மறுத்தார். எனவே ஆட்டோ ரோமுக்குப் படையுடன் சென்று போப்பைப் பதவியினின்று நீக்கி எட்டாம் லியோ என்பவரைத் தலைமைப் போப்பாக நியமித்தார். இந்நிகழ்ச்சியும் புனித ரோமானியப் பேரரசின் வரலாற்றில் மிக முக்கியமானதாகும். போப் அரசரின் அதிகாரங்களுக்கு உட்பட்டவரே என்ற கருத்து நிலையாக இல்லாவிட்டாலும் தற்காலிகமாக நிரூபிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளால் பிற்கா புனித ரோமானியப் பேரரசின் வரலாற்றில் போப்புக்கும் அரசருக்கும் இடையே அதிகாரப் போட்டியும் போர்களும் நடைபெற்றன. அவற்றைப் பின்னர் காண்போம்.

**கிழக்கு ரோமானியப் பேரரசின் மீது வெற்றி :**

இந்நிலையில் கிழக்கு ரோமானியப் பேரரசின் அரசர் ஆட்டோவைப் புனித ரோமானியப் பேரரசின் அரசராக ஏற்றுக் கொள்ள மறுத்தார். அத்தகைய பெருமைக்கு அவர் தகுதியில்லாதவர் எனக் குறை கூறினார். ஆகவே ஆட்டோ கிழக்கு ரோமானியப் பேரரசின் மீது படையெடுத்துக் கிரீசில் எதிரியின் படைகளைத் தோற்கடித்துத் தன் பெருமையை நிலைநாட்டினார். கிழக்கு ரோமானியப் பேரரசின் அரசர் தன் மகள் தியோபனாவை (Theophano) ஆட்டோவின் மகன் இரண்டாம் ஆட்டோவிற்குத் திருமணம் செய்வித்து, ஆட்டோவைப் புனித ரோமானியப் பேரரசராக ஏற்றுக் கொண்டார். இவ்விரண்டு அரசுகளுக்கிடையே இனிய உறவுகள் தொடர்ந்தன. இவ்வாறு ஆட்டோ புனித ரோமானியப் பேரரசின் வலிமை வாய்ந்த பேரரசராக விளங்கி முப்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்து தன் பெருமைகளை உலகறியச் செய்தார்.

**ஆட்டோவுக்குப் பின் வந்தோர்**

**a) இரண்டாம் ஆட்டோ :**

முதலாம் ஆட்டோவுக்குப் பின்னர் அவருடைய மகன் இரண்டாம் ஆட்டோ (Otto II) கி.பி 973 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். இவர் ஆட்சிக்கு வந்தவுடன் பவேரியா மற்றும் சுவாபியா முதலிய கோமகனாட்சிப் பகுதிகளில் வாரிசு உரிமைப் பிரச்சனைகளும், குழப்பங்களும் ஏற்பட்டன. அவற்றை வாரிசு உரிமைப் பிரச்சனைகளும் குழப்பங்களும் ஏற்பட்டன. அவற்றை அமைதியான முறையில் தீர்த்து வைத்தார். பவேரியாவின் நிலப் பரப்பைக் குறைத்து அதன் வலிமையை ஓரளவு ஒடுக்கினார். ஜெர்மனியில் ஏற்பட்ட இந்தக் குழப்பங்களைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பிரெஞ்சு அரசர் லொதைர்

(டுழவாயசைந) லொரெய்ன் கோம்கனாட்சிப் பகுதியின் மீது படையெடுத்தார். தலைநகர் ஆகென்னில் இருந்த இரண்டாம் ஆட்டோ பெரும்படையுடன் விரைந்து சென்று பிரெஞ்சுப் படைகளை விரட்டியடித்தார். லொரைய்ன் பாதுகாக்கப்பட்டது.

கி.பி. 980 ஆம் ஆண்டு இரண்டாம் ஆட்டோ இத்தாலிக்குச் சென்றார். இரண்டாண்டுகள் அவர் அங்கேயே தங்கியிருந்தார். அப்பொழுது தெற்கு இத்தாலியில் சிசிலித் தீவிலிருந்து சென்ற சாரசென்களால் (Saracens) கலகங்கள் விளைவிக்கப்பட்டன. அவற்றை அடக்க இரண்டாம் ஆட்டோ சென்ற போது அவருடைய படை பெருந்தோல்வியைக் கண்டது. இத்தோல்வி அவருக்குப் பெரும் இழுக்கைத் தேடித் தந்தது.

அதற்குள்ளாக எல்ப் நதிப் பகுதியில் ஸ்லாவ்கள் ஜெர்மனியின் அடக்கு முறை ஆட்சியை எதிர்த்து உரிமைக் குரலெழுப்பிக் கலகங்களை விளைவித்தார்கள். அங்கே அனுப்பப்பட்ட ஜெர்மானியப் படைகளும் பெருந்தோல்வியைக் கண்டன. இத்தோல்விகளினால் மனமுடைந்த இரண்டாம் ஆட்டோ கி.பி. 983 ஆம் ஆண்டில் இறந்து விட்டார்.

**டி) மூன்றாம் ஆட்டோ :**

இரண்டாம் ஆட்டோவுக்குப் பின் அவருடைய நான்கு வயது மகன் மூன்றாம் ஆட்டோ (Otto III) அரியணை ஏறினார். அவருடைய தாய் தியோபானோ அவருக்குக் காப்பாளராக இருந்து ஆட்சி செய்தார். இளம் வயதில் கலை, மற்றும் அறிவியல் துறை வல்லுநர்களிடம் கல்வி கற்றார். அதனால் அவரிடம் நுண்ணறிவும் பரந்த நோக்கும் காணப்பட்டன. கிபி 996 ஆம் ஆண்டில் இருந்து தன் விருப்பப்படிச் செயல்படத் தொடங்கினார்.

இவர் ஜெர்பர்ட் (Gerburt) என்ற கணக்கியல் மேதையை போப்பாக நியமித்தார். ஜெர்பர்ட், இரண்டாம் சில்வெஸ்டர் என்ற பெயரை ஏற்றுப் போப்பானார். இவர் கார்டோவா பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றவர். மூன்றாம் ஆட்டோ பெரும்பாலும் ரோம் நகரத்திலேயே வாழ்ந்து வந்தார். அதனால் ஜெர்மனியிலும் பின்னர் இத்தாலியிலும் கலகங்கள் ஏற்படத் தொடங்கின. கிபி. 1002 ஆம் ஆண்டு அவர் ரோமில் இருந்த போது ரோமானியர்கள் அவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்கள். அவரைத் தங்களுடைய பேரரசராக எற்றுக் கொள்ள மறுத்தார்கள். அவர்களின் போக்கைக் கண்டு மூன்றாம் ஆட்டோ வேதனைப்பட்டார். அதே ஆண்டு ரோமிலேயே அவர் தன்னுடைய இருபத்து மூன்றாவது இளம் வயதிலேயே இறந்து விட்டார்.

புனித ரோமானியப் பேரரசின் ஏறக்குறைய பத்து நூற்றாண்டுகளான வாழ்வில் ஒரு சில அரசர்களே சிறந்தவர்களாக இருந்தார்கள். அந்த அரசர்களில் சிலரின் ஆட்சிக் காலங்களிலும் அரசருக்கும், போப்புக்கும் தீராத பூசல்கள் நடைபெற்று வந்தன. இவை தவிர வேறு பல குறைபாடுகளும் இப்பேரரசில் இருந்ததால் பிரான்சு நாட்டுத் தத்துவமேதை வால்டேர் ‘புனித

ரோமானியப் பேரரசு’ புனிதமானதும் அல்ல, ரோமானிய அரசும் அல்ல, பேரரசும் அல்ல’ எனக் குறிப்பிட்டார்.

**நிலமானிய முறை**

## (FEUDALISM)

இடைக்கால ஐரோப்பிய நாகரீகத்தின் முக்கியமான கூறுகளுள் நிலமானிய முறையும் ஒன்று. இது படைமானிய முறை என்றும் அழைக்கப்படுகிறது. கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் பதிமூன்றாம் நூற்றாண்டு வரை ஐரோப்பாவில் நிலவிய பொருளாதார, சமுதாய, அரசியல் நிலைமைக்கும் அதன் தொடர்புகளுக்கும் சேர்த்து கொடுக்கப்பட்ட பெயரே நிலமானிய அமைப்பாகும். பாதுகாப்புப் பணி மற்றும் பணம் செலுத்துதல் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த சமுதாய நிலை என்றும் கூறலாம். நிலத்தையே தொடர்புச் சங்கிலியாகக் கொண்டு நிலமானிய அமைப்பு முறை ஏற்பட்டது.

குநரனயடளைஅ என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கீழாழ் தன் பொறுப்பில் கொண்டிருந்த சிறு நிலப்பரப்பு பொருள்படும். இந்த ஆங்கில வார்த்தை Feudam என்ற லத்தீன் சொல்லிலிருந்து தோன்றியது ஆகும். நிலம் மட்டுமே சக்திக்கும் செல்வத்திற்குமான ஒரே ஏதுவாக இருந்த காலத்தில் இந்த நிலமானிய முறை வளர்ச்சியடைந்தது. மேற்கு ரோமானியப் பேரரசு அழிந்த நாளிலிருந்து சுமார் ஏழு நூற்றாண்டுகளாக நிலமானிய முறை வளர்ந்து வந்தது. ஐரோப்பாவில் பிரான்ஜ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளிலும் மற்றும் சில நாடுகளிலும் நிலமானிய முறை நடைமுறையில் இருந்தது.

**நிலமானிய முறையின் தோற்றம் :**

இந்த நிலமானிய முறை எப்போது எவ்வாறு தோன்றியது என்று கூறுவது மிகவும் கடினம் ஆகும். இம்முறையின் வளர்ச்சி மிக மெதுவாகவும், நாட்டிற்கு நாடு வேறுபட்டும் காட்சியளித்தது. கொடுங்கோன்மையும், குழப்பமும் மலிந்து மக்கள் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு இல்லாமல் திணறி நின்ற சிக்கலான இடைக்காலத்தில் இம்முறை தோன்றியிருக்கலாம். இது எந்த ஒரு அரசரின் சட்டம் அல்லது ஆணையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதல்ல. மக்கள் தங்கள் உயிருக்கும் உடமைக்கும் ஆபத்து ஏற்பட்ட போதும், கொடுங்கோன்மையிலிருந்து தங்களைப் பாதுகாத்து கொள்வதற்கும், தங்கள் உரிமையை விட்டுக் கொடுக்கவும் முன் வந்தனர். தங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பவருக்கு தங்கள் நிலங்களை கொடுத்ததோடு அவருக்கு கீழ்ப்பணிந்து நடக்கவும் தயாராக இருந்தனர்.

சார்லமென் ஆட்சிக் காலத்திற்கு முன்னரே நிலமானிய முறை வழக்கத்திலிருந்ததை அறிய முடிகிறது. ஜஸ்டீனியன் காலத்திற்குப் பிறகு ஏற்பட்ட பல்வேறு சூழ்நிலைகள் நிலமானிய முறையின் வளர்ச்சிக்கு அடிகோலின சார்லிமென் (கி.பி. 768 – 814) மறைவிற்குப்

பிறகு பல காரணங்களால் கரோலிங்கிய பேரரசு சிதைந்து போகவே உள்நாட்டுப் போர்கள் மலிந்து போயின. அதனால் ஐரோப்பாவில் அரசியல் ஒழுங்கும் அமைதியும் குலைந்து போயின. அதனால் ஐரோப்பாவில் அரசியல் ஒழுங்கும் அமைதியும் குலைந்தது. வலிமையுள்ளவர்கள் வலிமையற்றவர்களை துன்புறுத்தினார்கள். அவர்கள் நிலம் பறிக்கப்பட்டது. அடிமையாக்கப்பட்டனர்.

மக்கள் பாதுகாப்புன்றி மிகவும் துன்பப்பட்டனர். எனவே தங்கள் பாதுகாப்பு கருதி சிறுநிலக்கிழார்கள், தங்கள் பக்கத்திலிருந்து ஆற்றல் மிக்க பிரபுக்களின் உதவியை நாடினர். ஆனால் பாதுகாப்பு இலவசமாக கிடைப்பதாக இல்லை. தேடியவர் தனது நில உரிமையை ஒப்படைத்த பின்னரே பாதுகாப்பு கிடைத்தது. நிலமற்ற மக்கள் தங்கள் சொந்த உடலுழைப்பை நிலமானிய பிரபுக்கு வழங்க முன்வந்தனர். இப்படி ஏற்பட்ட வழக்கங்களும் வாடிக்கைகளுமே நிலமானிய கொள்கையை உருவாக்கின.

**நிலமானிய முறை – ஒரு விளக்கம்**

இடைக்கால ஐரோப்பாவில் நில உடமையை அடிப்படையாகக் கொண்டு நிலவிவந்த ஒரு வகையான சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பே நிலமானிய திட்டம் என்று வழங்கப்பட்டது. சமுதாயத்தின் பல மட்டங்களில் இருந்த மக்களின் உறவுகளும் தொடர்புகளும் நில உடமையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. இது ஒரு விதமான பிரமிடு (Pyramid) அமைப்பைப் போல் இருந்தது.

ஆள்வோரையளும் ஆளப்படுபவர்களையும் இணைக்கும் கருவியாக விளங்கியது 'மானியம்' (Flef) என்பதாகும். அது அரசால் அளிக்கப்பட்டு பின்பரம்பரை பரம்பரையாக அனுபவிக்கப்பட்டு வந்த ஒரு சில உரிமைகளேயன்றி (Benefice) வேறெதுவும் இல்லை. இந்த உரிமைகள் எப்போதும் நில உரிமைகளாக மட்டும் இருக்க வேண்டும். என்ற கட்டாயம் அல்ல. அது பதவியாகவும், பணம் அச்சிடுதல் போன்ற உரிமைகளாகவும் கூட இருக்கலாம்.

நாட்டிலுள்ள எல்லா நிலப் பகுதிகளுக்கும் அரசரே உரிமையாளராகக் கருதப்பட்டார். அரசர் அந்த நிலத்தை பல பெருநிலப் பிரபுக்களுக்கு மானியமாகப் பகிர்ந்து கொடுத்தார். பெரு நிலப் பிரபுக்கள் தங்கள் உரிமையின் கீழ் இருந்த நிலத்தை பல கீழான்களுக்கு விட்டனர். கீழாள்கள் தங்கள் நிலத்தில் பல உட் குடிகளை வைத்துக் கொண்டு வேளாண்மை செய்தனர்.

இத்தகைய அமைப்பில் ஒவ்வொரு தரப்பினரும் தன் தலைவருக்கு பல ஊழியங்களைச் செய்தனர். ஒவ்வொரு நிலையிலும் நிலத்தை மானியமாகப் பெற்ற ஊழியர் தம் தலைவருக்கு தாம் உண்மை உள்ளவர் என்று விளக்கும் வகையில் ஊழிய முறை நடைபெற்றது. இத்தகைய முறை ஒரு பழக்கமாக இருந்ததே தவிர சட்டத்தின் அடிப்படையில்

செயல்படவிலலை என்றாலும் இந்த ஊழிய முறையே நிலமானிய திட்டத்தின் முதுகெலும்பாக அமைந்தது.

அரசன் பெருநிலப் பிரபுக்களுக்கு நிலமானியத்தை வழங்கும் நேரத்தில் அதற்கென ஒரு பெரியவிழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விழாவின் போது பெருநிலப் பிரபுக்கள் அரசருக்கு எல்லாவிதமான ஊழியங்களையும் செய்வதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். அரசரோ பெருநிலப் பிரபுக்களின் பாதுகாப்பிற்குப் பொறுப்பேற்பதாக உறுதிமொழி தந்தார். அதுபோலவே பெருநிலப் பிரபுக்களுக்கும் இடையேயும், பிரபுக்களும் கீழாள்களுக்கிடையேயும், கீழாள்களுக்கும் உட்குடிகளுக்கிடையேயும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. இதுவே நிலமானிய முறை அமைப்பு ஆகும்.

**நிலமானிய முறையின் சிறப்புக் கூறுகள் :**

**ய) தலைமை மானியதாரர் :**

மன்னர் இறைவனின் பிரதிநிதியாகக் கருதப்பட்டார். அவர் தெய்வீக உரிமைக் கொள்கையின் படி ஆண்டு வந்தார். அவர் ஆண்டவனிடமிருந்து நிலத்தைப் பெற்றார். நாட்டின் அனைத்து நிலமும் அவரது உடமையாகும். தாம் பெற்ற நிலத்தில் தமக்குப் போக மிஞ்சியவற்றை நிலமானியக் கட்டுப்பாட்டு முறையில் பகிர்ந்து மானியங்களாக மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுத்தார். நிலங்களைப் பெற்ற பிரபுக்களே நாட்டின் தலைமை மானியதாரர் (Tenents – in – Chief) ஆவர். இவர் தாம் பெற்ற நிலத்திற்குக் கைமாறாக அரசன் வேண்டும் போது ராணுவ சேவை செய்ய வேண்டியதிருந்தது. மேலும் இந்த மானியதாரர்கள் குறிப்பிட்ட தொகையும் மன்னருக்குச் செலுத்த வேண்டும். இந்த தலைமைமானிய தாரர்கள் டியுக்குகள், கவுண்டுகள், ஏரல்கள், மார்கிரேவ்கள் என்று ஒவ்வொரு நாட்டிலும் பல விதமாக அழைக்கப்பட்டன.

**டி) சிறிய மானியதாரர் : (கீழாள்)**

தலைமை மானியதாரர் தாம் பெற்ற நிலத்தைப் பிரித்து கீழாள்களுக்குக் கொடுத்தனர். இவர் சிறிய மானியதாரர் எனப்பட்டார். இந்த இரண்டாம் வரிசை பிரபுக்கள் விஸ்கவுண்டுகள், பாரன்கள் (Viscounts, Baron) என்றும் அழைக்கப்பட்டனர். இவர் பெரிய மானியதாரருக்கு மண்டியிட்டு அவரது ஆளாக தம்மை ஒப்படைத்துக் கொண்டதோடு அவருக்கு என்றும் உண்மையாக இருப்பதாக வாக்குறுதியும் அளித்தார். அவரது ஊழியத்தை ஏற்ற பெரிய மானியதாரர் அதற்கு அடையாளமாக அவருக்கு ஒரு சின்னத்தையும் கையுறை (Clove) கொஈ கோல், ஈட்டி, ஒரு பிடிமண் - அளித்து அவரை மானியதாரர் ஆக்கினார்.

இவர்களுக்குள் ஆண்டை – கீழாள் என்ற உறவு ஏற்பட்டது. தான் பெற்ற நிலத்திற்கு கீழாள் ஆண்டைக்கு (பிரபு) போர்ப்பணி செய்ய வேண்டும். அவ்வூழியம் ஆண்டிற்கு நாற்பது நாட்களுக்கு மேல் நீடிக்ககூடாது. போர் பணியுடன் கீழாளின் கடமை முடிந்து விடவில்லை.

பல்வேறு காலங்களில் அவர் பிரபுக்கு உதவ வேண்டும். தந்தை இறந்த பிறகு கீழாள் வாரிசாக வந்தால் பிரபுக்கு அவவர் வாரிசுக் கட்டணம் தர வேண்டும். பிரபு பயணம் செய்யும் போதும் வேட்டைக்குச் செல்லும் போதும் உதவி செய்ய வேண்டும். பிரபு சிறைப்படுத்தப்பட்டால் அவரது விடுதலைக்கு கீழாள் உதவி செய்ய வேண்டும். பிரபு சிலுவைப் போருக்கு சென்றால் பண உதவி செய்ய வேண்டும். மானியதாரர் வீட்டில் அவர் மகன் திருமணத்தின் போதும் பொருள் கொடுக்க வேண்டும். கீழாள் ஒருவர் வாரிசின்றி இறந்து விட்டால் அவரது மானியத்தை வேறொருவருக்கு அளிக்க பிரபுக்கு உரிமை உண்டு.

உ) உட்குடிவாரதார்கள்:

கீழான்கள் தாங்கள் பெற்ற நிலங்களை உட்குடிகளுக்குப் பகிர்ந்து அளித்தார்கள். இவர்கள் உரிமை மிக்கவர்களாக காணப்பட்டார்கள். இவர்கள் பண்ணையாட்கள் எனவும் நைட்டுகள் (Knights) எனவும் அழைக்கப்பட்டனர். நிலப் பண்ணைதாரர்கள் நிலத்தோடுகள் ரேசப்பிணைக்கப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்கள் அடிமைகள் அல்ல. அவர்கள் மீது பிரபுக்கள் ஆதிக்கம் செலுத்தவோ அவர்களை கொல்லவோ முடியாது. இந்தப் பண்ணையாள் பணமாகவோ மூன்று வரிகளைச் செலுத்தினார்.

முதலாவது தலைக்கட்டுவரி. இந்த (Head Tax) வரியை தனது பிரவின் மூலம் அரசனுக்குச் செலுத்தி வந்தார். இது தவிர நிலக் குத்தகை (Rent) மற்றும் நிலமானியப் பிரபுவால் தம் விருப்பம் போல் விதிக்கப்படும் தீர்வை ஆகியவற்றையும் அவர் செலுத்த வேண்டும். மேலும் அவர் தான் பயிரிட்ட மகசூலில் பத்தில் ஒரு பங்கையும், தனது கால்நடையில் பத்தில் ஒரு பங்கையும் நிலமானியப் பிரபுக்கு செலுத்தி வந்தார். மேலும் நிலமானிய பிரபுவின் நிலத்தில் வாரத்தில் மூன்று நாட்களுக்கு ஊதியம் இல்லாமல் வேலை செய்ய வேண்டும். மேலும் பிரபுவுக்கு வேலி அமைத்தல், ஆடு மேய்த்தல், குழி வெட்டுதல் போன்ற வேலைகளையும் செய்ய வேண்டியதிருந்தது.

ன) நில அடிமைகள்

நிலமில்லாதவர்களும் நிலத்தை விட்டு நீங்க உரிமை இல்லாதவர்களுமான ஊழியர்கள் நில அடிமைகள் எனப்பட்டனர். ஆனால் இந்த நில அடிமைகளின் நிலமையும் காலத்துக்கு காலம் வேறுபட்டிருந்தது. சில இடங்களில் அவர்கள் நிலத்திலிருந்து கொண்டு வேலை செய்வதை மானியதாரர் தடுக்க முடியாது. அவர்களும் நிலத்திலிருந்து நீங்க முடியாது. மானிய நிலத்தோடு நீங்கமுடியாத படி இணைக்கப்பட்ட நில அடிமைகள் பிரபுக்களுக்கு செய்ய வேண்டிய பணி வரையறுக்கப்படவில்லை. அவர்கள் அடிமை வாழ்விலிருந்து விடுபட இரண்டே வழிகள் தானிருக்கின்றன. சமயக் குருமார்கள் ஆகிவட்டால் உரிமையோடு வாழலாம். அல்லது பிரபுவுக்கு பொருள் கொடுத்து விட்டு அவர்கள் இசைவுடன் பண்ணையிலிருந்து விடுபட்டவராக வெளியேறலாம்.

நிலமானிய சமுதாயத்தில் அடிமைகள் (Slaves) எவ்வகை உரிமையும் இல்லாமல் மிருகங்கள் போல் நடத்தப்பட்டனர். இவர்கள் பிரபுக்களின் நிலங்களிலும் வீடுகளிலும் பணியாற்றினர். அவர்களை விற்கவும், வாங்கவும் முடியும்.

இவ்வாறு நிலமானிய முறையில் மன்னரைத் தவிர ஏனைய பிரபுக்கள் அனைவரும் யாரேனும் ஒரு நபருக்கு அடிபணிந்து விசுவாசமாக நடக்க வேண்டும். நைட்டுகளை தவிர ஏனைய அனைவரும் யாரேனும் ஒருவருக்கு மேலதிபர்களாவர். நிலமானிய முறையில் மேற்கண்டவாறு ஒரு ஒழுங்கான அமைப்பு எல்லா இடங்களில் காணப்படவில்லை. நாட்டுக்கு நாடு, இடத்துக்கு இடம் அது வேறுபட்டது.

**நிலமானிய பிரபுக்களின் கடமைகளும் உரிமைகளும் :**

நிலமானிய பிரபுக்கள் பல்வேறு உரிமைகள், கடமைகள் என்ற வலையியல் கட்டுண்டு கிடந்தனர். பொதுவாக ஏதேனும் மூல உரிமைகளையும், நன்மைகளையும் வழங்கியவர் மேலதிபர், (Suzarin or Overloard) என்றும் பெற்றுக் கொண்டவர் மானியதாரர் (Vassal) என்றும் அழைக்கப்பட்டனர். இவர்களின் கடமைகளும் உரிமைகளும் வருமாறு :

**ய) மேலதிபரின் உரிமைகளும் கடமைகளும் :**

தனக்குக் கீழ்ப்பட்ட பிரபுக்களுக்கு நிலத்தைப் பகிர்ந்தளித்த மேலதிபர் பல உரிமைகளைப் பெற்றிருந்தனர். தனது மானியதாரர் இறந்துவிட்டால் அவரது வயது வராத மூத்த மகனுக்குப் பாதுகாப்பாளராக செயல்பட்டார். வாரிசில்லாமல் இறந்து விட்டால் அவரது சொத்துக்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தார். அதேபோல் நிலமானிய ஒப்பந்தத்தை மீறும் மானியதாரின் நிலங்களைப் பறிமுதல் செய்யும் உரிமை பெற்றிருந்தார். இப்படிப் பல உரிமைகளைப் பெற்றிருந்த மேலதிபருக்குச் சில கடமைகளும் இருந்தன. தனது மானியதாரர்களை அவர்களது எதிரிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும். மானியதாரர்களிடையே ஏற்படும் சச்சரவுகளை அவர் தீர்த்து வைக்க வேண்டும்.

**டி) மானியதாரர்களின் உரிமைகளும் கடமைகளும் :**

தங்களுக்கு பாதுகாப்பு வழங்காத, நீதி வழங்காத மேலதிபர்களை மறுதலிக்கவும், அவரது கட்டுப்பாடிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளவும் ஒரு மானியதாரருக்கே உரிமை இருந்தது. ஆனால் மானியதாரரின் கடமைகளோ அதிகம். தனது மேலதிபருக்கு படை உதவி செய்ய வேண்டும். எதிரிகளிடம் சிறைப்பட்டு விட்ட மேலதிபரை இழப்பீட்டுத் தொகை கொடுத்து மீட்க வேண்டும். தனது இருப்பிடம் வழியாக மேலதிபர் பயணம் செய்யும் போது அவரது வழிச் செலவுகளை ஏற்க வேண்டும். மேலும் அவரது மகள் திருமணத்தின் போதும், மகன் நைட் வீரனாகப் பதவி ஏற்கும் போதும் ஒரு குறிப்பிட்ட தொகையை மானியதாரர்

செலுத்த வேண்டும். மானியதாரர் இறந்த பின் அவரது மகன் தந்தையின் நிலங்களை முறைப்படி பெறும் போது தனது மேலதிபருக்கு ஒரு கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

**நிலமானியச் சட்டம்:**

நிலமானிய பிரபுக்கள் அனைவரும் தங்கள் பண்ணைகளில் நீதி மன்றங்களை வைத்திருந்தனர். இதில் வழிவழியாகப் பின்பற்றப்பட்ட வழக்காறுகளே சட்டங்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. குடியானவர்களின் சில்லறைப் பூசல்கள் விசாரிக்கப்பட்டன. சொத்துரிமை பற்றிய சட்டம் மிகச் சிக்கலாக இருந்தது. கொள்கையளவில் மன்னரோ எல்லா நிலங்களுக்கும் சொந்தமானவர். ஆனால் நடைமுறையில் நிலங்களை மானியதாரர்களே சொந்தமாகப் பயன்படுத்தினர். பழைய மரபுகளுக்கேற்ப நில உரிமை வழக்குகள் தீர்க்கப்பட்டன.

நீதிமன்றங்களில் பலவகை இருந்தன. பண்ணை நீதி மன்றங்களில் இரு குடியானவர்களுக்குமிடையே ஏற்பட்ட வழக்குகளும், குடியானவர்களுக்கும் நிலப் பிரபுக்களுக்கும் இடையே ஏற்பட்ட வழக்குகளும் விசாரிக்கப்பட்டன. வழக்குகள் ஜூரிகள் மூலம் விசாரிக்கப்பட்டன. சமய நீதி மன்றங்களின் குருமார்கள், திருச்சபை ஊழியர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் விசாரிக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேல் நீதிமன்றமாக மன்னரது நீதிமன்றம் விளங்கியது. இதுவே இறுதி முறையீட்டு நீதி மன்றமாகும்.

குற்றங்களை நிரூபிக்க நெருப்பு, நீர் முதலியவற்றைக் கொண்டு கடுமையான சோதனை முறை (Ordeal) பின்பற்றப்பட்டது. ஆனால் பல பிரச்சனைகள் நேரடிப்போர் (Duel) மூலம் தீர்க்கப்பட்டது. தண்டனையை மிகவும் கடுமையாக இருந்தன. கசையடி கொடுத்தல், சித்திரவதை செய்தல், தூக்குதண்டனை போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. சமய விரோதிகளை மைய நீதிமன்றங்கள் உயிரோடு கொளுத்தி விடுமாறு ஆணையிட்டன. பெண் கொலையாளிகள் சில சமயம் உயிரோடு புதைக்கப்பட்டனர்.

**நிலமானியப் பிரபுக்களின் வாழ்க்கை :**

பல்வேறு உரிமைகளையும், அதிகாரங்களையும் அனுபவித்து நிலமானிய பிரபுக்கள் பாதுகாப்பரண்கள் அமைத்துக் கொண்டனர். இவை மரத்தினாலும், கற்களாலும் கட்டப்பட்டிருந்தன. இந்த கோட்டைகளில் அடிக்கடி விருந்துகள் நடைபெற்றன. பலவகைப்பட்ட பழங்களும், காய்கறிகளும் உணவுப் பட்டியலில் இடம் பெற்றன. பிரபுக்களின் காப்பரண் மாளிகைகளைச் (Gastle) சுற்றி அகழிகள் அமைக்கப்பட்டிருந்தன. அந்த அகழியை கடக்க ஒரு தொங்கு பாலத்தைப் பயன்படுத்தினர். கோட்டைக்குள் டஞ்சன் (Donjon) என்ற பகுதிதான் பிரபுக்களின் இருப்பிடமாகும். ஒவ்வொரு பிரபுவும் தங்கள் கோட்டையில் ஏராளமான தானியங்களையும், உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தனர்.

இடைக்கால பிரபுக்கள் சிறு சிறு காரியங்களுக்காக அடிக்கடி போரிட்டுக் கொண்டனர். இதனால் இரு தரப்பிலும் பலர் மாண்டனர். இப்படிப்பட்ட சண்டையிடுதலைத் தடுக்க திருச்சபை சில சட்டங்களை இயற்றியது. வம்புக்கு போர் செய்யும் பிரபுக்களை விட கண்ணியமான முறையில் போரில் ஈடுபட்ட நைட்டுகள் (Knights) என்ற வீரர்களை நிலமானிய முறை தோற்றுவித்தது. இந்த வீரர்கள் கவசங்கள் அணிந்து கொண்டு குதிரை மீதேறி போரிட்டனர்.

ஒருவன் நைட்டாக வேண்டும் என்றால் நல்ல குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டும். போர்ப் பயிற்சியில் வல்லவனாகவும், அரண்மனை மரியாதைகள் (Elquette) தெரிந்தவனாகவும் இருக்க வேண்டும். அவன் இருபது வயதை அடைந்த பின்பு ஒரு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு அதில் பிரபு ஒருவர் தனது வாளால் அவனது தலையில் இருமுறை லேசாகத் தட்டி நைட் பட்டத்தை வழங்குவார். நைட் பட்டம் பெற்ற பின் தான் ஒரு வீரன் என்பதை நிரூபிக்க அவன் ஒரு சில துணிகர செயல்களைச் செய்து காண்பிக்க வேண்டும்.

நைட்டுகள் ஒரு வகையான கண்ணியமிக்க பண்பாட்டு நெறியினைக் கடைபிடிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இந்த நெறியே 'வீரப் பெருந்தகைமை' (Chivalry) எனப்பட்டது. இதன் படி ஒரு நைட் வீரன் தைரியமுள்ளவனாகவும், சுயநலமற்றவனாகவும், அடக்கமுடையவனாகவும் நடந்து கொள்ள வேண்டும். கிறிஸ்தவ மதத்தைப் பாதுகாப்பது, பெண்கள், குழந்தைகள், அனாதைகள், ஏழைகள் ஆகியோருக்கு உதவுவது போன்ற பல உயர்ந்த லட்சியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஓய்வு நேரங்களில் நிலமானியப் பிரபுக்கள் பல பொழுதுபோக்குகளை மேற்கொண்டனர். குதிரை மீதமர்ந்து ஒருவரையொருவர் உலுக்கி தள்ளும் ஜெஸஸ்ட் (JJust) என்ற விளையாட்டு பிரபலமானது. வேட்டையாடுதல் பிரபுக்களில் மற்றொரு பொழுதுபோக்காகும். ராஜாளி பறவைகளைக் கொண்டு மற்ற பறவைகளையும், விலங்குகளையும் வேட்டையாடினர். குதிரை மீதேறி ஆண்களும், பெண்களும் வேட்டையாட காடுகளுக்குச் செல்வர். வித்தைக்காரர்கள், கோமாளிகள், பாடினிகள் ஆகியோர்களின் பலவிதமான கலைகளை ரசித்துப் பார்த்தனர். சொக்கட்டான் ஆடுதல் மற்றொரு பொழுதுபோக்காகும்.

இவ்வாறு இடைக்கால நிலமானிய பிரபுக்கள் வீரத்திலும், தீரத்திலும் மட்டுமல்லாமல் கலைகளிலும், பொழுது போக்குகளிலும் சிறந்தவர்களாக விளங்கினர்.

**நிலமானிய முறையின் நிறைகள் :**

1. நிலமானிய முறை கி.பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு முடியும் வரை நன்றாக வளர்ந்து உச்சநிலையை அடைந்திருந்தது. தல ஆட்சிமுறை, நீதி வழக்கம், சட்டம் இயற்றுதல், படை, நிர்வாக அதிகாரம் ஆகிய எல்லாவற்றிற்குமே

அடிப்படையாகி விட்டது. நிலமானிய சமுதாயத்தில் சட்டம், அறிவு, பயன்யாவும் புறக்கணிக்கப்பட்டு வழக்கமும் சம்பிரதாயமும் மேலோங்கி அதைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தன. இறைமையோடு உள்ள இக்கால உரிமைகள் பலவற்றையும் இடைக்காலத்தில் நில உரிமை அளித்தது.

2. நிலமானிய முறை சமூக வளர்ச்சியில் இயற்கையாக ஏற்பட்ட ஒருபடியாகும். அச்சமும் ஒங்கீனமும் நிலவியபோது, அரசாங்கத்தால் அமைதியை நிலைநாட்ட முடியாமற்போன காலத்தில், பேரரசை பிடித்த தலைவர்கள் மக்களை அடிமைப்படுத்திக் கொடுங்கோன்மையினை நிறுவிய நேரத்தில், மிலேச்சர்களால் ஆட்சி கவிழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இந்த அமைப்பு தோன்றியது. இது ஒருவருக்கொருவர் காப்புறுதிகளும் மிகப்பெரிய சமூக சாதனமாக இருந்தது.

3. பற்றுறுதி என்ற அடிப்படையின் மீது சமுதாய ஒத்திசைவு எழுப்பப்பட்டது. நிலமானிய சமுதாயத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் தாம் ஆற்ற வேண்டிய கடமை, செலுத்த வேண்டிய தொகை, தமது சேவை ஆகியவற்றை ஒழுங்காக நடத்தினர். பிரபுக்களும், மானியதாரர்களும் ஒருவரை ஒருவர் சார்ந்தே நின்றனர். இவ்வாறு ஒருவருக்கொருவர் உதவியும் ஒத்துழைப்பும் நிலைத்தது. நிலமானிய சமுதாயம் ஒருவருக்கொருவர் உதவும் சமுதாயமாகச் செயல்பட்டு வந்தது.

4. வேளாண்மை மற்றும் கைவினைப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்ததன் மூலம் பல்வேறு பொருளியல் சிக்கல்களைத் தீர்க்க இம்முறை உதவியது. பண்ணையிலேயே தானியங்கள், காய்கறிகள், கனிகள் ஆகியவை பயிரிடப்பட்டன. இவை தவிர சமுதாயத்திற்குத் தேவையான பிற பொருட்கள் அனைத்தம் பண்ணையிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வாறு உற்பத்தி அதிகரித்தது. பொருட்கள் மக்களுக்குத் தாராளமாகவும் மலிவாகவும் கிடைத்தன.

5. அரசாங்க ஒப்பந்தக் கொள்கை, சட்டங்களின் இறைமை, வரையறைக்குட்பட்ட முடியரசு, பிரதிநிதித்துவ அரசாங்கம் போன்ற பல நல்ல அரசியல் கருத்துக்களை உலகிற்கு வழங்கியது நிலமானிய முறையே ஆகும்.

6. வீரப் பெருந்தகைமை (Chivalry) என்ற கண்ணிய மிக்க ஒரு வீரமரபை வளர்த்து நிலமானிய முறையே ஆகும். இதனால் நாட்டில் வீரம் வளர்ந்தது. The Kingts of Bath, Tha Knights of Gorter, Golden Fleece போன்ற சுயநலமற்ற வீர கூட்டங்கள் பிற்காலத்தில் ஏற்பட வழி செய்தது. பதினெட்டு பத்தொன்பதால் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் மலர்ந்த புத்துணர்ச்சி இயக்கத்தில் இந்த வீரப் பெருந்தகைமை மரபின் செல்வாக்கு பெரிதும் காணப்பட்டது.

7. சுத்த வீரர்களான நைட்டுகளைப் புகழ்ந்து பல புலவர்கள வீர காவியங்களை இயற்றினார். இதனால் ஐரோப்பிய இலக்கியம் நன்கு வளர்ச்சியடைந்தது.

8. நிலமானிய ஏற்பாட்டில் திருச்சபை முக்கியமான இடத்தைப் பெற்றது. தன்பால் சரணடைந்த சிறுநிலக்கிழார்களின் உடமைகளையும், உயிரையும், உரிமைகளையும் பாதுகாத்தது. நிலதானம் செய்த பக்தர்களுக்காக பிரார்த்தனைகளை ஏற்பாடு செய்தது.

9. மக்களின் வாழ்க்கையில் ஒரு வகையான ஒழுங்கையும், நன்னடத்தையையும் அது வளர்த்தது. சட்டத்தின் வலிமை குன்றியிருந்த அக்காலத்தில் திருச்சபையின் ஒழுக்க விதிகளோ (Moral Laws) சமுதாயத்தின் கட்டுப்பாட்டையும் , அமைதியையும் ஏற்படுத்தின. முக்கியமாக ஐரோப்பாவில் படையெடுத்த முரட்டு வகுப்பினரிடம் நாகரீகத்தை வளர்த்த பெருமை திருச்சபைக்கே உரியதாகும்.

10. நிலமானிய முறையின் இறுதிக் காலத்தில் அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. மனிதாபிமானம் தோன்றியது. தனிமனிதர் சுதந்திரத்திற்கும், பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்கும் வழி வகுத்தது.

**நிலமானிய முறையின் குறைகள் :**

1. நிலமானிய முறையால் தீமைகளும் ஏற்பட்டன. பேரரசுகள் சிறு சிறு மானியங்களாகப் பிரிக்கப்பட்டதால் மத்திய அரசாங்கங்கள் வலுவிழந்தன. நாட்டில் அமைதியையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த முடியாமல் இருந்தது. ஒவ்வொருவருக்கும் தனக்கு மேற்பட்டவருக்கு கட்டுப்பட்டனரே தவிர மத்திய அரசாங்கத்திற்கு உண்மையுள்ளவர்களாக இருக்கவில்லை. தேசிய உணர்வு குறைந்து விட்டது.

2. பிரபுக்கள் பெரிய ராணுவங்களை வைத்திருந்ததால் அவர்கள் மன்னரின் மேலாண்மைக்கே அரைகூவல் விடுத்தனர். நிலமானிய ஒப்பந்தங்களை ஏற்றுக் கொண்ட மானியதாரர்களை தங்கள் பொறுப்புகளை நிறைவேற்றும் படி கட்டாயப்படுத்தவில்லை. பணத்திற்கும், மனித உதவிக்கும் அவர்கள் முற்றிலும் பண்ணையாளர்களையே சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பிரபுக்கள் தாங்கள் விரும்பியபடி எல்லாம் செயல்பட்டு நாட்டின் அமைதியைக் குலைத்தனர்.

3. சில வேளைகளில் நிலமானிய முறை அமைதியைக் கெடுத்தது. பல நாடுகளில் மானியதார பிரபுக்கள் தங்களுக்கிடையே போரிடுவதற்கே ராணுவங்களைப் பயன்படுத்தினர் சில வேளைகளில் மன்னருக்கு எதிராகவும் போரிட்டனர். இதனால் உள்நாட்டுப் போர்கள் ஏற்பட்டு அமைதி குலைந்து விவசாய, தொழில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. ஸ்டீபன் (1134- 54) என்ற ஆங்கில மன்னர் காலத்தில் இங்கிலாந்தில் நிலவிய குழப்பமான நிலை இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் .

4. நிலமானிய முறை, சமுதாயத்தை தேக்க நிலையில் வைத்தது.. பண்ணை அறிவியல், சமுதாய பொருளியல் மற்றும் சமயத் தேவைகளில் தற்சார்புடன் நின்றன. பண்ணைகள் தாமே ஒரு சிறு உலகமாகக செயல்பட்டன. எனவே, பண்ணை வாழ்மக்கள் கிடைத்தவற்றோடு அமைதியானவர்களாக உலகின் பிற்பகுதிகளில் நிகழ்வுறும் மாற்றங்கள் குறித்து அக்கரை இல்லாதவர்களாக இருந்தனர்.

5. சுயநலமும் சுரண்டல் போக்கும் கொண்ட மானியதாரர்களால், சாதாரண மக்களும், நிலத்தில் பணியாற்றுவோரும் பெருந் தொல்லைகளுக்கு ஆளாயினர். மக்களைக் காப்பதற்கோ அவர்கள் நல்வாழ்வில் அக்கரை கொள்வதற்கோ பிரபுக்கள் முன்வரவில்லை. பண்ணை உழைப்பாளிகளின் துயரங்கள் அதிகமாயின.

6. இம்முறையின் விளைவாக விளை நிலங்களில் கூட அதிக முன்னேற்றம் காணப்படவில்லை. அம்மக்கள் உரிமை உணர்வோடு செயல்படத்தக்க அரசியல் அரசியல் விழிப்புணர்ச்சியும் ஏற்படவில்லை. பொருளியல் அளவிலும் கூட இம்முறை முற்போக்கற்றதாக, நெகிழ்ந்து போகாத இயல்பினதாக இருந்தது. உற்பத்தி துறையில் புதிய உத்திகளை கையாள்வதில் பிரபுக்கள் அக்கறை காட்டவில்லை. அவர்கள் தமது உரிமைகளையும் வசதிகளையும் பாதிக்கும் எந்த புதிய முறையையும் அறிமுகப்படுத்த விரும்பவில்லை.

7. கலைகளும் இலக்கியமும் ஓரளவுதான் வளர்ந்தன. படைவீரனுக்கிருந்த மதிப்பு ஒரு புலவனுக்கு இல்லை. எனவே இடைக்கால ஐரோப்பியரின் அறிவியல் வாழ்வில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது. தனிமனிதர்களின் ஆற்றல்கள் குழுக்களால் தாக்கப்பட்டு முழு வளர்ச்சிப் பெற முடியாமல் தவித்தன.

8. நிலமானிய முறைாயல் திருச்சபையின் கௌரவம் பெரிதும் பாதிக்கப்பட்டது. பல பிஷப்புகளும் குருமார்களும் செல்வத்தின் திளைத்தனர். சுகபோகங்களில் ஆழ்ந்தனர். எனவே அவர்களது மதிப்பும் மரியாதையும் நாளடைவில் குறைந்தது. மன்னர்கள் குருமார்களை அலட்சியம் செய்தனர். இதனால் மன்னர்களுக்கும் திருச்சபைக்குமிடையே போராட்டம் ஏற்பட்டது. இதனால் இருதரப்பினரின் மதிப்பும் குறைந்தது.

9. நிலமானிய முறையில் நீதி சரியாக வழங்கப்படவிலலை. பெரும் பிரபுக்கள் செய்த குற்றங்கள் மன்னிக்கப்பட்டன. ஆனால் சிறு பண்ணையாட்கள் செய்த குற்றங்களுக்குக் கடுந்தண்டனைகள் வழங்கப்பட்டன. பரஸ்பரம் போரிட்டுக் கொள்வதின் மூலமே பல வழக்குகள் தீர்க்கப்பட்டது. இதனால் பலவானே நியாயவான் என்ற கொள்கை வென்றது. குற்றங்களை மெய்ப்பிக்க கடுஞ்சோதனைகள் (Ordeal) மேற்கொள்ளப்பட்டன.

**நிலமானிய முறையின் வீழ்ச்சிக்கான காரணங்கள் :**

பதினான்காம் நூற்றாண்டிலிருந்து இந்த நிலமானியமுறை வீழ்ச்சியடையத் தொடங்கியது. அதற்கான காரணங்கள் வருமாறு :

1. பலரை வாட்டி வதைந்து ஒரு சிலரை மட்டும் பெருமைப்படுத்தும் எதுவானாலும் நாளடைவில் அது 'நசித்து விடும் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். மேலும் காலத்திற்கேற்ற படி நிலமானிய முறை வளைந்து கொடுக்க மறுத்தது. எனவே இதற்கு பல எதிரிகள் தோன்றினர். இதனால் நிலமானிய முறை வீழ்ச்சியடைந்தது.

2. கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்குமிடையே நடைபெற்ற சிலுவைப் போர்களில் கலந்து கொண்ட சக்தி வாய்ந்த பல நில பிரபுக்கள் இறந்து விட்டனர். பலர் ஏழ்மையடைந்து விட்டனர். பிரபுக்கள் வலிமை இழந்தனர். மேலும் படைவீரர்களாகப் பணியாற்றிய நில அடிமைகள் பலருக்கு விடுதலை வழங்கப்பட்டது. இதனால் பல பண்ணைகளில், பண்ணையார் குடியானவர் இருவருமே இல்லாத நிலை ஏற்பட்டது. இதனால் நிலமானிய அமைப்பு ஆட்டம் கண்டது.

3. நகரங்களின் வளர்ச்சி நிலமானிய முறையின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. குடியானவர்கள் பண்ணைகளிலிருந்து தப்பித்து அருகிலுள்ள நகரங்களில் போய் வேலை செய்தனர். அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைத்தது. மேலும் அங்கு உரிமக் கோட்பாடும், மக்களாட்சிக் கோட்பாடும் வளர்ந்து வந்ததால் நிலமானிய அமைப்பிற்கு அங்கு இடமில்லாமல் போய் விட்டது.

4. வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து துப்பாக்கிகளும், பீரங்கிகளும் பயன்படுத்தப்பட்டன. இவைகளைப் பயன்படுத்தி போர்கள் நடைபெற்ற போது நிலமானியப் படையும் அவர்களது கோட்டைகளும் பயனற்றுப் போயின. இதனால் பிரபுக்கள் வலிமை இழக்க மன்னர்கள் கை ஓங்கியது.

5. மத்திய தர வர்க்கத்தினர் எழுச்சியும் நிலமானிய முறையின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும். இம்மக்கள் பிரபுக்களின் தன்னலப் போக்கினை எதிர்த்து அவர்களை அடக்கி ஒடுக்குவதில் அரசருக்கு உதவத் தயாராக இருந்தனர்.

6. ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் அடுத்தடுத்து தோன்றிய வலிமைமிக்க மன்னராட்சி முறை நிலமானிய முறையை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றது. ஏழாம் ஹென்றி போன்ற வலிமைமிக்க அரசர்கள் பிரபுக்களின் ஆதிக்கத்தை ஒழித்தனர்.

7. இடைக்காலத்தின் பிற்பகுதியில் தோன்றிய பிளேக் போன்ற நோய்களால் ஏராளமான மக்கள் இறந்து விட்டனர். இதனால் வேளாண்மைப் பணியாளர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது. எனவே அவர்களுக்கான கூலி உயர்ந்தது. அந்த கூலியை சம்பாதித்து வைத்து அதைக் கொண்டு பல நில அடிமைகள் சுதந்திரம் பெற்றது.

8. நாளுக்குள் அதிகரித்து வந்த தேவைகளை ஈடு செய்ய ஏராளமான புதிய நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. இத்தகைய பணிகளில் ஈடுபட நில அடிமைகளுக்கு பிரபுக்கள் அதிக கூலி கொடுத்தனர். சுதந்திரம் வழங்குவதாகவும் வாக்களித்தனர். இதனால் பல நில அடிமைகள் சுதந்திரக் குடியானவர்களாக மாறினார். இதனால் நிலமானிய முறை வீழ்ச்சியடைந்தது.

9. வேலியே பயிரை மேய்வது போல நாளடைவில் நிலமானியப் பிரபுக்களே நிலமானிய முறைக்கு எதிரிகளாக மாறினர். பணத்தின் மீது மோகம் கொண்ட பல பிரபுக்கள் குறிப்பிட்ட அளவு பணம் பெற்றுக் கொண்டு நில அடிமைகளுக்கு விடுதலை அளித்தனர். மற்றும் சிலர் நகர வாழ்க்கை மீது மோகம் கொண்டு பண்ணைகளைப் புறக்கணித்தனர். இவ்வாரான சூழ்நிலை மாறுபாட்டால் நிலமானிய முறை நசிக்க ஆரம்பித்தது.

10. புதிய சிந்தனை வளர்ச்சியும் நிலமானிய முறைக்கு எதிராக இருந்தது. நிலமானிய முறையினால் ஏற்பட வேண்டிய பயன்கள் முற்றுப் பெற்று விட்டதால் இம்முறை ஒழிக்கப்பட வேண்டியதாயிற்று.

மேற்கண்ட சூழ்நிலையில் மானியக் கட்டுப்பாட்டு நிலங்கள் சிறிது சிறிதாக இறைமையுடைய நிலங்களாயின. பதினைந்தாம் நூற்றாண்டு நிலமானிய அமைப்பின் வீழ்ச்சியைக் கண்ட போதிலும் இன்றளவில் ஐரோப்பா சமுதாய அமைப்பு அடிப்படை எண்ணங்களைப் பொறுத்தவரையில் நிலமானிய அமைப்பினையே பின்பற்றி வந்துள்ளது.

## பண்ணை முறை

## (MANORIAL SYSTEM)

நிலமானிய முறையில் நாட்டிலுள்ள நிலங்கள் அனைத்தும் பண்ணை என்றழைக்கப்பட்ட சிறுசிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. பண்ணை என்பதும் அடிப்படையில் ஒரு வேளாண்மைப் பெருநிலமேயாகும். இதற்குள் ஒரு கிராமம் இருக்கும். ஆனால் சற்று பெரிய பண்ணைகளில் ஒன்றுக்கும் அதிகமான கிராமங்கள் இருக்கும். நிலமானிய முறையின் அடிப்படை அலகே இந்த பண்ணை கிராமம் (Manor) எனலாம். இந்தப் பண்ணைக் கிராமங்களில் தான் நிலத்தின் உடமையாளர் என்ற அளவில் நிலமானியப் பிரபு தனது அரசியல் மற்றும் சொத்துரிமைகளைத் தனது குடிகளாகிய குடியானவர்கள் மீது செலுத்தி வந்தார். சிறிய பிரபு ஒரே கிராமத்தைக் கொண்டவராகவும், பெரிய பிரபு பல கிராமங்களைக் கொண்டவராகவும் இருந்தனர். மத்திய கால ஐரோப்பாவில் கிராமச் சமுதாயத்தைக் கொண்டு, நிலங்களைப் பயிரிடுவதாகச் செய்து கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க ஏற்பாடே பண்ணை முறையாகும்.

பிரான்சின் கிழக்குப் பகுதிகளிலும், இத்தாலியிலும், ஜெர்மனியிலும் தான் முதலில் இவ்விதப் பண்ணகைள் நாட்டுப்புறங்களில் தோன்றின. இந்த பண்ணை முறை பிரான்சில் சினியூரி என்றும், ஜெர்மனியில கிரண்டர் ஷாப்ட் (Grundher Shaft) என்றும் அழைக்கப்பட்டன. பின்னர் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் இங்கிலாந்திலும் பண்ணை முறை வேளாண்மை பரவியது. இங்கிலாந்தின் மேனர் பண்ணை முறை இடைக்கால பண்ணைகளுக்கெல்லாம் ஒரு முன் மாதிரியாக விளங்கியது.

**பண்ணை முறையின் சிறப்புக் கூறுகள் :**

**a) பண்ணை வீடு : Manor House**

பண்ணையின் தலைவர் பிரபு ஆவார். பண்ணைக்கு உட்படட முக்கியமான இடத்தில் பண்ணை வீடு கட்டப்பட்டிருந்தது. இது பிரபுவின் இல்லமாகும். இந்த வீடு பாதுகாப்பு அரண்போன்று கட்டப்பட்டது. அது டஞ்சன் என்ற இடத்தையும் பண்டக சாலைகளையும், தொழிற் கூடங்களையும் கொண்டிருந்தது. பண்ணை வீட்டைச் சுற்றி பாதுகாப்பு அகழி வீடுகளும், மாதாகோவிலும், தொழிற்கூடங்களும், மாவரைக்கும் மில்களும், கடைகளும் அமைந்திருந்தன.

பிரபுவின் ஆட்சிக்குட்பட்ட பலகுடியானவர்கள் (Tenents) பண்ணையின் பங்குதாரர்களாக விளங்கினர். பொதுவாக டியுக், ஏரல், பாரன் போன்ற உலகியல் பிரபுவே பண்ணையின் தலைவரக இருப்பது வழக்கம். பிரபு பண்ணையிலேயே தங்கியிருந்ததால் அவரே நேரடியாக பண்ணை நிர்வாகத்தைக் கவனித்து வந்தார். சில பிரபுக்களுக்கு பல பண்ணைகள் இருந்ததால் மேற்பார்வையாளர் அல்லது காவலாளர் மூலம் நிர்வாகம் செய்து வந்தனர்.

**டி) மூன்ற வயல்வெளி முறை : Three Field System**

பண்ணை நிலத்தின் ஒரு பங்கை பிரபு வைத்துக் கொண்டார். அது பிரபுவின் நிலம் (Lord’s Domain) எனப்பட்டது. மீதி உள்ள நிலங்கள் யாவும் பிரபுவுக்கும் குடியானவர்களுக்கும் பொதுவானவை. அந்த நிலங்கள் சாகுபடி நிலம், புல்வெளி, காடுகள் (Arabile land, Meadows, Forests) என்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன். மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டது. அவைகளில் சாகுபடி நிலங்களில் மூன்று வயல்வெளி முறைப்படி சாகுபடி செய்யப்பட்டது.

இம்முறையின் படி முதல் பாகம் வசந்த காலத்திலும் இரண்டாம் பாகம் இலையுதிர் காலத்திலும் பயிரிடப்பட்டது. மூன்றாம் பாகம் இழந்த வளத்தினை மீண்டும் பெற பயிரிடப்படாமல் விட்டு வைக்கப்பட்டது. ஒரு பகுதி நிலம் தரிசாகக் கிடப்பதின் மூலம் சூரிய வெளிச்சத்தைக் கொண்டு அது தனது இழந்த செழுமையை மீண்டும் பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையினடிப்படையில் நிலத்தின் ஒரு பகுதி மாறி மாறி தரிசாகப் போடப்பட்டது.

இதுவே மூன்று வயல்வெளி முறை எனப்படும். ஏறக்குறைய ஒவ்வொரு வகை நிலத்திலும் ஒரு ஏக்கர் பரப்புள்ள நிலம் ஒருவனுக்கு கிடைத்தது. ஒருவனது நிலத்துக்கும், மற்றவனது நிலத்துக்கும் இடையே ஒரு குறுகிய வரப்பு இருந்தது. ஒவ்வொரு வயல் பகுதியிலும் குடியானவர்கள் கூட்டாகவே பயிர் செய்தனர்.

**உ) வேளாண்மை முறை :**

நிலங்களை உழுவதற்கு மரக்கலப்பைகளும் எருதுகளும் பயன்படுத்தப்பட்டன. கழுத்தை இறுக்காத நகத்தடியும், குளம்பைத் தேய்க்காத இரும்பு லாடங்களும் பயன்படுத்தப்பட்டன. காலம் செல்ல செல்ல எருதுகளுக்கு பதில் குதிரைகள் உழுவதற்கு பயன்படுத்தப்பட்டன. கலப்பையில் மரக்கொழு பொருந்தும் முறை கைவிடப்பட்டு இரும்புக் கொழு பொருத்தப்பட்டது. விவசாயிகள் கையால் விதைத்தனர். உரங்கள் இடும் முறை தெரியாததால் விளைச்சல் குறைவாகவே இருந்தது. ஆடுமாடுகளுக்கு சத்துள்ள தீவனங்கள் போடப்படவில்லை. அரிவாள் போன்ற வேளாண்மைக் கருவிகள் மரத்தாலேயே செய்யப்பட்டன. மொத்தத்தில் இடைக்கால வேளாண்மையில் விளைச்சல் அதிகம் இல்லை. குடியானவர்கள் தங்கள் ஆடுமாடுகளை மேயவிட புல்வெளிகளையும், அடுப்புக்கு விறகு வெட்ட கிராமக் காடுகளையும் பயன்படுத்திக் கொண்டனர்.

**பண்ணை மக்கள் பிரிவுகள் :**

பண்ணையில் பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழிலையே செய்து வந்தனர். பண்ணையில் முக்கியமாக உரிமை பெற்ற மானியதாரர்கள் (Free Holders) செர்புகள் என்ற விவசாய அடிமைகள் (Serfs) என்ற இரு பரிவினர் இருந்தனர்.

**ய) உரிமை பெற்ற மானியதாரர்கள் :**

பண்ணையில் இவர்கள் சிறுபான்மையினரே ஆவர். பிரபுக்களிடம் ஒப்பந்தம் செய்து கொண்டு பிரபுவின் சொந்த நிலத்தில் ஒரு பகுதியைப் பெற்று அதில் பயிர் செய்தனர். பண்ணையின் உறுப்பினர் என்ற முறையில் பண்ணைக் குடிமக்களின் விருப்பத்திற்கு அவர்கள் உட்பட வேண்டும். ஆனாலும் ஓரளவு சுதந்திரத்தை அனுபவித்தனர். பிரபுவின் நிலத்தை பயிரிடாமல் பண்ணை நடவடிக்கைகளிலும் பங்கு கொண்டனர்.

**டி) செர்புகள் என்ற விவசாய அடிமைகள் :**

பண்ணையில் செர்புகளே பெரும்பான்மை மக்கள் ஆவா். இவர்கள் சுதந்திரமானவர்கள் அல்ல. அதே சமயம் அடிமை என்றும் சொல்ல முடியாது. இவர்கள் வில்லென்கள் (Villeins) என்றும் அழைக்கப்பட்டனர். வில்லென்ள் ஒரு பிரபுவால் பரம்பரை பரம்பரையாக அடிமைப்படுத்தப்பட்ட குடியானவர்களின் வழித்தோன்றல்கள் ஆவர். வில்லென்கள் பிரபுக்களின்

நிலத்தில் வேலை செய்யும் நிரந்தர குடியானவர்கள் ஆவர். இவர்கள் நிலங்களோடு பின்னிப் பிணைந்து கிடந்தனர். நிலம் விற்கப்பட்ட போது அதோடு சேர்த்து அவர்களும் விற்கப்பட்டனர்.

செர்புகளிடமிருந்து பிரபுக்கள் எத்தகைய ஊழியத்தை வேண்டுமானாலும் வற்புறுத்திப் பெற்றுக் கொள்ளலாம். எவ்வளவு வேண்டுமானாலும் அவர்களிடம் வரி வசூலிக்க உரிமை உண்டு. செர்புகள் தாங்கள் அனுபவித்த நிலங்களுக்காக பணமாகவும், தானியமாகவும், உழைப்பாகவும் வரி செலுத்தினர். தேன், முட்டை, கோழிகள் போன்றவற்றையும் பிரபுவுக்கு அளித்தனர். பிரபுவின் மாவரைக்கும் இயந்திரம், அடுப்பு, கிணறு ஆகியவற்றைப் பயன்படுத்தவும் தனியாக ஒரு கட்டணத்தை பிரபுவுக்கு செலுத்தினர். பிரபுவின் நிலத்தில் ஓர் ஆண்டில் பாதி நாட்களுக்கு கூலியில்லாமல் உழைத்தனர். பயிர் நடல், அறுவடைக்காலங்களில் அதிகமான நாட்கள் வேலை செய்தனர்.

வில்லென்கள் நிலையை விட கேடான நிலையில் இருந்தவர்கள் குத்தகை உழவர் (Croffers), பண்ணைக் கூலியாள் (Cotters) ஆகியோர் ஆவார். இவர்களுக்குச் சொந்தமாக சிறிதளவு நிலம் கூட கிடையாது. இவர்கள் வில்லென்களுக்கும், பிரபுக்களுக்கும் கூலி வேலை செய்தே பிழைத்தனர்.

**பண்ணை வாழ்க்கை முறை :**

பண்ணையில் பிரபுவின் வாழ்க்கைத் தரம் ஓரளவுக்குத் திருப்திகரமாக இருந்தது. ஆனால் விவசாய அடிமைகள் மிகவும் இழி நிலையில் காணப்பட்டார்கள். அவர்களின் வீடுகள் மண்ணாலும், கல்லாலும் கட்டப்பட்டிருந்தன. கூரைகள் நாணல் புற்களால் வேயப்பட்டிருந்தன. குடிசைகளின் காற்றோட்டமும், வெளிச்சமும் இல்லை. நாணல் புற்களை தரையில் பரப்பியே படுத்து உறங்கினர். இரவில் மெழுகுவர்த்தி மூலம் வெளிச்சத்தை ஏற்படுத்திக் கொண்டனர். குடிநீர் வசதி கிடையாது. பண்ணைக் குடிமக்கள் பழுப்பு ரொட்டியையும், காய்கறிகளையும், பாலாடைக் கட்டிகளையும், மீன்களையும் உண்டு வாழ்ந்தனர். வறட்சி ஏற்பட்ட போது சில கிராமங்களே அழிந்து போயின. சுகாதார வசதியில்லாததால் நோய்கள் ஏற்பட்டது. பண்ணைக் குடிமக்களிடையே கல்வியறிவு இல்லாத காரணத்தினால் மூட நம்பிக்கைகள் காணப்பட்டன.

விவாசயஅடிமைகள் பிரபுக்களின் சம்மதம் இல்லாமல் தன் மகள் திருமணத்தை நடத்த முடியாது. நிலப் பிரபுவின் அனுமதியின்றி தன் குழந்தைக்கு கல்வியளிக்க முடியாது. அல்லது அருகிலுள்ள நகரங்களுக்கு அனுப்பி தொழில் கற்றுக் கொடுக்கவும் முடியாது.

இவர்கள் தவிர பொதுவாக அனைத்து மக்களுக்கும் சில உரிமைகள் அளிக்கப்பட்ன. அவர்கள் நோய்வாய்ப் பட்ட போதும், பஞ்சம் ஏற்பட்ட போதும், நிலப்பிரபு உதவி செய்தார். மக்களிடையே பல பரிவினைகள் காணப்பட்டாலும் கிறிஸ்தவ சமயம் அவர்களை ஒருங்கிணைத்தது. பண்டிகை நாட்களில் நிலப்பிரபு குடிமக்களுக்கு விருந்து அளித்தார்.

திருமணம், இறுதிச் சடங்கு போன்றவற்றில் பண்ணையின் எல்லா பிரபு மக்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறு நிலமானிய முறையும், பண்ணை முறையும் மத்தியகால ஐரோப்பிய நாகரிகத்தில் ஒரு முக்கிய கூறாக விளங்குகின்றன.

## பிரான்ஸ் நாட்டில் காபேஷியன் மரபினர் ஆட்சி
## (THE CAPETIAN KINGS OF FRANCE)

கி.பி. பத்தாம் நூற்றாண்டின் ஐரோப்பிய வரலாற்றை உற்று நோக்கினால் பிரான்ஸ் அவ்வரலாற்று போக்குகளிலிருந்து சற்று ஒதுங்கி நிற்பது போல் தெரியும். அந்நூற்றாண்டில் ஜெர்மனி சாக்சன் மரபினர் ஆட்சியில் ஒன்றுபட்டு பேரரசராக வளர்ச்சியுற்று நிற்பது புரியும். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பிராங்குகளின் கீழ் உள்ள நாடு பிரான்ஸ் நாடாக வளர்ச்சியுற்றாலும் ஒருமைப்பாடற்ற நாடாகப் பிளவுப்பட்டுக் கிடந்தது. நிலமானிய அமைப்பு பிரெஞ்சு மண்ணில் முழுமையாக வேரூன்றி நின்றது.

தெற்குப் பகுதியில் அக்குய்டெய்ன் முக்கிய கோமகனாட்சிப் பகுதியாக விளங்கியது. அப்பகுதியில் மற்றும் காஸ்கனி, டுலோஸ், புரோவன்ஸ், பார்ஸிலோனா என்ற பகுதிகளும் இருந்தன. வடக்கில் பிரிட்டனி, நார்மண்டி, பிளாண்டர்ஸ் என்ற கோமகனாட்சிப் பகுதிகளிலிருந்தன. மேற்கில் லெர்ரைன், பர்கண்டி ஆகியவை பேரரசின் செல்வாக்கில் இயங்கின. மத்தியப் பகுதியில் நியூஸ்ட்ரியா, மெயின் ஆஞ்சௌப்லோய்ன் ஆகிய கோட்டங்களும் அடங்கியிருந்தன.

இத்தனை வேற்றமைகளுக்கு இடையிலும் பிரெஞ்சு மன்னர் என்றொருவர் எங்கோ ஒரு பகுதியிலிருந்து ஆட்சி செய்து கொண்டிருந்தார். பெயரளவிற்குத் தான் அவரது பிரான்ஸ் நாடு ஒன்று என்ற எண்ணத்தை நினைவூட்டிக் கொண்டிருந்தது.

### கரோலிங்கிய மரபின் முடிவு

சார்லமேன் பேரரசின முக்கியப் பகுதியாக விளங்கிய மேற்கு பிராங்குகள் நாடு (பிரான்ஸ்) கி.பி. 843 இல் ஏற்பட்ட வெர்டூன் உடன்படிக்கைப்படி இரண்டாம் சார்லஸ் (அல்லது வழுக்கை சார்லஸ் 843 – 877) ஆட்சியின் கீழ் வந்தது. சிறிது காலம் கழித்து கிழக்கு பிராங்கிய நாட்டின் அரசரான பருத்த சார்லஸ் மேற்கு பிராங்குகள் அரசிற்கும் மன்னரானார். நார்ஸ்மென்கள் படையெடுப்பினால் ஏற்பட்ட தொல்லையைச் சமாளிக்க முடியாமல் திணறிய போது அவரைப் பதவியிலிருந்து விலக்கி கி.பி. 877-ல் கவுண்ட் ஓடோ என்பாரை பிரெஞ்சுக் கோமகன்கள் மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் இறந்த பின் கரோலிங்கிய மரபைச் சேர்ந்த எளிய சார்லஸ் (388-929) மன்னராயினார். அதன் பின் கி.பி 987 வரை கரோலிங்கிய மரபினரே பெயரளவிற்கு மன்னாராயிருந்தனர். அம்மா பின் கடைசி

மன்னரான ஐந்தாம் லூயி மரணமடைந்த பின், பிரெஞ்சுக் கோமகன்கள் ஹியூ கேபட் (Hugh Capet) என்பாரை கி.பி. 987-ல் பிரெஞ்சு மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். பிரெஞ்சு காபேஷிய மரபு ஆரம்பமானது. இந்த மரபைச் சேர்ந்த மன்னர்கள் கி.பி. 1350-ம் ஆண்டு வரை ஆட்சிப் புரிந்தனர்.

**ஹியூ கேபட் : 987 – 996**

கேபட்டின் தேர்வு நிலமானியக் கோட்பாட்டின் மீது முடியாட்சி முறைபெற்ற முதல் வெற்றிக்கும், அந்த வழியில் கேபட் ஆற்றிய சேவை வாரிசுரிமையில் மரபுரிமையே நிலை நாட்டியதாகும். தமக்குப் பின் தம் மகன் ராபர்ட் அரியனை அமருவதை உறுதி செய்து கொண்டார். பழைய கரோலிங்கிய மரபிலிருந்து வாரிசுமைக்கு உரிமை கொண்டாட யாரும் முன் வராததால் போட்டியின் பணி எளிதாயிற்று. எனினும் முடியாட்சியின் உண்மையான ஆதிக்க எல்லைகள் வளர்ச்சியடைய ஒரு நூற்றாண்டு ஆனது

**ராபட் : 990 – 1031**

இவர் பக்தியுள்ள என்ற அடைமொழியைப் பெற்றிருந்தாலும் தம் திருமணம் காரணமாக திருச்சபையுடன் சச்சரவு கொள்ள நேர்ந்தது. எனவே தம் மனைவி பெர்த்தாவை மணவிலக்குச் செய்தார். இவரது ஒரே சாதனை பிரெஞ்சுப் பர்கண்டிப் பகுதியில் தம் உரிமையை நிலை நாட்டியதாகும்.

**முதலாம் ஹென்றி : 1031 – 60**

ராபர்ட்டின் இறுதிக் காலத்தில் குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவு காரணமாக ஹென்றியின் சகோதரர் கலகம் செய்தார். பர்கண்டிப் பகுதியை அவருக்கு விட்டுக் கொடுத்து சமாதானம் செய்துக் கொண்டார். இச்சமயத்தில் ஆஞ்சென கோமகனின் ஆதிக்க வளர்ச்சி ஹென்றியை அச்சுறுத்தியது. எனவே நார்மண்டிக் கோமகன் வில்லியத்துடன் சேர்ந்து அவரைத் தோற்கடித்தார். ஆனால் நார்மண்டிக் கோமகனின் வலிமையையும் அவரை உள்ளூர் வாட்டிக் கொண்டிருந்ததால் ஆஞ்சௌவுடன் கூட்டுச் சேர்ந்து நார்மண்டியை தாக்கினார். அத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது. அதனால் நார்மண்டிக் கோமகனின் தீராப் பகையைச் சம்பாதித்துக் கொண்டார்.

**முதலாம் பிலிப் : 1060 – 1108**

மன்னர் ஆதிக்கத்தை பிரெஞ்சு மகண்ணில் உறுதியாக நிலைநாட்ட முயன்றவர் முதலாம் பிலிப் ஆவார். சில சூழ்நிலைகள் இயல்பிலே அதற்குச் சாதகமாக அமைந்தன. நார்மண்டிக் கோமகன் கி.பி. 1066-ல் வெற்றி வீரர் வில்லியாகி இங்கிலாந்து மன்னரானதும் நார்மண்டித் தாக்குதல் என்ற அச்சத்திலிருந்து தற்காலிக விடுதலை கிடைத்தது. அவர்

காலத்தில் முதல் சிலுவைப் போர் (1096 – 1099) நடைபெற்றது. அதில் கலந்து கொள்ள எராளமான பிரெஞ்சுப் பிரபுக்கள் புறப்பட்டுச் சென்று விட்டதால் தம் வலிமையைப் பெருக்கிக் கொள்ள பிலிப்பிற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஜெர்மானியப் பேரரசர் ஹென்றி ஐஏ ம் போப் ஏழாம் கிரேகரியும் அச்சமயத்தில் ஆதிக்கப் போட்டியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இவருக்கு மேலும் ஒரு வாய்ப்பை அளித்தது. எனினும் தம் முதல் மனைவி பெர்த்தாவை விட்டு பெர்ட்ரா என்ற இன்னொரு பெண்ணைத் திருமணம் புரிந்ததால் போப்பின் கோபத்திற்குள்ளானார். சமய விலக்கும் செய்யப்பட்டார். பின் இரண்டாம் மனைவியை விலக்கிய பின்னரே நிம்மதியடைய முடிந்தது.

**ஆறாம் லூயி : 1108 – 37**

தந்தையிடம் பற்றாக்குறையாகவிருந்த ஆற்றலும் திறமையும் தனயன் லூயியிடம் அபரிமிதமாகக் குடி கொண்டிருந்தன. அவற்றைத் தம் ஆதிக்க விஸ்தரிப்பிற்குப் பயன்படுத்திக் கொண்டார். முதலில் தம் நேரடி ஆட்சிப் பகுதிகளில் குழப்பம் விளைவித்த பிரபுக்களை அடக்கி அமைதியை நிலை நாட்டினார். அங்கு நிர்வாகத் திறமை மிகுந்த மடாதிபதி சுகர் (Abbat Sugar) என்பாரை அலுவலராக நியமித்துச் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டினார். அவர் ஆறாம் லூயியின் வாழ்க்கை வரலாறு என்ற நூலை எழுதியுள்ளார். அது நமக்குச் சிறந்த வரலாற்றுச் சான்றாக பயன்படுகிறது.

திருச்சபையுடன் நல்லுறவு கொண்ட லூயி அதன் அதிகாரம் தம் ஆதிக்க நலன்களில் குறுக்கிடாத வாறும் பார்த்துக் கொண்டார். வணிக நகரங்கள் வளர்ச்சியுறுவதைச் சந்தேகக் கண்கொண்டு நோக்கினாலும் அவை தம் கருவூலத்திற்கு அதிக செல்வங்களை வழங்குவதால் சாசனங்கள் அளித்தார். வடக்கில் நார்மண்டியில் தோன்றிய வாரிசுரமைச் சிக்கலில் தலையிட்டு அரசியல் ஆதாயம் பெற முயன்றார். நார்மண்டிக் கோமகன் ராபர்ட்ன் மகன் வில்லியம் கிளிட்டோவின் உரிமைக் கோரிக்கைக்கு ஆதரவு தர முன்வந்தார்.

ஆனால் அங்கு ஏற்கெனவே இங்கிலாந்து மன்னர் முதலாம் ஹென்றி உறுதியாகத் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டார். போர் மூண்டது. கி.பி. 1149-ல் பெர்முலே என்ற இடத்தில் நடைபெற்ற போரில் தோல்வியைத் தழுவிய லூயி போப் இரண்டாம் காலிக்ட்ஸ் மூலம் சமாதானம் காண முயன்றார். இதற்கிடையில முதலாம் ஹென்றியின் மருகனான பேரரசர் ஐந்தாம் ஹென்றி லெர்ரைன் மீது படையெடுத்தார். உடனே லூயி பிரெஞ்சுக் கோமகன்களிடையே நாட்டுப்பற்றை கிளறி ஒரு பெரும் படையொன்றைத் தயார் செய்தார். உடனே பேரரசர் தம் படையெடுப்புத் திட்டத்தைக் கைவிட்டார். இந்நிகழ்ச்சி லூயியின் செல்வாக்கையும், புகழையும் வெகுவாக உயர்த்தியது.

தம் ஆதிக்கத்தை மேலும் வலுப்படுத்த திருமண ஏற்பாடு ஒன்றையும் செய்து முடித்தார். பிரான்ஸின் தென்பகுதியில் வலுவோடும் வளத்தோடுமுள்ள அக்குய்டெய்ன்

கோமகானாட்சிப் பகுதியின் உரிமையாளரான எலியனார் சீமாட்டியை தம் மகன் ஏழாம் லூயிக்கு மணம் முடித்தார். இதன் மூலம் அக்குய்டெய்ன் பகுதியும் தம் அரசோடு இணைந்து வலுவுள்ள அரசு உருவாகும் என எதிர்பார்த்தார். ஆனால் வரலாறு எதிர்பாராத திருப்பங்களைக் கொண்ட அதிர்ச்சி தரும் நிகழ்ச்சிகளாக இருக்கும் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை.

**ஏழாம் லூயி : 1137 – 180**

ஏழாம் லூயியின் ஆட்சிக்காலம் பிரகாசமான எதிர்கால நம்பிக்கையுடன் தொடங்கப்பட்டது. நிர்வாகத்துறையில் நிறைந்த அனுபவப்பட்ட மடாதிபதி சுகர் என்பாரின் சேவையும், அழகு நங்கை எலியனாரும் அவரும் அக்குய்டெய்ன் மாநிலமும் அவருக்கு கிடைத்தது. ஆனால் விரைவில் அனைத்தையும் இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. கி.பி. 1151-ல் சுகர் மரணமடைந்தார். எலியனார் மீது அவ நம்பிக்கையும், நெருங்கிய ரத்த உறவு உடையவள் என்ற எண்ணமம் அவருள் வளர்ந்து முடிவில் மணவிலக்கில் கொண்டு போய் விட்டது.

அதுமட்டுமல்ல. மணவிலக்கு செய்யப்பட்ட எலியனார் லூயியின் அரசியல் எதிரியான இங்கிலாந்து மன்னர் இரண்டாம் ஹென்றியை மணந்து கொண்டாள். இப்போது ஹென்றி தன் இங்கிலாந்து அரசரை விட அதிகப் பரப்பினைக் கொண்ட பிரெஞ்சு மாநிலங்களுக்கு அதிபதியானார். ஆஞ்செலியப் பேரரசு என்றழைக்கப்பட்ட அவ்வரசில் நார்மண்டி அக்குய்டெய்ன் ஆஞ்செள, மெயின், டூரெய்ன் ஆகிய பிரெஞ்சுப் பகுதிகள் அடங்கியிருந்தன. இதிலொரு விந்தை என்னவென்றால் இத்தகைய பரந்து விரிந்த பகுதிகளின் மன்னனான இரண்டாம் ஹென்றி லூயியின் சிற்றரசராகவே கருதப்பட்டார்.

லூயி, இரண்டாம் சிலுவைப் போரில் முக்கியப் பங்கு பெற்றார். போர்க்களத்தில் அவர் குறிப்பிடத்தக்க சாதனைகள் எதுவும் நிகழ்த்தவில்லை. புனித பூமிக்கு அறப் பயணத்தை மேற்கொண்டவர் போலவே நடந்து கொண்டனர்.

**இரண்டாம் பிலிப் அல்லது பிலிப் அகஸ்டஸ் : 1180 – 1223**

மன்னரின் உரிமைகளை நிலை நாட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்ட பிலிப் தம் தந்தையைப் போல் அதற்குள்ள கடமைகளை, பண்புகளைக் கடைபிடிப்பதில் சிறிதும் அக்கறை காட்டவில்லை. அரசுரிமையை நிலைநாட்டும் முயற்சிக்கு அனைத்துப் பண்புகளையும் பலியிட்டார். நன்றி, நீதிபோன்ற நல்லொழுக்கப் பண்புகளைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. யாருடைய உதவியைப் பெறுவாரோ அவரையே அடுத்த கட்டத்தில் ஒழித்து கட்டத் தயங்கியதில்லை. பிளாண்டர்ஸ் கோமகனின் உதவி பெற்று பிலோய்ஸ் மரபினைத் தோற்கடித்தார். பின்னர் இரண்டாம் ஹென்றியின் துணையுடன் பிளாண்டர்ஸ்

கோமகனை வென்று தம் நன்றிக் கடனைத் தீர்த்தார். இரண்டாம் ஹென்றிக்கு எதிராக அவர் பிள்ளைகளையே ஏவி விட்டார்.

பதினான்கு வயதிலே பதவியேற்ற அவர்க பிற கோட்டகங்களில் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டுவதில் குறியாக இருந்தார். முதலில் தம்மை கட்டுப்படுத்த முயன்ற பிலோய்ஸ், பிளாண்டர் கோமகன்களின் செல்வாக்கிலிருந்து விரைவில் விடுவித்துக் கொண்டார். முதலில் வடக்கேயுள்ள ஆரட்டாய், வெர்மான்டாய் கோட்டங்களைக் கைப்பற்றினார். இரண்டாம் ஹென்றி இறந்தவுடன் பிரான்ஸில் தெற்குப் பகுதியிலிருந்த பெர்ரி, ஆவெர்ன் பகுதிகளை இணைத்துக் கொண்டார். பிரெஞ்சுக் கோமகன்களின் திருமண விவகாரத்தில் இங்கிலாந்து அரசர் ஜான் தலையிட்டதால் சிக்கல் ஏற்பட்டது. அச்சிக்கலைத் தீர்க்க, பிலிப் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து ஜான் மன்னனை நேரில் வந்து விளக்கம் கூறுமாறு ஆணை பிறப்பித்தார்.

அவ்வாணையை ஜான் அலட்சியம் செய்யவே பிலிப் அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜான் மன்னனுக்குப் பிரெஞ்சு மண்ணில் சொந்தமாயிருந்த நிலப்பகுதிகளை எல்லாம் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார். அதன் படி நார்மண்டி, பிரிட்டனி, ஆஞ்சௌ, மெயின், டூரெய்ன் ஆகிய பகுதிகளைப் பிலிப் கைப்பற்றிக் கொண்டார். இதனால் கோபம் கொண்ட ஜான் பேரரசர் நான்காம் ஆட்டோ மற்றும் பிலிப்பின் அரசியல் எதிரிகளை ஒன்று சேர்த்து அவருக்கு எதிராக அணி அமைத்தார். கி.பி. 1214-ல் எதிரணியினரை பூவின்ஸ் (Bouvines) போர்க்களத்தில் தோற்கடித்து பிலிப் பெரும் வெற்றி பெற்றார்.

பூவின்ஸ் போர் இடைக்கால ஐரோப்பிய வரலாற்றில் பல திருப்பங்களை உண்டு பண்ணியது. போரில் தோல்வியடைந்த ஜான் மன்னனை எதிர்த்து ஆங்கில நிலமானியப் பிரபுக்கள் படை திரட்டி புகழ்ப்பெற்ற மகாசாசனம் (Maha Carta) என்ற அரசியலமைப்பு உரிமைகளைப் பெற்றனர். ஜெர்மனியில் நான்காம் ஆட்டோ தோல்வியடைந்து இரண்டாம் பிரடரிக் ஆட்சியைக் கைப்பற்ற வழி வகுத்தது. பிரான்சைப் பொறுத்த மட்டில் பிலிப்பின் ஆதிக்கச் செருக்கு கொடி கட்டிப் பறந்தது. பிரெஞ்சு மண்ணில் ஆங்கில மன்னர்களுக்குரிய அரசுரிமை அடியோடு ஒழிக்கப்பட்டது.

பிலிப் மூன்றாம் சிலுவைப் போரில் கலந்து கொண்டார். இங்கிலாந்து மன்னர் சிங்க நெஞ்சன் ரிச்சர்டுடன் புனித பூமிக்குப் புறப்பட்டார். தம் சகோதரியை ரிச்சர்டுக்கு நிச்சயம் செய்திருந்ததால் நட்புறவுடன் சென்றார். ஆனால் திடீரென ரிச்சர்டு மனம் மாறி ஸ்பெயின் இளவரசியை மணமுடித்துக் கொண்டதால் அவர்களின் நட்புறவு முறிந்தது. சிலுவைப் போர் நடவடிக்கைகளி தீவிரப் பங்கு எதுவும் ஏற்றதாகத் தெரியவில்லை. ஏகர் நகர வீழ்ச்சிக்குப் பின் தம் படைவீரருடன் நாடு திரும்பிவிட்டார்.

சுய ஆட்சி பெற்ற நகரங்களின் வளர்ச்சிக்குப் பிலிப் பேருதவி புரிந்தார். சுமார் 78 நகர சாசனங்கள் அளித்துள்ளார் அந்நகரங்கள் அரசனுக்குப் பணமும் படையும் கொடுத்து உதவின. தலைநகரான பாரீஸ் நகரை அழகுபடுத்தியதோடு வலிமை பெற்றதாகவும்

ஆக்கினார். நடைபாதைத் தளங்களைச் சீரமைத்தார். நகரைச் சுற்றி பத்தடி கனமும் இருபத்தியெட்டடி உயரமுள்ள கோட்டைச் சுவர் எழுப்பினார். பாரிஸ் நகர் வட ஐரோப்பாவின் ஏதென்ஸ் என்று கூறக் கூடிய அளவிற்கு அங்கு கல்வி நிலையங்களை அமைத்தார். பண்டை கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டிலின் நூற்கள் அங்கு பயிலப்பட்டன. பாரீஸ் பல்கலைக் கழகம் முழு வளர்ச்சியுற்றது. ஜெர்மனி, ஸ்பெயின், இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் மாணவர்களை கவர்ந்திழுத்தது. போப் மூன்றாம் இன்னோசென்ட் பாரீஸ் பல்கலைக்கழக மாணவராவார். அந்நகர் இடைக்கால புதிய பண்பாட்டின் மையமாக விளங்கியதோடு மேற்கு கிறிஸ்தவ உலகின் இதயமாகவும் சிறப்புற்றறது.

கட்டிடக்கலை வளர்ச்சியிலும் பிலிப் ஆர்வம் காட்டினார். அக்காலத்தில் பிரபலமாயிருந்த கோதிக் பாணியில் பாரீஸில் பிரமாண்டமான நாட்டர்டாம் பேரலாயத்தைக் கட்டினார். அது பிலிப்பின் மாண்புறு ஆட்சியின் சிறப்பிற்கு இன்று வரை சான்று கூறுகின்றது.

பிரான்ஸ் நாடு உருவாவதற்கு பிலிப் ஆற்றிய பணி வரலாற்றுச் சிறப்புமிக்கது. பிரெஞ்சு மண்ணில் காபேஷீயன் ஆட்சிக் பகுதிகளை நான்கு மடங்கு அதிகப்படுத்தினார். பிரான்ஸ் நாட்டின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஆஞ்செலியன் (இரண்டாம் ஹென்றியின் ஆட்சிப் பகுதி) அரசை அடியோடு ஒழித்தார். அவர் ஆட்சியில் மேறகு கிறிஸ்தவ உலகின் எளிமை வாய்ந்த என்று கூறத்தக்க அளவில் பிரான்ஸ் முன்னேற்றம் பெற்றது. அங்கு முடியாட்சி முறையும் முழுப் பருவ மெய்தியது. அம்முடியாட்சியின் பெருமையை ரோமப் பேரரசின் மாபெரும் மன்னர் 'அகஸ்டஸ்' சீசர் போல் உயர்த்த எண்ணிய அவர் அகஸ்டஸ் என்ற பெயர் சூட்டிக் கொண்டது பொருத்தமானதாகும்.

**எட்டாம் லூயி : 1223 – 1226**

தம் தந்தையார் காலத்திலே அல்பிஜென்ஸீயன்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட புனிதப் போரில் தீவிரப் பங்கு லூயி மன்னராக முடி சூட்டியதும் அப்போரை வெற்றிகரமான முடிவிற்கு கொண்டு வந்தார். அல்பிஜென்ஸியன்கள் முற்றிலும் அழிக்கப்பட்டதோடு, அவர்களின் பூமியாகிய லாங்குடாக் (Languedoc) பகுதி லூயியின் ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. அதன் மூலம் பிரெஞ்சு மன்னராட்சி ரோன் நதி தீரத்தில் மத்திய தரைக்கடல் வரை பரவியது. அங்கு சென்ஷெல் (Seneschal) எனப்பட்ட நிர்வாக அலுவலர்களை நியமனம் செய்தார். பின் ஆஞ்செவியப் பேரரசின் எஞ்சிய மாநிலமான பாய்டோவைக் கைப்பற்றி தம் ஆட்சிப் பகுதிகளோடு இணைத்துக் கொண்டார். இவ்வாறு தம் மூன்றாண்டு கால ஆட்சியில் இரு பெரும் சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

**ஒன்பதாம் லூயி : 1226 – 1270**

முடிசூட்டப்பட்ட புனிதர் (Crowned Saint) என்றழைக்கப்பட்ட ஒன்பதாம் லூயி சமயப் பற்றும், ஆன்மீக ஒழுக்கமும் ஒருங்கே அமையப்பெற்ற உயர்பண்பாளர். பன்னிரண்டு வயதிலே

முடி சூடிய லூயி பத்தாண்டுகள் கால் தாயின் பராமரிப்பில், கட்டுப்பாடு மிகு கண்காணிப்பில் வளர்ந்தார். அதன் காரணமாக உயரிய கிறிஸ்தவப் பண்பாடுகளின் உறைவிடமாய்த் திகழ்ந்தார். அக்கால மன்னர்களுக்கே உரிய ஆடம்பரமும் அதிகார ஆணவமும் அவரிடம் அறவே இல்லை. அவர் பாட்டன் பிலீப் அகஸ்டசிற்கு முற்றிலும் மாறுபட்ட குணநலன்களைக் கொண்டிருந்தார். முந்தியவர் அதிகாரச் செருக்கையும் செல்வச் சிறப்பையும் இரு நோக்கங்களாக கொண்டார். பிந்தியவரோ சுய ஒழுக்கத்தையும், மன்னருக்கான கடமை ஒழுக்கத்தையும் இரு கண்களெனக் கொண்டார். ஆக்கிரமிப்புப் போர்களில் ஈடுபட மறுத்தார். போப்பும் பேரரசரும் போட்டி, பொறாமை கொண்டு பூசலிட்டது கண்டு மனம் வருந்தி அவர்களிடையே உடன்பாடு காண முயன்றார். நீதி வழங்குவதில் நேர்மை தவறாதவரா இருந்தார்.

லூயியின் ஆட்சித் துறைச் சீர்திருத்தங்கள் அவரது ஆழ்ந்த அறிவாற்றலைப் பிரதிபலிப்பதாக அமைந்தன. அரச அவையில் நிதி , நீதி, நிர்வாகம் ஆகிய மூன்று துறைகளுக்கும் தனித்தனி குழுக்களை ஏற்படுத்தினார். பாரீஸ் நிதிக்குழுவில் ரீயசடநஅநவெ கழ ீயசளை) கற்றறிந்த சட்ட வல்லுநர்களை நியமித்தார். பிரபுக்கள் நீதிமன்றங்களை நீக்கிவிட்டார். சண்டையிட்டு அதன் மூலம் வழக்கிற்கு தீர்வு காணும் (Trial by duel) முறையை ஒழித்தார். நாடு முழுவதும் ஒரே சீரான நாணய முறையை புகுத்தினார். கடுமையான சட்டத்தின் மூலம் கள்ள நாணயம் தயாரிப்பதைத் தடுத்தார். அரசு ஊழியர்களை பெயிலிகளை உண்மையுடன் கடமைகளை புரிவோம் என்ற உறுதிமொழியினை எடுக்குமாறு பணித்தார். சுற்றி வரும் அரசுக் கண் காணிப்பாளர்களை (Ltinerent Royal Inspectors) நியமித்து மக்களின் குறைகளை அறிவும் முறைகேடாக நடக்கும் அரசு அலுவலர்களைத் தண்டிக்கவும் ஏற்பாடு செய்தார்.

குழப்பம் செய்தவர்களை தண்டிக்கும் போது கோலேந்தும் கோமானாக நடந்து கொண்டார். மன்னனின் கருணை உள்ளத்தைப் பயன்படுத்தி கலகம் புரியக் கிளம்பிய பிரபுக்களை செயின்டிஸ் என்ற போர்க்களத்தில் தோற்கடித்து விரட்டினார்.

சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் நடுநிலை பிறழாது நீதி வழஙகும் பண்பு கண்டு அவரது ஆட்சிக்குட்படாத கோமகன்களும் குடிமக்களும் அவரை நடுவராகக் கருதி நாடி வந்தனர். சான்றாக இங்கிலாந்து மன்னர் மூன்றாம் ஹென்றிக்கும் அவரது நிலமானிய பிரபுக்களுக்குமிடையில் தோன்றிய சிக்கலைத் தீர்க்க லூயியையே நடுவராக நாடி வந்தனர்.

சமயக் கோட்பாட்டில், கத்தோலிக்கத் திருச்சபையில் ஆழ்ந்த பற்றுறுதி கொண்டிருந்தார். அச்சபையின் பொதுகாவலராகவும் இருந்தார். அதே சமயம் குருக்கள் அரசியலில் குறுக்கிடாதவாறு பார்த்துக் கொண்டார். பிஷப்புகளும் குருக்களும் தவறிழைத்தால் தண்டிக்கத் தவறவில்லை. போப் நான்காம் இன்னோசென்டின் தவறுகளையும் சுட்டிக்காட்டத்த தயங்கவில்லை. பிஷப்புகள் நீதிவழங்க முற்படுவதை தடுத்தார். சமய

விரோதிகளை ஒழிப்பதில் கண்டிப்புக் காட்டினார். அதற்காக இன்குவிசிஷன் நீதிமன்றத்தை நிறுவினார்.

புனித பூமி ஜெருசலேம் முஸ்லீம் ஆட்சியின் கீழ இருப்பதை கண்டு அவரது சமயப் பற்றுமிக்க உள்ளம் வேதனையடைந்தது. எனவே இரு சிலுவைப் போர்களை- ஏழாவது (1249 – 54), எட்டாவது (1270) சிலுவைப் போர்களை நடத்திச் சென்றார். முதல் தடவை எகிப்து மீது படையெடுத்து டாமியட்டா என்ற இடத்தைக் கைப்பற்றினார். ஆனால் எதிர்பாராத விதமாக முஸ்லீம்களால் சூழப்பட்டு கைதியாக்கப்பட்டார். பின் நாம் கைப்பற்றிய டாமியட்டாவை ஒப்படைத்த பின்னரே விடுதலை செய்யப்பட்டார். இரண்டாவது தடவை எகிப்திற்கு செல்லும் வழியில் டுனிஸீயாவைத் தாக்க முயன்றார். அவ்வமயம் நோய்வாய்ப்பட்டு உயிர் நீத்தார். கிறித்தவ சமயப் பண்பாட்டிலேயே வாழ்ந்த அவர் அச்சமயப் பணியிலே தம் உயிரையும் அர்ப்பணித்தார்.

**மூன்றாம் பிலிப் : 1270 – 1285**

துணிச்சல் மிகு பிலிப் (Charles the Bold) என்றழைக்கப்பட்ட இவர் காலத்தில் சிறப்பான வரலாற்று நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை போர் முயற்சியில்லாது அமைதியான முறையிலேயே சில பகுதிகளை தம் அரசோடு இணைத்தார். குறிப்பாக டூலோஸ் நாவரே. சேம்பெய்ன் பகுதிகளைக் கூறலாம். தம் மகன் அழகுமிகு பிலிப்பை ஜோன்னா என்ற இளவரசிக்கு மணமுடித்ததன் மூலம் பிந்திய இரு இடங்களையும் பெற்றார். ஸ்பெயினில் உள்ள ஆரகான் அரசைப் பணிய வைக்கும் முயற்சியில் பயனில்லாப் போர் ஒன்றைத் தொடங்கினார். அப்போர் அவர் உயிரைே கொள்ளை கொண்டு விட்டது

**நான்காம் பிலிப் அல்லது அழகன் பிலிப் : 1285 – 1314**

நான்காம் பிலிப் அரியணை அமரும் போது பிரான்ஸில் முடியாட்சித் தத்துவம் முழுமை பெற்றுவிட்டது. அதை மேலும் வலுவூட்டி உறுதிப்படுத்தினா். ஆரம்பத்தில் சில போர்களில் தோல்வியடைய நேரிட்டது. இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்டிற்கு தெற்கு பிரான்ஸில் சில பகுதிகள் சொந்தமாயிருந்தன. அவற்றைக் கைப்பற்ற எட்வர்டுடன் போர் புரிந்து தோல்வியுற்றார். பின் பிரான்ஸின் வடகிழக்கில் உள்ள பிளாண்டர்ஸ் பகுதிகளை தம் அரசோடு இணைக்க முயன்றதால் பிளமிஷ் பிரபுக்களோடு நீண்டதொரு போராட்டம் நடத்த வேண்டியதாயற்று. இறுதியில் 1302-ல் கோர்டராய் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் படு தோல்வியுற்றார்.

ஆதிக்க விஸ்தரிப்புப் போரில் தோல்வியுற்ற பிலிப் தம் கருவூலத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் இறங்கினார். மன்னருக்கு நிர்வாகச் செலவு அதிகரித்துக் கொண்டு வந்தன. அலுவலர்களுக்குச் சம்பளம், இடைவிடாப் போர், நிலைப்படை ஆகியவை பெரும் தொகையை

விழுங்கிக் கொண்டிருந்தன. அவற்றை ஈடுகட்ட நேர்முக வரிகள் விதிக்கலானார். இவ்வரிகளை குருமார்களும் செலுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்தார்.

இச்சமயம் போப்பாக இருந்தவர் எட்டாம் பொனிபாஸ். இவர் போப்பாட்சி முடியாட்சியை விட மேலானது என்ற திடமான கருத்துடையவர். போப் மூன்றாம் இன்னோசென்டின் அதிகார மாட்சியினை தாமும் பெறவேண்டுமென்று விரும்பினார். எனவே பிலிப்பின் ஆணை பொனிபாசிற்கு ஆத்திமூட்டியதில் வியப்பில்லை. திருச்சபை குருமார் அரசிற்கு வரி செலுத்த வேண்டியதில்லை. என ஓர் ஆணை போப் பிறப்பித்தார். இதற்குப் பதிலடியாக மன்னர் பிரெஞ்சுத் திருச்சபை போப்பிற்கு செலுத்தும் காணிக்கைகளைத் தடுத்து நிறுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் பிலிப் தம் ஆதிக்கத்திற்குட்படும் பிரெஞ்சுப் போப் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட ஏற்பாடு செய்தார். அதன் விளைவாக போப் ஐந்தாம் கிளிமென்ட் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவர் பிரானஸ் எல்லையில் உள்ள அவிக்னான் நகரத்தைத் தலைநகரமாகக் கொண்டதும் அதன் காரணமாக போப்புகளின் பாபிலோனிய அடிமைத்தனம் (1309 – 1377) எனப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது.

பிலிப், போப்புடன் போராட்டம் நடத்திய காலத்தில் தன் நிலையை வலுப்படுத்த பிரெஞ்சு சமூகத்தின் மூன்று பிரிவினரின் பிரதிநிகளடங்கிய ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற பாராளுமன்றத்தைக் கூட்டினார். இந்த அரசியல் நிறுவனம் வளர்ச்சியுறறு சுமார் நாலே முக்கால் நூற்றாண்டிற்குப் பின் உலக வரலாற்றையே மாற்றியமைக்கக் கூடிய பிரெஞ்சுப் புரட்சியை (1789) இங்கு பண்ணியது ஈண்டு நினைவு கூறத் தகுந்தது.

**காபேஷியன் மரபு ஆட்சி முறை:**

நான்காம் பிலிப் இறந்த அரை நூற்றாண்டு காலத்திற்குள் காபேஷியன் மரபு, வரலாற்று ஏடுகளிலிருந்து மறைந்தது. அவருக்குப் பின் அரியணை அமர்ந்தோர் காலத்தில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் நடைபெறாவிட்டாலும் பிரெஞ்சு முடியாட்சிக் கூறுகளைச் சிதைய விடாமல் பார்த்துக் கொண்டார்கள். பிலிப்பிற்குப் பின் அவரது மூன்று பிள்ளைகளும் (பத்தாம் லூயி, ஐந்தாம் பிலிப், நான்காம் சார்லஸ்) ஒருவர் பின் ஒருவராய் ஆட்சி புரிந்தனர். மூவருக்கும் ஆண் மகன் இன்மையால் கி.பி. 1328-ல் அவர்களின் உறவினரானவலாய் (Valois) மரபினைச் சேர்ந்த பிலிப் அரியணை ஏறினார்.

**காபேஷியன் ஆட்சிக் காலத்தில் பிரெஞ்சு சமய சமூகப் பொருளாதார நிலைகள்**

கி.பி. 987-ல் ஹியூ காபெட் அரியணை ஏறிய போது பிரான்சின் ஒரு சிறு பகுதியே அவர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. நிலமானியத் திட்டம் உறுதியாக வேரூன்றியிருந்ததால் மன்னர் ஆட்சி முறை வரை வாய்ப்பில்லாதிருந்தது. கோமகன்களில் சிலர் அரசரை விட அதிக பரப்பினை ஆட்சி புரிந்து வலிமையுள்ளவர்களாகத் திகழ்ந்தனர். காபேஷியன் மரபு அரசர்கள்

தங்கள் விடா முயற்சியாலும் படை பலத்தாலும், ராஜதந்திரத்தாலும் பிரபுக்களின் ஆதிக்கத்தை ஒடுக்கி மன்னர் ஆதிக்க உரிமைகளை நிலைநாட்டி விட்டனர். பிரான்சின் பெரும்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த ஆங்கில அரசர்களின் ஆஞ்செவியப் பேரரசை அழித்தனர். புனித ரோமப் பேரரசர் ஐந்தாம் ஹென்றி பிரான்சை வென்று அதைத் தம் பேரரசரோடு இணைத்துக் கொள்ள எடுத்த முயற்சிகளை முறியடித்தனர். இவ்வாறு உள்நாட்டுப் பிளவு சக்திகளையும் அயல்நாட்டு ஆக்கிரமிப்பு முயற்சிகளையும் முறியடித்து பிரான்சில் ஓர் தேசீய அரசை நிலைநாட்டுவதில் காபேஷியன் மரபு அரசர்கள் வெற்றி பெற்றனர்.

சுமார் மூன்றரை நூற்றாண்டு காலம் ஆட்சி புரிந்த அவ்வம்சத்தினர் காலத்தில் பிரெஞ்சு சமூக, சமயப் பொருளாதாரத் துறைகளில் புரட்சிகரமான மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன.

**சமயநிலை :**

சமயநிலையைப் பொறுத்தமட்டில் பிற மேற்கு ஐரோப்பிய சமூகத்தைப் போப் தலைமையிலான கத்தோலிக்கத் திருச்சபையே பிரான்ஸில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது கத்தோலிக்கத் திருச்சபையின் மூத்தமகள் என்ற சிறப்புப் பெயரைப் பெற்ற பிரான்ஸ் அச்சமயத்தையும் அதன் தலைமையையும் உறுதியாக ஆதரித்து நின்றது. ஜெர்மானியப் பேரரசர்கள் போப்புடன் சச்சரவு விட்டுக் கொண்டிருக்கும் போது பிரெஞ்சு மன்னர்கள் போப்பாட்சியை முழு மனதோடு ஆதரித்து நின்றனர். இங்கிலாந்து மன்னர்கள் போப்பின் அதிகாரத்தை நிலைநாட்டினர். ∴பிலிப் அகஸ்டஸ் படைபலத்தைக் கூட உபயோகித்தார்.

சிலுவைப் போர்களில் பிரான்ஸ் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். மன்னர்கள், கோமகன்கள் மட்டுமின்றி மக்களும் ஆர்வத்துடன் பங்கு பெற்றனர். பிரெஞ்சு மன்னர் ஒன்பதாம் லூயி ஓர் கிறிஸ்தவ மன்னர் எத்தகைய பண்பாளராகத் திகழ வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். ஆனால் பதிமூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் முடியாட்சி முறை முழுமை பெற்ற பின் போப்பாட்சியுடன் மோதல் ஏற்பட ஆரம்பித்தது. ஆரம்ப முதலே பிரெஞ்சுத் திருச்சபை தனது தனித்தன்மையை நிலைநாட்ட முயற்சித்தது.

எனினும் சக்தி வாய்ந்த போப்புகளான இரண்டாம் அர்பன், மூன்றாம் இன்னோசென்ட் ஆகியோர் காலத்தில் போப்பின் அதிகாரம் தடையின்றி பிரெஞ்சு நாடு முழுவதும் பரவிநின்றது. அதே சமயம் பிலப் அகஸ்டஸ், நான்காம் பிலிப் போன்ற சக்திவாய்ந்த மன்னர்கள் போப்பின் ஏகபோக ஆதிக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தயங்கவில்லை. குறிப்பாக நான்காம் பிலிப் மன்னருக்கு போப் எட்டாம் பொனிபாசிற்கும் இடையே, நீதி, நிதி, நிர்வாக முறைப் பற்றி கடுமையான கருத்து வேறுபாடு தோன்றி அனாக்னி என்ற இடத்தில் போப்பை இழிவுபடுத்துமளவிற்குச் சென்று விட்டது.

இறுதியில் போப்புகளை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்து அரசியல் ஆதாயம் பெற முனைந்தனர். அதன் விளைவாக அவிக்னான் போப்புகள் தோன்றினார்கள். அதையொட்டி போப்பாட்சியில் பிளவுகளும் ஏற்பட்டது. குளுனி மடாலய முறையின் பிறப்பிடம் பிரான்ஸ் நாடுதான். திருச்சபை சீர்திருத்த முயற்சியில் முன்னணியில் நின்றதோடு, உயர்க்கல்வி பரப்புதலிலும் ஊக்கம் காட்டியது. எளிமை, சேவை ஆகியவற்றை லட்சியங்களாகக் கொண்ட பிரெஞ்சு துறவற அமைப்பும் பிரெஞ்சு மண்ணிலே தோன்றி பிரபலமாயின.

கத்தோலிக்க திருச்சபை மிகச் செல்வாக்குடன் விளங்கினாலும் திருச்சபைக்கு எதிரான இயக்கங்கள் தோன்றாமலில்லை. குறிப்பாக தெற்கு பிரான்ஸில் தோன்றிய வால்டேன்ஸியன்கள், அல்பிஜென்ஸயன்கள் இயக்கங்கள் வலுவடைந்தன. ஆனால் கி.பி. 1209-க்கும் இடையில் அல்பிஜென்ஸியன்களுக்கு எதிராக புனிதப் போர்த் தொடுக்கப்பட்டு அவ்வியக்கம் அடியோடு நசுக்கப்பட்டது. அதன் விளைவாக சமய விரோத சக்திகளை முளையிலே கிள்ள ஒன்பதாம் லூயி மன்னர் இன்குஷிசிஷன் நீதி மன்றங்களை நிறுவினார்.

**சமூகப் பொருளாதார நிலை**

காபேஷிய மரபினர் ஆட்சியின் ஆரம்பக் காலத்தில் பிரான்சின் சமுதாய அமைப்பு நிலமானிய முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வேளாண்மையே முக்கியத் தொழிலாக இருந்தது. பெரும்பாலும் கிராமிய வாழ்க்கை முறையே காணப்பட்டது. நாளடைவில் நகரங்கள் பல தோன்றலாயின. நகரங்களுக்கு பிரெஞ்சு மன்னர்கள் தாராளமாக சாசனங்கள் அளித்தனர். இந்த சாசனங்கள் வாயிலாக நகரங்கள் சில அரசியல் உரிமைகள் பெற்றன. மன்னர்கள் பணமும் படை உதவியும் பெற்றனர். நகரங்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டு பெரும் பொருளீட்டின. அங்கு வர்த்தக குழுக்கள் (Guilds) பல தோன்றின. லையான்ஸ் நகரம் வர்த்தக வளர்ச்சியில் முன்னணியில் நின்றது. சில நகரங்களில் கைத்தொழில் குழுக்கள் அமைக்கப்பட்டன. நெசவுத் தொழில் வளர்ச்சியுற்றது.

நகரங்களின் வளர்ச்சி சமுதாயத்தில், புதியதொரு வகுப்பினரின் தோற்றத்திற்கு வழி வகுத்தது. அவர்கள தான் நடுத்தர வர்க்கத்தினர் அவர்களின் ஆதரவால் மன்னராதிக்கம் வளர்ச்சியடைந்தது. நிலமானிய பிரபுக்களின் செல்வாக்கு குன்றியது.

**கல்வி, கலை வளர்ச்சி**

கல்வித் துறையில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. பழைய மடாலயக் கல்வி முறை மறைந்து பேராலயக் கல்வி முறை (Cathedral Schools) வளர்ச்சியுற்றது. வடக்கு பிரான்ஸில் உள்ள சார்ட்ரஸ், பாரீஸ், லாவோன் ஆகியவை முக்கிய கல்வி கேந்திரங்களாக விளங்கின. பாரிஸ் பல்கலைக்கழகம் ஐரோப்பாவின் அறிவுலக மையமாக விளங்கியது. பிறநாட்டு மாணவரும் உயர்க்கல்வி பெற பாரீஸில் குழுமினர். பீட்டர் அபலார்டு என்ற பேராசிரியர் இப்பல்கலைக் கழகத்தின் ஈடிணையற்ற அறிஞராக விளங்கினார். அவர் கிரேக்க மொழிப்

புலமையும் தர்க்க நூலில் புலமையும் கொண்டவர். மனிதாபிமானக் கண்ணோட்டமும் உடையவர். இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் ஐரோப்பாவின் பல பாகங்களிலிருந்து இவரைச் சூழ்ந்திருந்தனர். இடைக்கால ஐரோப்பாவின் ஏதேன்ஷ்' ஆக விளங்கிய பாரீஸ் பிற பல்கலைக் கழகங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது. விண்ணியல், கணிதவியல், இலக்கணம், சமயத்தத்துவம், சட்டம், மருத்துவம் ஆகிய உயர் கல்வித் துறைகள் பல இருந்தன.

கட்டிடக்கலையைப் பொறுத்தமட்டில் கோதிக் (Gothic) பாணியே பெரிதும் பின்பற்றப்பட்டது. கூர்மையான உச்சியினையுடைய உயர் கோபுரங்கள் அதன் முக்கிய அம்சமாகும். அவை பெரும்பாலும் கற்களாலே கட்டப்பட்டன. மற்றும் ரோமனஸ்க் பரணியிலும் ஆலயங்கள் கட்டப்பட்டன. வட்ட வளைவு மாடங்கள் எடுப்பான ஜன்னல்கள் அதன் முக்கிய அம்சங்கள். கோதிக் பாணியில் கட்டப்பட்ட முதல் ஆலயம் பாரீஸிற்கு அருகில் உள்ள செயின்ட்டெனிஸ் என்பதாகும். பாரீஸில் உள்ள நாட்டர்டாம் பேராலயம் கோதிக் பாணியில் கலை அழகை இன்று வரை எடுத்துக்காட்டி கொண்டிருக்கிறது. மற்றும் போர்க்ஸ், சார்ட்ரஸ், ஆமியன்ஸ், ரீம்ஸ் ஆகிய இடங்களில் கோதிக் பாணியிலான ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன.

இலக்கியத்தில் உயர்கல்விக் கூடங்களில் லத்தீன், கிரேக்க மொழிகள் விரும்பிப் படிக்காவிட்டாலும் தாய்மொழி இலக்கயங்களும் பயிலப்பட்டன. சான்ஸ்சரன்ஸ்டி கெஸ்டே (Chansonde Geste) எனப்பட்ட வீர காவியங்கள் மக்களிடை விருப்பமாகப் பயிலப்பட்டன. நிலமானிய வீரர்களின் வீர தீர சாகசச் செயல்கள் சுவையாக அவற்றுள் கூறப்பட்டிருந்தன. குறிப்பாக 'ரோலண்டு பாடல்' (Song of Roland) என்ற வீர காவியம் மக்களிடையே பிரபலமாக விளங்கியது. மேலும், ட்ருபேடோர்ஸ் (Troubadours) எனப்பட்ட இசைக் பாடல்களும், பேபிலியகஸ் (Fabiliaux) எனப்பட்ட அங்கதப் பாடல்களும் பிற்காலத்தில் வளர்ச்சியுற்றன.

## திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட பதவிச் சின்னப் போராட்டம் (STRUGGLE BETWEETN THE PAPACY AND THE EMPIRE)

ஐரோப்பாவில், இடைக்காலத்தின் பின்பகுதியில், அதாவது கி.பி. 11, 12, 13 ஆம் நூற்றாண்டுகளில் புனித ரோமானியப் பேரரசருக்கும், போப்புக்கும் இடையே அதிகாரப் போட்டி ஏற்பட்டது. பேரரசர் உயர்ந்தவரா, போப் உயர்ந்தவரா என்ற வினா இருவராலும் எழுப்பப்பட்டது. அரசசே உயர்ந்தவர் என்று அரசரும், ஆண்டவன் பிரதிநிதி என்ற முறையில் போப்பே உயர்ந்தவர் என்று போப்பும் கூறினர். ஆனால் ஒருவர் கருத்தை மற்றவர் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

சார்லமெனின் ஆட்சிக் காலத்தில் எவ்வாறுளு போப் மூன்றாம் லியோ, பேரரசரின் உதவியை நாடினார் என்பதையும், பின்னர் அவர் எவ்வாறு கிபி. 800 ஆம் ஆண்டில்

போப்பினால் முடிசூட்டப்பட்டார் என்பதையும் முன்னரே கண்டோம். அவர் காலத்தில், போப் அரசரின் அதிகாரத்திற்கு உட்பட்டவராக இருந்தார். அரசர் நாட்டையும், மக்களையும் காப்பாற்றுபவர் என்ற முறையில் அவரே போப்பை விட உயர்ந்தவர் என்றும் தெய்வீகமானவர் என்றும் கருதப்பட்டார்.

இதே போலப் பேரரசர் ஆட்டோவின் ஆட்சிக் காலத்திலும், போப் பன்னிரெண்டாம் ஜான் பேரரசின் உதவியைப் பலமுறை பெற்றுப் பின்னர் கி.பி. 962 ஆம் ஆண்டில் ஆட்டோவுக்குப் புனித ரோமானியப் பேரரசரென முடிசூட்டினார். இவ்விரு நிகழ்ச்சிகளும் பேரரசுக்கும், திருச்சபைக்கும் இடையே பல போராட்டங்கள் இடைக் காலத்தின் பிற்பகுதியில் நடக்கக் காரணமாயிருந்தன. நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில் கிறிஸ்தவக் குருமார்கள் அரசரிடமிருந்து நிலமானியங்களைப் பெற்று வந்தனர். எனவே அவர்கள் அரசரின் அதிகாரத்திற்குட்பட்டவர்களாகவே நடந்து வந்தனர். போப்பையும் பேரரசரே நியமித்து வந்தார். நியமிக்கப்பட்ட பின்னர் அரசர் போப்புக்குக் கணையாழியையும் புனிதச் செங்கோலையும் கொடுத்துப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வந்தார். அரசரின் அதிகாரத்திற்கு உட்பட்ட போப்புகள் இம்முறைகளை எதிர்த்தனர். எனவே அரசர்களுக்கும் போப்புகளுக்கும் தீராத பகைமை வளர்ந்து அது நீண்ட போராட்டமாக நடைபெற்றது. இதுவே பதவிச் சின்னப் போராட்டம் என அழைக்கப்படுகின்றது.

**போப் இரண்டாம் நிகலஸின் ஆணை**

கி.பி 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே போப் அரசரால் நியமிக்கப்படக் கூடாது என்ற கருத்து வலுப்பெற்று வந்தது. போப் இரண்டாம் நிகலஸ் (Pope Nicholas II) கி.பி. 1059 ஆம் ஆண்டில் ஓர் ஆணையை வெளியிட்டார். அவ்வாணையில், போப்பை நியமிக்கும் உரிமை பேரரசருக்கும் இல்லை என்றும், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த 'கார்டினல்களின் குழுவே' (College of Cardinals) போப்பை இனித் தேர்ந்தெடுக்கும் உரிமை உடையதென்றும் போப் கூறியிருந்தார். இவ்வாணையைப் பயன்படுத்திக் கொண்டு பிற்காலத்தில் போப் ஏழாம் கிரேகரி போன்றவர்கள் அரசரின் அதிகாரங்களைக் குறைக்க முயன்றனர். எனவே போப்புக்கும், பேரரசருக்கும் அதிகாரப் போராட்டம் ஏற்பட்டது.

அதே நேரத்தில் திருச்சபையைச் சார்ந்தவர்களிடையே சில குறைபாடுகள் இருந்தன. பணத்தைக் கொடுத்துப் பதவியை வாங்குதலும், குருமார்களாயிருந்தும் திருமணம் செய்து கொள்வதும், முறைகேடானவையாக கருதப்பட்டன. இக்குறைகளைப் போக்க கிரேகரி போன்றவர்கள் முயன்றார்கள்.

**பேரரசர் நான்காம் ஹென்றியும் போப் ஏழாம் கிரேகரியும்**

நான்காம் ஹென்றி கி.பி. 1056 ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டின் (புனித ரோமானியப் பேரரசு)பேரரசராக ஏலாசாபெல் (Aix – la – Chapelle ) என்ற தலை நகரத்தில்

முடிசூட்டப்பட்டார். அவருக்கு அப்பொழுது வயது ஆறு. இந்த இளைஞனை ஆட்சிப் பீடத்திலிருந்து அகற்றி அரியணையைக் கைப்பற்றுவதற்கு ஜெர்மன் பிரபுக்கள் சூழ்ச்சிகள் பல செய்தனர். ஆனால் அவை வெற்றி பெறவில்லை. தன் மதிநுட்பத்தாலும் திறமையினாலும் பேரரசைக் கட்டிக்காத்துத் தன் வலிமையை நிலைநாட்டினார். அரசியல் கொந்தளிப்புகளை வெற்றியுடன் அடக்கிய ஹென்றி மத விவகாரங்களில் பெருந்தொல்லைகளுக்குட்பட வேண்டியிருந்தது.

கி.பி. 1073ஆம் ஆண்டில் ஏழாம் கிரேகரி போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஹில்டே பிராண்ட் (Hilde Brand) என்றும் அழைக்கப்பட்டார். ஆண்டவனின் தெய்வீகச் சின்னம் திருச்சபை என்றும், அது எந்த அதிகாரத்திற்கும் உட்பட்டது அல்ல, அரசர்களுக்குக் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த மத குருக்களை நியமிக்கும் உரிமையையும், அவர்களுக்கு கணையாழியையும் புனிதச் செங்கோலைக் கொடுத்துப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைக்கும் உரிமையும் இல்லை என்பதை கி.பி. 1075 ஆம் ஆண்டில் தன் ஆணையின் வாயிலாக அறிவித்தார். மேலும், அவ்வாணையில் குருமார்கள் அனைவரும் திருச்சபையின் ஊழியர்சளேயன்றி, அரசனி ஊழியர்கள் அல்லர் என்பதைத் தெளிவுபடுத்தினார். இவ்வாணைய மதித்து நடக்காதவர் எவராயிருப்பினும் அவர் மதவிலக்கு செய்யப்படுவார் என்றும் கிரேகரி உறுதியோடு தெரிவித்திருந்தார்.

ஆனால் ஹென்றி இவ்வாணையை மதித்து நடக்கவில்லை. அத்தகைய ஆணையை வெளியிடுவதற்கே போப்புக்கு அதிகாரமில்லையெனக் கருதினார். தொடர்ந்து குருமார்களை நியமித்துக் கொண்டு வந்தார். முதலில் ஜெர்மனியில் இருந்த எல்லாக் கிறிஸ்தவ நிறுவனங்களின் குருமார்கள் அரசரையே ஆதரித்தனர். எனவே, ஹென்றி திருச்சபையின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்காதவர் என்றும், திருச்சபையை இழிவுபடுத்துகிறார் என்றும் போப் குற்றம் சாட்டினார். தொடர்ந்து இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டால் ஹென்றி மதவிலக்கு செய்யப்படுவார் என்றும் போப் பயமுறுத்தினார்.

ஹென்றி இவ்வச்சுறுத்தல்களுக்கு அஞ்சவில்லை. வோம்ஸ் (Worms) நகரத்தில் ஜெர்மானியக் குருமார்களின் மாநாட்டைக் கூட்டினார். அம்மாநாட்டிற்கு ஜெர்மானியக் குருமார்கள் பெரும் பாலார் வந்திருந்து, தங்கள் முழு ஆதரவையும் அரசருக்குத் தருவதாக உறுதி கூறினர். ஆனால் அத்தகைய ஆதரவை ஜெர்மானியப் பிரபுக்கள் தர மறுத்துவிட்டனர். மாறாக ஹென்றியைக் கவிழ்க்க முயன்றனர். குறிப்பாகச் சாக்சனி பகுதியைச் சேர்ந்தவர்கள் கலகம் செய்தார்கள். அப்பிரபுக்கள் போப் ஏழாம் கிரேகரியை ஆக்ஸ்பர்க் (Augsburg) நகரத்திற்கு வரும்படி அழைத்தார்கள். அங்கு போப்பைக் கலந்து ஆலோசித்து ஹென்றியைக் கவிழ்க்க வேண்டுமென்பது அவர்களின் திட்டமாகும்.

**கனோசாவில் ஹென்றியின் கடுந்தவம் கி.பி. 1077**

பிரபுக்களின் அழைப்பை ஏற்றுப் போப் கிரேகரியும் ஆக்ஸ்பர்க் நரக்திற்குப் புறப்பட்டு விட்டார். இத்தாலியில் போப்புக்கு ஆதரவு இருந்தது. ஜெர்மனியில் அரசருக்கு எதிர்ப்பு இருந்தது. தனா் மதவிலக்கு செய்யப்பட்டு, ஆட்சி பீடத்திலிருந்து அகற்றப்படுவது உறுதியென்பதை ஹென்றி புரிந்து கொண்டார். இந்த நிலையில் போப்பிடம் சரணடைவதே சரியான வழியென ஹென்றி கருதினார்.

எனவே போப் ஆக்ஸ்பர்க் நகருக்கு வருவதற்கு முன்னர் அவரைக் கண்டு மன்னிப்புப் பெற ஹென்றி ஓடினார். போப் அந்த நேரத்தில் இத்தாலியின் வடபகுதியில் உள்ள கனோசா என்ற நகரின் கோட்டையில் தங்கியிருந்தார். அது கடும் குளிர்காலம், பனிமழை பெய்து கொண்டிருந்தது. அவற்றைப் பொருட்படுத்தாது ஹென்றி ஆல்ப்ஸ் பனிமலைகளைக் கடந்து சென்று போப்பைப் பார்க்க முயன்றார். கோட்டையினுள் இருந்த போப், மன்னரைப் பார்க்க மறுத்துவிட்டார். எவ்வளவோ மன்றாடிக் கேட்டும் கோட்டையினுள் செல்லவும் மன்னர் அனுமதிக்கப்படவில்லை.

ஆனால் மன்னர் மனந்தளரவில்லை. இருக்கின்ற சூழ்நிலையில் மன்னர் போப்பிடம் மன்னிப்புப் பெறாவிட்டால் அவர் தன் பதவியை இழப்பது உறுதி. எனவே, கோட்டை வாயிலில் கடும்பனியையும், பொருட்படுத்தாது உணவும், உறக்கமும் இன்றி கடுந்தவம் இருந்தார். ஒரு பேரரசின் ஆட்சியாளர் துறவுக் கோலம் பூண்டு காலணி ஏதுவுமின்றி மண்டியிட்டு மன்னிப்புக் கோரினார் என்றாலும் போப் மனமிறங்கவில்லை. அப்பகுதியில் சீமாட்டி மாடில்டா இப்பிரச்சனையில் தலையிட்டு, மன்னரை மன்னிக்கும்படிப் போப்பை வேண்டினார். இறுதியாகப் போப் மன்னரைப் பார்த்து மன்னிப்பு வழங்கினார்.

போப் கிரேகரி, எத்தகைய சூழ்நிலையில் மன்னர் மன்னிக்கப்பட்டார் என்பது பற்றி விளக்கமாக ஜெர்மானியப் பிரபுக்களுக்குக் கடிதம் எழுதிவிட்டு ரோம் திரும்பினார். இந்நிகழ்ச்சி ஐரோப்பிய வரலாற்றில் - குறிப்பாக திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் மிக முக்கியமான நிகழ்ச்சியாக கருதப்படுகின்றது. அரசியல் அதிகாரங்களை விட ஆன்மீக அதிகாரங்களே உயர்ந்தவை என நிரூபிக்கப்பட்டதாக மற்ற ஐரோப்பிய அரசர்களும், மக்களும் கருதினார்கள். ஆனால் இப்போராட்டம் இத்துடன் முடிவடையவில்லை.

**கிரிகரி ஹென்றியினால் வீழ்த்தப்படுதல்**

ஹென்றி போப்பினால் மன்னிக்கப்பட்டாரென்றாலும், ஜெர்மானியப் பிரபுக்கள் அவரை மன்னராக ஏற்றுக் கொள்ளாமல் வேறொருவரை மன்னராக தேர்ந்தெடுத்தனர். ஆனால் ஹென்றி அக்கலக்காரர்களைத் தன் படைபலம் கொண்டு அடக்கினார். இவ்விவகாரங்களில் போப் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாமல் நடுநிலை வகித்தார். எனினும் அவரைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் ஹென்றியிடம் புகைந்து கொண்டு இருந்தது. மன்னர் இப்பொழுது ஓரளவு சில பிரபுக்கள் மற்றும் குருமார்கள் ஆகியோரின் ஆதரவையும் பெற்று விட்டார்.

அதன் பின் ஹென்றி ரோமின் மீது படையெடுத்துப் போப்பைத் தோற்கடித்து அவரைப் பதவி நீக்கம் செய்தார். போப் கிரேகரி, ஆதரிப்பவர் எவருமின்றி அனாதையாக விடப்பட்டார். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு சாலர்னோவுக்கு அனுப்பப்பட்டார். அங்கே கி.பி. 1085-ஆம் ஆண்டில் பரிதாபகரமான நிலையில் இறந்தார். மன்னருக்கு ஆதரவாக இருந்த குருமார்கள் மூன்றாம் கிளமென்ட் என்வரைப் போப்பாகத் தேர்ந்தெடுத்தனர். மூன்றாம் கிளமென்ட் ஹென்றிக்கு முடிசூட்டிப் புனித ரோமானியப் பேரரசரென அறிவித்தார். எனினும் இப் போராட்டம் இத்துடன் நிற்கவில்லை.

**ஐந்தாம் ஹென்றி ஆட்சிக்கால நிகழ்ச்சிகள் :**

நான்காம் ஹென்றிக்குப் பின்னர் ஐந்தாம் ஹென்றி கி.பி. 1106 ஆம் ஆண்டில் அரசரானார். சில ஆண்டுகள் கழித்து இப்போராட்டத்திற்கு ஒரு தீர்வுகான முயன்றார். அப்பொழுது போப்பாக இருந்த பாஸ்கெல் என்பவரும் கிரேகரியைப் போல் அல்லாது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடையவர். எனவே அரசர் போப்புடன் ஓர் உடன்பாட்டுக்கு வரலாம் எனக் கருதி கி.பி. 1111 ஆம் ஆண்டில் ரோமுக்கு வந்தார். இதை விரும்பாத சில ரோமானியர்கள் கலகம் விளைவித்து, அரசருடன் வந்த பல ஜெர்மானியர்களைக் கொன்று குவித்தனர். அதனால் அந்த ஆண்டில் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை.

**வோம்ஸ் ஒற்றுமைப் பத்திரம்**

ஐந்தாம் ஹென்றி காலத்திலேயே, போப் இரண்டாம் காலிஸ்டஸ் வோம்ஸ் நகரத்தில் 1122-ல் ஒற்றுமைப் பத்திரத்தில் கையெழுத்திட்டார். அதன்படி குருமார்களைத் தேரந்தெடுக்கும் பொறுப்பு திருச்சபையினிடம் ஒப்படைக்கப்பட்டது. போப்பினிடமிருந்தே அவர்கள் கணையாழியையும் புனிதச் செங்கோலையும் பெற்றுப் பதவி ஏற்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் நிலமானிய அடிப்படையில் அவர்களக்கு அரசர் நிலமானியங்களை வழங்குவதால் அரசரின் அதிகாரத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. போப்புக்கும், பேரரசருக்கும் ஏற்பட்ட அதிகாரப் போராட்டத்தில், வோம்ஸ் ஒற்றுமைப் பத்திரம் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியாயினும், அதைக் கடைபிடித்து நடக்க பின்னர் வந்த போப்புகளும் அரசர்களும் ஆயத்தமாக இல்லை என்பதை இனிவரும் நிகழ்ச்சிகள் விளக்குகின்றன.

**இங்கிலாந்தில் பதவிச் சின்னப் போராட்டம்**

நார்மானிய அரசர் முதலாம் வில்லியம் (William the Conqueror – 1066 – 87) இங்கிலாந்து நாட்டின் அரசராக இருந்த பொழுது, லான்பிராங்க் என்பவர் காண்டர்பரியின் தலைமை மதகுருவாக இருந்தார். இங்கிலாந்தில் உள்ள குருமார்களை நியமித்து, அவர்களுக்குப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைப்பது தனக்கே உரிய கடமையென அரசர் வாதாடினார். அரசு திருச்சபையின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டதல்ல என அரசர்

உறுதியாக நம்பினார். நல்ல வேளையாக லான்பிராங்கின் பரந்த மனப்பான்மையால் கசப்பான நிகழ்ச்சிகள் நடப்பது தவிர்க்கப்பட்டது.

**இரண்டாம் வில்லியம் 1087 – 1100**

இவர் காலத்தில் ஆன்ஸெல்ம் என்பவர் காண்டர்பரியின் தலைமை மதகுருவானவர். இவர் அரசரிடமிருந்து கணையாழியையும் புனிதச் செங்கோலையும் பெற்றுப் பதவி ஏற்க உறுதியாக மறுத்துவிட்டார். மேலும் காண்டர்பரி திருச்சபையின் கணக்குகளும் சொத்துக்கள் பற்றிய விளக்கங்களும் அரசரிடம் இருந்தன. அவற்றை ஆன்ஸெல்ம் கேட்ட போது கொடுக்க அரசர் மறுத்துவிட்டார். எனவே ஆன்ஸெல்ம் இங்கிலாந்தை விட்டு ரோம் நகருக்குச் சென்றார்.

**முதலாம் ஹென்றி : கி.பி. 1100 – 1135**

ரோமுக்குச் சென்றுவிட்டிருந்த ஆன்ஸெல்மை, முதலாம் ஹென்றி இங்கிலாந்துக்கு அழைத்து காண்டர்பரியின் தலைமை மதகுருவாக இருக்கும்படி வேண்டினார். ஆன்ஸெம் அழைப்பை ஏற்றுத் தம் பணியில் ஈடுபட்டார். ஓரிரு ஆண்டுகள் அரசருக்கும் தலைமை மதகுருவுக்குமிடையே நல்லுறவுகள் இருந்தன. ஆன்ஸெல்முக்கு இரண்டாம் பாஸ்கலின் ஆதரவு இருந்தது. எனவே அரசருக்கெதிரான நடவடிக்கைகளில் ஆன்ஸெம் ஈடுபட்டார். குருமார்களுக்குப் பதவி ஏற்பு வைபவத்தை நடத்தி வைக்கவும், அவர்களை நியமிக்கவும் அரசருக்கு அதிகாரமில்லையென அறிவித்தார். அரசர் படைக்கொண்டு தலைமைக் குருவைத் தாக்குவார் போல் தோன்றியது. ஆகையால் ஆன்ஸெல்ம் இரண்டாம் முறையாக இங்கிலாந்தை விட்டு ஓடிப் போப்பிடம் புகலிடம் தேடினார்.

சில ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது கி.பி. 1107 ஆம் ஆண்டில் முதலாம் ஹென்றிக்கும் ஆன்ஸெல்முக்குமிடையே ஓர் உடன்பாடு ஏற்படுத்தப்பட்டது. அதன் படிக் குருமார்கள் தேவாலயத்தைச் சேர்ந்தவர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றும், அவர்கள் அரசரிடமிருந்து மானியங்களைப் பெறுவதால் அரசரின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும், கணையாழிய அரசரிடமிருந்தும், புனிதச் செங்கோலை திருச்சபையிடமிருந்தும் பெற வேண்டுமெனவும் உடன்பாடு ஏற்பட்டது. இதே அடிப்படையில் தான் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னர் வோம்ஸ் ஒற்றுமைப் பத்திரம் (1122) புனித ரோமானியர் பேரரசர் ஐந்தாம் ஹென்றிக்கும், போப் இரண்டாம் காலிக்ஸ்டசுக்குமிடையே செய்து வைக்கப்பட்டது.

**இரண்டாம் ஹென்றியும் (கி.பி. 1154 – 1189) பெக்கெட்டின் படுகொலையும்.**

இரண்டாம் ஹென்றிக்கு முன் அரசராக இருந்த ஸ்டீபன் காலத்தில் திருச்சபை வலிமை பெற்று விட்டது. திருச்சபையைச் சேர்ந்தவர்கள் பல உரிமைகளையும், சலுகைகளையும் பெற்று விட்டார்கள். மத நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் செய்யும்

குற்றங்களை திருச்சபை நீதி மன்றங்களே விசாரித்து எளிய தண்டனைகளைக் கொடுக்கும். ஆனால் குறிப்பாக மதகுருமார்க் கொலைக்குற்றம் சாட்டப்பட்டவர்களானாலும் திருச்சபையின் சட்டங்களின் படி அவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட மாட்டாது. ஆனால் மத குருமார்கள் அல்லாதவர்கள் அதே போன்ற கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

ஆனால் சமநீதியை நிலைநாட்ட விரும்பிய ஹென்றி இத்தகைய முறையை வெறுத்தார். நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒரே விதமான சட்டத்திற்கு உட்பட்டு ஒரே வகையான நீதி மன்றங்களாலேயே குற்றவாளிகளை விசாரிக்க வேண்டுமென விரும்பினார். ஆனால் இவருடைய கருத்துக்களுக்கு காண்டர்பரி தலைமை மதகுரு பெக்கெட் ஒப்புக் கொள்ளவில்லை. வேறு பல கருத்துக்களிலும் ஹென்றியும் பெக்கெட்டும் முரண்பட்டார்கள். கி.பி. 1170 ஆம் ஆண்டில் ஒருநாள் அரசரின் போர் வீரர்கள் பெக்கெட்டைக் கொலை செய்து விட்டார்கள்.

இதற்காக ஹென்றி மனம் வருந்தி உண்மையிலேயே ஆண்டவனிடம் மன்னிப்ப கேட்டார் என்றாலும், இக்கொலைச் செய்தியை கேள்விப்பட்ட இங்கிலாந்து மக்கள் வேதனைக் குரல் எழுப்பினார்கள். பெக்கெட்டைப் பெரும் தியாகியாகக் கருதினார்கள். அது ஐரோப்பாக் கண்டம் முழுவதும் எதிரொலித்தது. இங்கிலாந்திலும் பேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் பின்னர் நிகழப் போகின்ற கோர நிகழ்ச்சிகளுக்கு இது ஒரு முன்னோடியாக இருந்தது.

**புனித ரோமானியப் பேரரசர் பிரெடிரிக் பார்பரோசாவும் திருச்சபையும்**

ஐந்தாம் ஹென்றிற்குப் பின்னர், லொதெய்ர், மூன்றாம் கான்ராட் ஆகியவர்கள் பேரரசர்கள் ஆனார்கள். அவர்களுக்குப் பின் பிரெடிரிக் பார்பரோசா ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் சார்லமெனைப் போலவும், ஆட்டோவைப் போலவும் மிகத் திறமை வாய்ந்த அரசராவார். ஜெர்மானியப் பேரரசின் இழந்த பெருமையை மீண்டும் நிலைநாட்டப் பேராவல் கொண்டார். தன் பேரரசோடு இத்தாலியையும் இணைத்துப் பேரரசை விரிவுப் படுத்த விரும்பினார்.

ஆனால் அவருக்கும் அவர் காலத்தில் போப்பாக இருந்த நான்காம் ஆட்ரியனுக்கு கருத்து வேறுபாடுகள் தோன்றின. போப் நாட்டுக்கு விடுத்த அறிக்கையொன்றில் அரசருக்கு போப் முடிசூட்டுவதாலும், பேரரசு முழுவதையும் போப்பே அரசருக்கு முறைப்படி கொடுக்கிறார் என்ற தெய்வீக கருத்தினாலும் போப்பே எல்லாத் துறையிலும் உயர்ந்தவர் என்றும், எனவே, போப்பின் ஆணைக்கு ஏற்பவே அரசர் நடந்து கொள்ள வேண்டுமென்றும் உறுதியாகக் கூறினார். ஆனால் பார்பரொசா இதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

கி.பி. 1159 ஆண்டில் போப் நான்காம் ஆட்ரியன் ஓய்வு பெற்றார். அவருடைய ஆதரவுடன் மூன்றாம் அலெக்சாண்டர் போப்பானார். ஆனால் பேரரசர் பார்பரோசாவை ஆதரித்த

பெரும்பாலான கார்டினல்கள் அவர் போப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டது முறையற்றதென்றும், செல்லுபடியாகாதென்றும் அறிக்கை விட்டனர். அதுமட்டுமின்றி விக்டர் என்ற வேறு ஒருவரைப் போட்டிப் போப்பாகத் தேர்ந்தெடுத்தனர். பார்பரோசாவும் இந்த போப்பையே ஆதரித்தார்.

பார்பரோசா ரோமை முற்றுகையிட்டுக் கைப்பற்றத் திட்டமிட்டார். போப் மூன்றாம் அலெக்சாண்டரை ஆதரித்த வட இத்தாலியச் சிற்றசர்கள் லம்பார்ட் சங்கம் என்ற கூட்டமைப்பை ஏற்படுத்திப் பார்பரோசாவை எதிர்த்தனர். ஆனால் அப்படைகள் மிக எளிதாக பார்பரோசாவினால் தோற்கடிக்கப்பட்டன. பின்னர் ரோம் நகரை மூன்றாம் அலெக்சாண்டர் தப்பித்துக் கொண்டு ரோமிலிருந்து ஓடிவிட்டார். பார்பரோசா வெற்றிப் பெருமிதத்துடன் தலைநகர் திரும்பினார். ஆனால் இவ்வெற்றியின் பெருமை நீண்ட் நாள் நிலைக்கவில்லை.

**பார்பரோசர் போராட்டம் மன்னிப்பு பெறுதல்**

கி.பி. 1177-ஆம் ஆண்டில் பார்பரோசாவின் பெரும் படைகள் வட இத்தாலிய அரசர்களின் படைகளால் மிலான் நகரத்திற்கு அருகில் லெக்னானோ என்ற இடத்தில் கடுமையாகத் தோற்கடிக்கப்பட்டன. பேரரசருக்கு இது பெருத்த அவமானத்தை ஏற்படுத்தியது. அதே பதவியையும் துறக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது அதே போப் மூன்றாம் அலெக்சாண்டர் வெனிஸ் நகரத்தில் தங்கியிருந்தார். அவரிடம் பேரரசர் ஓடிச்சென்று அவர் காலிலே விழுந்து மன்னிக்கும் படி வேண்டினார். எந்த போப்பை பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் ரோமை விட்டுத் துறத்தினாரோ அதே போப்பின் காலிலே விழுந்து மாமன்னர் மன்னிப்பு கேட்ட போது, போப் பெருந்தன்மையுடன் மன்னித்தார். (போப் மூன்றாம் அலெக்சாண்டர் கி.பி. 1159 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1181 வரை தொடர்ந்து பதவியில் இருந்தார்.) சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் (கி.பி. 1077 ஆம் ஆண்டில்) போப் ஏழாம் கிரேகரியீடம் மன்னிப்பு வேண்டி கனோசாவில் நான்காம் ஹென்றி கடுந்தவமிருந்தும், கிபி. 1177 ஆம் ஆண்டில் போப் மூன்றாம் அலெக்சாண்டரிடம் மன்னிப்புப் பெறவெனில் நகரத்தில் பார்பரோசா போப்பின் காலில் விழுந்து சரணடைந்ததும், திருச்சபைக்கும் பேரரசுக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் முக்கியமான கட்டங்களாகும்.அதேபோல நான்காம் ஹென்றி ஏழாம் கிரேகரியை கி.பி. 1085 ஆம் ஆண்டில் விரட்டியடித்ததும், பார்பரோசா கி.பி. 1159 ஆம் ஆண்டில் போப் மூன்றாம் அலெக்சாண்டரைப் பறந்தோடச் செய்ததும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளாகும்.

**ஆறாம் ஹென்றியின் திருமணம்**

வெனிஸில் ஏற்பட்ட நிகழ்ச்சியைத் தனக்கு ஏற்பட்ட பெருத்த அவமானமாகப் பிரெடிரிக் பார்பரோசா கருதினார். தன்னுடைய ஆட்சிக் காலத்திலேயே இல்லாவிட்டாலும் தன் மகனின் ஆட்சிக் காலத்திலாவது போப்பின் செல்வாக்கைக் குறைக்க அவர் திட்டமிட்டார். அப்பொழுது இரு சிசிலிகளின் அரசுக்கு ஆட்சியாளராக இருந்தவர் இளவரசி கான்ஸ்டன்ஸ் என்பவராவார். போப்புக்கு மிக அதிகமான ஆதரவு அளித்த அரசுகளில் இவ்வரசு

முக்கியமானதாகும். இங்கு வாழ்ந்த மக்களில் பெரும்பாலார் நார்மானியர்கள் ஆவர். பிரெடிரிக் பார்பரோசா, இவ்விளவரசியைத் தன் மகன் ஆறாம் ஹென்றிக்கு திருமணம் செய்து வைக்க முயன்று அம் முயற்சியில் வெற்றியும் பெற்றார். இத்திருமணத்தினால், இரு சிசிலிகளின் அரசின் ஆதரவு போப்புக்கு இல்லாமல் போகும். என்றும் அதன் பயனாகப் போப் ஜெர்மானியப் பேரரசின் அதிகாரத்திற்குட்பட்டவராகவே இருப்பார் என்றும் ஃபிரெடிரிக் பார்பரோசா கருதினார்.

கி.பி. 1170 ஆம் ஆண்டிலிருந்து 1197 ஆம் ஆண்டு வரை ஆறாம் ஹென்றி அரசராக இருந்தார். ரோமானியப் பேரரசை ஈடு இணையற்ற வல்லரசாக மாற்ற விரும்பினார். போப்புக்கும் இவருக்கும் கருத்து வேறுபாடுகள் ஓரளவு இருந்தனவென்றாலும் அவை வரலாற்றுச் சிறப்புடையவை அல்ல.

**நான்காம் ஆட்டோவின் ஆட்சிக்கால நிகழ்ச்சிகள் :**

ஜெர்மனியில் நீண்ட காலமாகவே அரசர்கள் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்களே அன்றிப் பரம்பரை வழியாக வந்தவர்கள் அல்லர். ஆறாம் ஹென்றி தன் ஆட்சிக் காலத்தில் இத்தகைய முறையை விடுவித்துப் பரம்பரையாக அரசராகும் முறையைக் கொண்டு வர முயன்றார். ஆனால் இம் முயற்சியில் அவர் வெற்றி பெறவில்லை. எனவே, அவர் கி.பி. 1197 ஆம் ஆண்டில் இறந்த போது அவருடைய மகன் பிரெடிரிக் அரசாராக முடியவில்லை.

மேலும் அப்பொழுது போப்பாக இருந்த மூன்றாம் இன்னொசன்ட் பிரெடிரிக்கை ஆதரிக்கவில்லை. அவர் நான்காம் ஆட்டோ என்பவரை ஆதரித்ததால் ஆட்டோவே அரசராக முடிந்தது. போப்பின் ஆதரவு தனக்கில்லாமல் போயிருந்தால் தான் இந்த நிலைக்கு வந்திருக்க முடியாது என்று ஆட்டோவே கூறினார். இருப்பினும் விரைவிலேயே ஆட்டோவுக்கும் போப்புக்கும் கருத்து வேறுபாடுகளும் மனக் கசப்பும் ஏற்பட்டன. ஆட்டோ இத்தாலியை முற்றுகையிட ஆரம்பித்தார். இரு சிசிலிகளின் அரசைக் கைப்பற்ற வேண்டுமெனத் திட்டமிட்டார்.

அதே சமயம் போப், ஆட்டோவை மதவிலக்கு செய்தார். அந்த நேரத்தில் ஜெர்மானியப் பிரபுக்கள் ஆறாம் ஹென்றியின் மகன் பிரெடிரிக்கையே மன்னராகத் தேர்ந்தெடுத்தனர். பிரெடிரிக், ஆட்டோவை கி.பி. 1214ஆம் ஆண்டில் புவைன் போரில் தோற்கடித்துத் தன்நிலையை உறுதிப்படுத்திக் கொண்டார். போப் மூன்றாம் இன்னொசன்ட் கி.பி. 1216 ஆம் ஆண்டில் இறந்து விட்டார்.

**இரண்டாம் பிரெடிரிக்கும் திருச்சபையுடன் போராட்டமும்**

ஆறாம் ஹென்றியின் மகன் இரண்டாம் பிரெடிரிக் (கி.பி. 1211-1250) இடைக்காலத்தில் மிகச்சிறந்த அரசர்களுள் ஒருவராவார். மக்களிடையே கல்வியைப் பரப்புவதற்காக

இத்தாலியில் நேபிள்ஸ் பல்கலைக் கழகத்தை நிறுவினார். சாலர்னோ நகரத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்தார். பிரபுக்களின் அதிகாரங்களையும் குருமார்களின் உரிமைகளையும் குறைத்தார். இவர் பேரரசராக இருந்த போது ஒன்பதாம் கிரேகரி ரோம், திருச்சபையின் போப்பாக இருந்தார். புனித இடம் ஜெருசேலத்தைக் கைப்பற்றுவதற்காக சிலுவைப் போர் ஒன்றை நடத்தும்படிப் போப், பேரரசருக்கு ஆணையிட்டார். பேரரசர் தனக்கு உடல்நிலை சரியில்லாததால் உடனடியாகச் சிலுவைப் போரில் ஈடுபட முடியவில்லை எனக் கூறினார்.ஆனால் போப் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பேரரசர் தன் ஆணையை மீறுகின்றா ரென்றும், அவர் இத்தாலியின் மீது அடிக்கடி படையெடுக்கிறார் என்றும் குற்றம் சாட்டிப் போப் பேரரசரை மதவிலக்கு செய்தார். ஆனால் பிரெடிரிக் உடனே ஒரு சிலுவைப் போரை (ஆறாம் சிலுவைப் போர்) நடத்தி அதில் வெற்றி பெற்றுத் தன் பெருமையை நிலைநாட்டினார். அப்படியிருந்தும் போப் பேரரசரை ஆட்சிப் பீடத்திலிருந்து இறக்குவதற்குச் சூழ்ச்சி செய்தார். மக்களுக்கு அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யும்படி அறிவுறுத்தினார். மன்னர் மன்னிப்புக் கேட்ட பிறகே அவரைப் போப் மன்னித்தார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் பிரெடிரிக் வட இத்தாலி முழுவதையும் கைப்பற்றினார். கார்டெனுவாவில் (ஊழசவநரெழஎய) நடைபெற்ற போரில் (1237) லம்பார்ட் கழகம் படைகளைத் தோற்கடித்து, வெல்லப்பட்ட பகுதிகளில் தன்னுடைய அலுவலர்களை நியமித்து, ஆட்சியை முறைப்படுத்தினார். மேலும் போப்பின் ஆட்சிக்குட்பட்ட மாநிலங்கள் மீது படையெடுத்தார். இந்த நேரத்தில் போப் ஒன்பதாம் கிரேகரி இறந்து விட்டார்.

ஒன்பதாம் கிரேகரிக்குப் பின் செலஸ்டைன் என்பவர் போப் ஆனார். அவர் பேரரசரின் நெருங்கிய நண்பராவார். அவர் காலத்தில் எந்தப் பிரச்சனையும் எழவில்லை. கி.பி. 1224 ஆம் ஆண்டில் நான்காம் இன்னொசன்ட் போப்பானார். பதவி ஏற்றவுடனே பிரெடிரிக்கின் அதிகாரத்தைக் குறை கூறினார். ஆத்திரம் கொண்ட பிரெடிரிக் நான்காம் இன்னொசண்டை ரோமிலிருந்து விரட்டியடித்தார்.

போப், பிரான்சிலுள்ள லியோன் நகரத்திற்கு ஓடினார். அங்கே திருச்சபையைச் சார்ந்த குருமார்கள் கூட்டமொன்றைக் கூட்டி, பிரெடிரிக்கை மத விலக்கு செய்து, அவர் தொடர்ந்து பேரரசராக இருக்க உரிமை இல்லாதவரென அறிவித்தார். படையைக் கொண்டே போர்க்களத்தில் மன்னரை தோற்கடிக்கத் திட்டம் தீட்டினார். ஆனால் அதற்குள்ளாக கி.பி. 1250 ஆம் ஆண்டில் இரண்டாம் பிரெடிரிக் இறந்து விட்டார். மன்னர் இறந்தாலும், போப் இறந்தாலும், பேரரசுக்கும் திருச்சபைக்கும் ஏற்பட்ட போராட்டம் மட்டும் தீர்வதாக இல்லை. அது இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது.

**இரண்டாம் பிரெடிரிக்குப் பின் வந்தோர்**

பிரெடிரிக்குப் பின் வந்த மூன்று அரசர்கள் திருச்சபையோடு தொடர்ந்து போராட வேண்டியதாக இருந்தது. பிரெடிரிக்கின் மகன் நான்காம் கான்ராட் ஜெர்மனியை விட்டு

நேபிள்ஸ் நகரத்திற்கு விரட்டப்பட்டார். அவர் பின்னர் இறந்தார். கான்ராடின் இளவல் மான்பிரெட் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அப்பொழுது போப்பாக இருந்த நான்காம் அர்பன் மான்பிரடின் ஆட்சியை வெறுத்தார். அதனால் அவர் பிரான்சு நாட்டு அரசரான ஒன்பதாம் லூயியின் உதவியை நாடினார். லூயி தன் தம்பியும், ஆஞ்சோவின் ஆட்சியாளருமான சார்லஸை போப்பின் உதவிக்கு அனுப்பினார். ஆஞ்சோவின் ஆட்சியாளருமான சார்லஸை போப்பின் உதவிக்கு அனுப்பினார். சார்லஸ், மான்பிரெட்டை இத்தாலியில் உள்ள பெனவேண்டோவுக்கு அருகில் தோற்கடித்து அப்பகுதியைத் தானே வைத்துக் கொண்டார். மான்பிரெட்டுக்குப் பின்னர் கான்ராட்டினோ அரசரானார். அவர் சார்லஸைத் தோற்கடிக்க கருதி இத்தாலியின் மீது படையெடுத்தார். ஆனால் அப்போரில் கான்ராட்டினோ பெருந் தோல்வி கண்டார். அவர் கைது செய்யப்பட்டு, நேபிள்ஸ் நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்குப் பொது இடமொன்றில் நூற்றுக்கணக்கான மக்களுக்கெதிரில் சிரச் சேதம் செய்யப்பட்டார். இக்கொடுமைக்கு திருச்சபையே காரணம் என்பது தெளிவாகின்றது. நீண்ட இப்போராட்டத்தின் இறுதியில் திருச்சபையே வெற்றி பெற்றது என்று பொதுவாகக் கருதப்பட்டாலும், பிரான்சு போன்ற வேறு நாடுகளில் இப்போராட்டம் தொடர்ந்து நீடித்ததோடல்லாமல், இழிநிலைக்கு உட்படுத்தப்பட்டது.

**திருச்சபைக்கும் பேரரசுக்கும் இடையே நடைபெற்ற போராட்டத்தின் முக்கியத்துவம்**

திருச்சபைக்கும் பேரரசுக்கும் நடைபெற்ற போராட்டத்தால் இரண்டு நிறுவனங்களுமே வலுவிழந்தன. ஒன்றையொன்று ஒடுக்கி வலுவிலந்து வாழ்விழந்தன. இத்தாலியும், ஜெர்மனியும் சிறுசிறு பகுதிகளாகச் சிதறி பத்தொன்பதாவது நூற்றாண்டு வரை ஐக்கியப்படாமல் இருந்தன. போப்பாண்டவரின் அதிகாரம் சில காலத்தில் உயர்ந்து காணப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் திருச்சபையானது ஆன்மீகத்தில் வலிமை குன்றியது. போப்பாண்டவர்கள் அரசியலில் மூழ்கினர். போப்பாண்டவர்கள் மன்னர்களது வலிமையை ஒடுக்கியது இறுதியில் அவர்களது வீழ்ச்சிக்கே வழி வகுத்தது. மேலும் ஜெர்மானிய திருச்சபையில் பிளவு ஏற்பட்டது. மன்னரை ஆதரித்தவர்களும், போப்பாண்டவரை ஆதரித்தவர்களும் மோதிக் கொண்டனர்.

இந்த போராட்டம் திருச்சபையில் பல சீர்திருத்தங்களை ஏற்படுத்தியது. குருமார்கள் திருமணம் செய்வது தடுக்கப்பட்டது. கோவில் மானியப் பேரம் தடுக்கப்பட்டது. மன்னர்கள் மண்ணுலகில் போடப்பட்டது. முக்கியமாக இப்போராட்டத்தின் விளைவாக போப்பாண்டவர்களின் அதிகார வீழ்ச்சியையும், திருச்சபையில் ஏற்பட்ட பல சீர்திருத்தங்களையும், பல நாடுகளில் ஏற்பட்ட தேசிய உணர்வுகளையும் மிக முக்கியமானதாக கருதலாம்.

## சிலுவைப் போர்கள்

## (THE CRUSADES)

கி.பி. 12-ம், 13-ம் நூற்றாண்டுகளி கிறிஸ்த்தவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே பாலஸ்தீனத்தில் நடைபெற்ற சமயப்போர்களே சிலுவைப் போர்கள் என்று அழைக்கப்படுகிறது. பாலஸ்தீனத்திலிருந்த கிறிஸ்தவர்களின் புனித நகரமான ஜெருசேலத்தை கி.பி. 1071-ல் துருக்கியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன் பின் அங்கு புண்ணியப் பயணம் செய்த கிறிஸ்த்தவர்களை கொடுமைப்படுத்தினார்கள். எனவே ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் ஒன்று சேர்ந்து ஜெருசேலம் நகரை மீட்க துருக்கியர்களுடன் போரிட்டார்கள். இந்த சமயப் போர் கி.பி. 1097-லிருந்து சுமார் 150 ஆண்டுகள் விட்டு விட்டு நடைபெற்றது. இப்போரில் கலந்து கொண்ட கிறிஸ்தவ வீரர்கள் தங்கள் வலது தோளுக்குக் கீழே சிவப்புத் துணியிலான சிலுவைக் குறியைத் தங்கள் ஆடையுடன் அணிந்து கொண்டார்கள். எனவே தான் இப்போர்கள் சிலுவைப் போர்கள் என்று அழைக்கப்பட்டது.

**சிலுவைப்போருக்கான காரணங்கள் :**

ஜெருசேலம் நகர் கி.பி. 1097-ல் செலுஜிக் துருக்கியர் வசம் வீழ்ந்தது. இந்த துருக்கியர் மதவெறியும் கொடூர புத்தியும் கொண்டவர்கள். எனவே கிறிஸ்தவர்கள் ஜெருசேலம் நகருக்குப் புனிதப் பயணம் செய்வதைத் தடுத்தனர். பல கிறிஸ்தவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். சித்திரவதை செய்யப்பட்டனர். அப்படி துன்பங்களை அனுபவித்து மீண்டு வந்த பீட்டர் என்ற துறவி தெரிவித்த செய்திகளை கேட்ட ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் வேதனையடைந்தனர். துடிதுடித்தனர். புண்ணிய நகரை மீட்டக வீறு கொண்டு எழுந்தனர்.

**போப் இரண்டாம் அர்பனின் பிரச்சாரம்**

ஐரோப்பிய மக்களை புனிதப் போருக்குத் திரட்டியதில் போப்பாண்டவர் இரண்டாம் அர்பனின் பங்கு முக்கியமானது. இவர் பல காரணங்களுக்காக துருக்கியர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். முதலாவது ஐரோப்பியக் கிறிஸ்தவர்களை இதன் மூலம் ஒற்றுமைப்படுத்தி ஒரு கொடியின் கீழ் திரட்ட முயற்சித்தார். இரண்டாவது, திருச்சபையின் பெருமையையும், வலிமையையும் நிலைநாட்ட முயற்சித்தார். அத்துடன் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ஐரோப்பியப் பிரபுக்களின் கவனத்தை திசை திருப்பவும் சிலுவைப் போர்களுக்காகப் பிரச்சாரம் செய்தார். சுமார் ஒன்பது மாதங்கள் வடக்கு இத்தாலி மற்றும் தெற்கு பிரான்ஸ் பகுதிகளில் பல இடங்களுக்குச் சென்று பிரச்சாரம் செய்தார்.

**பைசாண்டியப் பேரரசின் வீழ்ச்சி:**

பைசாண்டியப் பேரரசின் வீழ்ச்சி சிலுவைப் போர்களுக்கு மறைமுகக் காரணமானது. சுமார் ஏழு நூற்றாண்டுகள் பழங்கால ரோமானியப் பேரரசின் புகழை நிலைநாட்டி வந்தது. ஆசியாவிலிருந்து வந்த பகைவர்களுக்கு எதிராக பாதுகாப்பு அளித்தது. ஆனால் பதினொன்றாம் நூற்றாண்டில் பேரரசில் ஏற்பட்ட உட்பூசல்களும், சமய வேறுபாடுகளும் இப்பேரரசை பலவீனப்படுத்தியது. பைசாண்டியப் பேரரசின் ஆசிய பகுதியை துருக்கியர்கள் பிடித்துக் கொண்டனர். கான்ஸ்டாண்டிநோபிளை துருக்கியர்கள் பிடித்துக் கொண்டால் கிழக்கு ஐரோப்பா மீது தாக்குதல் தொடுக்க துருக்கியர்களுக்கு எளிதாகிவிடும். எனவே விரிவடைந்து வரும் இஸ்லாமியப் பேரரசினைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் பைசாண்டியப் பேரரசர் முதலாம் அலக்சியஸ் போப் இரண்டாம் அர்பனிடம் வேண்டுகோள் விடுத்தார். இது சிலுவைப் போர்களுக்கு மூலகாரணம் என்று கூட கூறலாம்.

**மக்களின் வீரதீர உணர்வு :**

மதப்பற்றும் ஆதிக்க ஆசையும், புதிய நிலங்கபைப் பார்க்க வேண்டுமென்ற வேட்கையும் சிலுவைப் போர்களுக்கு முக்கிய காரணமாகும். வீரதீர செயல்களைப் புரிய வேண்டும் என்ற ஆசை உடையவர்களும், கிழக்கத்திய நாடுகளுக்குச் சென்று புதிய நிலப்பகுதிகளைக் காண வேண்டும் என்றும் ஆவல் கொண்ட மக்களும் சிலுவைப் போர்களுக்குத் தயாராயினர். நிலமானியக் கட்டுப்பாடிலிருந்து விடுபடுவதற்குத் துடிதுடித்துக் கொண்டிருந்தவர்களும் சிலுவைப் போரினை ஒரு வாய்ப்பாக கருதினர்.

**பொருளாதாரக் காரணம் :**

ஐரோப்பாவில் நிலவிவந்த நிலமானிய முறையின் விளைவாக நிலங்களின் வளம் குறைந்து எண்ணற்ற பிரபுக்கள் கடனில் மூழ்கினர். அதே நேரம் பாலஸ்தீனம் பாலும் தேனும் ஓடும் செழிப்பான பகுதி என்ற செய்தி பிரபுக்கள் பாலஸ்தீனம் செல்ல ஊக்கம் அளிப்பதாக இருந்தது. பலர் தங்கள் கடன் தொல்லைகளிலிருந்து தப்பித்துக் கொள்ள சிலுவைப் போர்களில் ஈடுபட்டனர். துன்பப்பட்டு தவித்த நிலமானியக் குடியானவர்களுக்கு சிலுவைப் போர் சிறை மீட்பு அளிக்கும் வரப்பிரசாதமாக விளங்கியது.

**வாணிப நோக்கம் :**

இடைக்காலத்தில் இத்தாலிய நகரங்களான பைசா, ஜெனோவா, வெனிஸ் ஆகியவை தங்கள் வாணிபத் தொடர்புகளை விரிவுப்படுத்த முயன்று கொண்டிருந்தன. தங்கள் வியாபாரத்தின் மூலம் வலிமையும், வளமும் அடைந்த இந்த நகரங்கள் கிழக்கு மத்திய தரைக்கடல் பகுதியில் நிலவிய முஸ்லீம் ஆதிக்கத்தை ஒழித்து விட்டு தங்கள் வாணிபத்தை பெருக்க முயற்சித்தன. எனவே இந்த நகரங்கள் சிலுவைப் போர்களில் அதிக ஆர்வம் கொண்டன. சில சமயங்களில் சிலுவைப் போருக்கான செலவுகளையும் ஏற்றுக் கொண்டன.

**போப் இரண்டாம் அர்பனின் போர் ஆயத்த நடவடிக்கைகள் :**

1095-ல் பியாசென்சா என்ற இடத்தில் நடைபெற்ற மாநாட்டில் பாலஸ்தீனத்தை முஸ்லீம்களிடமிருந்து கைப்பற்றுவதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்தார். போப் இரண்டாம் அர்பன் பின்னர் கிர்மான்ட் என்ற இடத்தில் மதத் தலைவர்களின் புனித சபையைக் கூட்டினார். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் கடவுளது பணிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். குடிமக்களும் துறவிகளும் கிறிஸ்தவ மதத்தைப் பாதுகாக்கும் போர்வீரர்களாயினர். சிலுவைப் போரில் கலந்து கொள்ள விரும்பிய அடிமைகள் விடுவிக்கப்பட்டனர். நில அடிமைகள் பிரபுக்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். நிலமானிய முறையில் பின்பற்றப்பட்ட சட்டதிட்டங்கள் அகற்றப்பட்டு போப்பாண்டவரின் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. ஐரோப்பா முழுவதும் ஒரே நாடு என்ற மனப்பான்மை தோன்றி கிறிஸ்தவ நாடுகள் ஒன்றுபட்டு இஸ்லாமிய எதிரிகளைத் தோற்கடிக்க போரிட முன்வந்தன. போப் இரண்டாம் அர்பன் சிலுவைப் போராட்டத்தை ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்தார்.

1. **முதலாம் சிலுவைப் போர் : 1097 – 99**

ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் புனித பூமியை மீட்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் துணிச்சலாக போரில் இறங்கினார். முதலில் 12000 பேர்களைக் கொண்ட ஒழுங்கற்ற படை ஒன்றை துறவி பீட்டரின் தலைமையில் சென்று கான்ஸ்டான்டிநோபிளை அடைந்தது. பசியாலும், நோயினாலும் பாதிக்கப்பட்ட அந்த படையினர் கான்ஸ்டான்டிநோபிளை கொள்ளையிட முற்பட்டனர். எனவே கிழக்கு ரோமானியப் பேரரசர் அலக்சியஸ் அவர்களை ஆசியா மைனருக்கு அனுப்பி வைத்தார். அங்கு துருக்கியர்களால் தோற்கடிக்கப்பட்டார்.

இதே காலத்தில் ஐரோப்பிய பிரபுக்கள் பல பகுதிகளில் ஒன்றுகூடி சிலுவைப் போரில் பங்கு கொள்ள வலிமையான ராணுவத்தை அமைத்தனர். அதில் பிரெஞ்சுக்காரர்களும், ஜெர்மானியர்களும் அதிகமிருந்தனர். இப்படைக்கு காட்பிரோ, பால்ட்வின், ரேமாண்ட் போன்றோர் தளபதிகளாகச் செயல்பட்டனர். சிலுவைச் சின்னம் அணிந்த இந்த ராணுவம் முதலில் நிக்கேயா, டார்சஸ் போன்ற இடங்களைப் பிடித்தது. 1097 ஜூலை மாதம் ஆந்தியோக் என்ற இடத்தல் துருக்கியப் படையைத் தோற்கடித்தது. 1099-ல் ஜெருசேலம் கைப்பற்றப்பட்டது.

ஜெருசேலம் கைப்பற்றப்பட்ட பின் கிறிஸ்தவ வீரர்களின் முஸ்லீம்களை ஏவிரக்கமில்லாமல் கொன்று குவித்தனர். சுமார் 70,000 முஸ்லீமகள் படுகொலை செய்யப்பட்டனர். யூதர்களின் கோவில்கள் கொளுத்தப்பட்டன. இந்த முதல் சிலுவைப் போரில் கிறிஸ்தவர்கள் வெற்றியடைந்தனர். புனித நகரம் மீட்கப்பட்டது. திரிபோலி, அந்தியோக், எடிசா ஆகிய பகுதிகள் ஜெருசேலத்துடன் இணைக்கப்பட்டு இலத்தீன் ஜெருசேலம் பேரரசு (Latin

Kingdom of Jerusalem) நிறுவப்பட்டது. மத்தியதரைக்கடல் பகுதியில் துருக்கியர் ஆதிக்கம் மறைந்து இத்தாலிய நகரங்களின் வாணிபம் தடையின்றி நடைபெற்றது. முதல் சிலுவைப் போரின் வெற்றி சமய ஆர்வத்தையும் உணர்ச்சியையும் ஐரோப்பியர்களுக்கு ஊட்டியது. அத்துடன் போப்பின் செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் அதிகப்படுத்தியது.

**2. இரண்டாம் சிலுவைப்போர் : 1147-48**

முதலாம் சிலுவைப் போரில் முஸ்லீம்கள் தோல்வியடைந்ததற்கு அவர்களிடம் காணப்பட்ட ஒற்றுமைக் குறைவே ஆகும். எனவே இந்த குறைபாட்டை நீக்கி ஒன்றுபட்டனர். அத்துடன் கிறிஸ்தவர்கள் முஸ்லீம்களுக்கு இழைத்த கொடுமைகள் ஜெருசலேம் நகரிலிருந்து தப்பி சென்ற முஸ்லீம்களால் எடுத்துக் கூறப்பட்டது. இந்த சமய உணர்வினாலும் முஸ்லீம்கள் ஒன்றுபட்டனர். கி.பி. 1140-ல் சாங்கி என்ற அமிர் தலைமையில் மற்றொரு போருக்குத் தயாராயினர். முஸ்லீம்கள் 1144-ல் எடேசாவைக் கைப்பற்றினர்.

முஸ்லீம்களின் எழுச்சியைப் பற்றி அறிந்த கிறிஸ்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர். கிறிஸ்தவர்களின் தலைவர் பெர்னார்ட் மற்றொரு சிலுவைப் போருக்கு ஏற்பாடு செய்தார். ஐரோப்பியக் கிறிஸ்தவர்களை தட்டி எழுப்பி போருக்கு ஆயத்தம் செய்தார். ஜெர்மானிய பேரரசர் மூன்றாம் கான்ராடும் பிரெஞ்சு அரசர் ஏழாம் லூயியும் (டுழரளை ஏஐஐ) படை திரட்டினர். படைகள் புனித நகரை நோக்கிச் சென்றன. டோரிலேயம் என்ற இடத்தில் கன்ராடின் படைகள் முஸ்லீம் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. டமாஸ்கல் என்ற இடத்தில் நடைபெற்ற போரிலும் ஏழாம் லூயி, கன்ராடு ஆகியோரின் கூட்டுப்படைகள் சிதறடிக்கப்பட்டன. இரண்டாம் சிலுவைப் போரில் கிறிஸ்தவர்கள் தோல்வியடைந்தனர். அவர்களுக்கு எவ்விதப் பயனும் ஏற்படவில்லை. ஐரோப்பிய நாடுகள் அதிர்ச்சியடைந்தனர்.

**3. மூன்றாவது சிலுவைப்போர் : 1189 – 1192**

இரண்டாவது சிலுவைப்போர் முஸ்லீம்களுக்கு ஊக்கத்தினையும் கிறிஸ்தவர்களுக்கு சோர்வையும் அளித்தது. ஆனால் கிறிஸ்தவர்களின் புனித பூமி இலத்தீன் அரசு கரங்களில் பாதுகாப்பாக இருந்தது. ஆனால் 1175-ல் இஸ்லாமியரான சாலடின் என்பவர் கிறிஸ்தவர்களைத் தோற்கடித்து ஒரு வலிமையான முஸ்லீம் அரசை நிறுவ திட்டமிட்டார். சிரியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கு சுல்தான் ஆனார். ஜெருசலேத்தைச் சுற்றி இவரது ராஜ்யம் அமைந்து விட்டது. 1187-ல் மிக எளிதாக ஜெருசலேம் நகரைக் கைப்பற்றிக் கொண்டார்.

ஜெருசலேம் நகர் முஸ்லீம்களிடம் வீழ்ச்சியடைந்து விட்டதைக் கேட்ட கிறிஸ்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அதிமேற்றிரானியரான வில்லியம் என்பவர் சிலுவைப் போருக்கான ஆதரவைத் திரட்டினார். இங்கிலாந்து மன்னர் முதலாம் ரிச்சர்ட், பிரெஞ:சு அரசர் அகஸ்டஸ் ஆகியோர் இப்போரில் முக்கியப் பங்கெடுத்தனர். 1191-ல் ரிச்சர்டின் படைகள் ஏக்ரா வைக்

கைப்பற்றின. அகஸ்டஸ் நோய்வாய்ப்பட்டு நாடு திரும்பினார். ரிச்சர்ட் தொடர்ந்து போரிட்டார். அவரது படை ஜெருசலேத்தை இரண்டு முறை நெருங்கினாலும் பிடிக்க முடியவில்லை. வீரப்பணியிலும் துணிவிலும் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். இதன்படி புனித பூமிக்கு சென்று வர கிறிஸ்தவர்கள் அனுமதி பெற்றனர்.

4. **நான்காம் சிலுவைப்போர் : 1202 – 1204**

மூன்றாம் சிலுவைப் போரின் மூலம் ஜெருசலேம் நகரை துருக்கியர்களிடமிருந்து மீட்க முடியவில்லை. ஆயினும் 1193-ல் சலாடின் இறந்து விட்டதால் கிறிஸ்தவர்களிடையே நம்பிக்கை ஏற்பட்டது. 1198-ல் போப் பாண்டவராக பதவியேற்ற மூன்றாம் இன்னொசென்ட் புண்ணிய பூமியை மீட்பதற்கு ஐரோப்பிய அரசர்களையும் நிலமானியப் பிரபுக்களையும் கேட்டுக் கொண்டார். இப்போரில் பங்கெடுத்தவர்களில் முக்கியமானவர்கள் தியோபால்ட், சைமன் டி மாண்ட்போர்ட் ஆகியோர் ஆவார்.

1202-ம் ஆண்டு அக்டோபர் 24-ம் தேதி கிறிஸ்தவப் படை கான்ஸ்டாண்டி நோபிளை சென்றடைந்தது. ஆனால் அப்போது கான்ஸ்டாண்டி நோபிளில் நடைபெற்றது. வந்த வாரிசுரிமைப் பிரச்சனையில் சிலுவைப்படை தலை விட்டது. தாங்கள் வந்த நோக்கத்தை மறந்து விட்டனர். கிறிஸ்தவப் படை கான்ஸ்டான்டி நோபிளைத் தாக்கி அழித்தது. நகர் சூறையாடப்பட்டது. லத்தீன் திருச்சபைக்கும் கிரேக்கத் திருச்சபைக்குமிடையே ஏற்பட்ட போராக மாறியது. இதன் விளைவாக லத்தீன் பிரபுக்கள் பால்புய்ன் என்பவரை கான்ஸ்டாண்டி நோபிளின் மன்னராக 1204-ல் தேர்ந்தெடுத்தனர். பைசாண்டியம் நிலமானியப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு லத்தீனிய பிரபுக்களுக்கு கொடுக்கப்பட்டன. இது பைசாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைய வழிவகுத்தது. சிலுவை வீரர்கள் துருக்கியர்களைப் பற்றிக் கவலைப் படாமலேயே திரும்பி விட்டனர்.

எனவே நான்காவது சிலுவைப் போர் ஒரு சமயப் பேரரசாகவே நடைபெறவில்லை. கிறிஸ்தவ புனித இடங்களை மீட்க முடியவில்லை. பைசாண்டியப் பேரரசு வலிமையற்றுப் போய்விட்டதால் அது இஸ்லாமியப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த சக்தியற்றும் போய்விட்டது. இதனை ஐரோப்பிய கிறிஸ்தவ அரசுகள் விரைவிலேயே உணர்ந்தன. இப்போரின் விளைவாக ஐரோப்பாவில் வெனிஸ் குடியரசு முதன்மையான வணிக நாடானது.

**குழந்தைகளின் சிலுவைப் போர் : 1212**

பேரரசர்களாலும், நிலமானியப் பிரபுக்களாலும் சாதிக்க முடியாததை ஐரோப்பியக் கிறிஸ்தவக் குழந்தைகள் சாதிக்க முயன்றனர். தென்பிரான்சில் வாழ்ந்து வந்த ஸ்டீபன் என்ற ஆடுமேய்க்கும் சிறுவன் பன்னிரண்டு வயதுக்குட்பட்ட ஏறத்தாழ இருபதாயிரம் சிறுவர்களை கூட்டிக் கொண்டு புண்ணிய பூமியை மீட்கப் போவதாக அறிவித்தான். அதேபோல நிக்கோலஸ்

என்ற ஜெர்மானிய இளைஞர் குழந்தைகளை அழைத்துச் சென்று புண்ணிய பூமியை மீட்குமாறு இறைவன் தனக்கு ஆணையிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

ஜெர்மனியிலிருந்து சுமார் முப்பதாயிரம் குழந்தைகள் ரைன் நதியையும் ஆல்ப்ஸ் மலையையும் கடந்து சென்றனர். வழியில் எண்ணற்றோர் உயிரிழந்தனர். எஞ்சிய குழந்தைகள் ஜெனோவா நகர் அடைந்தனர். அங்கிருந்து சிலர் தாய்நாடு திரும்பினர். பிரான்சிலிருந்து ஏழு கப்பல்கள் மூலம் புறப்பட்டனர். குழந்தைகள் சார்டீனியா அருகே இரண்டு கப்பல்கள் மூழ்கியதில் அதில் பயணம் செய்த சிறுவர் இறந்தனர். எஞ்சியவர்கள் ஆப்பிரிக்காவில் அடிமைகளாக விற்கப்பட்டனர். இவ்வாறு குழந்தைகளின் சிலுவைப் போரில் துயரமான முடிவே ஏற்பட்டது.

**5. ஐந்தாம் சிலுவைப்போர் : 1217**

சிறுவர்களின் துணிச்சலையும், தனி முயற்சிகளையும் கண்ட போப் மூன்றாம் இன்னொசென்ட் மீண்டும் ஒரு சிலுவைப் போருக்கான வேண்டுகோள் விடுத்தார். அதன்படி ஹங்கேரிய மன்னர் ஆண்ட்ரு என்பவரின் தலைமையில் சிலுவைப்பட ஜெர்மனியிலிருந்து புறப்பட்டுச் சென்றது. நைல் நதிக்கரையில் முகாமிட்டது. பின்னர் எகிப்தில் இறங்கி டாமிட்டா என்ற நகரைக் கைப்பற்றியது. ஆனால் நைல்நதி வெள்ளத்தினாலும், ஜெர்மானிய மன்னர் இரண்டாம் பிரடரிக் தான் வாக்களித்தபடி படை ஒன்றை அனுப்பாததாலும் எகிப்பு சிரியா ஆகிய நாடுகளின் மன்னரான மாலிக்குடன் உடன்படிக்கை ஒன்றை சிலுவைப் படையினர் செய்து கொண்டனர். இதன்படி டாமிட்டா நகர் மீண்டும் முஸ்லீம்களுக்கே கொடுக்கப்பட்டு விட்டது. இதன் படி டாமிட்டா நகர் மீண்டும் மூஸ்லீம்களுக்கே கொடுக்கப்பட்டு விட்டது. பெற்ற வெற்றிகளை விட்டு விட்டு சிலுவைப்படை திரும்ப நேரிட்டது.

**6. ஆறாம் சிலுவைப்போர் : 1228 – 29**

ஐந்தாம் சிலுவைப் போரில் ஜெர்மானிய மன்னர் இரண்டாம் பிரெடரிக் கலந்து கொள்ளாததால், போப் அவரை மீண்டும் போர் புரிய கட்டாயப்படுத்தினார். எனவே 1228-ல் பிரடரிக்கின் தலைமையில் சிலுவைப் போர் ஆரம்பமானது பிரெடரிக் வேகமாக முன்னேறிச் சென்று பாலஸ்தீனத்தை அடைந்தார். போருக்கு முன்பாகவே எகிப்திய மன்னர் மாலிக்கும், பிரெடரிக் ஜெருசேலம், பெத்லேகம் ஆகியவை பிரடரிக்கிற்கு வழங்கப்பட்டன. வெற்றி வீரனாக புனித நகரில் முடிசூடிக் கொண்டு நாடு திரும்பினார். பிரெடரிக்கின் இந்த உடன்பாட்டை போப் ஏற்றுக் கொள்ளவில்லை.

**7. ஏழாம் சிலுவைப்போர் : 1248 – 1250**

1244-ல் மறுபடியும் பாலஸ்தீனத்தில் சமயச் சண்டைகள் ஏற்பட்டதன் காரணமாக எகிப்தின் சுல்தான் மீண்டும் ஜெருசலேமைக் கைப்பற்றிக் கொண்டார். பிரெஞ்சு மன்னர்

ஒன்பதாம் லூயி பாலஸ்தீனத்தைக் கைப்பற்ற உதவியளிக்குமாறு ஐரோப்பிய அரசர்களைக் கேட்டுக் கொண்டார். ஆனால் யாரும் உதவியளிக்கவில்லை. எனவே 1248-ல் தனித்து சிலுவைப் போரை ஆரம்பித்தார் ஒன்பதாம் லூயி எகிப்திலுள்ள டமாட்டா நகரைக் கைப்பற்றினார். ஆனால் மன்சூரா என்ற இடத்தில் முஸ்லீம் படைகளால் தோற்கடிக்கப்பட்டு கைதியாகப் பிடிக்கப்பட்டார். ஆனால் சுல்தானுக்கு பெருஞ்செல்வத்தைக் கொடுத்து விடுதலைப் பெற்று பிரான்ஸ் திரும்பினார்.

8. **எட்டாம் சிலுவைப் போர் : 1267 -1291**

ஏழாம் சிலுவைப் போருக்குப் பின்னர் ஐரோப்பியர்களிடம் ஒற்றுமையில்லாமல் போய் விட்டதால் கிறிஸ்தவர்கள் கைப்பற்றிய பிரதேசங்களையெல்லாம் சுல்தான் மீண்டும் கைப்பற்றிக் கொண்டார். அவர் போரில் பிடிக்கப்பட்ட கிறிஸ்தவ வீரர்களை கொலை செய்தார். எனவே புனித இடங்களை மீட்டே தீர வேண்டும் என்ற துணிச்சலுடன் ஒன்பதாம் லூயி மறுபடியும் சிலுவைப் போரைத் தொடங்கினார். ஆனால் வயிற்றுவலி காரணமாக வழியில கார்த்தேஜ் நகருக்கருகில் இறந்து போனார். இச் சூழ்நிலையில் 1291-ல் சுல்தான் கலீல் டயர், சிடான், கெய்பா, பெய்ரூட் ஆகிய இடங்களைப் பிடித்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பின் கிறிஸ்தவர்கள் பாலஸ்தீனத்தைக் கைப்பற்ற மேற்கொண்ட முயற்சிகள் பயனற்றுப் போயின.

**சிலுவைப் போர் தோல்வியடையக் காரணங்கள் :**

**சிலுவை வீரர்களிடம் கட்டுப்பாடு இல்லை :**

சிலுவைப் போர்கள் பெருந்தோல்வியாய் முடிந்ததற்கு காரணம் சிலுவை வீரர்களிடம் கட்டுப்பாடான அமைப்பும், ஒற்றுமையும், ஒழுங்கும் இல்லாததேயாகும். சிலுவைப் போர் வீரர்கள் பெரும்பாலும் பிரபுக்களாலும் கோமான்களாலுமே திரட்டப்பட்டனர். எனவே வீரர்கள் தங்கள் நேரடி எஜமான்களான பிரபுக்கள் மீது மட்டுமே பற்றுறுதியும் நம்பிக்கையும் வைத்தனர். எனவே ஒரே படைத் தலைமை என்பது இல்லாது போய்விட்டது.

**குறுகிய நோக்கம் :**

சிலுவைப் போர் பனித பூமியை மீட்டல் என்ற உயரிய குறிக்கோளைக் கொண்டிருந்தாலும் அதில் கலந்து கொண்டவர்களின் நோக்கம் வேறு விதமாக இருந்தது. பேரரசர்களின் குறுகிய மனப்பான்மையும் ஜெர்மானிய வீரர்களின் தன்னலமும், போப்புகளுக்கும் அரசர்களுக்குமிடையே நடைபெற்று வந்த போராட்டமும் கிறிஸ்தவர்களின் தோல்விக்கு முக்கிய காரணமாகும் .

**வீரர்களுக்கு தேவைப்பட்ட உதவி கிடைக்கவில்லை :**

சிலுவைப் போர் வீரர்களுக்கு தேவைப்பட்ட உணவு, படைக்கலன் ஆகியவை சரியான நேரத்தில் கிடைக்கவில்லை. அதிக தொலைவிலிருந்து உதவி வந்து சேர வேண்டியதிருந்தாலும், காலதாமதம் ஏற்பட்டதாலும் முஸ்லீம்களுக்கு நல்ல வாய்ப்பாக போய்விட்டது. மேலும் கிழக்குப் பேரரசர்கள் சிலுவைப் போர் வீரர்களுக்கு உண்மையாக உதவவில்லை.

**பிறகாரணங்கள் :**

சிலுவைப் போரின் போது புனித பூமியில் கைப்பற்றப்பட்ட இடங்களைப் பாதுகாக்க வலுவுள்ள படையொன்றை நிரந்தரமாக அமைக்கத் தவறி விட்டனர். மேலும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய உணர்வு, திருச்சபையில் தோன்றிய பிளவு, போட்டி, பொறாமை ஆகியவற்றால் சிலுவைப் போரில் கிறிஸ்தவர்கள் வெற்றியடைய முடியவில்லை.

**சிலுவைப் போர்களின் விளைவுகள் :**

1. **கிறிஸ்தவர்களின் புண்ணியப்பூமி மீட்கப்படவில்லை :**

எந்த நோக்கத்திற்காக சிலுவைப் போர்கள் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. ஜெருசேலத்தையும், பாலஸ்தீனத்தையும் முஸ்லீம்களிடமிருந்து மீட்டுக் கொள்ள முடியவில்லை. அதே சமயத்தில் மூஸ்லீம்கள் சிலுவைப் போர்களின் போது ஆசியா மைனரிலும், தென்கிழக்கு ஐரோப்பாவிலும் இஸ்லாமைப் பரப்பி வலிமைப்படுத்திக் கொண்டனர்.

2. **மேற்கு ஐரோப்பாவில் இஸ்லாம் பரவுவது தடுக்கப்பட்டது:**

சிலுவைப் போர்களின் விளைவாக மேற்கு ஐரோப்பாவில் இஸ்லாம் பரவுவது தடுக்கப்பட்டது. சிலுவைப் போர்கள் நடைபெறவில்லை என்றால் மேற்கு ஐரோப்பா முழுவதையும் இஸ்லாமியர் கைப்பற்றியிருப்பர். கிறிஸ்தவ சமயம் அங்கு அழிந்து போயிருக்கும்.

3. **நிலமானிய முறை வலுவிழந்தது :**

சிலுவைப் போர்களில் கலந்து கொண்ட பெரும்பாலான பிரபுக்கள் தங்கள் நிலங்களைத் துறந்து விட்டு சிலுவைப் போர்களில் பங்கு கொண்டனர். வீரர்கள் தங்கள் உடமைகளை விற்றோ, அடமானம் வைத்தோ கலந்து கொண்டனர். சிலுவைப் போர்களில் கலந்து கொண்ட அடிமைகள் அநேகம் பேர் நாடு திரும்பவில்லை. நிலமானிய சொத்துக்கள் சிலுவைப் போருக்கு பயன்படுத்தப்பட்டன. எனவே ஐரோப்பாவில் நிலமானிய முறை மறையத் தொடங்கியது. நிலமானிய பிரபுக்களின் பிடியிலிருந்து விடுபட்ட அரசர்கள் வலிமையடைய ஆரம்பித்தனர்.

**4. ரோமானியத் திருச்சபையின் செல்வாக்கு அதிகரித்தது :**

சிலுவைப் போர்களின் விளைவாக ரோமானியத் திருச்சபையின் அதிகாரமும் செல்வாக்கும் அதிகரித்தது. ஐரோப்பிய மக்கள் அனைவரும் தங்கள் வேறுபாடுகளை மறந்து போர்க்களம் புகுந்த செயலால் போப்பாண்டவரின் ஆதிக்கம் வளர்ந்தது. அரசர்கள் குறுநில மன்னர்களாகத் தாழ்த்தப்பட்டனர். போரின் போது மன்னர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது வரிவசூல் செய்தார். போப்பாண்டவர் போரில் கலந்து கொள்வதற்காக நிலக்கிழார்கள் தங்கள் நிலங்களை மடாலயங்களுக்கு விற்றதால் திருச்சபையின் செல்வம் வளர்ந்தது.

**5. ஐரோப்பியர் ஆசிய நாட்டவருடன் தொடர்பு கொண்டனர்.**

சிலுவைப் போர்களின் விளைவாக ஐரோப்பிய நாடுகள் ஆசிய நாடுகளுடன் தொடர்பு கொண்டன. மேலைநாட்டு மக்களும் கீழை நாட்டு மக்களும் நேருக்குநேர் சந்தித்தனர். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிட்டியது. இதனால் ஐரோப்பியர் ஆசிய நாடுகளுக்குச் சென்று கிறிஸ்தவ சமயப் பிரச்சாரம் செய்யவும், குடியேற்றங்களை அமைத்துக் கொள்ளவும் முற்பட்டனர்.

**6. வாணிபம் வளர்ச்சியடைந்தது :**

சிலுவைப் போர்களின் விளைவாக ஐரோப்பாவிற்கும், கிழக்கிந்திய நாடுகளுக்குமிடையே வாணிபம் வளர்ச்சியடைந்தது. இத்தாலிய நகரங்கள் வாணிபத்தில் ஈடுபட்டன. பட்டாடை, சர்க்கரை, வாசனைத் திரவியங்கள் ஆகியவை டமாஸ்கஸ், எகிப்து ஆகிய நாடுகள் வழியாக ஐரோப்பாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டன. முஸ்லீம் நாடுகளில் செய்யப்பட்ட அழகான கண்ணாடி ஐரோப்பியரின் ஆடம்பரப் பொருள் ஆயிற்று. அழகான கண்ணாடி ஐரோப்பியரின் ஆடம்பரப் பொருள் ஆயிற்று. முஸ்லீம்கள் பயன்படுத்திய வெல்வெட் துணி, பவுடர், வாசனைத் திரவியம், முத்து, பவளம் ஆகியவற்றை ஐரோப்பியரும் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

**7. ஐரோப்பியப் பண்பாட்டில் முன்னேற்றம் :**

அராபியர்களிடமிருந்து ஐரோப்பியர் பல புதிய பண்பாடுகளைப் பெற்றுக் கொண்டனர். இஸ்லாமிய நாகரீகம் சிலுவைப் போர்கள் வழியாக ஐரோப்பாவைச் சென்றடைந்தன. அராபியச் சொற்கள் ஐரோப்பிய மொழிகளில் புகுந்தன. திசைக்காட்டும் கருவி, வெடிமருந்தின் பயன், கண்ணாடி தயாரித்தல், அச்சுக்கலை ஆகியவற்றை ஐரோப்பியர் அராபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். ஐரோப்பிய மருத்துவர்கள் முஸ்லீம் மற்றும் யூத மருத்துவங்களைக் கற்றுக் கொண்டனர். கீழை நாடுகளில் பயிரிடப்பட்ட செடிகள், தானியங்கள், பழவகைகள்

ஐரோப்பிய நாடுகளில் பயிரிடப்பட்டன. இவ்வாறு சிலுவைப் போர்களால் ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்திலும் பண்பாட்டிலும் குறிப்பிடத்தக்க நன்மைகளை அடைந்தன.

**8. நகரங்களின் தோற்றம் :**

சிலுவைப் போர்களின் விளைவாக இடைக்கால ஐரோப்பிய நகரங்கள் பல ஆக்கமும் வலிவம் பெற்றன. போரில் கலந்து கொண்ட நிலமானியப் பிரபுக்களும் இலவல்களும் நகரப் பெருமக்களிடமிருந்து நிறைய கடன் வாங்கினர். கடனுக்கு ஈடாக பல அரசியல் உரிமைகளை அந்த நகரங்களுக்கு வழங்கினர். இதனால் தன்னுரிமை பெற்ற நகரங்கள் பல ஐரோப்பாவில் தோன்றின.

**9. மக்களிடம் தோன்றிய வீர மரபு**

சிலுவைப் போர்கள் மக்கள் மனதில் ஓர் உற்சாகத்தையும் குதூகலத்தையும் ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். சுயநலமின்றி ஒரு குறிக்கோளுக்காகப் பாடுபடவும் ஏழை எளியவர்களைக் காப்பாற்ற ஓடோடி முன்வரவும் அவர்கள் பழகிக் கொண்டனர். பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், பலவீனர்களுக்கும் வலிய வந்து உதவுகின்ற வீரமரபு மக்களிடையே பெருகியது. வீரமரபையும், துணிகர முயற்சிகளையும், அடிப்படையாகக் கொண்ட பல இலக்கியங்கள் தோன்றின. ஐரோப்பிய இலக்கியங்களில் புத்துணர்ச்சி ஏற்படுவதற்கு சிலுவைப் போர்கள் ஓரளவு காரணம் எனலாம்.

**10. மக்களிடம் காணப்பட்ட துணிகர உணர்ச்சி**

சிலுவைப் போர்களால் தூண்டப்பட்ட துணிகர உணர்ச்சி பல கடல் வழிகளும் புதிய நாடுகளும் கண்டுபிடிக்கப்பட உதவி செய்தது. வெனிஸ் நகரத்து மார்க்கோ போலோவின் கீழை நாட்டுப் பயணங்களும், கொலம்பஸ் மெகல்லன் போன்றோரின் துணிகரப் பயணங்ளும் சிலுவைப் போர்களால் பெரிதும் தூண்டப்பட்டவை என்றால் மிகையாகாது.

## பல்கலைக் கழகங்களின் வளர்ச்சி

## (RISE OF UNIVERSITIES)

இடைக்கால ஐரோப்பாவில் பல நிறுவனங்களைப் போலவே பல்கலைக் கழகங்களும் தாமாக தோன்றி வளர்ந்தன. ஆரம்ப காலத்தில் நகரங்களிலும் கதீட்ரல்களிலும் நிறுவப்பட்டிருந்த பள்ளிகளே பிற்காலத்தில் பல்கலைக் கழகங்களாக வளர்ச்சியடைந்தன. ஐரோப்பிய சமுதாயத்தில் மக்கள் சிறப்பான முறையில் வாழ முற்பட்டார்கள். வாழ்வு சிறக்க அறிவும், அறிவைப் பெருக்க கல்வியும் கல்வியை அளிக்க பள்ளியும் பல்கலைக் கழகங்களும் தேவை என்ற எண்ணம் இடைக்காலத்தில் உருப்பெற்றது.

நாடோடி வாழ்வில் சுதந்திரத்தையும், தன்னம்பிக்கையையும், நாகரிக வாழ்வில் மலர்ந்த பாதுகாப்பு கூட்டுறவு பொருள் வளத்திற்கேற்ப உருவாக்குவதே கல்வியின் பணியானது. கற்றுத் தேர்ந்தவர்களே அக்கால வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் முன்னணியில் இருந்தார்கள் ஆகையால் கற்கும் வசதிகள் அதிகமாகத் தேவைப்பட்டன. கற்போர் எண்ணிக்கையும், கற்பிப்போர் தொகையும் பெருகவே பல்கலைக் கழகங்கள் தழைத்தன. ஐரோப்பாவில் பல நகரங்களில் புகழ்பெற்ற பல பல்கலைக் கழகங்கள் தோன்றின.

**பல்கலைக் கழகங்கள் தோன்றக் காரணங்கள்:**

1. இடைக்கால ஐரோப்பாவில் நகரங்கள் வளர்ச்சியடைந்ததின் விளைவாக வாணிபம் வளர்ச்சியடைந்தது. இதன் விளைவாக தொழில்களிலும், வாணிபத்திலும் ஈடுபடுத்தப்படுவதற்கு கல்வியும், பயிற்சியும் பெற்றவர்கள் தேவைப்பட்டார்கள். எனவே பல செல்வந்தர்களும், மடாலயங்களும் முன்வந்து பள்ளிகளை நிறுவினார். இப்பள்ளிகளில் இலக்கணம், மொழி, சட்டம் ஆகியவை கற்றுக் கொடுக்கப்பட்டன. ஆனால் மருத்துவம், விஞ்ஞானம் வானவியல் போன்ற உயர்கல்வியை பள்ளிகளில் பியல முடியாமல் போய்விட்டது. எனவே அவற்றைக் கற்பதற்கு பல்கலைக் கழகங்கள் தேவைப்பட்டன.

2. இடைக்காலத்தில் ஆரம்பத்தில் பள்ளிகளும் அவற்றில் படித்த மாணவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகவேயிருந்தன. ஆனால் இடைக்காலத்தில் பிற்பகுதியில் கற்றவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்தது. நகரங்கள் தோன்றி வாணிபத்தால் வாழ்வு வளம் பெறத் தொடங்கியதும் உயர் கல்வித்துறையில் மக்களின் ஆர்வம் பெருகியது. உயர்தரக் கல்வியைத் தேடி அலைந்தவர்களின் எண்ணிக்கை வளர ஆரம்பித்தது.

3. கி.பி. பதினோறாம் நூற்றாண்டில் குளுனி, பெனடிக்டைன் ஆகிய துறவிமார்கள் அறிவு வளர்ச்சியில் ஈடுபட்டு பெருந்தொண்டாற்றினர். மேலும் திருச்சபையில் ஏற்பட்ட சீர்திருத்தங்களும் மக்களிடையே உயர்கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டியது.

4. அபிலோடு என்ற மேதையிடம் கல்வி கற்பதற்காக ஆயிரக்கணக்கில் மாணவர்கள் கூடினார்கள். அவரது விரிவுரைகளும், வாதங்களும் அனைவரையும் கவர்ந்தன. இதைக் கண்ட பிற மக்களுக்கு கல்வியில் ஆர்வம் ஏற்பட்டது. இப்படி அறிவு வளர்ச்சி பெறுவதில் ஆர்வம் ஏற்பட்ட போது மாணவர்களும், ஆசிரியர்களும் தங்களுக்குள் சங்கங்களை அமைத்துக் கொண்டு பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

5. போப்பாண்டவர்களும், மன்னர்களும் பல்கலைக் கழகங்கள் ஏற்பட ஆதரவும், பல வழிகளில் உதவியும் செய்து வந்தனர். இதனால் பல பல்கலைக் கழகங்கள் தோன்றின.

### பாரிஸ் பல்கலைக்கழகம்

கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் சீன் நதியிலிருந்த ஒரு தீவில் அமைக்கப்பட்டிருந்த நாட்டெர் டேம் தேவாலயப் பள்ளி (Cathedral School of Notre Dame) அந்நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் கி.பி. 12-ஆம் நூற்றாணடிலும் மிகப் பெரிய பள்ளியாக வளர்ந்து விட்டது. ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்து மாணவர்கள் அங்கு கல்வி கற்க வந்தார்கள். அத்தீவில் இடநெருக்கடி ஏற்பட்டதால் சீன் நதியின் இடது கரையில் பள்ளிக்காகப் பல கட்டிடங்கள் கட்டப்பட்டன. இதுவே பின்னர் பாரிஸ் பல்கலைக் கழகமாக உருவாயிற்று.

இக்கல்விக் கோயில் வளருவதற்குக் காரணமாயிருந்தவர்களுள். பீடர் அபிலாரட் என்ற அறிஞர் குறிப்பிடத் தகுந்தவராவார். மற்ற பல்கலைக் கழகங்கள் தோன்றி இயங்குவதற்கு இப்பல்கலைக் கழகம் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது. தலைமை மதகுருவிடமிருந்து கல்வியைக் கற்பிக்கும் தகுதியுடைவரென்று தகுதிச் சான்றிதழ் பெற்றவர்களே இங்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். இப்பல்கலைக் கழகம் நாளடைவில் தனித்தியங்கும் நிறுவனமாகச் செயற்பட்டது. நகரங்களில் இயங்கிவந்த பல்வேறு விதமான சங்கங்கள் போன்று இங்கும் ஆசிரியர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. பல்கலைக் கழகத்தின் அமைப்பு, செயல்முறை, பாடத்திட்டம், மற்றும் பல்கலைக் கழகத்தோடு தொடர்புடைய எல்லா விவகாரங்களையும் அச்சங்கங்களே கவனித்து வந்தன.

பல்வேறு கல்வித்துறைகளைப் போற்றி வளர்ப்பது ஆசிரியர்களின் கடமை எனக் கருதப்பட்டது. ஆசிரியராகப் பணியாற்றியவர் கலை வல்லுநர் என்றழைக்கப்பட்டார். ஒரு குறிப்பிட்ட பாடத் திட்டத்தைப் பிடித்து முடித்த மாணவருக்கு இளங்கலைஞர் என்ற பட்டம் வழங்கப்பட்டது. இதற்குப்பின் பல தேர்வுகள் தேர்ச்சி பெற்று முகலைப் படிப்ப பயிலும் தகுதி பெற்றனர்.

இப்பல்கலைக் கழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக வளர்ந்து விட்டதால் இது நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் பல்கலைக் கழகத்தின் திருவாசகத்தைக் கவனிக்க முகவர் என்ற அலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இங்கு சமயப் படிப்பு, திருச்சபைச் சட்டம், பொதுச் சட்டங்கள் மற்றும் மருத்துவம் போன்றவை சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. ஆசிரியர்களிலும் திறமைமிக்க பல அறிஞர்கள் இங்கு பணியாற்றினர். காலப்போக்கில் பேராசிரியர், டாக்டர் போன்ற பட்டங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

இப்பல்கலைக் கழகம் அரசியல் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்டு இயங்கியது. சில நேரங்களில் மாணவர்களுக்கிடையே பூசல்களும், போராட்டங்களும் கூட ஏற்பட்டன.

அச்சமயங்களில் அரசின் காவற்படை பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்து மாணவர்களைத் தாக்கின. இதற்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து பிரான்சின் அரசர் இரண்டாம் பிலிப் அகஸ்டஸ் (கி.பி. 1180 – 1223 கி.பி 1200 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்குப் பல சலுகைகளை கொடுத்தார். குறிப்பாகப் பல்கலைக் கழகத்தின் அனுமதியின்றிக் காவற்படை பல்கலைக் கழகத்திற்குள் நுழையக் கூடாதென ஆணையிட்டார். அதேபோல போப் மூன்றாம் இன்னொசெண்ட், போப் ஒன்பதாம் கிரேகரி போன்றோர் காலத்திலிருந்து திருச்சபையின் அதிகாரத்திலிருந்தும் பாரிஸ் பல்கலைக் கழகம் பெருமளவு விடுபட்டுச் செயல்படத் தொடங்கியது.

பாரிஸ் போன்ற இடைக்காலப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களையே மாணவர்கள் கேட்டறிய வேண்டியதாக இருந்தது. அச்சிடப்பட்ட புத்தகங்கள் அக்காலத்தில் இல்லையென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருசில எழுத்துப் பிரதிகள் கிடைத்தன என்றாலும் அவை கிடைத்தற்கரிய பொருள்களாக மதிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. மாணவர்களின் தேர்ச்சியையும், திறமையையும் அறிய வாய்மூலத் தேர்வுகளே நடத்தப்பட்டன. இப்பல்கழைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டங்களும் தரப்பட்டன.

கி.பி. 1258 ஆம் ஆண்டு ராபர்ட்-டி-சார்போன் என்ற பெரியார் சமயப் பாடங்கள் பயிலும் மாணவர்களுக்கெனத் தனியாக ஒரு கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்தார். உணவகமாகவும், உறைவிடமாகவும் அது பயன்படுத்தப்பட்டது. அது அப்பொழுது கல்லூரி என்றே அழைக்கப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டே பின்னர் இப்பல்கலைக் கழகத்தில் பல கல்லூரிகள் தோன்றின. பாரிஸ் பல்கலைக் கழகத்தின் பாணியிலேயே ஐரோப்பாவில் பல பல்கலை கழகங்கள் வளரலாயின. அவை அனைத்தும் மதம், மருத்துவம் மற்றும் சட்டம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் புகழ் வாய்ந்தவைகளாக விளங்கின.

**பீட்டர் அபிலார்ட் : கி.பி. 1079 – 1142**

பிரான்சு நாட்டைச் சேர்ந்த பீடர் அபிலார்ட் கிறிஸ்தவ மதத்தைப் பற்றி விளக்கிக் கூறும் வல்லுநராகவும் கற்றறிந்த மேதையாகவும் விளங்கினார். அவர் பாரிஸ் பல்கலைக் கழகத்தை நிறுவியர்களுள் ஒருவராவார். கல்விக் கலையில் அவர் பேராவல் கொண்டு கணக்கியல், இசை, சட்டம் மற்றும் சமயம் முதலான பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தன் அறிவைப் பெருக்கிக் கொண்டார். மதத்துறை பற்றிய கருத்துக்களில் வாதிடுவதில் வல்லவராக விளங்கினார்.

இடைக்காலத்தில் சமயத்தைப் பற்றி ஆய்ந்து படிப்பதே சிறந்த கல்வி என்ற கருத்து நிலவி வந்தது. அக்காலத்தில் பிளேரோவைப் பின்பற்றிய புறவாய்மையாளர்கள் நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் அனைத்தும் தற்காலிகமானவையே எனக் கருதினர். அரிஸ்டாட்டிலைப் பின்பற்றிப் பெயர்ப் போலிமைக் கோட்பாடுடையோர் நாம் பொருள்களுக்குச் சூட்டும் பெயர்கள் திடமான பொருள்களையே குறிக்கின்றன என்று கருதினர். இக்கருத்துக்களுக்கு மாறாகத்

திருச்சபையைச் சார்ந்த கடவுள் நம்பிக்கை என்பது பகுத்தறிவுடன் ஆய்ந்து பார்க்கும் பிரச்சனையோ அல்லது விவாதத்திற்குரிய பிரச்சனையோ அல்ல என்று குருமார்கள் கருதினார்கள்.

ஆனால் அபிலார்ட் பகுத்தறிவைப் பயன்படுத்தித்தருக்க ரீதியாக உண்மைகளை உணர வேண்டுமெனப் பிரச்சாரம் செய்தார். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டும், கடவுள் நம்பிக்கையுடன் ஒழுக்கமுள்ள வாழ்க்கை நடத்தலாமென அவர் கூறினார். அவருடைய கொள்கைகளும் தத்துவங்களும் பெரும்பாலான இளைஞர் உள்ளங்களைக் கவர்ந்தன. அதனால் தான் கிறிஸ்தவ மதத்துறை பற்றிய, ஆராய்ச்சிக் கருத்துக்களில் ஈடுபட பாரிஸ் பல்கலைக் கழகத்தை நிறுவினார். அங்கு அவர் கி.பி. 1110-ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1140 வரை ஆசிரியராகப் பணியாற்றினார்.

**பொலொனா பல்கலைக் கழகம்**

இத்தாலியில் பொலொனா என்னும் நகரத்தில் நிறுவப்பட்ட இப்பல்கலைக்கழகம் இடைக்கால ஐரோப்பாவில் மிகவும் புகழ் வாய்ந்ததாகத் திகழ்ந்தது. ரோமானியப் பேரரசர்கள் ஆட்சிக் காலத்திலேயே இந்நகரத்தில் புகழ்மிக்க சட்டப்பள்ளியொன்று இருந்தது. அப்பள்ளியே கி.பி 1088 ஆம் ஆண்டு பொலொனா பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டுது மிக விரைவில் இது சட்டம் மற்றும் மருத்துவப் படிப்புக்குப் புகழ்வாய்ந்த பல்கலைக் கழகமாக விளங்கியது. இங்கு படித்த மாணவர்களும், பணியாற்றிய பேராசிரியர்களும் ஐரோப்பா முழுவதும் பெருமையுடன் மதிக்கப்பட்டார்கள். காலப்போக்கில் சட்டம், மருத்துவம் மட்டும் அல்லாது கிறித்தவ மதத்துறைப் படிப்பு மற்றும் கலைத்துறைப் பாடங்களும் இங்கு கற்பிக்கப்பட்டன. மருத்துவத்துறையில் மனிதனின் உடல் உறுப்புக்களை அறுத்து அறியும் கலை முதன் முதலில் இங்கு கற்பிக்கப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் ஒரே நேரத்தில் கி.பி. 1262) படித்திருக்கின்றனர். புகழ்வாய்ந்த இத்தாலியக் கவிஞர்கள் தாந்தேயும், பெட்ரார்க்கும்இப்பல்கலைக் கழகத்தின் மாணவர்களாவார். இங்கு பணியாற்றிய பேராசிரியர்களுள் பீட்ரோ பாம்பொ நாஸ்ஸி என்ற தத்துவ ஞானியும், மார்செல்லோமால்பிஜி லூயுகி, கால்வனி என்ற மருத்துவ மேதைகளும், லாரா பாஸ்ஸி என்ற கணக்கியல் அறிஞரும், ஜியோசூ கார்டுயுச்சி ஜியோவன்னி பாஸ்கொலி என்ற கவிஞர்களும் மிகவும் புகழ் வாய்ந்தவர்களாவர். இப்பல்கலைக்கழகம் இத்தாலியில் மிக முக்கியமான கலை வளர்க்கும் கோயிலாக விளங்குகிறது. இங்குள்ள நூலகத்தில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட நூல்கள் உள்ளன. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட கையெழுத்ததுப் பிரதிகள் பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்ட அறிஞர்களைத் தவிர சட்டங்களைத் தொகுத்து வெளியிட்ட கிரேஷியன் மற்றும் பல்துறைச் சட்டமேதை இர்நெரியஸ் என்பவர்கள் இங்கு வாழ்ந்தவர்களே ஆவர்.

பாரிஸ் பல்கலைக் கழகத்தைப் போலவே இங்கும் பேராசிரியர்களின் சங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அவை பாடத்திட்டங்களைப் பற்றியும், அவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறைகளைப் பற்றியும் மாணவர்களின் பிரச்சனைகளை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றியும் ஆய்ந்தறிந்து முடிவுகளை எடுத்தன. பேராசரியர்களின் சங்கங்களைப் போலவே மாணவர் சங்கங்களும் செயல்பட்டன. இடைக்கால ஐரோப்பாவில் இப்பல்கலைக் கழகத்தைப் போன்று வேறு பல பல்கலைக் கழகங்கள் ஐரோப்பிய நாடுகளில் தோன்றலாயின.

### பாத்வா பல்கலைக் கழகம்

இத்தாலியில் உள்ள பாத்வா என்ற நகரத்தில் அமைந்திருக்கும் இப்பல்கலைக் கழகம் பதின்மூன்றாம் நூற்றாண்டின தொடக்கத்திலேயே நிறுவப்பட்டது. பேரரசர் இரண்டாம் பிரெடிரிக்கின் பெருமுயற்சியால் இப்பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. இதுவும், சட்டம் மற்றும் மருத்துவத்துறையில் பல புகழ்வாய்ந்த பேராசிரியர்களையும் வல்லுநர்களைம் தன்னகத்தே கொண்டிருந்தது. இங்கு பணியாற்றிய பேராசிரியர்களுள் கலிலியோ கலிலே , கியுக்லீல்மினி, பல்லோபியஸ் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவராவர். இங்கு படித்த மாணவர்களுள் தாந்து , பெட்ரார்க் மற்றும் டெஸ்ஸோ போன்றவர்கள் புகழ் வாய்ந்தவராவர். இப்பல்கலைக் கழகத்தில் மருத்துவ துறைக்கு வேண்டிய மூலிகைகளுக்காகவும், மற்ற தேவைகளுக்காகவும் மிகப்பெரிய மூலிகைத் தோட்டம் பழங்காலந்தொட்டு இருந்து வருகின்றது. இடைக்கால ஐரோப்பாவில் இது மிகப் புகழ் வாய்ந்த தோட்டமாக விளங்கியது.

### பிராக் பல்கலைக் கழகம்

பேரரசர் நான்காம் சார்லசினால் பிராக் என்ற நகரத்தில் கி.பி. 1348 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இப்பல்கலைக் கழகத்தில் பேராசிரியர்களிடமும், மாணவர்களிடமும் புரட்சிக் கருத்துக்கள் பரவின. இங்கிலாந்தில் வாழ்ந்த ஜான் விக்ளிபின் கிறிஸ்தவமதச் சீர்திருத்தக் கருத்துக்கள் இங்கு வேகமாகப் பரவின குறிப்பாக ஜான் ஹஸ் என்ற பேராசிரியர் பொஹிமியாவில் மதச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பினார். பின் அப்பல்கலைக் கழகத்திற்கே தலைவராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இடைக்கால ஐரோப்பாவில் பல்கலைக் கழகங்கள், கல்விக் கலைகளை மட்டுமேயன்றி அறிவுப் பிரச்சாரத்தையும் மேற்கொண்டன என்பதற்கு இப்பல்கலைக்கழகம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்

லண்டனுகு வடமேற்கே ஐம்பது மைல்களுக்கப்பால் அமைந்துள்ள ஆகஸ்போர்ட் என்ற நகரத்திலிருக்கும் இப்புகழ் மிக்க பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு சரியாகத் தெரியவில்லையாயினும் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இது நிறுவப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. இரண்டாம் ஹென்றி இங்கிலாந்தை ஆட்சி செய்த போது ஒரு சிறிய பள்ளியாகத் தொடங்கி கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒரு பல்கலைக்

கழகமாக வளர்ந்து விட்டது. மற்ற இடைக்கால ஐரோப்பியப் பல்கலைக்கழகங்களைப் போலவே சமயப்பாடம், சட்டம், மருத்துவம் போன்ற துறைகளுக்கு இப்பல்கலைக் கழகத்திலும் சிறப்பிடம் தரப்பட்ட:து. கிபி. 13 ஆம் நூற்றாண்டில் கணக்கியல் பாடம் கற்பிப்பதில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் மிகவும் சிறந்தது என்ற பெயரை இது பெற்றது. அதே நூற்றாண்டில் பாரிஸ் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த பேராசிரியர்கள் இப்பல்கலைக் கழகத்திற்குச் சென்று இதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்கள்.

**கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்**

கேம்பிரிட்ஜ் நகரத்தில் அமைந்திருக்கும் இப்பல்கலைக் கழகம் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தைப் போலவே ஒரு சிறிய பள்ளியாகவே முதலில் தொடங்கப்பட்டது. கி.பி 12-ம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே கிறித்தவ மதக் கருத்துக்களை மடாலயங்களில் வாழ்வோருக்கு விளக்குவதற்காக இக்கல்வி நிறுவனம் அமைக்கப்பட்டது. காலப்போக்கில் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தைப் போலவே மாணவர்கள் தங்கிப் படிக்கும் பல்கலைக்கழகமாக இது மாறியது.

**மற்ற பல்கலைக் கழகங்கள்**

இவற்றைத் தவிர ஸ்பெயினில் சாலமான்கா பல்கலைக் கழகமும், போர்ச்சுகலில் கோய்ம்ரா பல்கலைக் கழகமும், பிரான்சில் டூலூஸ் பல்கலைக் கழகமும், இத்தாலியில் ரோம் மற்றும் நேபிள்ஸ் பல்கலைக் கழகங்களும் இடைக் காலத்திலேயே தோன்றின. கி.பி. 14 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு போலந்தில் கிராகோ பல்கலைக்கழகமும், ஆஸ்திரேலியாவில் வியன்னா பல்கலைக் கழகமும் ஜெர்மனியில் ஹெய்டல்பர்க் பல்கலைக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் பாரிஸ் அல்லது பொலோனா பல்கலைக் கழகத்தின் பாணியிலேயே அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு மேலும் பல பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன.

இவ்வாறு இடைக்காலப் பல்கலைக்கழகங்கள் கல்வித்துறையில் பல புதிய கருத்துக்களையும், மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய கலைகளையம் பரப்பி வந்தன. ஒவ்வொரு பல்கலைக்கழகமும் ஒரு குறிப்பிட்ட துறையில் சிறப்பும் புகழும் பெற்றிருந்ததால் பல நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் ஒன்று கூடி பண்பாட்டுப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கும், குறுகிய தேசிய உணர்வுகள் மறைவதற்கும் இப்பல்கலைக் கழகங்கள் உதவின.

எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட துறைகளைத் தவிர, இலக்கியப் படிப்புக்குக் காலப்போக்கில் சிறப்பிடம் தரப்பட்டது. குறிப்பாக வெர்ஜில் , சிசரோ), லிவி போன்ற ரோமானிய எழுத்தாளர்களின் இலக்கியங்கள் ஊன்றிப் படிக்கப்பட்டன. அதேபோல ஹோமர், பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ற கிரேக்க எழுத்தாளர்களின்

இலக்கியங்களும் படிக்கப்பட்டன. ஐரோப்பிய நாடுகளின் இலக்கியங்கள், கலைகள் மற்றும் நாகரிகம் பரவுவதற்கும், இடைக்காலத்திற்குப் பிறகு மறுமலர்ச்சி இயக்கமும், சமயச் சீர்திருத்த இயக்கமும் தோன்றுவதற்கு இடைக்காலத்தில் தோன்றிய இப்பல்கலைக் கழகங்கள் பெருமளவு காரணமாயிருந்தன எனக் கூறினால் மிகையாகாது.

**பல்கலைக் கழகங்களின் நிர்வாகம் :**

இடைக்காலத்தில் ஐரோப்பாவின் பல்கலைக் கழகங்களின் நிர்வாகத்தை மாணவர்கள் அல்லது ஆசிரியர் சங்கங்களே நடத்தி வந்தன. பல்கலைக் கழக சட்டத் திட்டங்களையும், பாடத்திட்டங்களையும் மாணவர்களே அமைத்துக் கொண்டனர். மாணவர்களே ஆசிரியர்களை அமர்த்திக் கொண்டார்கள். ஆசிரியர்களுக்கு குறைவான ஊதியமே அளிக்கப்பட்டு வந்தது. கடமையை செய்யாத ஆசிரியர்கள் தண்டம் கொடுத்தார்கள். அவர்களுக்கு விடுமுறை அளிக்கும் விதிகளும் கடுமையானவையாக இருந்தன. பின்னர் நகர மக்களால் நடத்தப்பட்ட காலங்களில் தான் பல்கலைக் கழகத்தின் நிலை செம்மைப்பட்டது.

பல்கலைக் கழகங்களில் இளங்கலைக் கல்விக்கு ரெக்டர் என்பவரும், முதுகலைக் கல்விக்கு டீன் என்பவரும் பொறுப்பு வகித்தனர். இவர்கள் பல்கலைக் கழக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் கல்விக்கற்று வெற்றியடைந்தால் இளங்கலைப் பட்டம் வழங்கப்பட்டது. பட்ட மேற்படிப்பு மாணவர்கள் தொழில் சம்பந்தமான கல்வியை மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் பயின்றனர். முனைவர் பட்டம் தனிப்பயிற்சி பெற்றவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. பாரிசு பல்கலைக் கழகம் 35 வயது அடைந்தவர்களுக்கு மட்டுமே அறிஞர் பட்டம் வழங்கியது. மருத்துவப் பாடத்தில் மருத்துவ அறிஞர் பட்டம் வழங்கப்பட்டது. ஐரோப்பாவின் எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் லத்தீன் மொழியே பயிற்று மொழியாக இருந்தது. எனவே மாணவர்கள் ஒரு பல்கலைக் கழகத்தை விட்டு மற்றொன்றுக்கு எளிதாக மாற்றமடைந்து கல்வி கற்க முடிந்தது.

**பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் நிலை :**

பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டிருந்தன. அரசாங்கம் மாணவர்கள் மீது எவ்விதக் கட்டுப்பாடுகளையும் விதிக்காததால் சுதந்திரமாக விளங்கினர். ஒவ்வொரு பல்கலைகழகத்திலும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பயின்றனர். அயல்நாட்டு ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர். இடைக்காலத்தில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படாததால் மாணவர்கள் கைகளால் எழுதிக் கொண்டனர். வகுப்பறையில் மாணவர்கள் விவாதங்களை மேற்கொண்டனர். அதன் மூலம் மனதில் பதித்துக் கொண்டனர். ஏழ்மையான மாணவர்கள் கோவில்களிலிருந்து படிப்பிற்கான உதவித் தொகையைப் பெற்றுக் கொண்டனர். பல மாணவர் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் குளிர் மிகுந்த மண்டபங்களில் கரடுமுரடான பலகைகளில் அமர்ந்தே பாடம் கேட்டனர். மிக அதிகாலையிலேயே பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நூல்கள் கிடைப்பது அரிதாகையால் அவர்கள் ஆசிரியர்கள் சொல்வதை அப்படியே குறிப்பு எடுத்துக் கொண்டனர். சொற்பொழிவு முறையையே பேராசிரியர்கள் பின்பற்றினர். மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் முறையே தேர்வு முறையாக இருந்தது. அவ்வப்போது ஒரு சில விவாதங்களும் நடைபெற்றன. வாதங்களில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருங்கே கலந்து கொண்டனர். வெளி ஊரிலிருந்து வரும் சிறந்த பேராசிரியர்களின் சொற்பொழிவுகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. சிறந்த நூலாசிரியர்களின் கூற்றுக்கள் எடுத்துக் கூறப்பட்டன. பெரும்பான்மையான மாணவர்கள் ஏழைகளாக இருந்தனர். அவர்களது செலவுகளை திருச்சபைகளே பெரும்பாலும் ஏற்றுக் கொண்டன. ஓய்வு நேரங்களில் வேலை செய்தும், செல்வந்தர்களிடம் தானம் பெற்றும் பல மாணவர்கள் படித்தனர். பெரிய பிரபுக்களின் பிள்ளைகள் மட்டுமே சிறிது ஆடம்பரமாக வாழ்ந்தனர்.

ஆசிரியர்களும் மாணவர்களும் அவரவர்க்குரிய சீருடைகளை அணிந்து கொண்டே வகுப்புகளுக்குச் சென்றனர். அவ்வப்போது நாட்டியங்கள், நடனங்கள் விருந்துகள் முதலியன நடைபெறும். மற்போர், சதுரங்கம் ஆகிவற்றிலும் மாணவர்கள் பங்கு கொண்டனர். பந்தாட்டம், ஓட்டம், தாண்டுதல் போன்ற விளையாட்டுகளிலும் மாணவர்கள் ஈடுபட்டனர். அக்காலத்திலும் படிப்பல் கவனம் செலுத்தாமல் சேட்டைகள் செய்யும் மாணவர்களும் இருந்தனர். பழைய மாணவர்கள் புதிதாகச் சேர்ந்த மாணவர்களை ராக்கிங் செய்யும் முறை அக்காலத்திலும் காணப்பட்டது. மனித சமுதாயம் தழைக்கப் போப்பாட்சியும், பேரரசும் கடவுளால் நிறுவப்பட்டிருப்பது போல பல்கலைக்கழகமும் அதற்காகவே தோன்றியுள்ளது என்று சில இடைக்கால எழுத்தாளர்கள் கருதினர். இடைக்கால பல்கலைக் கழகங்களை அக்கால கல்வியிலிருந்து பூத்த மலராகவும், கிறிஸ்தவ நாகரீகம் தந்த பழமாகவும் கருதலாம். இப்பல்கலைக் கழகங்கள் இடைக்கால ஐரோப்பாவின் உயர்கல்வி வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றின. இப்பல்கலைக் கழகங்களிலிருந்து சிறந்த சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் செயல் வீரர்களும் இடைக்காலத்தில் தோன்றி அறிவுலகை ஆட்டிப் படைத்தனர்.

### நகரங்களின் வளர்ச்சி

### (GROWTH OF TOWNS)

ரோமானியப் பேரரசு வீழ்ச்சி அடைந்த பின் சுமார் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளாக மேற்கு ஐரோப்பாவில் பெரிய நகரங்கள் ஏதும் இல்லாமல் இருந்தது குறிப்பிடும்படியான அம்சமாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாகவே ஐரோப்பாவில் பொதுவான வளர்ச்சி ஏதும் இல்லை. காட்டு மிராண்டிகளின் படையெடுப்பால் இருந்த சில நகரங்களின் தோற்றமானது இருண்ட காலத்திலிருந்து ஐரோப்பா மீண்டு வந்ததைத்

தெரிவிக்கும் அடையாளமாக இருந்தது. இந்த தோற்றமும் வளர்ச்சியும் வணிகத்தின் வளர்ச்சியுடன் தொடர்புடையதாகும். இவ்வாறு நகரங்களின் வளர்ச்சியும் வாணிபம் மற்றும் தொழில் வளர்ச்சியும் மனித நாகரிக வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டிருந்தன.

**நகரங்களின் தோற்றம் :**

மேற்கு ஐரோப்பாவில் பிஷப்புகள் பல கோவில்களையும், கோவில் சார்ந்த நிலங்களையும் பராமரித்து வந்தனர். பின்னர் இப்பகுதியில் மடாலங்களை நிறுவினர். இப்பகுதிகளில் வாணிபமும் தொழில்களும் வளர்ந்து அவை நகரங்களாக வளர்ச்சி அடைந்தன. இடைக்காலத்தில் அரசர்களும், பிரபுக்களும் போர் ஏற்பட்ட போது பாதுகாப்பிற்காக பாதுகாப்பு அரண்மனைகளைக் கட்டி மக்களைத் தங்கச் செய்தனர். இந்த பாதுகாப்பு நிறைந்த இடங்கள் எல்லாம் பிற்காலத்தில் நகரங்களாக உருவாயின. பெரும்பாலான நகரங்கள் வியாபாரப் பெருக்கத்தின் விளைவாகவே தோன்றின. அவைகளின் முக்கியமானவைகளாக வெனிஸ், ஜெனோவா, பைசா ஆகிய நகரங்களைக் குறிப்பிடலாம். இவை கீழை நாட்டு வியாபாரத்துக்கு முன்னோடிகளாக விளங்கின. இத்தாலியில் பல அழிந்து போன பழைய நகரங்கள் மீது புதிய நகரங்கள் உருவாயின. உதாரணமாக புகழ் பெற்ற வெருலமியம் என்ற அழிந்து போன இத்தாலிய நகரத்தின் மீது செயின்ட் ஆல்பன்ஸ் என்ற புதிய நகரம் எழுப்பப்பட்டது. இத்தாலிக்கு வெளியே தோன்றிய நகரங்கள் தற்கால கிராமங்களை விட கொஞ்சம் பெரியவையாக காணப்பட்டன. அவைகளில் முக்கியமானவைகளாக கலோன், மெயின்ஸ், டிராய்ஸ், ரெய்ம்ஸ், லண்டன், பிரிஸ்டல், நார்விச் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இப்படித் தோன்றிய சிறு சிறு நகரங்கள் உரிமைகளைப் பெற்று சுதந்திரமாயின. சுதந்திரமாக வணிகம் செய்ய முற்பட்டன. தங்கள் பாதுகாப்பிற்காக கோட்டைச் சுவர்களை கட்டிய போது இந்த நகரங்கள் முக்கியத்துவம் அடைந்தது.

**நகரங்களின் வளர்ச்சி :**

பொதுவாக மத்திய கால நகரங்கள் தங்கள் பாதுகாப்பிற்காக சுற்றுச் சுவர்களை எழுப்பிக் கொண்டன. எதிரிகளிடமிருந்து இவ்வாறு தங்களைப் பாதுகாத்துக் கொண்டன. மக்கள் தொகை அதிகரித்து வரவே நெருக்கடி ஏற்பட்டது. அங்கு பொதுக் குளியல் வசதி ஏதும் இல்லை. தெருக்கள் நெருக்கமாகவும் இருளடைந்தும் காணப்பட்டன.

சிறிய நகரங்கள் பிரபுக்களின் கட்டுப்பாட்டில் இருந்தன. அங்கே மக்களுக்கு தனிமனித சுதந்திரமோ, அரசியல் சுதந்திரமோ இல்லை. ஆனால் இந்த நகரங்கள் அளவிலும், செல்வ நிலையிலும் வளரத் தொடங்கியதும் இரு வகையில் போராடி தன்னாட்சி பெற்றன. முதலாவதாக அரசர்கள் பிரபுக்கள் ஆகியோர் கோட்டைகளைக் கட்டவும், தனிப்பட்ட போர் செலவுகளுக்காகவும், சிலுவைப் போர்களில் பங்கு கொள்வதற்காகவும் தங்களுக்கு பணம் அவசியம் தேவைப்பட்ட போது, நகரங்களின் மீதிருந்த தங்கள் உரிமைகளை விட்டுக்

கொடுத்து பணம் பெற்றனர். இவ்வாறு பல நகரங்கள் சுதந்திரத்தைப் பெற்றன. இரண்டாவதாக, பல நகரங்கள் பிரபுகளுக்கெதிராக வாதிட்டும், போரிட்டும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டன.

ரோமானியப் பேரரசில் பெருநகரங்கள் பல புத்துயிர் பெற்றன. இங்குள்ள மக்கள் பாதுகாப்போடு பொருளைத் தேடுவதற்கேற்ற நிலையை உருவாக்குவதற்காக மன்னரிடமிருந்து நகர உரிமை ஆவணத்தைப் பெற்றார்கள். ஏனெனில் வியாபாரத்தில் வளர்ந்து வரும் நகரங்களால் தாங்களும் நன்மையடையலாம் என்று அரசர்களும் கருதினர். இந்த நகர உரிமைப் பத்திரம் நகர மக்களை நிலமானியக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவித்தது. மக்கள் தனி உரிமையையும் வியாபார, அரசியல் உரிமையையும் பெற்றனர்.

இவ்வாறு பன்னிரெண்டாம் நூற்றாண்டின் இறுதியில் பெரும்பாலான ஐரோப்பிய நகரப் பகுதியல் சலுகைகளும், உரிமைகளும பெற்ற நகரங்களாயின. தாங்கள் பெரும் விலைக் கொடுத்து உரிமைகளைப் பெற்றவுடன் அந்த உரிமைகளை மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்க சம்மதிக்கவில்லை. அதே நேரம் தாங்கள் பெற்ற உரிமைகைகளை பிறர் பறித்துக் கொள்ளவும் அனுமதிக்கவில்லை. எனவே தங்கள் பாதுகாப்பிற்காக நகரங்களில் இருந்த வாணிபர்கள், கைத்தொழில் புரிவோர் பொதுவான லாப நோக்கில் வாணிப சங்கங்களை அமைத்துக் கொண்டனர். இந்த வாணிப சங்கங்கள் நகர வாழ்க்கையிலும் முக்கிய அம்சமாகக் கருதப்படுகிறது.

**நகரங்களின் நிர்வாக அமைப்பும், பணிகளும்**

**நகரங்களின் தனித்தன்மை :**

இடைக்காலத்தில் பல நகரங்கள் பிஷப்புகளின் இருப்பிடங்களாக இருந்தன. அத்துடன் அவை கோட்டைகளால் சூழப்பட்டு எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பை அளித்தன. கண்ணியமாகவும், கௌரவமாகவும் நடத்தினர். பல தனிப்பட்ட சலுவைகளையும் வழங்கினர். ஓரளவு தல சுயாட்சி உரிமையையும் அளித்தனர். பல நகரங்கள் அரசர் அல்லது பிரபுக்களின் மானிங்களாகவே விளங்கின ஒரு சில நகரங்கள் பிரபுக்களுக்கு சொந்தமாக இருந்தன.

**நகர உரிமைகள் :**

நகரமக்கள் கூட்டமாக ஒரு பிரபுவிடம் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். தங்களது உரிமைகளையெல்லாம் பட்டயங்களில் பொறித்து பிரபுவிடமிருந்து அவர்கள் வாங்கிக் கொண்டார்கள். ஆண்டான் அடிமை, மேலாள் கீழாள் என்ற பாகுபாடுகள் எதுவும் நகரங்களில் இல்லை. நிலமானிய சட்டத்தின் முன் அனைவரும் சமமாகவும், யாவரும் சுதந்திரமான

குடிமகளாகவும் கருதப்பட்டனர். சில நகரங்கள் பெருந்தொகையைச் செலுத்தி விட்டு பூரணசுயாட்சியைப் பெற்றுக் கொண்டன.

**நகர நிர்வாக முறை :**

ஒவ்வொரு நகரத்துக்கும் அதன் தலைவராக ஒரு மேயர் அல்லது பர்கோ மாஸ்டர் என்பவர் இருந்தார். அவருக்கு உதவி செய்யவும் ஆலோசனை கூறவும் பிரபுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய அவை ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது. பொருள் உற்பத்தியாளர்கள், வங்கியாளர்கள், வியாபாரிகள் போன்றோர்களே சபையில் இடம் பெற்றிருந்தனர். அவர்கள் பொதுவாக பூர்ஷுவாக்கள் என்று அழைக்கப்பட்டனர். இந்த பூர்ஷுவா சபையே நகரங்களுக்கான சட்டங்களை இயற்றியது. நகர வழக்குகளைத் தீர்க்க நீதிமன்றங்கள் இருந்தன.

**நகர கில்டுகள் :**

நகர ஆட்சியில் பலம் பொருந்திய மத்திய அரசாங்கம், அமையவில்லை. எனவே மக்கள் தம்மைத் தாமே ஆண்டு கொள்ள முன்வந்தார்கள். அதற்காக பல கில்டுகள் என்ற குழுக்கள் ஏற்பட்டன. இந்த கில்டுகள் நகர ஆட்சியைக் கண்காணித்ததோடு பல வகுப்பினரும் கூடிக்குலாவும் சமூகச் சங்கங்களாகத் திகழ்ந்தன. வியாபாரம், உற்பத்தி ஆகியவை ஒழுங்காக நடைபெற இவை உதவி செய்தன. பல்வேறு சட்டங்களை அதற்கென அவை ஏற்படுத்தின.

**நகர ஆட்சி முறை :**

நகரங்களின் ஆட்சியாளர்களாகப் பணக்காரக் குழுவினரே பெரும்பாலும் பணியாற்றினர். எனவே அவற்றை செல்வச் சிறுகுழு ஆட்சி என்று அழைக்கலாம். ஆட்சியாளர்கள் பல இடங்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஓரளவு பிரதிநிதித்துவ ஜனநாயகம் அங்கு வளர்ந்தது. சில நகரங்களில் மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டு நிர்வாகம் சாதாரண மக்களால் நடத்தப்பட்டது.

**இத்தாலியின் நகர நாடுகள்**

மத்திய காலத்தின் இறுதியில் நகர வாழ்வில் சிறந்தவளர்ச்சியையும் நிறைவையும் இத்தாலியில் காண்கிறோம். இத்தாலியில் ரோம் நகருக்கு வடக்கே அரைகுறை சுதந்திரத்துடன் நகர நாடுகள் தோன்றின. அவைகளில் குறிப்பிடத்தக்கவை வெனிஸ், ஜெனோவா, பிளாரன்ஸ், பிசா ஆகிய நகர நாடுகள் ஆகும்.

**வெனிஸ்**

இத்தாலியில் லம்பார்டுகளின் படையெடுப்பின் போது இத்தாலிய அகதிகள் ஏட்ரியாட்டிக் கடலின் மேற்பகுதியில் கடற்சுழிகளிடையில் உள்ள சிறு தீவுகளில் மீது வெனிஸ் நகரைக் கட்டினார்கள். இது மத்திய காலத்தில் அதிகாரமும் ஆதிக்கமும் கொண்ட நகர நாடாக விளங்கியது. பதினைந்தாம் நூற்றாண்டில் இந்த நகர மக்களின் ஜனத் தொகை இரண்டு லட்சமாக இருந்தது. இந்த நகர அரசு பத்து பேர் கொண்ட கவுன்சிலினால் (ஊழரஉெடை ழக வுநஒ) நிர்வாகம் செய்யப்பட்டது. அதன் தலைவர் டோஜ் என்று அழைக்கப்பட்டார். வெனிஸ் இத்தாலிய விவகாரங்களில் முக்கிய பங்கு வகித்தது. இங்கு ஏற்பட்ட கலை வளர்ச்சி குறிப்பிடத்தக்கதாகும்.

**ஜெனோவா**

இது விஸ்கோன்டி குடும்பத்தால் ஆளப்பட்டு வந்தது. ஜெனோவா மிகப்பெரிய துறைமுகமாகும். இங்கு கட்டப்பட்டுள்ள அழகிய அரண்மனைகளில் தீட்டப்பட்டுள்ள அழகான ஓவியங்கள் இன்னும் பாராட்டுக்குரியதாக உள்ளன.

**பிளாரன்ஸ்**

இத்தாலிய நகரங்களிலேயே முதன்மையானது பிளாரன்ஸ் நகரமாகும். இதனை பெரிக்ளீஸ் காலத்து ஏதென்ஸ் நகரத்தின் பொற்காலத்தோடு ஒப்பிடலாம். அழகிய கலைக்கு பெயர் பெற்ற அந்த நகரம் கலை மறு மலர்ச்சியில் பெரும் பங்கு பெற்றது. இங்கு ஜனநாயக முறையிலான ஆட்சி நிலவியது. இங்கு தான் உலகப்புகழ் பெற்ற கலைஞர்கள் பல படையெடுப்புகளை படைத்தார்கள். அவர்களில் கவிஞர்களான தாந்தே, பெட்ரார்க், பொக்காசியோ  கட்டிடக் கலை நிபுணரான புரனல்ஸோ. ஓவியர் பிராபிலீப் போலிப்பிச் சிற்பக் கலைஞர் டோன்ட்டாலோ ஆகியோர்களைக் குறிப்பிடலாம். இந்த நகரத்தின் மெடிசி குடும்பத்தார் கலை வளர்ச்சியில் பெரிதும் அக்கறை எடுத்துக் கொண்டனர். காஸ்மோ, அவரது பேரன் லாரன்சோ ஆகியோர் கலை வளர்ச்சியில் பெரும் பங்காற்றினர். முக்கியமாக லாரன்சோ தனது காலத்தில் பிளாரன்ஸ் நகருக்கே அழகு சேர்க்கும் விதமாக லியானர்டோ டாவின்ஸி, மைக்கெல் ஏஞ்சலோ, வெரோச்சியோ, போட்டிசெலி ஆகிய கலைஞர்களை பெரிதும் ஆதரித்து வந்தார்.

இந்த நகர நாடுகளின் வரலாறு பெரும்பாலும் ஒன்று போல் இருந்தது. இத்தாலிய நகரங்கள் வணிகத் துறையில் போட்டியிட்டு போரிம் ஈடுபட்டன. சுங்கவரிக்காகவும் , சந்தைக்காகவும், சலுகைகளுக்காகவும் போரிட்டன. மேலும் மேல் மட்டத்திலிருந்த பிரபுக்களும் வணிக செல்வந்தர்களும் கீழ் மட்டத்திலிருந்த நெசவாளர்களும் ஆட்சியைக் கைப்பற்ற உள்நாட்டுப் போர்களில் ஈடுபட்டனர். ஒவ்வொரு நகர நாடும் தொலைவிடங்களில் வணிகத் துறைக்களங்கள் அமைத்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு நகர நாடும் சட்டம் இயற்றியும், நீதி வழங்கியும், நாணயம் அடித்தும் தனி அதிகாரம் செலுத்தி வந்தது.

உள்நாட்டு நகரங்கள் பாதுகாப்பு படையும், துறைமுக நகரங்கள் கப்பற்படையும் வைத்திருந்தன.

**ஜெர்மானிய நகரங்கள் :**

தெற்கு ஐரோப்பாவில் பல பழைய நகரங்கள் புத்துயிர் பெற்றன ஜெர்மனி, ஹாலந்து , நெதர்லாந்து, ஹங்கேரி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் புதிய நகரங்கள் தோன்றின. ஜெர்மானிய நகரங்களின் ஆட்சி முறை ஒரு சில பழைய பணக்காரர் குடும்பங்களின் கைகளில் இருந்தது. நகரத் தலைவராகிய பர்கோமாஸ்டரும; (Burgomaster) அவருடைய ஆட்சிக் குழுவும் இக்குடும்பங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர். தொழில் துறையில் ஈடுபட்டிருந்தவர்கள் சங்கங்கள் அமைத்துக் கொண்டார்கள். பதிமூன்றாம் நூற்றாண்டில் இந்த சங்கங்கள் ஆட்சியில் பங்கு பெற போராடினர். ஜெர்மனியில் மிகவும் முற்போக்கான நகரங்கள் கூட நல்ல அமைப்பில் இல்லை. தெருக்கள் குறுகலாகவும் ஒழுங்கின்றியும் காணப்பட்டன. மரத்தாலான வீடுகளில் ஒரு பகுதியில் கால்நடைகளும், நகர் நடுவில் பன்றிகளும் வளர்க்கப்பட்டன. ஏழைகள் மதில்களை ஒட்டியிருந்த குடிசைகளில் வாழ்ந்தனர். நகரங்களில் தானியக் களஞ்சியங்கள் இருந்தன.

**பிரெஞ்சு நகரங்கள் :**

பேரரசு, போப்பாட்சி ஆகிய இரண்டின் ஆதிக்கதிலிருந்தும் விடுபட்ட இத்தாலிய நகரங்கள் சுதந்திரக் குடியரசுகள் ஆனது போல பிரெஞ்சு நகரங்கள் சுதந்திரக் குடியரசுகள் ஆகவில்லை. அவை நிலமானியதாரர்களின் ஆதிக்கத்திலிருந்து கூட முற்றிலும் விடுபடவில்லை. பிரபுக்களோடு போராடி சில நகரங்கள் தன்னாட்சி உரிமை பெற்றன. ஒரு சில நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கான்சல்களாலும், ஒரு சில மேயர்களாலும் ஆட்சி செய்யப்பட்டன. பிரான்ஸ் நாட்டில் நிர்வாகச் சீர்கேடுகளினால் பல நகரங்கள் அழியத் தொடங்கின.

**இடைக்கால நாகரிக வளர்ச்சியில் நகரங்களின் பங்கு :**

இடைக்கால நாகரிக வளர்ச்சியில் நகரங்கள் ஆற்றிய பணிகள் பல அவைகள் வருமாறு :

**உடலுழைப்பின் மேன்மை :**

உழைப்பின் உயர்வை இடைக்கால உலகுக்கு எடுத்துக்காட்டிய பெருமை நகரங்களுக்கே உரியது ஆகும். பண்டைக்கால நாகரீகத்தின் பாசறைகளான கிரிசிலும், ரோமிலும் உடலுழைப்பு கேவலமாகக் கருதப்பட்டது. அது அடிமைகள் செய்யும் வேலையாகக் கருதப்பட்டது. ஆனால் இடைக்கால நகரங்கள் உழைப்பை வற்புறுத்தின. உழைக்கத்

தெரியாதவனுக்கு அரசியல் பொருளாதார உரிமைகள் மறுக்கப்பட்டன. உழைப்புக்கும், உழைப்பாளிகளுக்குமே சமுதாயத்தில் நல்ல மதிப்பு ஏற்பட்டது.

**கூட்டு முயற்சியின் மேன்மை :**

கூட்டு முயற்சியின் இன்றியமையாமையை இடைக்கால நகரங்கள் வற்புறுத்தின. பொருள் உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் ஒரு கழகமாக அமைய வேண்டும் என்ற கருத்தையே நகரங்களில் அமைக்கப்பட்ட கில்டுகள் என்ற குழுக்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. உற்பத்தி துறையில் தொழிலாளர்களும் பங்கு பெற வேண்டும் என்பதை பல நகரங்கள் வலியுறுத்தின.

**வாணிப வளர்ச்சி :**

இடைக்கால வாணிப வளர்ச்சியில் நகரங்கள் தான் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றிருந்தன. வாணிபத்துக்கு முதுகெலும்பாக விளங்கிய கண்காட்சிகள் லண்டன், கலோன், பாரிசு, டிராய் போன்ற பெரு நகரங்களிலேயே நடைபெற்றன. மேலும் வாணிபத்துக்கு தேவையான கப்பல்களைக் கட்டும் தொழிலில் அக்கால நகரங்களே சிறந்து விளங்கின. மிலான், கோமோ, வெரோனா, வெனிஸ், பைசா போன்ற நகரங்கள் வாணிபத்தில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டின. மார்சேல்ஸ், மான்ட்பிலியர், வெலன்சியா, பர்சிலோனா போன்ற நகரங்கள் மத்திய தரைக்கடல் வாணிபத்தில் முக்கிய பங்கு வகித்தன.

**ஜனநாயகக் கருத்துக்களின் வளர்ச்சி :**

இடைக்காலத்தில் பல நகரங்கள் சுயாட்சி பெற்று விளங்கின. தற்கால ஸ்தல சுயாட்சி முறைக்கு ஒரு முன்னோடியாக விளங்கின. தற்கால பிரதிநிதித்துவ ஆடசிக்கு அக்கால நகர மன்றங்கள் வழிவகுத்துக் கொடுத்தன. ஸ்தல ஆட்சியில் மட்டுமின்றி மத்திய ஆட்சியிலும் ஜனநாயகப் பண்புகள் வரை இடைக்கால நகரங்கள் பெரிதும் துணை புரிந்தன. சட்டங்கள் இயற்றுவதில் பல தரப்பட்ட மக்களும் பங்கு பெற வேண்டும் என்ற ஜனநாயகக் கருத்து நகரங்களின் முயற்சியாலேயே வெற்றி பெற்றது.

**கலை வளர்ச்சி**

இடைக்கால கலை வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் நகரங்கள் தான் தாயகமாக விளங்கின. பிளாரன்சை ஆண்ட மெடிசி மன்னர்களும் ரோம் நகரை ஆண்ட போப்பாண்டவர்களும் கலைவளர்ச்சிக்கு பெரிதும் ஆதரவளித்தனர். இடைக்கால நாகரிகத்தை எடுத்துக்கூறும் கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை, இசைக்கலை முதலியவைகளெல்லாம் நன்கு வளர்ச்சியடைந்த இடங்கள் நகரங்களேயாகும்.

கான்ஸ்டான்டி நோபிளில் காணப்பட்ட மாபெரும் அரண்மனைகளும், பளிங்கு மண்டபங்களும், ரோம் நகரில் இருந்த பல்கலைக்கழகமும், அலக்சாந்திரியா நகரில இருந்த உலகப் புகழ் பெற்ற நூலகமும், ரேவன்னா நகரில் அமைந்த கட்டிடங்களும் புகழ் பெற்றவை ஆகும். மிலான், பிளாரன்ஸ், வீயன்னா ஆகி நகரங்களும் கலை வளர்ச்சியில் பெரும்பங்காற்றின. தாந்தே, பெட்ராக், பொக்காஷியோ, மாக்கியவெல்லி, மைக்கேல் ஏஞ்சலோ, லியோனர்டோ டாவின்சி போன்ற பெரும் சிந்தனையாளர்களேயும், கலைஞர்களேயும் தோற்றுவித்த பெருமை பிளாரன்ஸ்களுக்கு உரியதாகும்.

இவ்வாறு மத்திய ஐரோப்பாவில் தோன்றிய பல நகரங்கள் நாகரீக வளர்ச்சியில் அங்கமாக விளங்கின. அரசியல், வாணிபம், கலை வளர்ச்சியில் முக்கிய பங்காற்றின. ஆனால் மத்திய காலத்தின் இறுதியில் இந்த நகரங்கள் முக்கிய பங்காற்றின. ஆனால் மத்திய காலத்தின் இறுதியில் இந்த நகரங்கள் நலிவடைய ஆரம்பித்தன. பலம் பொருந்திய பல அரசர்கள் தோன்றி நகர அரசை ஒடுக்கி தங்களாதிக்கத்தில் கொண்டு வந்தனர். மேலும் பதிய நாடுகளும், கண்டங்களும் கண்டுபிடிக்கப்பட்டு கடல் வாணிபப் பாதை முக்கியத்துவம் குறைந்ததும் சில நகரங்கள் வாணிப வளம் குன்றி மறைந்தன. சமயச் சீர்திருத்தத்தால் ஏற்பட்ட சமயப் போர்களில் ஈடுபட்டு மேலும் பல நகரங்கள் வலுவிழந்தன.

## நூற்றாண்டுப் போர்

## (HUNDRED YEARS WAR, 1337 – 1453)

பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் 1337 முதல் 1453-ம் ஆண்டு வரை நடைபெற்ற போரானது நூறாண்டு போர் எனப்படுகிறது. இந்த நீண்டகாலப் போரானது சரியாக நூறாண்டுகள் நடைபெறவில்லை. அத்துடன் அப்போர் தொடர்ச்சியாக நடைபெறாமல் இடைவெளி விட்டு விட்டு நடத்தப்பட்டது. நூறாண்டுப் போர் நடந்த பொழுது இங்கிலாந்தில் ஐந்து மன்னர்களும் பிரான்சில் ஐந்து மன்னர்களும் ஆட்சிப் புரிந்தனர்.

| **ஆங்கில மன்னர்கள்** | | **பிரெஞ்சு மன்னர்கள்** | |
|---|---|---|---|
| மூன்றாம் எட்வர்ட் | (1327 – 1377) | ஆறாம் பிலிப் | (1328 – 50) |
| இரண்டாம் ரிச்சர்டு | (1377 – 1399) | ஜான் | (1350 – 1364) |
| நான்காம் ஹென்றி | (1399 – 1413) | ஐந்தாம் சார்லஸ் | (1364 – 1380) |
| ஐந்தாம் ஹென்றி | (1413 – 1422) | ஆறாம் சார்லஸ் | (1380 – 1422) |
| ஆறாம் ஹென்றி | (1422 – 1461) | ஏழாம் சார்லஸ் | (1422 – 1461) |

பிரெஞ்சுப் பகுதியில் காஸ்கனி வழியாக நிலைப்படுத்தப்பட்ட ஆங்கில ஆதிக்கத்தை ஒழித்து பிரான்சின் மேலாண்மையை நிலைநாட்டும் வரை இப்போர் நடைபெற்றது.

**போருக்கான காரணங்கள் :**

1. **இரு நாடுகளின் மாறுபட்ட தன்மைகள் :**

பிரான்சில் மன்னராட்சியானது வலிமையுடையதாகச் செயல்பட முயன்ற கொண்டிருந்த நேரத்தில் நிலமானிய பிரபுக்களின் எதிர்ப்புகளை பிரெஞ்சு மன்னர்கள் ஒழிக்கக் கடுமையாக முயன்று கொண்டிருந்தனர். ஆனால் அதே நேரத்தில் இங்கிலாந்தில் மன்னராட்சி அனைத்து அதிகாரங்களையும் உள்ளடக்கியதாய் வலிமை அடைந்திருந்தது. மேலும் ஆங்கிலப் பாராளுமன்றம் பொதுமக்கள் ஆதரவைப் பெற்றுச் சீராக இயங்கிக் கொண்டிருந்த போது பிரான்சில் ஸ்டேட்ஸ் ஜெனரல் மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. அத்துடன் பிரான்சில், அப்போது புதிதாகத் தொடங்கியிருந்த வேலாய் பிரிவினரின் ஆட்சியின் செயல்முறைக் கோட்பாடுகள் சீராகச் செயல்படத் தொடங்கவில்லை. இத்தகைய அரசியல் வேறுபாடுகள் அவ்விரு நாடுகளையும் மேலாண்மைப் போட்டியில் ஈடுபடச் செய்தன.

2. **ஆங்கில ஸ்காட்லாந்துப் போர் :**

இங்கிலாந்து நாடு, ஸ்காட்லாந்தைத் தன்னுடன் இணைக்க வேண்டுமென்ற முயற்சியில், முதலாம் எட்வர்ட் காலந்தொட்டே ஈடுபட்டு வந்தது. ஆனால் பிரெஞ்சு மக்கள் ஸ்காட்லாந்தின் தன்னாட்சிக் கோட்பாட்டிற்கு ஆதரவளித்து வந்தனர். 1329-ல் ஸ்காட்லாந்தின் அரியணைக்கு டேவிட் ப்ரூஸ் என்பவரும் பாலியால் என்பவரும் போட்டியிட்ட போது ஆங்கில மன்னர் மூன்றாம் எட்வர்ட் பின்னவருக்கு அளித்த ஆதரவு காரணமாக ப்ரூஸ் தோற்கடிக்கப்பட்டார். அவ்வாறு தோல்வியுற்ற டேவிட் ப்ரூஸிக்கு பிரான்ஸ் 6-ம் பிலிப் அடைக்கலம் தந்தார். அதனால் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் இடையிலான பிளவு விரிவடையலாயிற்று.

3. **நிலமானியச் சிக்கல்கள் :**

ஐரோப்பாவில் நிலமானிய முறையானது வேரூன்றிக் கிடந்தபோது நிலமானிய பிரபுக்கள், கோமகன்கள் ஆகியோர் தமது உடமைப் பகுதிகளைப் பரவலாகப் பல ஐரோப்பிய நாடுகளிலும் கொண்டிருந்தனர். அவ்வாறு கோமகன்கள் மன்னர்களுடன் மன உறவு கொண்ட போது அவ்விரு சாராருக்குமிடையிலான பிணைப்பு அதிகரித்தன. அதனால் மன்னர்கள் கோமகன்களின் உடமைப் பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர்.

எடுத்துக்காட்டாக இங்கிலாந்தில் பிளண்டாஜென்ட் ஆட்சிப் பிரிவைத் தோற்றுவித்த இரண்டாம் ஹென்றிக்கு (கி.பி. 1154 – 89) அக்யூடெய்ன், காஸ்கொனி, பாய்ட்டோ, பிரிட்டனி, ஆஞ்சொ, நார்மண்டி ஆகிய பிரெஞ்சுப் பகுதிகள் உடமைப் பகுதிகளாயிருந்தன. ஆனால் ஜான் இங்கிலாந்து , மன்னரானபோது (1199 – 1216) அவற்றில் பெரும்பகுதியை இழந்தார். பின்னர் 1259-ல் ஏற்பட்ட பாரீஸ் உடன்படிக்கைப்படி பிரான்சின் 9. ஆம் லூயி இங்கிலாந்தின்

மூன்றாம் ஹென்றி மன்னருக்கு கினி, போர்துவே ஆகிய பகுதிகளை விட்டுக் கொடுத்தார். இவ்வாறு நிலமானிய அடிப்படையிலான பகுதிகள் அடிக்கடி மேலாண்மைச் சிக்கலுக்குக் காரணமாயிருந்தன.

அப்போது வரியப்படையிலான சிக்கல்களும் எழுந்தன. குறிப்பாக பிரான்சின் மன்னர்கள் பிரான்சிலிருந்த ஆங்கில நிலமானியப் பகுதிகளில் மேலாளர்களாக விளங்கியதால் அவர்களுக்கிடையில் ஆதிக்கப் போட்டிகள் வலுப்பெற்றுப் பகையுணர்வு வளரக் காரணமாயின. எனவே தமது பகுதிகளில் முற்றுரிமை கொண்டாட இருநாடுகளும் முயன்ற போது போர்கள் தவிர்க்க முடியாதவை ஆயின.

4. **பிளாண்டர்சில் போட்டி :**

பிரான்சின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்த பிளாண்டர்சில் கெண்ட், ப்ரூக்ஸ், ஏப்ரெஸ் போன்ற கம்களி உற்பத்தி செய்யும் நகரங்கள் அமைந்திருந்தன. ஆனால் அந்த நகரங்கள் நமது கம்பளி உற்பத்திக்கான மூலப் பொருளாகிய ரோமத்தை இங்கிலாந்திடமிருந்தே பெற்று வந்தன. இவ்வாறு இருநாடுகளும் கம்பளி வாணிபத்தால் வளமடைந்த போது பிளாண்டர்ஸிலுள்ள மக்கள் நகராட்சித் துறையில் விடுதலைவிடுதலை பெற எண்ணிய போது ஆங்கில மன்னர் மூன்றாம் எட்வர்டின் துணையை நாடினர்.

அவ்வமயம் பிளாண்டர்ஸின் கவுண்ட் பிரான்சின் நான்காம் பிலிப்பின் ஆதரவைப் பெற முற்பட்டார். ஆங்கில மன்னர் கம்பள உற்பத்திக்கான மூலப் பொருளாகிய ஆட்டு ரோம ஏற்றுமதியை தடைசெய்தார். தம்முடைய உற்பத்தி பாதிக்கப்படுவதைக் கண்ட பிரெஞ்சு கம்பளி உற்பத்தியாளர்கள் ஜேம்ஸ் வான் அர்த்வெல்ட் (துயஅநள ஏழடெ யுசவளைநடனந) என்பவர் தலைமையில் கிளர்ந்தெழுந்தனர். கவுண்டை விரட்டிவிட்டு இங்கிலாந்துடன் கம்பளி பிளாண்டர்சைக் கட்டுபடுத்த விரும்பிய பிரெஞ்சு மன்னர் 4-ஆம் பிலிப் ஆங்கிலேயருடன் போரிட வேண்டியவரானார்.

5. **காஸ்கனி விவகாரம் :**

பிரான்சின் தென்மேற்கிலுள்ள காஸ்கனி ஆங்கிலேயரின் மானியப் பகுதியாயிருந்தது. அப்பகுதி ஒயின் உற்பத்தி செய்யக் கூடிய முக்கிய வாணிபக்கேந்திரமாகவும் விளங்கியது. அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட ஒயினை போர்த்துவே என்ற துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யப்பட்டது. பிரான்சு காஸ்கனியுடன் போர்துவே துறை முகத்தைக் கைப்பற்ற முனைந்த போது போர் தவிர்க்க இயலாததாயிற்று.

6. **மீன் பிடிப்பதில் தகராறு :**

உணவிற்காகப் பயன்படும் மீன்களை வடகடல் பகுதிகளில் பிடிப்பதில் பிரான்சுக்கும், இங்கிலாந்துக்கும் இடையிலான போட்டிகள் போராட்டங்களாக வளர்ந்து போருக்கு வழி

வகுத்தன. இதன் காரணமாக பிரெஞ்சு மற்றும் ஆங்கிலக் கடற்படையினர் கடற்பகுதிகளில் சச்சரவுகளிட்ட போது அவை போரைத் தூண்டி விட்டன.

7. **வாரிசுரிமைச் சிக்கல் :**

1316-ல் பிரான்சின் பத்தாம் லூயி மரணமடைந்த பின் அவருடைய சகோதரர் பிலிப் ஐந்தாம் பிலிப் (1316-22) என்னும் பெயரில் பிரான்சின் மன்னரானார். அவருக்கு ஆண் வாரிசுகள் இல்லாமையால் அவருடைய சகோதர் நான்காம் சார்லஸ் (1322-28) அவருக்குப்பின் ஆட்சியுரிமையைப் பெற்றார். துரதிருஷ்டவசமாக அவருக்கும் ஆண் மகவில்லை. எனவே அம் மூன்று சகோதரர்களின் ஒரே சகோதரி இஸபெல்லா என்பவரின் மகனாகவும் இங்கிலாந்தின் மன்னராகவும் விளங்கிய மூன்றாம் எட்வர்ட் (1327-77) பிரான்சின் அரியணை நம்மையே சாருமென வாதிட்டார். ஆனால் அது ஏற்கப்படாமல் பிரான்சின் ஆட்சியுரிமையானது வேலாய் குடும்பத்தைச் சேர்ந்த ஆறாம் பிலிப் (1328-50) என்பவரிடம் விடப்பட்ட போது போர் தவிர்க்க முடியாததாயிற்று.

8. **ஆங்கிலத் தேசிய உணர்வு :**

விழிப்புணர்வுடன் தேசீய எண்ணத்தினாலும் உந்தப்பட்ட ஆங்கில மக்கள் பிரான்சின் அரியணை தமது மன்னர் மூன்றாம் எட்வர்ட்டிற்கு கிடைத்தால் ஆங்கிலப் பேரரசினை விரிவடையச் செய்யலாமென்று நோக்குடன் தமது மன்னரை பிரான்சுக்கு எதிராக போர் தொடுக்குமாறு தூண்டினர். எனவே போர் ஏற்பட்டது.

ஐ. **முதல் வெற்றிக் காலம் : கி.பி. 1338 – 1360**

இங்கிலாந்து அரசர் மூன்றாம் எட்வர்ட் கி.பி. 1327 ஆம் ஆண்டில் அவருடைய பதினைந்தாம் வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் பிரான்சு அரசர் நான்காம் பிலிப்பின் மகள் இசபெல்லாவின் மகனாவார். பிரான்சு அரசர் நான்காம் பிலிப் கி.பி.1313 ஆம் ஆண்டில் இறந்து விட்ட பின்னர் அவருடைய மகன்கள் பத்தாம்லூயி, ஐந்தாம் பிலிப், நான்காம் சார்லஸ் இறந்து விட்ட பொழுது, பிரான்சு நாட்டு அரியணை ஏறுவதற்கு ஆண்வாரிசு எவரும் இல்லாமல் போயினர். ஏனெனில் அந்த மூன்று சகோதரர்களுக்கும் பெண் குழந்தைகளே பிறந்திருந்தனர். எனவே, நான்காம் பிலிப்பினுடைய சகோதரனின் மகன் ஆறாம் பிலிப் பிரான்சு நாட்டின் அரசானார். பிரான்சு நாட்டுப் பிரபுக்களும், மக்களும், அந்நாட்டு வழக்கத்திலிருந்த பிராங்குகளின் சாலியன் சட்டப்படியே இந்த ஏற்பாட்டைச் செய்தனர். அதாவது இச்சட்டப் படிப் பெண் வாரிசுக்கு பிரான்சு நாட்டு அரியணை உரிமையுடயது அல்ல என்பதாகும். எனவே தான் ஆறாம் பிலிப் அரசராக்கப்பட்டார். ஆனால், இங்கிலாந்து அரசர் மூன்றாம் எட்வர்ட் இந்தச் சட்டத்தை அறிந்திருந்தும் பிரான்சு அரசர் நான்காம் பிலிப்பின் பெண்வழிப் பேரன் என்ற முறையில் தனக்கு பிரான்சு நாட்டு அரியணை உரித்தானதென வாதிட்டார். எனவே இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே பகைமை வளர்ந்தது.

**ஸ்லொய்ஸ் கடற்போர் : கி.பி. 1340**

மூன்றாம் எட்வர்டுக்கு பவேரியாவின் அரசர் லூயி ஹைநாட்டின் அரசர் வில்லியம், மற்றும் பிளாண்டர்சின் தலைவர் ஆர்டிவெல்டியின் உதவி கிடைத்தது. கி.பி. 1338-ஆம் ஆண்டில் பிரான்சின் வடக்கே உள்ள பிளாண்டர்ஸ் பகுதியிலும், பிரான்சின் தென்மேற்கேயுள்ள காஸ்கனியிலும் மூன்றாம் எட்வர்ட் படைகளைக் குவித்தார். பிரான்சு அரசர் ஆறாம் பிலிப்பும் தன் படைகளை அவ்விடங்களுக்கு அனுப்பினார். நூறாண்டுப் போர் கி.பி. 1338 ஆம் ஆண்டில் தொடங்கி விட்டது. இருப்பினும் முதல் இரண்டாண்டுகளில் முக்கிய நிகழ்ச்சிகள் எவையும் நடைபெறவில்லை. இறுதியில் மூன்றாம் எட்வர்ட் தன் பெரும் கடற்படைகளை பிளாண்டர்சின் துறைமுகம் ஸ்லொய்சுக்கு அனுப்பினார். அங்குக் கடலிலேயே 1340-ல் பல நாட்கள் போர் நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயர்களுக்கு வெற்றி மேல் வெற்றி கிட்டியது. பிரெஞ்சுப் படைகள் முறியடிக்கப்பட்டன.

**கிரெசிபோர் : (Battle of Crecy) – கி.பி. 1346**

இங்கிலாந்து அரசர் மூன்றாம் எட்வர்ட் தன் படை பலத்தை இன்னும் அதிகமாக்கிக் கொண்டார். இங்கிலாந்தில் எல்லாவிதமான மக்களிடமிருந்தும் அரசருக்கு ஆதரவு இருந்தது. குறிப்பாக வணிகப் பெருமக்கள் இப்போரில் அதிக அக்கறை செலுத்தினார்கள். எட்வர்ட் பிரான்சின் வடமேற்குப் பகுதிகளில் பெரும்படைகளைக் கொண்டு வந்து இறக்கினார். பிரான்சு அரசர் ஆறாம் பிலிப்பும் உடனடியாகப் படைகளை அனுப்பினார். எட்வர்டின் படைகள் நார்மண்டிலிருந்து வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தன.

இறுதியில் கிரெசி என்ற நகரத்திற்கு அருகில் இருந்த காடுகளில் பல பிரிவுகளாகப் பிரக்கப்பட்ட ஆங்கிலப் படைகள் போருக்கு ஆயத்தமாயின. அப்படைகளின் ஒரு பகுதியை எட்வர்டின் முதல் மகன் கருத்த இளவரசன் தலைமையிலும், மற்றொரு பகுதியை நார்தாம்டன் கோமகன் தலைமையிலும் அணிவகுத்து முன்னர் அனுப்பிவிட்டு, மற்றொரு பெரும் படையை எட்வர்ட் தன் தலைமையிலேயே ஆயத்தமாக வைத்திருந்தார். ஆங்கிலப் படையில் ஆயிரக்கணக்கான வில் வீரர்களும் மற்றும் ஆயுதம் கொண்டு போரிடும் குதிரை வீரர்களும் இருந்தனர். மேலும் அந்தக் கிரெசிக் காடுகள் மறைந்திருந்தது தாக்குவதற்கு மிகவும் வசதியாக இருந்தன.

இதற்கு மாறாக பிரான்சு நாட்டு அரசன் ஆறாம் பிலிப் அனுப்பிய படைகள் பெரும்பாலும் பிரபுக்களால் திரட்டப்பட்ட கட்டுபாடில்லாத படைகளாகும். கிரெசியில் நடைபெற்ற போரில் பிரெஞ்சுப் படைகள் கடுமையாகத் தாக்கப்பட்டன. எட்வர்டின் மகன் கருத்த இளவரசர் மிகத் திறமையுடன் தன் படைகளைச் செலுத்தி போரிட்டார். இரவும் பகலும் நடந்த இப்போரில் பிரெஞ்சுப் படைகளுக்குப் பெருத்த இழப்பு ஏற்பட்டது. 1500-க்கும் மேற்பட்ட நைட் வீரர்களையும் 15,000க்கும் மேற்பட்ட போர் வீரர்களையும் இப்போரில் பிரான்சு இழந்தது. அதே நேரத்தில் இங்கிலாந்து இரண்டு நைட் வீரர்களையும், நூற்றுக்கும் குறைவான

போர் வீரர்களையுமே இழந்தது, கிரெசிப் போர் ஆங்கிலேய வில் வீரர்களின் புகழை ஐரோப்பா முழுவதும் பரப்பியது.

பின்னர், ஆங்கிலப் படைகள் இன்னும் வடக்கே சென்று பிளாண்டர்சிலிருந்த காலே என்ற துறைமுகத்தைக் கைப்பற்றிக் கொண்டன. இத்துறைமுகத்தைக் கைப்பற்றினால் ஆங்கில வணிகர்கள் பிளாண்டர்சோடு வாணிகம் செய்வதற்கு மிகவும் பயன்பட்டது. மூன்றாம் எட்வர்டின் பெருமையும் அவருடைய முதல் மகன் கருத்த இளவரசன் திறமையும் ஆங்கிலக் கவிஞர்களின் கவிதைகளுக்கு கருக்களாக அமைந்தன. இதை விடப் பெரிய போர் இன்னும் சில ஆண்டுகளில் நடைபெறப் போகிறதென்பது அனைவரும் எதிர்பார்த்ததேயாகும்.

**பாய்ட்டியர்ஸ் போர் (Battle of Poltiers) கி.பி. 1356**

பிரான்சு நாட்டில் ஆறாம் பிலிப்புக்குப் பிறகு ஜான் அரசர் அரியணை ஏறி இருந்தார். இங்கிலாந்தில் மூன்றாம் எட்வர்டே தொடர்ந்து அரசராக இருந்தார். இவருடைய ஆட்சிக் காலத்தில் கிரெசி வெற்றிக்குப் பிறகு கி.பி. 1347 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நான்காண்டுகள் இங்கிலாந்தில் ஏற்பட்ட கொள்ளை நோயினால் இங்கிலாந்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் இறந்து விட்டனர். இருப்பினும் அடுத்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளிலேயே அவர் தன் நாட்டை வலிமைப்படுத்தி பிரான்சுடன் போரைத் தொடர்ந்தார்.

இம்முறை எட்வர்ட் தன் படைகளை பிரான்சின் தென் மேற்குப் பகுதிக்கு அனுப்பினார். கி.பி. 1355 ஆம் ஆண்டு கருத்த இளவரசனின் தலைமையில் அனுப்பப்பட்ட படைகள் போர்டோ என்ற நகரத்தில் இறங்கின. அங்கிருந்து அப்படைகள் கிழக்கு நோக்கிச் சென்று பல நகரங்களைக் கொள்ளையடித்தன. அடுத்த ஆண்டு அவருடைய தலைமையிலேயே லொயர் நதிப் பகுதிகளில் ஆங்கிலப் படைகள் வந்து இறங்கிப் பல நகரங்களைக் கொள்ளையடித்தன. அதற்குள்ளாக பிரான்சு அரசர் ஜான் ஒரு பெரும் படையோடு ஆங்கிலப் படையைத் தாக்க வந்தார். இரு படைகளும் பாய்ட்டியர்ஸ் என்ற நகரத்திற்கு அருகில் சந்தித்தன.

ஆங்கிலப் படையில் இரண்டாயிரத்து ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட வில் வீரர்களும், ஏறத்தாழ ஐயாயிரம் ஆயுதம் தாங்கிய மற்றும் குதிரை வீரர்களும் இருந்தனர். பிரெஞ்சுப் படையில் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் இருந்தனர். இதைக் கண்ட கருத்த இளவரசன் பிரான்சு அரசரோடு அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளலாமெனக் கருதி அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார். ஆனால் பிரெஞ்சு அரசர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆங்கிலப் படையினரை சுலபமாக முறியடித்து விடலாம் என்று அவர் எண்ணினார். எனவே இருபடைகளுக்குமிடையே போர் மிகக் கடுமையாக நடைபெற்றது.

ஆங்கிலப் படைகள் கருத்த இளவரசன், சாலிஸ்பரி, மற்றும் அரசர் மூன்றாம் எட்வர்டின் தலைமையில் போரிட்டன. பிரெஞ்சுப் படைகள் டாபின், ஆர்லியன்ஸ் மற்றும் அரசர் ஜானின் தலைமையில் போரிட்டன். இறுதியில் ஆங்கிலப் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தாக்கிப் பெருஞ்சேதத்தை விளைவித்தன. எல்லாவற்றிற்கும் மேலாக பிரெஞ்சு அரசர் ஜான் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார். இவ்வாறு பிரெஞ்சுப் படைகள் பெரும் தோல்வியைக் கண்டன. ஆங்கிலப் படைகள் வெற்றிப் பெருமிதத்துடன் தாயகம் திரும்பின.

**பிரெடிக்னி உடன்படிக்கை : கி.பி. 1350**

கைது செய்யப்பட்ட அரசர் ஜான் இங்கிலாந்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். பின்னர் பிரெஞ்சு அரசர் ஜானும் அவருடைய மகன் சார்லஸ் டாபினும்இங்கிலாந்து அரசர் மூன்றாம் எட்வர்டோடு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். அதுவே பிரெடிக்னி உடன்படிக்கை என்பதாகும். அதன்படி பிரான்சின் தென்மேற்கே உள்ள அக்விடெய்ன் கோமகனாட்சிப் பகுதி முழுவதும், வடக்கேயுள்ள பாந்தி மாவட்டமும் மற்றும் காலே நகரமும் இங்கிலாந்துக்கு அளிக்கப்பட்டன. மேலும் ஜான் அரசரை விடுவிக்க பெரும் மீட்புப்பணம் தர வெண்டும் இங்கிலாந்து அரசர் இனி பிரான்சு நாட்டு அரியணைக்கு உரிமை கொண்டாடக் கூடாது; மற்றும் நார்மண்டி, மெய்ன், ஆஞ்சோ ஆகிய பகுதிகளையும் பிரெஞ்சு அரசரின் ஆட்சிக்கே விட்டு விட வேண்டுமென்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ்வுடன்படிக்கையினால் இங்கிலாந்தின் பெருமை உச்சநிலையை அடைந்தது.

பாய்ட்டியாஸ் போரினாலும், இவ்வுடன்படிக்கையினாலும் இங்கிலாந்தில் பல விளைவுகள் ஏற்பட்டன. இங்கிலாந்து, அக்விடெய்ன் போன்ற பெரும் நிலப்பகுதிகளைப் பெற்றது. பிளாண்டர்சிலிருந்து பல நகரங்களோடு தடையில்லாத வாணிகம் செய்வதற்கு பல நல்ல வாய்ப்புகள் ஏற்பட்டன. ஆங்கிலக் கால்வாயில் எதிரியின் பயமின்றி வணிக கப்பல்கள் வாணிகத்தில் ஈடுபட்டன. பிளாண்டர்சோடு நடைபெற்று வந்த கம்பளி வாணிகமும், காஸ்கனியோடு செய்யப்பட்ட மது வாணிகமும் இங்கிலாந்துக்கு அளவிலாச் செல்வத்தை ஈட்டித் தந்தன. மற்றும் ஆங்கில அரசர் பிரெஞ்சு அரசருக்கு நிலமானிய அடிப்படையில் கீழாள் அல்ல என்பது நிரந்தரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆங்கிலேய வில் வீரர்களும் ஆயுதம் தாங்கிய குதிரைப் படைவீரர்களும் பிரெஞ்சுப் படைவீரர்களை விட வீரத்திலும் திறமையிலும் சிறந்தவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டது.

**முதல் தோல்விக்காலம் : கி.பி. 1369 – 1399**

இக்காலத்தில் தொடர்ந்து மூன்றாம் எட்வர்டும் அவருக்குப் பிறகு இரண்டாம் ரிச்சர்டு இங்கிலாந்தில் அரசர்களாக இருந்தனர். பிரான்சில் ஐந்தாம் சார்லசும் ஆறாம் சார்லசும் அரசர்களாக இருந்தனர்.

பிரிடெக்னி உடன்படிக்கையை பிரெஞ்சு நாட்டவர் பெரும் அவமானச் சின்னமாகக் கருதினர். குறிப்பாக, அக்விடெய்ன் பகுதியிலிருந்த பிரபுக்கள் ஆங்கில அரசரின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதாக இருந்ததால், அவர்கள் அத்தகைய கட்டுப்பாட்டிலிருந்து விடுபடத் தகுந்த வாய்ப்பை எதிர் நோக்கி இருந்தனர். பிரெஞ்சு அரசர் ஐந்தாம் சார்லசும் அவர்களுக்கு உதவி செய்து அப்பகுதியை மீண்டும் கைப்ப்ற ஆயத்தமாக இருந்தார். எனவே, மீண்டும் கி.பி. 1369 ஆம் ஆண்டில் போர் துவக்கப்பட்டது.

இம்முறை பிரெஞ்சு அரசர் தன் திறமை மிகுந்த தளபதி கியுஸ்கிளின் என்பவரை ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிடும் பணிக்காக நியமித்திருந்தார். ஆங்கிலப் படைகளும் பல போர்களின் வெற்றி வீரரான கருத்த இளவரசன் தலைமையிலும், ஜான் கான்ட் தலைமையிலும் அனுப்பப்பட்டன. ஆனால் இதற்கு முன் நடைபெற்ற போர்களில் ஏற்பட்ட அனுபவத்தால், ஆங்கிலப் படைகளை நேராகச் சந்தித்து பிரெஞ்சுப் படைகள் போரிடவில்லை. அவர்கள் ஒரு வகையான கொரில்லாப் போர் முறையைக் கையாண்டனர்.

அக்விடெய்னில் பல நகரங்களை ஆங்கிலப் படைகள் கைப்பற்ற முயன்றன; ஆனால் முடியவில்லை. லிமொஜ் நகரம் ஒன்றைத்தான் 1370-ல் ஆங்கிலப் படைகளால் கைப்பற்ற முடிந்தது. ஆங்கிலப் படைவீரர்கள் பலர் உயிரிழந்தனர். இங்கிலாந்து அரசுக்குக் கருவூலத்தில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது. இந்த நிலையில் இளவரசனின் உடல் நிலை மிக மோசமாகி விட்டதால் அவர் தாயகம் திரும்பினார்.

அக்விடெய்னில் ஆங்கில ஆதிக்கத்திலிருந்து ஏறக்குறைய விடுபட்டதாகவே கருதப்பட்டது. அக்விடெய்னின் மேற்கு கரையிலுள்ள ரோஷெல்லி என்ற துறைமுகப் பகுதியில் கி.பி. 1372 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடற்போரில் பிரான்சு பெரும் வெற்றி பெற்றது. அதுமட்டுமின்றி ஆங்கிலக் கால்வாயைக் கடந்து இங்கிலாந்து நாட்டின் பல கடற்கரை நகரங்களை பிரெஞ்சுப் படைகள் தாக்கின. இதனால் இங்கிலாந்துக்கு பெருத்த இழப்பு ஏற்பட்டது. இறுதியாக புருகஸ் போர் நிறுத்த ஒப்பந்தம் கி.பி. 1375 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்டு, அதன் படி ஒரு சில கடற்கரை நகரங்களைத் தவிர மற்ற எந்த பிரெஞ்சுப் பகுதிக்கும் இங்கிலாந்து உரிமை கொண்டாடுவதில்லை என வாக்குறுதியளித்தது.

கி.பி. 1376 ஆம் ஆண்டில் கருத்த இளவரசரும், அடுத்த ஆண்டே மூன்றாம் எட்வர்டும் இறந்தனர். கி.பி. 1377-ஆம் ஆண்டில் கருத்த இளவரசனின் மகன் இரண்டாம் ரிச்சர்ட் அரசரானார். அவர் கி.பி. 1377ஆம் ஆண்டிலிருந்து கிபி. 1399 ஆம் ஆண்டு வரை ஆட்சிப் புரிந்தார்.

**இரண்டாம் ரிச்சர்டின் ஆட்சிக்காலம்**

ஏற்கெனவே ஏற்பட்டிருந்த கொள்ளை நோயினாலும் (1347-50) அதன் விளைவாக 1381-ல் ஏற்பட்ட உழவர் கலகத்தினாலும் இங்கிலாந்தின் பொருளாதார நிலையும், நிதி நிலையும்,

சீர்கேடுற்றிருந்தன. மேலும் அவருக்கும் அவருடைய சிற்றப்பா ஜான் காண்டுக்கும் கருத்து வேறுபாடுகளும் மனக் கசப்புகளும் வளர்ந்து வந்தன. எனவே இரண்டாம் ரிச்சர்டின் தாத்தா மூன்றாம் எட்வர்டைப் பொல பிரெஞ்சுப் போர்களில் ஈடுபட்டு இங்கிலாந்தின் பெருமையை உயர்த்த அவரால் முடியவில்லை. அதேபோல இந்த உள்நாட்டுக் கொந்தமளிக்கும் நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு பிரான்சு நாடு இங்கிலாந்தின் மீது போர் தொடுத்திருக்கலாம்; ஆனால் அவ்வாறு செய்யவில்லை. ஏனெனில் அப்பொழுது பிரான்சு நாட்டின் அரசராக இருந்த ஆறாம் சார்லஸ் பைத்தியக்காராக இருந்தார். ஆகவே இரண்டாம் ரிச்சர்டின் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் பெரும் போர் எதுவும் நடைபெறவில்லை.

**இரண்டாவது வெற்றிக்காலம் : கி.பி. 1413 – 22**

இரண்டாம் ரிச்சர்ட் கி.பி. 1399 ஆம் ஆண்டில் இறந்து விட்ட பொழுது அவருடைய சிற்றப்பா ஜான் காண்டின் மகன் நான்காம் ஹென்றி இங்கிலாந்தின் அரசரானார். அவருடைய ஆட்சிக் காலத்திலும் (கி.பி. 1399- 1413) இங்கிலாந்தில் பல குழப்பங்கள் நிகழ்ந்தன. அவரை அரியணையிலிருந்து இறக்குவதற்காகப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. பிரெஞ்சுவதற்காகப் பல சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. பிரெஞ்சு விவகாரங்களில் தன் முழு நேரத்தை அவரால் செலவிட முடியவில்லை.

எனினும், அப்பொழுது பிரான்சு நாட்டின் அரசராக இருந்த ஆறாம் சார்லசுக்கு அடிக்கடி மூளைக்கோளாறு ஏற்பட்டதால் பிரான்சில் பிரபுக்களின் வலிமை வளர்ந்தது. குறிப்பாக பர்கண்டியின் கோமகனும் அவரைச் சார்ந்த மற்றவர்களும் சார்லசுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற முனைந்தார். ஆனால், அரசருக்கு ஆர்லியன்ஸ் கோமகனும் அவரைச் சார்ந்தவர்களும் இருந்தனர். இவர்கள் ஆர்மக்னுக்குகள் என்றும் அழைக்கப்பட்டனர்.

கி.பி. 1407 ஆம் ஆண்டில் ஆர்லியன்ஸின் கோமகனைப் பர்கண்டியைச் சேர்ந்தவர்கள் கொலை செய்து விட்டனர். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் உள்நாட்டுக் கலகங்கள் மலிந்தன. இந்த நிலையில் பிரான்சின் பல பகுதிகளை மீட்பதற்காக இரண்டு கட்சிகளோடும் ரகசியத் தொடர்பு வைத்துக் கொண்டு, நான்காம் ஹென்றி ஒரு படையை பிரான்சில் கொண்டு போய் இறக்கினார். அதற்குள்ளாக அவர் கி.பி. 1413 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். அவருக்குப் பின் அவர் மகன் ஐந்தாம் ஹென்றி பிரான்சுடன் போரைத் தொடர்ந்தார்.

**ஐந்தாம் ஹென்றி போரைத் தொடர்தல்**

இவர் இங்கிலாந்தின் அரசராகப் பொறுப்பை ஏற்ற போது பிரான்சில் பைத்தியக்கார ஆறாம் சார்லஸ் தொடர்ந்து அரசராக இருந்தார். அவருக்கு ஆதரவாக இருந்த ஆர்லியனிஸ்ட்கள் அல்லது ஆர்மக்னுக்குகள் இங்கிலாந்துடன் நல்லுறவை வளர்த்துக்

கொள்ள எண்ணினர். எனவே, அவர்கள் இங்கிலாந்து அரசர் ஐந்தாம் ஹென்றிக்கு, பிரான்சு அரசரின் மகள் காதரின் என்பவளைக் கொடுத்து, அவளுக்குச் சீதனமாக அக்விடெய்ன் கோமகனாட்சிப் பகுதி முழுவதையும் மற்றும் ஆறு லட்சம் தங்கக்காககளையும் தருவதாக முன்வந்தனர். ஆனால் பேராசை மிக்க ஐந்தாம் ஹென்றி பிரான்சு நாடு முழுவதையும் கேட்டார். அதற்கு ஆர்மக்னுக்குகள் ஒப்புக் கொள்ளாததால் ஹென்றி கி.பி. 1415 ஆம் ஆண்டில் போரைத் துவக்கினார்.

**ஆஜின் கோட் போர் : (Battle of Agincourt) – கி.பி. 1415**

ஹென்றி உடனடியாகப் பெரும்படையை பிரான்சின் மேற்கேயுள்ள நார்மண்டி என்ற பகுதியில் கொண்டு போய் இறக்கினார். அவருக்கு இங்கிலாந்திலுள்ள பொதுமக்கள், பிரபுக்கள் மற்றும் குருமார்களின் ஆதரவு இருந்தது. ஆகையால் எந்த வித அச்சமின்றிப் படைகள் முன்னேறிச் செல்லும்படி ஆணையிட்டார். அப்படைகள் மிகச் சுலபமாக ஆரபிளார் என்ற துறைமுகப் பட்டினத்தை முற்றுகையிட்டுக் கைப்பற்றின. பின்னர் படைகள் வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தன. அதற்குள்ளாகக் கான்ஸ்டபிள்-டி-அல்பிரெட் என்பவரின் தலைமையில் பெரியதொரு பிரெஞ்சுப்படை ஆங்கிலப் படைகளைத் தடுத்து நிறுத்தப் பறந்தோடிச் சென்றது. இருபடைகளும் ஆஜின்கோட் என்ற இடத்தில் சந்தித்தன.

ஆஜின் கோட் போர் இதற்குமுன் நடைபெற்ற கிரெசி பாய்ட்டியர்ஸ் போர்களை விடக் கொடுமையானது. பிரெஞ்சுப் படையில் முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட போர் வீரர்களும், நைட் வீரர்களும் இருந்தும் பத்தாயிரம் வீரர்களை மட்டுமே கொண்ட ஆங்கிலப் படை பிரெஞ்சுப் படையை தோற்கடித்தது. ஆயிரக்கணக்கான பிரெஞ்சு வீரர்களும் மற்றும் பல பிரபுக்களும் போர்க்களத்தில் கொல்லப்பட்டனர். மற்றும் பல ஆயிரக்கணக்கானவர் கைதிகளாக்கப்பட்டனர். பின்னர் ஆங்கிலப்படை தொடர்ந்து மூன்றாமாண்டு பிரான்சிலேயே போரிட்டுப் பல நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டது . அவற்றுள் சீன் நதியின் வடகரையிலுள்ள ரூவன் என்ற நகரம் முக்கியமானதாகும். இனிபாரிஸ் நகரத்திற்குச் சென்று அதைக் கைப்பற்றிக் கொள்வதற்கு எந்தத் தடையும் ஹென்றிக்கு இல்லை. இந்த நேரத்தில் வேறொரு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

**பர்கண்டியின் கோமகன் கொலை செய்யப்படுதல்**

ஆங்கிலப் படைகளுக்குப் பர்கண்டியின் கோமகன் உதவி செய்கிறார் என்ற ஐயம் ஆர்மக்னுக்குகளுக்கிடையே ஏற்பட்டது. எனவே, ஒரு நாள் திடீரென்று அவர்களைச் சார்ந்த ஒரு பிரபு பர்கண்டியின் கோமகனைக் கொலை செய்து விட்டார். (இது 1407 –ஆம் ஆண்டு நடைபெற்ற கொலையின் எதிரொலியேயன்றி வேறொன்றுமல்ல). இதன் விளைவாகப் புதிதாகப் பதவி ஏற்ற பர்கண்டியின் கோமகனைச் சார்ந்த ஆட்களுக்கும் ஆர்மக்னுக்குகளுக்கும் பெரும் பிளவு ஏற்பட்டது. இப்பொழுது வெளிப்படையாகவே பர்கண்டியின் கோமகன் ஆங்கிலப் படைகளுக்கு உதவி செய்ய ஆரம்பித்து விட்டார்.

**டிராய்ஸ் உடன்படிக்கை : கி.பி. 1420**

இனி ஹென்றி பாரிசைக் கைப்பற்றி விடுவார் என்பதில் ஐயமில்லை. அந்த நேரத்தில் இந்த டிராய்ஸ் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதன்படி ஆறாம் சார்லஸ் தன் மகள் காதரினை ஹென்றிக்கு திருமணம் செய்து கொடுப்பதாகவும், தனக்குப் பிறகு ஹென்றியே பிரான்சின் அரசரென ஏற்றுக் கொள்வதாகவும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அந்த ஆண்டின் இறுதியில் வெற்றிப் பெருமிதத்துடன் ஹென்றி, பாரிஸ் மாநகரில் காதரினை மணந்து திருமண விழாவைக் கொண்டாடினார். இங்கிலாந்தின் பெருமை இனி என்றும் அடைய முடியாத உச்சநிலைக்குச் சென்று விட்டது.

**இரண்டாவது தோல்விக் காலமும் போரின் முடிவும்**

ஐந்தாம் ஹென்றி தன்னுடைய தம்பி கிளாரன்சின் கோமகன் தாமஸ் என்பவரை பிரான்சில் தன் பிரதிநிதியாக நியமித்து விட்டு வந்தார். ஆனால் அடுத்த ஆண்டே 1421-ல் பியுஜ் என்ற இடத்தில் சில பிரெஞ்சுப் படைகளால் அவர் கொல்லப்பட்டார். அதன் விளைவாக மீண்டும் ஐந்தாம் ஹென்றி பிரான்சுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதற்குள்ளாகக் கி.பி. 1422 ஆம் ஆண்டில் அவர் இறந்துவிட்டார். அவருக்கு அப்பொழுது வயது முப்பத்து ஐந்து தான் ஆகியிருந்தது.

**ஆறாம் ஹென்றி அரசராதல்**

ஐந்தாம் ஹென்றி இறந்தபோது அவருடைய ஒன்பது மாதக் குழந்தை ஆறாம் ஹென்றி இங்கிலாந்தின் அரசராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். அதே நேரத்தில் அவருக்கு வயது வரும் வரை அவருடைய சிற்றப்பா கிளஸ்டரின் கோமகன் ஹம்பரி இங்கிலாந்தில் அவருக்குப் பிரதிநிதியாகவும், அதேபோல அவருடைய மற்றொரு சிற்றப்பா பெட்போர்டின் கோமகன் ஜான் என்பவர் பிரான்சில் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

இதற்கிடையில் ஐந்தாம் ஹென்றி இறந்த அதே 1422-ஆம் ஆண்டின் இறுதியில் பிரான்சு நாட்டின் அரசர் ஆறாம் சார்லசும் இறந்துவிட்டார். அவர் இங்கிலாந்தோடு செய்து கொண்ட டிராய்ஸ் உடன்படிக்கைப்படி அவருடைய மகன் டாபின் என்ற ஏழாம் சார்லஸ அரசராக முடியவில்லை. எனவே ஏழாம் சார்லஸ் அந்த உடன்படிக்கை தன்னைக் கட்டுப்படுத்தாதென்றும், தானே பிரான்சின் அரசரென்றும் கூறிக்கொண்டு, பாரிஸ் நகருக்குச் சில மைல்கள் தெற்கே அமைந்துள்ள போர்ஜெஸ் என்ற நகரத்தை தன் தலைநகராக அமைத்துக் கொண்டு தொடர்ந்து ஆங்கிலப் படைகளை எதிர்த்துப் போரிட்டார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் கிரிவண்ட் இடத்தில் நடைபெற்ற போரிலும் வெர்நியுல் என்ற இடத்தில் 1424-ல் நடைபெற்ற போரிலும் ஆங்கிலப் படைகளே வெற்றி பெற்றன. இவ்வெற்றிகள் சிறியவையாயினும் பிரான்சு நாட்டிற்கு இனி வெற்றிக்காலமே வராதா என்ற

ஐயமும் அச்சமும் ஏற்பட்டன. அத்தகைய இருண்ட எதிர்காலத்தை எதிர்நோக்கியிருந்த பிரான்சு மக்களுக்கு, வெற்றி வாகை சூட்டித்தர, இறைவனின் அருள் பெற்ற ஜோன் ஆப் ஆர்க் என்ற எளிய மங்கை பிரான்சின் படைத்தலைமையை ஏற்க முன் வந்தார்.

**ஜோன் ஆப் ஆர்க்கின் சாதனை**

ஜோன் ஆப் ஆர்க் ஜாகியுஸ்-டி-ஆர்க் (Jaques-d-Are) என்ற சாதாரனண ஒரு விவசாயினுடைய மகளாகப் பாரிசுக்குக் கிழக்கேயுள்ள டோம்ரெமி என்ற ஊரில் பிறந்தாள். இளமையில் அவள் கல்வி கற்கவில்லையாயினும் கூர்மையான நுண்ணறிவும் ஆழ்ந்த மதப்பற்றும், உடையவளாக இருந்தாள். அவள் வளர வளர தெய்வீக அம்சங்கள் அவளிடம் அதிகமாகக் காணப்பட்டன. அவளுக்குப் பதினேழு வயதாக இருக்கும் பொழுது அரசனுக்கு உதவி செய்து, போர்க்களம் சென்று, ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்து, பிரான்சின் பெருமையை நிலைநாட்டும் படித் தேவதூதர்கள் அவளுக்கு ஆணையிடுவது போல் கனவு கண்டாள்.

தெய்வ நம்பிக்கையும், நாட்டுப்பற்றும் மிகக் ஜோன் அரசனைச் சந்தித்து ஆவன செய்யத் துடித்தாள். அவள் உடலிலே வலிமை மிக்க விந்தையான உணர்வு வேகமாக இயங்கியது. முன்னூறு மைல்கள் நடந்தே சென்று அரசர் ஏழாம் சார்லசைச் சந்தித்தாள். அவள் ஒரு சாதாரணப் பெண்ணே என்றாலும், அவளிடம் காணப்பட்ட தெய்வ நம்பிக்கை, நாட்டுப்பற்று, வீரம், அறிவு ஆகியவற்றால் கவரப்பட்ட அரசன் அவளால் தவறாமல் எதையாவதொன்றைச் சாதிக்க முடியுமென்பதை உணர்ந்தான். எனவே அவளுக்கு ஒரு கவசமும், குதிரையும், ஆயுதங்களும் கொடுத்து ஒரு சிறு படையையும் அவளுடன் அனுப்பினார்.அப்பொழுது மிக முக்கியமான ஆர்லியன்ஸ் நகரை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டனர். ஜோன் தன் சிறு படையைக் கொண்டு ஆங்கிலேயர்களை விரட்டியடித்து அந்நகரை 1429-ல் கைப்பற்றினாள். மீண்டும் அப்படைகளைப் பாடே என்ற இடத்தில் தோற்கடித்தாள். ஜோனின் திறமையும் வெற்றியும் இரு நாட்டவரையும் வியப்பில் ஆழ்த்தியது. ஆங்கிலேயர்கள் அவளை மாய மங்கை என்றும் சூனியக்காரி என்றும் கூறினார்கள்.

அதுமட்டுமன்றி ஏழாம் சார்லசை ரீம்ஸ் நகருக்கு அவள் பெரும் படையுடன் அழைத்துச் சென்றாள். அங்கு அவள் வேண்டுகோளின்படி அரசன் தன்னை பிரான்சின் மன்னன் என முடிசூட்டிக் கொண்டார். அதைக் கண்ட ஜோன் அளவிலா மகிழ்ச்சிக் கொண்டாள். மீண்டும் போர் முனைக்கு அவள் செல்ல முயன்ற போது பர்கண்டியைச் சேர்ந்த ஆட்கள் அவளைப் பிடித்து ஆங்கிலேயர்களிடம் ஒப்படைத்து விட்டனர். அவர்கள் அவளைக் கைது செய்து ஒன்பது மாதம் சிறையிலடைத்தார்கள். பின்னர் ஒரு நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட்டு அவள் புறச்சமயவாதி என்றும், சூனியக்காரி என்றும் குற்றம் சாட்டப்பட்டு, இறுதியில் கி.பி. 1431 ஆம் ஆண்டில் ரூவன் நகரத்தில் தீக்கிரையாக்கப்பட்டாள்.

ஜோன் இறந்தாலும் அவள் பிரான்சு மக்களிடையே ஊட்டிய வீர உணர்ச்சியும், நம்பிக்கையும், நாட்டுப்பற்றும் மறையவில்லை. அவர்கள் தொடர்ந்து போராடி வந்தார்கள்.

**அராஸ் மாநாடு**

பர்கண்டியின் கோமகன் இங்கிலாந்துக்கு ஆதரவாகவே இருந்தார். ஆனால், அவரும் ஹென்றியின் சிற்றப்பாக்கள் இருவரும், பர்கண்டி கோமகனின் எதிரிகளுடன் திருமண உறவு வைத்துக் கொண்டனர். இது பர்கண்டி கோமகனுக்கு வெறுப்பை ஊட்டியது. இந்த நிலையில் இங்கிலாந்துக்கும், பிரான்சுக்குமிடையே ஒரு உடன்பாடு காண அராஸ் என்ற இடத்தில் 1435-ல் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அதில் இங்கிலாந்து பிரான்சின் அரியணைக்கு உரிமை கொண்டாடுவதை விட்டு விட்டால், அதற்கு ஈடாக நார்மண்டியையும், அக்விடெய்னையும் இங்கிலாந்து நிரந்தரமாகக் கொடுத்து விடுவதாக பிரான்சு கூறியது. ஆனால் அதை ஆங்கிலேயர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே பர்கண்டி கோமகன் தன் ஆதரவை இங்கிலாந்துக்குக் கொடுப்பதை விடுத்து பிரான்சுக்கே உதவி செய்யத் துணிந்தார். மேலும் அதே ஆண்டு இங்கிலாந்து அரசரின் பிரதிநிதியாக பிரான்சில் இருந்த அவருடைய சிற்றப்பா பெட்போர்ட் கோமகன் இறந்து விட்டார். இனி பிரான்சில், இங்கிலாந்தின் நிலை இரண்டு தூண்கை இழந்த கட்டிடத்தைப் போல் ஆகிவிட்டது.

**ஷேடிலோன் போர் : கி.பி. 1453**

கி.பி. 1435 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1453 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்துக்கும், பிரான்சுக்கும் பல போர்கள் நடைபெற்றன. ஆனால் ஒரே ஒரு போரில் கூட இங்கிலாந்து வெற்றி பெறவில்லை. கி.பி. 1436 ஆம் ஆண்டிலேயே பிரான்சு அரசர் ஏழாம் சார்லஸ் பாரிசைக் கைப்பற்றிக் கொண்டார். இறுதியாகக் கி.பி. 1453-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஷேடிலோன் கொண்டார். இறுதியாகக் கி.பி. 1453 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஷெடிலோன் போரில் தாய்பொட்டின் தலைமையில் வந்த ஆங்கிலப் படைகள் பிரெஞ்சுப் படைகளால் முறியடிக்கப்பட்டுப் பெரும் இழப்புக்கு உள்ளாக்கப்பட்டன.

தாய்பொட்டும் போர்க்களத்தில் பிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். பிரான்சு, கிரெசியிலும், பாய்டியர்சிலும் ஆஜின் கோட்டிலும் ஏற்பட்ட தோல்விகட்கு, ஷெடிலோன் போரில் ஆங்கிலேயர்களைப் பழிக்குப் பழிவாங்கிப் பெருமை தேடிக் கொண்டது. வடக்கேயுள்ள காலே துறைமுகத்தைத் தவிர மற்ற எல்லாப் பகுதிகளையும் பிரான்சு கைப்பற்றிக் கொண்டது. ஏழாம் சார்லசின் வெற்றிக் கொடி பிரான்சு முழுவதும் கம்பீரமாகப் பரந்தது.

**இறுதியில் இங்கிலாந்து தோல்வி அடைந்ததற்கான காரணங்கள் :**

நூறாண்டுப் போரில் இருபெரும் வெற்றிகளைக் கண்ட இங்கிலாந்து இறுதியில் பெருந்தோல்வியுற்றது. அதற்குக் காரணங்கள் பலவாகும்.

1. இறைவனருள் பெற்ற மங்கை ஜோன் ஆப் ஆர்க் பிரான்சு நாட்டு மக்களிடையே வீரத்தையும் நாட்டுப் பற்றையும் உண்டாக்கினாள். பிரான்சு நாட்டு மக்கள் செய் அல்லது செத்துமடி என்ற உணர்வோடு போர்க்களங்களில் போரிட்டுத் தங்கள் நாட்டின் பெருமையை நிலைநாட்டினார்கள்.

2 பிரெஞ்சுப் படையினர் போரிடும் போது பல புதிய போர் நுணுக்கங்களைக் கையாண்டனர். குறிப்பாக பிரெஞ்சு வீரர்கள் கொரில்லாப்போர் முறையைக் கையாண்டதால் ஆங்கில வில் வீரர்கள் அவர்களை எளிதில் தோற்கடிக்க முடியவில்லை.

3. முதலில் பீரங்கிப் படையைப் பயன்படுத்தாத பிரான்சு, இறுதிக் காலத்தில் அப்படையைப் பெருமளவில் பயன்படுத்த முற்பட்டது. வலிமைமிக்க பிரெஞ்சு பீரங்கிப் படையை எதிர்த்து ஆங்கில வில் வீரர்களும் குதிரை வீரர்களும் புறமுதுகு காட்டிச் சிதறியோடினர்.

4. கி.பி. 1415-22 ஆம் ஆண்டுகளுக்கிடையே பிரான்சில் இங்கிலாந்து கைப்பற்றியிருந்த கோட்டைகளை எல்லாம் பிரான்சு மீண்டும் கைப்பற்றிக் கொண்டது. இதனால் பிரான்சின் படைபலம் வலிமை பெற்றதுடன் எதிரியின் படை பலமும் ஒடுக்கப்பட்டது.

5. பதினான்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இங்கிலாந்தில் பரவிய கொடுமையான கொள்ளை நோயினால் பெருத்த ஆள்சேதமும் தாங்க முடியாத பொருளாதாரச் சீர்குலையும் ஏற்பட்டன. அதனை அடுத்து நடைபெற்ற உழவர் கலகத்தினாலும் இங்கிலாந்தின் படைபலமும் பணபலமும் பெருமளவு பாதிக்கப்பட்டன. இத்தகைய நிலையில் பல ஆண்டுகளாக பிரான்சோடு போராடி வந்த இங்கிலாந்து போர் செய்வதில் வெறுப்புக் கொண்டது.

6. உண்மையில் இங்கிலாந்தின் அரசர் ஆறாம் ஹென்றி பிரான்சைத் தோற்கடிக்க வேண்டுமேன்ற முயற்சியில் அதிகமான அக்கறை காட்டவில்லை. ஏனெனில் அவர் பிரான்சு நாட்டு இளவரசி மார்கிரெட்டை (ஆயசபயசநவ ழக யுதெழர) திருமணம் செய்து கொண்டிருந்தார். அவ்வம்மையாரின் பரிவும் பாசமும் பிரான்சு நாட்டின் மீது தான் இருந்தன. அவருக்கெதிராக அரசரும் அமைச்சர்களும் செயல்பட விரும்பவில்லை. அதன், விளைவாக இங்கிலாந்து தோல்விகண்டது.

7. இது தவிர ஆறாம் ஹென்றியின் பிரதிநிதியாக பிரான்சு நாட்டிலிருந்த பர்கண்டி கோமகன் கி.பி. 1485 ஆம் ஆண்டில் இறந்து விடவே, அவரைப் போலத் திறமையும், தெள்ளிய அறிவுமுடைய தலைவர் எவரும் ஆங்கிலப் படையில் இல்லாமல் போயினர்.

8. பிரான்சு நாடு முழுவதும் தேசிய உணர்வு மக்களிடையே பரவியது. அவர்கள் அயலவரை எதிர்த்துக் கிளர்ச்சிகள் செய்தனர். மக்களின் இத்தகைய ஆதரவோடு பிரெஞ்சுப் படை ஆங்கிலப் படைகளை விரட்டியடிப்பது எளிதாயிற்று.

**நூறாண்டுப் போரினால் ஏற்பட்ட விளைவுகள்**

இங்கிலாந்தும், பிரான்சும் பகைமை நாடுகளால் இருந்து நூறாண்டுப் போரில் தாடர்ந்து தங்களை ஈடுபடுத்திக் கொண்டதால் பல துறைகளில் கடுமையான விளைவுகள் ஏற்ப்பட்டன.

**பிரான்சின் பொருளாதாரச் சீர்குலைவு :**

பிரான்சு நாட்டின் மண்ணிலேயே பல பயங்கரமான போர்கள் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் அந்நாட்டின் பல நகரங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டன. ஆங்கில வீரர்கள் நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் வாழ்ந்த மக்களிடம் கொள்ளையடித்துப் பெருஞ்செல்வத்தைக் கவர்ந்து சென்றனர். பொதுமக்கள் விவரிக்க முடியாத துன்பங்களை அனுபவித்தார்கள். குறிப்பாக பிரான்சு நாட்டின் மேற்கு வடமேற்குப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தொழிற் கூடங்களிலும் பண்ணைகளிலும் நிம்மதியாக உழைத்து உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. பிரான்சின் உற்பத்தி பாதிக்கப்பட்டு உணவுப் பற்றாக்குறையும் பொருளாதாரச் சீர்குலையும் ஏற்பட்டன. இதனால் பிரான்சின் பெருமை மங்கத் தொடங்கியது. இங்கிலாந்து இரு பெரும் வெற்றிகளைக் கண்டதால் அதன் பெருமையும் புகழும் ஐரோப்பா முழுவதும் பரவியது. இங்கிலாந்து பெரிய வல்லரசாக மாறுவதற்கான நிலை உருவாகியது.

**இங்கிலாந்து அயல்நாட்டுக் கொள்கையில் மாற்றம் :**

இந்த நிலையில் நூறாண்டுப் போரின் இறுதியில் இங்கிலாந்து பெருந்தோல்வி கண்டது. அதனால் அது தன் அயல்நாட்டுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதுவரை பிரான்சு நாட்டைப் பலமுறை தோற்கடித்து இங்கிலாந்து பெரும்புகழ் பெற்றிருந்தது. பிரான்சு முழுவதையும் வென்று அதைத் தன் அதிகாரத்திற்கு உட்படுத்தி மிகப்பெரிய வல்லரசாக மாறவேண்டும் என்பதே இங்கிலாந்தின் நோக்கமாகும். அம்முயற்சியில் அந்நாடு வெற்றி பெற்றிருந்தால் ஐரோப்பாவைச் சார்ந்த பல பகுதிகளைக் கைப்பற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அதனால், ஐரோப்பிய விவகாரங்களில் தலையிட்டு வீணாகப் பல போர்களில் ஈடுபட வேண்டியிருந்திருக்கும்.

நல்ல வேளையாக நூறாண்டுப் போரின் இறுதியில் இங்கிலாந்து தோல்வியுற்றது. அந்நாட்டுக்குச் சாதகமாகவே அமைந்தது. அதனால் அயல்நாட்டுக் கொள்கையை இங்கிலாந்து மாற்றியமைத்துக் கொண்டது. இனி கடல் கடந்த நாடுகளில் குடியேற்றங்களை

அமைப்பதிலும், அங்கெல்லாம் தன் வாணிக ஆதிக்கத்தை நிலை நாட்டுவதிலும், கடற்படையைப் பெருக்குவதிலும் முழுக்கவனத்தைச் செலுத்தியது.

**பிரெஞ்சுப் பகுதிகளை இங்கிலாந்து இழுத்தது :**

பிரான்சிலிருந்த எல்லாப் பகுதிகளையும் இங்கிலாந்து நிரந்தரமாக இழந்துவிட்டது. காலே துறைமுகம் மட்டுமே இங்கிலாந்தின் கைவசம் இருந்தது. அது பருத்தியாடைகள் உற்பத்தி செய்யும் முக்கிய நகரமாக விளங்கியதால் அதை இழக்க இங்கிலாந்து விரும்பவில்லை. எனினும் மிக விரைவில் அத்தொழில் இங்கிலாந்திலேயே வளர்ச்சியடையத் தொடங்கியதால் காலே தன் சிறப்பினை இழந்தது. இந்த நிலையில் அந்த நகரத்தை பிரான்சு கைப்பற்றிக் கொண்டது. பிரான்சு முழுவதும் அந்நாட்டு மன்னரின் ஆட்சிக்குட்பட்டது.

**இங்கிலாந்து பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சி**

இங்கிலாந்தில் பாராளுமன்றத்தின் அதிகார வளர்ச்சியிலும், மன்னரின் ஆட்சித்துறை அதிகாரங்களிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இப்போர்களினால் ஏற்பட்ட கருவூலத்தின் பணப்பற்றாக்குறை மன்னர் தன் விருப்பப்படிச் செயல்பட இயலாமல் செய்தது. அதனால் மன்னர் அடிக்கடிப் பாராளுமன்றத்தைக் கூட்டிப் புதிய வரிகளைப் போடவும், போர் சம்பந்தமான மேல் நடவடிக்கைகளை எடுக்கவும் அதன் ஒப்புதலைப் பெற வேண்டியதாயிற்று. அதே நேரத்தில் மக்கள் மீது பலமுறை வரிகள் விதிக்கப்பட்டதால் மக்களும் மன்னரை வெறுக்கத் தொடங்கினர். பிரான்சில் தனக்குச் சொந்தமான எல்லா இடங்களையும், இங்கிலாந்து இழந்து விட்டதால், மன்னர் மீது மக்கள் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் குறைந்தன.

பாராளுமன்றம் அதிகமான அதிகாரங்களைப் பெற்று மன்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியது. குறிப்பாகப் பண சம்பந்தமான நடவடிக்கைகள எடுப்பதில் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசன் எதையும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. ஆகையால் பிற்காலத்தில் பாராளுமன்றம் வலிமை மிகுந்த மன்றமாக மாறுவதற்கு உறுதியான அடித்தளம் அமைக்கப்பட்டது.

**பிரபுக்களின் அதிகார வளர்ச்சி :**

பாராளுமன்றம் வலிமைப்பெற்ற அதே நேரத்தில் பிரபுக்கள் வலிமைப் பெற்றனர். பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்களுள் பெரும்பாலோர் பிரபுக்களே என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரபுக்களே அரசரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி அவரைத் தங்களின் கைப் பொம்மையாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இவ்வாறு பிரபுக்கள் வலிமை பெற்றதால் தான் அடுத்த சில ஆண்டுகளுக்குள் இங்கிலாந்தில் ரோசாப்பூப் போர்கள் (றுயசனள ழக வாந சுழளநள) நடைபெற்று உள்நாட்டுக் கலகங்கள் ஏற்பட்டன.

**ஆங்கில மொழி வளர்ச்சி :**

ஆங்கில சமுதாயத்திலும் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டது. நார்மானியர்கள் இங்கிலாந்தை வென்ற காலத்திலிருந்து அந்நாட்டில் பிரெஞ்சு நாகரிகமம் பண்பாடுமே பரவியிருந்தன. நூறாண்டுப் போருக்குப் பின்னர் இந்நிலை மாறி முற்றிலும் ஆங்கில நாகரிகமும் பண்பாடும் உருவாகத் தொடங்கின. குறிப்பாக ஆங்கில மொழி மாறுதல் அடைந்தது. இது வரை இங்கிலாந்தில் ஒரு வகையான ஆங்கிலோ சாக்சானிய கலப்பு மொழயே பேசப்பட்டு வந்தது. அது பெருமளவு மாறி ஆங்கிலம் என்ற எளிய இனிய மொழி உருவாயிற்று. சாசர் போன்ற கவிஞர்களாலும் விக்ளிப் போன்ற உரை நடை எழுத்தாளர்களாலும் அம்மொழிக்குப் புத்துயிரும் மெருகும் ஊட்டப்பட்டன. அவர்களைத் தொடர்ந்து எழுதிய எழுத்தாளர்களால் புதிய ஆங்கில இலக்கியம் உருவாயிற்று.

**இங்கிலாந்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு :**

நூறாண்டுப் போரில் பங்கு கொண்ட வீரர்கள் இங்கிலாந்து திரும்பிய பொழுது அவர்களால் அமைதியான வாழ்க்கை நடத்த முடியவில்லை. ஏனெனில் பிரான்சில் அவர்கள் இருந்த போது போர் புரிவதிலும் கொள்ளையடிப்பதிலுமே தங்கள் காலத்தைக் கழித்துப் பழக்கப்பட்டவர்கள். எனவே அவர்கள் தாயகம் திரும்பி பின்னர் திருடர்களாகவும், கொள்ளைக்காரர்களாகவும் மாறினார்கள். அதன் விளைவாக இங்கிலாந்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைத்து அராஜகம் வளர்ந்து உள்நாட்டுக் குழப்பங்கள் மலிந்தன.

**பிரான்சில் தேசிய உணர்வின் வளர்ச்சி :**

பிரான்சு நாடு தனக்குரிமையான எல்லா நிலப்பகுதிகளையும் பெற்றது. நாட்டினுள் தேசிய உணர்வு ஏற்பட்டு நாடு ஒன்றாக இணைக்கப்பட்டது. நிலமானிய அடிப்படையில் வலிமை பெற்றிருந்த பிரபுக்களின் ஆதிக்கம் பெருமளவு ஒடுக்கப்பட்டது. பிரான்சின் அரசர், இங்கிலாந்தின் அரசரைப் போல் அல்லாது, வரம்பிலா அதிகாரங்களைப் பெற்றார். பிற்காலத்தில் பிரான்சு ஒரு பெரிய வல்லரசாக மாறுவதற்கான வழி வகுக்கப்பட்டது

## இடைக்காலத்தின் பிற்பகுதியில் திருச்சபை
## (CHURCH IN LATER MIDDLE AGE)

**அரசர் நான்காம் பிலிப்பும் போப் எட்டாம் போனிபேசும்**

பிரான்சு நாட்டின் அரசர் பிலிப் (கி.பி. 1285-1314) காபெட் வமிசத்து அரசர்களுள் ஒருவராவார். அவர் பிரான்சில் ஆட்சி செய்யும் போது கி.பி. 1294 ஆம் ஆண்டில் ரோம் திருச்சபையின் தலைமைப் போப்பாக எட்டாம் போனிபேஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலில்

அவர் பிலிப்புடன் நல்லுறவுகளை வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் போப்பின் வரம்பில் அதிகாரங்களை அவா் நிலைநிறுத்த முயன்றபோது அரசருக்கும் போப்புக்கும் அரசியல் மற்றும் ஆன்மீகம் பற்றிய அதிகாரங்கள் உண்டு இக்கருத்துக்களை மன்னா், மக்கள், மதகுருமார்கள் ஆகியோா் அனைவரும் உணரவேண்டும் என ஆணையிட்டார்.

அப்பொழுது புனித ரோமானியப் பேரரசரை விட பிரான்சுநாட்டு மன்னா்கள் நான்காம் பிலிப்பே வலிமையுடையவராகவும் புகழ் வாய்ந்தவராகவும் இருந்தார். போப்பின் அச்சுறுத்தல்களுக்கு அரசா் அஞ்சவில்லை.அவா் அடிக்கடி போா்களில் ஈடுபட்டதால் அரசுக்கு பணப் பற்றாக்குறை ஏற்பட்டது. எனவே. பிரான்சில் இருந்த மதகுருமார்களின் சொத்துககளின் மீது வரிவிதித்தார். அவர்கள், போப் போனிபேசிடம் முறையிட்டனா்.

போப், அரசருக்குத் திருச்சபையைச் சேர்ந்த சொத்துகளுக்கு வரிவிதிக்கும் உரிமை இல்லையென அறிவித்தார். மதகுருமார்களுக்கு வரியை செலுத்த வேண்டாமெனவும் ஆணையிட்டார். தன் ஆணையை மறித்து நடக்காதவா் அரசராயினும் மதகுருமாக்களாயினும் எவராயினும் மதவிலக்கு செய்யப்பபடுவர் என அச்சுறுத்தினார். போப்பின் போக்கை கண்டு அரசர் ஆத்திரப்பட்டார்.

இந்த நேரத்தில் தான் மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது. பிரான்சு நாட்டில் மதகுருமார் ஒருவர் அரசரைக் கொல்ல செய்யச் சதி செய்தாரென்று குற்றம் சாட்டப்பட்டு அரசரது நீதி மன்றத்தில் விசாரிக்கப்பட்டார். இத்தகைய முறைக்கு போப் போனிபேஸ் எதிர்ப்புத் தெரிவித்தார். குற்றம் செய்யும் மதகுருமாரை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கும் உரிமை திருச்சபை நீதிமன்றத்தைத் தவிர வேறு நீதி மன்றங்களுக்கு இல்லையென அறிவித்தார்.

போப் விடுத்த எந்த ஆணையையும் அரசர் மதிக்கவில்லை தொடர்ந்து தன் வழியிலேயே நடந்து வந்தார். அதுமட்டுமன்றி பிரான்சிலிருந்து ரோமுக்கு வெள்ளியும் தங்கமும் பெருமளவில் அனுப்பப்பட்டு வருவதை அரசர் நிறுத்தினார். பிரான்சிலிருந்து எந்த மத நிறுவனத்திலிருந்தும் ரோமுக்குப் பணமோ தங்கம் அல்லது வெள்ளியோ அனுப்பக் கூடாதென பிலிப் ஆணையிட்டார்.

உண்மையிலேயே ரோம் திருச்சபைக்குக் கடுமையான நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. அதற்குப் போப் புதிய வழியொன்றைக் கண்டுபிடித்தார். கி.பி.1300 ஆம் ஆண்டு புதிய நூற்றாண்டு தொடங்குவதையொட்டி ரோமில் மிகப்பெரிய கிறிஸ்தவத் திருவிழாவைப் போப் நடத்தினார். அத்திருவிழாவுக்கு உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து கிறிஸ்தவச் செல்வந்தர்கள் வந்தார்கள். அவர்கள் தங்களின் காணிக்கையாகத் திருச்சபைக்குக் குவியல் குவியலாகத் தங்கம் மற்றும் வெள்ளிக் காசுகளைக் கொண்டு வந்து போப்பின் முன் கொட்டினார்கள்.

மேலும் அத்திருவிழாவில் போப் ஊர்வலம் வந்த போது அவருக்கு மன்னால் இரண்டு பெரிய வாள்கள் எடுத்துச் செல்லப்பட்டன. அவை போப்பினிடமே அரசியல் அதிகாரங்களும் ஆன்மீக அதிகாரங்களும் உள்ளன என்பதைக் காட்டுவதற்கே அவ்வாறு எடத்துச் செல்லப்பட்டன. இத்திருவிழாவினால் போப்பின் புகழ் ஐரோப்பா முழுவதும் பரவியது. நிதிப்பற்றாக்குறையும் நீங்கியது.

ஆனால் அரசர் பிலிப் தன் அதிகாரத்தைக் கைவிடுவதாக இல்லை. பிரான்சின் குருமார்கள், பிரபுக்கள் மற்றும் பொது மக்களடங்கிய பொதுப் பேரவையை பிலிப் கூட்டினார். முதன் முறையாக இப்பேரவை அரசால் கூட்டப்பட்டது. அது தன் முழு ஆதரவை அரசருக்குக் கொடுத்தது. இதனைக் கண்ட போப் பிலிப்பை மதவிலக்கு செய்தார்.

ஆனால் பிலிப் மதவிலக்கு ஆணையைக் கண்டு மனந்தளரவில்லை. போப்பைத் தாக்குவதற்காகப் படைகளை அனுப்பினார். போப் ரோமுக்கு அரகில் அனாக்னி என்ற நகரத்திலுள்ள கோட்டையில் தங்கியிருந்தார். அரசரால் அனுப்பப்பட்ட படைகள் கோட்டையை முற்றுகையிட்டன. மூன்று நாட்கள் போப் வெளியே வரவில்லை. அரசரின் ஆட்கள் நொரெட் என்பவர் தலைமையில் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் எண்பத்தாறு வயது நிரம்பிய போப்பைச் சுடுசொற்களால் சிறுமைப்படுத்திப் பேசியதடன், அவரைத் தாக்கி அவருடைய புனிதமான உடையைக் கிழித்தெறிந்தார்கள். மேலும் அவரைக் கைது செய்து அவமதித்தார்கள். கி.பி. 1303 ஆம் ஆண்டில் போப் மரணமடைந்தார்.

திருச்சபையின் வரலாற்றில் இந்நிகழ்ச்சி நீங்காத களங்கமாகிவிட்டது. ஐரோப்பிய மக்களிடையே பல்வேறு விதமான எண்ணங்களையும் உணர்வுகளையும் இது ஏற்படுத்தியது. இந்நிகழ்ச்சியே போப்பின் தலைநகரத்தை ரோமிலிருந்து ஆவினானுக்கு மாற்றுவதற்குக் காரணமாக இருந்தது.

போப் போனிபேஸ் இறந்த விட்டாலும், பிலிப் தான் திருச்சபையோடு தொடுத்த போராட்டத்தை விடுவதாக இல்லை. போனிபேசுக்குப் பிறகு பதவி ஏற்ற போப் சில மாதங்களில் இறந்துவிட்டார். பிலிப் தன் நாட்டிலிருந்த ஒருவரைப் போப்பாக நியமிக்க வேண்டுமென எண்ணினார். எனவே போர்டோவின் பிஷப்பை ஐந்தாம் கிளெமென்ட் என்ற பெயரோடு போப்பாக நியமித்தார். அதுமட்டுமின்றி போப்பின் தலைநகராக ரோமிலிருந்து பிரான்சு நாட்டில் ரோன் நதியின் கிழக்குக் கரையிலுள்ள ஆவனான் என்ற நகரத்திற்கு மாற்றினார். போப் ஐந்தாம் கிளெமென்ட் அரசரின் ஆணைப்படியே நடந்து கொண்டார். போனிபேஸ், பிலிப்பை மதவிலக்குச் செய்திருந்த ஆணையைத் திரும்பப் பெற்று, மன்னரை மன்னித்தார்.

கி.பி. 1309 ஆம் ஆண்டிலிருந்து 1377 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ எழுபது ஆண்டுகள் போப்பின் இருப்பிடம் ஆவினானிலேயே இருந்தது. இந்த எழுபதாண்டுக் காலத்தைப் பாபிலோனியச் சிறையிருப்பு என்று வரலாற்றாசிரியர்கள் அழைக்கின்றனர். போப்

ஐந்தாம் கிளெமென்டுக்குப் பின் வந்த போப்புகளெல்லாம் பிரான்சு நாட்டைச் சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் பிரான்சு நாட்டு அரசரின் கைப்பொம்மைகளாகவே இருந்தனர். போப் எதை சொன்னாலும் இது அரசரின் கருத்து ஐரோப்பியக் கிறித்தவர்கள் கருதினார்கள்.

திருச்சபையின் வரலாற்றில் இந்தக்காலம் ஓர் இருண்ட காலமாகவே கருதப்படுகிறது. ஐரோப்பிய மன்னர்களும் மக்களும் திருச்சபை, பிரான்சு அரசரின் அதிகாரத்திற்குட்ப்பட்டிருப்பதை விரும்பவில்லை. போப்பின் இருப்பிடம் ரோமுக்கு மாற்றப்பட வேண்டுமென அவர்கள் விரும்பினர். கிறிஸ்தவ மதத்தின் மீதும் திருச்சபையின் மீதும் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். இதே காலத்தில் தான் இங்கிலாந்தில் ஜான் விக்ளிப் (John Wycliffe-1320-1384) போன்றவர்கள் திருச்சபையிலிருந்த குறைகளையும் திருச்சபையைச் சேர்நத போப் மற்றும் குருமார்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பற்றியும் கடுமையாகத் தாக்கிப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

மேலும் தன்னுடைய ஆட்சிக் காலத்திலேயே டெம்ப்ளர்கள் என்ற நைட் வீரர்களின் அமைப்பை நான்காம் பிலிப் கலைத்துவிட்டார். அவர்கள் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதாகவம், பெருஞ்செல்வத்தைக் குவித்து விட்டுச் சோம்பேறிகளாக வாழ்கின்றார்களென்றும் குற்றம் சாட்டி அவ்வமைப்பைக் கலைத்துவிட்டு அவர்களின் சொத்துக்களை பிலிப் பறிமுதல் செய்தார். அது மட்டுமின்றிக் கலகம் செய்த நைட்டெமப்ளார் வீரர்கள் ஐம்பத்து நான்கு பேர் பாரிஸ் நகரத்தில் கி.பி.1312 ஆம் ஆண்டு தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டார்கள். இத்தனைக்கும் போப் ஐந்தாம் கிளெமென்ட் உடந்தையாக இருந்தார்.

பாபிலோனியச் சிறையிருப்புக் காலத்தில் ஐந்தாம் கிளெமென்ட் முதல் பதினோறாம் கிரேகரி வரை ஏழு போப்புகள் ஆவினானில் இருந்து கொண்டே பணியாற்றினார்கள். இதற்குக் கடும் எதிர்ப்பு வளர்ந்து கொண்டே வந்தது. எனவே பதினோறாம் கிரேகரி தன் இருப்பிடத்தை ரோமுக்கு மாற்றத் திட்டமிட்டார். அவருடைய திட்டத்திற்கு ஐரோப்பிய மன்னர்கள் மற்றும் மக்களின் ஆதரவு இருந்தது. ஆகையால், கி.பி. 1377 ஆம் ஆண்டில் தைரியமாக ரோமுக்குச் சென்றார். பாபிலோனியச் சிறையிருப்பு முடிந்நதது. இருப்பினும் திருச்சபைகது இதைவிடப் பெரியதொரு களங்கம் வரக்காத்திருந்தது.

### திருச்சபையில் ஏற்பட்ட பெரும்சமயப்பிளவு

பதினோறாம் கிரேகரி கி.பி. 1378 ஆம் ஆண்டில் இறந்து விட்டார். புதிய போப்பைத் தேர்ந்தெடுப்பதற்காகத் திருச்சபையைச் சார்ந்த கார்டினல்கள் எல்லாரும் ரோமில் கூடினர். அப்பொழுது ரோம் நகர மக்கள் திரளாகக் கூடியிருந்து ரோமைச் சேர்ந்த ஒருவரையே போப்பாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். கார்டினல்களும் இத்தாலியைச் சேர்ந்த ஆறாம் அர்பனையே போப்பாகத் தேர்ந்தெடுத்தனர்.

போப் ஆறாம் அர்பன் திருச்சபையிலிருந்த பலகுறைகளைப் போக்க நடவடிக்கை எடுக்க முற்பட்டார். அவ்வாறு செய்வதில் போப் சர்வாதிகாரப் போக்கைக் கடைப் பிடித்தார். இதனை அவரைத் தேர்ந்தெடுத்த கார்டினல்கள் வெறுத்தனர். போப்புக்கும் கார்டினல்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் வளர்ந்தன. பெரும்பாலான கார்டினல்கள் பிரான்சு நாடடைச் சேர்ந்தவர்களாவர். போப் அவர்களை இன்னும் அதிகமாக வெறுத்தார். இவ்விருவருக்குமிடையே ஒற்றுமை ஏற்படும் போல் தெரியவில்லை.

எனவே, எல்லாக் கார்டினல்களும் ரோமிலிருந்து நேபிள்சுக்குச் சென்றுவிட்டனர். அங்கிருந்து, ஆறாம் அர்பனின் தேர்வு செல்லாது என்றும், ரோம் மக்கள் தங்களை வற்புறுத்தி ஆர்ப்பாட்டம் செய்ததாலேயே ஆறாம் அர்பனைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தங்களுக்கு ஏற்பட்டதென்றும், அவர் போப்பாக இருக்கத் தகுதியுடையவர் அல்லர் என்றும் அறிக்கை விட்டனர். அதுமட்டுமின்றி அங்கேயே அவர்கள் பிரான்சு நாட்டுக் காரடினல் ஒருவரைப் போட்டிப் போப்பாகத் தேர்ந்தெடுத்தனர். அவர் உடனே ஏழாம் கிளெமென்ட் என்ற பெயரில் ஆவினானில் தன் இருப்பிடத்தை வைத்துக் கொண்டு தானே உண்மையான போப்பென்று அறிவித்துப் பணிபுரியத் தொடங்கினர்.

கிறித்தவத் திருச்சபைக்கு ஒரே நேரத்தில் இரண்டு போப்புகள் -ஒருவர் ரோமிலும் மற்றொருவர் ஆவினானிலும்- இருந்து கொண்டு ஒருவர் மற்றவரைத் தூற்றிக் கொண்டும், ஒவ்வொருவரும் தானே உண்மையான போப்பென்று உரிமைக் கொண்டாடிக்கொண்டும், ஒருவரை மற்றவர் மதவிலக்கு செய்த கொண்டும் இருந்த இழிநிலைஐரோப்பிய மக்களிடையே ஆத்திரம், ஆவேசம், மற்றும் வேதனைனையூட்டியது. எந்தப் போப்பைப் பின்பற்றுவது? யார் உண்மையான போப்? என்ற குழப்பத்தில் மக்கள் மட்டுமின்றி மன்னர்களும் இருந்தார்கள்.

திருச்சபையில் ஏற்பட்டு இந்த சமயப் பிளவு நாடுகளிலும் குடும்பங்களிலும் ஏற்பட்டது. ஒரே குடும்பத்தில் தந்தை ஒருவரையும், தாய் மற்றொருவரையும் உண்மையான போப்பென ஏற்றனர். இதனால் குடும்பங்களிலும் பூசல்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய அரசுகள், இச்சமயப் பிளவினால் இரு வேறு அணிகளாகப் பிரிந்தன, பிரான்சு, மற்றும் அதன் ஆதரவு பெற்ற அரசுகளான, ஸ்பானிய அரசு, நேபிள்ஸ், சிசிலி, ஸ்காட்லாந்து போன்றவை ஆவினானில் உள்ள போப்பை உண்மையான போப்பென ஏற்றுக்கொண்டன. இங்கிலாந்து, பிளாண்டர்ஸ் மற்றும் ஸ்காண்டிநேவிய அரசுகள் ரோமிலுள்ள போப்பை ஏற்றுக்கொண்டன. ஜெர்மனி மற்றும் வட இத்தாலி அரசுகள் நடுநிலை வகித்தன. இந்த பயங்கரமான நிலை எவ்வளவு காலம் நீடிக்குமோவென ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் பயந்து கொண்டிருந்தனர்.

இந்தப் பிளவு ஆறாம் அர்பனோடும், ஏழாம் கிளெமென்டோடும் நிற்க வில்லை. போப்பும், போட்டிப் போப்பும், தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இப்படியே ஏறக்குயை முப்பத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டனர். இந்நிலை நீடித்தால் கிறிஸ்தவ மதம் அழியுமென்பதையும்ப் பல நாடுகளைச் சேர்ந்த மதகுருமார்களும், கார்டினல்களும் மற்றும்

அம்மதத்தில் நம்பிக்கை கொண்ட பெரியார்களும் கருதினார்கள். எனவே அரசுக்கும் மதிருச்சபைக்கும் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டார்கள்.

இதற்கு முன்னர் திருச்சபையில் ஏற்பட்ட பிளவுகள் நிலையானதாக இல்லாமல் அக்க்காலங்களில் தோன்றி மறைந்து விடுவனவாக இருந்தன. ஆனால் இப்பொழுது ஏற்பட்ட பெரும் பிளவு தொடர்ந்து பல ஆண்டுகள் நீடித்தால் மத நம்பிக்கை இல்லாத பலா் திருச்சபையையும் போப்புகளையும் தாக்கிப் பேச ஆரம்பித்தனா். எனவே உடனடியாக இப்பிளவை நீக்கப் பல திருச்சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டு இதுபற்றி விவாதிக்கப்பட்டன. கூட்டங்கள் பல நடத்தப்பட்டாலும் அவற்றின் விளைவுகள் பயனுள்ளவையாக இல்லை.

குறிப்பாக கி.பி. 1409 ஆம் ஆண்டில் இத்தாலியில் உள்ள பீசா என்ற நகரத்தில் ஒருபேரவை கூட்டப்பட்டது. அப்பேரவையில் பல கார்டினல்களும், தலைமை மத குருக்களும்கலந்து கொண்டார்கள். அவாகள் ரோமிலிருந்தும் ஆவினானிலிருந்தும் வந்திருந்தார்கள். ரோமிலிருந்த போப்பும், ஆவினானிலிருந்த பொப்பும் இப்பெரவைக்கு வரும்படி அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவா்கள் இருவரும்வரவில்லை. இருப்பினும் இப்பேரவையில் புதிய போப் ஒருவா் தோ்ந்தேடுக்கப்பட்டாா்.

ஆனால் இதனை ரோமிலிருந்த போப்பும், ஆவினானிலிருந்த போப்பும் அனுமதிக்கவில்லை. எனவே, பீசாவில் தோ்ந்தெடுக்கப்பட்ட போப் பீசாவிலேயே தங்கிவிட்டாா். அவரும் தன்னை முறையாகத் தோ்ந்தெடுக்கப்பட்ட போப் என்றும், அதனால் தானே உண்மையான போப் என்றுட’ கூறிக்கொண்டாா். மக்கள் திருச்சபையைத்தாக்கிப் பேச மற்றொரு நல்ல வாய்ப்பு கிடைத்தது.

இந்த அவல நிலை அதன் பின்னரும் ஐந்தாண்டுகள் நீடித்தது. கி.பி.1414 ஆம் ஆண்டில் புனித ரோமானியப் பேரரசா் சிகிஸ்மண்ட் கான்ஸ்டன்ஸ் நகரத்தில் ஒரு பேரவையைக் கூட்டினாா். இது மற்ற பேரவைகளைப் போலல்லாது கிறிஸ்தவமதத்தின் வளா்ச்சியில் அக்கறை கொண்ட அனைவரும் கலந்து கொண்ட சிறப்புமிக்கப் பேரவையாக விளங்கியது. தலைமை மதகுருக்கள், மன்னா்கள் போன்ற அனைவரும் இப்பேரவையில் பங்கு கொண்டனா்.

இதனைக் கண்ட பீசாவில் ஐந்தாண்டுகளுக்கு முன் தோ்ந்தெடுக்கப்பட்ட போய் ஊரைவிட்டே ஓடி விட்டாா். ரோமிலிருந்த போப் பன்னிரண்டாம் கிரேகரி தன்னையும், கி.பி. 1378 ஆம் ஆண்டிலிருந்து ரோமிலிருந்த போப்புகளையும் முறையான, உண்மையான போப்புகள் என்று அங்கீகரித்தால், இப்பேரவை எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தான் கட்டுப்பட்டு நடப்பதாக இப்பேரவையில் பங்கு கொண்டோரிடம் கூறினாா். பேரவையும் அவருடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டது.

இறுதியாக கி.பி. 1417 ஆம் ஆண்டில் பேரவையின் சில பிரதிநிதிகளின் முன்னிலையில் கார்டினல்கள் அனைவரும் ஐந்தாம் மார்டின் என்பவரைக் கிறிஸ்தவ உலகம் முழுவதற்குமான திருச்சபையின் போப்பாகத் தேர்ந்தெடுத்தனர். அவர் இனி ரோமிலிருந்தே பணிபுரிய வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. மேலும் திருச்சபையில் இனி ஏற்படும் பிரச்சினைகளுக்குக் கான்ஸ்டன்ஸ் போலக் கூட்டப்படும் பேரவைகளுக்கு மட்டுமே தீர்வு காணும் உரிமை உண்டென்றும், இனிவரும் போப்புகள் அத்தகைய தீர்வுகளுக்குக் கட்டப்பட்டு நடக்க வேண்டுமெனவம் தீர்மானிக்கப்பட்டது. இது தவிர திருச்சபையில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. போப்பும் மற்ற மதகுருமார்களும் எளிய வாழ்க்கை வாழவேண்டுமெனவும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

கான்ஸ்டன்ஸ் பேரவை தெரிவித்திருந்த பரிந்துரைகள் ஓரளவே பின்பற்றப்பட்டன. எனினும், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜான்விக்ளிப், பொஹிமியாவில் வாழ்ந்த ஜான் ஹஸ் மற்றும் ஒரு நூற்றாண்டு கழித்து வந்த ஜெர்மானிய மத சீர்திருத்தவாதி மார்டின் லூதர் போன்றவர்கள் திருச்சபையிலிருந்த குறைபாடுகள் மக்கள் மத்தியிலே வைத்துத் திருச்சபையின் சீர்திருத்தத்திற்குப் பாடுபட்டார்கள்

**அறிவு இயக்கமும் மறுமலர்ச்சியும்**

## (ENLIGHTENMENT AND RENAISSANCE)

பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், டாமினிக் முனிவரும், பிரான்சிஸ் முனிவரும் கிறிஸ்தவக் குருமார்களும் துறவிகளும் எவ்வாறு மதத் தொண்டு செய்ய வேண்டுமென்பது பற்றி விளக்கியிருந்தனர். முன்னவர் கிறிஸ்தவக் குரமார்ள் மதத்தைப் பரப்பவம், புறச்சமய வாதிகளை எதிர்த்துத் தீவிரமான பிரச்சாரம் செய்ய வேண்டுமெனவும் வற்புறுத்தினார். பின்னவர், இயேசு கிறிஸ்துவைப் போல ஏழையுள் ஏழையாக இருந்து எளியவர்களுக்கும் அன்புடனும் மகிழ்ச்சியுடனும் மக்கள் தொண்டு செய்ய வேண்டுமென வற்புறுத்தினார்.

முதலில் இவர்களுடைய இயக்கம் மத குருமார்களிடையே செல்வாக்குப் பெற்றதெனினும் பதினான்காம் நூற்றாண்டுக்குள் மதகுரமார்களும் ரோமிலுள்ள போப் முதல் திருச்சபையின் எல்லா ஊழியர்களும் ஏழை எளியவர்களைப் புறக்கணித்து, பெருஞ் செல்வத்தைக் குவித்து, ஆடம்பரமான வாழ்க்கையை நடத்த முற்பட்டனர்.அவர்கள் அரசுக்கு வரிகளைச் செலுத்தவும் மறுத்தனர். போப் எட்டாம் போனிபேஸ் (கி.பி. 1294-1303) இங்கிலாந்து அரசர் முதலாம் எட்வர்ட் (கி.பி. 1272-1307) விதித்த வரிகளைத் திருச்சபையைச் சார்ந்தோர் எவரும் செலுத்தக் கூடாதென ஆணையிட்டார்.

திருச்சபையின் பாபிலோனியச் சிறையிருப்பும் (கி.பி. 1305-78) அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பெரும் சமயப்பிளவும் (கி.பி. 1378-1417) அதன் பெருமையையும் வலிமையையும்

பெரிதும் பாதித்தன. இந்த நிலையில் இப்பிறவியின் பாவங்களுக்குத் தேவனின் மன்னிப்புப் பெறவும், அடுத்த பிறவியின் நல்வாழ்வுக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொள்ளவும் திருச்சபைக்குப் பணமும் பொருளும் தரும்படிப் போப்புகள் மக்களை வேண்டினார்.

தவிர போப்புகள் திருச்சபையைச் சார்ந்த பதவிகளைப் பெரும் பணத்திற்கு விற்கத் தொடங்கினர். யார் அதிகமான பணம் கொடுத்தாரோ அவரே பதவியையும், பதவி உயர்வையும் பெற்றார். கீழ் மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை திருச்சபையில் ஊழல்கள் மலிந்திருந்தன. ஆறாம் கிளமென்ட் (கி.பி. 1342-1352) என்ற போப் தவறான முறைகளில் பெரும் பணத்தைச் சேர்த்துக் குவித்தாராம். இவ்வூழல்களையும் குறைபாடுகளையும் எதிர்த்தே பல அறிவியக்க மேதைகள் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்தனர். அவர்களுள் கீழே குறிப்பிடப்பட்வர்கள் மிக முக்கியமானவராவார்.

**ஜான் விக்ளிப் (John Wyelliffe – 1320- 1384 A.D)**

இவர் ஆக்ஸ்போர்டு பல்கலைகழத்தில் பேராசிரியராக இருந்தார். திருச்சபையின் ஊழல்களைப் பற்றியும் குறைபாடுகளைப் பற்றியும் போப் முதல் எல்லா குருமார்கள் நடத்தும் ஆடம்பர வாழ்க்கையைக் கண்டித்தும் மக்களிடையே பிரச்சாரம் செய்தார். அதற்காக கி.பி. 1377 ஆம் ஆண்டில் லண்டனில் இருந்த தலைமை மதகுருவினால் விசாரிக்கப்பட்டு அவர் புறச்சமயவாதி எனக்குற்றம் சாட்டப்பட்டார். அப்பொழுது விக்ளிப்பின் ஆதரவாளர்களுக்கும் மதகுருவின் ஆதரவாளர்களுக்குமிடையே பூசல்கள் ஏற்பட்டன.

விக்ளிப் அவர் உயிருக்கு ஆபத்து வருமென பயமறுத்தப்பட்டார். ஆனால் அவர் பின்வாங்கவில்லை. தன்னுடைய கருத்துக்களை நாடு முழுவதும் பரப்ப ஏழைக்குருமார்கள் என்ற இயக்கத்தையும் நிறுவி வெற்றி கண்டார். இருவரை கிறிஸ்தவர்களின் பனித நூலான விவிலிய நூல் இலத்தீன் மொழியிலேயே இருந்தது. அதனை விக்ளிப் ஆங்கிலத்தின் முதன் முறையாக மொழி பெயர்த்தார் புனித நூலின் கருத்துக்களுக்கு புறம்பாக மதகுருமார்கள் நடந்து கொள்கிறார்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டனர்.

தொடர்ந்து விக்ளிப் பிரச்சாரம் செய்தார். கிறிஸ்தவ மதம் கூறிய பொருண்மை மாற்றக்கோட்பாட்டை (Transustantiation) தவறானது எனக் கண்டித்தார். அதனால் மதவாதிகளிடமிருந்து எதிர்ப்பு அதிகமாகிவிட்டது. ஆக்ஸ்போர்டு பல்கலைகழகம் அவரைப் பதவி விலக்கம் செய்தது. அவர் பின்னர் கி.பி. 1384 ஆம் ஆண்டில் அமைதியாகவே இறந்தார். ஆனால் அவர் விட்டுச்சென்ற கருத்துக்கள் மறையவில்லை.

விக்ளிப்பின் தொண்டர்கள் லொலார்ட்கள் எனப்பட்டனர். அவர் தொடர்ந்து திருச்சபைக்கு எதிராக விக்ளிப்பின் கொள்ளைகளைப் பரப்பி வந்தனர். அவர்களைத் திருச்சபையின் ஆணைக்கேற்ப, இரண்டாம் ரிச்சர்ட் (கி.பி. 1377-1399) நான்காம் ஹென்றி (கி.பி. 1399-1413) போன்ற அரசர்கள் கொடுமைப்படுத்தினர். பலர் நடத்தெருவில்

தூக்கிலிடப்பட்டார்கள்: உயிருடன் தீக்கிரையாக்கப்பட்டார்கள்: அவ்வாறு கொளுத்தப்பட்டார்ளுள் வில்லியம் சாட்டர் சர்ஜான் ஒல்ட்காசல் போன்றவர்கள் குறிப்பித் தகுந்தவர்களாவர்.

**ஜான் ஹஸ் 1373-1415**

பொஹிமியாவில் பிறந்த ஜான்ஹஸ் பிராக் பல்கலைக்கழகத்தில் பயின்று கி.பி. 1396 ஆம் ஆண்டில் எம்.ஏ. பட்டம் பெற்றார். 1398 ஆம் ஆண்டிலிருந்தே கிறிஸ்தவ மதத்திலுள்ள சில மூடப்பழக்க வழக்கங்களை எதிர்த்தும் திருச்சபையிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டியும் பிரச்சாரம் செய்தார். இங்கிலாந்தின் அறிவியக்கச் செம்மல் ஜான் விக்ளிப்பின் நூல்களைத் தெளிவாகப் படித்ததன் பயனாக அவருடைய கொள்ளைகளால் கவரப்பட்டார்.

விவிலியநூலை நன்கு பயின்று அந்நூலிலுள்ள கொள்கைகளுக்கு மாறாக எவ்வாறு திருச்சபையைச் சார்ந்தோர் நடக்கின்றனர் என்பதை மக்களுக்கு எடுத்தக் கூறினார். அதே நேரத்தில் அவர் ஓர் உண்மையான கிறிஸ்தவராக நடந்து கொண்டார். 1402 ஆம் ஆண்டில் பிராக் நகரிலுள்ள பெத்லஹேம் திருக்கோயிலின் சமய போதகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கும் மற்ற இடங்களிலும் அவர் செய்த சொற்பொழிவுகளும் கருத்துரைகளும் பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

1403 ஆம் ஆண்டில் பிராக் பல்கலைக்கழகத்தின் தத்துவம் மற்றும் மதத்துறையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அங்கும் மாணவர்களிடையே அறிவப் பிரச்சராம் செய்தார். மேடைகளிலும் அவர் எழுதிய புத்தகங்களிலும் வெளியிடப்பட்ட கருத்துகள் அவருடைய புகழ் திக்கெட்டும் பரவ உதவின. 1409 ஆம் ஏண்டில் பழராக் பலகலைக்கழகத்தின் முகவராக நியமிக்கப்பட்டார். அதற்கடுத்த ஆண்டு ஹஸ்ஸின் முன்னோடியாகிய ஜான் விக்ளிப்பின் பல புத்தகங்கள் கொளுத்தப்பட்டன. அதே நேரத்தில் ஹஸ் மதவிலக்கம் செய்யப்பட்டார். ஆனால் இதற்குப் பொது மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பராக் பல்கலைக்கழகமும் அதனை வன்மையாகக் கண்டித்தது.

போப் இருபத்து மூன்றாம் ஜான், நேபிள்சின் அரசரை எதிர்த்துச் செய்யும் போர்ச் செலவுக்காகப் பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்கும் வேலையை விரைவுப்படுத்தினார். ஹஸ் இதைக் கடுமையாக எதிர்த்துப் பிரச்சராம் செய்தார். ஹஸ்பிராக் நகரில் வாழக் கூடாதெனப் போப் தடைவிதித்தார். எனவே அவர் கி.பி. 1412 ஆம் ஆண்டில் அந்நகரை விட்டுச் சென்றார்.

ஹஸ் தன் நண்பர்களில் வீடுகளில் வாழ்ந்து வரும் போது பல புத்தகங்களை எழுதினார். அவற்றுள் பதவிகள் விற்பது பற்றி திருச்சபையைப் பற்றி என்ற புத்தகங்கள் புகழ் வாய்ந்தவையாகும். இவை திருச்சபையிலுள்ள குறைகள் எல்லாவற்றையும் மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறின. டி-இக்ளிசியா என்ற பத்தகம் அவருடைய தத்துவத்தை விளக்கும் அரிய நூலாகும்.

1414 ஆம் ஆண்டில் கான்ஸ்டன்ஸ் நகரில் கிறித்தவ மாநாடு கூட்டப்பட்டது. அங்கு ஹஸ் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அங்கு அவர் சென்ற போது உடனே கைது செய்யப்பட்டார். அவர் மீது முப்பத்தொன்பது குற்றங்கள் சாட்டப்பட்டன. அவற்றுள் சிலவற்றை அவர் ஒப்புக் கொண்டாலும் பலவற்றை மறுத்தார். ஆனால் அவருடைய விளக்கத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. கி.பி. 1415 ஆம் ஆண்டு ஹஸ் மரய தண்டனை விதிக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டார். அவருடைய சாம்பல் ரைன் நதியில் வீசியெறியப்பட்டது. இவை அனைத்தும் புனித ரோமானியப் பேரரசர் சிகிஸ்மண்டின் எதிரிலேயே செய்யப்பட்டன.

இவர்களைத் தவிர ரோஜர் பேக்கன் என்ற ஆங்கிலக் கிறிஸ்தவர மதப் பெரியார் கிறித்தவ மதத்தில் குறிப்பாக கிறித்தவ மதக் கல்வியில் செய்ய வேண்டிய மாறுதல்களைப் பற்றி ரோமிலுள்ள தலைமைப் போப்புக்கே பல ஆலோசனைகளை வழங்கினார். அவர், ஆக்ஸ்போர்டு, பாரிஸ் போன்ற பல்கலைக்கழகங்களில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். சிறந்த கிறிஸ்தவமதக் கல்வியாளராகவும், சிந்தனையாளராகவும் விளங்கிளார். அறிவியல் அடிப்படையிலான கிறிஸ்தவக் கல்வியை மக்களுக்கு புகட்ட வேண்டுமென்பது அவருடைய கொள்கையாகும். இவர் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவராவார்.

ஆல்பெர்டஸ் மாக்னஸ் என்பவர் மற்றொரு சிறந்த கிறிஸ்தவ மதக்கல்வியாரராவார். இவரும் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்தார். அனைவரும் கிரேக்க அறிஞர் அரிஸ்டாடிலின் நூல்களைக் கற்று தெளிய வேண்டுமெனப் பிரச்சாரம் செய்தார். அரிஸ்டாடிலின் சில கொள்கைகளுக்குத் திருச்சபை எதிர்ப்பு தெரிவித்தாலும் அந்த எதிர்ப்பு பின்னர் மறைந்தது. மேக்னசுக்குப் புகழ்வாய்ந்த மாணவர்கள் இருந்தார்கள். அவர்கள் அவருடைய கருத்துக்களை ஐரோப்பா முழுவதும் பரப்பினார்கள். இவரும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே வாழ்ந்தவராவார்.

மேக்னசின் மாணவர்களுள் தாமஸ் அக்வினாஸ் குறிப்பிடத்தகுந்தவர். இவர் வெளியிட்ட சும்மா தியாலாஜிகா என்ற புத்தகத்தில் கிறிஸ்தவ மதக்கருத்துக்கள், உயர்ந்த தத்துவங்கள், உளவியல் கருத்துக்கள, உயர்ந்த நீதிகள் மற்றும் அறிவியல் விளக்கற்கள் போன்ற பல்வேறு விதமான நுண்ணிய கருத்துக்களை விளக்கியுள்ளார். இந்நூல் மிச் சிறந்த கல்விக் கருவூலமாகக் கருதப்படுகிறது.

**இத்தாலியில் மறுமலர்ச்சி இயக்கம்**

இடைகாலத்தின் இறுதியில் ஐரோப்பிய மக்களின் எண்ணங்கள் கருத்துகள், செயல்கள் மற்றும் அவர்களால் உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், கலைப் பொருட்கள் முதலியவற்றில் மாறுதலும் புதிய தோற்றமும் ஏற்பட்டன. இத்தகைய புத்துயிர் அளிக்கும் புதியதோர் இயக்கத்திற்கு மறுமலர்ச்சி என்று பெயர். முதலில் கிரேக்க மொழியிலும் இலத்தீன் மொழியிலும் ஏற்பட்ட புதிய இலக்கியப் படைப்பகளுக்கும், கருத்துகளின் வளர்ச்சிகளுக்குமே மறுமலர்ச்சி ஏற்பட்டதென்றாலும் பின்னர் அது ஐரோப்பிய நாடுகள்

முழுவதிலும் முழுவதிலும் கி.பி.15,16 ஆம் நூற்றாண்டுகளில் தொடர்ந்து பல மாறுதல்களை ஏற்படுத்தியது.

இடைக்காலத்தில் கிறிஸ்தவ மதத்தின் தெய்வீக நெறிமுறைகளுக்கும், திருச்சபையின் கடுமையான சில கட்டுப்பாடுகளுக்கும் மக்கள் கட்டுப்பட்டு ஒரு வகையான அடிமை வாழ்க்கையையே நடத்தி வந்தனர். ஆனால் ஜான் விக்ளிப்பின் கருத்துக்கள் ஐரோப்பாவில் பரவப்பரவ, ஜான் ஹஸின் பகுத்தறிவுப் பிரச்சாரம் வலுப்பெற்றதோடு, திருச்சபையில் ஏற்பட்ட பெரும் சயமப்பிளவு மக்களுடைய வாழ்க்கைப் பாதையிலும் எண்ணங்களிலும் கருத்துகளிலும் குறிப்பித்தகுந்த திருப்பம் ஏற்பட்டது.

அதன் விளைவாக தான் ஐரோப்பிய மக்கள், குறிப்பாக இத்தாலியக் கவிஞர்களும் கலைஞர்களும் தாங்கள் எண்ணியவற்றையும் பார்த்தவற்றையும் அப்படியே கலைக் கருவூலகங்களாக உருவாக்கினார்கள். அவர்கள் எந்தெந்தத் துறையில் எத்தகைய புத்துயிரை அளித்தார்கள் என்பதை நாம் அறிதல் வேண்டும்.

**இலக்கியத்துறையில் மறுமலர்ச்சி :**

இத்தாலியில் வாழ்ந்த தாந்தே, பெட்ராக், பொக்காஷியோ முதலானோர் இலத்தீன், மற்றும் கிரேக்க மொழிகளின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். மேலும் கிழக்கு ரோமானியப் பேரரசுக்கு கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துருக்கியர்களால் பேராபத்து ஏற்பட்ட போது பல கிரேக்க அறிஞர்கள் இத்தாலியில் குடியேறிக் கிரேக்க மொழியும் இலக்கியங்களும் அந்நாட்டில் பரவுவதற்கு உதவினார்கள். அத்தகைய உதவியுடன் தான் கீழ்க்கண்ட அறிஞர்கள் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழி வகுத்தார்கள்.

**தாந்தே (Dante)**

பிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்த தாந்தே இத்தாலியக் கவிஞர்களுள் தலைசிறந்தவராவார். மறுமலர்ச்சி இயக்கம் தோன்றுவதற்கு மன்னரே இவர் வாழ்ந்தாரென்றாலும் (கி.பி. 1265-1321) இத்தாலிய இலக்கிய மறுமலர்ச்சிக்குத் தாந்தேயே தொடக்கவிழா நடத்தியவராவார். ஏழைக் குடும்பத்தில் தாந்தே பிறந்தாலும், பொலோனா, பாத்வா ஆகிய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்று இலத்தீன் மொழியில் தேர்ச்சியும், கிறிஸ்தவ மதத்துறைப் படிப்பில் ஆழ்ந்த அறிவும் பெற்றார். அவர் முதலில் எழுதிய இரண்டு சிறப்புமிக்க நூல்களில் (De Monarchia, De Vulgari Eloquentia) புனித ரோமானியப் பேரரசு போன்ற அரசியல் அமைப்பின் மேன்மைகளையும், தாய் மொழியையே எல்லா நிலைகளிலும் பயனபடுத்த வேண்டிய அவசியம் பற்றியும் விளக்கியுள்ளார்.

தாந்தே எழுதிய நூல்களில் தெய்வீக இன்பியல் (Divine Comedy) என்ற நூலே அவருடைய பெருமையையும் புகழையும் பார்முழுவதும் பரப்பியது. செய்யுள் வடிவில்

இயற்றப்பட்ட இந்நூலில் கற்பனை மெருகோடு, நகரம், பாவம் களையுமிடம், சுவர்க்கம் (Hell, Purgatory and Paradise) ஆகிய இடங்களுக்குத் தாந்தேயே யாத்திரை செய்வது போலவும், நரகத்தில் பாவம் செய்த பாவிகள் அனுபவிக்கும் பயங்கரமான துன்பங்கள் பற்றியும், பாவம் களையுமிடத்தில் இறந்தவரின் ஆன்மாக்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெறுவது பற்றியும், சொர்க்கத்தில் புண்ணிய வான்களும் இறைவனும் எவ்வாறு இனிய உலகில் வாழ்கிறார்களென்பது பற்றியும் படிப்போர் உள்ளத்தைக் கவருகின்ற முறையில் எழுதியுள்ளார். இந்நூலில் அவர் விளக்கியுள்ள உயர்ந்த கருத்துக்கள், தத்துவம் மற்றும் மதத் துறைகளுக்கு இலக்கணமாக அமைந்திருக்கின்றன. இந்நூல் இத்தாலியர்களிடையே புதிய எண்ணங்களையும் உணர்வுகளையும் ஏற்படுத்தியது.

**பெட்ரார்க் : கி.பி. 1304 – 1374)**

இத்தாலியில் வாழ்ந்த மனித நலப்பற்றளர்களுக்கெல்லாம் தந்தையாக (Father of Humanists) விளங்கிய பெட்ரார்க் தாந்தேயைப் போலவே பொலொனா, பாத்வா ஆகிய இத்தாலியப் பல்கலைகழங்களில் உயர்கல்வி கற்றார். இவரும் பிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவரேயாவார். இலத்தீன் மொழியின் வளர்ச்சியில் பேரார்வம் காட்டினார். அவர் ஐரோப்பாக் கண்டத்தின் பல மடாலய நூலகங்களில் கேட்பாரற்றுக் கிடந்த இலத்தீன் எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளைத் தேடியெடுத்துப் பாதுகாத்து வெளியட்டார்.

ரோமானியக் கவிஞர் சிசரோவின் இலக்கியப் படைப்புகளை ஒன்று திரட்டி வெளியிட்டு இத்தாலியர்கள் இலத்தீன் மொழியின் பழம் பெருமையையும் கருத்துக் கருவூலங்களையும் உணரச் செய்தார். ரோமுக்கும் கார்த்தேஜுக்கும் நடைபெற்ற இரண்டாவது பியுனிக் போரில், கி.மு. 202 ஆம் ஆண்டில் நடந்த சாமா போர்க்களத்தில் ஹான்னிபாலைத் தோற்கடித்த ரோமானியப் படைத்தளபதி சிபியோ ஆப்ரிகானஸ் என்பவரின் வாழ்க்கை வரலாற்றையும் வெற்றிகளையும் ஆப்பிரிக்கா என்ற நூலில் பெட்ராக் விவரிக்கின்றார். இது இத்தாலியரின் பழம் பெருமையை மக்களுக்கு உணர்த்தியது. இது செய்யுள் வடிவில் இயற்றப்பட்ட சிறந்த காவியமாகும்.

பெட்ராக், தான் பெரிதும் போற்றிப் புகழ்ந்த சில நாத்திக எழுத்தாளர்களுக்கு ஏழுதிய கடிதங்களைத் தொகுத்து அறிமுகமான கடிதங்கள் என்ற தலைப்பில் வெளியிட்டார். இவை அவருடைய கொள்ளைகளை அறிந்து கொள்வதற்குப் பயன்பட்டன. கிரேக்க மொழியையும் அவர் நன்கு கற்க முடியவில்லையாயினும் அம்மொழியையும் கற்க வேண்டியதன் அவசியத்தை அவர் தன் நாட்டு மக்களுக்கு உணர்த்தினார்.

பெட்ரார்க் கிறிஸ்தவ மதப்பற்று மிகுந்தவரோ அல்லது அம்மதத்தை வெறுத்தவரோ அல்லர். எனினும், ஆவினானில் செயல்பட்டு வந்த திருச்சபை உடனடியாக ரோமுக்கு மாற்றப்பட வேண்டுமெனப் பிரச்சாரம் செய்தார். பொட்ரார்க் அகஸ்டைன் முனிவருடன் நடத்திய

கற்பனை உரையாடலை ரகசியம் என்ற நூல் வடிவில் வெளியிட்டார். இது அவர் மனத்தினுள் ஏற்பட்ட ஆன்மீகப் போராட்டத்தின் விளைவாக உருவாகிய நூலாகும். மனித வாழ்க்கையில் மனிதன் எல்லா உலக இன்பங்களையும் துய்க்க வேண்டுமா அல்லது உடலை வருத்தி துறவு வாழ்க்கை வாழ வேண்டுமா என அவர் ஐயுற்றார். இவருடைய பகுத்தறிவுக் கருத்துக்களும், தெள்ளிய இத்தாலிய மொழியில் அவர் தந்த விளக்கங்களும் நூற்றுக்கணக்கான மாணவர்களை அவர்பால் இழுத்தன. அவர்கள் நாடு முழுவதும் பின்னர் அறிவுப் பிரச்சாரம் செய்தனர்.

**பொக்காஷியோ : கி.பி. 1313-1375**

பெட்ராக்கின் மாணவர்களுள் தலையாயவர் பொக்காஷியோ ஆவார். இவர் எழுதிய டெக்கமெரான் என்ற நூலில் பல சுவையான கதைகள் உள்ளன. பிளாரன்ஸ் நகரில் ஒருமுறை பிளேக் நோய் பரவியபோது, அந்நகரை விட்டுச்சென்று, நகரத்துக்கு சில மைல்களுக்கு அப்பால் சீமான்களும் சீமாட்டிகளும் ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்ட கதைகளின் தொகுப்பே இந்நூலாகும். இக்கதைகளின் பாணியிலேதான் ஆங்கில கவிஞர் சாசர் காண்டர்பரிக் கதைகள் என்ற நூலை எழுதினார். பொக்காஷியோ கிரேக்க மொழியைக் கற்று அம்மொழியிலுள்ள இலக்கியங்களை படித்தறிந்தார். இவரைப் பின்பற்றி மற்ற இத்தாலியஅறிஞர்களும் கிரேக்க மொழியைக் கற்று பயன் பெற்றனர்.

**அச்சு இயந்திரம் கண்டப்பிடிக்கப்படுதல்**

கி.பி. 15 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஜெர்மனியிலுள்ள மெய்ன்ஸ் நகரத்தைச் சேர்ந்த கூடன்பெர்க் என்பவரால் அச்சு இயர்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. கி.பி. 1455 ஆம் ஆண்டில் முதன் முறையாகக் கிறிஸ்தவர்களின் விவிலிய நூல் இலத்தீன் மொழியில் அச்சிடப்பட்டது. கி.பி. 1465 ஆம் ஆண்டில் இத்தாலியில் அச்சு இயந்திரம் அமைக்கப்பட்டது. பின்னர் ஒரு சில ஆண்டுகளுக்குள் மேலே குறிப்பிடப்பட்ட இத்தாலிய இலக்கிய மேதைகளின் நூல்கள் பெரும் எண்ணிக்கையில் அச்சிடப்பட்டு ஐரோப்பா முழுவதும் விநியோகிக்கப்பட்டன. அதே வேகத்தில் மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் மறுமலர்ச்சி இயக்கம் பரவியது.

**கலைகளில் மறுமலர்ச்சி**

இத்தலியில் இலக்கியத் துறையில் மட்டுமேயன்றிக் கட்டிடக் கலை, சிற்பம், ஓவியம், இசை போன்ற நுண்கலைகளிலும் புதிய பாணிகளும் தோற்றங்களும் பின்பற்றப்பட்டன. இத்துறைகளுக்குப் புத்துயிரும் மெருகும் ஊட்டியவர்களுள் லியனார்டோ – டாவின்சி (Leonardo – da – vinci – 1452-1519 A.D) மைக்கேல் ஆஞ்சிலோ (Michelangelo 1475-1564 A. D), ராபெல் (Rapaael-1483-1520 A.D.) மற்றும் பொட்டிச் செல்லி (Botticelli) டிடியன் (Titian) பிராமென்டி (Bramante), பெர்னினி (Bernini) போன்றவர்கள் முக்கியமானவர்களாவர்.

**லியனார்டோ டாவின்ஸி**

இவர் பல கலைகளிலும் வல்லுநர் ஆவார். சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், பொறியியல் நிபுணராகவும், மருத்துவராகவும், விஞ்ஞானியாகவும், சிந்தனையாளராகவும் விளங்கினார். அவர் வரைந்த வண்ண ஓவியங்கள் பிளாரன்ஸை அழகுபடுத்துகின்றன. லியனார்டோ வரைந்த ஓவியங்களுள் சாகா வரம் பெற்றது, இயேசுவின் இறுதி உணர்வு என்ற ஓவியமாகும். நம் உடம்பிலுள்ள இரத்தம் உடல் முழுவதும் சுற்றி வருகின்றது என்ற உண்மையை முதல் முதல் கண்டுபிடித்தவர் லியனாரடோ ஆவார். இன்று விண்ணில் பறக்கும் விமானங்கள் எந்தத் தத்துவத்தின் அடிப்படையில் பறக்கின்றன என்பதையும் அன்றே அவர் அறிந்திருந்தார். அவர் அறியாத கலையில்லை. அவர் கரம் படாத இடம் இல்லை. அவர் பிறப்பால் இத்தாலி பெருமை பெற்றது.

**மைக்கேல் ஆஞ்சலோ**

இவர் சிறந்த ஓவியராகவும், சிற்பியாகவும், கட்டிடக்கலைஞராகவும் விளங்கினார். இவர் வரைந்த சுவரோவியங்கள் இன்றும் வாடிகனில் உள்ள சிஸ்டைன் தேவாலயத்தை அழகுப்படுத்துகின்றன. அவற்றுள் இறுதி தீர்ப்பு என்ற ஓவியம் மிகவும் புகழ் வாய்ந்ததாகும். மேலும், ரோமிலுள்ள கம்பீரமான பீடர் முனிவரின் தேவாலயம் மைக்கேல் ஆஞ்சலோவின் திட்டப்படி கட்டப்பட்டதாகும். தூய்மையான சலவைக் கற்களில் சிற்பங்களை வடிப்பதிலும் இவர் வல்லவராக விளங்கினார். இவரும் சிறந்த ஓவியராகவம், கட்டிடக்கலைஞராகவும் விளங்கினார். பீடர் முனிவர் தேவாலயம் உருவாவதற்கு மைக்கேலுடன் பணியாற்றியவர்களுள் இவரும் ஒருவராவார். வாடிகன் அரண்மனையிலுள்ள பல அறைகளில் தீட்டப்பட்ட ஓவியங்கள் இராபெல்லின் கைவண்ணமேயாகும். எல்லாவற்றையும் விட இவர் தீட்டிய மேரி அன்னையின் ஓவியங்களே மிகவும் புகழ் வாய்ந்தவையாகும். மேலே குறிப்பிடப்பட்ட கவிஞர்களும் கலைஞர்களும் பிளாரன்ஸ் நகரத்தைச் சேர்ந்தவர்களாவர். எனவே தான் இத்தாலியில் பிளாரன்ஸ் நகரமே மறுமலர்ச்சி இயக்கத்தின் பிறப்பிடமாகக் கருதப்படுகிறது. இத்தாலியின் பல்வேறு நகரங்களில் ஓவியம், சிற்பம் முதலான நுண்கலைப் பள்ளிகளும் நடத்தப்பட்டன.

**மற்ற நாடுகளில் மறுமலர்ச்சி இயக்கம்**

இத்தாலியைத் தவிர வேறு பல ஐரோப்பிய நாடுகளிலும் கி.பி. 15,16 ஆம் நூற்றாண்டுகளில் இலக்கியம், விஞ்ஞானம் மற்றும் கலைத்துறைகளில் புதிய படைப்புகளும், பாணிகளும் பின்பற்றப்பட்டு மறுமலர்ச்சி இயக்கம் வேகமாகப் பரவியது.

## கொள்ளை நோய் (PLAGUE)

கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கொள்ளை நோய் என்று சொல்லப்பட்ட கொடுமையான வியாதி ஐரோப்பாக்கண்டம் முழுவதிலும் பரவி பெரும் இழப்பை

உண்டாக்கியது. இது ஒரு வகையான பயங்கர பிளேக் (Plague) என்று கருதப்படுகிறது. இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் இறந்துவிடுவர். கொள்ளை நோயினால் தாக்கப்பட்டவரின் உடல் உடனடியாகக் கருமை நிறமாக மாறி விடும். உடல், முழுவதும் கருமையான, பார்ப்பதற்கு அருவெறுப்பான, கொப்புளங்கள் தோன்றும். தீயினால் சுடுவது போன்ற எரிச்சலும், தணியாத தாகமும், நாக்கில் வறட்சியும் ஏற்படும். இவற்றைத் தொடர்ந்து கடுமையான காய்ச்சலும், நுரையீரல்களில் கட்டிகளும் வந்து பெருமளவு இரத்தம் வெளியேற்றப்படும். அடுத்த சில மணி நேரத்திற்குள் இந்நோயினால் தாக்கப்பட்டவர் இறப்பது உறுதி. இவ்வளவு கொடுமையான இக்கொள்ளை நோய் ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 1348 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1351 ஆம் ஆண்டு வரை பரவி மக்களிடையே பெரும் அச்சத்தை உண்டாக்கியது.

முதலில் இக்கொடு நோய் கி.பி.1333-1348 ஆம் ஆண்டுகளுக்கிடையே சீனாவில் தான் தோன்றியது. அவ்வாண்டுகளில் அந்நாட்டில் வறட்சியும், பஞ்சமும், நில அதிர்ச்சிகளும் பின்னர் வெள்ள பெருக்கங்களும் ஏற்படச் சொல்லிமுடியாத இழப்புகளை உண்டாக்கின. அதன் பின்னரே கொள்ளை நோய் ஐரோப்பாவிற்குப் பரவியதாகக் கருதப்படுகிறது.

இவ்வளவு கொடுமையான நோய் தோன்றக் காரணம் என்ன என்பதை அறிவியல் மற்றும் மருத்துவத்துறை அறிஞர்களாலும் திட்டவட்டமாகச் சொல்ல இயலவில்லை. எனினும், நில அதிர்ச்சிகளினால் வெளியேற்றப்பட்ட பயங்கரமான நச்சுக்காற்று மக்களுடைய சுவாச உறுப்புகளைத் தாக்கி உடனடி விளைவுகளைத் தோற்றுவித்ததென அவர்கள் கருதுகின்றனர். அதுபோலவே அந்நில அதிர்ச்சிகளின் விளைவாகக் குடிக்கும் தண்ணீரில் நச்சுக் கிருமிகள் பரவிக் கொள்ளை நோய் பரவுவதற்குக் காரணமாய் இருந்திருக்கக் கூடுமென அவர்கள் நம்புகின்றனர். கொள்ளை நோய் வருவதற்குக் காரணம் எதுவாயினும் அதன் விளைவுகள் தாம் பயங்கரமானவையாக இருந்தன.

பதினான்காம் நூற்றாண்டில் சீனாவுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே நிலவழி வாணிகம் பெருமளவு நடைபெற்று வந்தது. நூற்றுக்கணக்கான ஐரோப்பிய வணிகர்கள் சீனாவுக்கு வந்து சென்றார்கள். இவர்கள் மீண்டும் தாயகம் திரும்பும் போது அவர்கள் மூலமாகச் சீனாவிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இக்கொள்ளை நோய் பரவியதாகவும் வேறுபல வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.

இக்கூற்றை உறுதி செய்யும் வண்ணம் ஐரோப்பாவில் முதன் முதலில் கருங்கடலின் வடபகுதியில் இந்நோய் தோன்றியது. அங்கிருந்து இந்நோய் தோன்றியது. அங்கிருந்து கான்ஸ்டான்டி நோபிளிலும் பின்னர் இத்தாலியிலும் பரவியது. அதைத் தொடர்ந்து ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, சுவீடன் முதலிய நாடுகளில் பரவிப் பின்னர் ஐரோப்பிய நாடுகள் எல்லாவற்றையும் இக்கொள்ளைநோய் தாக்கியது.

அதனால் லட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். சீனாவில் ஒரு கோடியே முப்பது லட்சம் மக்களும் கொள்ளை நோய்க்குப் பலியாயினர். ஐரோப்பாவில் இருந்த பதினைந்து முக்கிய நகரங்களில் மூன்று இலக்கம் மக்களும், ஜெர்மனியில் மட்டும் பன்னிரண்டு லட்சம் மக்களும் மாண்டனர். இத்தாலியில் அதன் மக்கள் தொகையில் பாதிப்பேர் உயிரிழந்தனர். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் இறந்தவரின் எண்ணிக்கை ஐரோப்பாவில் மட்டும் சுமார் இரண்டரைக் கோடி இருக்குமெனக் கணக்கிடப்பட்டது.

ஐரோப்பாவில் எங்கு பார்த்தாலும் பிணக்குவியல்கள் காணப்பட்டன. காற்று துர்நாற்றமடைந்து நச்சுக் கிருமிகள் பரவின. மருத்துவ வசதிகள் அதிகமில்லாத அக்காலத்தில் இந்த நோய் பல இடங்களில் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. பிணங்கள் எரிக்கப்படாமல் நதிகளில் வீசப்பட்டன. ஐரோப்பிய ஆறுகள் லட்சக்கணக்கான பிணங்களை அடித்துச் சென்று மத்தியதரைக்கடல், கருங்கடல், மற்றும் வடகடல் போன்ற கடல்களில் நிரப்பின. இக்கடல்களில் பிணங்கள் மிதந்து கொண்டிருந்த காட்சி கோரக்காட்சியாக இருந்தது.

மக்கள் செய்கின்ற பாவங்களினாலே இத்தகைய கொடுமை இவ்வுலகில் நடக்கின்றது எனச்சில சமயவாதிகள் நம்பினர். அதனால் ஹங்கேரி, ஜெர்மனி போன்ற நாடுகளில் பிறருடைய பாவங்களைக் களைவதற்காகத் தங்கள் உடலை வருத்தி இறைவனின் மன்னிப்பைக் கோரிய பிளாஜிலென்ட்கள் (Flagellants) என்னும் இயக்கத்தினர் தோன்றினார். இவர்கள் பின்னர் போலந்து, பொஹிமியா, சைலீஷியா, பிளாண்டர்ஸ் போன்ற பகுதிகளிலும் பரவித் தங்கள் தொண்டில் தொடர்ந்து ஈடுபட்டனர்.

இக்கொள்ளை நோய்க்குக் காரணம் யுதர்களே எனப் பல கிறிஸ்தவர்கள் கருதினார்கள். குடிதண்ணீருக்காகப் பயன்படுத்தப்பட்ட பொதுக் கிணறுகளிலும், குளங்களிலும் நதிகளிலும் யுதர்கள் நஞ்சைக் கலந்து விட்டார்கள் எனக் கிறிஸ்தவர்கள் நம்பினார்கள். அதனால் ஐரோப்பா முழுவதும் கிறிஸ்தவர்கள் யூதர்களைத் துன்புறுத்தினார்கள். அந்த இனத்தையே அழித்து விட வேண்டும் என அவர்கள் தீர்மானித்தார்கள். எனவே ஆயிரக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டார்கள். மெய்ன்ஸ் (Mayence) நகரத்தில் மட்டும் பன்னிரண்டாயிரம் யூதர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இத்தகைய கொடுமையிலிருந்து தப்புவதற்கு ஆயிரக்கணக்கான யூதர்களைத் தீயிலிட்டும் சித்ரவதை செய்து கொலை செய்தனர். இத்தகைய கொடுமையிலிருந்து தப்புவதற்கு ஆயிரக்கணக்கான யூதர்கள் கூட்டம் கூட்டமாகத் தங்களைத் தாங்களே தீயிலிட்டுக் கொண்டு உயிரிழந்தனர்.

ஐரோப்பாவில் ஏற்பட்ட இழப்புகளையும் விளைவுகளையும் விட இங்கிலாந்தில் தான் இக்கொள்ளை நோய் பெரும் இழப்பையும் பல விளைவுகளையும் உண்டாக்கியது.

**இங்கிலாந்தில் கொள்ளை நோய்:**

இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் நூறாண்டுப் போர் நடைபெறும் போது கி.பி. 1347 ஆம் ஆண்டிலிருந்து 1350 ஆம் ஆண்டு வரை இங்கிலாந்தில் இக்கொள்ளை நோய் பரவியதால் அந்நாட்டின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் அந்நோய்க்கு இரையாயினர். அதனால் இங்கிலாந்தின் வரலாற்றில் மிக முக்கியமான விளைவுகளும் ஏற்பட்டன.

மூன்றாம் எட்வர்ட் (1327-1377) இங்கிலாந்தின் அரசராக இருந்த பொழுது இக்கொள்ளை நோய் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து இங்கிலாந்துக்குப் பரவியது. தோன்றிய இடத்தில் அதிக இழப்பு ஏற்பட வில்லையெனும் பரவிய இடத்தில் பெரும் இழப்பு ஏற்பட்டது. இது இங்கிலாந்தின் எல்லபப் பகுதிகளிலும் பரவியது. ஏறக்குறைய நான்காண்டுகள் அத்தீவு சொல்லொணாத்துயரில் ஆழ்ந்தது. நார்விச் என்ற கிறிஸ்தவ மாவட்டத்தில் மட்டும் அங்கிருந்த குருமார்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் இறந்து விட்டனர்.

ஆல்பன்ஸ் முனிவரின் மடாலயத்திலிருந்த அறுபது துறவிகளில் நாற்பத்தேழு துறவிகளும் இந்நோய்க்குப் பலியாயினர். கற்றறிந்த, தூய்மையாக இருக்கும் கிறித்தவத் துறவிகளுக்கே இக்கதியென்றால் கல்வியறிவு இல்லாத, சுத்தமில்லாத ஏழைகள் வாழும் கிராமப் புறங்களிலும், மக்கள் தொகை மிகுந்த நகரங்களிலும் இந்நோயின் கொடுமை எவ்வாறு இருந்திருக்குமென்பதை விளக்க வேண்டியதில்லை.தொண்டு செய்யும் கிறித்தவத்துறவிகள் பெரும்பாலும் இறந்துவிட்டனர். மருத்துவச் சிகிச்சை அளிக்கக் கூடத்தகுதியும் பயிற்சியும் பெற்ற ஆட்கள் இல்லை. இறந்தவர்களைப் புதைக்கவோ எரிக்கவோகூட இடமும் தேவையான எரிபொருளும் கிடைக்கவில்லை. இந்நோயினால் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்த அடுத்த ஐம்பது ஆண்டுகள் பிடித்தன. இதனால் ஏற்பட்ட விளைவுகள் இங்கிலாந்தின் வரலாற்றை மாற்றியமைத்தன.

நூறாண்டுப் போரில் ஈடுபட்ட மூன்றாம் எட்வர்ட் கிரெசி வெற்றிக்குப் (1346) பின்னர் உடனடியாகத் தொடர்ந்து போரை நடத்த முடியவில்லை. அதற்கடுத்த ஆண்டே கொள்ளை நோய் இங்கிலாந்தைத் தாக்க ஆரம்பித்தது. அவ்வெற்றிக்குப் பிறகு பத்து ஆண்டுகள் அவரால் போரில் ஈடுபட முடியவில்லை. ஒருவேளை இக்கொடிய நோய் இங்கிலாந்தைப் பிடிக்காமல் இருந்திருந்தால் பிரான்சு முழுவதையும் மூன்றாம் எட்வான்ட் வென்றிருக்கக்கூடும். இங்கிலாந்து கி.பி. 14 ஆம் ஆண்டிலேயே மிகப்பெரிய வல்லரசாக மாறியிருந்திருக்கும். இதைவிட அடுத்த சில ஆண்டுகளுக்குள் நிகழ்ந்த உழவர் கலகமே அந்நோயின் மிக முக்கியமான விளைவாகும்.

### உழவர் கலகம் (**Peasant's Revolt**) 1381

இங்கிலாந்தை வென்ற நார்மானியர்கள் அந்நாட்டில் நிலமானிய முறையைப் புகுத்தினர். அம்முறை அந்நாட்டில் நிலச்சார்பு அடிமை ஊழியரை உருவாக்கியது. காலப்போக்கில் அவ்வடிமை ஊழியரின் நிலை இரக்கத்துக்குரியதாக இருந்தது. அடிமைகள் இனம் என்று ஒரு பெரும் வருக்கமே உருவாகிவிட்டது. அவர்கள் நிரந்தரமாகப் பிரபுக்களிடம் அடிமை

வேலை செய்து அப்பிரபுக்களின் நிலத்திலேயே தங்கவேண்டியிருந்தது. ஒரு வாரத்தில் குறைந்தது ஐந்து அல்லது ஆறு நாள்கள் நிலத்தில் உழைக்க வேண்டியிருந்தது. சிலநேரங்களில் அடிமைகளின் வேலையில் குறைபாடுகள் இருந்தாலோ, பிரபுவின் விருப்பு வெறுப்புகளுக்குத் தகுந்த முறையில் அடிமைகள் நடந்து கொள்ளாவிட்டாலோ அவர்களைப்பிரபு வேலையிலிருந்து நீக்கிவிடுவார்.

எனவே, பிரபுவின் நல்லெண்ணத்தைப் பெற அடிக்கடி அடிமைகள் பிரபுக்களுக்குச் சில பரிசுப் பொருட்களை தருவார்கள். கொள்ளை நோய் வருவதற்கு முன்னால் மக்கள் தொகை மிகுந்திருந்தால் பிரபுக்களுக்கு வேலையாட்கள் வேண்டிய அளவு கிடைத்தார்கள். நிரந்தரமாகப் பிரபுக்களிடமே இருக்கின்ற அடிமைகளும் வேலையில்லாத நாட்களுக்கான பணத்தைப் பிரபுவுக்குக் கட்டித்தர வேண்டும். அல்லது வேலை இருக்கும் போது ஓர் அடிமை வேலை செய்ய விரும்பவில்லையென்றால் உழைப்புக்குப் பதில் பணத்தைப் பிரபுவுக்குக் கொடுத்துவிடலாம். உழைப்பு ஈட்டுமுறை என்று இது வழங்கப்பட்டது. இது ஒரு விதத்தில் இருத்தரத்தாருக்கும் பயனுள்ளதாகவே இருந்தது.

ஆனால், இக்கொடும் கொள்ளை நோய் இங்கிலாந்தின் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கை, அதுவும் குறிப்பாக உழைப்பாளர் சமுதாயத்தில் மூன்றில் இரண்டு பங்கு மக்களை விழுங்கிவிட்டது. அதன் விளைவாகப் பிரபுக்களின் நிலங்களில் உழைக்கவும் அறுவடை செய்யவும் தொழிலாளர்கள் கிடைக்காமல் போயினர். புதிதாகப் பயிர் செய்யவும் முடியவில்லை. விளைந்த பயிரை அறுவடை செய்யவும் ஆட்கள் கிடைக்கவில்லை. நகரங்களிலும் நாட்டுப்புறங்களிலும் தானியங்கள் கிடைக்கவில்லை. விகைள் உயர்ந்துக் கொண்டே சென்றன. தொழிலாளர்களின் கூலியும் உயர்ந்து கொண்டே சென்றது.

நகரங்களைவிட நாட்டுப்புறங்களில் தொழிலாளர்கள் கிடைக்காத பிரச்சினை பெரிதாகிவிட்டது. பிரபுக்களிடம் நிரந்தரமாக இருந்தவர்களுள் பெரும்பாலார் இறந்துவிட்டனர். மற்றத் தொழிலார்களும் மிக அதிகமாக ஊதியத்தைக் கேட்டார்கள்.

இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் பெரும் நிலப்பிரபுக்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். அவர்கள் சட்டத்தின் மூலம் விலை உயர்வையும், ஊதிய உயர்வையும் தடுத்து விடலாம் என்று எண்ணினார்கள். அவர்கள் 1349, 1351, 1357, 1360 ஆம் ஆண்டுகளில் பல்வேறுவிதமான தொழிலாளர் சட்டங்களை இயற்றினார்கள். அவற்றின்படித் தொழிலாளர்கள் 1347 ஆம் ஆண்டுக்கு முன்னர் நடைமுறையில் இருந்த ஊதியத்தையே பெற வேண்டுமென்றும், அதற்கு அதிகமாகக் கேட்கும் தொழிலாளர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அச்சுறுத்தப்பட்டார்கள். அதே போல பிரபுக்களும் எக்காரணத்தைக் கொண்டும் கொள்ளை நோய்க்கு முன்னர் வழங்கப்பட்ட ஊதியத்தைவிட அதிகமாகத் தரக்கூடாதெனவும், இவ்விதியை மீறினால் பிரபுக்களும் சட்டப்படிக் குற்றவாளிகள் ஆவார்களென்றும் ஆணையிடப்பட்டார்கள்.

ஆனால், இவையெல்லாம் சட்டத்தின் மூலம் சீர்படுத்தக்கூடிய பிரச்சினைகள் அல்ல. எந்தப் பிரபுக்கள் சட்டங்களை இயற்றினார்களோ, அதே பிரபுக்கள் அச்சட்டங்களை மீறி நடக்க ஆரம்பித்தார்கள். ரகசியமாகத் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கொடுத்துத் தங்கள் நிலங்களில் அறுவடை போன்ற உடனடி வேலைகளைச் செய்து கொண்டார்கள். இதைத் தடுக்க இன்னும் கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. இச்சட்டங்கள் இருதாரருக்கும் சாதகமாக இல்லமால் போய்விட்டன.

வேலையாட்கள் கிடைக்காததால் பிரபுக்கள் தானியங்களை விளைவிப்பதை விடுத்து தங்கள் நிலங்களைப் புல் தரைகளாக மாற்றி ஆடுமாடுகளை வளர்க்க ஆரம்பித்தார்கள். இறந்தவர் போக இருக்கின்ற உழவர் பெருமக்கள் வேலையுமின்றிப் பட்டினிச் சாவு சாக வேண்டியிருந்தது. அவர்கள் பிரபுக்களிடம் அடிமைகளாக இருக்கவும் விரும்பவில்லை. பிரபுக்களுக்கும் உழவர்களுக்குமிடையே மனக்கசப்பும் வெறுப்பும் வளர்ந்து கொண்டே சென்றன. இந்த நேரத்தில் கென்ட் நகரத்தைச் சேர்ந்த மதகுரு ஜான்பால் என்பவர் பிரபுக்களும் அடிமைகளும் என்ற இருவேறு வருக்கங்கள் இருப்பதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். அடிமைகள் எல்லா உரிமைகளையும் பெற்றால் தான் இங்கிலாந்து முன்னேற முடியுமென அறிவுப்பிரச்சாரம் செய்தார். அவருடைய கருத்துக்கள் இங்கிலாந்து முழுவதும் பரவின.

எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றுவது போல இத்தகைய இக்கட்டான நிலையில் 1377 ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசர், மக்கள் மீது தலைவரி விதித்தார். அதை மக்கள் எப்படியோ தாங்கிக் கொண்டனர். மீண்டும் 1380 ஆம் ஆண்டில் அரசர் இரண்டாம் ரிச்சர்ட் தலைவரியை விதித்தார். ஏழை எளியவர்களால் இதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வாரம் முழுவதும் பொருளீட்டி வரியாகத் தான் செலுத்த வேண்டியிருந்தது. வயிற்றைக் காய வைத்து, வரியைக் கட்டிவிட்டு அவர்களால் வாளா இருக்க முடியவில்லை. 1381 ஆம் ஆண்டு உழவரின் கலகம் ஆரம்பமாகிவிட்டது.

தலைநகர் லண்டனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் கலகம் பயங்கரமாக நடைபெற்றது. குறிப்பாக கென்ட் மக்களாலும், கிழக்கு ஆங்கிலியா பகுதியினராலும், மிகப்பயங்கரமாக கலகம் செய்யப்பட்டது. கென்ட் கலகக்காரர்கள் வாட் டைலர் தலைமையில் தலைநகரை நோக்கிப் பறப்பட்டார்கள். வழியில் பிரபுக்களின் பண்ணை வீடுகளையும், அடிமைகளின் பட்டியல்களையும் தீக்கிரையாக்கினர். பல வழக்கறிஞர்களைப் பிடித்துத் தூக்கிலிட்டார்கள். ஏனெனில், அவர்கள் உழவர்களின் எதிரிகளாகக் கருதப்பட்டார்கள்.

இங்கிலாந்தின் அரசர் இரண்டாம் ரிச்சர்ட் அப்பொழுது பதினாறு வயது நிரம்பிய இளைஞர். அரசாங்க அலுவல்கள் அனைத்தும் அவருடைய சிற்றப்பா ஜான் காண்ட்னாலேயே செய்யப்பட்டு வந்தன. இந்த நேரத்தில் அவர் தலைநகரில் இல்லாமல் வடக்கே சென்றுவிட்டிருந்தார். அவருடைய அரண்மனையைக் கலகக்காரர்கள் தகர்த்தெறிந்தார்கள்.

தலைவரியைப் போடும்படி ஆலோசனை வழங்கிய கருவூலக்காப்பாளரைக் கொலை செய்துவிட்டு, காண்டர்பரியின் தலைமை மதகுருவையும் கொலை செய்தனர். அடிமைத்தனத்தளையிலிருந்து தங்களை விடுதலை செய்யும்படி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

எனவே, அரசர் காலம் கடத்தாது அடிமைகளை விடுதலை செய்து, இனி இங்கிலாந்தில் அடிமைத்தனம் இருக்காது என்று பிரகடப்படுத்தினார். அரசர் எந்தச்சூழ்நிலையிலும் உழவர் குடிமக்களின் நலனுக்கே பாடுபடுவதாக உறுதியளித்தார். கலகக்காரர்கள் அமைதியாக கலைந்து சென்றனர். அதன்பின்னரும் கிழக்கு மாவட்டங்களில் கலகங்கள் தொடர்ந்தன. ஆனால் அவை அடக்கப்பட்டன.

அரசர் அடிமைகளை விடுதலை செய்து ஆணையிட்டார் என்றாலும், அவ்வாறு அவர் செய்வதற்கு உரிமையில்லையெனச் சில பிரபுக்கள் வாதிட்டனர். ஏனெனில் அடிமைகளும் ஒரு வகையான சொத்து போலவே கருதப்பட்டார்கள். அந்தச் சொத்தை அவர்களிடமிருந்து பிரிப்பதற்றுச் சட்டப்படி அரசருக்கு அதிகாரமில்லை என்று அவர்கள் வாதிட்டார்ள். ஆனாலும் காலப்போக்கில் இங்கிலாந்தில் அடிமைத்தனம் ஒழிந்தது.

பெருநிலப் பிரபுக்கள் தங்கள் நிலங்களை மேய்ச்சல் புல்தரைகளாக மாற்றி, ஆடுகளை அதிக அளவில் வளர்க்க ஆரம்பித்தார்கள். அதனால் இங்கிலாந்தின் கம்பளி உற்பத்திப் பெருகி உலக நாடுகளில் ஒரு முக்கியமான கம்பளி உற்பத்தி நாடாக அது உருவாயிற்று.

மேலும் பண்ணை முறை மறைந்து, எல்லாரும் சுதந்திர மக்களாக வாழத்தலைப்பட்டார்கள். இவை கொள்ளை நோயினால் ஏற்பட்ட விளைவுகள் ஆகும்.

## இடைக்காலத்தின் இறுதியில் ஜெர்மனியும், இத்தாலியும்
## (GERMANY AND ITALY DURING THE END OF MIDDLE AGE)

நிலமானிய முறை நிலவியிருந்த இடைக்கால நூற்றாண்டுகளில் இங்கிலாந்தும், பிரான்சும் பல கோமகனாட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. பிரபுக்களே வலிமை பெற்றிருந்தனர்.அதிகாரங்களும் அவர்களாலேயே நிர்யிக்கப்பட்டன. அந்நாடுகளில் பதினைந்தாம் நூற்றாண்டுகளில் மக்களிடையே தேசிய உணர்வு ஏற்பட்டது. அரசனே எல்லா அதிகாரங்களையும் பெற்றுத் தனி நாடுகளாக அவை உருவாகிக் கொண்டு வந்தன. அதன் காரணமாக அங்கெல்லாம் அரசியல் ஒருமைப்பாடு ஏற்பட்டது.

அதற்கு மாறாக ஜெர்மனியும், இத்தாலியும் ஒரு பெரும் பேரரசராக ஒரே அரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலமும் உண்டு. எடுத்துக்காட்டுக்குப் புனித ரோமானியப் பேரரசர் மூன்றாம் ஆட்டோ காலத்தில் ஜெர்மனி முழுவதும் இத்தாலியின் பெரும்பகுதியும் ஒருங்கிணைந்து ஒரே பேரரசரின் கீழ் இருந்தன. பதினான்னு பதினைந்தாம் நூற்றாண்டுகளில்

இந்நிலை மாறி பிளவுகள் ஏற்பட்டன. அவைகளுக்குள்ளே சில நேரங்களில் உள்நாட்டுப் போர்களும் பூசல்களும் ஏற்பட்டன.

### ஜெர்மனி

ஜெர்மனி ஒரு நாடாக இருந்தும் ஒன்றுபடாததற்கு காரணம் அங்கு ஒவ்வொரு முறையும் அரசர் பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையேயாகும். அவ்வரசர்கள் தங்களை அகஸ்டஸ், சீசர், கான்ஸ்டன்டைன், மற்றும் ஷார்லமெனின் வழி வந்தவர்களாகக் கருதினார்களே தவிர ஜெர்மனி அரசரென்ற முறையில் அதன் ஒருமைப்பாட்டுக்கும் வளர்ச்சிக்கும் பாடுபடவில்லை. அவர் அரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புனித ரோமானியப் பேரரசில் ஜெர்மனியும் பொஹிமியாவும் இத்தாலியும் அடங்கியிருந்தன. இவற்றைக் கட்டிக்காப்பது அவ்வளவு எளிதாக இல்லை.

புனித ரோமானியப் பேரரசருக்கும் ரோம் போப்புக்கும் அடிக்கடிப் பதவிச் சின்னப் போராட்டம் நடந்து வந்தது. இதனால் பிரபுக்கள் மற்றும் மக்கள் ஒருங்கிணையும் வாய்ப்பினை இழந்தார்கள். அத்தகைய முயற்சியில் அரசரும் ஈடுபடவில்லை. ஹோயன்ஸ்டாபென் வம்சத்துப் பேரரசர் இரண்டார் பிரெடிக் (1220-1250) இறந்த பின்னர் ஜெர்மனியையும், இத்தாலியையும் இணைத்து ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்யும் திறமை பெற்ற அரசர் எவரும் இல்லாமற் போயினர். அவருக்குப் பின் வந்த அரசர்கள் அத்தகைய முயற்சியில் ஈடுபட்டார்களெனினும் அதில் தோல்வியே கண்டனர். இங்கிலாந்திலும் பிரான்சிலும் மக்களிடையே தேசிய உயர்வை அரசர்கள் ஊட்டினர். அதனை ஜெர்மானிய அரசர்கள் செய்யத் தவறிவிட்டனர்.

கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் ஜெர்மனியில் நூற்றுக்கும் மேற்பட்ட சிறு நிலப்பகுதிகளிருந்தன. அவற்றைக் கோமகன்களும் கவுண்ட்களும், மார்க்கிரேவ்களும், நைட் வீரர்களும் ஏறத்தாழ முழு உரிமை பெற்ற சுதந்திர ஆட்சியாளர்களாவே அவர்களுடைய நிலப் பகுதிகளை ஆண்டு வந்தனர். அவர்கள் இன்னும் அதிகமான உரிமைகளையும் சுதந்திரத்தையும் பெற விரும்பினார்களேயன்றி மத்திய அரசு வலுப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. சில நேரங்களில் முழு உரிமை பெற்ற சமயச் சார்புடைய சில நாடுகள் தோன்றியிருந்தன. கொலோன் , மெயின்ஸ் , டிரையர் முதலானவை அவ்வகையைச் சார்ந்தவையாகும். இதே போலச் சமயச் சார்பு இல்லாத, மற்றும் முழு உரிமை பெற்ற பல தனியரசுகளும் இருந்தன.

மேலும் ஹோயன்ஸ்டாபென் வமிசத்துக் கடைசி அரசர் நான்காம் கான்ராட் இறந்த கி.பி. 1253 ஆம் ஆண்டிலிருந்து 1273 ஆம் ஆண்டுவரை பதினெட்டு ஆண்டுகள் ஜெர்மனிக்கு அரசர் என்பவர் எவருமே இல்லை. ஜெர்மானியப் பிரபுக்கள் அல்லது சிற்றரசர்கள் அவ்வளவு பொறுப்பின்றி நடந்து கொண்டார்கள். இக்காலத்தைப் பெரும் இடைவெளிக் காலம் என்று வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

1273 ஆம் ஆண்டில் சுவாபியாவைச் சேர்ந்த ஹாப்ஸ்பர்க் வமிசத்து இளவரசர் ருடால்ப் என்பவரைப் புதிய பேரரசராக ஜெர்மானியச் சிற்றரசர்கள் தேர்ந்தெடுத்தனர். அவர் சுவாபியாவின் வளர்ச்சிக்குப் பாடுபட்டாரேயன்றிப் பொதுவாக ஜெர்மனியின் இணைப்புக்கு உழைக்கவில்லை. மேலும் அவர் தன் வழிவரும் வாரிசுகளையே ஜெர்மனியின் அரசர்களாக்க முயன்றனர். ஆனால் சிற்றரசர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கும் முறையே இருக்க வேண்டுமென வற்புறுத்தினார்.

எனவே, அவர் வழிவந்த இளவரசர்களுக்கும், பவேரியாவைச் சேர்ந்த விட்டல்ஸ் பாக் என்ற குடும்பத்துச் சிற்றரசர்களுக்கும் மற்றும் லக்சம்பர்கைச் சேர்ந்த கோமகன்களுக்கும் அடிக்கடிச் சண்டைகள் நடைபெற்றன. இவை ஜெர்மனியின் இணைப்பைத் தடுத்தன. கி.பி. 1308 ஆம் ஆண்டில் லக்சம்பர்கைச் சேர்ந்த ஏழாம் ஹென்றி என்பவரைப் பேரரசராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் புனித ரோமானியப் பேரரசின் பழம் பெருமையை நிலைநாட்ட , இத்தாலியை வெல்ல முயன்றார். ஆனால் அம்முயற்சியில் பெருந்தோல்வி கண்டார். ருடால்பைப் போலவே இவரும் தன்வழி வாரிசுகளை ஜெர்மனியின் அரசர்களாக்க முயன்றார். மற்றும்,தன்னுடைய மகனுக்கு பொஹிமியாவின் இளவரசியை மணம் செய்வித்துப் பொஹிமியாவை லக்சம்பர்க்கின் ஆட்சிக்குட்படுத்தினார்.

ஜெர்மானியச் சிற்றரசர்கள் தங்கள் ஆணைப்படி இயங்கும் அரசனையே விரும்பினர். ஏழாம் ஹென்றி இறந்தவுடன் 1314 ஆம் ஆண்டில் பவேரியாவைச் சேர்ந்த நான்காம் லூயியை ஜெர்மனியின் பேரரசராகத் தேர்ந்தெடுத்தனர். அவருடைய காலத்திலும் (கி.பி. 1314-1347) அவருக்கும் போப்புக்கும் கசப்பான உறவுகள் வளர்ந்தன. இதைத்தான் ஜெர்மானியச் சிற்றரசர்களும் விரும்பினர் போலும். அவர் இறந்தவுடன் லக்சம்பர்க் - பொஹிமியக் குடும்பத்தைச் சேர்ந்த நான்காம் சார்லஸ் என்பவர் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவரும் இத்தாலியை வெல்ல முற்பட்டு அதில் தோல்வி கண்டார். அவருடைய ஆட்சிகாலத்தில் முக்கியமானதொரு ஆணையை வெளியிட்டார். அது தங்க ஆணை (Golden Bull- 1356) என அழைக்கப்படுகின்றது. அதன்படி ஜெர்மானியப் பேரரதைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஏழு ஆட்சியாளர்களுக்கு அளிக்கப்பட்டது. அவ்வேழுவருள் மூவர் கொலோன், மெய்ன்ஸ் டிரையர் ஆகிய மதச்சார்புடைய நலப்பகுதிகளின் ஆட்சியாளர் ஆவார் மற்ற நால்வர் ரைன்நிலப்பகுதி ( Plalatine of the Rhine) சாக்சனி பிரான்டன்பர்க் மற்றும் பொஹிமியா ஆகிய மதச்சார்பில்லாத பகுதிகளின் ஆட்சியாளர்களாவார்கள்.

இவர்கள் ஜெர்மனியின் பேரரசர் இறந்த ஒரு மாதத்திற்குள் ஓரிடத்தில் கூடி விவாதித்து அதன் பின்னர் ஒரு மாதத்திற்குள் பேரரசரைத் தேர்ந்தெடுத்துவிட வேண்டும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் அரசர் போப்பின் அங்கீகாரத்தைப் பெற வேண்டுமா இல்லையா என்பது பற்றி அவ்வாணையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை.

இந்த தங்க ஆணையில் பேரரசரைத் தேர்ந்தெடுக்கும் நிலப்பகுதிகள் எக்காரணம் கொண்டும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படக் கூடாதென்றும், மதச்சார்பில்லாத நிலப்பகுதிகளில் தலைமகன் அரசுரிமை பெரும் சட்டம் நடைமுறையில் இருக்க வேண்டுமென்றும் குறிப்பிப்பட்டிருந்தது. இந்த எழுவர் அடங்கிய தேர்வுக்குழுவைத் தவிர டையட் என்ற பாராளுமன்றம் அரசனின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தச் செயல்பட்டது. இந்த டையட் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே உருவாகத் தொடங்கியது. இந்த டையட்டில் முதலில் பிரபுக்களும் மதகுருமார்களுமே உறுப்பினர்களாக இருந்தனர். ஆனால் நான்காம் சார்லசின் ஆட்சிக்காலத்திற்குப் பின்னர் பொதுமக்களும் அதில் உறுப்பினர் ஆவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள்.

நான்காம் சார்லஸ் ஜெர்மனியின் வளர்ச்சிக்கு இவற்றையெல்லாம் செய்தாரென்றாலும் அவரிடமிருந்த பிராந்திய உணர்வு அவரை விட்டு அகலவில்லை. தன்னுடைய சொந்த நிலப்பகுதியாகிய பொஹிமியாவின் அரசியல் ஆதிக்கத்துக்கே அவர் பாடுபட்டார். அப்பகுதியில் பிராக் பல்கலைக்கழகத்தை நிறுவினார். இப்பல்கலைகழகத்தில் தான் புகழ் வாய்ந்த புறச்சமயவாதி ஜான்ஹஸ் என்பவர் பணிபரிந்து வந்தார். அவருடைய பிரச்சாரத்தினால் ஜெர்மானியர்களுக்கும் செக் நிலப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் ஏற்பட்ட போர்கள், நான்காம் சார்லசுக்குப் பின்னர் பேரரசராக இருந்த சிகிஸ்மண்ட்டின் (1410 – 1437) ஆட்சிக்காலத்தில் பெரும் குழப்பங்களையும் கலகங்களையும் நாட்டில் ஏற்படுத்தின. அவருடைய மறைவுக்குப் பின் ஆப்ஸ்பர்க் வமிசத்து அரசர் இரண்டாம் ஆல்பர்ட்டை தேர்வுக்குழு தேர்ந்தெடுத்தது. அவருக்குப் பின் ஆட்சிக்கு வந்த அதே வமிசத்து அரசர் மூன்றாம் பிரெடிரிக்கே முக்கியமானவர்.

மூன்றாம் பிரெடிரிக் (1440-1493) ரோமில் உள்ள போப்பிடமிருந்து முடிசூட்டிக் கொண்ட கடைசி அரசராவார். தேர்வுக்குழுவும் இவ்வரசருக்குப் பிறகு, 1806 ஆம் ஆண்டு புனித ரோமானியப் பேரரசு நெப்போலியனால் வீழ்த்தப்படும் வரை ஆப்ஸ்பர்க் வமிசத்து அரசர்களையே ஜெர்மனியின் பேரரசர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தது. அவர்கள் பெயரளவுக்குத்தான் பேரரசர்களாக இருந்தார்களே தவிர ஜெர்மனி நூற்றுக்கும் மேற்பட்ட பல பிரிவுகளாகவே அடுத்த நான்கு நூற்றாண்டுகளிலும் பிரிந்திருந்தது.

**இத்தாலி**

கல்வி, மற்றும் கலைத்துறைகளில் மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் இருந்த இத்தாலி கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் அதன் அரசியல் அமைப்பு சிதறுண்டு இருந்தது. ஜெர்மனியைப் போலவே இத்தாலியிலும் பல தனி அரசுகள் இயங்கி வந்தன. பிற்காலத்தில் மெட்டர்னிக் குறிப்பிட்டது போல இத்தாலி என்பது புவியியலடிப்படையில் சொல்லும் ஒரு சொல்லே தவிர அப்படி ஒரு நாடே இல்லையெனக்

கூறலாம். ஏனெனில் இத்தாலி என்று சொல்லப்படும் அந்தத் தீபகற்பத்தில் 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் பல சிற்றரசுகள் தனி நாடுகளைப் போலவே இயங்கி வந்தன.

ஒரு காலத்தில் இத்தாலியின் வடக்கேயுள்ள பெரும்பகுதி புனித ரோமானியப் பேரரசரின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. ஆனால் அப்புனித ரோமானியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் இத்தாலியிலிருந்து அயலவர் ஆட்சி ஒழிந்ததே தவிர அரசியல் ஒருமைபாடு ஏற்படவில்லை. கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் மூன்று வகையான தனி அரசுகள் இத்தாலியில் இயங்கி வந்தன. அவை.

1. கிரேக்க நகர அரசுகளைப் போல இயங்கி வந்த தனி அரசுகள், இத்தாலியின் வடபகுதியில் இருந்தன.

2. இத்தாலியின் மத்தியில் உள்ள போப்பின் ஆட்சிக்குட்ப்பட்டிருந்த பகுதி

3. தெற்கேயுள்ள இரு சிசிலிகளின் அரசு

**தனி அரசுகளின் சில சிறப்புக் கூறுகள்**

இவற்றுள் முதல் வகையைச் சேர்ந்த நகர அரசுகளைப் போன்ற தனி அரசுகளிடையே ஏறக்குறைய ஒரே வகையான அரசியல் அமைப்புகளும் சிறப்புக் கூறுகளும் காணப்பட்டன. ஒரு சில அமைப்புகளில் மாறுதல்கள் இருப்பினும் பெரும்பாலும் அவை ஒரே மாதிரி இயங்கின. எடுத்துக்காட்டாக மிலானில் முடியரசு போன்ற அரசியல் அமைப்புகள் இருந்தன. வெனிசிலும், ஜெனோவாவிலும் பிரபுக்களால் ஆட்சி செய்யப்பட்ட குடியரசுகள் இருந்தன. பிளாரன்ஸ் மக்களாட்சிக் குடியரசாக இருந்தது.

இருப்பினும், அவை ஒவ்வொன்றும் தன்னரசின் எல்லைகளை விரிவுபடுத்தும் ஏகாதிபத்ய மனப்பான்மை கொண்டிருந்தன. பெயரளவில் தான் மக்களாட்சிக் குடியரசு, வல்லாட்சியாகவே இருந்தது. எனவேதான் கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் இத்தாலியில் ஆட்சி செய்த எல்லா ஆட்சியாளர்களும் வல்லாட்சியாளர்கள் என்றே கருதப்படுகிறார்கள். அதே நேரத்தில் அந்த ஆட்சியாளர்கள் வம்சவழியோ அல்லது பரம்பரை வழியோ வரும் ஆட்சியாளர்கள் அல்லர். ஒரு நகர அரசின் ஆட்சியாளர் இறந்துவிட்டால் அதற்கடுத்த ஆட்சியாளர் மக்கள் அல்லது பிரபுக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனால் சில நேரங்களில் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டன. ஒரு தனி அரசு மற்றொரு தனி அரசைத் தன்னோடு இணைத்துக் கொண்டது உண்டு. இத்தாலிக்குள்ளேயே இருந்த இத்தனி அரசுகள், இன்று உலக நாடுகளுக்கிடையே அரசியல் தூதர்களை வைத்துக் கொள்வது போல, அரசியல் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கின்றன.

இத்தனி அரசுகளில் வாழ்ந்த மக்களும் தங்கள் அரசுக்கும் ஆட்சியாளருக்கும் மட்டுமே உண்மையானவர்களாகவும் பற்றுள்ளவர்களாகவும் இருந்தார்கள். தேசிய உணர்வு

அவர்களிடம் தோன்றவில்லை. மக்களுக்கிடையே பல கட்சிகளும் இருந்தன. அவற்றுள் மிக முக்கியமானவை கூயல்ப் கட்சியும், கிப்பிலைன் கட்சியுமாகும். (Guelf and Ghibelline Parties) அவை கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் போப்புக்கும் அரசருக்கும் அதிகாரப் போட்டி ஏற்பட்டபோது நிறுவப்பட்ட கட்சிகளாகும். கூயல்புகள் போப்பை ஆதரிப்பவர்களாகவும், கிப்பிலைன்கள் அரசரை கி.பி. 14, 15 ∴ அம் நூற்றாண்டுகளிலும் அரசியல் விவகாரங்களில் ஈடுபட்டனர்.

ஆட்சியாளர்கள் தனித்தனியாப் பெரும்படையையும் வைத்துக் கொண்டிருந்தார்கள். அப்படைகளில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மட்டுமின்றி ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து இத்தாலியில் வந்து குடியேறினவர்களும், படைவீரர்களாகப் பணி புரிந்தனர். இவ்வாறு இயங்கிய தனி அரசுகளில் மிலான், பிளாரன்ஸ், வெனிஸ் ஆகியவையே மிக முக்கியமானவை. அவற்றின் அரசியல் அமைப்பைப் பற்றி நாம் அறிந்து கொண்டால் மற்ற எல்லா அரசுகளைப் பற்றியும் அறிந்து கொண்டதாகவே கொள்ளலாம்.

**மிலான்**

இவ்வரசில் முழுமையாக வல்லாட்சியே நடைபெற்றது. பொருளாதாரத் துறையிலோ அல்லது தொழில் துறையிலோ முன்னேறிய அரசாக இல்லை. ஜெனோவாவைப் போலவும் கடல்களைக் கடந்து குடியேற்ற நாடுகளை அமைத்துக் கொள்ளவுமில்லை. ஆனாலும் போ சமவெளியில் (Po Valley) தனக்கு வேண்டியவற்றை அது உற்பத்தி செய்து கொண்டது. இவ்வரசில் இருந்த பிரபுக்கள் ஆட்சியாளர்களாவதற்கு அடிக்கடித் தங்களுக்குள் போர்களில் ஈடுபட்டார்கள். அவர்களுள் இரண்டு பிரபுக்களின் குடும்பங்கள் முக்கியமானவை. அவை டெல்லர் டெர்ரே (Della Terre) என்ற குடும்பமும், விஸ்காண்டி (Viscontri) என்ற குடும்பமும் ஆகும்.

இவ்விரு குடும்பங்களுக்கிடையே ஏற்பட்ட கடும் அதிகாரப் போட்டியின் இறுதியில் விஸ்காண்டி குடும்பமே வெற்றி பெற்றது. 1262 ஆம் ஆண்டில் ஆட்டோ விஸ்காண்டி (Otto Visconti) என்பவர் மிலானின் ஆட்சியாளரானார். இவர் வழிவந்த அனைவரும் வரம்பிலா வல்லாட்சியே நடத்தினார். ஜியோ வன்னி விஸ்காண்டி (Giovanni Visconti – 1349 -54) என்பவர் ரோம் தலைமைப் போப்பைத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தாக்க முயன்றார். அவருக்குப்பின் ஆட்சி செய்த பெர்னாயோ வைகாண்டி (Bernabo Visconti) என்பவர் தன் எதிரிகளையும் குற்றவாளிகளையும் தண்டிக்கப் பல கொடுமையான வெறி நாய்களை வைத்துக் கொண்டிருந்தாராம்.

ஜியான் கேலிஸோ விஸ்காண்டி என்பவர் (Gian Galeazzo Visconti – 1378 – 1402) தன் சிற்றப்பா பெர்னாபோவையும் அவருடைய நான்கு மகன்களையும் கைது செய்து, கொடுமைப்படுத்திக் கொலை செய்தாராம். பின்னர் கலைஞர்களையும் அறிஞர்களையும்

ஆதரித்துக் கல்வி மற்றும் பல கலைகளையும் வளர்த்தார். புனித ரோமானியப் பேரரசர், கோமகன் என்ற பட்டத்தையும் அவருக்குக் கொடுத்துச் சிறப்பித்தார். அவருடைய ஆட்சியில் மிலான் இதற்குமுன் காணாத வல்லாட்சியைக் கண்டது. ஆனாலும் மக்கள் அதகைத் தாங்கிக் கொண்டிருந்தனர்.

மிலானை ஆடசி செய்த முக்கியமான அடுத்த ஆட்சியாளர் லுடோவிகோ ஸ்பார்சா (Ludovico Sforza – 1479 – 1500) என்பவராவார். அவர் சிறந்த பொருளாதார நிபுணர் அவருடைய ஆட்சிக் காலத்தில் மிலான் வேளாண்மைத் துறையில் வளர்ச்சிப் பெற்றது. அவரே ஒரு சிறந்த கலைஞராக இருந்ததால் மிலான் நகரை அழகுப்படுத்தினார் லியனார்டோ டாவின்சி (Leanardo da Vinci) போன்ற தலைசிறந்த கலைஞர்களை அவர் ஆதரித்தார்.

**வெனிஸ் :**

வெனிஸின் அமைவிடமே அதன் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் காரணமாகும். இது ஏட்ரியாடிக் கடலின் வடக்கே மிதக்கும் நகரமாக அமைந்துள்ளது. இது ஏட்ரியாடிக் கடலின் அரசி (Queen of the Adriatic) என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகின்றது. இது முற்றிலும் வாணிகத்தால் வளம் பெற்ற நகரமும் அரசும் ஆகும். ஐரோப்பிய வணிகர்களும் ஆசியாவின் வணிகர்களும் சிந்திக்கும் சந்தை வெனிஸ் ஆகும். இவ்வரசு எக்காலத்திலும் புனித ரோமானியப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டிருந்ததில்லை. அதனுடைய எல்லாத் தொடர்புகளும் கிழக்கு ரோமானியப் பேரரசுடனே இருந்தன. இவ்வரசில் மற்ற இத்தாலியத் தனி அரசுகளில் இருந்தது போல் கட்சிகளோ, வருக்கப் போராட்டங்களோ இருந்ததில்லை. மேலும் இங்கு வணிகர் ஆதிக்க ஆட்சி என்ற அரசியல் அமைப்பு நடைமுறையில் இருந்தது. வெனிஸில் பெரும்பாலர் வணிகர்களால் இருந்ததால் இத்தகைய அமைப்பு கி.பி. 697 ஆம் ஆண்ட முதல் நடைமுறையில் இருந்தது.

இவ்வரசின் ஆட்சியாளர் டோஜ் (னுழபந) என்றழைக்கப்பட்டார். அவர் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்தாலும் அவருடைய அதிகாரங்கள் வணிகப் பெருமக்களின் பெருஞ்சபையினால் (Great – Council) கட்டுப்படுத்தப்பட்டன. இச்சபை கி.பி. 1171 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்தது. பின்னர் இச்சசை நாற்பதின்மர் குழுவாக (Council of Forty) மாற்றப்பட்டது. இதனுடைய எண்ணிக்கை மீண்டும் கி.பி. 1297 ஆம் ஆண்டில் பத்தாக குறைக்கப்பட்டுப் பதின்மர் குழு (ஊழரஉெடை ழக வுநெ) என்றழைக்கப்பட்டது.

ஜெனோவுக்கும் வெனிசுக்கும் இடையே அடிக்கடி போர்கள் ஏற்பட்டன. கி.பி. 1378 ஆம் ஆண்டுக்கும் 1380 ஆம் ஆண்டுக்கும் இடையே ஏற்பட்ட போர்களில் வெனிஸ் ஜெனோவாவைக் கடலிலும் நிலத்திலும் தோற்கடித்துத் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியது. பின்னர் மிலானுடன் போர்தொடுத்துப் பெரும் பகுதியைப் பெற்றது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வெனிஸ் ஒரு பெரிய ஏகாபத்திய வல்லரசாகவே மாறியது. அந்நூற்றாண்டின் இறுதியில்

கிரீசின் தெற்குப்பகுதி, கிரீட்தீவு, சைப்ரஸ் தீவு மற்றும் ஈஜியன் கடலில் (Aegean Sea) உள்ள பல தீவுகளைத் தன்னரசில் இணைத்துக் கொண்டிருந்தது. சுருங்கக்கூறின், இத்தாலியில் இருந்த எல்லா அரசுகளைக் காட்டிலும் அமைதியான, வளமான வாழ்க்கையை மக்களுக்கு வெனிஸ் அரசு ஒன்று தான் ஏற்படுத்திக் கொடுத்தது.

**பிளாரன்ஸ்**

இக்குடியரசு தொழில் துறையில் சிறந்த வளர்ச்சி பெற்றிருந்தது. பெருஞ்செல்வந்தர்கள் இங்கு வாழந்தார்கள். இது கம்பளி உற்பத்திக்குப் பெயர் பெற்ற பகுதியாகும். பிளாண்டர்ஸோடு வாணிக உறவை வைத்துக் கொண்டு வணிகர்கள் கொழுத்த இலாபத்தைச் சம்பாதித்தனர். அரசர்களுக்கும், போப்புகளுக்கும் கடன் தருகின்ற அளவுக்குப் பெரும் செல்வந்தர்கள் இங்கு இருந்தார்கள். மிலானைப் போலவே இங்கும் கூயல்புகள், கிப்பிலைன்கள் ஆகியோர் இருந்தனர். இவர்களுக்கிடையே அடிக்கடிக் கலகங்கள் ஏற்பட்டன. எனினும் வெகுநாள் அவை நீடிக்கவில்லை.

இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சித் தலைவரே ஆட்சி செய்தார் அவரிடமும் வரம்பிலா அதிகாரங்கள் இருந்தன. மற்ற தனியரசுகளைப் போலவே இதுவும் ஏகாதிபத்திய வெறி கொண்டு அண்மையில் உள்ள நிலப்பகுதிகளை தன்னரசோடு இணைத்துக் கொண்டது டஸ்கனி, பீசா (Tuscany, Pisa) போன்றவற்றைக் கி.பி. 1406 ஆம் ஆண்டில் பிளாரன்ஸ் கைப்பற்றியது. மிலானில் நடைபெற்றது போலவே இங்கும் குற்றங்கள் செய்வோர் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். வருக்கப் போராட்டங்கள் அடிக்கடி இங்கு நிகழ்ந்தன.

1434 ஆம் ஆண்டில் மெடிசி (Medici) என்ற குடும்பத்தைச் சேர்ந்த கொசிமோ-டி-மெடிசி (Cosimo-de-Medici) என்ற செல்வந்தர் ஆட்சிக்கு வர முயன்றார். ஆனால் அவருடைய எதிரிகள் அவரை நாடு கடத்தினர். நாட்டில் உடனே பெருங்கலகம் ஏற்பட்டது. அவர் மீண்டும் நாடு திரும்பிப் பின்னர் பிளாரன்சைத் திறம்பட ஆட்சி செய்தார். இவர் வழி வந்தவரே பிளாரன்சைப் பல ஆண்டுகள் ஆட்சி செய்தனர். அவர் 1464 ஆம் ஆண்டில் இறந்து விட்டார்.

அவரை அடுத்து அவருடைய மகன் லோரென்சோ-டி-மெடிசி (Lorenso-de-Medici) ஆட்சியாளரானர். அவருடைய காலத்தில் தான் பிளாரன்சின் அரசியல் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. கலைத் துறைகளில் பல புதிய அம்சங்கள் உருவாக்கப்பட்டன.

இங்கு சாவொநரோலா (Savonarola) பொன்ற மதகுருக்கள் சில மூடநம்பிக்கைகளை எதிர்த்து மக்களிடையே பிரச்சாரம் செய்து அறிவொளி ஊட்டினார்கள். கவிஞர் டான்டேவின் கருத்துக்கள் புதிய உணர்வுடன் பிரச்சாரம் செய்யப்பட்டன.

**போப்பின் ஆட்சிகுட்பட்ட நிலப்பகுதி (Papal Stae)**

இத்தாலியத் தீபகற்பத்தின் இடையில் இருந்த பெருநிலப்பகுதி ரோம் நகரத்திலிருந்த போப்பின் நேர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அப்பகுதியை அவர் மதத் தலைவராகவும் அரசியல் தலைவராகவும் இருந்து ஆட்சி செய்து வந்தார். இத்தாலியின் மத்தியில் அப்பகுதி இருந்ததால் மற்ற தனியரசுகளிலும் இரு சிசிலிகளின் அரசிலும் ஏற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகள் அப்பகுதியையும் பாதித்தன. எனவே கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் ரோமில் போப்புகளாக இருந்தவர்கள் தங்கள் நேரத்தின் பெரும் பகுதியைத் திருச்சபை விவகாரங்களுக்குச் செலவிடுவதை விடத் தங்கள் ஆட்சிக்குட்பட்டிருந்த நிலப்பகுதியின் அரசியல் விவகாரங்களுக்கே செலவிட்டார்கள்.

அதே நேரத்தில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டில், திருச்சபையில் ஏற்பட்ட கொந்தளிப்புகள் அதன் பெருமையை பெரிதும் பாதித்தன. அதாவது கி.பி.14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் புனித ரோமானியப் பேரரசர்கள் வலுவிழந்து, பிரான்சு நாட்டு அரசர்கள் வலிமைபெற்ற போது, கிறிஸ்தவத் திருச்சபையின் தலைநகரம் ரோமிலிருந்து, ஆவினானுக்கு மாற்றப்பட்டதென்பதையும், இந்த பாபிலோனியச் சிறையிருப்பு ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் நீடித்ததென்பதையும், அதன்பிறகு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் திருச்சபையில் பெரும் சமயப்பிளவு ஏற்பட்டு நீடித்ததென்பதையும், நாம் முன்னரே கண்டோம். எனவே, கி.பி. 14ஆம் நூற்றாண்டில் போப்பின் ஆட்சிக்கு உட்படடிருந்த நிலப்பகுதியின் பெரும் பகுதியை பிளாரன்ஸ் போன்ற குடியரசும் இரு சிசிலிகளின் அரசும் கைப்பற்றிக்கொண்டன. இவை தவிர பேராசை கொண்ட பிரபுக்கள் மற்றும் கொள்ளைக்காராகளின் தாக்குதல்களுக்ககு ரோம் அடிக்கடி இலக்காகியது.

இத்தகைய குழப்பமான நிலையைப் பயன்படுத்திக்கொண்டு தான் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் இடையில் கோலா-டி-ரியன்ஸோ (cola- di-rienso) என்பவர், தான் போப்பின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள மக்களைக் காப்பதாகவும், ரோம் திருச்சபையின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் பாடுபடுவதாகவும் கூறிக்க கொண்டு தன்னை அப்பகுதியின் ஆட்சியாளராக அமர்த்திக் கொண்டு ஆட்சி செய்ய ஆரம்பித்தார். ஓரளவு அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டினார். பின்னர் இத்தாலியத் தீபகற்பத்தில் உள்ள எல்லா அரசுகளையும் ஒன்றாக இணைத்து ரோமைத் தலைநகராகக் கொண்டு இத்தாலியக் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு திட்டம் கொண்டு வந்தார். இத்திட்டத்திற்கு ரோம் மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அதுமட்டுமின்றிக் கலகமும் ஆர்ப்பாட்டமும் செய்து நாட்டை விட்டே அவரைத் துரத்தி விட்டனர்.

அதன் பின்னர் கார்டினல் ஆல்பொர்னோஸ் (Cardinal Albornoz) என்பவரே போப்பாட்சிப் பகுதியில் நிலையான ஆட்சி முறையை ஏற்படுத்தினார். (இறப்பு : 1367) உண்மையில் அவர் ரோமில் ஆட்சி முறையைச் சீர்படுத்துவதற்காகவே ஆவினானிருந்த கார்டினல்களினால் அனுப்பப்பட்டார். அவர் அரசியல் மற்றும் ராணுவத் துறைகளில் நன்கு பயிற்சி பெற்றவர். ஆகவே போப்புக்கென்று ஒரு படையையும் உருவாக்கினார். அவர்

காலத்திற்குப் பிறகு ரோமில் போப்புகளாக இருந்தவர்கள் படைபலம் கொண்டே போப்பாட்சிப்பகுதிறை ஆண்டுவந்தனர்.

குறிப்பாகப் போப் ஆறாம் அலெக்சாண்டர் (1492-1503) ஒரு சிறந்த அரசைப் போலவே தன் பகுதிறை ராணுவ பலம் கொண்டு அடக்குமுறையுடன் ஆட்சி செய்தார். இவரைப் போலவே இவருடைய மகன் சீசர் போர்ஜியா (Caesar Brogla) வல்லாட்சியாளராக இருந்து அப்பகுதியை ஆட்சி செய்தார். இத்தாவிய அரசியல் மேதை மாக்கியவல்லியும் (Machiavelli) தன்னுடைய இளவரசன் (the prince) என்ற நூலில் இவருடைய ஆட்சியைப பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு போப்பாட்சிப் பகுதியும் கி.பி. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.

**இரு சிசிலிகளின் அரசு**

இவ்வரசு நேபிள்சையும் சிசிலித் தீவையும் தன்னகத்தே கொண்டிருந்தது. இது ஒரு காலத்தில் நார்மானியர்களின் ஆட்சிக்கும், பின்னர் ஜெர்மானிய அரசர்களின் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தது. பிரெஞ்சு அரசர்களின் ஆட்சிக்கும் இப்பகுதி உட்பட்டிருந்தது. கி.பி. 1282 ஆம் ஆண்டில் ஐபீரியத் தீபகற்பகத்திலிருந்து ஆரகன் (யுசயபழுெ) பகுதியின் அரசர் மூன்றாம் பீட்டரினால் (Peter III) சிசிலித்தீவு கைப்பற்றிக் கொள்ளப்பட்டது. நேபிள்ஸ் கி.பி. 1443 ஆம் ஆண்டு வரை பிரான்சின் ஆதிக்கத்தில் இருந்தது. அதே ஆண்டு வரை பிரான்சின் ஆதிக்கத்தில் இருந்தது. அதே ஆண்டு அப்பகுதியை ஆரகன் அரசர் ஐந்தாம் அல்போன்சா (Alphonso V) கைப்பற்றிக் கொண்டார்.

இவ்வாறு இத்தாலியின் தெற்கிலிருந்த இவ்வரசு அயலவரின் ஆட்சிக்குட்பட வேண்டியதாக இருந்தது. வடக்கே இருந்த தனி அரசுகளைப் போல் அரசியல் அமைப்பிலும் செல்வ வளத்திலும் உறுதிப்பாடான நிலையை இது அடையவில்லை. இதற்கு மாறாக உள்நாட்டுக் குழப்பங்களும் மிகவும் பின் தங்கிய பொருளாதார நிலைகளுமே இங்கு காணப்பட்டன.

பல்வேறு துண்டுகளாகப் பிளவுப்பட்டிருந்த இத்தாலியை, கி.ப. 14, 15 ஆம் நூற்றாண்டுகளில் எவராலும் ஒருங்கிணைத்து ஒரு தனி நாடாக உருவாக்க முடியாதென்ற கூற்று உண்மையான கூற்றேயாகும்.

## 24. தொழிலும், வாணிபமும்
## (Trade And Commerce)

**வாணிப வளர்ச்சி:**

ஐரோப்பாவில் கி.பி பத்தாம் நூற்றாண்டு வரை தொழிலும் வாணிபமும் வளர்ச்சியடைவில்லை. இதற்கு முக்கியக் காரணம் மத்திய தரைக்கடல் பகுதியில் முஸ்லீம்கள் மாக்யர்கள் போன்றோர் அடிக்கடி தாக்குதல்களில் ஈடுபட்டு வந்ததேயாகும். மேலும் ஐரோப்பிய நிலமானிய பிரபுக்களும் உங்களுக்குள் போரிட்டு அமைதியைக் குலைத்தனர். அவர்களின் பல நடவடிக்கைகள் உள்நாட்டு வாணிபத்தை பாதிப்பதாகவே அமைந்தன. ஆனால் பதினோறாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பிய நாடுகளில் வாணிப வளர்ச்சி ஏற்பட்டது. சிலுவைப் போர்களின் விளைவாக ஐரோப்பிய நாடுகளுக்கும் மத்திய தரைக்கடல் நாடுகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்ப்பட்டது. மேலும் வாணிபத்திற்கு தடையாக இருந்த கொள்ளைக்காரர்கள் வலிமைமிக்க மன்னர்களால் அடைக்கப்பட்டனர். இந்த அரசர்கள் கொடுத்த பாதுகாப்புடன் வாணிபம் வளர ஆரம்பித்தது.

**வாணிப சந்தைகள் :**

வாணிபத்தை ஊக்குவிப்பதற்காக ஐரோப்பாவில் பல இடங்களில் சந்தைகள் அமைக்கப்பட்டனனனனனனன. பொருட்காட்சிகள் (Fair) நடத்தப்பட்டு பொருட்களுக்கு விளம்பரங்கள் கொடுக்கப்பட்டன. பாரிசு, லண்டன், சுரோன்ன முதலிய நகரங்களில் பொருட்காட்சிகள் பல வாரங்கள் நடைபெற்றனனனனனனனனன. ஐரோப்பா முழுவதிலிருந்தும் பல வகைப்பட்ட வாணிபர்கள், கைவினைஞர்கள் உற்பத்தியாளர்கள் தங்கள் பொருட்களைக் கொண்டு வந்து குவித்தனர். பல வகைப்பட்ட பொருட்களும் ஓரிடத்தில் கிடைத்ததால் வாணிபம் பெருமளவில் நடைபெற்றது. மேலும் கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்தததால் கப்பல் போக்குவரத்து வளர்ச்சியடைந்தது. துறை முகங்களில் கலங்கரை விளக்கங்கள் கட்டப்பட்டிருந்தன. பண்டக சாலைகளும் அமைக்கப்பட்டிருந்தன. இது வாணிபத்தை மேலும் ஊக்குவித்தது. வாணிப முக்கியத்துவம் பெற்ற இடங்களில் நகரங்கள் தோன்றின.

**பன்னாட்டு வாணிபம்:**

கிழக்கிந்திய நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற வாணிபத்தில் பெரும்பகுதி மத்திய தரைக்கடல் வழியாக நடைபெற்றது. இந்த வழியாக வாணிபம் நடைபெற்றதால் இத்தாலிய நகரங்களின் செல்வம் வளர்ந்தது. மிலான், கோமா, வெரோனா வெனிஸ், போன்ற நகரங்கள் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபட்டு பெரும் பொருள் ஈட்டினர். போப்பாண்டவரின் ஆணைகளையும் மீறி ஜெனோவா, வெனிஸ், பைசா போன்ற நகரங்கள் முஸ்லீம் நாடுகளுக்கு பொருட்களையும் போர்க் கருவிகளையும் விற்றன.

பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகள் வாணிபத்தில் வளர்ச்சியடைந்தன. பர்சிலோனா மற்றும் தெற்கு பிரான்சு நகரங்கள் வடக்கு ஆப்பிரிக்காவுடன் வாணிபம் செய்தன. லண்டன் நகரம் துணிகளையும் ரோமத்தையும் அரேவியாவுக்கு அனுப்பி அங்கிருந்து நறுமணப் பொருட்களைப் பெற்றுக் கொண்டது. சீனானவுக்கு துணிகளையும் ரோமத்தையும் அனுப்பி பட்டாடைகள் பெற்றுக்கொண்டது. யாவிலிருந்து குறுமென்மயிர், அடர்ந்த தோலாடைகள் ஆகியவற்றை இறக்குமதி செய்தது. பிளாண்டாஸிலிருந்து புருகஸ் (Brugas) என்ற நகரம் வாணிபம் மூலமாக செல்வத்தைப் பெருக்கிக் கொண்டது.

### C. வங்கி முறையின் வளர்ச்சி

வாணிபத்துக்கு மிகவும் இன்றியமையாத சாதனங்களான நாணய முறை வங்கி முறை, நாணய மாற்று முறை முதலியவை வளர்ச்சியடைந்தன. இத்தாலியில் இருந்த பிளாரன்ஸ், வெனிஸ் போன்ற நகரங்களில் பெரும் வங்கிகள் இருந்தன. அவைகள் வியாபாரிகளுக்குக் கடன் தொகைகள் வழங்கின. அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும் கூட அவை கடன் கொடுத்து போர் முயற்சிகளுக்கு உதவி செய்தன. பிளாரன்சைத் சேர்ந்த வங்கி உரிமையாளர் ஒருவர் தனக்குச் சொந்தமாக கப்பல்களைக் கூட வைத்திருந்தாராம்.

வெனிஸ், ஜெனோவா போன்ற நகரங்களிலிருந்த வங்கி உரிமையாளர் பிறநாடுகளில் செல்லுபடியாகக் கூடிய உறுதிப்பத்திரங்களையும், மாற்று முறிகளையும், காசோலைகளையும் (Promissory Notes, Bills of Exchange Cheques) வழங்கினர். நெருப்பு, பூகம்பம் போன்ற விபத்துக்கள் நேர்ந்தால் வணிகர்களுக்கு இழிப்பீடு செய்யும் காப்புறுதி முறைகளையும் அக்கால வங்கிகள் கடைபிடித்தன. தாள் நாணய முறையும் (Paper Currency) கணக்கு வைக்கும் முறையும் (Book – Keeping ) இக்காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்தன. இதன் மூலம் பண்பாட்டு வாணிபம் பெரும் வளர்ச்சியடைந்தது.

### னு. கேன்சியாட்டிக் கழகம் (Hanseatic League)

இடைக்கால ஐரோப்பிய வணிகர்கள் தங்கள் வாணிபத்தைப், பெருக்குவதற்கும், பாதுகாத்து கொள்வதற்கும் சங்கங்கள் அமைத்துக் கொண்டனர். பொருட்கள் ஓரிடத்திலிருந்து மற்ற இடத்திற்கு கொண்டு செல்வதில் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டன. முக்கியமாக வரிகளும் திருச்சபைச் சட்டங்களும் வடகடல், மத்திய தரைக்கடலில் இருந்த கடற் கொள்ளைக்காரர்களும் வாணிப வளர்ச்சிக்கு தடையாக இருந்தனர். எனவே வட ஜெர்மானிய நகரங்கள் ஒன்று சேர்ந்து கேன்ஸியாட்டிக் கழகம் ஒன்றை அமைத்துக் கொண்டன.

இந்தக் கழகத்தில் லூபக், கலோன், பிரான்ஸ்விச், விஸ்பி, டான்சிக் உட்பட எட்டு நகரங்கள் இணைந்தன. மேலும் பல துறைமுக நகரங்களும் சேர்ந்தன. இந்த ஹேன்சியாட்டிக்கழகம், டென்மார்க், ஸ்வீடன், ரஷ்யா, இங்கிலாந்து போன்ற நாடுகளுடன் வாணிபம் செய்வதில் முற்றுரிமை பெற்றது. வடகடல் முழுவதையும் தன் ஆதிக்கத்தில்

கொண்டு வந்தது. தனக்கென கப்பற்படையையும் உருவாக்கி கடற் கொள்ளைக்காரர்களின் ஆபத்தை ஓரளவு தடுத்தது. காலப்போக்கில் இந்தக் கழகமானது பல காரணங்களால் முக்கியத்துவம் இழந்தது.

**வாணிபச் சட்டங்கள் :**

இடைக்காலத்தின் இறுதியில் வாணிப வளர்ச்சிக்குத் தடையாக இருந்த பல்வேறு சட்டங்கள் திருத்தப்பட்டன. பன்னாட்டு வாணிபச் சட்டமும் கப்பல் போக்குவரத்துக்கான பொதுவான சட்டமும் இயற்றப்பட்டது. வாணிபப் பாதுகாப்பிற்காக மன்னர்களும் பிரபுக்களும் தனியாக நீதிமன்றங்களை அமைத்துக் கொண்டனர். இதனால் வாணிப வளர்ச்சி தடையில்லாமல் தொடர்ந்து ஏற்பட்டு வந்தது.

## II. தொழில்களின் வளர்ச்சி :

ஐரோப்பாவில் வாணிப வளர்ச்சிக்கு ஏற்றவாறு உற்பத்தியும் பெருகியது. மத்தியக் காலத்தின் தொடக்கத்தில் போக்குவரத்து வசதி குறைவாகவே காணப்பட்டதால் வாணிபம் பெருகவில்லை. ஆனால் பன்னிரெண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் சாலைகள் வளர்ச்சி அடைய ஆரம்பித்ததால் போக்குவரத்து வசதி அதிகரித்து வாணிபம் பெருகியது. இதனால் உற்பத்தியும் பெருக ஆரம்பித்தது.

**சுரங்கத் தொழில்கள்:**

ஐரோப்பாவில் சுரங்கத்தொழில் வெகுவாக வளர்ச்சியடைந்தது. சுரங்கங்களை வெட்டி உலோகங்களைப் பெறுவதில் முன்னேற்றம் ஏற்பட்டது. இனங்கிலாந்து இத்தாலி, ஜொமனி, பிரான்ஸ், கங்கேரி ஆகிய நாடுகளில் தங்கச் சங்கங்கள் வெட்டப்பட்டன. தங்கத்தின் உற்பத்தி அதிகரித்த உடன் வாணிபம் மேலும் வளர்சியடைந்தது. இரும்புச் சுரங்கங்கள் இங்கிலாந்து, பெல்ஜியம், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நிலக்கரிச் சுரங்கங்கள் வெட்டப்பட்டன. தொழிற்சாலைகளில் நீர்ச்சக்கரங்களும் காற்றாலைகளும் வெகுவாகப் பயனபட்டன.

பலவகையான உலோகங்களும் நிலக்கரியும் வெட்டி எடுக்கப்பட்டதால் தொழிற்சாலைகள் வேகமாக வளர்ச்சியடைந்தன. தொழிற்சாலைகளில் அதிகமாக அடிமைகள் பயனன்படுத்தப்பட்டனர். நாணயங்கள், உரோகங்களாலான கருவிகள், ஆயுதங்கள் முதலியன உற்பத்தி செய்யப்பட்டன. தங்கும் வெள்ளி ஆகிய உலோகங்களாலான ஆபரணங்கள் மிக நேர்த்தியான கலைப் பாணிளனயில் செய்யப்பட்டன.

**B. துணி உற்பத்தி:**

இடைக்காலத்தில் துணி உற்பத்தி அதிகமானது பருத்தியாலும் ரோமத்தாலும் துணி உற்பத்தித செய்யப்பட்டன. இத்தாலி இங்கிலாந்து பிரான்ஸ் போன்ற நாடுகளில் துணி உற்பத்தி செய்யும் தொழில் வளர்ச்சியடைந்தது. எண்ணற்ற மக்களுக்கு இந்த தொழில் வேலைவயாய்ப்பை அளித்து, பல வியாபாரிகள் பெரும் லாபம் சம்பாதித்தனர். கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு பட்டாடை செய்யும் தொழில் ஐரோப்பாவெங்கிலும் பரவியது.

**கைவினைப் பொருட்கள்:**

இடைக்காலத்தில் கைவினைனப் பொருடகள் மிகுதியாக ஐரோப்பாவில் செய்யப்பட்டன. மிகவும் அழகான பளபளப்பான வண்ணங்கள் பூசப்பட்ட மண்பாண்டங்கள் தயாரிக்கப்பட்டன. பலவிதமான வடிவங்களில் ஓடுகள் தயாரிக்கப்பட்டன. ஐரோப்பா முழுவதும் கண்ணாடி செய்யும் தொழிற்சாலைகளும், காகித தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. தோலிலானனனனனன பொருட்களின் உற்பத்தியும் வளர்ச்சியடைந்தது. இடைக்காலத்தில் தொழிற்சாலைகள் பெரும்பாலும் முதலாளிகளின் வீடுகளில் அல்லது வீடுகளுக்கு அருகாமையில் கட்டப்பட்டிருந்த வீடுகளில் அல்லது வீடுகளுக்கு அருகாமையில் கட்டப்பட்டிருந்த கட்டிடங்களில் நிறுவப்பட்டிருந்தன.

## கில்டு முறை

## (GUILD SYSTEM)

இடைக்காலத்தில் நகர பொருளாதாரவாழ்க்கை பொதுவாக கில்டு முறை அல்லது குழு முறையில் அடிப்படையிலேயே நடைபெற்றது. ஒரே தொழிலில் ஈடுபட்ட பலர் ஒன்று சோந்து கூட்டமாக அந்த தொழிலை நடத்துகின்றமுறையே கில்டு முறை எனப்படும். கில்டு என்பதற்கு ஒருவகை தனி உரிமைக்குழு என்பது பொருளாகும். இந்த குழு உறுப்பினர்களைத் தவிர வேறு யாரும் அந்த தொழிலில் ஈடுபட முடியாது.

கில்டுகள் அல்லது குழுக்கள் இரண்டு வகைப்படும் ஒன்று வாணிபக் குழுக்கள் மற்றொன்று கைவினைஞர் குழு என்பதாகும்.

**வாணிபக் குழுக்கள் : Merchant Guilds**

**வாணிபக் குழுக்களின் பணிகள் :**

ஒரு நகரில் இருந்த எல்லா வியாபாரிகளும் வாணிபக் குழுவில் உறுப்பினராக இருந்தனர். இந்தக் குழுவின் முக்கிய நோக்கம் நகர வாணிபத்தைக் கட்டுபடுத்துவதும், வெளியூர் வியாபாரிகளின் போட்டியிலிருந்து அதைக் காப்பாற்றுவதுமே ஆகும். உள்ளுர் வியாபாரிகளுக்கே தனி உரிமை ஆக்கப்பட்டது. அப்படி வெளியூர் வியாபாரிகள் வந்தாலும்

வாணிபக்குழுவின் வரையறுக்கப்பட்ட விலைக்கே அவர்கள் தங்கள் பொருட்களை விற்க வேண்டும். அதிக விலைக்கு விற்றால் கிடைப்பது அடி உதைதான்.

பண்டங்களின் விலைகள் நன்கு தீர்மானிக்கப்பட்டு ஒரே மாதிரியாக விளங்கின. பண்டங்களைப் பதுக்கி வைத்தல், தேவை ஏற்படும் போது அதிக விலைக்கு விற்றல் போன்ற பழக்கங்கள் தடை செய்யப்பட்டன. விளம்பரங்கள் மூலம் வீண் செலவு செய்வதும் தடை செய்யப்பட்டது. குழுவின் உறுப்பினர்கள் அவ்வப்போது கூடி வாணிப விதிகளை மாற்றியமைப்பர். ஒவ்வொரு வாணிபத்துறைக்கும் ஒரு குழு இருந்தது.

**டி. பெரும் வாணிபக் கழகங்கள்: ஊழசிழசயவழைளெ**

பெரிய கில்டுகள் ஒன்று சேர்ந்து பெரும் வாணிபக் கூட்டுக் கழகங்களாக மாறின. மூலப்பொருட்களைஅவை அமாத்தமாக வாங்கிக் கொண்டன. உற்பத்தி எவ்வாறு நடைபெற வேண்டும், தொழிலாளர் எவ்வளவு நேரம் வேலை செய்ய வேண்டும், அவர்களுக்கு எவ்வறவு கூலி கொடுக்க வேண்டும், என்ன விலைக்கு பொருட்கள் விற்கப்பட வேணடும் என்பதையெல்லாம் அவையே தீர்மானித்தன.

நகருக்கு வேண்டிய உணவுப் பொருட்களை வாங்கி வழங்குதல், நகரச் சாக்கடைகளை துப்புரவு செய்தல், சந்தைகளை ஒழுங்குபடுத்துதல், துறைமுகங்களை ஆழமாக்குதல் போன்ற பணிகளையும் இந்த வாணிபக் கழகங்கள் மேற்கொண்டன. உற்பத்தி செய்வோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும், அதே சமயம் நுகர்வோருக்கும் அதிர்ப்தி ஏற்படாத வகையிலும் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டன. வியாபாரிகளைக் கொள்ளையடிப்பவர்களை ஒழித்துக் கட்டின. மேலும் அரசர்களும், நிலமானியப் பிரபுக்களும் அத்துமீறி வரிவசூல் செய்ய முற்பட்ட நேரங்களில் இந்த வாணிபக் குழுக்களே அவர்களை தடுத்து நிறுத்தின.

**வாணிபக்குழுக்களின் பிற நடவடிக்கைகள்:**

வாணிபக்குழுக்கள் தங்களுக்கென மண்டபங்கள் கட்டிக் கொண்டன. வாணிபர்கள் தங்களுக்குள் ஏற்படும் பிரச்சினைகளை குழுவின் நீதிமன்றங்களிலேயே முறையிட்டுத் தீர்த்துக் கொண்டனர். இந்த வாணிபக் குழுக்கள் தங்கள் உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவி, பண உதவி செய்தன. சிறைப்பட்டவர்களை பணம் கொடுத்து மீட்டுக் கொண்டன. வயதானவர்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்து கொடுத்தன. இறந்த உறுப்பினர்களின் சவ அடக்கத்திற்கு உதவி செய்தன. நகரங்களில் இருந்த கொவில்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு பண உதவி செய்தன. இவ்வாறு நகர வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் அனைத்திலும் இந்தக் குழுக்கள் பங்கெடுத்துக் கொண்டன.

**கைவினைஞர் குழுக்கள்:**

கைகளால் செய்யப்படும் பொருட்களை உற்பத்தி செய்து வந்த சிறு தொழிலாளர்களுக்கும், தங்களுக்குள் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். ஒவ்வொரு சிறு தொழிலுக்கும் ஒரு குழு அமைக்கப்பட்டது. ரொட்டி சுடுபவர்கள், கருமார்கள், தோல் வினைஞர்கள், ஆடுமாடு மேய்ப்பவர்கள் போன்ற பற்பல தொழில்களுக்கும் தனித்தனி குழுக்கள் இருந்தன. லண்டன், ஆக்ஸ்போர்டு, ஜெனோவா, வெனிஸ், பிளாரன்ஸ் ஆகிய நகரங்களில் ஏராளமான கைவினைஞர்கள் குழு இருந்ததாக அறிகிறோம். ஒவ்வொரு தொழிலிலும் பல்வேறு வகைகளுக்கும் பல்வேறு நிலைகளுக்கும் தனித்தனி குழுக்கள் இருந்தன.

**கைவினைஞர் குழுக்களின் வகைகள்:**

ஒவ்வொரு பெரிய நகரத்திலும் மூன்று வகையான கைவினைஞர் குழுக்கள் இருந்தன. முதலாவது வகை,உள்ளூர் மக்களின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்யும் பிரிவு தொழில்களைக் கொண்டவை. (உ.ம்) ரொட்டி செய்வோர், மெழுகுவர்த்தி செய்வோர், மது இறக்குவோர் போன்றவர்களைக் கொண்டவை. இரண்டாவது வகை உள்நாட்டவர்களுக்கு மட்டுமின்றி வெளி நாட்டவர்களுக்காகவும் பொருட்களை உற்பத்தி செய்த துணி நெய்குவோர், தோல் வினைஞர், உலோகத் தொழிலாளர்களின் முதலியோரைக் கொண்டவை ஆகும்.

மூன்றாவது வகை, மொத்தமாகப் பொருட்களை வாங்கி விற்றவர்களை கொண்டது. கம்பளித்துணி, எண்ணெய், வாசனைத் திரவியங்கள் பட்டு முதலியவற்றில் மொத்த வியாபாரம் செய்தவர்கள் இந்த வகையினைனச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இதில் முதல்வகைக் குழுக்கள் ஏறக்குறைய எல்லா நகர்களிலும் காணப்பட்டன. செல்வத்திலும் செல்வாக்கிலும் அவை உயர்ந்துநின்றன. இரண்டாவது வகைக் குழுக்கள் ஒருசில இடங்களில் மட்டுமே இருந்தன. மூன்றாவது வகைக் குழுவினர் வாணிபக் குழுக்களோடு சேர்ந்து கொண்டனர்.

**கைவினைஞர் குழுவின் அமைப்பு:**

கைவினைஞர் குழுவின் தலைவர் மாஸ்டர் அல்லது கைவினை வல்லுநர் எனப்பட்டார். குறிப்பிட்ட சிறு தொழிலைச் செய்வதரும் அதற்கு உரிமையாளரும் அவர் ஒருவரே. அவரே முதலாளி அவரே தொழிலாளி ஆவார். அவரது வீடேதொழிற்கூடம், அதுவே அவரது கடமையும் ஆகும். வாணிபக் குழுவில் ஒவ்வொரு மாஸ்டரும் ஒரு உறுப்பினராக இருத்தல் வழக்கம். கைவினை வல்லுநர் தன் கைகளாலேயே பொருட்களை முழுமையாகச் செய்து மனம் மகிழ்வர்.

கைவினை வல்லுநருக்கு அவரது மனைவி, மக்கள் ஓரளவு உதவுவர். மற்றபடி அவருக்கு நிரந்தரமாக உதவி செய்தவர்கள் பயிற்சி முற்றுப்பெற்ற தொழிலாளியான ஜர்னிமேனும் (Journey Man) பயிற்சி முற்றுப்பெற்ற தொழிலாளியான அப்ரன்டிசும் ஆகிய

இருவர் ஆவர். அவர்களும் கைவினைஞர் குழுவில் உறுப்பினர்களாவர். இவ்வாறு குழுக்களில் முதலாளிகளும் தொழிலாளிகளும் சேர்ந்தே இடம் பெற்றிருந்தனர்.

கைத்தொழில் ஒன்றை சுதந்திரமாகச் செய்யும் உரிமை இடைக்காலத்தில் சாதாரணமாகக் கிடைப்பதில்லை. மூன்று முதல் பன்னிரண்டு ஆண்டுகள் வரை ஒருவன் பயிற்சி பெற்ற பின்னரே அவன் ஒரு தொழிலைத் தனிப்பட்ட முறையில் நடத்தும் அனுமதியைப் பெறமுடியும். கைவினைப் பொருள்களை செம்மையாகச் செய்யக்கூடிய நிலையை ஒருவன் பெற்று விட்டபோது கைவினைச் செம்மல் (Master Craftsman) என்று அழைக்கப்பட்டான்.

பொதுவாக ஒரு கைவினைத் தொழிலில் ஈடுபட்டிருந்தவனின் மக்களும் அதே அதாழிலில் ஈடுபடுவது வழக்கம். ஆனால் இத்தகைய தொழில் அடிப்படையில் சாதிகள் அக்காலத்தில் தோன்றவில்லை. ஆனால் உயர்வு தாழ்வுகள் சமுதாயத்தில் பெரிதும் காணப்பட்டன.

**கைவினைஞர் குழுவின் சட்ட திட்டங்கள்:**

கைவினைஞர் குழு ஒவ்வொன்றுக்கும் கடுமையான பல சட்ட திட்டங்கள் இருந்தன. அந்த சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே ஒவ்வொரு மாஸ்டரும் உற்பத்தியில் ஈடுபடவேண்டும் தேவைக்கேற்ற அளவே பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. உற்பத்தி செய்யப்பட வேண்டிய பொருள்களின் அளவு அவற்றின் தன்மை முதலியவற்றை குழுவே தீமானித்தது. பயிற்சியாளர்கள் எத்தனை பேர் சேர்க்கப்படலாம் அவர்கள் எத்தனை ஆண்டு பயிற்சி பெற வேண்டும் பயணத் தொழிலாளிகளுக்கு (Journey Men) எவ்வளவ கூலி வழங்கலாம் என்பதையும் அது தீர்மானித்தது. கில்டு உறுப்பினர்களின் நோய் காலத்தின்போதும், விபத்தின் போதும், முதுமையின் போதும் நிதி உதவி செய்தது. நாடகங்கள், பண்டிகைகள், விருந்துகள் முதலியவற்றை ஏற்பாடு செய்து கில்டு உறுப்பினர்களின் வாழ்வில் உற்சாகத்தை ஊட்டியது.

கில்டு உறுப்பினர்களிடம் நன்கொடை பெற்றுக் கொண்டு அதன் உதவி கொண்டு உறுப்பினர்களின் திடீர்த் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இக்குழு உறுப்பினர்கள் தங்களுக்கென தனியாக கொடிகளையும், உடைகளையும் கொண்டிருந்தனர். இவ்வாறு குழுக்கள் சமுதாய உல்லாசக் கழகங்களாகவும், முதலாளிகளின் கூட்டுறவாகவும், சமயக்கூட்டாகவும் திகழ்ந்தன. ஒவ்வொரு குழுவும் தனது தொழில் அல்லது வியாபார ரகசியத்தை பாதுகாத்து வந்தன.

குழுவின் விதிகள் கண்டிப்பானவை. அவற்றை மீறியவர்கள் கடுந்தண்டனை பெற்றனர். பொருட்களைச் செம்மையாகச் செய்யதாவர்களும், குறிப்பிட்ட கூலிகளைக் கொடுக்காதவர்களும், குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் தொழிலாளிகளிடம் வேலை வாங்கியவரும், வரையறுக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்றவர்களும் குழுவிலிருந்து

விலக்கப்பட்டார்கள். மேலும் பொருட்களின் விலையைக் குழுவே நிர்ணயித்தது. உற்பத்திக்கு ஆகும் செலவு போக முதலாளிக்கு ஓரளவு லாபம் கிடைக்கும்படியாகவே விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அது நியாயவிலை (Fair Price) என்று அழைக்கப்பட்டது. நியாயவிலைக்கு மேல் அதிகமாக விற்றவர்கள் குழுவிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

**கில்டு முறையின் நன்மைகள்:**

1. கில்டு முறைப் பொருளாதாரத்தின் அடிப்படைக் கொள்கைகள் உண்மையிலேயே மிகச் சிறந்தவையாகும். இவற்றில் நாம் இடைக்கால கிறிஸ்தவ சமயத்தின் வாடையைக் காணலாம். கிறிஸ்தவ சமயம் எளிமையாக வாழ்வதே சிறந்தது என்றும், செல்வத்தை அளவுக்கு மீறி சேர்க்கக் கூடாது என்றும், வட்டி வாங்குவது பாவம் என்றும், மனிதனை மனிதன் ஏமாற்றுவது அதர்மம் என்றும் கூறி வந்தது. இத்தகைய சூழ்நிலையில் ஏற்பட்ட பொருளாதாரக் குழுக்களும் பொருளாதாரத் துறையில் நியாயத்தை வற்புறுத்தி வந்தன.

2. கில்டுகளில் கடைப்பிடிக்கப்பட்ட விதிகளில் தலையாயது சமுதாய மனப்பான்மையோடு கூடிய பொருளாதார நடவடிக்கை ஆகும். சமுதாயத்துக்குத் தேவையான பொருட்களையும், சேவைகளையும் செய்வதே கில்டுகளின் பொருளாதார நடவடிக்கைகளின் குறிக்கோளாக இருந்தன. அதிகமாகப் பொருள் சேர்ப்பதை கில்டுகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு சிலர் செல்வந்தர்களாக மாற, பலர் வறுமையால் வாடும் சூழ்நிலையை கில்டுகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

3. கில்டு முறையின் விளைவாக பொருளாதார நிறுவனங்கள் நியாயமான விலையை வற்புறுத்தின. ஒரு பொருளின் உற்பத்தி செலவைவிட கொஞ்சம் அதிகமாக வைத்து விற்பதே நியாயம் என்று கருதப்பட்டது. அளவுக்கு மீறி லாபம் வைத்து விற்பது பாவம் என்று கருதப்பட்டது.

4. ஒரு மனிதன் தன் தேவைகளுக்கு மீறி பொருட்களைச் சேர்ப்பதும் தடுக்கப்பட்டது. ஒருவனது தேவைக்கு மேற்பட்டு அவனிடம் வந்து சேர்கின்ற பொருள் சமுதாயத்துக்கே சொந்தம் என்று கருதப்பட்டது. அதிகமாக சேரும் பணம் சமதாய நலன்களுக்கு என்று கருதப்பட்டது. அதிகமாக சேரும் பணம் சமுதாய நலன்களுக்கு செலவு செய்யப்படும் நிலை காணப்பட்டது.

5. சமுதாயத்துக்குப் பயன்படக்கூடிய வகையில் ஊழியம் புரியாத எவரும் ஊதியம் பெறுதல் கூடாது என்ற கருத்து ஏற்பட்டது. ஊழியத்திற்கேற்பவே ஒருவனது வருமானம் இருக்க வேண்டும். எந்தவித சமுதாய சேவையுமின்றி ஈட்டப்படும் செல்வம் பாவகரமானது என்று நம்பப்பட்டது.

**கில்டு முறையின் வீழ்ச்சிக்கான காரணங்கள்:**

1. கில்டு முறை சிறு சிறு மக்கள் கூட்டங்களுக்கு பெரிதும் ஏற்றவையாக இருந்தது. ஆனால் சமுதாயம் பெரிதக விரிவடையும்போதும், பொருளாதாரம் பெரிய அளவில் நடைபெறும் போதும் கில்டு முறையின் கொள்ளைகள் நடைமுறைக்கு ஒவ்வானதாகப் போய்விடுகின்றன.

2. வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப பொருட்களை கில்டுகளால் உற்பத்தி செய்ய இயலவில்லை. புதிய தொழிலாளிகள் மிகவும் அரிதாகவே குழுக்களில் சேர்க்கப்படடனர். மேலும் இந்த கில்டுகள் புதிய உற்பத்தி முறைகளை ஊக்குவிக்க மறுத்தன. சுயநலமிக்க பணக்காரக் கும்பல்களாக நாளடைவில் கில்டுகள் மாறின.

3. கில்டுகளில் உள்ள தொழலாளிகளுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்பட்டது. பதினான்காம் நூற்றாண்டில் வறுமையால் வாடிய பல பயணத் தொழிலாளிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.

4. நவீன காலத்தில் புதிய கடல் வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு உலக வாணிபம் தழைக்கத் தொடங்கிய போது கில்டுகள் தாமாகவே வீழ்ச்சியடைந்தன. ஏராளமான பொருட்களைக் குறைந்த காலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்ட போது அவற்றோடு போட்டியிட கில்டுகளால் முடியவில்லை.

5. இறுதியாக அரசின் ஆதரவும் மக்களின் ஆதரவும் கில்டுகளுக்குக் கிடைக்கவில்லை. இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும் பிரெஞ்சு நாட்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சியும் சேர்ந்து இடைக்கால கில்டு முறை பொருளாதாரத்துக்கே சாவுமணி அடித்துவிட்டது.

## பரிதிநிதித்துவச் சபைகளின்

## தோற்றமும் வளர்ச்சியும்

## (RISE AND GROWTH OF REPRESENTATIVE INSTITUTIONS)

**இங்கிலாந்தில் பாராளுமன்றத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

இன்று உலக நாடுகளில் உள்ள பாராளுமன்றங்களுக்கெல்லாம் தாய்ப்பாராளுமன்றமாக (Mother of Parliaments) இங்கிலாந்தின் பாராளுமன்றம் விளங்குகின்றது. அதன் தோற்றமும் வளர்ச்சியும் அதானாக நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் விளைவேயன்றி, அத்தகைள மன்றத்தைத் தோற்றுவிக்கத் திட்டமிட்டு எவராலும் எந்தக் குறிப்பிட்ட காலத்திலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இம்மன்றம் அரசனின் அதிகாரத்தின் அடிப்படையில் தோன்றியதேயன்றிப் புரட்சியினால் ஏற்படுத்தப்பட்ட

நிறுவனம் அல்ல. அதன் வளர்ச்சியும் வலிமையும் காலப்போக்கில் நடந்த வரலாற்று நிகழ்ச்சிகளின் வியைவாக ஏற்பட்டவையே ஆகும்.

**விடான் (Witan)**

ஆங்கிலோ – சாக்சானியர்கள் (Anglo – Saxons) இங்கிலாந்தை ஆண்டு வந்த காலத்தில் விடான் அரசருக்கு ஆலோசனை வழங்கும் சபையாக இருந்தது. அச்சபையில்பெருஞ்செல்வந்தர்களே உறுப்பினர்களாக இருந்தார்கள். அந்நாளில் செல்வம் படைத்தவர்களே அறிவிற் சிறந்தவர்களாகக் கருதப்பட்டனர். மன்னரைத் தேர்ந்தெடுக்கவும் பதவியிலிருந்து நீக்கவும் விடான் உரிமை பெற்றிருந்தது. எனினும் அச்சபையின் உண்மையான வலிமை மன்னரைப் பொறுத்தே இருந்தது. மன்னர் திறம்படைத்தவராயின் விடான் அவருக்குக் கீழ்ப்படிந்திருந்து. அவர் திறமையற்றவராயின் அச்சபை வலிமைமிக்கதாகச் செயல்பட்டது.

**கியுரியா ரெஜில் (Curia Regis)**

11 ஆம் நூற்றாண்டிலிருந்து நார்மானியர்கள் இங்கிலாந்தில் ஆட்சி செலுத்தினர். இந்நார்மானியர்களே இங்கிலாந்தில் நிலமானியத் திட்டத்தைப் புகுத்தியவராவார். அந்நிலமானியத்திட்டத்தின் அடிப்படையில் அரசர் தனக்குப் பல்வேறு விதமான ஆட்சித்துறை அலுவல்களில் உதவி செய்யக் கியுரியா ரெஜிஸ் என்ற சபையை வைத்திருந்தார். இச்சபையில் பெரும்பாலும்பிரபக்கள், மதகுருமார்கள் போன்ற நிலமானியப் பெருங்குடிகளே உறுப்பினர்களாக இருந்தனர். இவர்களைத் தவிர அரசாங்க உயர் அதிகாரிகள், நீதிபதிகள், அரசரின் செயலர், மற்றும் படைத்தளபதி போன்றவர்களும் இச்சபையில் உறுப்பினர்களாக இருந்தனர்.

அதன் உறுப்பினர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்படாதவர்கள் ன்பதும், அரசராலேயே நியமிக்கப்பட்ட, அரசனுக்கு வேண்டிய ஆள்களே என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக அரசர் எல்லா உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுப்பதில்லை. ஆனால் முக்கியமான சில நேரங்களில் முழுச்சபையைக் கூட்டினர். அச்சபை பெருஞ்சபை (Great Council) என்றழைக்கப்பட்டது. நடைமுறையில் ஒருசில உறுப்பினர்களையே அரசர் நிரந்தரமாக அழைத்தார். இவர்களைக் கொண்ட சிறுசபையே அரசருடைய ஆலோசனைச் சபையாக இயங்கியது.

**மூன்றாம் ஹென்றி காலத்தில் பாராளுமன்றத்தில் வளர்ச்சி**

ஜான் மன்னருக்குப்பின் மூன்றாம் ஹென்றி (1213-1272) இங்கிலாந்தின் அரசரானார். இவர் ஆட்சிக்காலத்தில் தான் அரசரின் பெருஞ்சபை விரிவுபடுத்தப்பட்டது. அச்சபைக்குப் பெருநிலக்கிழார்கள், பிரபுக்கள், திருச்சபையின் உயர் அதிகாரிகள், மடாலயத்தலைவர்கள்

ஆகியோரைத் தவிர பரோக்கள் (Boroughs) என்று சொல்லப்பட்ட நகரங்களிலிருந்தும், ஷையர்கள் (Shires)என்று சொல்லப்பட்ட மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர்.

ஏறகுறைய எல்லாப் பிரிவினரும் இதில் பிரதிநிதித்துவம் பெற்றனர். அச்சபையே பாராளுமன்றம் என்று அழைக்கப்பட்டது. பரோக்களிலிருந்தும் ஷையர்களிருந்தும் வந்த பிரதிநிதிகள் பல சமூகத்தினரை பரதிநிதித்துவம் செய்தனர். அவர்கள் பொதுமக்கள் என்றே அழைக்கப்பட்டனர். இந்தப் பெயரிலிருந்ஆத பின்னர் பொதுமக்கள் சபை அல்லது காமன்ஸ் சபை என்று கீழ்ச்சபை அழைக்கப்பட்டது.

இவ்வாறு விரிவுபடுத்தப்பட்ட பெருஞ்சபை அல்லது பாராளுமன்றம் இரண்டு முக்கியமான பணிகளைச் செய்தது. முதலாவதாக, அரசருக்கு அவர் மக்கள் மீது விதிக்கும் வரிகளுக்கு அனுமதி தந்தது. இது போன்ற பணத்தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் பாராளுமன்றம் கூட்டப்பட்டது. இரண்டாவதாக, பாராளுமன்றத்திற்கு வரும் உறுப்பினர்கள் தங்களுக்குள்ளே பலவிதமான குறைகளைப் பற்றி அரசரிடம் முறையிட்டனர். அதற்கான தீர்வுகளைக் காண அரசர் உறுப்பினர்களைக் கலந்து ஆலோசனைகளையும் அறிவுரையையும் பெற்று நீதி வழங்கினார். அவ்வாறு நீதி வழங்கவே பாராளுமன்றம், கூட்டப்பட்டது. இவ்விரண்டு வேலைகள் முடிவடைந்தவுடன் ஷையர்களிலிருந்தும், பரோக்கிலிருந்தும் வந்த உறுப்பினர்கள் கலைந்து சென்றனர். முன்னரே இருந்த அரசரின் ஆலோசனை சபை மட்டும் தொடர்ந்து செயல்பட்டது. இத்தகைய முறை முதலாம் எட்வர்ட்டின் (நுனறயசன) ஆட்சிக்காலம் நீடித்தது.

பாராளுமன்ற வளர்ச்சிக்குச் சைமன் - டி- மாண்ட்போர்டின் பணி

மூன்றாம் ஹென்றியின் ஆட்சிக்காலத்திலேயே சைமன்-டி- மாண்ட்போர்ட்டின் தலைமையில் பிரபுக்களுக்கும் அரசருக்கும் உள்நாட்டுப் போர்கள் ஏற்பட்டன. அப்போர்களும் அதன் விளைவுகளும் பாராளுமன்றத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன.

சைமன், மூன்றாம் ஹென்றியின் தங்கையையே திருமணம் செய்து கொண்டிருந்தார். இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட பிரான்சிலிருந்த காஸ்கனி என்ற பகுதிக்குச் சைமன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அப்பகுதியைச் சைமன் சிறந்த முறையில் ஆட்சி செய்து வந்தார். ஆயினும் சைமனுக்கும் மூன்றாம் ஹென்றிக்கும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. எனவே, அரசர் சைமனைப் பதவியிலிருந்துப் நீக்கினார். சைமன் இங்கிலாந்துக்குச் சென்று அரசரின் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு மக்களின் உரிமைகளுக்காகப் போரிட முனைந்தார்.

1258 ஆம் ஆண்டில் மூன்றாம் ஹென்றிக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டதால், அதனை ஈடு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப் பிரபுக்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஆக்ஸ்போர்டில் பிரபுக்கள், திருச்சபையைச் சார்ந்தோர் மற்றும் பாரோக்களிலிருந்தும்

ஷையர்களிலிருந்தும் வந்த அனைவரும் சைமனின் தலைமையில் மன்னரைச் சந்தித்தனர். வந்தவர்களுள் பெரும்பாலர் ஆத்திரத்தோடும், கணக்கிலடங்காக் குறைபாடுகளுடனும் ஆயுதங்கள் ஏந்தியும் வந்திருந்தனர். எனவே தான ஆக்ஸ்போர்டில் கூடிய கூட்டம் பைத்தியக்காரப் பாராளுமன்ற (Mad Parliament of 1258) என்று அழைக்கப்படுகிறது.

இக்கூட்டம் இருபத்து நான்கு பேர் கொண்ட குழுவை நியமித்து, அரசாங்கத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்யும்படிப் பணித்தது. அக்குழுவும் பல சீர்த்திருத்தங்களை அறிவித்தது. அது ஆக்ஸ்போர்டு ஒப்பந்தம் (Mise of Oxford) என்று வழங்கப்படுகிறது. அதன்படிச் சைமன் தலைமையில் பதினைந்து டீபர் கொண்ட குழுவொன்று நிறுவப்பட்டது. அகிகுழு அரசு செயல்படுவதை மேற்பார்வை செய்தல் அரசர் தவறான முறைகளில் மக்களிடமிருந்து வரிகளை வசூலிப்பதைத் தடுத்தல், நீதியை நிலை நாட்டுதல் போன்ற வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது. இது ஒழுற்காகச் செயல்படுவதற்குள் பிரபுக்களிடையே ஒற்றுமை குலைந்து சைமனுக்கு ஆதரவாளர்கள் குறைந்து விட்டனர்.

இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிரபுக்களின் அதிகாரங்களையும் வலிமையும் அடக்கவதற்காக அரசர் மூன்றாம் ஹென்றியும் அவருடைய மகன் எட்வர்டும் முயன்றனர்.மீண்டும் பிரபுக்கள் மற்றும் திருச்சபையைச் சார்ந்தோர் சைமனின் தலைமையில் போரில் ஈடுபட்டனர். இப்போர் பிரபுக்கள் போர் என்று சொல்லப்படுகின்றது. போரிலும் சைமனின் படைகளே லண்டனைக் கைப்பற்றி வெற்றி பெற்றன.

அரசருக்கும் பிரபுக்களுக்கும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க இரு பிரிவினரும் பிரான்சு நாட்டு மன்னன் ஒன்பதாம் லூயியின் உதவியை நாடினர். ஆனால் லூயி, ஹென்றிக்குச் சாதகமாகவே தன் தீர்ப்பை அறிவித்தார். ஆனால் சைமனைச் சார்ந்த பிரபுக்கள் அத்தீர்ப்பை ஏறங்க மறுத்து மீண்டும் போர் தொடுத்தனர். லூயிஸ் (Battle of Lewes – 1264 ) என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் அரசரின் படைகள் தோற்கடிக்கப்பட்டு அரசரும் அரசருடைய மகன் எட்வர்ட்டும் கைது செய்யப்பட்டனர். சைமன் இங்கிலாந்தின் ஆட்சியாளராகவே மாறினார்.

**பிரதிநிதித்துவப் பாராளுமன்றம் : 1235**

சைமன் அடுத்த ஆண்டே பாராளுமன்றத்தைக் கூட்டினார். முன்னரே பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கத் தகுதஜயுடையவர்களைத் தவிர பாரோக்களிலிருந்தும், ஷையர்களிலிருந்தும், இரண்டு நைட் வீரர்களையும், இரண்டு பரோ வாசிகளையும், இரண்டு சாதாரணக் குடிமக்களையும் அப்பாராளுமன்றத்திற்கு வரும்படி அழைத்திருந்தார். இது எல்லா இனத்தவரையும் பிரதிநிதித்துவம் செய்தது. பிரான்சு நாட்டு ஸ்டேட்ஸ் ஜெனரலைப் போல் அல்லது எல்லா பிரிவினரும் ஒன்றாகவே கூடினர். எனவே தான் இது பிரதிநிதித்துவப் பாராளுமன்றம் (Representative Parliament of 1265) என்று அழைக்கப்பட்டது.

இன்று இங்கிலாந்தில் உள்ள காமன்ஸ் சபைக்கு முன்னோடியாக இருந்தது இப்பாராளுமன்றமேயாகும். அதனால் சைமன் - டி- மாண்ட்போர்ட் இங்கிலாந்து காமனடஸ் சபையின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் காரணமாக இருந்தவர்களுள் மிக முக்கியமானவராகக் கருதுகின்றனர். என்றாலும், அவர் கூட்டிய பாராளுமன்றத்தில் அவருக்குச் சாதாகமான பகுதிகளிலிருந்தே உறுப்பினர்கள் அழைக்கப்பட்டனர் என்பதனைக் கருத்தில் கொள்வது அவசியமாகும்.

முதலாம் எட்வர்டும் (1272-1307) பாராளுமன்றம்

எட்வர்ட் ஸ்காட்லாந்துடனும் வேல்சுடனும் போரிட வேண்டியிருந்தது. அதற்கு அவருக்குப் பொரும் பணம் தேவைப்பட்டது. எனவே கி.பி. 1292 ஆம் ஆண்டில் பெரியதொரு பாராளுமன்றத்தைக் கூட்டினார். அப்பாராளுமன்றத்திற்குப் பிரபுக்கள், பெருநிலக்கிழார்கள், தலைமை மதகுருக்கள், மடாலயத் தலைவர்கள், குருமார்கள், பரோக்களிலிருந்தும் ஸையர்களிலிருந்தும் நைட்வீரர்கள், நகரவாசிகள், சாதாரணக் குடிமக்கள் ஆகிய அனைவரையும் எட்வர்ட் அழைத்திருந்தார். எல்லாப் பிரிவினரும், வருக்கத்தினரும் இதில் பிரதிநிதித்துவம் பெற்றனர். எனவே தான் இது மாதிரிப் பாராளுமன்றம் (Model Parliament) என்றழைக்கப்படுகிறது.

எனினும், சில வரலாற்றாசிரியர்கள் அது மாதிரிப் பாராளுமன்றம் அல்ல என்று கருதுகின்றனர். ஏனெனில், முதலாவதாக அப்பாராளுமன்றம் இன்றுள்ள மன்றங்களைப் போல மேல்சபை, கீழ் சபை என இரண்டு ஷையர்கள் முதலானவற்றிலிருந்து வந்த பிரதிநிதிகள் பாராளுமன்றத்தின் நிரந்தர உறுப்பினர்களாகக் கருதப்படவில்லை. அவர்கள் அரசரின் வரித்திட்டத்திற்கு ஒப்புதலளித்த பின்னர், அரசர் நீதி வழங்கிய பின் கலைந்து சென்றனர். மூன்றாவதாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாகவே கூடினாலும் அவர்களுள் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளப்பட்டன.

அரசர், அவருடைய உயர் அதிகாரிகள், பிரபுக்கள் மற்றும் மடாலயத் தலைவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்க, நகரங்களிலிருந்தும் மாவட்டங்களிலிருந்தும் வந்த பிரதிநிதிகள் கீழ்ப்படிதலுடன் கைநீட்டி நின்று கொண்டிருந்தனர். சட்டம் இயற்றுவதிலோ, அயல்நாட்டு விவகாரங்களைப் பற்றி விவாதிப்பதிலோ முதலாம் எட்வர்ட் கூட்டிய பாராளுமன்றத்திற்கு முக்கியப் பங்கு எதுவும் இல்லை. ஆட்சிப் பொறுப்பு அனைத்திற்கும் மன்னரே மையமாக இருந்தார். தனித்தன்மை வாய்ந்த அமைப்பாகப் பாராளுமன்றம் இயங்க வில்லை.

எட்வர்ட்டின் காலத்தில் பாராளுமன்ற வளர்ச்சிக்கான மற்றொரு முக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது. அவர் காலம் வரை நிதித்தெதாடர்புடைய முடிவுகளை எடக்க ஒரு பாராளுமன்றக் கூட்டமும் கூட்டப்பட்டு வந்தன. இவ்விரு கூட்டங்களையும் எட்வர்ட் ஒன்றாக இணைத்தார். அதுமுதல், நிதித்தொடர்புடைய செயல்களும், நீதித் தொடர்புடைய விவகாரங்களும் ஒரே கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

1297 ஆம் ஆண்டில் ஸ்காட்லாந்துடன் பிரான்சுடனும் இங்கிலாந்து போர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. நிதிப்பற்றாக்குறைக் கடுமையாக இருந்தது. கம்பளி வாணிகம் செய்யும் வணிகர்களிடம் மதலாம் எட்வர்ட் பணம் கேட்டார். அவர்கள் தர மறுத்து விட்டனர். திருச்சபையைச் சார்ந்தோரும் அரசருக்குத் தர வேண்டிய பணத்தைத் தர மறுத்துவிட்டனர். ஏனெனில் அப்பொழுதுதான் போப் எட்டாம் போனிபேஸ் (Pope Boniface VIII) குரமார்கள் எவரும் பணம் செலுத்தக் கூடாதென ஆணையிட்டார்.

எனவே, வணிகப் பிருபுக்கள் மீதும் மதகுருமார்கள் மீதும் முதலாம் பொர் தொடுக்கப் பிளான்டர்சுக்குப் போகுமுன் எட்வர்ட் பெருவணிகர்களின் கம்பளிக் குவியல்கனைப் பறிமுதல் செய்தார். வணிகர்கள் தங்கள் கம்பளிக் குவியல்களைத் திரும்பப் பெறுவதற்குப் பெறுவதற்குப் பெருந்தொகையை அரசருக்குத் தர வேண்டியதாயிற்று. இவ்வாறு வந்த பணத்துடன் எட்வர்ட் பிளாண்டர்சுக்குச் சென்று விட்டார்.

முதலாம் எட்வர்ட் இங்கிலாந்தில் இல்லாத நேரத்தில் பிரபுக்களும் மதகுருமார்களும் ஹெர்போர்ட் நார்போக் ஆகிய பிரபுக்களின் தலைமையில் அரசனின் வரம்பு மீறிய செயலை எதிர்த்து உரிமைப் போராட்டம் நடத்தினார்கள். அதன் விளைவாக அரசர் பிளாண்டர்சிலிருந்தே 1215 ஆம் ஆண்டில் ஜான் மன்னர் வழங்கிய மகா சாசனத்தையும் அதன் மற்றொரு பகுதியாகிய காடுகள் பற்றிய சாசனத்தையும் மதித்து நடப்பதாக உறுதியளித்தார். இனி பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரி விதிப்பதோ மக்களிடமிருந்து வேறுவிதமான பெண உதவியைப் பெறுவதோ இல்லையென ஒப்புக் கொண்டார். இந்நிகழ்ச்சி முதலாம் எட்வர்ட் காலத்திலேயே பாராளுமன்றம் அரசனின் அதிகாரங்களையும் நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தம் அளவுக்கு அளவுக்கு வலிமை பெற்றுவிட்டது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது.

**மூன்றாம் எட்வர்ட் காலத்தில் பாராளுமன்றத்தின் வளர்ச்சி**

மூன்றாம் எட்வர்ட் (1327-1377) பிரான்சுடன் நூறாண்டுப் போரில் ஈடுபட்டுத் தன் முழு நேரத்தையும் பணத்தையும் அதற்காகச் செலவிட வேண்டியிருந்தது. அதனால் அடிக்கடி பாராளுமன்றத்தையும் கூட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதியுடனே அவர் எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

மேலும், எட்வர்ட் காலத்தில் தான் பாராளுமன்றம் இரு சபைகளாகப் பிரிந்தது. அத்தகைய பிரிவு தானாக எற்பட்டதேயன்றி திட்டமிட்டுச் செய்யப்பட்டது அல்ல. எட்வர்ட் சில நேரங்களில் பெரும் பிரபுக்களையும் திருக்கபையின் தலைமை மதகுருக்களையும் மற்றும் பெருநிலக்கிழார்களையும் மட்டுமே தனிப்பட்ட முறையில் அழைத்து அவர்களின் அனுமதியைப் பெற்றுப் பல நடவடிக்கைகளை எடுத்தார். வேறு சில நேரங்களில் மாதிரிப் பாராளுமன்றத்தில் கூட்டப்பட்டதைப் போன்று அனைவரையும் அழைத்து நிதித்தொடர்புடைய நடவடிக்கைகளை எடுக்க அனுமதியைப் பெற்றார். ஈதுகாலப் போக்கில் இரு சபைகளாக

வளரலாயிற்று. பிரபுக்களையும் மதகுருமார்களையும் கொண்ட பிரிவு பிரபுக்கள் சபை எனவும், மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பிரிவு காமன்ஸ் சபை எனவும் வழங்கலாயின.

1340 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் அனுமதியின்றி மக்கள் மீது எந்தவிதமான வரியையும் விதிப்பதில்லையென ஒப்புக் கொண்டார். 1343 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தின் ஒப்புதலின்றி வணிக வரிகளிலும் எந்தவித மாறுதலும் செய்வதில்லையென உறுதியளித்தார்.

இவ்வரசர் காலத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர்களின் குறைகளைத் தீர்க்க அரசர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. குறைகளைத் தீர்த்தால் தான் பணம் வழங்கப்படும் என்று உறுப்பினர்கள் வலியுறுத்தினர். பாராளுமன்றம் அனுமதிக்கும் வரிகளின் மூலம் வரும் பணத்தைச் சரியான முறையில் அரசர் செலவிடுகிறாரோஎன்பதை அறியவும், மற்றும் கணக்குகளைத் தணிக்கை செய்யும் உரிமையையும் பாராளுமன்றம் பெற்றது. போர் காலங்களில் நாட்டைக் காக்க அரசரிடம் பெரும்படை இல்லை. அதற்கு அரசர் பாராளுமன்றத்தின் அனுமதியையே நம்பியிருந்தார்.

தவறு செய்யும் அமைச்சர்கள் மற்றும் உயர் அலுவலர்களை துரோக குற்ற விசாரணை செய்து, அவர்களைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தையும் பாராளுமன்றம் மூன்றாம் எட்வர்டடின் காலத்திலேயே பெற்றது. லாடிமெர் பிரபு, மற்றும் லியோன்ஸ் ஆகிய அமைச்சர்களை 1376 ஆம் ஆண்டில் பாராளுமன்றம் அத்தகைய குற்ற விசாரணை செய்து தண்டனை செய்து, தண்டனை கொடுத்தது. இங்கிலாந்தின் வரலாற்றில் இதுவே முதல் துரோக குற்ற விசாரணையாகும். 1376 ஆம் ஆண்டு அதனை நிறைவேற்றிய பாராளுமன்றம் நல்ல பாராளுமன்றம் (Good Parliament) என்றழைக்கப்படுகிறது.

இத்தகைய துரோகக் குற்ற விசாரணையைத் தவிர அரசர்களை அரியணையிலிருந்து நீக்கிப் புதிய அரசரை நியமிப்பதிலும் பாராளுமன்றம் பங்கு கொண்டிருந்தது. இரண்டாம் எட்வா்ட் (1307-1327) அரசராக இருந்த பேது பிரபுக்கள், மாா்டிமொ் என்பவா் தலைமையில் அரசால் எதிர்த்துப் பல உரிமைகளுக்காகப் போரிட்டனா். பிரபுக்களுக்குச் சாதகமாக அரசனின் மனைவி இசபெல்லா உதவி செய்தாள். பிரபுக்கள் அரசனின் உப அலுவலா்கள் ஹக் டிஸ்பென்சாகள் என்றவாகளை தோற்கடித்து இரண்டாம் எட்வா்டைப் பதவி விலகும்படிச் செயதவா் இதனை உறுதிசெய்யக் 1327 ஆம் ஆண்டு பாராளுமனன்றம் கூட்டப்பட்ட அப்பாராளுமன்றம் எட்வாடைப் பதவி விலக்கம் செய்தது. இந்நிகழ்ச்சிகள் 1327 ஆம் ஆண்டுப புரட்சி என்று சொல்லப்படுகிறது.

இதே போல இரண்டாம் ரிச்சாடின (Richard 1377-1399) ஆட்சிகாலத்தின் ஈறுதியில் பாராளுமன்றம் அவரைப் பதவி விலக்கம் செய்து நான்காம் ஹென்றியை அரசராகக்கியது. இது 1399 ஆம் ஆண்டுப் புரட்சி என்று சொல்லப்படுகின்றது.

பாராளுமன்றம் படிப்படியாக புதிய அதிகாரங்களைப் பெற்ற போதிலும்,உண்மையில் அது வலிமை பெற்ற மன்றமாக விளங்கியதென்று கருதமுடியாது. ஏனெனில், எந்தக் குறீப்பிட்ட நேரத்திலும் அரசரோ அல்லது பிரபுக்களோ தான் வலிமை மிக்கவா்களாக இருந்தனா். பாராளுமன்றத்தில் அவா்களின் கைப்பாவையாக இருந்ததென்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

இரண்டாம் ரிச்சா்ட்டின் வீழ்ச்சிக்குப் பின் லங்பாஸ்டிரிய வமிசத்தை சாா்ந்த அரசா்கள் ஆட்சி செலுத்தினா். அவாக்ள் காலத்தில் வரம்புகள் மடியாட்சி ஏற்படுத்துவதன் பொருட்டு பெரும் அரசியல் அமைப்பு பரிசோதனை (Lancastrian constitutional Experiment) நடந்ததென வரலாற்றுப் பேராசிரியா்கள் கருதுகினன்றனா். ஆனால் அத்தகைய பரிசோதனை எதுவும் நடைபெறவில்லை என்பதே உண்மையாகும். லங்காஸ்டி மன்னா்கள் வலிமையிழந்தவா்களாக, பாராளுமன்றத்தின் அதிகாரத்தில் உட்பட்டவர்களாக இருந்தனரென்று உண்மைதான். அதற்குக் காரணம் அவர்கள் அரியணையேறுவதற்குரிய தகுந்த வாரிசுகள் அல்லர் என்பதேயாகும். அவர்கள் தொடர்ந்து ஆட்சி செலுத்த வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பும் ஒப்புதலும் அவர்களுக்கு மிகவும் தேவைப்பட்டது. எனவே தான் அம்மன்னர்கள் பாராளுமன்றத்தின் விருப்பத்திற்கிணங்க ஆட்சி செலுத்தினார்கள்.

லங்காஸ்டிரிய மன்னர்களுக்குப் பின்னர் ஆட்சி செலுத்திய யார்கிஸ்ட் மன்னர்கள் காலத்தில் அரசனுடைய அதிகாரத்தை வலுப்படுத்த முயற்சிகள் மேற்ொகள்ளப்பட்டன. எனினும், அவர்களுக்குப் பின்னர் ஆட்சி செய்த டியூடர் மன்னர்களின் காலத்திலே தான் வல்லாட்சி நிறுவப்பட்டது. அவ்வாட்சி மக்களால் வரவேற்கப்பட்ட வல்லாட்சியாக இருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

**பிரான்சில் ஸ்டேட்ஸ் ஜெனரல் (States General)**

இங்கிலாந்தைப் போலவே பிரான்சிலும் நிலமானியத் திட்டத்தின் அடிப்படையில் பிரபுக்கள் வலிமை பெற்றிருந்தனர். போர்க்காலங்களில் படை உதவிக்கும் நிதி உதவிக்கும் அரசர் பிரபுக்களையே நம்பியிருந்தார்.

காபெட் வமிசத்து அரசர் மூன்றாம் பிலிப்பின் (Philp III: 1270-1285 A.D) ஆட்சிகாலத்திலேயே குருமார்கள் மற்றும் பிரபுக்களின் கூட்டத்தைக் கூட்டி அவர்களின் ஆலோசனையை அவர் பெற்றார். அவ்வாறு கூட்டப்படும் போது குருமார்களின் கூட்டமும் பிரபுக்களின் கூட்டமும் தனித்தனியாகத் தான் கூட்டப்பட்டன. எனினும், நான்காம் பிலிப்பின் (Phili IV: 1285 – 1314 A.D)ஆட்சிக்காலத்தில் தான் குரமாரக்ள், பிரபுக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் (The Clergy, the Nobility and the Third Estate) அனைவரும் கூட்டப்பட்டனர். அவ்வாறு கூட்டப்படுவதற்கு மிக முக்கியமான அவசியம் ஏற்படவேதான் பிலிப் அச்சபைகளைக் கூட்டினார்.

நான்காம் பிலிப்புக்கும், போப் எட்டாம் போனிபேசுக்கும் (Boniface VIII: 1294-1303 A.D) அதிகாரப் போராட்டம் ஏற்பட்டது. அப்பொழுது பிரான்சில் உள்ள எல்லா இனத்தவரின் ஆதரவும் தனக்கு உள்ளது என்பதை நிரூபிக்கவும், அவர்களின் ஆதரவும் உதவியும் தனக்குப் பக்கபலமாக இருக்கவும் 1302 அம் ஆண்டில் ஸ்டேட்ஸ் ஜெனரல் (States General) என்று சொல்லப்பட்ட குருமார்கள், பிரபுக்கள் மற்றும் பொதுமக்களின் பிரதிநதிதிகள் அடங்கிய பேரவையை நான்காம் பிலிப் கூட்டினார். மூன்று வரக்கத்தினரையும் கூட்டியது இதுவே முதன் முறையாகும். மேலும், இம்மூன்று அவைகளும் தனித்தனியே கூடி, விவாதித்து, கலைந்து சென்றன. ஸ்டேட்ஸ் ஜெனரல் என்பது ஒரே பேரவை என்றாலும் அதில் உண்மையில் 5ன்று சபைகள் இருந்தன. அம்5ன்று சபைளில் குருமார்கள் சபை, பிரபுக்கள் சபை ஆகிய இரண்டையும் விடப் பொதுமக்கள் சபையே எண்ணிக்கையில் மிகப் பெரியது. அப்படியிருந்தும் முதலிரண்டு சபைகள் எடுக்கும் நடவடிக்கைகளையும், தீர்மானங்களையும் பொதுமக்கள் சபை தடுத்து நிறுத்த முடியாத நிலையிலிருந்தது. மற்றும் வாக்குரிமை தனித்தனிநபருக்கு என்றில்லாமல் சபை அடிப்படையிலேயே இருந்தது.

1302 ஆம் ஆண்டுக்குப் பிறகு பணஉதவி பெறுவதற்காக ஸ்டேட்ஸ் ஜெனரலை நான்காம் பிலிப் பலமுறை கூட்டினார். அத்தனை முறையும் மூன்று சபைகளும் தனித்தனியே தான் கூட்டப்பட்டன. எல்லா இனத்தவரின் பிரதிநிதிகள் அடங்கிய இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றம் ஒன்றாகவே கூடி விவாதித்து நடவடிக்கைகளை எடுத்தது என்பது இதனுடன் ஒப்பு நோக்கற்பாலது. அதோடு இங்கிலாந்துப் பாராளுமன்றம் மன்னரின் அதிகாதரங்களைக் கட்டுப்படுத்தியது.

மாறாக பிரான்சின் ஸ்டேட்ஸ் ஜெனரல் மன்னருக்கு வரம்பிலா அதிகாரங்களைக் கொடுத்தது. தன் வலிமையையும் அதிகாரங்களையும் இழந்து கொண்டு வந்தது. வலிமையில்லா இந்த ஸ்டேட்ஸ் ஜெனரலை பிரெஞ்சு அரசர்கள் அதிகமாக நமிபியிருக்கவில்லை. அதனால் தான் பிற்காலத்தில் கி.பி. 1614 ஆம் ஆண்டிலிருந்து கி.பி. 1789 ஆம் ஆண்டு வரை நூற்று எழுபத்தைந்து ஆண்டுகால இடைவெளியில் ஸ்ரீ ஒரு முறை கூட ஸ்டேட்ஸ் ஜெனரலைக் கூட்டாமலேயேப் பிரெஞ்சு அரசர்கள் ஆட்சி செய்தனர்.

இவ்வாறு இங்கிலாந்துப் பாராளுமன்றத்தினின்று பல விதங்களில் மாறுபட்ட பிரதிநிதித்துவமன்றமாக ஸ்டெட்ஸ் ஜெனரல் விளங்கியது.

**ஸ்பெயினில் கார்டெஸ் (Cortes)**

இங்கிலாந்து மற்றும் பிரான்சு நாடுகளில் பிரதிநிதித்துவப் பேரவைகள் தோன்றுவதற்கு முன்னரே ஸ்பெயினில் விசிகோத் அரசர்களின் (Visigoth Kings) ஆட்சிக் காலத்திலேயே அரசர்களுக்கு ஆலோசனை வழங்க பிரபுக்களின் சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டு இருந்தது. இச்சபையே பின்னர் பிரபுக்கள் மற்றும் குருமார்களின் பிரதிநிதிகளின் சபையாக மாறியது.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் முக்கியமான நகரங்களிலிருந்து நகரப் பிரதிகளும் அழைக்கப் பெற்றனர். அதன் பின்னர் நைட் வீரர்களும் அழைக்கப்பட்டார்கள்.

இவ்வாறு ஸ்பெயினில் இருந்த கார்டெஸ் என்ற பேரவையில் பிரபுக்கள், குருமாத்கள், நைட்வீரா்கள் மற்றும் நகரங்களின் பிரதிநிதிகள் உறுப்பனா்களாக ஈருந்தார்கள். இப்பபேரவை இங்கிலாந்துப் பாராளுமன்றத்தைப் போல ஒன்றாகவே கூடியது என்றாலும் இதில் வருக்கப்பாகுபாடு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்பெயினுக்குக் கடல் கடந்த நாடுகளில் குடியேற்ற நாடுகள் இருந்ததால் கார்டெஸின் உதவியையே நம்பியிருக்க வேண்டிய அவசியம் அரசருக்கு ஏற்படவில்லை. எனவே, இப்பேரவையை அரசா்கள் அடிக்கடிக் கூட்டவில்லை.

ஐபீரியத் தீபகற்பத்தில் காஸ்டீல் (Castile) Mufd, (Aragon) போன்ற அரசுகளில் இத்தகைய அவைகள் இருந்தன. அவற்றுள் ஆரகன் அரசில் இருந்த கார்டெஸ் பலம் வாய்ந்ததாக இருந்தது. அரசாங்க ஆட்சித் துறையையும்நிருவகிக்க ஜஸ்டிசியா (துரளவஉைடயை) என்ற தலைமை நீதிபித ஒருவா் தேந்ந்தெடுக்கப்பட்டாா். அவரே காா்டெஸின் விவாதங்களையும், நடவடிக்கைகளையும் கவனித்தாா். அரசருக்கும் குடிமக்களுககும் ஏற்படும் தகராறு களையும் இவரே கி.பி 15ஆம்தீத்த்து வைத்தாா்.

ஒருவகையில் அரசனின் அதிகாரங்களைக கார்டெஸ் பெரிதும் கட்டுப்படுத்தியது. இருப்பினும் கிபி15ஆம் நூற்றாண்டினல் ஆரகனின் அரசன்கள் இரண்டாம் பொ்டினான்டும்(Ferdinand II. 1475-1516AD) காஸ்டீலின் அரசியல்களுக்கு உடபடாமல் தங்கள் விருப்பப்படிச் செயல்படத் துவங்கினாா்கள். காலப்போக்கில் குறிப்பாக 19ஆம் நூற்றாண்டுக்குள் அதிகாரங்களே இல்லாத சபையாக கார்டெஸ் மாறிவிட்டது. இந்த முறையில் பிரானசின் ஸ்டேட்ஸ் ஜெனரலைப் போல இது இயங்கியது.

**ஸ்வீடனில் ரிக்ஸ்டாக் (Riksdag)**

இங்கிலாந்து பிரான்சு, ஸ்பெயின் முதலிய நாடுகளில் இருந்தது போலவே அரசனுனக்கு ஆலோசனைனயும் உதவியும் செய்ய ஸ்வீடனில் ரிக்ஸ்டாக் என்ற பேரவை இருந்துவந்தது. இப்பேரவை, பிரபுக்கள் அவை, குருமாா் அவை, நகரத்தில் வாழ்வோா் அவை, மற்றும் உழவா் அவை என்று நான்கு பிரிவுகளாக வருக்க அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தது. இரவ நான்கு பிரிவுகளாக வருக்க அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தது. இவை நான்கும் தனித்தனியாகவே கூடி விவாதித்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கலைந்து சென்றன. இங்கிலாந்துப் பாராளுமன்றததைப் போல் அல்லாது, பிரான்சு நாட்டு ஸ்டேட்ஸ் ஜெனரலைப் போலத் தனித்தனியே கூடின. எனினும், மக்களாட்சிக் கருத்துகள் இப்பேரவையின் விவாதங்களில் காணப்பட்டன.

நான்கு பிரிவுகளைக் கொண்ட ரிக்ஸ்டாக்கின் ஒவ்வொரு பிரிவுக்கும் தால்மன் என்று அழைக்கப்பட்ட அவைத்தலைவர் சபையின் நடவடிக்கைகளைத் தலைமை தாங்கி நடத்தனார். பிரபுக்கள் அவைக்கு மட்டும் உப்சலாவின் தலைமை மதகுரு நிரந்தரமான தால மனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டன. இந்நான்கு பிரிவுகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கபபட்ட பிரதிநிதிகளைக் கொண்ட தேர்வுக்குழு ஒன்றும் செயல்பட்டு வந்தது. இக்குழுவில் பிரபுக்கள் அவையிலிருந்து ஐம்பது பேரும், மற்ற மூன்று பேரும் அவைகள் ஒவ்வொன்றிலிருந்தும் இருபத்தைந்து பேருமாக அமாத்தம் நூறு இருபத்தைந்து உறுப்பினர்கள் இருந்தனர்.

இவ்வாறு இங்கிலாந்து, பிரான்சு, ஸ்பெயின் மற்றும் ஸ்வீடன் போன்ற நாடுகளில் பிரதிநிதித்துவச் சபைகள் தோன்றி மக்களாட்சி கருத்துக்கள் பின்பற்றப்படலாயின.

## சுவிட்சர்லாந்துக் குடியரசின் தோற்றம்

## (BIRTH OF SWISS REPUBLIC)

பதின்மூன்றாம் நற்றாண்டில் சுவிட்சா்லாந்து ஒரு நாடாக இல்லை. புனித ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாக விளங்கிய சுவாபியா (ளூறயடியை) என்ற கோமகனாட்சிப் பகுதியின் ஒருபகுதியேஇன்று சுவிட்சா்லாந்து என்று அழைக்கப்படுகின்றது. அப்பகுதியில் அப்பொடுது பல நிலமானியப் பிரபுக்களும் இருந்தனர். பெரிய மடாலயங்களும் இருந்தன. சுபாபியாவின் பெரும் பகுதி மடாலயங்களுக்கே சொந்தமாக இருந்தது. அவற்றுள் ஐன்சிடெலபியா (நுளைளெநைனடெ) மடாலயமும், கால் முனிவர் (St.Gall) மடாலயமும் புகழ்வாய்ந்தவையாக இருந்தன. இவை போன்ற மடாலயங்கள் பேரரசில் பல சலுகைகளைப் பெற்றிருந்தன. அவைபல்வேறு விதமான வரிகளையும் பேரரசுக்குச் செலுத்துவதினின்றும் விலக்குரிமை பெற்றிருந்தன.

எனினும் அப்பகுதிகளில் நீதி, மற்றும் ஆட்சி முறை ஒழுங்காக நடைபெறுகின்றனவா என்பதை அறியப் பேரரசரின் பிரதிநிதி அல்லாத அலுவலர் நியமிக்கப்பட்டிருந்தார். இம்மடாலயங்களைப் போலவே லுயுசெர்ன் ஏரியைச் சுற்றிலும், மற்றும் ரைன் உரோன் ஆகிய நதிகளின் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் பல பிரபுக்கள் சில நிலப்பகுதிகளை ஆட்சி செய்து வந்தனர். அவர்களுள் சவாய் ஜெனிவா, கிபர்க், ராப்பெர்ஸ்வெல் மற்றும்ஸ்பா ஆகியவற்றின் பிரபுக்கள் முக்கியமானவாகளாவர்.குறிப்பிட்ட ப்ஸ்பர்க்கின் கோமகன் மிக முக்கியமானவராவர்.

சுவாபியாவின் பெரும்பகுதியில் விண்ணை முட்டும் மலைகளும் ஆழ்ந்த விரிந்த பளளத்தாக்குகளும் பரந்த ஏரிகளும் உள்ளன. எனவே, அப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் நீரிலும் நிலப்பரப்பிலும் மலைகளிலும் கடுமையாகப் போர் செய்யும் வலிமையையும் ஆற்றலையும் பெற்றிந்தனர். அவர்கள் எவருக்கும் அடிமைப்பட்டிருக்க விரும்பவில்லை. அத்தகைய பகுதிகளில் வாழும் மக்களை அடக்கி ஆளுவதிலும் பல தொல்லைகள் அரசுக்கு

இருந்தது. எனவே, இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் பேரரசிலிருந்து பல சலுகைகளையும் பின்னா்பல உரிமைகளையும் பெற்றனா்.

சுவாபியாவில் நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் கம்யூன்கள் என்றழைக்கப்பட்ட சமுதாய மன்றங்கள் தோன்றிஅ வ்வப்பகுதிகளன் ஆட்சிமுறையை அக் கம்யூன்களே கவனித்து வந்தன. சுவாபியாவில் இருந்த பல நகரங்கள் தனியரசுகளைப் போலவே இயங்கின. அவை பேரரசின் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளைளயும் அனுப்பின. அத்தகைய நகரங்களுள் சூரிக் லுயிசெர்ன் பெர்ன் போன்றவை முக்கியமானவையாகும்.

நகரங்களின்பாதுகாப்புக்கு அவற்றைச் சுற்றிலும் பெரும் சுவா்கள் கட்டப்பட்டன. பள்ளத்தாக்குளில் வாழ்ந்த மக்களுக்கு அவைகளைச் சூழ்ந்திருந்த மலைகளும் காடுகளும் பாதுகாப்பாக இருந்தன. இன்னும் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தங்களைக் காத்துகொள்ள ஊரி ஸ்கிவிட்ஸ் அன்டா் வால்டென் கிளாரஸ் போன்ற மாவட்டங்கள் ஒன்றாக இணைந்து செயல்பட்டன. அவை பல உரிமைகளையம் சலுகைகளையும் பெற்று ஏறக்குறைய தனி அரசுகளைப் போலவே இயங்கிவந்தனன.

இவை நாடுகள் சூழந்ந்த பகுதிகளில் இருந்ததால் காட்டுக் காணனடனகள என்றழைக்கப்பட்டன. இவையும் வேறு பல கான்டன்களும் நகரங்களும் சுவாபியாவின் கோமகனின் அதிகாரத்திற்குட்பட்டிருந்தன. அவருடைய அடக்கு முறையை எதிர்த்துப் போராடி ஊரி 1231ஆம் ஆண்டில் உரிமை பெற்ற தனி அரசாக இயங்க ஆரம்பித்தது. அதே நேரத்திலவ் தென் பாதுகாப்புக்குப் பேரரசு உறுதியளித்தது. ஸ்கிவிட்ஸ்1240 ஆம் ஆண்டில் உரிமை பெற்றது.

இவைகளைப் பின்பற்றி வேறு பல நகரங்களும் மாவட்டங்களும் ஒன்றோடொன்று இணைந்து தங்களை வலிமைப் படுத்திக் கொண்டன. பெர்னும் லுயுசெரனும் ஒன்றாக இணைந்தன. இவை பின்னர் லுயுசெர்னுடனும் சுரிக்குடனும் சேர்ந்துக் கொண்டன. இத்தகைய இணைப்பு முறையே பிற்காலச் சுவிட்சர்லாந்துக் குடியரசு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்தது.

**நிரந்தர சங்கம் அமைக்கப்படுதல்**

1254 ஆம் ஆண்டிலிருந்து 1273 ஆம் ஆண்டு வரை இருந்த இடைவெளிக் காலத்தைப் புனித ரோமானியப் பேரரசின் வரலாற்றில் பொரும் இடைவெளி என்று வழங்கப்படுகின்றது. இவ்விடைடிவளிக் காலத்தில்அரசுக்குப் பேரரசர் எவரும் இல்லை. இக்காலத்தில் பிராந்திய உணர்வு வலுப்பட்டுப் பல நகரங்களும் மாவட்டங்களும் முழு உரிமை பெற முயன்றன. இந்த நேரத்தில் 1273 ஆம் ஆண்டில் ஆப்ஸ்பர்க் வமிசத்தைச் சேர்ந்த ருடால்ப் என்பவர் ரோமானியப் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் சுவாபியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொள்வாரோ என்ற அச்சம் நகரங்களுக்கும் மாவட்டங்களுக்கும் ஏற்பட்டது. அவ்வச்சத்தை நிரூபிக்கும் வண்ணம்ருடால்ப் பிரிபர்க் நியுப்ஷாடெல் கிளார்ஸ் மற்றும் வேறு பல பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டார். பின்னர் காட்டுக் கான்ஸ்டன்கள் என்று சொல்லப்பட்ட ஊரி, ஸ்கிவிட்ஸ், அண்டர்வால்டென் ஆகியவற்றையும் ருடால்ப் முற்றுகையிட்டார். அதற்குள் அவர் 1291 ஆம் ஆண்டில் இறந்து விட்டார்.

அதே ஆண்ட இம் மூன்று கான்டன்களும் தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ளவும் தங்கள் பாதுகாப்புக்காகவும் நிரந்தரச் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தின. இவ்விணைப்பே சுவிட்சர்லாந்துக் குடியரசு தோன்றுவதற்கு முதல் அடித்தளம் ஆகும். இந்நிரந்தரச் சங்கத்தின் அமைப்பு மற்றும் நோக்கங்களைப் பற்றிய சாசனம் இன்றும் ஸ்கிவிட்சின் தொல்பொருள் காட்சியில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

மார்கார்டன் போர் : **(Balltel of Morgarten – 1315)**

ருடால்புக்குப் பின்னர் அவருடைய மகன் ஆல்பர்ட் பேரரசராக இருந்த காலத்தில் அவரும் தன் தந்தையைப் போலவே சுவாபியாவின் நிலப் பகுதிகளைக் கைப்பற்ற முனைந்தார். ஆனால் அவர் 1308 ஆம் ஆண்டில் அவருடைய உறவினர் ஒருவராலேயே கொலை செய்யப்பட்டார். இவரை அடுத்த லக்சம்பர்கைச் சேர்ந்தவர்கள் பேரரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அக்காலத்தில் பேரரசரோடு அல்லாமல், ஆஸ்திரியாவின் ஹாப்ஸ்பர்க் வமிசத்தக் கோமகன் பிரெடிரிக்கின் ஆக்கிரமிப்பை எதிர்த்தே காட்டுக் கான்டன்கள் போரிட வேண்டியிருந்தது. வலிமை மிகுந்த இக்காடன்களின் - மலைவாழ் மக்களின் உரிமை எழுச்சியை அடக்க 1315 ஆம் ஆண்டில் பிரெடிரிக் தன் இளவல் லியோபால்டின் தலைமையில் பெரியதொரு படையை அனுப்பினார்.

காட்டுக் கான்டன்களின் படைகளுக்கும் லியோபால்டின் படைகளுக்கும் மார்கார்டென் என்ற இடத்தில் கடுமையான போர் நடைபெற்றது. மலைகளும் ஏரிகளும் மிகுந்த அப்பகுதியில் லியோபால்டின் படைகள் செய்வதறியாது திகைத்தன. காட்டுக் கான்டன்களின் படைகள் திடீர் தாக்குதலும், மறைந்திருந்து தாக்குதலும் செய்து எதிரியின் படைகளுக்குப் பெரும் சேதத்தை உண்டாக்கின. கான்டன்கள் பெருவெற்றி பெற்றன. இவ.வெற்றியின் விளைவாக மீண்டும் நிரந்தரச் சங்கத்தை வலுப்படுத்தித் தொடர்ந்து இணைந்து செயல்பட இம்மூன்று காண்டனகளும் தங்களை அர்ப்பணித்துக் கொண்டன.

மார்கார்டெக் போருக்குப் பின்னர் காட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பில் மற்ற கான்டன்களும் ஒன்றன் பின் ஒன்றாகச் சேர அரம்பித்தன. 1330 ஆம் ஆண்டில் லுயுசெர்ன் இக்கூட்டமைப்பில் சேர்ந்தது. கூட்டமைப்பின் வலிமை இன்னும் வளர்ந்தது.

அடுத்து சூரிக் என்ற கான்டன் இக்கூட்டமைப்பில் சேர்ந்தது. எனினும், இக்கான்டனின் ஆட்சியில் உட்பூசல்களும் நேர்மையற்ற ஆட்சியும் கூட்டமைப்பில் வலுவான உறுப்பினராக இருக்க முடியாமல் தடுத்தன. ஆட்சி உயர்குடி மக்களாலேயே நடத்தப்பட்டது. அவர்களே பல்வேறு விதமான உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்தார்கள். தாழ்குடி மக்கள் வரம்பிலா வல்லாட்சியின் கொடுமைகளால் துன்பப்பட்டனர். இத்தகைய நேரத்தில் தான் ருடால்ப் பிரன் என்பவரை அக்கான்டனின் ஆட்சியாளராகத் தேர்ந்தெடுத்தனர். அவர் ஏழை எளியவர்களுக்குப் பல சலுகைகளையும் உரிமைகளையும் தந்தார். உயர்குடி, தாழ்குடி மக்கள் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் வாக்குரிமையைத் தந்தார். இக்கான்டனில் வேறுபல குழப்பங்கள் பின்னர் நிகழ்ந்தனவென்றாலும் 1351 ஆம் ஆண்டு முதல் காட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பில் நிரந்தர உறுப்பினராகச் சேர்ந்து அவற்றின் வலிமைகளும் வளர்ச்சிக்கும் உதவியது.

1352 ஆம் ஆண்டில் கிளாரஸ் மற்றும் சூக் என்ற கான்டன்கள் முறையே ஆறாவது ஏழாவது உறுப்பு நாடுகளாகக் கூட்டமைப்பில் சேர்ந்தன. 1353 ஆம் ஆண்டில் பெர்னும்இக்கூட்டமைப்பில் சேர்ந்தது. இந்த எட்டக் கான்டன்களின் கூட்டமைப்பு இடைக்கால ஐரோப்பாவில் புதியதொரு அரசியல் முறையாக அமைந்து செயல்பட்டது.

செம்பக் போர் வெற்றி – கி.பி.1386

இந்த எட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பு மிக வலிமை மிகுந்ததாக வளர்ந்து வந்தது. மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் போர் செய்து பயிற்சி பெற்ற மக்கள் பலம் வாய்ந்த படையையும் வைத்திருந்தனர். 1375 ஆம் ஆண்டில் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயப் படைகளை இக்கூட்டமைப்பு தோற்கடித்துத் தன் வலிமையை ஐரோப்பிய நாடுகளுக்கு உயர்த்தியது. அப்படியிருந்தும் 1386 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவின் ஹாப்ஸ்பர்க் வமிசத்துக் கோமகன் லியோபால்ட், ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆற்றல் மிகுந்த வீரர்களின் பெரும் படையைத் திரட்டி இந்த எட்டுக்கான்டன்களின் கூட்டமைப்பை நசுக்குவதற்காகப் படையெடுத்தார்.

கூட்டமைப்பின் படைகளும் லியோபால்டின் படைகளும் செம்பக் என்ற பெரிய ஏரியின் அருகே சந்தித்தன. லியோபால்டின் படையில் குதிரை வீரர்கள் அதிகமாக இருந்தும் பதுங்கியிருந்து தாக்கும் கூட்டமைப்புப் படைகளின் தாக்குதல்களை எதிர்த்து அவர்களால் போரிட முடியவில்லை. லியோபால்டின் படைகளுக்குப் பெரும்சேதம் ஏற்பட்டது. இறுதியில் கூட்டமைப்பின் படைகளே வென்றன. செம்பக் வெற்றியின் புகழ் திக்கெட்டும் பரவியது.

இதையடுத்து 1388 ஆம் ஆண்டில் நாபெல்ஸ் என்ற இடத்தில் கூட்டமைப்பின் உழவர் பெருங்குடிகளே ஆஸ்திரியாவின் குதிரைப் படைகளைத் தோற்கடித்தனர். கூட்டமைப்பின் படைகளையோ குடிமக்களையோ எவராலும் வெல்ல முடியாது என்ற நிலை ஏற்பட்டது. எனவே, ஆஸ்திரியாவின் கோமகன் கூட்டமைப்புடன் 1389 ஆம் ஆண்டில் அமைதி உடன்பாடு

செய்து கொண்டார். அதன்படி இனி லுயுசெர்ன், கிளாரஸ், சூக் ஆகிய கான்டன்களின் மீது உரிமை கொண்டாடுவதில்லையென ஆஸ்திரியாவின் கோமகன் ஒப்புக்கொண்டார்.

1393 ஆம் ஆண்டில் இந்த எட்டுக்கான்டன்களும் தங்கள் கூட்டமைப்பின் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் தொடர்ந்து இணைந்த செயல்படுவதென செமபக் ஒப்பந்தத்தின்படி முடிவெடுத்தன. ஆஸ்திரியாவின் ஹாப்ஸ்பர்க் வமிசத்துக் கோமகனும் இக்கூட்டமைப்பின் செயல் முறையையும் வளர்ச்சியையும் 1412 ஆம் ஆண்டில் அங்கீகரித்தார். இது ஏறத்தாழ சுவிட்சர்லாந்துக்குடியரசை அங்கீகிரத்ததாகவே கொள்ளப்பட்டது.

**கூட்டமைப்பின் செயல்முறை**

இவ்வாறு, குறிப்பிட்ட அரசியல் அமைப்போ விதிமுறைகளோ இல்லாமல் இந்த எட்டுக் கான்டனக்ளும் தொடர்ந்து ஒரே கூட்டமைப்பில் இயங்கி வருவது ஐரோப்பாவில் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கியது. இந்த எட்டுக் கான்டன்களும் அமாழி, இனம், நாகரீகம் அல்லது வேறு எந்தத் துறையிலும் ஒரே சீரான சிறப்புக் கூறுகளைப் பெற்றவை அல்ல. ஊரி, ஸ்வீட்ஸ், அண்டர்வால்டன், கிளாரஸ் ஆகிய நான்கும் முற்றிலும் நாட்டுப்புற வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கான்டன்களாகும். இவற்றின் ஆட்சி பெரும்பாலும் பொது மக்களின் பிரதிநிதிகளாலேயே நடத்தப்பட்டது.

சில நேரங்களில் கான்டனில் உள்ள எல்லாரும் ஒன்றுகூடி முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி விவாதித்து, முடிவெடுப்பர். ஆனால், மற்றக் கான்டன்களில் வேறுவிதமான அரசியல் முறைகள் பின்பற்றப்பட்டன. சூரிக்கில் மக்களாட்சிக் கருத்துக்கள் வேரூன்றியிருந்தன. நகரத்தின் ஆட்சித்தலைவர் ஆறுமாதத்திற்கு ஒரு முறை மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்.பெர்னில் உயர் குடிமக்களே ஆட்சி செய்தனர். அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பன்னிருவர் குழுவே ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டது. லுயு செர்னிலும் சூக்கிலும் முற்றிலும் வேறுபட்ட அரசியல் அமைப்புகள் இருந்தன.

இந்த எட்டுக்கான்டன்களை இணைப்பதற்கு ஒரு பொதுவான பிரதிநிதித்துவ மன்றமோ குழுவோ அமைக்கப்படவில்லை. அப்படி இருந்தும் இந்தக் கான்டன்களின் கூட்டமைப்பு வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்தது. ஹாப்ஸ்பர்க் ஆட்சியாளர்களின் வரம்பிலா வல்லாட்சியையும் ஆக்கிரமிப்பையும் எதிர்த்துப் போரிடுவதையே தங்கள் தலையாய நோக்கமாகக் கொண்ட இக்கான்டன்கள் பிற்காலத்தில் புதியதொரு நாடு தோன்றுவதற்கு வழி வகுத்தன. குருமார் சாசனம், செம்பக் ஒப்பந்தம் ஆகிய இரண்டும் இந்த எட்டுக் கான்டன்களும் இணைந்து செயல்படுவதற்கு உதவின. குருமார் சாசனம் இக்கான்டன்களில் இருந்த கிறிஸ்தவக் குருமார் அனைவரும் ஒரே நோக்கத்துடன் செயல்படுவதற்கான விதிமுறைகளை வரையறுத்துக் கூறியது. செம்பக் ஒப்பந்தம் கூட்டமைப்பின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும் கான்டன்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைப் பற்றி விளக்கிக் கூறியது. இவற்றை அடிப்படையாக வைத்துக் கொண்டு எட்டுக் கான்டன்களின் கூட்டமைப்பு 15 ஆம்

நூற்றாண்டில் பதின்மூன்று கான்டன்களாக வளர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குப் புதியதொரு அரசியலமைப்பையும் வழிமுறைகளையும் வகுத்துத் தந்தது.

## ஆட்டோமான் பேரரசு

## (OTTOMAN EMPIRE)

மத்திய கிழக்கில் வலிமை பெற்று விளங்கிய ஆட்டோமான் பேரரசு ஆகுஸ் துருக்கிய இனத்தவரான ஆத்மன் அல்லது ஆஸ்மன் என்பவரால் உருவாக்கப்பட்டது. 1259 முதல் 1326 வரை துருக்கிய அமீராகச் செயல்பட்ட அவர் தமது காலத்திலேயே ஒரு பேரரசினை உருவாக்க வேண்டுமென்ற எண்ணமுடையவராயிருந்தார். பைசாண்டியப் பேரரசின் எல்லையோரப் பகுதிகளைக் கைப்பற்றித் தனது எல்லைகளை விரிவடைய செய்தார். 1301-ல் அவர் கிரேக்கர்களை நிக்கேயா என்னுமிடத்தில் வெற்றிக் கண்டார். இவ்வாறு ஆத்மனால் உருவாக்கப்பட்ட ஆட்டோமான் அரசு பின்னர் படிப்படியாக விரிவடைந்து பேரரசு என்ற நிலையை அடைந்தது.

**ஆர்கான் (1326 – 62)**

முதல் ஆட்டோமான் சுல்தான் என்று அழைப்பதற்குத் தகுதி படைத்த ஆர்கான் ஆத்மனின் மகனாவார். அவரது ஆட்சியின் போது துருக்கிய எல்லை கிழக்கில் அங்காரா வரை விரிவடைந்தது. தன் பெயரில் வெள்ளி நாணயங்களை வெளியிட்ட அவர் காலத்தில் 1354-ல் துருக்கியர் கலிபோலியைக் கைப்பற்றி ஐரோப்பியப் பகுதிக்குள் அடியெடுத்து வைத்தனர். 1361-ல் ஏட்ரியா நோபிள் துருக்கியர் வசமாயிற்று. இவர்தான் வஸீர் என்ற பொறுப்புள்ள அரசியல் பதவியைத் தோற்றுவித்தார். ஆட்டோமான் படையமைப்பு சீராக்கப்பட்டு வலிமை பெற வழிவகுத்தார். தனது தந்தையின் பேரரசினை நிறுவுதல் என்ற விருப்பத்தை இவர் நிலைபெறச் செய்தார். அவர் காலந்தொட்டு ஆட்டோமான் பேரரசின் விஸ்தரிப்புப் பணி தொடங்கியது.

**முதலாம் மூராத் (1362 – 89) :**

ஆட்சித் திறன், வலிமை, போராற்றல் ஆகியவற்றின் சிறந்து விளங்கிய இவர் தனது 40-வது வயதில் ஆட்சிப் பொறுப்பேற்றார். 1361-ல் இவரால் எதிர்னே எனப்பட்ட ஏட்ரியா நோபிள் கைப்பற்றப்பட் போது அது ஆட்டோமான் அரசின் ஐரோப்பியத் தலை நகராயிற்று. 1371-ல் மாரிட்ஸா நதிப் போரில் செர்பிய, மாஸிடோனியக் கூட்டுப் படைகள் வெல்லப்பட்டன. மாஸிடோனியா அவர் வசமாயிற்று. பைசாண்டியப் பேரரசர் ஐந்தாம் ஜான் அவர் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டார். அவருடைய வளர்ச்சியைக் கண்ணுற்ற பால்கன் நாடுகள் கூட்டாக இணைந்து அவரைத் தாக்க முற்பட்ட போது 1389-ல் கோஸாவா என்னுமிடத்தில்

மூராத் கொல்லப்பட்ட போதிலும் துருக்கியர் வெற்றி பெற்றனர். அதனால் செர்பியா துருக்கியர் வசமாயிற்று.

**முதலாம் பாயாஸித் (1389 – 1403) :**

முதலாம் மூராத்தின் மகனை இவர் 1393-ல் பல்கேரியாவைக் கட்டுப்படுத்தினார். 1394-ல் வாலேஷியா அவர் வசமாயிற்று. 1396-ல் சிலுவைப் படைவீரர்களை நிக்கோபாலிஸ் என்னுமிடத்தில் வெற்றிக் கண்டார். 1397-ல் அய்கோனியம் எனப்பட்ட கோனியா கைப்பற்றப்பட்டது. 1398-ல் கருங்கடல் பகுதியில் தனது ஆதிக்கத்தை நிறுவினார். இவருடைய ஆட்சிகாலத்தின் தான் மங்கோலியர்களின் தீரமிக்க தலைவரான தைமூர் ஆட்டோமான் பேரரசின் மீது படையெடுப்பு நடத்தினார். 1402-ல் அங்கோரா என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் பாயாஸித் தோற்கடிக்கப்பட்டுக் கைதியாக்கப்பட்டார். எனவே 1403-ல் அவர் தற்கொலை செய்துக் கொண்டார். அவருடைய ஆரம்ப கால வெற்றிகளால் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் முஸ்லீம் நீதிபதிகள், ஆட்சித்துறை அலுவலர்கள் போன்றோர் நியமிக்கப்பட்டார்கள்.

பாயாஸித்துக்குப் பின் வாரிசுரிமைச் சிக்கல்களால் துருக்கிய அரசு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பர்சா பகுதியை இசாவும், எதிர்னேயை கலைமானும், அமாஸ்யாவை முகமதுவும் பிரித்துக் கொண்டு தமக்குள் அடிக்கடி சண்டையிட்டனர். எனவே 1403 க்கும் இடைப்பட்ட காலத்தில் குழப்பமே அங்கு நிலவியது.

**முதலாம் முகமது (1413 – 1421)**

பாயாஸித்தின் இளைய மகனான முதலாம் முகமது மங்கோலியப் படையெடுப்பினால் ஏற்பட்ட பின் விளைவுகளைக் களைந்தார். துருக்கியப் பேரரசு ஆசியா மைனரி வலுப்பெற்றது.

**இரண்டாம் முராத் (1421-1451)**

முதலாம் முகமதுவின் மூத்த மகனான இரண்டாம் மூராத் ஆரம்பத்தில் தமக்கிருந்த எதிர்ப்புகளைச் சமாளித்துத் தன்னைப் பலப்படுத்திக் கொண்டார். கான்ஸ்டான்டி நோபிளைக் கைப்பற்ற அவர் செய்த முயற்சிகள் பலனற்றுப் போயின. 1425-ல் அனட்டோலியாவைக் கைப்பற்றினார். 1430-ல் சலோனிகா வெனீஷியரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. 1444-ல் வார்னா என்னுமிடத்தில் குன்யாடி என்பவர் தலைமையில் எழுந்த பால்கன் கூட்டுப் படையினைத் தோல்வியைத் தழுவுமாறு செய்தார். 1448-ல் கோஸோவா போரில் மீண்டும் சூன்யாடியைத் தோற்கடித்தார். இவ்வாறு இரண்டாம் மூராத் காலத்தில் ஆட்டோமான் துருக்கியப் பேரரசு வலிமைப் பெற்றது.

**இரண்டாம் முகம்மது : (1451 – 81)**

வெற்றியாளர் முகம்மது (Mohammed, the Conqueror) காலத்தில் கான்ஸ்டாண்டிநோபிள் 1453-ல் துருக்கியர் வசமாயிற்று. ஹங்கேரியின் வெண்மை வீரர் எனப்பட்ட ஜான்குன்யாடி, அல்பேனியாவின் ஸ்காண்டர்பெக் ஆகியோரால் பாதுகாக்கப்பட்ட கான்ஸ்டான்டிநோபிளை 1453 ஏப்ரல் 7-ல் முகம்மது முற்றுகையிட்டார் 53 நாட்களின் தொடர்ந்த முற்றுகைக்குப் பின் 1453 மே 29-ல் அந்நகர் துருக்கியர் வசமாயிற்று. கடைசி பைசாண்டியப் பேரரசர் பதினொன்றாம் கான்ஸ்டன்டைன் வீரத்துடன் போரிட்டு விழுப்புண் பட்டுப் போர்க்களத்தில் மாண்டார். மூன்று நாட்கள் அந்நகர் சூறையாடப்பட்டது. புனித சோபியா ஆலயத்திற்குள் பாதுகாப்பிற்கென அடைக்கல் புகுத்திருந்த அந்நகர மக்கள் சிறைபிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டார்கள். அந்த ஆலயம் மசூதியாக மாற்றப்பட்டது. இடிபாடுகள் அகற்றப்பட்டு யூதர்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் ஆகியோர் அங்கு குடியேற்றப்பட்டு, கான்ஸ்டான்டிநோபிள் என்ற பெயர் இஸ்தான்புல் என்று மாற்றப்பட்டு இரண்டாம் முகம்மதுவின் தலைநகராக்கப்பட்டது. 1923-ல் அங்கரா அதன் தலைநகராக மாற்றப்பட்ட காலம் வரை இஸ்தான்புல் துருக்கியரின் தலைநகராக திகழ்ந்தது.

**கான்ஸ்டாண்டிநோபிள் வீழ்ச்சியின் முக்கியத்துவம்** :

1. பழமையான பெருமைமிக்க பைசாண்டியப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. எனவே 1453-ஆம் ஆண்டு வரலாற்றில் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றது.

2. மத்திய கிழக்கில் கிறிஸ்துவர்கள் பாதுகாப்பின்றி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. மத்தியத் தரைக்கடல் பகுதியில் துருக்கியரின் ஆதிக்கம் பரவ வழியேற்பட்டதால் இஸ்லாம் - கிறிஸ்துவ சமயப் போராட்டங்கள், போட்டிகள் வளர்ச்சியடைந்தன.

3. கான்ஸ்டாண்டிநோபிளின் வீழ்ச்சி காரணமாக அங்கிருந்த கிரேக்க, ரோமானிய இலக்கிய மேதைகள் இடம் பெயர்ந்த இத்தாலியில் குடியமர்ந்ததால் இத்தாலி மறுமலர்ச்சி இயக்கத்தின் தாயகமாகச் செயல்பட்டு மறுமலர்ச்சிக்கு (Renaissance) வழி வகுக்கப்பட்டது.

4. மேல்திசை, கீழ்த்திசை நாடுகளுக்கிடையிலான தரை வழியோடு கடல் வழியும் முகமதியர்களால் கட்டுப்படுத்தப்பட்டு அடைக்கப்பட்டதால் ஐரோப்பியரின் கடல் வாணிபமும் கீழ்த்திசை நாடுகளுடனான வர்த்தகமும் பாதிப்பிற்குள்ளாயிற்று. எனவே புதிய கடல்வழிகளைக் காண வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அது புதிய நாடுகளைக் கண்டறியக் கூடிய வாய்ப்பினை வழங்கின. கப்பல் கட்டுத் தொழில் பெருகியது.

5. பால்கன் பகுதி துருக்கியர் வசமானதால் துருக்கி, ஓர் வல்லசராகச் செயல்பட வழி ஏற்பட்டது.

## இடைக்கால இறுதியில் ஐரோப்பிய சமுதாயம்
## (SOCIETY AT THE END OF MIDDLE AGES)

பதினைந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பயி சமுதாயம் பல்வேறு மாறுதல்களுக்குள்ளாகி நவீன காலத்தை எதிர் நோக்கியிருந்தது. முதலில் அரசியல் துறையில் ஏற்பட்ட மாறுதல்கள் சமுதாய அமைப்பை பாதித்தது. ஜெர்மனியில் பேரரசு பெயரளவிற்கு மட்டும் செயல்பட்டு வந்தது. பிரான்ஸ் நூறாண்டுப் போரின் விளைவாக பயங்கர அழிவிற்குள்ளாகி சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்தது. கிழக்குப் பேரரசு துருக்கியர் படையெடுப்பால் தன் முடிவுக் காலத்தை எதிர்நோக்கியிருந்தது. ஸ்பெயினில் கிறிஸ்தவ அரசர்கள் மூர்களின் மீது தொடுத்த இடைவிடாத தாக்குதல்கள் காரணமாக முஸ்லீம்கள் ஆட்சி தென்கோடியில் உள்ள கிரானடாவில் மட்டும் நீடித்திருந்தது.

இத்தாலி சிற்றரசுகளாகப் பிளவுப்பட்டு பிரபுக்களாட்சி முறையும், மக்களாட்சி முறையும், மன்னராட்சி முறையும், திருச்சபை ஆட்சி முறையும் நடைபெற்று வந்தன. புனித ரோமானியப் பேரரசின் சுவாபியா என்று கோமகனாட்சிப் பகுதி ஸ்விட்சர்லாந்து என்ற குடியரசாக மலர்ந்து கொண்டிருந்தது. மற்றும் பால்கனில் உருவான பல்கேரிய, ஸ்லாவ் அரசுகள் எந்த நிமிடத்திலும் துருக்கிய படையெடுப்பால் விழுங்கப்பட்டு விடுவோமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தன. அப்பகுதியில் அமைந்த போலந்து அரசு மட்டுமே் தான் ஓரளவிற்கு துருக்கியத் தாக்குதல்களைத் தாங்கும் அரண்போல் நின்று கொண்டிருந்தது. இத்தகைய குழப்பமும் நிச்சயமும் அற்ற அரசியல் சூழ்நிழலையில் ஐரோப்பிய சமுதாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

**பொருளாதார நிலை :**

கருங்கொள்ளை நோய்ச் சாவு மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கிலிருந்து மூன்றிலொரு பங்கு வரை விளங்கியது. ஐரோப்பாவின் சாவுக் கணக்கு இரண்டரைக் கோடியென ஹெக்கேர் என்பார் மதிப்பிட்டுள்ளார். எங்கு பார்த்தாலும் பிணக்குவியல்கள் காணப்பட்டன. நதிகளிலும் கடற்கரை ஓரங்களிலும் பிணங்கள் மிதந்து சென்றன. இக்கொள்ளை நோய்க்கு யூதர்களே காரணம் என்ற கருத்துப் பரவியதால் யூதர்கள் கொல்லப்பட்டனர். மெயினஸ் நகரில் மட்டும் பன்னிரெண்டாயிரம் யூதர்கள் கொல்லப்பட்டனர். குடியானவர்கள் பலர் மடிந்ததால் வேளாண்மைத் தொழில் பாதிக்கப்பட்டது. நிலத்தின் பெரும்பகுதி பயிரிடப்படாமலே தரிசாகக் கிடந்தது. பண்ணைச் சொந்தக்காரர்கள் வெளியாட்களின் உதவியின்றி பயிர்தொழிலை நடத்த முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். உழவர்கள் கூலி உயர்வு கேட்டார்கள். அக்காலத்தில் உழவர்கள் கூலி உயர்வு கேட்பதெ குற்றமாகக் கருதப்பட்டது. குடியானவர் இடம் பெயர்ந்ததைக் கூட சட்ட விரோதமாக்கினர். இதனால் குடியானவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். சில மானியதாரர்கள் தங்கள் விளைச்சல் நிலங்களாக மாற்றி ஆட்டுப் பண்ணையைத் தொடங்கினார்கள்.

இடைக்காலச் சமூகப் பொருளாதார நிலையின் இரும்புச் சட்டமான நிலமானிய முறை நெகிழ்ந்து கொடுக்க ஆரம்பித்தது. விவசாய நில அடிமைமுறை மறைந்து உரிமைப் பெற்ற குடியானவர் தொகை பெருகியது. அதனால் குடியானவர்களின் நிலை உயர்ந்ததாக தெரியவில்லை.

**கல்வி நிலை**

இடைக்காலத்தில் மடாலயங்களும் ஆலயங்களுமே கல்வி நிறுவனங்களாகச் செயல்பட்டன. கல்வியறிவின் அவசியத்தை தன் குணர்ந்த ஷார்லமேன் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. அக்காலத்தில் சமயக் குருக்களே கல்வி கற்றவர்களாகத் திகழ்ந்ததால் சமயச் சார்புக் கல்வியே முதலில் கற்கப்பட்டது. அரபியரின் தொடர்பால் புதிய எண்மான முறையும் மருத்துவ முறைகளும் பயிலப்பட்டன.

உயர்க்கல்வி வளர்ச்சியிலும், முஸ்லீம்களே வழிகாட்டிகளாக இருந்தனர். ஸ்பெயினில் உள்ள கார்டோவாப் பல்கலைக் கழகம் எவ்வாறு பிற ஐரோப்பியப் பல்கலைக் கழகங்களுக்கு முன்னோடியாக விளங்கியது என் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளது. பிற இடைக்கால நிறுவனங்களைப் போல் பல்கலைக் கழகங்களும் தாமாகத் தோன்றியவையாகும். ஆரம்ப காலத்தில் இறையியல், சட்டம், மருத்துவம், கணிதம் ஆகியவைகளே முக்கியப் பாடங்களாகத் திகழ்ந்தன. லத்தீன் மொழியே போதனா மொழியாக இருந்தாலும் கிரேக்கமும் பயிலப்பட்டது.

பாரிஸ் பல்கலைக் கழகம் அக்காலத்தில் தலைசிறந்த கல்வி நிறுவனமாக விளங்கியது. ராபர்ட்டி சார்போர் பீட்டர் அபலார்டு போன்ற தத்துவ மேதைகள் ஆசிரியர்களாக அங்கு பணியாற்றினர். இத்தாலியில் உள்ள போலோனா ரோமானியர்ப் பேரரசர ஆட்சிக் காலத்திலே புகழ்பெற்று விளங்கியது. தாந்தே, பெட்ரார்க் போன்ற தலைசிறந்த அறிவாளிகளை உற்பத்தி செய்த பெருமை பெற்றது. இப்பல்கலைக் கழகம், மற்றும் பாடுவா, சாலர்னோ, நேபிள்ஸ் ஆகிய நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன.

**நிலமானிய முறையின் மறைவு**

சிலுவைப்போர், நூறாண்டுப் போர் ஆகியவை காரணமாக நிலமானியப் பிரபுக்கள் பலர் செத்தொழிந்தனர். வெடிமருந்தின் உபயோகம் பிரபுக்களின் போர்த்திறனை தேவையற்றதாக்கி விட்டது. நெருங்க முடியாத பிரபுக்களின் கோட்டைகளை நொறுக்கக் கூடிய பீரங்கிகள் தயாரிக்கப்பட்ட பின் நிலமானியப் பிரபுக்களின் செல்வாக்கு மங்கியது. மற்றும் கொள்ளை நோய் காரணமாக குடியானவர்கள் தொகை குறைந்து நிலமானிய அமைப்பைச் செயலற்றதாக்கி விட்டது.

எல்லாவற்றிற்கும் மேலாக நடுத்தர மக்களின் எழுச்சி பிரபுக்களுக்கு பெரும் அறைகூவலாக இருந்தது. வர்த்தகர்களும் தொழில் வல்லுநர்களும் போர்க்குணம படைத்த பிரபுக்களை வெறுத்தனர். வலுவான தேசீய அரசை விரும்பினர். அத்தகைய அரசை அமைக்க முயற்சித்த அரசர்கள் நடுத்தர வர்க்கத்தினரையே முக்கியப் பதவிகளில் நியமித்தனர். இது நிலமானியப் பிரபுக்கள், மதகுருமார் ஆகியோர் பரம்பரையாக அனுபவித்த உரிமைகளைப் பாதித்தது. நடுத்தர மக்களின் எழுச்சி இடைக்கால சமுதாய அமைப்பில் மாபெரும் மாற்றங்களை உண்டு பண்ணி நவீன காலம் தோன்றுவதற்கு காரணமாக அமைந்தது.

**சமயநிலை :**

இடைக்கால ஆரம்பத்தில் ஐரோப்பாவெங்கும் போப்பைத் தலைவராகக் கொண்ட கத்தோலிக்கச் திருச்சபை பரவியிருந்தது. பத்தாம் நூற்றாண்டில் கிழக்குப் பேரரசில் உருவ வழிபாட்டிற்கு எதிர்ப்பு ஏற்பட்டு ரோம் தலைமையினின்று விடுபட்டது; கான்ஸ்டாண்டி நோபிள் பாட்ரியார்க்கைத் தலைமையாகக் கொண்ட கிரேக்கத் திருச்சபை உருவானது. மேற்கு ஐரோப்பாவில் போப்பின் தலைமை கருத்து வேறுபாடுகளுக்கிடமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது. போப்பின் கீழ் திருச்சபை நிர்வாகிகளாக ஆர்ச் பிஷப்புகளும் குருக்களும் நாடெங்கும் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் சமூகத்திலும் அரசியலிலும் உயர்நிலை அடைந்திருந்தனர். பிஷப்புகள் பலர் அரசனின் அலுவலர்களாகவும் தூதர்களாகவும் பணியாற்றினர். இவர்களைத் தவிர எண்ணற்ற மடாலயங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான துறவிகள் சமய சமூகப் பணி புரிந்து வந்தனர்.

இடைக்காலத்தில் இறுதிப் பகுதியில் போப்பின் செல்வாக்கு சரியத் தொடங்கியது. அதற்குக் காரணங்கள் பல போப்புகள் பிரெஞ்சு மன்னர்களின் கைப் பொம்மைகளாக அவிக்னான் நகரில் பாபிலோனியா அடிமைத்தன்தில் இருந்ததாகும். போப்பாட்சியில் பிளவு ஏற்பட்டு ஒரே சமயத்தில் மூன்று போப்புகள் அதிகாரம் செலுத்தியது ஆகியவை அப்பதவின் புனிதத்தை பாழடித்து விட்டது. அதோடு திருச்சபையின் ஊழல்களையும் பொருத்தமற்ற கோட்பாடுகளையும் வெளிப்படுத்தும் சமயப்புரட்சிவாதிகள் பலர் தோன்றினர். இங்கிலாந்தில் விக்ளிப், பொஹீமியாமில் ஜான்ஹஸ் ஆகியோர் துணிச்சலுடன் திருச்சபைக் கோட்பாடுகளை மறுத்தனர். இவர்கள் தாம் அடுத்து தோன்றியிருக்கும் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடிகளாவர்.

திருச்சபை ஊழல்களை நீக்கவும், முரண்பாடு வாதங்களை மறுக்கவும், திருச்சபைப் பொதுச் சங்கங்கள் கூட்டப்பட்டன. அவை திருச்சபைப் பிளவுகளைப் போக்கும் சமாதான முயற்சியாகவும் கருதப்பட்டன. அவற்றுள் பைசா நகரத்துப் பொதுச்சங்கம் (1409), கான்ஸ்டன்ஸ் பொதுச்சங்கம் (1415 – 18) பேஸில் பொதுச் சங்கம் ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை ஆகும்.

**அறிவியல் வளர்ச்சி**

பொதுவாக இடைக்காலம் இருண்ட காலம் என்றே குறிப்பிடப்படுகிறது. உண்மையில் கல்வி அறிவு குறைந்த, அறியாமையும், மூடநம்பிக்கையுமே பெருமளவு மக்களை ஆட்கொண்டிருந்தது. இடைக்கால இறுதியில் ஏற்பட்ட கலை அறிவியல் வளர்ச்சிகள் சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தியதோடு நவீனகால மறுமலர்ச்சிக்கு வழிகாட்டியாகவும் விளங்கியது. பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவை பரபரபாக்கிய கல்வி மறுமலர்ச்சி இயக்கப் பூர்வமாக வேலைகள் பதினான்காம் நூற்றாண்டி னிறுதியேலயே ஆரம்பித்து விட்டன. முதலில் அச்சு இயந்திரம் ஜான்கூடன்பர்க் என்பவரால் நிறுவப்பட்டு விட்டது. மற்றும் திசைகாட்டும் கருவி, வெடிமருந்து போன்ற அறிவியல் விந்தைகள் நடைமுறைக்கு வந்து விட்டன. தாந்தே, பெட்ரார்க் போன்ற இத்தாலியக் கவிஞர்கள் ஏற்கெனவே மறுமலர்ச்சி இலக்கியங்களைப் படைக்க ஆரம்பித்து விட்டனர். எனவே இடைக்காலம, நவீனகால ஐரோப்பாவின் அடிப்படைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது.

**கட்டிடக்கலை :**

இடைக்கால ஐரோப்பாவில் கலையிலும் கட்டிடக் கலையிலும் பெரும் வளர்ச்சி ஏற்பட்டது. ஐரோப்பிய மக்கள் தங்கள் பக்தியை வெளிப்படுத்துவதற்காக பல அம்சங்களைக் கொண்ட வானளாவிய கட்டிடங்களைக் கட்டினர் அப்படிப்பட்ட கோவில்களைக் கட்டுவதற்கு போப்பாண்டவர்களும், அரசர்களும் வணிக பெருமக்களும் வாரி வழங்கினர். கட்டிடக் கலையில் பல புதிய அம்சங்கள் புகுத்தப்பட்டன.

**ரோமானியப் பாணிக் கட்டிடக்கலை (Romanesqe Architecture)**

மேற்கு ஐரோப்பாவில் கி.பி. 1050 முதல் 1200 வரை நிலவிய கட்டிடக் கலை ரோமானியக் கட்டிடக் கலையின் பொதுத் தன்மைகளைக் கொண்டும் இடத்திற்கு இடம் சில மாறுபட்ட தன்மைகளைப் பெற்றும் கவின்மிகு சிறப்புடன் வளர்ந்ததால் இப்பெயர் பெற்றது. இக்கட்டிடங்கள் பண்டைய ரோமானிய கட்டிடக் கலையின் பொதுவான தன்மைகளைப் பெரிதும் பெற்றிருந்தமையால் அறிஞர்கள் இக்கட்டிடக் கலையை ரோமானியப் பாணியைச் சார்ந்த கட்டிடக்கலை என்று குறிப்பிட்டனர். இக்கட்டிடக் கலையுடன் இதே காலத்தில் சிற்ப, ஓவிய ஒப்பனைக் கலைகளும் வளர்ச்சியடைந்தன.

இப்பாணி கட்டிடங்களுள் முதலில் கட்டப்பட்ட சில ஆலயங்கள் கரடுமுரடான அமைப்பிலும் பெரியனவாகவும் கட்டப்பட்டன. இவற்றைக் கட்டிய கலைஞர்கள் கட்டிடக்கலை திறனை சிறிதளவே பெற்றிருந்தமையால் இக்கட்டிடங்கள் இவ்வாறு காட்சியளித்தன. ஆனால் கி.பி. 1100 ஆம் ஆண்டிற்குப் பின்னர் எழுந்த கட்டிடங்கள் அழகுமிக்கனவாக விளங்கின. இக்காலத்தில் இங்கிலாந்து, இத்தாலி, தென் பிரான்சு, ஆகிய நாடுகளில் சிறந்த கட்டிடக்கலை அறிஞர்களினால் திருச்சபைகளும், அரண்மனைகளும் மிக நேர்த்தியான முறையில கட்டப்பட்டன. திருச்சபையின் அருகிலேயே பல மடாலயங்கள் கட்டப்பட்டன.

ஆலயங்கள் பொதுவாக உயரமற்றவையாகவும் உள்பகுதி வெளிச்சமற்றதாகவும் கட்டப்பட்டன. ஆலயத்தின் கூரைகள் வளைந்த வண்டிக்கூடு அமைப்பைப் பெற்று விளங்கின. ஆலயங்கள் பொதுவாக ஓர் உயர்ந்த நடுப்பகுதியும் அதன் இருபக்கங்களிலும் தாழ்வான பக்கச் சரிவுகளையும் கொண்டு விளங்கின. இப்பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதி பெரிய தூண்களாலும் பெரிய தடித்த சுவர்களாலும் பிரிக்கப்பட்டிருந்தன. ஆலயத்தின் சானரங்களின் மேற்பகுதி, நுழைவாயில்கள் மேற்பகுதி ஒரு தூணுக்கும் பிறிதொரு தூணுக்கும் இடையிலுள்ள மேற்பகுதி ஆகியன வட்டமான வளைவுகளை பெற்று விளங்கின.

தூண்களிலும் வட்ட வளைவுகளிலும் சிற்பங்கள் பல செதுக்கப்பட்டன. சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டு அழகு மிகுந்து காணப்பட்டன. இந்த ஓவியங்க் பொதுவாகச் சமயச் சார்பு உடையனவாக திகழ்ந்தது. இவை கட்டிடக் கலையின் முன்னோடியாகத் திகழ்ந்தன. இக்கட்டிடக் கலையைச் சார்ந்த திருச்சபைகள் லம்பார்டி கடலோனியா ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. பைசா நகரத்தில் உள்ள தேவாலயமும் இக்கட்டிடக் கலையைச் சார்ந்த கட்டடங்களுள் ஒன்று.

**கோதிக்கட்டிடக் கலை :**

ரோமனஸ்க் கட்டிடக்கலையில் காணப்பட்ட குறைபாடுகளை போக்கும் வகையில் கோதிக் கட்டிடக்கலை தோன்றியதாகக் கருதப்படுகின்றது. கோதிக் கட்டிடக்கலை முதலில் பிரான்சில் 12-ம் நூற்றாண்டில் தோன்றி பிறகு ஐரோப்பிய நாடுகளில் பரவியது. இது 13-ம் நூற்றாண்டில் வளர்ச்சியடைந்து உச்சநிலை அடைந்தது.

வில் வடிவ வளைவுகளுக்குப் பதிலாக கோதிக் கட்டிடக் கலையில் கூர்மையான வளைவுகள் பயன்படுத்தப்பட்டன. ரோமனஸ்க் கட்டிடக் கலையில் வளைவுகள் கனமாக விளங்கியதால் வலுவான சுவர் அமைக்க வேண்டியிருந்தது. ஆனால் கோதிக் கட்டிடக் கலையில் கூர்மையான வளைவுகள் அமைக்கப்பட்டதால் மெல்லிய சுவர்கள் உயரமாக கட்டப்பட்டன. கோதிக் கட்டிடக்கலை கோவிலில் ஜன்னல்கள் அதிகமாகப் பொருத்தப்பட்டன. இதனால் ஆலயங்கள் அதிக இட வசதியுடன் அமைக்கப்பட்டன.

ஜன்னல்களின் பல நிறங்கள் தடவப்பட்ட கண்ணாடிகள் பொறுத்தப்பட்டன. கண்ணாடித் துண்டுகள் தகடுகளாகச் செய்யப்பட்டதால் ஜன்னல்கள் அழகுடன் காட்சியளித்தன. கோவில்களின் முகப்புகள் அலங்காரமாக செதுக்கப்பட்டு இருந்தன. வானளாவிய கூர்மையான கோபுரங்கள் பார்ப்போரை வியக்கச் செய்தன. கோதிக் கட்டிடக் கலையைப் பின்பற்றி கட்டப்பட்ட ஆலயங்கள் பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் மிகுதியாகக் காணப்பட்டன.

நெதர்லாந்திலும், வடக்கு பிரான்ஸ் நாட்டிலும் சமயம் சாராத கோதிக் கட்டிடக் கலை வளர்ந்து ஓங்கியது. நகர மண்டபங்கள் சங்கங்களின் மண்டபங்கள் ஆகியவை கோதிக்

கட்டிடக் கலையைப் பின்பற்றி கட்டப்பட்டன. புருசல்ஸ் எவ்வயின் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள நகர மண்டபங்கள் ஓரளவு கோதிக் கட்டிடக்கலை இடைக்காலத்தில் வளர்ந்து வந்த நகர நாகரீகத்தின் சின்னமாக விளங்கியது. கட்டிடக்கலை வல்லுநர்களின் கைத்திறனை பல கோவில்களில் நம்மால் காண முடிகிறது. கோதிக் கட்டிடக்கலை அடிப்படையில் கட்டப்பட்ட ஆலயங்களுக்கு இணையாக எகிப்தின் பிரமிடுகளை மட்டுமே நாம் கூற முடியும்.